
கிறித்தவக் காப்பியங்கள்

முனைவர் யோ.ஞானசந்திர ஜாண்சன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

கிறித்தவக் காப்பியங்கள்

முனைவர் யோ. ஞான சந்திர ஜாண்சன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை-600 113

அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேராயர் இரா. அருளப்பர்)

வரிசை எண் : 10

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	கிறித்தவக் காப்பியங்கள்
ஆசிரியர்	:	முனைவர் யோ. ஞான சந்திர ஜாண்சன் இணைப் பேராசிரியர்-தமிழ்த்துறை சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி) தாம்பரம், சென்னை-600 059
பொதுப்பதிப்பாசிரியர்	:	முனைவர் ஆ. மணவழகன் இணைப் பேராசிரியர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை தரமணி, சென்னை-600 113
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை தரமணி, சென்னை-600 113 தொலை பேசி எண். 044 - 22542992
வெளியீட்டு எண்	:	756
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2013
பயன்படுத்திய தாள்	:	18.6 கிகி டிஎன்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ
நூலின் அளவு	:	1/8 டம்மி
எழுத்தின் அளவு	:	10 அளவு
பக்க எண்ணிக்கை	:	xii +502
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ 225/- (ரூபாய் இருநூற்றி இருபத்தைந்து மட்டும்)
அச்சகம்	:	ஸ்ரீ சரவணா அச்சகம் 144, தம்புத் தெரு சென்னை-600 001
பாடம்	:	கிறித்தவ இலக்கியம்

முனைவர் கோ. விசயராகவன், எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

அணிந்துரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கிறித்தவ இலக்கியங்களுக் கென்று தனித்த இடம் உண்டு. ஆனால், தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்திய கிறித்தவ இலக்கியங்கள் குறிப்பாக, காப்பியங்கள் மிகக் குறைவானவையே. மாணர்களுக்கான அறிமுகமும், கிறித்தவ இலக்கிய ஆய்வுகளும் அறிமுகப்படுத்தப்பட்ட சில குறிப்பிட்ட இலக்கியங்களை மையமிட்டே அமைகின்றன. அக்குறைபாட்டைப் போக்குமுகத்தான் 'கிறித்தவக் காப்பியங்கள்' என்னும் இந்நூல் அமைந்துள்ளது. இது மரபிலக்கணத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட சுமார் 30 கிறித்தவக் காப்பியங்களைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்துகிறது.

நூலில் இடம்பெற்றிருக்கிற காப்பியங்கள் திருமறை வரலாற்றுக் காப்பியங்கள், கிறிஸ்துவின் வரலாற்றுக் காப்பியங்கள், திருமறை மாந்தர் வரலாற்றுக் காப்பியங்கள், திருமறைசாரா மாந்தர் வரலாற்றுக் காப்பியங்கள், தழுவல் காப்பியங்கள், மொழிபெயர்ப்புக் காப்பியங்கள் என்ற அடிப்படையில் பாகுபடுத்தி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இந்நூலில் சுட்டப்பட்டுள்ள காப்பியங்களில் பல கிறித்தவ இலக்கிய ஆய்வாளர்களுக்கு அறிமுகமாகாமலும் மறுபதிப்பு காணாமலும் இருக்கின்றன. எனவே, கிறித்தவ இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகளுக்கு இந்நூல் முதன்மைத் தரவு நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியர் முனைவர் யோ. ஞான சந்திர ஜாண்சன் அவர்கள் கிறித்தவ இலக்கியங்களில் ஆழங்கால்பட்டவர். கிறித்தவ இலக்கியங்கள் தொடர்பாக தொடர்ந்து தன் பங்களிப்பைத் தமிழ் உலகிற்கு ஆற்றி வருபவர். குறிப்பாக, கிறித்தவக் கீர்த்தனைகளில் ஈடுபாடுகொண்டு அவை தொடர்பான நூலினை வெளியிட்டவர். கிறித்தவ இலக்கியங்களைத் தொகுத்தல், பதிப்பித்தல், ஆய்வு செய்தல் போன்ற கிறித்தவத் தமிழ்ப் பணிக்காக 'தமிழ்மாமணி' என்னும் விருதினைப் பெற்ற சிறப்பிற்குரியவர். ஆசிரியரின் கடின உழைப்பில், தேடலில் இந்நூல் உருவாக்கம் பெற்றுள்ளது. அவ்வகையில், அரிதான

காப்பியங்களையும் தேடித் தேடி அறிமுகப்படுத்தியிருக்கிற ஆசிரியரின் சீரிய பணி பாராட்டிற்குரியது.

இந்நூல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 'கிறித்துவமும் தமிழும்' அறக்கட்டளையின் பத்தாவது சொற்பொழிவாக நிகழ்த்தப் பட்டு, நூலாக்கம் பெற்றுள்ளது. சொற்பொழிவிற்கும் நூலாக்கத்திற்கும் வேண்டுவன செய்த அறக்கட்டளையின் பொறுப்பாளரும் சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலத்தின் இணைப் பேராசிரியருமான முனைவர் ஆ.மணவழகன் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீது கொண்டுள்ள பற்று அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கென சீரிய பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். அனைத்து வகையிலும் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

தமிழ் வளர்ச்சிக்கும். இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு தொழிற்கல்வி உள்ளிட்ட உயர்கல்வி, மின்னணுவியல், அறிவியல், தொழில் நுட்பவியல், தொல்லியல், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு, உயர்கல்வி துறை, பள்ளிக் கல்வி துறை, இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் பி.பழனியப்பன் அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இந்நூலை வடிவமைப்பு செய்த திருமதி பா. கௌசல்யா அவர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

இயக்குநர்

என்னுரை

கிறித்தவ இலக்கிய வரிசையில் காப்பியங்கள் தனித்தன்மை வாய்ந்தனவாக விளங்குகின்றன. இக்கிறித்தவக் காப்பியங்கள் குறித்த முழுமையான நூலோ ஆய்வோ இதுவரை வெளிவரவில்லை. இன்று ஆய்வாளர்கள் ஒருசில கிறித்தவக் காப்பியங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு ஆய்வு செய்கின்றனர். கிடைக்காத கிறித்தவக் காப்பியங்களைத் தேடிக் கண்டுபிடித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்னும் குறிக்கோள் ஆய்வாளர்களிடம் இல்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். இன்றைய நிலையில் கிறித்தவக் காப்பியங்கள் குறித்த விழிப்புணர்வு அறிஞர்களிடம் குறைவாகவே உள்ளது. கிறித்தவக் காப்பியங்கள் என்றவுடன் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், இயேசு காவியம் எனக் குறிப்பிடுவதுடன் முடித்து விடுகின்றனர். இதனால் பிற கிறித்தவக் காப்பியங்கள் குறித்து ஒருவரும் அறியமுடியாமல் போய்விடுகிறது. இந்த அவலநிலை மாறி, கிறித்தவக் காப்பியங்கள் குறித்து அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் 30 கிறித்தவக் காப்பியங்களை அறிமுகப்படுத்துவதாக அமைகின்றது.

கிறித்தவக் காப்பியங்கள் என்னும் இந்த நூல் எழுதுவதற்குத் தேவையான மூல நூல்களைத் தேடிக் கண்டுபிடிப்பது மிகக் கடினமான பணியாக இருந்தது. இயேசு பெருமானின் அருளும் ஆசியும் இருந்ததாலேயே பல மூல நூல்கள் பலரது உதவியுடன் கிடைத்தன. இவ்வளவு நூல்கள் கிடைத்தது மிகவும் வியக்கத்தக்க ஒன்றுதான். இம்முயற்சியில் இறைவன் என்னை வழிநடத்தினார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கிறித்தவக் கீர்த்தனைக் கவிஞர்கள் என்னும் நூலை ஓரளவு முழுமையாக எழுதிய நிறைவின் பின்னர், கிறித்தவக் காப்பியங்கள் குறித்தும் முழுமையாக எழுத வேண்டும் என்னும் எண்ணம் என் மனதில் தோன்றியது. இது கடினமான வேலை. கல்லூரிப் பணிகளுக்கிடையே கிடைக்காத, மறைந்து கிடக்கும் பல காப்பியங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றை அறிமுகப்படுத்தி நூலாக எழுதுவது என்பது கடினமான செயல். எனினும் இறைவனின் வழிநடத்துதல் இப்பணியில் முழுமையாக இருந்ததை நான் அடிக்கடி உணர்ந்துள்ளேன். எதிர்ப்புகளையும் போராட்டங்களையும் இறைவன் முறியடித்தார். கிறித்தவர்களே கிறித்தவ இலக்கிய ஆய்வுகளுக்கு முன்னுரிமையும் ஆதரவும் அளிக்காத இக்காலக் கட்டத்தில் எதிர்நீச்சல் போட்டுத்தான் இப்பணியைச் செய்ய வேண்டும் என்ற நிலை வருந்தத்தக்கது.

கிறித்தவக் காப்பியங்கள் எனக்குக் கிடைப்பதற்கு உதவிய நல்நெஞ்சங்கள் பலர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையிலிருந்து கிறித்தவ இலக்கியம் தொடர்பான நூல்கள் கிடைப்பதற்குப் பெருந்துணை புரிந்து ஆதரவும் ஊக்கமும் அளித்த யாழ்ப்பாணத்துத் திருச்சபையின்

மேனாள் பேராயரும் மருதனாமடம் இறையியற் கல்லூரியின் அதிபருமான பேரருள்திரு. முனைவர் எஸ். ஜெபநேசன் அவர்களுக்கும், அவர்களது தூண்டுதலின்பேரில் திருச்செல்வர் காவியம், ஞானாதிக்கராயர் காப்பியம் என்னும் இரண்டு கிறித்தவக் காப்பியங்களையும் தேவ அருள் வேத புராணம் பற்றிய குறிப்புகளையும் அனுப்பித் தந்துதவிய யாழ்ப்பாணத்திலுள்ள சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் தமிழ் ஆசிரியர் திரு. ந. குகபரன் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் திருவாக்குப் புராணம், கிறிஸ்து மான்மியம் என்னும் இரண்டு காப்பியங்களைத் தந்துதவிய காலம்சென்ற முதுமுனைவர் சூ. இன்னாசி அவர்கள் என்றும் என் நன்றிக்கு உரியவர். மேலும், எஸ்தர் காவியத்தை உதகமண்டலத்திலுள்ள நூலாசிரியரின் உறவினர்களிடமிருந்து பெற்றுத் தந்த கீழ் கோத்தகிரி அரசு மேனிலைப் பள்ளியின் முதுகலைத் தமிழாசிரியரும் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையின் முன்னாள் மாணவருமான திரு. ம. சந்திரன் அவர்களுக்கும், அர்ச். சவேரியார் காவியத்தைத் தந்துதவிய திருச்சியிலுள்ள புனித வளனார் கல்லூரியின் மேனாள் தமிழ்ப் பேராசிரியரும் அக்கல்லூரியின் கிறித்தவ ஆய்வு மையத்தின் இயக்குநருமான அருட்தந்தை சி. மணிவளன் சே.ச. அவர்களுக்கும், அன்னை தெரேசா காவியத்தைப் பாண்டிச்சேரியிலுள்ள நூலாசிரியரிடமிருந்து பெற்று ஒளிநகல் எடுத்து சிறப்பாகக் கட்டமைப்புச் செய்து அனுப்பித் தந்த புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியரும் எனது வகுப்புத் தோழருமான முனைவர் அ. திருநாகலிங்கம் அவர்களுக்கும், திருஅவதாரம் என்னும் காப்பியத்தைத் தந்துதவிய சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையின் மேனாள் தமிழ்ப் பேராசிரியர் திருமதி முனைவர் கிரேஸ் செல்வராஜ் அவர்களுக்கும், தட்டச்சு வடிவில் இருந்த மீட்பதிகாரம் என்னும் காப்பியத்தைக் கொடுத்துதவிய, அண்மையில் வெளிவந்த இலக்கியப் புதையல் என்னும் நூலின் பதிப்பாசிரியரான திரு. ந. ஜான் ஜெயானந்தம் அவர்களுக்கும், உலகஜோதி என்னும் காப்பியத்தைக் கொடுத்துதவிய நூலாசிரியரின் மகனும் மதுரையிலுள்ள புனித பிரிட்டோ மேனிலைப் பள்ளியின் தமிழாசிரியருமான திரு. ஜே. ஜீவா அவர்களுக்கும், இயேசு புராணம் என்னும் காப்பியத்தைக் கனடாவில் வாழ்ந்து வந்த நூலாசிரியரான ஈழத்துப் பூராடனாரிடமிருந்து பெற்றுத் தந்த இலண்டனில் வசிக்கும் எனது மாணவி பொ. துரைச்செல்வி அவர்களுக்கும், ஆதியாகம காவியத்தை அனுப்பி உதவிய நூலாசிரியர் முனைவர் ச. சாமிமுத்து அவர்களுக்கும், அருட் காவியம் நூலைத் தந்துதவிய நூலாசிரியர் திரு. பா. மதலை முத்து அவர்களுக்கும், பவுலடியார் பாவியம் அனுப்பி உதவிய நூலாசிரியர் ம. ஜோயல் டேவிட்சன் சாமுவேல் அவர்களுக்கும் நான் நன்றிக் கடன்பட்டவன். இவர்கள் அனைவரும் காப்பியங்கள் கொடுத்துதவியதால்தான் கிறித்தவக் காப்பியங்கள் என்னும் இந்நூலை எழுத முடிந்தது என்பது முற்றிலும் உண்மை. என் நெஞ்சிருக்கும் வரை இவர்கள் நினைவிருக்கும்.


இந்நூலை எழுதுவதில் எனக்கு ஊக்கமளித்ததுடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டவர்கள் பலர். குறிப்பாக, சென்னைப் பல்கலைக்கழகக் கிறித்தவ இலக்கிய இருக்கையின் மேனாள் தலைவர் காலம்சென்ற முனைவர் வீ. ஞானசிகாமணி அவர்களுக்கும், சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையின் தலைவர் முனைவர் மோசஸ் மைக்கேல் பாரடே அவர்களுக்கும், சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் சா. பாலுசாமி அவர்களுக்கும், முனைவர் ஏ. பால்பிரபு சாந்தராஜ் அவர்களுக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் பேராசிரியர் தா. ரெங்கநாதன் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர்களின் ஆய்வுப் பணியில் ஊக்கம் அளித்து வருவதுடன் இந்நூல் வெளிவருவதில் மிகுந்த ஆர்வம் காட்டி என்னை ஊக்குவித்த சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் முதல்வரும் செயலருமான முதுமுனைவர் இர.வி. அலெக்சாண்டர் ஜேசுதாசன் D.Sc., Ph.D., அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது முயற்சிகளுக்குத் துணையாயிருந்து, கிறித்தவ இலக்கிய நூல்களை எழுதி வெளியிடத் தொடங்கிய நாள் முதல், வேண்டிய ஆலோசனைகளைத் தந்து ஊக்கம் அளித்து வருபவரும் கிறிஸ்தாயனம், இரட்சணிய யாத்திரிகம் என்னும் கிறித்தவக் காப்பியங்களை மறுபதிப்பு மூலம் வெளியிட்டவருமாகிய ஆசியவியல் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் இயக்குநர் முனைவர் ஞா. ஜான் சாமுவேல் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவிற்கு அனுமதி வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் கரு. அழ. குணசேகரன் அவர்களுக்கும், இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்வதற்கும் பொழிவு நூலாக்கம் பெறுவதற்கும் பல்வேறு நிலைகளில் துணைநின்ற, தமிழக அரசின் உதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைப் புதுப்பொலிவு பெறச் செய்து, தமிழாயும் நிறுவனங்களில் தலைசிறந்த நிறுவனமாக்கப் போர்க்கால அடிப்படையில் செயலாற்றிவரும் நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும், அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலாக்கம் பெறுவதில் அனைத்து நிலைகளிலும் ஊக்கம் தந்து உதவிய அறக்கட்டளையின் பொறுப்பாளர், நிறுவனத்தின் இணைப்பேராசிரியர் முனைவர் ஆ.மணவழகன் அவர்களுக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

நிறைந்த அன்புடன்,
யோ. ஞான சந்திர ஜாண்சன்

ஆசிரியர் குறிப்பு



இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சீர்திருத்தக் கிறித்தவர்களின் புண்ணியபூமி என்று அழைக்கப்படும் மயிலாடி (Mylaudy) என்னும் ஊரில் பிறந்தவர். நாகர்கோவிலிலுள்ள தெ.தி. இந்துக் கல்லூரியில் பயின்று தமிழ் இலக்கியத்தில் முதுகலை (M.A.), இளநிலை ஆய்வு (M.Phil.), முனைவர் (Ph.D.) ஆகிய பட்டங்களைப் பெற்றவர். இவரது முனைவர் பட்ட ஆய்வின் பொருள் "நீல. பத்மநாபன் நாவல்களில் பாத்திரப் படைப்பு'' என்பதாகும். தற்போது வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரது மேற்பார்வையின் கீழ் 19 பேர் முனைவர் பட்டமும் 32 பேர் இளநிலை ஆய்வுப் பட்டமும் பெற்றுள்ளனர்.

தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களில் தணியாத தாகமும் குறிப்பாகக் கிறித்தவக் கீர்த்தனைகளில் மாளாத ஈடுபாடும் கொண்டவர். அரிய பல தகவல்கள் நிறைந்த 'கிறிஸ்தவக் கீர்த்தனைக் கவிஞர்கள்' என்னும் நூலைக் கீர்த்தனா பதிப்பகத்தின் மூலம் 2003ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்நூலின் விரிவாக்கப்பட்ட மறுபதிப்பு 2009இல் வெளிவந்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தின் ஆதித்திருச்சபையாகிய மயிலாடித் திருச்சபையின் 200ஆம் ஆண்டு விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலரின் தொகுப்பாசிரியர். சாகித்திய அகாடமி 2008ஆம் ஆண்டு 'எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை' என்னும் இவரது நூலை வெளியிட்டது. சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையின் மூலமாக வெளியிடப்பட்டு இரு தொகுதிகளாக வெளிவந்த 'கிறித்தவத் தமிழியல் ஆய்வுக்கோவை' என்னும் நூலின் பதிப்பாசிரியர்.

ஆசியவியல் நிறுவனம் 2008இல் வெளியிட்ட 'கிறிஸ்தவத் தமிழிலக்கியம் - ஓர் அறிமுகம்' என்னும் நூலினை டாக்டர் அருள்திரு. தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து பதிப்பித்துள்ளார். கிறித்தவக் கவிஞர் ஜான்பால்மர் எழுதிய 'கிறிஸ்தாயனம்' என்னும் கிறித்தவக் காப்பியத்தினை ஆசியவியல் நிறுவனத்தின் மூலம் பதிப்பித்தார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் 'ம.பொ.சி. யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள்' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். கிறித்தவ இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய 'கிறித்தவ இலக்கிய வளம்', 'கிறித்தவ இலக்கியத் திறன்' ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியர். 2010 இல் பாரி புத்தகப் பண்ணை வெளியிட்டுள்ள அகப்பொருள் நூலின் உரையாசிரியர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு விழாவின்போது வெளியிடப்பட்ட, அறிவர் வில்லியம் மில்லர் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஆங்கில நூலின் தமிழ்மொழிபெயர்ப்பு நூலான, 'மில்லர் என்னும் மாமனிதர்' என்ற நூலின் பதிப்பாசிரியர். இவரது கிறித்தவத் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை இவருக்கு 'தமிழ்மாமணி' விருதினை வழங்கிச் சிறப்பித்தது.

பொருளடக்கம்

I முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கிறித்தவ இலக்கியம் தனித்த, நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. கிறித்தவ இலக்கியத்தின் பரப்பளவு, வகைமைகள் ஆகியன அறிஞர்கள் பலரால் பாராட்டப்பட்டுள்ளன. கிறித்தவ இலக்கிய வகைமைகளுள் காப்பியம் குறிப்பிடத்தக்கது. கிறித்தவக் காப்பியத்திற்கு அடிகோலியவர் வீரமாமுனிவர். தேம்பாவணியை வீரமாமுனிவர் எழுதுவதற்கு சீர்திருத்தச் சபையைச் சார்ந்த ஜெர்மானிய இறைத்தொண்டர் அருள்திரு. பர்த்தலோமேயு சீகன்பால்கு அவர்கள் மொழிபெயர்த்த விவிலியமும் ஸ்பெயின் நாட்டில் எழுதப்பட்ட கடவுளின் நகரம் என்னும் நூலும் துணையாக இருந்தன. சீகன்பால்குவின் விவிலியம் மற்றும் வழிபாட்டுப் பாடல்களின் மொழிபெயர்ப்புப் பணியும் வீரமாமுனிவரின் காப்பியம், சிற்றிலக்கியம் மற்றும் உரைநடைப் பணிகளும் கிறித்தவ இலக்கியத்தின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணிகளாக அமைந்தன.

இவ்விருவரின் பணிகளைத் தொடர்ந்து மேலைநாட்டு இறைத்தொண்டர்களும் இலங்கைத் தமிழ்ப் புலவர்களும் நம்நாட்டுத் தமிழ்ப் படைப்பாளர்களும் கிறித்தவ இலக்கியத்தில் பல வகைமைகளைப் படைத்தனர். இப்படைப்புகளால் கிறித்தவ இலக்கியத்தின் பரப்பு விரிந்தது; கிறித்தவ இலக்கியத்தின் சிறப்புப் பேசப்பட்டது. இத்தகைய சிறப்பிற்குத் தொடக்க காலத்தில் வேதநாயக சாஸ்திரியாரின் கிறித்தவ இலக்கியப் பணி குறிப்பிடத்தக்கது. வேதநாயக சாஸ்திரியார் கிறித்தவச் சிற்றிலக்கியங்களும் கிறித்தவக் கீர்த்தனைகளும் படைத்ததின் வாயிலாக கிறித்தவத்தின் பொருண்மையும் மேன்மையும் மக்களிடம் சென்றடைந்தன. இவரால் எழுதப்பட்ட கீர்த்தனைகள் இன்றும் இறைவழிபாடுகளில் உணர்ச்சிபூர்வமாகப் பாடப்பட்டு வருகின்றன. இவரது கீர்த்தனைகளைப் பின்பற்றி தமிழகத்திலும் இலங்கையிலும் நூற்றுக்கும் மேற்பட்ட கிறித்தவக் கவிஞர்கள் கீர்த்தனைகள்

எழுதி இறைவனுக்குப் புகழ் சேர்த்துப் பெருமிதம் அடைந்துள்ளனர். வேதநாயக சாஸ்திரியார் தமது படைப்புகளில் கிறித்தவக் கொள்கைகளை விவரிப்பதுடன் சமூக சிந்தனைகளையும் மக்கள் களைய வேண்டிய மூட நம்பிக்கைகளையும் எடுத்தியம்பினார். எனவே கிறித்தவ இலக்கியம் கிறிஸ்துவைப் பற்றி மட்டும் விவரிக்காமல் சமூக மேன்மைக்காகவும் குரல் கொடுக்கும் நிலையை சாஸ்திரியார் தொடங்கி வைத்தார்.

வேதநாயக சாஸ்திரியாரின் இவ்வணுகுமுறையை அவருக்குப் பின்னர் வந்த கிறித்தவ இலக்கியப் படைப்பாளர்கள் பின்பற்றினர். கிறித்தவப் படைப்பாளர்கள் சிற்றிலக் கியங்களிலும் புனைகதை மற்றும் புதுக்கவிதைகளிலும் தற்காலத்தில் நிலவி வரும் முற்போக்குச் சிந்தனைகளைக் கிறித்தவக் கருத்துகளுடன் கலந்து கொடுத்தனர். குறிப்பாக நாவல் இலக்கியம் கிறித்தவ சமூகத்தில் காணலாகும் சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. சில சிற்றிலக்கியங்கள் மது குடிப்பதால் வரும் தீமைகளை உணர்த்துகின்றன; சில சாதி வேறுபாட்டால் வரும் சிக்கல்களைத் தெளிவுபடுத்துகின்றன; சில பெயரளவிலுள்ள கிறித்தவர்களைச் சுட்டிச் சாடுகின்றன. கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் மக்களுக்கு அறிவுரை பகரும் இலக்கியங்களாக உள்ளன. இவ்வளர்ச்சி நிலைகள் கிறித்தவ இலக்கியத்தின் ஏற்றத்திற்குக் காரணிகளாக அமைந்துள்ளன.

கிறித்தவ இலக்கிய வகைமைகளில் முதன்மையானதாகக் கருதப்படும் கிறித்தவக் காப்பியங்கள் இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. இக் காப்பியங்களுக்கு விவிலியமே அடிப்படைக் களமாகும். சில காப்பியங்கள் விவிலியம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டும், சில விவிலியத்திலுள்ள ஒரு நூலை ஆதாரமாகக் கொண்டும் சில புதிய ஏற்பாடை மையமாகக் கொண்டும் இயற்றப்பட்டுள்ளன. தேம்பாவணி தொடங்கி ஆதியாகம காவியம் வரையில் வெளிவந்துள்ள கிறித்தவக் காப்பியங்கள் அனைத்தும் கிறித்தவ இலக்கியத்தின் தனித்தன்மைகளை எடுத்தியம்புவனவாய் அமைந்துள்ளன. இக்காப்பியங்களில் பல மறைந்தும் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் போயின. இவற்றை வெளிக்கொணர்வது தமிழறிஞர்களின் தலையாய

கடமையாகும். இன்றைய ஆய்வாளர்கள் இத்தகைய துறைகளில் நாட்டம் செலுத்துபவர்களாக இருப்பது கிறித்தவ இலக்கிய ஆய்வுலகுக்கு நலமும் வளமும் சேர்க்கும்.

கிறித்தவக் காப்பியங்கள் என்னும் இந்நூலில் மரபிலக்கணத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட 30 கிறித்தவக் காப்பியங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்த 30 காப்பியங் களும் திருமறை வரலாற்றுக் காப்பியங்கள், கிறிஸ்துவின் வரலாற்றுக் காப்பியங்கள், திருமறை மாந்தர் வரலாற்றுக் காப்பியங்கள், திருமறை சாரா மாந்தர் வரலாற்றுக் காப்பியங்கள், தழுவல் காப்பியங்கள், மொழிபெயர்ப்புக் காப்பியம் என ஆறு தலைப்புகளில் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. திருமறையின் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்னும் இரு பிரிவுகளிலும் கூறப்பட்டுள்ள முழு வரலாற்றையோ அல்லது பழைய ஏற்பாடு பகுதியில் அமைந்துள்ள ஆரம்பகால வரலாற்றை மட்டுமோ அல்லது திருமறையின் ஒரு தனி நூலின் வரலாற்றையோ எடுத்துரைக்கும் காப்பியங்கள் முதல் பகுப்பில் அடக்கப் பட்டுள்ளன. முழுத் திருமறைக்கும் நடுநாயகமாக விளங்கும் கிறிஸ்து பெருமானின் வரலாற்றை முழுமையாகவோ பகுதி யாகவோ விரித்துரைக்கும் காப்பியங்கள் இரண்டாம் பகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. திருமறையில் இடம்பெறும் முக்கிய மாந்தர் சிலரது வரலாற்றை விளக்கும் காப்பியங்கள் மூன்றாம் பகுப்பில் தரப்பட்டுள்ளன. திருமறையில் இடம்பெறாத கிறித்தவ அருட்தொண்டர்கள் மற்றும் புனிதர்களது வரலாற்றைக் கூறும் காப்பியங்கள் நான்காம் பகுப்பில் இணைக்கப் பட்டுள்ளன. காப்பியப் பாடுபொருள் எதுவாயினும் பிறநாட்டு, பிறமொழிக் காப்பியங்களைத் தழுவி படைக்கப்பட்டுள்ள தமிழ்க் காப்பியங்கள் ஐந்தாவது பகுப்பில் இடம் பெறுகின்றன. மொழிபெயர்ப்புக் காப்பியம் ஆறாவது பகுப்பில் இடம் பெற்றுள்ளது. கிறித்தவக் காப்பியங்களைப் பற்றிய பார்வையில் ஒரு தெளிவு அமைந்திட வேண்டும் என்னும் நோக்கிலேயே இவ்வாறு பகுக்கப்பட்டுள்ளது.

நூல் நெடுக கிறிஸ்து பெருமானின் பெயரைக் குறிக்கும் இடங்களில் எல்லாம் 'கிறிஸ்து' என வட எழுத்திட்டும் (ஸ்), கிறித்தவம், கிறித்துநெறி என்பன போல வரும் பிற இடங்களில் வட எழுத்துகளைத் தவிர்த்தும் (கிறித்தவம்) எழுதப்பட்டுள்ளது. இறைமகனின் திருப்பெயரை, மூல கிரேக்கச் சொல்லில் உள்ள

ஒலியமைப்பு குன்றாமலே குறிப்பிடுவது நல்லது என்ற நோக்குடன் இம்முறை இந்நூலில் கையாளப்பட்டுள்ளது.

இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 30 காப்பியங்கள் மட்டுமல்லாமல் இன்னும் சில கிறித்தவக் காப்பியங்கள் இருக்கலாம். நூலாசிரியரின் தேடுதலில் இந்நூலில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 30 காப்பியங்கள் தான் கிடைத்தன. இக் காப்பியங்கள் மூலம் காலந்தோறும் கிறித்தவக் காப்பியங்களின் வளர்ச்சி எங்ஙனம் இருந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் கிறித்தவக் காப்பியங்களை மதிப்பீடு செய்வதற்கும் இந்நூல் உதவிகரமாக அமையலாம். இந்நூலில் அறிமுகம் செய்யப்பட்ட பல காப்பியங்கள் கிறித்தவ இலக்கிய உலகினரால் அறியப்படாமலிருப்பது வருத்தத்திற்குரியது. இக் காப்பியங்களில் பல மறுபதிப்புகளாக வெளியிடப்பட்டால் இக்காப்பியங்களின் சிறப்பு கிறித்தவ இலக்கிய உலகில் நிலைநிற்கும் என்பதில் ஐயமில்லை. தமிழன்னையின் இலக்கியப் பேழையில் மறைந்து மங்கிக் கிடக்கும் அம்மணி முத்துகள் மீண்டும் ஒளி வீசிடவும் அஃது வழிவகுக்கும் அல்லவா?

II கிறித்தவக் காப்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ்க் கிறித்தவ இலக்கியம் மேலைநாட்டுத் திருத் தொண்டர்களால் தோற்றுவிக்கப்பட்டு, நம்மவர்களால் வளர்ந்து கொண்டே வருகின்றது. காப்பியம், சிற்றிலக்கியம், கீர்த்தனை, உரைநடை, மொழிபெயர்ப்பு, நாடகம், புதுக்கவிதை, நாட்டார் வழக்காற்றியல் எனப் பல்வேறு வடிவங்களில் கிறித்தவ இலக்கியத்தின் எல்லை பரந்து விரிந்து சென்று கொண்டிருக் கின்றது. இதில் கிறித்தவர்களின் பங்குடன் கிறித்தவரல்லாதாரின் பங்கும் குறிப்பிடத்தக்கது. கிறித்தவ இலக்கியம் இயேசு கிறிஸ்துவை மட்டுமே மையமாகக் கொள்ளாமல், அவரின் சீடர், அவரின் கொள்கைகளைப் பின்பற்றியோர், இன்றைய கிறித்தவ சமூகம் முதலிய பல்வேறு கருப்பொருள்களையும் மையமாகக் கொண்டு விளங்குகின்றது.

இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான புனித தோமையரால் தமிழகத்தில் கிறித்தவம் வேரூன்றத் தொடங்கியது. புனித தோமையருக்குப் பின் வாஸ்கோட காமாவின் வருகைக்கு முன் சுமார் 15 நூற்றாண்டுகளாக கிறித்தவம் பண்டைத் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பலரால் பராமரிக்கப்பட்டு வந்தது. இதற்குப் பலவிதமான சான்றுகள் உள்ளன. 1498ஆம் ஆண்டில் வாஸ்கோட காமாவின் வருகைக்குப் பின்னர், மேலை நாடுகளிலிருந்து இறைத் தொண்டர்கள் தமிழகத்திற்கு வருகை புரிந்து இறைச் செய்தியைப் பரப்பியும், மனிதநேயத் தொண்டுகள் புரிந்தும் வந்தனர். ஆரம்ப நிலையில் புனித பிரான்சிஸ் சவேரியாரின் பணிகளையும் அவரைத் தொடர்ந்து வந்த இயேசு சபையினரின் பணிகளையும் குறிப்பிட வேண்டும்.

இயேசு சபையினரைத் தொடர்ந்து 1706ஆம் ஆண்டு சீர்திருத்தச் சபையின் இறைப்பணியாளர் அருள்திரு. பர்த்தலோமியோ சீகன்பால்கு தரங்கம்பாடியில் வந்து தங்கி,

தமிழ் மொழியைக் கற்று விவிலியத்தையும் ஆங்கிலம் மற்றும் செர்மானிய வழிபாட்டுப் பாடல்களையும் தமிழாக்கம் செய்து அச்சிட்டு வெளியிட்டார். இம்மொழிபெயர்ப்பு மற்றும் நூல் வெளியீட்டுப் பணி தமிழகக் கிறித்தவ மக்களின் வாழ்விலும் கிறித்தவ இலக்கியத்தின் தோற்றத்திலும் ஒரு தொடக்கமாக விளங்கியது எனலாம். காரணம் என்னவெனில், கிறித்தவ இலக்கியங்களுக்கு விவிலியமே அடிப்படையாகும்.

சீகன்பால்குவின் காலத்தில் தமிழகம் வந்த (1709) வீரமாமுனிவர் தமிழ் கற்று பல்வேறு வகையான கிறித்தவ இலக்கியங்களைப் படைத்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்தது தேம்பாவணியாகும். இதுவே தமிழில் எழுதப்பட்ட முதல் கிறித்தவக் காப்பியம் ஆகும். இக்காப்பியத்தால் தமிழுக்கும் பெருமை, கிறித்தவ இலக்கியத்திற்கும் பெருமை.

கிறித்தவக் காப்பியங்கள்

இலக்கிய வகைகளுள் காப்பியம் உயர்வான ஒரு வகையாகும். தமிழில் சிலப்பதிகாரம் முதல் காப்பியமாகத் தோன்றி, இன்று ஆதியாகம காவியம் வரை காப்பியம் வளர்ச்சியடைந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கிறித்தவ இலக்கியம் தோன்றிய காலச்சூழலிலேயே கிறித்தவக் காப்பியமும் தோன்றியது கிறித்தவ இலக்கியத்திற்குக் கிடைத்த பெருமையாகும். கிறித்தவ இலக்கியத்தின் முதல் காப்பியமான தேம்பாவணியைத் தொடர்ந்து பல விதமான பா வடிவிலும், மரபிலும் பல காப்பியங்கள் தோன்றியுள்ளன. இவற்றில் சில இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை மட்டும் நற்செய்தி நூல்களின் அடிப்படையில் விவரிப்பதாகவும், சில காப்பியங்கள் இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாளின் வரலாற்றைப் புலப்படுத்துவதாகவும், சில காப்பியங்கள் விவிலியம் முழுவதிலும் உள்ள செய்திகளைச் சுருக்கமாகச் சொல்வதாகவும், சில காப்பியங்கள் விவிலியத்திலுள்ள மாந்தர்களை மட்டும் (யோசேப்பு, எஸ்தர், யூதித்து, பவுல்) விரித்துரைப்பதாகவும், சில காப்பியங்கள் இயேசு கிறிஸ்துவின் அடியவர்களை (புனித சவேரியார், அன்னை தெரேசா, தேவசகாயம் பிள்ளை) விவரிப்பதாகவும் அமைந்துள்ளன. கிறித்தவக் காப்பியங்களின் இரு கண்களாகப் போற்றப்பட்டு வரும் தேம்பாவணியும் இரட்சணிய யாத்திரிகமும் தழுவல்

காப்பியங்களாகும். மொழிபெயர்ப்புக் காப்பியமாக பூங்காவனப் பிரளயம் காணப்படுகிறது. இன்றைக்குக் கிறித்தவக் காப்பியங்களின் எண்ணிக்கையைப் பலரும் பலவிதமாகக் குறிப்பிட்டாலும் கீழ்க் குறிப்பிடப்படும் காப்பியங்களைக் குறிப்பிடத்தக்க கிறித்தவக் காப்பியங்கள் எனலாம். அவை பின்வருமாறு:

1. தேம்பாவணி - வீரமாமுனிவர் (1726)
2. யோசேப்புப் புராணம் - கூழங்கைத் தம்பிரான்
3. கிறிஸ்தாயனம் - ஜான்பால்மர் (1865)
4. ஞானாதிக்கராயர் காப்பியம் - சாமிநாதர் (1865)
5. திருவாக்குப் புராணம் - கனகசபைப் புலவர் (1866)
6. ஞானானந்த புராணம் - தொம் பிலிப்பு நாவலர் (1874)
7. அர்ச். சவேரியார் காவியம் - அந்தோனிமுத்து (1877)
8. பூங்காவனப் பிரளயம் - சாமுவேல் வேதநாயகம் தாமஸ் (1887)
9. கிறிஸ்து மான்மியம் - ஸ்தொஷ் ஐயர் (1891)
10. இரட்சணிய யாத்திரிகம் - எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை (1894)
11. சுவிசேட புராணம் - சுகாத்தியர் (1896)
12. திருச்செல்வர் காவியம் - பூலோகசிங்க அருளப்ப நாவலர் (1896)
13. திருஅவதாரம் - மாணிக்கவாசகம் ஆசீர்வாதம் (1944)
14. இரட்சகராகிய இயேசு நாதர் - ஞானாபரணம் (1950)
15. நசரேய புராணம் - ஜே.எஸ். ஆழ்வார் பிள்ளை
16. சுடர்மணி - ஆரோக்கியசாமி (1976)
17. இயேசு காவியம் - கண்ணதாசன் (1981)
18. அருளவதாரம் - வி. மரிய அந்தோனி (1983)
19. மீட்பதிகாரம் - பவுல் இராமகிருட்டிணன் (1986)
20. இயேசு புராணம் - ஈழத்துப் பூராடனார் (1986)
21. எஸ்தர் காவியம் - இராபின்சன் குரூசோ (1986)
22. மோட்சப்பயணக் காவியம் - ஏ.த. ஜோதிநாயகம் (1991)
23. அன்னை தெரேசா காவியம் - துரை. மாலிறையன் (1996)
24. அருள்நிறை மரியம்மைக் காவியம்-துரை. மாலிறையன் (1996)

25. அருட்காவியம் - மதலை முத்து (1999)
26. மீட்பரசி - லோட்டஸ் எடிசன் (2002)
27. பவுலடியார் பாவியம் - ம. யோவேல் (2003)
28. உலகஜோதி - இறையரசன் (2005)
29. திருத்தொண்டர் காப்பியம் - சூ. இன்னாசி (2007)
30. ஆதியாகம காவியம் - சா. சாமிமுத்து (2008)

இவை புராணம், காப்பியம், காவியம், பாவியம் எனப் பல்வேறு பெயர்களை உடையனவாகக் காணப்படுகின்றன.

18ஆம் நூற்றாண்டுக் கிறித்தவக் காப்பியங்கள்

வீரமாமுனிவர் தழுவல் முறையில் தேம்பாவணி என்னும் காப்பியத்தை 1726ஆம் ஆண்டு படைத்தருளினார். வீரமாமுனிவர் திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய தமிழ் இலக்கியங்களில் தோய்ந்தமையால் இதைக் காப்பியமாகப் பாட முடிந்தது. இது வீரமாமுனிவரது காலத்தில் நூலாக வெளியிடப்படாவிடினும், தேம்பாவணி பற்றிய செய்தி தமிழகம் மட்டுமன்றி இலங்கைக்கும் சென்று பரவியது. கிறித்தவக் காப்பியங்கள் படைப்பவர்களுக்குத் தமிழ்க் காப்பியங்கள் மட்டுமன்றி தேம்பாவணியும் அடிப்படையாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தேம்பாவணியைத் தொடர்ந்து இலங்கையில் கூழங்கைத் தம்பிரான் என்பவர் யோசேப்புப் புராணம் என்னும் நூலை இயற்றினார். இப்புராணம் முழுமையாகக் கிடைக்கவில்லை. இப்புராணம் 1795ஆம் ஆண்டிற்கு முன் எழுதப்பட்டதாகும்.

19ஆம் நூற்றாண்டுக் கிறித்தவக் காப்பியங்கள்

1865ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மயிலாடி என்னும் ஊரைச் சார்ந்த ஜான் பால்மர் என்னும் கவிஞர் கிறிஸ்தாயனம் என்னும் காப்பியத்தை இயற்றினார். இக்காப்பியம் தமிழ் நாட்டைச் சார்ந்த ஒருவரால் எழுதப்பட்ட முதல் கிறித்தவக் காப்பியமாகும். இக்காப்பியம் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நற்செய்தி நூல்களை அடிப்படையாகக் கொண்டது. இதைத் தொடர்ந்து 1865ஆம் ஆண்டிலேயே புதுச்சேரியைச் சார்ந்த சாமிநாதர் என்பவர்

ஞானாதிக்கராயர் காப்பியத்தை இயற்றினார். இக்காப்பியம் ஞானாதிக்கராயர் என்பவரின் வாழ்க்கையைப் பாடுவதாக அமைந்தாலும், காப்பியத்தின் சில காதைகளில் விவிலியச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. 1866ஆம் ஆண்டு இலங்கையைச் சார்ந்த கனகசபை என்பவர் திருவாக்குப் புராணம் என்னும் காப்பியத்தை எழுதினார். இக்காப்பியத்தின் முதல் பாகம் மட்டுமே வெளிவந்துள்ளது. இரண்டாம் பாகம் வெளிவரும் என முதல் பாகத்தின் முடிவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இரண்டாம் பாகம் வெளிவரவில்லை. எனவே இது ஒரு முற்றுப் பெறாத காப்பியமாகவே உள்ளது. இதைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள தெல்லிப்பழையைச் சார்ந்த தொம் பிலிப்பு நாவலர் என்பவர் 1874இல் ஞானானந்த புராணம் என்னும் காப்பியத்தை இயற்றினார். இக்காப்பியம் கிறித்தவ சமயத்தின் விளக்க நூலாக உள்ளது. இக்காப்பியத்திற்கு விசுவாச விளக்கம் என்னும் பிறிதொரு பெயரும் உண்டு.

கேரளாவிலுள்ள பாலக்காடு மாவட்டத்திலுள்ள அந்தோனி முத்து 1877ஆம் ஆண்டு அர்ச். சவேரியார் காவியத்தைப் படைத்தார். இக்காப்பியம் இந்தியாவிற்கு வந்து கோவா மற்றும் கன்னியாகுமரிப் பகுதிகளில் இறைத்தொண்டும் சமூகத் தொண்டும் புரிந்த புனித சவேரியாரின் பணிகளை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. ஜான் மில்டனின் Paradise Lost என்னும் ஆங்கிலக் காப்பியத்தின் முதலிரு பகுதிகளையும் 1887ஆம் ஆண்டு பூங்காவனப் பிரளயம் என்னும் பெயரில் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் மொழிபெயர்த்து வெளியிட்டார். கிறித்தவக் காப்பியங்களில் இது ஒன்றே மொழிபெயர்ப்புக் காப்பியமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறித்தவ இறைத்தொண்டர்கள் பலர் தமிழகத்தில் இறைப்பணியும் சமூகப்பணியும் கல்விப்பணியும் ஒருங்கேயாற்றி வந்தனர். குறிப்பாக, தரங்கம்பாடியில் செர்மன் நாட்டைச் சேர்ந்த இறைத் தொண்டர்கள் பணியாற்றி வந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அருள்திரு. ஸ்தொஷ் என்பவராவார். இவர் கிறிஸ்து மான்மியம் என்னும் காப்பியத்தை 1891ஆம் ஆண்டு இயற்றினார். இக்காப்பியம் நான்கு நற்செய்தி நூல்களை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டதாகும்.

இதைத் தொடர்ந்து கிறித்தவக் கம்பன் என்று அழைக்கப் படும் பாளையங்கோட்டையைச் சேர்ந்த எச்.ஏ.

கிருஷ்ணபிள்ளை இரட்சணிய யாத்திரிகம் என்னும் முற்றுருவகக் காப்பியத்தை 1894ஆம் ஆண்டு படைத்தார். இக்காப்பியம் ஜான் பனியனின் பில்கிரிம்ஸ் புராகிரஸ் என்னும் நூலைத் தழுவி இயற்றப்பட்டதாகும். இரட்சணிய யாத்திரிகமும் தேம்பாவணியும் கிறித்தவக் காப்பியங்களின் இரு கண்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து மதுரையில் இறைத்தொண்டு புரிந்து வந்த அமெரிக்க மிஷனெரி அருள்திரு. ஸ்காட் என்னும் பெயரையுடைய சுகாத்தியர் 1896ஆம் ஆண்டு சுவிசேட புராணம் என்னும் காப்பியத்தை எழுதினார். இக்காப்பியம் நான்கு நற்செய்தி நூல்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. அயல்நாட்டவர்கள் மூவர் (வீரமாமுனிவர், ஸ்தொஷ், சுகாத்தியர்) தமிழில் கிறித்தவக் காப்பியங்கள் படைத்துள்ளமை கிறித்தவக் காப்பிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். யாழ்ப்பாணத்திலுள்ள தெல்லிப்பழையைச் சார்ந்த பூலோக சிங்க அருளப்ப நாவலர் 1896 ஆம் ஆண்டு திருச்செல்வர் காவியத்தைப் படைத்தார். இது ஒரு தழுவல் காப்பியமாகும். இக்காப்பியத்தின் சில படலங்களில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, அவரது அருளுரை, அவர் செய்த அற்புதங்கள், பாடு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய செய்திகள் விரிவாக விவரிக்கப் பட்டுள்ளன. திருச்செல்வரின் கதையைக் கூறினாலும் விவிலியச் செய்திகள் கிளைக்கதை போன்று இடம் பெற்றுள்ளன.

இருபதாம் நூற்றாண்டுக் கிறித்தவக் காப்பியங்கள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிறித்தவக் காப்பியங்கள் வெளிவரவில்லை. 1944ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள டோனாவூரின் அருகிலுள்ள சூரங்குடியைச் சார்ந்த மாணிக்கவாசகம் ஆசீர்வாதம் அவர்கள் திருஅவதாரம் என்னும் காப்பியத்தையும் 1950ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த ஞானாபரணம் பண்டிதர் இரட்சகராகிய இயேசு நாதர் என்னும் காப்பியத்தையும் படைத்துள்ளனர். இலங்கையிலுள்ள ஜே.எஸ். ஆழ்வார் பிள்ளை என்பவர் 1950களில் நசரேய புராணம் என்னும் காப்பியத்தைப் படைத்துள்ளார். இவரது நூலில் காப்பியம் எழுதப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட வில்லை. எனினும் அவரது வாழ்க்கை வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு 1950 களில் இக்காப்பியத்தை எழுதியிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

1976ஆம் ஆண்டு விழுப்புரத்தைச் சார்ந்த ஆரோக்கியசாமி என்பவர் சுடர்மணி என்னும் காப்பியத்தையும், 1981ஆம் ஆண்டு கவிஞர் கண்ணதாசன் இயேசு காவியம் என்னும் நூலையும் எழுதினார்கள். இவ்விரண்டு காப்பியங்களும் கத்தோலிக்கத் திருமறையை அடிப்படையாகக் கொண்டவையாகும். விவிலியம் முழுவதையும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த பேராசிரியர் வி. மரிய அந்தோனி அவர்கள் அருளவதாரம் என்னும் பெயரில் 1983ஆம் ஆண்டு காப்பியமாகப் படைத்துள்ளார். இக்காப்பியம் விவிலியத்தின் சுருக்கமாகக் காணப்படுகிறது. இக்காப்பியம் கத்தோலிக்கத் திருச்சபையினர் பயன்படுத்தும் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டது. இக்காப்பியம் 2006 ஆம் ஆண்டு நூல் வடிவில் வெளிவந்தது.

1986ஆம் ஆண்டு பேராசிரியர் பவுல் இராமகிருட்டிணன் மீட்பதிகாரம் என்னும் பேரின்பக் காப்பியத்தைப் படைத்துள்ளார். இலங்கையிலுள்ள ஈழத்துப் பூராடனார் என்னும் கவிஞர் விவிலியம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டு இயேசு புராணம் என்னும் காப்பியத்தை 1986ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இக்காப்பியம் விவிலியத்தின் பாகு எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள எஸ்தர் என்னும் பெண்மணியை காப்பியத் தலைவியாகக் கொண்டு 1986ஆம் ஆண்டு எஸ்தர் காவியம் உதகமண்டலத்தைச் சார்ந்த இராபின்சன் குரூசோ அவர்களால் படைக்கப்பட்டது. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை ஜான்பனியனின் நூலை ஆதாரமாகக் கொண்டு இரட்சணிய யாத்திரிகத்தைப் படைத்தது போன்று மோட்சப் பயணக் காவியம் என்னும் நூலை கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த ஏ.த. சோதி நாயகம் 1991இல் எழுதினார். இதைத் தொடர்ந்து பாண்டிச்சேரியைச் சார்ந்த துரை. மாலிறையன் என்பவர் 1996ஆம் ஆண்டில் அன்னை தெரேசா காவியத்தையும், 1998ஆம் ஆண்டில் அருள்நிறை மரியம்மைக் காவியத்தையும் படைத்துள்ளார். 1999ஆம் ஆண்டு பா. மதலை முத்து என்பவர் அருட் காவியத்தை இயற்றியுள்ளார். அருட்காவியம் நற்செய்தி நூல்களை ஆதாரமாகக் கொண்டதாகும்.

இருபத்தோராம் நூற்றாண்டுக் கிறித்தவக் காப்பியங்கள்

மரபிலக்கண அடிப்படையில் இருபத்தியோராம் நூற்றாண்டிலும் கிறித்தவக் காப்பியங்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இருபத்தோராம் நூற்றாண்டில்

வெளிவந்த காப்பியங்களான லோட்டஸ் எடிசன் அவர்களால் எழுதப்பட்ட மீட்பரசி (2002), ம. யோவேல் அவர்களால் எழுதப்பட்ட பவுலடியார் பாவியம் (2003), பேராசிரியர் இறையரசன் அவர்களால் எழுதப்பட்ட உலக ஜோதி (2005), முதுமுனைவர் சூ. இன்னாசி அவர்களால் எழுதப்பட்ட திருத்தொண்டர் காப்பியம் (2007), முனைவர் ச. சாமிமுத்து அவர்களால் எழுதப்பட்ட ஆதியாகம காவியம்(2008) ஆகிய ஐந்தும் சிறப்புமிக்கன. இந்த ஐந்து காப்பியங்களும் வெவ்வேறு தன்மையின, கருப்பொருளின. புரட்சிப் பெண்ணாக விளங்கிய யூதித்துவின் வரலாற்றை மீட்பரசி என்னும் காப்பியம் எடுத்துரைக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் அடியவரான பவுலின் முழு வரலாற்றையும் பவுலடியார் பாவியம் விவரிக்கிறது. விவிலியத்திலுள்ள பழைய, புதிய ஏற்பாட்டுச் செய்திகளை உலக ஜோதி விளக்குகின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதால் பாடுகள் பலபட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நீலகண்ட பிள்ளை என்னும் தேவசகாயம் பிள்ளையின் வரலாற்றைக் கூறுவதாகத் திருத்தொண்டர் காப்பியம் அமைந்துள்ளது. இவரது வரலாறு மக்களிடம் கதை வடிவிலும் கும்மி, சிந்து, அம்மானை, வாசகப்பா, தெருக்கூத்து என்னும் பல வடிவங்களிலும் காணப்பட்டு, இறுதியில் காப்பிய வடிவினைப் பெற்றுள்ளது. நாட்டுப்புறப் பாடலாக இருந்த கோவலன் கண்ணகி கதை, சிலப்பதிகாரம் என்னும் காப்பியமாக மாறியதை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். விவிலியச் செய்திகள் இக்காப்பியத்தில் கிளைக்கதைகளாக இடம் பெற்றுள்ளன. விவிலியத்திலுள்ள முதல் நூலான ஆதியாகமத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு விரிவாக எழுதப்பட்டது ஆதியாகம காவியமாகும்.

இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ள 30 காப்பியங்களின் பெயர்கள் பலதிறப்பட்டன. பன்னிரெண்டு காப்பியங்களின் பெயர்கள் பொதுவானவையாக உள்ளன. இவற்றுடன் காப்பியம் என்றோ அல்லது புராணம் என்றோ இணைக்கப் படவில்லை. மேலும் காவியம் என்னும் பெயரில் ஒன்பது நூல்களும் காப்பியம் என்னும் பெயரில் இரண்டு நூல்களும் பாவியம் என்னும் பெயரில் ஒரு நூலும் புராணம் என்னும் பெயரில் ஆறு நூல்களும் வெளிவந்துள்ளன. இவற்றுள் இலங்கையிலிருந்து வெளிவந்த காப்பியங்களின் எண்ணிக்கை

ஆறு ஆகும். இவ்வாறில் ஐந்து நூல்கள் புராணம் என்றும் ஒரு நூல் காவியம் என்றும் பெயரிடப்பட்டுள்ளன.

தேவஅருள் வேதபுராணம் காப்பியமா?

இலங்கையில் வெளிவந்த கிறித்தவ இலக்கியம் தேவஅருள் வேதபுராணம் எனப்படுகிறது. இதன் ஆசிரியர் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சாங்கோபாங்கர் கொன்சலாஸ் சுவாமிகள் (1676-1742) ஆவார். இவரது இன்னொரு பெயர் யாக்கோமே கொன்சலாஸ் சுவாமிகள் என்பதாகும். இவர் 1676ஆம் ஆண்டு ஆனி மாதம் எட்டாம் நாள் இந்தியாவிலுள்ள கோவா மாநிலத்திலுள்ள திவாரி என்னும் ஊரில் கொங்கணி மொழி பேசும் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவர் பிறப்பிலேயே கத்தோலிக்கக் கிறித்தவராவார். கோவாவில் இறையியல் பட்டம் பெற்ற பின்னர் அழைப்பின் பேரில் இவருடன் மூன்று பேர்களும் சேர்ந்து இலங்கைக்கு இறைப்பணியாற்றச் சென்றனர். இவர் தமிழ் மொழியைக் கற்று கிறித்தவ நூல்கள் பல படைத்து இலங்கையில் 27 ஆண்டு காலம் இறைப்பணியாற்றினார். இலங்கையில் ‘வியத்தகு விண்மீன்’ எனப் புகழப் பெற்றவர்.

சாங்கோபாங்கர் கொன்சலால் சுவாமிகளின் படைப்புகள் இலங்கையிலுள்ள கத்தோலிக்கக் கிறித்தவத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. இவர் சுவிசேச விரித்துரைகள், சுகிர்த குறள், அற்புத வரலாறு, வியாகுலப் பிரசங்கம், தேவ அருள் வேதபுராணம், தர்ம உத்தியானம், ஞான உணர்த்துதல் என தமிழிலும் சிங்களத்திலுமாக சுமார் 35 நூல்களை எழுதியுள்ளார். மேலும் இவர் தமிழ்-சிங்கள அகராதியும், போர்த்துக்கீஸ்-சிங்கள அகராதியும் தொகுத்துள்ளார். கொன்சாலஸ் சுவாமிகள் எழுதிய பழைய, புதிய ஏற்பாட்டுச் சரித்திரம் என்னும் நூலே தேவஅருள் வேதபுராணம் என அழைக்கப்படுகிறது. இந்நூல் 1725ஆம் ஆண்டு எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

தேவஅருள் வேதபுராணம் இரண்டு காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை புராந்திம காண்டம், பச்சிம காண்டம் என்பனவாகும். புராந்திம காண்டம் ஏழு யுகங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை அனாதி யுகம், ஆதாமின் யுகம், நோவேயின் யுகம், ஆபிரகாமின் யுகம், மோயீசனின் யுகம், சாலமோனின் யுகம், திவ்ய சிருஷ்டிகரின் யுகம் என்பனவாகும்.

தேவஅருள் வேதபுராணமானது சருவேஸ்வராய நம எனத் தொடங்குகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத கடவுளின் மகிமையை அறிவிப்பதுடன் தொடங்கி, கடவுள் ஒருவரே என நிரூபிக்கின்றது. இரண்டாம் அதிகாரம் கடவுளின் ஆறு இலட்சணங்களை விவரிக்கின்றது. அந்த அதிகாரத்தின் முடிவில் அது ஸ்தோத்திர விண்ணப்பமாக அமைந்துள்ளது.

கொன்சாலஸ் சுவாமிகள் இப்புராணத்தை சிங்கள மொழியில் தேவ வேத புராணய என்னும் பெயரில் எழுதியுள்ளார். வீரமாமுனிவர் தேம்பாவணியை எழுதி முடிப்பதற்கும் ஓர் ஆண்டிற்கு முன்னர் தேவஅருள் வேத புராணத்தை அடிகளார் எழுதியுள்ளார். சிலர் தேவஅருள் வேதபுராணத்தைக் காப்பியமாகக் கூறுகின்றனர். ஆனால் இப்புராணம் உரைநடையில் எழுதப்பட்டதாக இலங்கையிலுள்ள தமிழ் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். மட்டுமன்றி இலங்கையிலிருந்து படைக்கப்பட்டுள்ள கிறித்தவ இலக்கியம் தொடர்பான நூல்கள் தேவஅருள் வேதபுராணத்தைக் காப்பியமாகவோ, செய்யுள் நடையில் எழுதப்பட்ட ஒன்றாகவோ குறிப்பிடவில்லை. மேலும் சூ. இன்னாசி தமது கிறித்தவத் தமிழ்க் கொடை என்னும் நூலின் முதல் பாகத்தில் (ப.77 & 143) தேவஅருள் வேதபுராணம் உரைநடையில் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ராம்போலா மாஸ்கரேனஸ் அவர்களும் தமது கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள் என்னும் நூலில் தேவ அருள் வேத புராணத்தை வசன நடையிலுள்ள நூலாகவே குறிப்பிடுகிறார் (ப.78). எனவே தேவஅருள் வேத புராணத்தைக் காப்பியமாகக் கொள்ள இயலாது.

காப்பிய இலக்கணம் முழுமையின்மை

பெரும்பாலான கிறித்தவக் காப்பியங்களில் காப்பிய இலக்கணம் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். கிறித்தவக் காப்பியங்கள் படைத்த அனைவருக்கும் காப்பியங்கள் பற்றிய இலக்கணம் தெரிந்திருந்தும், அவர்கள் காப்பிய இலக்கணத்தை முழுமையாப் பின்பற்ற வில்லை. தேம்பாவணி, ஞானாதிக்கராயர் காப்பியம், அர்ச். சவேரியார் காவியம், இரட்சணிய யாத்திரிகம், திருத்தொண்டர் காப்பியம் என்னும் காப்பியங்களில் காப்பிய இலக்கணத்தைக் காணலாம்.

தமிழ்ப் பேரகராதி, காப்பியம் என்பதற்கு "நால்வகை உறுதிப் பொருளையும் கூறுவதாய்க் கதைப் பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்" என விளக்கம் தருகிறது. நாற்பொருள் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். அதாவது நாற்பொருள் பயக்கும் நடைநெறி உடையதாக இருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்றோ பலவோ குறைந்தால் அது சிறு காப்பியம் ஆகும் என்பது தண்டியலங்காரம் குறிப்பிடும் காப்பிய இலக்கணமாகும். கிறித்தவக் காப்பியங் களில் வீடுபேறு அடைதலே அடிப்படையான நோக்கம். அறம், பொருள் என்னும் இரண்டும் இயல்பாகவே இக்காப்பியங் களில் அமைந்துள்ளன. இன்பம் என்னும் பொருளினைப் பேரின்பப் பொருளாகவே காப்பியங்களில் காணமுடிகின்றது. காப்பியக் கவிஞனின் நோக்கம் பேரின்பமாகிய வீடுபேற்றினைக் காப்பியத்தின் மூலம் அடைதலாகும்.

காப்பியத்திற்குரிய இலக்கண முறைமைகளை முழுமை யாகப் பின்பற்றாமல், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை விவிலியப் பின்னணியில் கவிநயம்படக் காப்பிய வடிவில் பாடியுள்ளனர். இதன் மூலம் இலக்கியத்திற்காக உவமை, உருவகம், பிற அணிகள் முதலிய அழகியல் கூறுகளை வலிந்து உருவாக்காமல் விவிலியத்தின் போக்கில் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றையும், அதன் ஊடாக நற்செய்தியைக் கூறுவதையுமே காப்பிய ஆசிரியர்கள் தங்களது முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளனர் என்பதை உணரமுடிகிறது. கவிதையின் அழகுக்காகக் கவிஞர்கள் பயன்படுத்தும் அணிகள், காப்பியப் பின்னணியாகிய நாடு, நகர், மலை, ஆறு, ஞாயிறு, திங்கள் ஆகியவற்றின் வருணனைகள் முதலியவற்றை ஆன்ம ஈடேற்றங் கருதி எழுதிய தம் நூலில் ஆசிரியர்கள் படைக்க வில்லை. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய நான்கு நற்செய்தி நூல்களிலுள்ள நிகழ்வுகளைக் கோவைப்படுத்தி, திருமறை வாக்குகளின் பின்னணியில் எளிமையான கவிதைகளாக்கி நூலைப் படைத்துள்ளனர்.

காப்பியம் - காவியம் - புராணம் - பாவியம்

காப்பியம், காவியம் என்னும் இரு சொற்களும் கதை தழுவிய இலக்கிய வகைமைக்குப் பெயராக வழங்குகின்றன. இவற்றுள் காவியம் என்னும் சொல் காவிய என்னும் வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம் என்பர். வடமொழியில்

இலக்கியம் என்னும் பொதுப்பொருளில் ஆளப்படும் இச்சொல் தமிழில் இலக்கிய வகைமை ஒன்றிற்கு மட்டும் உரியதாக வழங்குகின்றது.

காப்பியம் என்னும் சொல் தொடக்கத்தில் இனக்குழு ஒன்றின் பெயராக இருந்ததைச் சங்க இலக்கியங்கள் சுட்டு கின்றன. காப்பியம் என்னும் சொல் சிலப்பதிகாரத்தில் "காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து" *(30:83)* எனவும், மணிமேகலையில் "நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்" *(19:80)* எனவும், பெருங்கதை "காப்பியக் கோசமுங் கட்டிலும் பள்ளியும்" *(1-38; 167)*, எனவும், "காப்பிய வாசனை கலந்தவை சொல்லி" *(4-3:42)* எனவும் இடம்பெற்றுள்ளது. காப்பிய குடி என வழங்கிய அக்குடி சார்ந்த பிறப்பினர் காப்பியஞ் சேந்தனார், காப்பியாற்றுக் காப்பியனார், தொல்காப்பியர் எனப் பெயர் வழங்கப் பெற்றனர். தொல்காப்பியர் இயற்றிய இலக்கண நூல் தொல்காப்பியம் எனப் பெயர் பெற்ற பின்னர், அச்சொல் இலக்கிய நூல்களுக்கும் உரியதாகத் தமிழில் வளர்ந்து வந்த மரபை அறிய முடிகிறது.

காவியம் என்னும் சொல் வடமொழிச் செல்வாக்குத் தமிழில் பெருமளவு சேர்ந்த காலத்திலேயே இச்சொல் இலக்கிய வகைமைக்கு தமிழில் ஆகி வந்திருத்தல் வேண்டும். ஏனெனில் சங்கம் மருவிய காலப்பகுதியில் தொடர்நிலைச் செய்யுள், பாட்டுடைச் செய்யுள் ஆகிய வழக்குகளே கதை தழுவிய இலக்கிய வகைமைக்குப் பெரிதும் வழங்கியதை சிலம்பு, மேகலை ஆகிய நூல்கள் காட்டுகின்றன.

வடமொழியிலுள்ள காவ்யதர்சத்தின் தமிழாக்கமாகக் கருதப்படும் தண்டியலங்காரமே காப்பியக் கூறுகளை முதலில் வரையறுத்துக் கூறியது. தண்டியின் அணியிலக்கண நூல் தமிழில் பெருவழக்குற்ற பின்னரே, இவ்வகை இலக்கியப் படைப்பிற்கு கட்டமைப்பு முறை உருப்பெற்று இடைக்காலக் காப்பியங்கள் உருவாயின. பெரியபுராணம் இவ்வமைதிக்குள் இல்லாத நிலையாலேயே அது காவியமா? என்பது குறித்த மாறுபட்ட கருத்துகளும் எழுந்துள்ளன.

ஆகவே காப்பியம் என்ற தமிழ்ச் சொல் தொடக்கத்தில் குடியின் பெயராக விளங்கி, இலக்கிய வகைமைக்குப் பெயராய் பிற்காலத்தில் ஆயிற்று என்பதையும், வடமொழிச் சொல்லான

காவியம் தமிழில் ஒரு குறிப்பிட்ட வடிவத்திற்கு மட்டும் ஆகி வந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

காப்பியம் என்னும் தமிழ்ச்சொல், காவ்யம் என்னும் வடமொழிச்சொல், காப்பியம் எனப் பொருள் தரும் Epic என்னும் ஆங்கிலச் சொல் ஆகியன ஒரே பொருளைக் குறிப்பனவாகும். காப்பியம் என்பது தூய தமிழ்ச் சொல்லாகும். தொடர்நிலைச் செய்யுள் வடிவத்தில் ஒரு வரலாற்றை முழுமையாகக் கூறுவனவற்றை காப்பியம் அல்லது காவியம் அல்லது புராணம் அல்லது பாவியம் எனக் குறிப்பிடுகின்றனர். காப்பியம், காவியம், புராணம், பாவியம் ஆகிய அனைத்தும் ஒரே தன்மையின. ஆனால் பெயர்கள் வேறு வேறாக உள்ளன. இவற்றைத் தற்காலத்தில் ஒன்றாகவே கருதுகின்றனர்.

பல்லவர் காலத்திற்குப் பின்னர் காப்பியத்திற்கான கட்டமைப்பு கூறப்படுகிறது. இலக்கணத்தைத் தழுவி ஐம்பெருங்காப்பியங்கள் என்றும் ஐஞ்சிறு காப்பியங்கள் என்றும் பகுக்கப்படுகிறது. ஏதாவது ஒன்று குறைவுபட்டால் ஐஞ்சிறு காப்பியம் என்கின்றனர். மேலும் அளவில் சிறியதையும் சிறுகாப்பியம் என்கின்றனர். புராணம் என்பதற்கு பழைய, தொன்மையான என்பது பொருளாகும். அதாவது விரிவான கதை என்பதாகும். திருத்தொண்டர் புராணம் எனச் சேக்கிழார் பெயர் சூட்டினார். இப்புராணத்தில் சுந்தரர் காப்பியத் தலைவர். அவர் கதையைச் சொல்லி பிறருடைய கதையையும் சொல்வதால் பெரியபுராணத்தைக் காப்பியம் என்பர். காவியம் தமிழ்ச் சொல் அல்ல என்பதால் பாவியம் எனக் காப்பியத்தைக் குறித்தனர். பாவியம் என்பது தமிழ்ப் பெயர். பாவால் அதாவது செய்யுளால் இயம்பப்படும் கதை பாவியம் எனப்படும்.

முதுமுனைவர் இன்னாசி தமது கிறித்தவத் தமிழ்க் கொடை என்னும் நூலில் (பக். 109, 133, 140, 144) காப்பியம் என்பதற்கு இலக்கணக் கட்டுக் கோப்புடைய கதைக்கருக் கொண்ட தொடர்நிலைச் செய்யுள் என்றும், காவியம் என்பதற்கு ஒரு கதையைச் செய்யுள் வடிவில் கூறுவது என்றும் புராணம் என்பதற்கு சமயத் தொடர்பான வரலாறுகளைச் செய்யுளில் விரித்துக் கூறுவது என்றும் பாவியம் என்பதற்கு வாழ்வியலைக் கூறும் செய்யுள் நூல் என்றும் விளக்கம் அளிக்கிறார். இவ்விளக்கங்களை ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது தொடர்நிலைச் செய்யுளின் அடிப்படையில் விவரிக்கப்படும்

கதைகளைக் காப்பியம் அல்லது காவியம் அல்லது புராணம் அல்லது பாவியம் எனலாம்.

கிறித்தவ இலக்கியங்களில் காப்பியம், காவியம், புராணம், பாவியம் என்னும் பெயர்களுடனும் இப்பெயர்கள் இல்லாமலும் கிறித்தவக் காப்பிய இலக்கிய வகை காணப்படுகிறது.

குறுங்காப்பியங்கள்

கிறித்தவ இலக்கியத்தில் ஏராளமான குறுங்காப்பியங்கள் உள்ளன. இக்குறுங்காப்பியங்களும் விவிலியத்தை அடிப்படை யாகக் கொண்டே படைக்கப்பட்டுள்ளன. எனினும் பாடல்களின் எண்ணிக்கை மற்றும் காப்பிய அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு குறுங்காப்பியம் என்னும் வகையினை ஏற்படுத்தி யுள்ளனர். சான்றாகச் சில கிறித்தவ குறுங் காப்பியங்களை இங்கே சுட்டலாம். 1883ஆம் ஆண்டில் சீவானந்தம் பிள்ளை, யோசேப்பின் சரிதை என்னும் குறுங்காப்பியத்தைச் சென்னையில் வெளியிட்டுள்ளார். இந்நூல் யோசேப்பின் வரலாற்றை 285 பாடல்களில் விவரிக்கிறது. 1926ஆம் ஆண்டு தவயோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் இயேசு நாதர் சரிதை என்னும் குறுங்காப்பியத்தைப் படைத்துள்ளார். இக்காப்பியம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை காப்பு, வணக்கம், ஏசுநாதர் பெருமை, மரியாள் மாண்பு, ஏசுநாதர் பிறப்பு, முனிவர் மூவர், கொடிய ஏரோது உள்ளிட்ட 25 தலைப்புகளில் விவரிக்கின்றது. இந்நூலிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை 150 ஆகும். எஸ். மோட்சக்கண், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை சிலுவைநாதர் திருச்சரிதம் என்னும் நூலில் விவரித்துள்ளார். ச.து. சுப்பிரமணிய யோகி என்பவர் மேரிமக்தலேனா என்னும் குறுங்காப்பியத்தைப் படைத்துள்ளார். விவிலியத்தில் இடம்பெற்றுள்ள மகதலேனா மரியாளின் வாழ்வு நிகழ்வுகளை இக்குறுங்காப்பியம் விளக்குகிறது. இந்நூல் காட்சிப் படலம், வருகைப் படலம் என்னும் இரு படலங்களால் ஆனது. காட்சிப் படலத்தில் 58 பாடல்களும் வருகைப் படலத்தில் 54 பாடல்களுமாக மொத்தம் 112 பாடல்களைக் கொண்டது.

1976ஆம் ஆண்டு வை.அ. பொன்னையா அவர்கள் யோபுவின் வரலாற்றை விவரிக்கும் சூறாவளி நடுவே என்னும் குறுங்காப்பியத்தைப் படைத்துள்ளார். இந்நூல் ஐந்து

பகுதிகளையும் 42 உட்தலைப்புகளையும் உடையதாக உள்ளது. இந்நூல் சென்னை ஐக்கிய ஆலய வெளியீடாக வெளிவந்தது. 1979 ஆம் ஆண்டு வெளிவந்த குறுங்காப்பியம் கிறிஸ்து வெண்பா என்பதாகும். இக்குறுங்காப்பியத்தை கி.மு.ம. மரியஅந்தோனி நாடார் படைத்துள்ளார். இந்நூல் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை 1000 வெண்பாக்களில் விவரிக்கின்றது. அருள்திரு. முனைவர் தி.தயானந்தன் பிரான்சிஸ், 1981ஆம் ஆண்டு யோவான் எழுதிய நற்செய்தி நூலை ஆதாரமாகக் கொண்டு வாழ்வளிக்கும் வள்ளல் என்னும் குறுங்காப்பியத்தைப் படைத்துள்ளார். 1983 ஆம் ஆண்டு அ. ஜெபமணி, புரட்சித் துறவி மார்ட்டின் லுத்தர் என்னும் குறுங்காப்பியத்தைப் படைத்துள்ளார். இந்நூல் மார்ட்டின் லுத்தரின் வாழ்வியலை ஆறு பகுதிகளில் விளக்குகிறது. இந்நூல் ஆற்காடு லுத்தரன் திருச்சபைத் தொடர்பு மையத்தின் மூலம் வெளியிடப்பட்டது. 1985ஆம் ஆண்டு கவிஞர் கார்முகில் என்பவர் சிலுவையின் கண்ணீர் என்னும் குறுங்காப்பியத்தை பண்ணுருட்டியிலுள்ள முத்தமிழ்ப் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டுள்ளார். 1986 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலகக் கிறித்தவ மூன்றாவது தமிழ் மாநாட்டில் திருமதி அன்பம்மாள் ஏசுதாஸ் எழுதிய மகிமையின் மைந்தன் என்னும் குறுங்காப்பியம் வெளியிடப் பட்டது. 179 பக்கங்களாலான இந்நூல் இரண்டு பாகங்களால் ஆனது. இந்நூலின் முதலாம் பாகம் உலகத்தின் தோற்றம் முதல் இயேசு கிறிஸ்துவின் பன்னிரெண்டு வயது வரையிலான நிகழ்வுகளைக் கூறுகிறது. இந்நூலின் இரண்டாம் பாகம் இயேசு கிறிஸ்து பரலோகம் சென்றது வரையிலான நிகழ்வுகளை விவரிக்கின்றது.

1987ஆம் ஆண்டு த. பத்திநாதன், கன்னிமரி காவியம் என்னும் நூலை வெளியிட்டார். இக்குறுங்காப்பியம் கன்னிமரியின் வரலாற்றை 27 தலைப்புகளில் விவரிக்கின்றது. 1991ஆம் ஆண்டு பேராசிரியர் அ. இயேசுராஜா என்பவரால் கல்வாரிக் காவியம் இயற்றப்பட்டது. கல்வாரிக் காவியம் 112 பாடல்களைக் கொண்டது. இந்நூல் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாதையைப் பாடுவதனை முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பினும், அறிமுகநோக்கில் பல இடங்களில் இயேசு கிறிஸ்துவின் வாழ்வையும் எடுத்தியம்புகின்றது. பிள்ளை வெண்பா என்னும் தெய்வ சகாயன் திருச்சரிதை என்னும் நூலை

தஞ்சாவூரைச் சார்ந்த புலவர் சூ. தாமஸ் படைத்துள்ளார். இக்குறுங்காப்பியம் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த தேவசகாயம் பிள்ளையின் வரலாற்றைக் கூறுவதாகும். இந்நூல் மறைபெறு காண்டம், சூழ்வினை காண்டம், முடிபெறு காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் 281 வெண்பாக்களையும் உடையது. 1997ஆம் ஆண்டு எம்மார். அடைக்கலசாமி இயேசு தரிசனம் என்னும் குறுங்காப்பியத்தை இயற்றியுள்ளார். இக் குறுங்காப்பியம் மூன்று பிரிவுகளையும் 23 உட்தலைப்பு களையும் கொண்டது.

2000ஆம் ஆண்டில் இராச. அருளானந்தம் நற்செய்திக் காவியம் என்னும் நூலைப் படைத்துள்ளார். இந்நூல் 43 பகுதிகளை உடையது. 2001ஆம் ஆண்டு வெளிவந்த குறுங் காப்பியம் இதோ மானுடம் என்பதாகும். இந்நூலை புலவர் ம. அருள்சாமி எழுதியுள்ளார். இக்குறுங்காப்பியம் நான்கு நற்செய்தி நூல்களின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவின் வாழ்வை விவரிக்கின்றது. இந்நூல் பிறந்தார், வளர்ந்தார், வாழ்ந்தார், முழங்கினார், போராடினார், வென்றார் என்னும் ஆறு பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பிரிவும் பல உட் பிரிவுகளைக் கொண்டது. இக்குறுங்காப்பியம் 215 பாடல்களை உடையது. 2002 ஆம் ஆண்டு பொன். தினகரன், அருள் மைந்தன் மாகாதை என்னும் குறுங்காப்பியத்தை வெளியிட்டார். இக்குறுங்காப்பியம் திருப்பிறப்புக் காண்டம், அருட்பணிக் காண்டம், மீட்புக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களை உடையது. இதில் 333 பாடல்கள் 30 உட்பிரிவுகளின் கீழ் இடம்பெற்றுள்ளன. இது போன்று இன்னும் ஏராளமான குறுங்காப்பியங்கள் உள்ளன. அவற்றினைப் பற்றிக் குறிப்பிட்டால் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

புதுக்கவிதைக் காப்பியங்கள்

புதியன புகுதல் கிறித்தவ இலக்கியத்திலும் காணப்படு கின்றது. தற்கால இலக்கியத்தில் புதுக்கவிதைகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. இப்புதுக்கவிதைகள் பல்வேறு உத்திகளைக் கொண்டு படைக்கப்பட்டாலும் படிப்பதற்கு மிகவும் எளிமையானவைகளாகக் காணப்படுகின்றன. கிறித்தவ இலக்கியத்தில் பல புதுக்கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. இப்புதுக்கவிதைகள் இயேசு கிறிஸ்துவின் வாழ்வை

விவரிப்பதைக் காட்டிலும் சிலுவையின் சிறப்பு மற்றும் கிறித்தவச் சமுதாயத்தில் காணலாகும் சீர்கேடுகளைப் படம் பிடித்துக் காட்டுவதில் வல்லனவாகத் திகழ்கின்றன. புதுக்கவிதை வடிவத்தில் கிறித்தவக் காப்பியங்கள் என்று சொல்லும் வகையில் அன்ன பூரண மேரியின் விவிலியக் கவிதைகள், நிர்மலா சுரேஷின் இயேசு மாகாவியம், அருட் தந்தை வின்செென்ட் சின்னதுரையின் புதிய சாசனம், சேவியரின் இயேசுவின் கதை என்னும் நூல்களைக் குறிப்பிடலாம்.

1993ஆம் ஆண்டு அன்ன பூரண மேரியால் எழுதப்பட்டு விண்ணேற்ற ஆண்டவர் ஆலய வெளியீடாக வெளிவந்துள்ள காப்பியம் விவிலியக் கவிதைகள் என்பதாகும். இந்நூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்னும் இரு பகுதிகளை உடையது. பழைய ஏற்பாடு என்னும் பகுதியில் 46 உட்தலைப்புகளில் பழைய ஏற்பாட்டுச் செய்திகளையும் புதிய ஏற்பாடு பகுதியில் எட்டு உட்தலைப்புகளில் புதிய ஏற்பாட்டுச் செய்திகளையும் இக்காப்பியம் விவரிக்கிறது. இயேசு மாகாவியம் சென்னையில் உள்ள இதயம் பதிப்பகத்தின் மூலம் 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் வரலாற்றையும் அவரது ஊழியங்களையும் 144 தலைப்புகளில் ஆசிரியர் பாடியுள்ளார். புதிய சாசனம் 2002 ஆம் ஆண்டில் வெளியானது. இந்நூலில் பத்து இயல்களில் 122 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலில் செக்கரியாவுக்கு வானதூதர் வாக்களித்தது முதல் இயேசு கிறிஸ்து பரலோகம் சென்றது வரையிலான செய்திகள் இடம்பெற்றுள்ளன. 2005 ஆம் ஆண்டு யாளி பதிவு வெளியீட்டின் மூலம் வெளிவந்த இயேசுவின் கதை என்னும் காவியம் முந்நூற்று ஐம்பத்திரண்டு பக்கங்களில் புதுக்கவிதை வடிவில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்புகின்றது. இந்நூல் இளமை, போதனைகள், புதுமைகள், இறைமகனின் விளக்கங்கள், உவமைகள், சில நிகழ்வுகள், இறுதி நாளுக்கான எச்சரிக்கைகள், வேதனைக் காலம், உன்னதரின் உயிர்ப்பு, துவக்கத்தின் முடிவுரை என்னும் பத்துத் தலைப்புகளில் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. இயேசு கிறிஸ்து யார் என்பதை அறியாத மக்களுக்காக அவரை எளிமையாக, அழுத்தமாக அறிய வைக்க வேண்டும் என்னும் நோக்கில் இந்நூல் படைக்கப்பட்டிருத்தல் சிறப்பிற்குரியது.

புதுக்கவிதைக் குறுங்காப்பியங்கள்

புதுக்கவிதை வடிவில் காப்பியங்களை விட குறுங்காப்பியங்களே அதிக அளவில் வெளிவந்துள்ளன. அவற்றில் சில நூல்கள் இங்கு சான்றாகத் தரப்படுகின்றன. 1996ஆம் ஆண்டு வெளிவந்த குறுங்காப்பியம் மண்ணில் இருக்குது மோட்சம் என்பதாகும். இந்நூல் விவிலியம் முழுவதையும் உள்ளடக்கி, படைப்புத் தொடக்கமாக இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரையிலான செய்திகளைத் தருகிறது. 1998ஆம் ஆண்டு அரக்கோணம் ஜெயக்கொடி பதிப்பகத்தின் மூலம் கண்ணாடிச் சிதறல்கள் என்னும் குறுங்காப்பியம் வெளிவந்தது. இக்குறுங் காப்பியம் 123 பக்கங்களையும் 37 பிரிவுகளையும் கொண்டது. விவிலியத்தில் காணலாகும் யோபுவின் வரலாற்றை இக்குறுங்காப்பியம் விவரிக்கிறது. 2001ஆம் ஆண்டு வெளிவந்த குறுங்காவியம் ஒரு சிங்கம் கர்ஜிக்கிறது என்பதாகும். இந்நூல் சகரியா - எலிசபெத் தம்பதியினருக்குப் பிறந்த யோவானைப் பற்றி விவரிக்கிறது. இம்மூன்று புதுக்கவிதை வடிவிலான குறுங்காப்பியங்களும் தே. சுவாமிநாதனால் படைக்கப் பட்டவையாகும். 2009ஆம் ஆண்டு கவிஞர் ஜோரா எழுதி வெளி யிட்ட புனித பவுல் புதுக்காவியம் 16 தலைப்புகளில் புனித பவுலின் வாழ்வை புதுக்கவிதை வடிவில் தருகிறது. மலேசியா நாட்டில் 2011ஆம் ஆண்டு ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்கள் விடியல் விண்மீன்-ரூத், மனதில் விழுந்த மழைத்துளி-எஸ்தர் என்னும் இரண்டு புதுக்கவிதைக் குறுங்காப்பியங்களைப் படைத்துள்ளார்.

காப்பிய வளர்ச்சிக்கு இலங்கையினரின் பங்கு

கிறித்தவ இலக்கிய வளர்ச்சியில் இலங்கைக் கிறித்தவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. காப்பியம், சிற்றிலக்கியம், கீர்த்தனைகள், நாடகம், புனைகதை, மொழிபெயர்ப்பு என அவர்களது இலக்கியப்பணி விரிவானது. வீரமாமுனிவர் தேம்பாவணி எழுதியதைத் தொடர்ந்து இலங்கையினர் கிறித்தவக் காப்பியங்கள் இயற்றத் தொடங்கினர். இலங்கையினரால் எழுதப்பட்ட கிறித்தவக் காப்பியங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். இவற்றில் யோசேப்புப் புராணம் கிடைக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது. திருவாக்குப் புராணம் முழுமையடையாத கிறித்தவக் காப்பியம்.

திருச்செல்வர் காவியம், ஞானானந்த புராணம் ஆகிய காப்பியங்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய செய்திகள் குறைவாகவே காணப்படுகின்றன. திருச்செல்வர், ஞானானந்தன் ஆகியோரது வாழ்வினைக் கூறுமிடத்து, விவிலியச் செய்திகள் கிளைக்கதைகளாகவே இடம் பெற்றுள்ளன. நசரேய புராணம் பழைய, புதிய ஏற்பாட்டிலுள்ள செய்திகளைச் சுருங்கச் சொல்லுகிறது. இலங்கையிலிருந்து வெளிவந்த கிறித்தவக் காப்பியங்களுள் சிறப்பானது இயேசு புராணம் என்பதாகும். இக்காப்பியம் விவிலியம் முழுவதையும் காப்பிய வடிவில் விரிவாகத் தருகிறது. எனவே இக்காப்பியத்தை விவிலியத்தின் பாகு எனக் குறிப்பிடுகின்றனர்.

கிறித்தவக் காப்பியங்களின் மையப்பொருள்

கிறித்தவக் காப்பியங்கள் கடவுளின் வல்லமையையும் இறைமகனின் மேன்மையினையும் எடுத்தியம்புகின்றன. விவிலியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக மக்களின் கைகளில் கிடைத்த சூழலில் வீரமாமுனிவர் பலவகையான கிறித்தவ இலக்கியங்களை எழுதினார். சீகன்பால்கு மொழி பெயர்ப்பில் அதிக கவனம் செலுத்தியதால் அவரால் கிறித்தவ இலக்கியங்களைப் படைக்கமுடியவில்லை எனலாம். தேம்பாவணியைத் தொடர்ந்து காப்பியம் படைத்தவர்களில் பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டு காப்பியங்கள் படைத்ததால் காப்பிய இலக்கணத்திற்குரிய சில இலக்கணங்களைப் பின்பற்றவில்லை. இதை ஒரு குறையாகச் சுட்டமுடியாது. காரணம், வருணனை, உவமை போன்ற வற்றைப் பயன்படுத்தும்போது ஆசிரியரின் நோக்கம் சிதைய வாய்ப்புள்ளது. மேலும் காப்பியத்தின் மையப்பொருள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படலாம். எனவே பெரும் பாலான கிறித்தவக் காப்பியங்களிலும் மையப்பொருள் இயேசு கிறிஸ்து. அவரே காப்பியத் தலைவராவார். இயேசு கிறிஸ்துவைக் காப்பியத் தலைவராகக் கொண்டிராத சில காப்பியங்களில் கிளைக்கதைகளாக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை விவரிக்கப்பட்டுள்ளது.

எவை கிறித்தவக் காப்பியங்கள்?

கிறித்தவக் காப்பியங்களின் பட்டியல் நீளமாக இருக்க வேண்டும் என்னும் நோக்கில் கிறித்தவ இலக்கிய நூல்களில்

பலவற்றை இதில் சேர்க்க இயலாது. மேலும் நூல்களைப் பார்க்காமலே கிறித்தவக் காப்பியங்கள் எனப் பட்டியலில் சேர்க்க முடியாது. இப்பட்டியலில் சேர்க்க வேண்டுமெனின் ஓரளவு காப்பியம் என்று ஏற்றுக் கொள்ளத்தக்கதாகக் காணப்பட வேண்டும். உதாரணமாக இலங்கையில் படைக்கப்பட்ட தேவ அருள் வேத புராணம் உரைநடையில் எழுதப்பட்டது. அதைப்போன்று திலகவதி பால் எழுதி கிறித்தவ இலக்கிய சங்கத்தால் வெளிவந்த அறநெறிபாடிய வீரகாவியம் என்னும் நூல் உரைநடையில் எழுதப்பட்டதாகும். காவியம் எனப் பெயர் இருப்பதால் அது காவியமாகாது. ஆங்கிலக் கவிஞர் ஜான் மில்டன் எழுதிய Paradise Lost, Paradise Regained என்னும் நூல்களைத் தழுவி, அருள்திரு. வேதக்கண் என்பவர் ஆதிநந்தாவனப் பிரளயம், ஆதிநந்தாவன மீட்சி என்னும் கீர்த்தனை நாடகங்களாகத் தமிழில் எழுதியுள்ளார். இவ்விரண்டு நூல்களும் காப்பியமாகா. எனவே தேவ அருள் வேதபுராணம், அறநெறி பாடிய வீர காவியம், ஆதிநந்தாவனப் பிரளயம், ஆதிநந்தாவன மீட்சி ஆகியனவற்றைக் கிறித்தவக் காப்பியங்களாக ஏற்றுக் கொள்ளவியலாது. இத்தகு பிழையான வகைப்பாடுகள், அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள சிலநூல்களில் இடம் பெற்றுள்ளதைத் தெளிவுக்காக இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் எழுதத் தொடங்கப்பட்ட கிறித்தவக் காப்பியங்கள் இருபத்தியோராம் நூற்றாண்டிலும் வளர்ந்து வருவது கிறித்தவப் படைப்பாளர்களின் புலமைக்கும் இறைப்பற்றுக்கும் ஊழியவாஞ்சைக்கும் சிறந்த சான்றாகும். கிடைக்காத பழைய கிறித்தவக் காப்பியங்களைப் பதிப்பித்தல் கிறித்தவ இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். தேம்பாவணி பல அறிஞர்களின் உரையுடன் வெளிவந்துள்ளது. திருச்செல்வர் காவியம் இலங்கையில் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. அதுபோன்று கிறிஸ்தாயனம் சென்னையில் உள்ள ஆசியவியல் நிறுவனத்தின் மூலம் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. கிறித்தவக் காப்பியங்கள் உரையுடன் வெளிவந்தால் காப்பியத்தின் நுட்பத்தினை படிப்பவர்களால் அறிந்து கொள்ள முடியும். தேம்பாவணி தொடங்கி ஆதியாகம காவியம் வரை வளர்ந்துள்ள கிறித்தவக் காப்பிய வரலாறு தமிழ் இலக்கிய வரலாற்றில் போற்றுதலுக்குரியது.

III திருமறை வரலாற்றுக் காப்பியங்கள்

1. திருவாக்குப் புராணம்

ஈழமக்களின் கிறித்தவ இலக்கியப்பணி புராணம், சிற்றிலக்கியம், கீர்த்தனை, மொழிபெயர்ப்பு, நாவல் என்னும் பன்முகப் பரிமாணங்களை உடையது. காப்பியம் என்னும் வடிவில் ஈழத்தில் இதுவரை ஆறு நூல்கள் வெளிவந்துள்ளன. வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணியைத் தொடர்ந்து வெளி வந்த கிறித்தவத் தமிழ்க் காப்பியம் கனகசபைப் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட திருவாக்குப் புராணமாகும். இக் காப்பியம் 1866ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வெளியிடப் பட்டது.

ஆசிரியர் வரலாறு

கனகசபைப் பிள்ளை இலங்கையிலுள்ள அளவெட்டி என்னும் ஊரில் வேலுப்பிள்ளைத் தம்பதிகளின் மகனாக 1815ஆம் ஆண்டு மாசி மாதம் 12ஆம் நாள் பிறந்தார். இவரது முழுமையான பெயர் ஜெர்மையா எவாட்ஸ் கனகசபைப் பிள்ளை என்பதாகும். இவரது பெற்றோரும் முன்னோரும் சைவ சமயத்தவர்கள். பின்னர் இவர்கள் சீர்திருத்தச் சபைக் கிறித்தவர்களாக மாறினர்.

கனகசபைப் பிள்ளை வட்டுக்கோட்டை இறையியல் பள்ளியில் படித்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை மிக்கவராக விளங்கினார். வட்டுக்கோட்டையில் வாழ்ந்த டாக்டர் வார்டு என்பவரிடம் ஆங்கில மருத்துவத்தை மிக்க விருப்பத்துடன் கற்றார். எனினும் தமிழ் மருத்துவமே கனகசபைப் பிள்ளைக்குப் புகழ் சேர்ப்பதாக அமைந்தது. கனகசபைப் பிள்ளைக்குத் தமிழ்ப் புலமை இயல்பாகவே அமைந்திருந்தது. இவரது படைப்புகள் அனைத்தும் பழந் தமிழ்ப் புலவர்களின் மரபு சார்ந்தவையாய் காணப்படுகின்றன. இவர் திருவாக்குப் புராணம் மட்டுமின்றி பல தனிப்பாடல் களையும், ஒரு நிகண்டு நூலையும், அழகர்சாமி மடலையும் படைத்துள்ளார்.

சென்னையில் அமெரிக்க நற்செய்தியாளர்களின் தலைமையில் தமிழ் அகராதிப் பணியில் சில ஆண்டுகள்

ஈடுபட்டார். இவருடன் விநோதரச மஞ்சரியளித்த வீராசாமிச் செட்டியாரும் அகராதிப் பணியில் பணிபுரிந்தார். பின்னர் மானிப்பாயில் உள்ள அமெரிக்கன் மிஷன் அச்சு இயந்திர சாலையில் மேற்பார்வையாளராகவும், கோப்பாயிலுள்ள தமிழ்ப் பள்ளியில் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். இதனுடன் தமிழ் முறையிலான மருத்துவத் தொழிலையும் செய்து வந்தார்.

இலங்கையிலுள்ள கண்டி அரசரின் பேரரான அழகர்சாமி வேலூரில் வாழ்ந்து வந்தார். இவரிடம் கனகசபைப் புலவர் நெருங்கிய நட்புடையவராகக் காணப்பட்டார். மன்னர் மரபில் வந்த அழகர்சாமி மீது "அழகர்சாமி மடல்" என்னும் பிரபந்தம் ஒன்றைப் பாடினார். பிரபந்தத்துடன் சீட்டுக்கவியும் எழுதி, அரசர் அழகர்சாமிக்கு அனுப்பி வைத்தார். இச்செயலால் மகிழ்ச்சியடைந்த அழகர்சாமி, கனகசபைப் பிள்ளை தம்மீது எழுதிய நூலை, தம் முன்னிலையிலேயே அரங்கேற்றி இன்புற்றார். அது மட்டுமன்றி, கனகசபைப் புலவருக்கு வேண்டிய பொன்னும் பொருளும் கொடுத்து மகிழ்ந்தார். கனகசபைப் பிள்ளை பழந்தமிழ் இலக்கியத்தில் கொண்ட புலமையையும், கவிபாடும் திறனையும் வெளிக்காட்ட இச் சீட்டுக்கவி போதுமான சான்றாகக் காணப்படுகின்றது. கனகசபைப் புலவர் வியாக்கிரபாத முனிவர் புராணத்தைப் பாடிய வைத்தியநாத தம்பிரான் வழியிலே வந்தவர் என்பது இச்சீட்டுக்கவியின் மூலம் புலனாகும். அச்சீட்டுக்கவி பின்வருமாறு:

நிறைநிலவு பொழியமுத கிரணசந் திரனென்ன
நின்றிலகு கின்ற தொடையாய்
நேரலர் படைக்கடலை வீரவே கங்கொண்டு
நிருமூல மாக்கு படையாய்
நெடியதரு வைந்துமெழு முகிலுமிணை யல்லவென
நித்தமருள் கின்ற கொடையாய்
நிலவலைய மெங்கணுங் கல்விநிலை பெற்றிலகு
நிகரற்ற சீர்த்தி யுடையாய்

திறைநிலவு தவழுமுயர் பொறைபலவு மெனவெளவு
செங்கையத் தண்ட தீரா
செயமாது குடிகொண்ட திண்புயா சலவுளந்
திருமா துவக்கு நெறியாய்
தென்னிலங் கேசவெழின் மன்னுமங் கசரூப
திறழகர் சாமி யென்னுஞ்
சிங்கவே றனையவித் துங்கவுள் ளக்களி
சிறந்திட மகிழ்ந்து காண்க

துறைநிலவு கலைவாரி கரைகண் டுயர்ந்துநின்
றொல்குலத்தரசர் தம்பாற்
றோமிலா நண்புபெற் றோங்குவைத் தியநாத
சுகுணன் குலத்து தித்தோன்
துகளற்ற சீரளவை நகரத்து வருகனக
சபைமிக்க துன்று பக்தி
தூண்டநின் மாபெருமை பூண்டசுமு கம்பெறச்
சோர்விலா தெழுது நிருபம்

முறைநிலவு மிறைமைபெறு முடிமன்னர் திலகநீ
முகமலர்ந் தகமு வந்தே
மூளுமன் பாலணிய நீளுமின் பானவிசை
மெய்த்தமடன் மாலை தரவும்
முகதரிச னங்கண்டு மிகுகரிச னங்கொண்டு
முன்பெய்த வுங்கரு திநின்
முன்னணுகு மென்றனக் கின்னருள் சுரந்தூழ்
மூதுலகி னிவாழியே.

கனகசபைப் பிள்ளைக்கு இரு புதல்வர்கள். அவருள் ஒருவர் மருத்துவராகவும், மற்றொருவர் இலங்கையில் உள்ள சுண்டிக்குளிப் பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினர்.

கனகசபைப் பிள்ளை தமது மருத்துவத் தொழில் காரணமாக பூநகரிப் பகுதிக்குச் சென்றிருந்தபோது இரத்த அழுத்த நோயினால் மயங்கி விழுந்தார். சில நாட்களில் நோய் அதிகமாகி 1879 ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆம் நாள் காலமானார். கிறித்தவக் காப்பியம் எழுதியதன் வாயிலாகக் கிறித்தவ இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்.

இவரது மறைவு குறித்து உதயதாரகை என்னும் பத்திரிகை பின்வரும் இரங்கல் செய்தியை வெளியிட்டிருந்தது:

> தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை என்று அறிஞர் கூறுவர். கனகசபைப் பிள்ளை அவர்கள் தமிழுக்கும் தொண்டு செய்தார், இறையரசரான இயேசுபிரானுக்கும் உண்மையடியவராக விளங்கித் திருவாக்குப் புராணம் முதலான பல பனுவல்களைத் தந்தார்.

நோக்கம்

"இஃது கிறிஸ்து சமய வித்தியாசாலை மாணாக்கரும் பிறரும் சத்திய வேத நூலைக் கற்றுக் கொள்வதற்கு உபயோகமாக மெக்காதர் ஐயரால் புராண நடையாகச்

செய்விக்கப்பட்டது" என்று இந்நூலின் முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறித்தவர்கள் இக்காப்பியத்தைப் படித்து மனனம் செய்ய வேண்டும் என்னும் நோக்குடன் இந்நூல் இயற்றப்பட்டது.

பெயர்க் காரணம்

கனகசபைப் பிள்ளை தமது காப்பியத்திற்குத் திருவாக்குப் புராணம் எனப் பெயர் சூட்டியுள்ளது சிறப்புமிக்கது. "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1-1) என்பது வேதவாக்கு. வார்த்தை என்பதன் சிறப்பினை உணர்ந்த ஆசிரியர் வார்த்தையாம் கடவுளைக் குறித்துப் பாடியதால் திரு என்னும் அடைமொழியுடன் திருவாக்குப் புராணம் எனப் பெயர் சூட்டியுள்ளார்.

அனைத்துலகுந் திருவாக்கால் அளித்தகில சராசரமும் அருட்சித்
தத்தே
நினைந்துளவப் படியமைத்துக் காத்தழிக்குந் தனிமுதலாம்
கரிலாதான்
றனைத்துதிசெய் தெண்ணுகின்ற தகுங்கருமஞ் சித்திபெறத்
தருகவென்ற
இனைத்தெனவொப் போதரிய இணைமலர்த்தாள் சிரந்தேத்தி
இறைஞ்சுவாமே
(உற்பத்திப்படலம், பா.1)

என்னும் நூலின் முதற் பாடல், வாக்கை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காப்பிய அமைப்பு

திருவாக்குப் புராணம் இருநூறு பக்கங்களை உடையது. இக்காப்பியம் இரண்டு பாகங்களைக் கொண்டது. முதற்பாகம் ஜநந காண்டம், யாத்திரைக் காண்டம் என்னும் இரண்டு காண்டங்களை உடையது. இக்காண்டங்கள் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள முதல் இரண்டு நூல்களான ஆதியாகமத்தையும், யாத்திராகமத்தையும் அடிப்படையாகக் கொண்டன. திருவாக்குப் புராணம் 1751 விருத்தப்பாக்களால் ஆனது.

ஜநந காண்டம்

ஜநந காண்டமானது உற்பத்திப் படலம், வினைசூழ் படலம், மகப்பேற்றுப் படலம், குலமுறையுரைத்தப் படலம்,

சலப்பிரளய படலம், நோவாவின் வமிசப் படலம், தேவன் ஆபிரகாமை அழைத்த படலம், ஈசாக்குப் படலம், யாக்கோபுப் படலம், யோசேப்புப் படலம் என்னும் பத்துப் படலங்களைக் கொண்டது.

யாத்திரை காண்டம்

இரண்டாவது காண்டமான யாத்திரை காண்டம் சிறைபுரி படலம், மோசே அவதரித்த படலம், மோசே காட்சி பெற்ற படலம், மோசே தூது சென்ற படலம், பஸ்காவிரதப் படலம், மீட்சிப் படலம், வனம்புகு படலம், பத்து கற்பனைப் படலம் என்னும் எட்டு படலங்களை உடையது. பத்து கற்பனைகளை விவரிப்பதுடன் காப்பியத்தின் முதல் பகுதி நிறைவுறுகிறது.

கடவுள் வாழ்த்து

நூலின் தொடக்கம் தமிழ்க் காப்பிய அமைப்பு முறைக் கேற்ப கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பதிகம் ஆகியவற்றைக் கொண்டது. கடவுள் வாழ்த்து என்னும் பகுதியில் பிதாவுக்குத் துதி, குமாரனுக்குத் துதி, பரிசுத்தாவிக்குத் துதி, திரியேக மூர்த்திக்குத் துதி என்னும் பிரிவுகள் உள்ளன. பிதாவுக்குத் துதி என்னும் பகுதியில்,

மன்னுயிர்த் தொகுதி பாவ வழியினை யொருவித்துய்ய
நன்னெறிப் படருமாறு ஞானபோ தகத்தை நல்கத்

தன்னொரு மகவை மேனாட் சற்குரு வாகத்தந்து
பன்னருங் கருணை பூத்த பரமனைப் பணிதல் செய்வாம்
(கடவுள் வாழ்த்து, பா.1)

என பிதாவினை வணங்குகிறார். இப்பாடலே இக்காப்பியத்தின் முதல் பாடலாக உள்ளது.

பதிகம்

திருவாக்குப் புராணத்திலுள்ள பதிகம் என்னும் பகுதி 111 விருத்தப்பாக்களை உடையது. ஆசிரியர் தாம் பாடக் கருதிய வேதச் செய்திகளையெல்லாம் தொகுத்து இதில் இனிமையாகப் பாடியுள்ளார். இந்நூலின் பாடல்கள் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணப் பாடல்களைப் போன்று எளிமையாகவும் இனிமையாகவும் அமைந்துள்ளன. சான்றாக,

அன்னகரில் யோசேப்பை யறியா வேந்தன்
அரசுபுரிந் தீசிரவேல் மரபி னோருக்
கின்னல்புரிந் தாண்குழவி பிறக்குங் காறு
மெறிதிரைநீ ரிடைபுதைப்பித் திட்ட நாளில்

தன்னிகரில் மோசேயாந் தநயன் றோன்றத்
தாயவனை மூன்று திங்கள் மறைத்துக் காத்துப்
பின்னரசன் றனதாணைக் கஞ்சி நாணற்
பேழையில்வைத தாற்றினிடை பேணி யுய்த்தே
(பதிகம், பா.10)

பன்னிரண்டாம் வயதாகிப் பஸ்காவை யாசரிக்க யெருசலேமில்
அன்னைதந்தை யுடனணுகி யறிஞர்குழாத் திருப்பவவ
ரறியார்போய்மீண்
டின்னலுறத் தேடியுற்ற போதிசைத்த வாசகமு மெலிசபேத்தாம்
மின்னிடையாள் வயின்றோன்றி விமலனுக்கு முற்றூத னாகிமேய
(பதிகம், பா.58)

பாடுபட்ட நாள்முதலா நாற்பதுநாட் பரலோகத் தியல்பை யுள்ளத்
தூடுபட்டு மகிழ்சிறப்பத் தொண்டர்களுக் கோதியதி சயங்கள்
காட்டி
ஈடுபட்ட சுவிசேட முலகிலெங்கும் போதியுமென்
றியம்பியெங்கோன்
பீடுபட்ட சீடர்களுக் காவியருள் பெருவாக்குக் கொடுத்துப்
பின்னர்
(பதிகம்,பா.102)

ஆங்கிவர்கள் கண்காண அந்தரத்தில் மேகத்தில் மறைந்தோ
னாகி
நீங்கியது மற்றதனை நின்றுற்றுப் பார்க்குமந்த நெறியா ளர்க்குப்
பாங்கினில்வெள் ளுடையிருவர் படர்ந்துகலி லையரேநீர்
பார்த்த வண்ணம்
ஓங்கியமே லவன்மீண்டு முலகத்தில் வருவனென வுரைத்தவாறும்
(பாயிரம், பா.103)

என்னும் பாடல்களைச் சுட்டலாம். திருவாக்குப் புராணத்தில் பதிகம் சிறப்புடைய ஒரு பகுதியாக விளங்குகிறது.

விரிவுப் பாடல்கள்

மூலக் கருத்தைக் கொள்ளுதலாக இருப்பது கொளு எனப்படும். கொளு பாடலை விரிபாடலாக எழுதும் முறையும் உள்ளது. புறப்பொருள் வெண்பாமாலை கொளு, விரி பற்றிய விளக்கம் தருகிறது. கொளு பாடலை விரிவாக விளக்கும் பாடல் விரி பாடல் அல்லது விரிவுப் பாடல் எனப்படும். இந்நூலாசிரியர் தமிழ்க்காப்பிய நடைக்கேற்ப 15 இடங்களில் விரிவாகப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்கள் அடிக்குறிப்பின் துணையுடன் அப்பக்கங்களின் கீழே கொடுக்கப்

பட்டுள்ளன. அவ்விரிவுப் பாடல்கள் காப்பிய ஓட்டத்திற்கு எவ்விதத் தடையும் அளிக்கக் கூடாது எனக் கருதி இம் முறையைப் பின்பற்றியுள்ளார் எனத் தெரிகிறது. எடுத்துக் காட்டாக, கடவுள் கனி கொடுக்கும் மரங்களைப் படைத்து அதன் நடுவில் நன்மை தீமை உணர்த்தும் மரத்தையும் படைத்தார் என்பதை ஆசிரியர்,

> காண்பதற்கினிய கனிகளு மதுரங் கனிந்தபூங் கனிகளு
> நிறைந்த
> மாண்புறுதருக்கள் அனைத்தையுமன்றி வயங்கெழின்
> மலர் குடைந்தளிர்கள்
> பாண்செயுந் துடவை நடுவணிற்சீவ விருக்கமும்
> படைத்ததனுடனே
> எண்பெறு நன்மை தீமைகளுணர்த்தும் மரத்தையு
> மியற்றினனன்றே
> (ஜநந காண்டம்,பா.21)

எனக் கொளு பாடல் வடிவில் பாடுகிறார். இப்பாடலை அடிப்படையாகக் கொண்டு ஐந்து பாடல்கள் விரிவுப் பாடல்களாக அமைந்துள்ளன. அப்பாடல்கள் பின்வருமாறு:

1. கோளரைத் தூண நிரைநிரை போக்கிக் கொழுங்கவ டுத்திரம்
   பரப்பி
   நீனருஞ் சினைப்பாச் சிட்டுமே லாக நெடுங்கிளைச் சலாகைக
   ணிரைத்துக்
   காளமா நிறஞ்சேர் வல்லிகள் விசித்துக் கவினிலைத் தகட்டினால்
   வேய்ந்து
   தாளடல் நரனுக் கிறையவன் மாடஞ் சமைத்தென விளங்குமத்
   தடங்கா.

2. பத்தியின் வழிபாட் டிணையடி போற்றிப் பரவிய மானவற் கிறைவன்
   மெத்திய சுகஞ்சேர் பேரின்ப போகம் விழைவுட னருத்துதற் காக
   முத்தியந் தலத்தை அவனியி லழைத்து முன்னுறத் தானும்வீற்
   றிருக்கச்
   சித்திரப்படத்தாற் சமைத்தபா ளயம்போற் சிறந்ததப் பூந்துணர்ச்
   சினைக்கா.

3. மருவிழி யந்தண் மலர்ப்பசுஞ் சினைகள் வானுறப் பரப்புமப் பூங்கா
   ஒருவிழி வெனினு மின்றிமிக் குயர்ந்த ஒப்பிலான் படைப்பினின்
   வீக்கம்
   இருவிழி கொண்டு பார்ப்பதற் கமையா தெனத்தலை எண்ணில
   பரப்பித்
   திருவிழி அனர்தங் கோண்டுமே னிமிர்ந்து திசைதொறும்
   பார்ப்பதொத் துளதே.

4. செய்யபன் னிறஞ்சேர் மதுமலர்த் தொகுதி சினைதொறு
மணிபெறத் திகழ
பையணி நிறஞ்சா விலைக்குழாம் பற்பல் கிளைதொறும்
பரந்துகார் காலத்
துய்யபன் னிறமீன் இனமுதுற் சுடர்கள் துலங்கமைம் முகிற்குழாந்
தொகுத்து
வையமும் வானங் காட்டிய தென்ன வயங்குமம் மட்டவிழ் மலர்க்கா

5. வீழுமின் மலர்த்தேன் மகரயாழ் நரம்பு விரிசிறைத் தும்பிதை
வந்தே
ஏழிசை தெரிக்கக் குயிலினம் நறும்பா இசைதர இசைதர நவிற்றக்
கேழுறும் பசிய தோகையஞ் சூட்டுக் கேகய நடஞ்செயச் செவ்வி
சூழுமச் சோலை தூயவன் றொல்சீர் பாடியா டரங்கமொத் துளதே.
(ப.20)

இப்பாடல்களைப் படிக்கும்போது "காண்பதற்கினிய" என்னும் அடிப்படைப் பாடலான கொளு பாடலின் சிறப்பினையும் இலக்கிய இன்பத்தையும் எளிதாக நுகர முடிகின்றது. மேலும்,

நங்கையும் விழித்துநோக்கி நம்பியை யினிது கண்டாள்
அங்குறுங் குமரன் யாரென் றனையவள் வினவத் தூதன்
எங்கணா யகனேயென்றான் னெய்திய வாகம்நீங்கி
மங்கையும் படாங்கொண்டம் பொன்வதனமேல் முக்காடிட்டாள்
(ஜநநகாண்டம், பா.261)

என்னும் கொளு பாடலை, கீழ்க்காணும் இரண்டு விரிவுப் பாடல்களின் மூலம் தெளிவுறுத்துகிறார்:

துன்பிலா வொழுக்கமிக்க தோன்றலந் நங்கைதன்னை
இன்பினாலங்ஙன்காண இறையருள் புரிந்தானம்மா
முன்பினாலுயர் வொப்பில்லா முழுமுதல் கருணையன்பர்க்
கன்பினாற் காட்டும் வண்ண மதிசயநீர்மைத்தாமே.

அரியட லேறன்னானு மமுதுகு குதலைச்செவ்வாய்ச்
சுரிகுழல் நங்கைதானுஞ் சொலற்கொணா வுவகை கூர்ந்தார்
பரிவுறு மனையர்தம்மேற் பண்ணவ னருளுஞ் சேரத்
தெரிவுறக் காணிற்காணு முவகையார் தெரிக்கவல்லார் (ப.72)

என்னும் பாடல்களின் மூலம் "நங்கையும் விழித்து நோக்கி" எனத் தொடங்கும் கொளு பாடலின் சிறப்பையும் விளக்கத்தையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

விவிலியச் செய்திகள்

திருவாக்குப்புராணம் ஆதியாகமத்திலிருந்து தொடங்குவதால் ஆதாம் ஏவாள் பற்றிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

"சர்ப்பம் ஸ்திரியை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரி சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரியை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது" (ஆதியாகமம் 3: 1-5) என்னும் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு,

> நண்ணிமாய சர்ப்பமிந்த நந்தனப் பயன்கணீர்
> உண்ணலீர்க ளென்றுதே வுரைத்ததுண்மை கொல்லெனப்
> பெண்ணியா முணற்கெலாம் பெரிதுவந்து தந்தனன்
> கண்ணிலாவு சோலைநாப்ப ணின்றதாரு காட்டியே.
>
> வீவொழிந்து நீவிருய்ய வேண்டுமெண்ணி வித்தரு
> மேவுகின்ற கனியுணல் விழைந்துதீண்ட லொழிதிரென்
> றோவிலா விலக்கெமக் குரைத்தனன் பிரானெனத்
> தூவிமஞ்ஞை யெனவிளங்கு தோகைசொல்லி னாளரோ.
>
> என்றபோது சர்ப்பமாதை நோக்கிமாய்வ தில்லைநீர்
> தின்றபோது நுமதுகண் டிறந்துநன்மை தீமைதேர்
> கின்றபோத மெய்திநீவிர் தன்னையொத்தல் கேடிலா
> நின்றபோத னெஞ்சிலோர்வ னெனநிகழ்த்த லுற்றதே.
>
> (வினைசூழ் படலம், பா.3-5)

எனப் பாடியுள்ளார். கவிஞரின் கவிப் புலமைக்கு இப்பாடல்கள் சான்றுகளாக அமைகின்றன. "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" (யாத்திராகமம் 20-8) என்னும் வேதவசனத்தை அடிப்படையாகக் கொண்டு,

> ஓய்வுநாடன்னைத் தூயதாக் கொள்ள உன்னுகமுவிரு
> தினத்தும்
>
> ஏய்வுறும் வேலை எதனையும் புரிக இந்தவே ழாந்திருவைகல்
> தேய்வறும் புகழ்சே ரெம்பிரான்றானாய்ச் சிறந்திடுமொப்
> பிலாத்தேவின்
>
> தூய்துறு மோய்வு நாளதேயாகுஞ் சொற்றவித்தோ
> மறுதினத்தில்
>
> (பத்துக் கற்பனைப் படலம், பா.31)

எனப் பாடுகிறார். "அதிகாலையில் யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின் மேல் எண்ணெய் வார்த்து, அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான்" (ஆதியாகமம் 28: 18,19) என்னும் வசனங்களை,

தக்கபுகழ் யாக்கோபு தலைக்கணையா வைத்தவந்த
மிக்கபெருங் கல்லதனை விடியலிலே தானெழுந்து
அக்கவின்சேர் தலமதிற்றூ ணாநிறுத்தி யெண்ணெய்சொரிந்
திக்கடிகொ ளுலூசெனுநா டினிப்பெத்தே லென்றிசைத்தான்
(யாக்கோபுப் படலம், பா.42)

எனப் பாடுகிறார். நோவா இறைவனின் கட்டளைப்படி பேழையைச் செய்து உயிரினங்களை அதனுள்ளே அடைத்தார். பேழையை அடைத்து பிரளயத்தின் வரவினை எதிர்பார்த்திருந்தார் என்னும் விவிலியச் செய்தியை,

தப்பருங் கருணைசான்ற தனிமுத லுரைத்த வாறே
அப்பெரும் பேழைநீள மாறைம்பான் முழமதாக்கி
ஒப்பற வகலமைம்ப தாகவு மோங்குயர்ச்சி
முப்பது முழமுமாகச் சமைத்தனன் முயற்சி வல்லான்

ஆக்கிய பேழைக்குள்ளே அறைகளை வகுத்தான் மேலாய்ப்
போக்கிய முழமொன் றின்கீழ்ச் சாளரம் பொருந்த வைத்தான்
வீக்கிய கபாடம் பாங்கர்ச் செறித்தனன் விமல னன்பாம்
பாக்கிய மிவனேயல்லாற் பாரில்யார் பிறர்பெற் றாரே.

மரவினை முடித்த பின்னர் வருணமுட் பொசியா வண்ணம்
புரவினைப் புறத்து முள்ளும் பூசியு முடித்தான் சற்றுங்
கரவினை விளையான் வையங் கடியுநீர்ப் பிரளயத்தின்
வரவினை நோக்கி யையன் மலரடி நோக்கி வாழ்ந்தான்
(சலப்பிரளயப் படலம், பா.15-17)

என்னும் பாடல்கள் வாயிலாக உணர்த்துகிறார். இவ்வாறு விவிலியப் புலமையினால் வசனங்களைக் கவிதையாக்கம் செய்யும் திறன் படைத்தவராகக் கனகசபைப் புலவர் காணப்படுகிறார்.

இரண்டாம் பாகம்

திருவாக்குப் புராணத்தின் முதல் பாகத்தின் இறுதியில் இரண்டாம் பாகம் விரைவில் வெளிவரும் (will shortly be published-Specimen pages) என்னும் செய்தியுடன் சான்றுக்காக சுவிசேடக் காண்டத்தில் உள்ள சுவிசேட வரலாற்றுப் படலத்தில்

24 பாடல்களும், யோவானுற்பவித்தப் படலத்தில் 43 பாடல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலின் பின் பகுதியில் இப்பாடல்களும் மேற்சொன்ன குறிப்பும் இருப்பதனால் இதை அறிய முடிகின்றது. புதிய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இரண்டாம் பாகம் முழுமையாக வெளிவந்ததாகத் தெரியவில்லை. சுவிசேட வரலாற்றுப் படலத்தில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்போர் நான்கு நற்செய்தி நூல்களை எழுதியதைப் பற்றி,

இத்தகு சுவிசேடத்தை யெம்பிரானருள் பெற்றுய்ந்த
உத்தமரெனு மத்தேயு வொடுமார்க்கு லூக்கா மிக்க
வித்தக யோவானென்போர் வீற்றுவீற்றிட வாழ்வுற்றோர்
புத்தகங்களிலே தீட்டிப் பூதலத்து தவினாரே
(சுவிசேட வரலாற்றுப் படலம், பா.21)

எனக் குறிப்பிடுகின்றார். ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவான் 1: 1,2,3) என்னும் வசனங்களை,

ஆதியில் வார்த்தைவைகிற் றவ்வார்த்தை தேவன்பாலில்
மேதகவிருந்ததந்த மேம்படுவாக்குத்தானே
கோதில் மெய்ப்பகவனாகுங் குறித்திடுமது மேனாளிற்
றீதிலானந்த ஞானத் தேவின் மாட்டுற்றதன்றே
(யோவானுற்பவித்த படலம், பா.2)

எனப் பாடுகிறார். மரியாள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள் (லூக்கா 1: 28, 29) என்னும் வசனங்களை,

கடவுளங் கனுப்பவந்த கபிரியே லென்னுந் தூதன்
மடமயி லனையசாயல் மங்கையை யினிது நோக்கிப்
படர்பரி பூரணச்செங் கிருபைகொள் பாவாய்வாழி
அடர்தரு மகிமைசாலு மமலனுன் னுடனுற் றானே.

மங்கையர் தமக்குளாசீர் வதிக்கப்பட்டவணீ யென்றான்
அங்கவ ளவனைக்கண்டவ் வவன்சொலாற் கலங்கியிந்தப்

பங்கமி றேவதூதன் பாங்கினின் றென்னை நோக்கி
இங்கருள் வாழியென்ன தகைத்ததோ வெனச்சிந் தித்தான்
(யோவானுற்பவித்த படலம், பா.23,24)

எனப் பாடுகிறார். இதன்மூலம் பின்னிணைப்பின் வாயிலாக திருவாக்குப் புராணத்தின் இரண்டாவது பாகம் குறித்து அறிந்து கொள்ள முடிகின்றது.

முழுமையடையாதக் காப்பியம்

திருவாக்குப் புராணத்தின் முதலாம் பாகம் ஆதியாகமம் மற்றும் யாத்திராகமம் என்னும் நூல்களிலுள்ள செய்திகளை மட்டுமே கவிதையாகத் தருகிறது. இந்த முதல் பாகம் பத்து கற்பனைகளை விவரிப்பதுடன் முடிவுறுகிறது. நூலின் இறுதியில் இரண்டாம் பாகம் விரைவில் வரும் எனவும் இரண்டாம் பாகத்தில் இடம்பெறப்போகும் படலங்களிலிருந்து சில பாடல்களையும் ஆசிரியர் கொடுத்துள்ளார். இரண்டாம் பாகம் புதிய ஏற்பாட்டுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு தொடங்குகிறது. இந்த இரண்டாம்பாகம் வெளிவந்ததாகத் தெரியவில்லை. மேலும் முதல்பாகத்தின் இறுதியிலுள்ள பத்து கற்பனைகளுக்குப் பின்னர் இரண்டாம் பாகம் புதிய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தொடங்குகிறது. இது எதனால் எனத் தெரியவில்லை. முதல் பாகத்தில் ஆதி, யாகமத்தையும், யாத்திராகமத்தையும் அடிப்படையாகக் கொண்டு பாடிய ஆசிரியர் இரண்டாம் பாகம் புதிய ஏற்பாட்டை மட்டும் விளக்குவதாக இருந்தால் போதும் என எண்ணியிருக்கலாம் எனத் தெரிகிறது. எனினும் இரண்டாம் பாகத்தையும் ஆசிரியர் முழுமையாகப் படைத்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியதே யாகும். எனவே இக்காப்பியத்தை முழுமையான காப்பியம் எனக் கூற இயலவில்லை எனலாம்.

2. இயேசு புராணம்

ஈழத்துப் பூராடனாரின் "இயேசு புராணம்" (1986) விவிலியத்தில் உள்ள ஆதியாகமம் தொடங்கி பழைய, புதிய ஏற்பாட்டுச் செய்திகளைச் சுருக்கமாகத் தருகின்றது. கணினி மூலம் முதன் முதலாக நூல் வடிவம் பெற்றது ஈழத்துப் பூராடனாரின் "இயேசு புராணம்" என்னும் நூலாகும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் வரலாறு

இயேசு புராணம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் தாவீது செல்வராசகோபால் ஆவார். இவருடைய புனைப்பெயர் ஈழத்துப் பூராடனார் என்பதாகும். இவர் நாகமுத்து கதிர்காமத் தம்பி - சீனித் தம்பி வள்ளியம்மை தம்பதியருக்கு 1928 டிசம்பர் 13 ஆம் நாள் இலங்கையிலுள்ள செட்டிபாளையம் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் குருக்கள்மடம் என்னுமிடத்திலுள்ள மெதடிஸ்ட் பாடசாலையில் கல்வி பயின்றார். பின்னர் மாத்தரையிலுள்ள புனித மேரிஸ் கல்லூரியில் உயர் கல்வி பயின்றார். மேலும், மட்டக்களப்பு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி யிலும் மருதானையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

ஈழத்துப் பூராடனார் திக்வல்லை அரசினர் முஸ்லீம் பாடசாலையிலும், சம்மாந்துறை மெதடிஸ்டு மிஷன் பாட சாலையிலும், குறுமன்வெளி மெதடிஸ்டு மிஷன் பாடசாலை யிலும், கிரான்குளம் அரசினர் பாடசாலையிலும், தேற்றாத்தீவு அரசினர் பாடசாலையிலும், கொழும்பு நில்வீதி ஸ்ரான்லி கல்லூரியிலும் ஆசிரியப் பணியாற்றினார். மேலும் மெதடிஸ்டு சபையின் சகல நிலைகளிலும் பணியாற்றியுள்ளார். இவர் ஆதி கிரேக்க இலக்கியங்களை முழுமையாக ஆசிய மொழிகளில் தமிழாக்கம் செய்தமைக்கான அமெரிக்க கிரேக்க இலக்கிய மன்றத்தின் விருதினைப் பெற்றார். இவர் 1952ஆம் ஆண்டு பிப்ரவரி முதலாம் நாள் வியற்றிஸ் பசுபதி என்னும் அம்மையாரைத் திருமணம் செய்தார். இத்தம்பதியினருக்கு ஆறு புதல்வர்களும் ஒரு புதல்வியும் குழந்தைச் செல்வங்களாவர்.

ஈழத்துப் பூராடனார் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கப் பிரதித் தலைவராகி மொரிசியசிலும் சிட்னியிலும் மாநாடுகளை

நடத்தினார். மேலும் இவ்வியக்கத்தைக் கனடாவிலும் நிறுவி அதன் காப்பாளராக இருந்து வந்தார். இலங்கையில் மனோகரா அச்சகத்தை நிறுவி அதன் இணை நிறுவனமாக ஜீவா பதிப்பகத்தை ஆரம்பித்து பல நூல்களை வெளியிட்டுள்ளார். கனடாவில் புலம் பெயர்ந்தபோதும், அதே நிறுவனங்களை கனடாவிலும் நிறுவி பல நூல்களை வெளியிட்டார். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தால் இலக்கிய கலாநிதி (முனைவர்) என்னும் பட்டத்தைப் பெற்றார். ஈழத்துப் பூராடனார், வல்வெட்டித் துறையில் கடலோடிகள் என்னும் நூலினை வெளியிடுவதற்குரிய பணிகள் நிறைவுற்ற நிலையில், 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் நாள் கனடாவில் காலமானார்.

படைப்புகள்

ஈழத்துப் பூராடனார் ஓலைச்சுவடிகளிலிருந்து பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவர் இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளிலும் பல நூல்களை எழுதியுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. உரைநடை, செய்யுள், நாடகம், மொழி பெயர்ப்பு, வரலாற்று நூல்கள் என சுமார் 70க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். விபுலானந்தர் பற்றி ஏழு நூல்களும், மட்டக்களப்பு தமிழறிஞர்கள் வரலாறு குறித்து பதினொரு நூல்களும், மட்டக்களப்பு கூத்துக்கலை பற்றி ஒன்பது நூல்களும் எழுதியுள்ளார். இயேசு புராணம், பெத்லகேம் கலம்பகம், இயேசு இரட்சகர் இரட்டை மணிமாலை, இயேசு கீதை, கிறிஸ்தவ முக்கனிகள் என்னும் செய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார். இவருடைய உரைநடை நூல்களுள் தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் பிரபந்தங்கள், கிறிஸ்தவ நாறபடை, வேதாகமத்தில் தாவரங்கள், வேதாகமத்தில் உலோகங்கள், வேதாகமத்தில் பிராணிகள், வேதாகமத்தில் பறவைகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

வேதநாயக சாஸ்திரியாரின் பெத்லகேம் குறவஞ்சிக்கு உரையும், கிருஷ்ணபிள்ளையின் இரட்சணிய மனோகரத்தை உரைநடையிலும், 32 நாடகங்கள் அடங்கிய கிறிஸ்துவின் அருள்வரங்களும் தெய்வீக வெளிப்பாடுகளும் என்னும் நாடக நூலையும், முப்பது வெள்ளிக்காசுகள் என்னும் நாடக நூலையும் எழுதியுள்ளார். ஆதிகிரேக்க 48 நாடகங்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் ஹோமரின் இலியட், ஒடிசி

என்னும் இரு காவியங்கள் மட்டுமன்றி மேலும் ஐந்து கிரேக்க நாடகங்களையும் மொழிபெயர்த்துள்ளார். ஹோமரின் இலியட் காவியம் 2400 வெண்பாக்களாலும், ஒடிசி காவியம் 2400 வெண்பாக்களாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நாடகங்களுள் சொபிக்கொலசின் நாடகங்கள், அயிலசியசின் நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. இவர் எழுதிய இலக்கிய நூல்களுள் குறிப்பிடத்தக்கன தமிழ்த்தாய் பள்ளியெழுச்சி, புதிய அகப்பொருள் நூற்றி ஒன்று, புதிய புறப்பொருள் நூறு, ஐந்திணை ஐந்நூறு, புறப்பொருள் விருத்தம், ஈழத்துப் பறவைகளும் இலக்கியச் சிந்தனைகளும் என்பனவாகும்.

நூலின் அமைப்பு

இயேசு புராணம் 1602 பாடல்களைக் கொண்டது. இந்நூல் பரமபிதாப் பருவம், பரமசுதன் பருவம், பரிசுத்தாவிப் பருவம் என்னும் மூன்று பருவங்களை உடையது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் திரியேகரின் பெயர்களைக் கொண்டு நூலின் முக்கிய பிரிவுகளுக்குப் பெயர் அமைத்துள்ளார். ஒவ்வொரு பருவமும் மூன்று சுருக்கங்களையும், ஒவ்வொரு சுருக்கமும் ஐந்து படலங்களையும், ஒவ்வொரு படலமும் ஐந்து அடங்கன்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. பரமபிதாப் பருவம் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. பரமசுதன் பருவம், பரிசுத்தாவிப் பருவம் என்னும் இரண்டு பருவங்களும் புதிய ஏற்பாட்டை ஆதாரமாகக் கொண்டனவாகும்.

1. பரமபிதாப் பருவம்

முதல் பருவமான பரமபிதாப் பருவமானது உலகோற்பத்திச் சுருக்கம், பரம ஈவுச் சுருக்கம், பரம தேர்வுச் சுருக்கம் என்னும் மூன்று பகுதிகளால் பகுக்கப்பட்டுள்ளது.

அ. உலகோற்பத்திச் சுருக்கம்

உலகோற்பத்திச் சுருக்கமானது பரமபிதா இலக்கணப் படலம், உலக உற்பத்திப் படலம், பவ உற்பத்திப் படலம், பவபெருக்கப் படலம், பரமபிதா நொந்துறு படலம் என்னும் ஐந்து படலங்களாலானது. ஒவ்வொரு படலமும் ஐந்து அடங்கன்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

ஆ. பரம ஈவுச் சுருக்கம்

பரமஈவுச் சுருக்கமானது புத்துலகு செய்யுஞ் சிந்தனைப் படலம், அடியாரைக் காக்க வருள்சொரி படலம், பிரளயப் படலம், உடன்படிக்கைப் படலம், உடன்படிக்கை மீறற் படலம் என்னும் படலங்களை உடையது.

இ. பரமதேர்வுச் சுருக்கம்

பரமதேர்வுச் சுருக்கமானது ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்த படலம், யாக்கோபின் வம்சவிருத்திப் படலம், யோசேப்பின் சிறையனுபவப் படலம், இசுரவேலினப் படலம், இயேசு வம்ச வரலாற்றுப் படலம் என்னும் ஐந்து படலங்களைக் கொண்டது.

2. பரம சுதன் பருவம்

இரண்டாவது பருவமான பரமசுதன் பருவமானது கன்னிமகன் சுருக்கம், தூதுப்பணிச் சுருக்கம், அற்புதப் பணிச் சுருக்கம் என்னும் மூன்று சுருக்கங்களாலானது.

அ. கன்னி மகன் சுருக்கம்

கன்னி மகன் சுருக்கமானது கன்னிமேரிப் படலம், யோசேப்புப் படலம், அவதாரப் படலம், காணிக்கைப் படலம், மனுவாழ்வுப் படலம் என்னும் ஐந்து படலங்களாலானது.

ஆ. தூதுப்பணிச் சுருக்கம்

தூதுப் பணிச் சுருக்கமானது திருமுழுக்குப் படலம், குருத்துவப் படலம், சீடத்துவப் படலம், கற்பனைகளைத் தப்பர்த்தம் செய்த படலம், அருளுரை கேட்டோர் படலம் என்னும் ஐந்து படலங்களால் ஆனது.

இ. அற்புதப் பணிச் சுருக்கம்

அற்புதப் பணிச்சுருக்கமானது உவமைப் படலம், அருள் வருகை ஆயத்தப் படலம், போதனைப் புரட்சிப் படலம், அற்புதப் படலம், வஞ்சனைப் படலம் என்னும் ஐந்து படலங்களை உடையது.

3. பரிசுத்தாவிப் பருவம்

மூன்றாவதான பரிசுத்தாவிப் பருவமானது பலியாகி உயிரீந்த சுருக்கம், உயிர்த்தெழுந்த சுருக்கம், கிறித்தவ நம்பிக்கைச் சுருக்கம் என்னும் மூன்று சுருக்கங்களாலானது.

அ. பலியாகி உயிரீந்த சுருக்கம்

பலியாகி உயிரீந்த சுருக்கமானது காட்டிக் கொடுத்த படலம், குற்றச் சாட்டுப் படலம், குற்ற நிருபணப் படலம், தீர்ப்புப் படலம், சிலுவைப் படலம் என்னும் ஐந்து படலங்களைக் கொண்டது.

ஆ. உயிர்த்தெழுந்த சுருக்கம்

உயிர்த்தெழுந்த சுருக்கமானது திருவடக்கப் படலம், யூதாசுக் காரியோத்தன் படலம், அவலமுறு படலம், கல்லறைப் படலம், தரிசனந் தந்த படலம் என்னும் ஐந்து படலங்களாலானது.

இ. கிறித்தவ நம்பிக்கைச் சுருக்கம்

கிறித்தவ நம்பிக்கைச் சுருக்கமானது தூதுப்பணி ஆரம்பப் படலம், இரத்தச் சாட்சிப் படலம், சவுலைப் பவுலாக்கியப் படலம், திருமறைப் படலம், கிறித்தவப் பண்புப் படலம் என்னும் ஐந்து படலங்களை உடையது.

நூல் எழுதப்பட்டதன் நோக்கம்

இயேசு புராணம் எழுதப்பட்டதற்கான நோக்கத்தைத் தொகுப்பாசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> கிறித்தவர்கள் எத்தகைய வாழ்க்கையை அமைப்பதால் கிறித்தவர்களாகலாம் என்பதற்கும், கிறித்தவர்கள் அல்லாத தமிழ் அறிந்தவர்கள் கிறித்தவன் என்பவன் யார்? அவனது சமய நோக்கு எது? அவனது வாழ்க்கை நெறி எத்தகைய அமைப்புடையது என்பதை அறிந்து கொள்ளவும், அச்சமயத்தின் பின்னணிகளை விளங்கிக் கொள்ளவும் தக்கதாக இயேசு புராணம் இயற்றப்பட்டது.

வேதாகமத்தின் பாகு

ஈழத்துப் பூராடனாரின் இயேசு புராணம் விவிலியத்தின் ஆரம்பம் முதல் முடிவு வரையிலான செய்திகளைச் சுருக்கமாகப் பிழிந்து தந்துள்ளது. இது கிறித்தவ இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க ஒரு நூலாகும். இயேசு புராணம் பரிசுத்த வேதாகமத்தின் பாகு எனலாம் எனவும், எல்லோருக்கும் பயன்படத்தக்க வகையில் ஆக்கப்பட்ட இது ஒரு 'சின்ன வேதாகமம்' எனல் பொருந்தும்

எனவும் தொகுப்பாசிரியர் நூலின் ஆரம்பப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

பரமபிதா பருவம் என்னும் முதல் பருவம் முழுதும் (582 செய்யுள்) பழைய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அதுபோன்று மூன்றாம் பருவத்திலுள்ள கிறித்தவ நம்பிக்கைச் சுருக்கம் என்னும் பகுதியிலுள்ள தூதுப் பணி ஆரம்பப் படலம், இரத்த சாட்சிப் படலம், சவுலைப் பவுலாக்கியப் படலம், திருமுறைப் படலம், கிறித்தவப் பண்புப் படலம் என்னும் ஐந்து படலங்களும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் உள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டவை. மேல் குறிப்பிட்ட இத்தகைய பகுதிகளைக் கொண்டு முழுமையான நிலையில் இயேசு புராணம் எழுதப்பட்டுள்ளது.

கிறித்தவர்களின் பண்புகள்

பிற கிறித்தவ இலக்கியங்களில் இல்லாத தனித்தன்மை நிறைந்த பகுதியாக கிறித்தவப் பண்புப் படலம் அமைந்துள்ளது. கிறித்தவர்கள் பெற்றிருக்க வேண்டிய பண்புகளை இப் படலத்தில் ஆசிரியர் எளிமையாக விவரிக்கின்றார். கிறித்தவன் பெற்றிருக்க வேண்டிய இலட்சணைகளை (பண்புகளை) ஐந்து பாடல்களில் பாடுகின்றார். சான்றாக,

மற்றோரில் மனமிரங்கி மாற்றா ரென்ற
மனதற்று தம்மிலொரு மனுவாய்க் கொள்வார்
பற்றுந்துணை பரனல்லாற் பாரில்வேறு
பராமரிப்புப் பரிவுள்ள பாதை தேரார்
முற்றும் முறைவழியே முனைந்து செல்வார்
முழுமனதா யிறைவன்மேல் விசுவா சிப்பார்
உற்றதுன்ப வேளையிலும் உண்மைக் காக
உயிரீந்து விசுவாசம் உலகிற் காப்பார்

(கிறித்தவப் பண்புப் படலம், பா.375)

என்னும் பாடலில் கிறித்தவர் என்பவர் பிறருக்காக மனம் இரங்குவர்; மாற்றார் என்று ஒரு சிறிதும் கருதாமல் தம்மில் ஒருவராக நினைத்து எண்ணுவர்; இவ்வுலகில் பற்றிக் கொள்ளக் கூடிய துணை இறைவன் ஒருவனே என்று கருதுவர்; தம் வாழ்வுக்காக இவ்வுலகில் வேறு பாதை எதனையும் தேர்ந்தெடுக்க மாட்டார்; எது இறைவன் வகுத்த முறையோ அதன் வழியே தொடர்ந்து செல்வர்; முழுமனதோடு இறைவன் மீது விசுவாசம் கொள்வர்; எவ்வளவு துன்பமுற்ற நிலையிலும்

உண்மைக்காகத் தன் உயிரையே தந்தும் உலகில் இறை விசுவாசத்தைக் காப்பர் என கிறித்தவர்களின் பண்புகளைப் பட்டியலிடுகிறார். ஓய்வுநாளில் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதன் சிறப்பினை,

புனிதமாய் ஓய்வு நாளைப் போற்ற வந்தாள்
புரந்திடவே ஆறுதலாய்ப் புனிதன் கோயில்
இனிதாகப் பாட்டிசைத்து இரங்கு மாறு
இறையருளை வேண்டியவர் ஈந்த வார்த்தைக்
கனிதன்னைக் கசிந்துருகிக் கருத்திற் கொண்டு
கால்மடித்து முழந்தாழில் கரங்கள் கூப்பித்
தனியாக வல்லசபைத் தகையாய் கூடி
தந்ததரும் தருகின்ற தயவைப் போற்றே

(கிறித்தவப் பண்புப் படலம், பா.399)

என்னும் பாடல் மூலம் குறிப்பிடுகின்றார். இத்தகைய தனித் தன்மைகள் நிறைந்த பல பகுதிகளைக் கொண்டதாக இயேசு புராணம் அமைந்துள்ளது.

வருணனை

புராணத்தில் வருணனை இடம்பெற்றிருப்பது கதையோட்டத்திற்குப் பெரிதும் துணைபுரிவதுடன் ஆசிரியரின் கற்பனைப் புலமையையும் வெளிப்படுத்துகின்றது. அவதாரப் படலத்தின் பெத்தல்சேர் அடங்கன் பகுதியிலுள்ள 16 பாடல்களுள் 15 பாடல்கள் மார்கழி மாதக் குளிரை வருணிக்கும் வகையில் அமைந்துள்ளன. சான்றாக,

காரெனுங் காலமங்கை களிநடம் புரிந்து வந்தாள்
மார்கழி என்னும் மால மயக்கிடு குளிரைத் தந்தாள்
நீர்கழி கொள்ள நெஞ்சில் நிறைவுறு ஈரமீந்தாள்
பார்களி கொள்ளப் பசுந்தாட் பாயலை விரித்துச் சென்றாள்

(அவதாரப் படலம், பா.167)

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில், கார்காலம் என்னும் காலமாகிய மங்கை மகிழ்ச்சி நடனம் புரிந்து வந்தாள்; மார்கழி என்கின்ற மயக்குகின்ற குளிரைத் தந்தாள்; நீர்ச்சுழி ஏற்பட, நெஞ்சம் நிறைவுறும் வண்ணம் ஈரத்தைத் தந்தாள்; இவ்வுலகம் மகிழ்வடைய பசிய புல்லாகிய படுக்கையை விரித்துச் சென்றாள் என்னும் ஆசிரியரின் வருணனை

பாராட்டத்தக்கது. தாவீது ஆனிரைகளை மேய்த்துக் கொண்டு மர நிழலில் இருப்பதை,

மலையிழிந்து வீழருவி தாழிசை யூட்டும்
மடைதிறந்து பாய்வெள்ளந் தவழிசை யீட்டும்
நிலைதளர்ந்து எழுமேகம் மேலிசை கூட்டும்
நிழல்தவழ்ந்து வருந்தென்றல் நீழிசை நீட்டும்
அலைதிரளுங் கடலாதித் தாளத்தை வீட்டும்
அனைத்துயிரும் அளவில்லாப் பண்ணிசை தீட்டும்
சிலையென்ன மரநிழலில் மந்தை ஓட்டஞ்
சிதறாது சிந்தித்துத் தாவிது இருப்பான்

(சங்கீத அடங்கன், பா.469)

என்று வருணனையாகப் பாடுகிறார். இப்பாடலில், மலையிலிருந்து வீழுகின்ற அருவி இனிய ஓசை நல்கும்; மடைகளைத் திறந்து கொண்டு பாய்கின்ற வெள்ளமும் இசை வழங்கும்; தளர்ந்து எழுந்து அசைந்து வருகின்ற மேகங்கள் வானத்தின் மேல் இசை முழங்கும்; நிழல்களிலே தவழ்ந்து வருகின்ற தென்றல் நெடிய இசை வழங்கும்; கடல் தனது அலைகளால் தாளமிடும்; அனைத்து உயிர்களும் அளவற்ற இனிய பண்ணிசையை வழங்கும்; மர நிழலில் சிலை போல நின்று சிந்தித்திருக்கும் தாவீது மந்தைப் பசுக்கள் சிதறி ஓடிவிடாமல் காத்திருந்தான் என வருணிக்கும் திறம் போற்றத்தக்கது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த காலைப் பொழுதைப் பற்றி வருணிக்கும் போது,

குளிரடர்ந்த பனிநிலத்திற் குறுகிநின்ற லில்லி
குமுறியெழுந் துடற்பெருக்கிக் குவலயத்திற் துள்ளித்
தளிரெழமுன் தண்டெழுந்து தாங்கிவந்து முகையை
தரைபிழந்து தாவிமணற் தாழ்சிதற வோங்கி
அளிமுரல மலர்ந்துமிசை ஆடுதென்றற் காற்றில்
அசைவாடி மணம்பரப்பி அழகதனைப் பெருக்கி
களித்தும்புங் கள்ளேந்திக் கருவண்டை அழைக்குங்
கரந்திருந்த தெங்கேயெனக் காண்போர்கள் வியப்பர்

(உயிர்த்தெழுந்த வசந்த அடங்கன், பா.203)

எனப்பாடுகிறார்.

பனி பொழிவதால் குளிர்ச்சியடைந்திருந்த நிலத்தில் மிகச் சிறிதாகக் குறுகி நின்ற லில்லிச் செடி மிகுந்த விரைவுடன் எழுந்து தன் உடலைப் பெரிதாக்கி, உலகில் துள்ளி எழுந்து தளிர்

தோன்றுமுன் தண்டினைப் படைத்து, மொட்டினைத் தாங்கி தரையைப் பிளந்து, மணல் தாழ்களைச் சிதறச் செய்து, வண்டுகள் முரல (ரீங்காரம் செய்ய) மலரை மலர்வித்து, அழகினைப் பெருக்கி மகிழ்வுதரும் தேனினை ஏந்தி கருவண்டை அழைத்து நிற்கும். அதனைக் கண்டோர்கள் இதுவரையில் இச்செடி மறைந்திருந்தது எங்கே என வியப்பர் என வருணிக்கிறார். இவ்வாறு புராணத்திற்குரிய வருணனைப் பகுதிகள் இயேசு புராணத்தில் ஆங்காங்கே இடம்பெற்று சுவையைச் சிறப்பிக்கிறது. இவ்வருணனைகள் மூலம் ஆசிரியரின் கவித்திறனை அறிந்து கொள்ள முடிகிறது.

விவிலியச் செய்திகளைக் கவிதைப் பொருளாக்கும் திறம்

விவிலிய வசனங்களைப் பாடலாக எளிதில் புரியும் வகையில் மாற்றியுள்ளது இவரது படைப்பின் தனித்தன்மைக்குச் சான்று எனலாம். "நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டு பண்ணி, அதை உள்ளும் புறமுமாகக் கீல் பூசு. நீ அதைப் பண்ண வேண்டிய விதம் என்னவென்றால், பேழையின் நீழம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்க வேண்டும். நீ பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டு பண்ணி, மேல் தட்டுக்கு ஒரு முழத் தாழ்த்தியிலே அதைச் செய்து முடித்து, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்து, கீழ் அறைகளையும், இரண்டாம் தட்டின் அறைகளையும், மூன்றாம் தட்டின் அறைகளையும் பண்ண வேண்டும்" (ஆதியாகமம், 6:14-16) என்னும் வசனங்களை,

> **கொப்பேர் மரம்வெட்டி பேழை செய்க**
> **கொள்ளளவு முன்னூற்று ஐம்பான் கோலாம்.**
> **இப்பார் சூழ்வெள்ளந் தாக்கா வாறு**
> **எழுமுயரம் முப்பதுநல் அடியாய்க் கொண்டு**
> **அப்பால் முத்தட்டு அறைக ளாக்கி**
> **அவையாவும் நீர்புகாத வண்ணங் கீலால்**
> **கப்பலின் உருவாக இல்லப் பேழை**
> **கட்டமைப்பிற் செய்கவெனக் கட்டளை யிட்டார்**
> **(நோவாவுக்கு ஆணையிட்ட அடங்கன், பா.190)**

என்னும் பாடலாக இயற்றியுள்ளார். மேலும், "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்.

இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்" (மத்தேயு 25:29) என்னும் இறைவாக்கை,

உள்ளவன் தனக்கே மேலும் உயர்வுற ஈய லாகும்
எள்ளள விருப்போன் மேலும் ஏற்பவை ஏற்கா னானால்
உள்ளதும் பறிக்கப்பட்டு உழன்றிடும் நிறையே காண்பான்
தெள்ளிய தேவ வார்த்தை தேறலு மிதுபோ லென்றார்
(தாலந்து அடங்கன், பா.56)

எனப் பாடலாக மாற்றியுள்ளார்.

ஒருவன் இயேசு கிறிஸ்துவைப் பார்த்து எனக்குப் பிறன் யார்? எனக் கேட்டான். அதற்கு அவர் நல்ல சமாரியன் கதையைக் கூறினார். ஒருவன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும் வழியில் திருடர்களிடம் அகப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தான். அந்த வழியாகச் சென்ற ஒரு ஆசாரியன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இவனைப் பார்த்து தூர விலகிச் சென்றான். இதுபோன்று வந்த லேவியனும் வழி விலகிச் சென்றான். ஆனால் சமாரியன் ஒருவன், அவனுக்கு வேண்டிய உதவிகள் செய்து, சத்திரத்தில் கொண்டு சேர்த்து, சத்திரக் காரனிடம் அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யச் சொல்லி விட்டுச் சென்றான். விவிலியத்தில் லூக்கா எழுதின நற்செய்தி நூலில் காணலாகும் இப்பகுதியை ஈழத்துப் பூராடனார் ஒரே பாடலில் இரத்தினச் சுருக்கமாகத் தந்திருப்பது அவரின் புலமைக்குத் தக்க சான்றாக அமைந்துள்ளது. அப்பாடல் பின்வருமாறு:

வழிபறி திருடர் கையால் வலியற்று வீழ்ந்தோன் தீண்டல்
இழிவெனக் குருவே சென்றார் இடரென யூதன் போனான்
விழிகொள் சமாரி நாட்டான் விட்டிடா தவனைத் தூக்கி
அழிவுறா தணைத்துச் சேர்த்த அன்பனே யயலா னென்றார்.
(வேதப்பொருள் அடங்கன், பா.429)

தமிழ்ப்பற்று

ஈழத்துப் பூராடனார் தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழ்க் கவிஞர்களிடம் அவர் கொண்டிருந்த பற்றை அவரது பாடல் மூலம் அறியமுடிகிறது. நோவா இறைவனின் ஆணையை ஏற்று கப்பலுக்குள் சென்று பூட்டிய பின்னர் மழை பெய்தது. மழைபெய்தமையை,

பாரதியின் பாட்டுப்போல் வேட்கை மிக்குப்
பட்டினத்தார் பாப்போல பற்றை விட்டுப்

பாரதியின் தாசன்பாப் பயனை யூட்டிப்
பண்புற்ற திராவிடமாய்ப் பற்றுப் பொங்கித்
தாரதிர மன்னர்முடித் தரையைக் கவ்வத்
தண்ணீரிறை படைதாங்கா தவிக்கும் மண்ணிற்
தேரதிரக் கண்ணதாசன் தென்னகச் செய்யுட்
தேன்போலப் பெருகிற்றுத் திரண்ட மாரி

(நோவா ஆயத்த அடங்கன், பா.196)

எனப் பாடுகிறார். பாரதியார், பட்டினத்தார், பாரதிதாசன், கண்ணதாசன் என்னும் கவிஞர்களையெல்லாம் ஒரே பாடலுக்குள் கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாடலின் முந்தைய பாடலில், 'சொல்நயத்துக் கம்பன்வாய்க் கவிபோல் மாரி' எனக் கம்பரைக் குறிப்பிடுகின்றார்.

நடை

எளிமையும் இனிமையும் கலந்த நடையில் இவரது படைப்பு அமைந்துள்ளது. ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா, கலி விருத்தம் என்னும் பல்முறையான யாப்பு வகைகளில் இந்நூலிலுள்ள பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. அனைத்துப் பாடல்களும் எதுகை மோனையுடன் கற்பார் நெஞ்சைக் கவருகின்றன.

உவமைகள்

இயேசு புராணத்தில் ஆசிரியர் பல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

1. வருமழை பெருகி யோடி வயல்வளஞ் செய்தல் போல
2. பெருவிரிவுச் சமுத்திரத்திற் பெய்த நீர்போல்
3. சொல்நயத்துக் கம்பன்வாய்க் கவிபோல்
4. அடைக்கலங்கள் நீயே என்று அலறிடும் ஆத்மா போலே
5. வாதையுற வலைவீசிப் பறவைபோலே
6. மக்கள் தம்மை மாயஞ்செய் சாத்தானிடந் தருதல் போலே
7. தாகமதைத் தீர்த்தளிக்கும் தமிழைப்போலே
8. அகரத்தை யறியாதார் அகராதி பார்ப்பதுபோல்
9. தொலைத்திடு மணியைக் கண்ட துயர்கெடு மனத்தைப் போல
10. நிலாவிடையே விண்மீன்கள் நிரவல் போல

11. வெந்தணலில் வேகாதவெண் தமிழைப்போல
12. ஆகாரம் படைத்தளித்து அருந்தல் போல
13. ஈயத்தை உருக்கி செவியிட்டார் போல
14. தமிழின் தகையைத் தடைசெய் யாரியத் தறுகணர் போல்
15. தினந்தோறும் புதுச்செய்தி தெரிக்குந்தினத் தாள்போற்

என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

கிறித்தவப் பண்புப் படலம்

பிற கிறித்தவக் காப்பியங்களிலிருந்து இக்காப்பியத்தின் இறுதிப் பகுதி வேறுபட்டு காணப்படுவது இக்காப்பியத்தின் சிறப்புக்கு ஒரு காரணம் எனலாம். பொதுவாகக் கிறித்தவப் படைப்புகளின் இறுதிப்பகுதி இயேசு கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலுடன் முடிவுறும். சில படைப்புகளின் இறுதிப்பகுதி பவுலின் ஊழியங்களைப் பற்றிக் குறிப்பிட்டு நிறைவுறும். ஆனால் ஈழத்துப் பூராடனாரின் இயேசு புராணத்திலுள்ள கிறித்தவப் பண்புப் படலம் என்னும் பகுதியானது பிற படைப்பு களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. இப்படலம் கிறித்தவ இலட்சண அடங்கன், கிறித்தவப் போதனைச் சுருக்க அடங்கன், கிறித்தவ வணக்க அடங்கன், விசேட தின அடங்கன், நிறைவு அடங்கன் என்னும் ஐந்து அடங்கன்களை உடையது.

கிறித்தவ இலட்சண அடங்கன் என்னும் பகுதியில் உண்மைக் கிறித்தவனின் இலட்சணங்களைப் பட்டியலிடுகிறார்.

> **கண்போன போக்கெல்லாங் கரும மாற்றார்**
> **கடவுளுக்குட் பிரார்த்தித்தே கடைமை செய்வார்**
> **மண்பெண்பொன் னாதியவை மமதை கொள்ளார்**
> **மட்டாக மானிலத்தில் மருவி வாழ்வார்**
> **பண்பற்ற உலகின்பம் பாழாச் செய்யப்**
> **படுமளவு அவையாட்சி பண்ண வொட்டார்**
> **விண்ணேசு மலையுரையை விதியாய்க் கொள்வார்**
> **விதியென்று வீணாக வினைகள் செய்யார்**
>
> **(கிறித்தவ இலட்சண அடங்கன், பா.376)**

என்னும் பாடல் சான்றாக அமைகிறது. உண்மையான கிறித்தவர் தங்கள் கண்போன போக்கெல்லாம் போய் செயல்பட மாட்டார்கள். எப்பொழுதும் கடவுளைத் தொழுது கடமையைச் செய்வார்கள். மண், பெண், பொன் ஆகியவற்றைப்

பெற்றிருக்கிறோம் என்பதில் மமதைக் கொள்ள மாட்டார்கள். உலகத்தில் அடங்கி ஒடுங்கி வாழ்வார்கள். பண்பற்ற உலக இன்பம் தம்மைப் பாழாய்ச் செய்யும் என்பதை உணர்ந்து அது தன்னை ஆட்சி செய்ய அனுமதிக்க மாட்டார்கள். தங்கள் வாழ்க்கைக்கு வழியாக இயேசுபிரானின் மலைப்பொழிவைக் கொள்வார்கள். எல்லாம் விதியென்று பயனற்றச் செயல்களைச் செய்யமாட்டார்கள் என இப்பாடலில் விவரிக்கிறார்.

கிறித்தவ வணக்க அடங்கன் என்னும் பகுதியில் கிறித்தவன் இறைவழிபாடு (ஜெபம்) செய்ய வேண்டிய முறையை நான்கு பாடல்களின் மூலம் விவரிக்கிறார்.

தனித்திருந்துங் குடும்பமாயுந் தந்தை தன்னைத்
தாழ்பணிந்து தந்தநன்மை தருகின்ற வெல்லா
கனிவான நன்மைகட்குங் கருணை யிற்கும்
கண்ணீரால் நன்றிசொல்லிக் காலை மாலை
இனிவருகும் வேளைக்காய் இதயம் விட்டு
இறைவன்தாள் பணிந்துநாளை இன்றும் நேற்றும்
இருந்தெமக்கு ஈவுதரும் இனிமை பாடி
மறைவசனந் தானோதி மலருஞ் சிந்தை
மதியறியச் சிந்தித்து மகிழல் தானே
(கிறித்தவ வணக்க அடங்கன், பா.384)

என்னும் இப்பாடலில் தனித்திருந்தும் குடும்பமாகவும் ஜெபம் பண்ண வேண்டிய முறைகளைக் கூறுகிறார். விசேட தின அடங்கன் என்னும் பகுதியில் கிறித்தவர்களின் விசேட தினங்களான கிறிஸ்து பிறப்பு, சாம்பற்புதன், புனித வெள்ளி, உயிர்த்தெழுதல், பெந்தகொஸ்தே நாள் போன்றவற்றைக் குறிப்பிட்டு நிறைவாக,

தீண்டியெம்மைத் தீயபவத் தீயி னின்று
தீர்த்தெடுத்த பெம்மானைத் தினமும் நாங்கள்
வேண்டிடலே பெருவிழாவாம் வேறு நல்ல
விழாவெதற்கு வேதனருள் விழைவோருக்கே
(விசேட தின அடங்கன், பா.395)

என முடிக்கிறார். இப்பாடலில் நம்மைப் பல்வேறு சோதனைகளிலிருந்து காத்த இறைவனிடம் தினமும் வேண்டி வழிபடுவதே பெருவிழா எனக் குறிப்பிடுகிறார். இறுதிப் பகுதியான நிறைவு அடங்கனில் ஓய்வுநாள் வழிபாடு தொடங்கி

பல உறுதிமொழிகளையும் முன் வைக்கிறார். ஆக, கிறித்தவப் பண்புப் படலம் ஒரு புதிய முயற்சியாக ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ளது.

புராணம் என்னும் பெயர் பூண்டு, முழு விவிலியத்தின் செய்திகளையும் பைந்தமிழ்ப் பாக்களில் பாகு போல் பிழிந்து தரும் பெருமையாலும், ஈழத்தில் தோன்றிய இனிய கிறித்தவ இலக்கியம் என்னும் சிறப்பாலும், கணினி வழி அச்சிட்டு வெளியிடப்பட்ட முதல் கிறித்தவ நூல் என்னும் தனித்தன்மை யாலும், பல்வேறு கிறித்தவ நன்னூல்கள் படைத்ததொரு நல்லாசிரியரின் மணிமுடிப் படைப்பு என்னும் மாண்பாலும் தமிழ்க் கிறித்தவ இலக்கியப் பேழையில் தரமுயர்ந்து தலை நிமிர்ந்து நிற்கிறது இயேசு புராணம் என்னும் இந்த இன்றமிழ்க் காப்பியம்.

3. நசரேய புராணம்

கிறித்தவ இலக்கியங்களுக்கு இலங்கை நாட்டவர்களின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கன. கிறித்தவக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், கீர்த்தனைகள், நாவல்கள், மொழி பெயர்ப்புகள் என இலங்கை நாட்டவர்களின் படைப்புகள் பலதிறப்பட்டன. கிறித்தவக் காப்பியங்கள் என்னும் வகையில் இலங்கையிலிருந்து புராணம் என்னும் சொல்லைக் கொண்டனவாக ஐந்து காப்பியங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று நசரேய புராணம்.

ஆசிரியர் அறிமுகம்

ஜே. எஸ். ஆழ்வார் பிள்ளை யாழ்ப்பாணத்திலுள்ள கட்டைவேலி என்னும் ஊரில் 1891ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் நாள் பிறந்தார். ஆழ்வார் பிள்ளை தமது ஆரம்பக் கல்வியை கட்டைவேலியிலுள்ள மெதடிஸ்ட் மிஷன் பாடசாலையில் பயின்றார். தமது ஐந்தாம் வயதில் கட்டைவேலியிலுள்ள கிறித்தவப் பள்ளியில் கல்வியைத் தொடங்கினார். இளமைப் பருவத்தில் தமது தந்தையாரிடமிருந்து இராகம், தாளம், இசை, கோலாட்டம் ஆகியனவற்றைக் கற்றார். தமது பதிமூன்றாவது வயதிலேயே கவிபாடும் ஆற்றல் உடையவராக விளங்கினார். வைணவ பக்தராகவும் சைவ சமய தீட்சை பெற்றவராகவும் விளங்கிய இவர், தமது பதிமூன்றாம் வயதில் கிறிஸ்து பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு, ஜேம்ஸ் என்னும் கிறித்தவப் பெயரை ஏற்று 1904ஆம் ஆண்டு கட்டைவேலி ஆலயத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கிறித்தவராக மாறினார். 1910ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தார். அப்பயிற்சி முடித்த பின்னர் அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1915ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பொறுப்பேற்றார்.

அதுமட்டுமன்றி, யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் மேலைநாட்டு மிஷனெரிமார்களுக்குத் தமிழ் கற்பிக்கும் பணியையும் மேற்கொண்டார். பின்னர் தமது 23ஆம் வயதில் பருத்தித்துறையிலுள்ள ஹாட்லி என்னும் பிரபல மெதடிஸ்ட் கல்லூரிக்குத் தமிழ்-ஆங்கில விரிவுரையாளராகப் பணிமாற்றம்

செய்யப்பட்டார். சில காலம் கழித்து கண்டி என்னும் இடத்திலுள்ள மத்திய கல்லூரியில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

ஆழ்வார் பிள்ளை 1914ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் நாள் எலின் இலக்குமி அம்மையாரைத் திருமணம் செய்தார். இவர்களது திருமணம் கட்டைவேலி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இக்காலக் கட்டத்தில் சட்டக் கல்வி கற்று ரோட்டரி பப்ளிக் ஆகவும் கடமையாற்றினார். இவர் இஸ்லாமியரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இஸ்லாம் தொடர்பான நூல்களையும் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கள மொழியைப் புத்தபிக்குமாரிடம் சென்று கற்று, புலமை பெற்று, சிறந்த சிங்கள மொழிப் பேச்சாளராகவும் திகழ்ந்தார். ஆங்கில, சிங்கள மொழிப் பேச்சுக்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். இவர் ஒரு சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்தார். இதனால் அரசாங்கம் இவரை கிழக்கு மாகாணப் பகுதிக்கு வித்தியாதிகாரியாக நியமித்தது.

ஆழ்வார் பிள்ளை பல கிறித்தவ நாடகங்களை மேடையேற்றியுள்ளார். ஆலயங்களில் அருளுரை ஆற்றுவதில் திறமை மிக்கவர். இவர் தேசத் தொண்டன் என்னும் இதழை ஆரம்பித்து, அதன் மூலம் சமுதாயக் கருத்துகளை மக்களிடம் பரப்பி, தாழ்த்தப்பட்ட மக்களைத் தலைநிமிரச் செய்தார். பதிமூன்று வயதிலேயே கவிபாடும் ஞானம் பெற்ற இவர், சித்திரக் கவிகள், அக்கரச்சதகம், எழுத்து வருத்தினம், சுழிகுளம், நான்கரைச் சக்கரம், கரந்துறை பாட்டு, தேர் வெண்பா, மாத்திரைச் சருக்கம், மாத்திரை வருத்தனம் போன்ற சிறந்த கவிகள் பல பாடியுள்ளார்.

ஆழ்வார் பிள்ளை கிறித்தவ இலக்கியத்திற்குச் செய்த பணியைப் பாராட்டி யாழ்ப்பாணக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம் இவருக்கு முத்தமிழ்ப் புலவர் என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. இவர் 1968ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் நாள் தமது 77 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர் இறந்து 13 ஆண்டுகளுக்குப் பின்னர், 1981ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவையின் முதல் மாநாட்டில் இவருடைய கிறித்தவ இலக்கியப் பணிகளைப் பாராட்டி தமிழ் மாமணி என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

படைப்புகள்

ஆழ்வார் பிள்ளையின் படைப்புகள் பல்திறத்தன. அவற்றுள் சத்தியவேத அம்மானை, நசரேயப் பாமாலை, நசரேயப் பத்து, நசரேய இரட்டை மணிமாலை, நசரேய மும்மணிக் கோவை, நசரேய புராணம், நசரேய அந்தாதி, நசரேய நெஞ்சுவிடு தூது, சுவிசேஷக் கும்மி, கிறித்தவ பஞ்சாமிர்தம், கிறித்தவ அருட்பாக்கள் ஆகிய கிறித்தவம் தொடர்பான நூல்கள் குறிப்பிடத்தக்கன. இஸ்லாம் மதத்தை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய நீதிநெறி, இஸ்லாமிய கதாமாலை, இஸ்லாமிய வினா விடை, நாயக புராணம் என்னும் நூல்களைப் படைத்துள்ளார். சுகாதாரத்தை மையமாக வைத்து உணவும் குணமும் என்னும் நூலை எழுதியுள்ளார். மேலும் தமிழ் மொழி மூலம் சிங்கள மொழியைக் கற்றுக் கொள்வதற்காக சிங்கள ஆசான் என்னும் நூலை எழுதினார். இந்நூல் மக்களிடம் அதிக வரவேற்பைப் பெற்றதால் பல பதிப்புகளைக் கண்டது. இவருடைய கவிதைகள் தேசத் தொண்டன், உதய தாரகை, கிறித்தவ தீபிகை, சத்திய வேத பாதுகாவலன் போன்ற இதழ்களில் வெளிவந்துள்ளன. சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு சாடிக்கு மூடி, காலத்தின் கோலம், உலகம் பலவிதம், கால பேதம், உய்புந்தி, கலிகால மாயம் போன்ற சுமார் அறுபது நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். தமது கிறித்தவ இலக்கியப் பணி குறித்து எழுதிய பாடல் பின்வருமாறு:

> **நாவினாலுனது நாமம் நவற்றிட வைத்தாய் போற்றி**
> **பாவினாலுனைத் துதிக்கப் பக்குவமளித்தாய் போற்றி**
> **ஆவியின் வரப்ரசாத மளித்தெனை வழிநடத்திச்**
> **சாவிலும் துதிக்க வைப்பாய் தற்பரா போற்றி போற்றி**

கீர்த்தனைகள்

கிறித்தவ நூல்கள் எழுதியது மட்டுமன்றி ஆலய வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் கிறித்தவக் கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளது பாராட்டிற்குரியது. யாழ்ப்பாணத்துத் திருச்சபைப் பாட்டுப் புத்தகத்தில் இவரது இரண்டு கீர்த்தனைகள் இடம் பெற்றுள்ளன. அவை,

1. **கண்டேனுன தன்புக்கொரு கரையோ எங்குமிலையே**
2. **நம்பினரை யன்றுமின்றுங் கை விடாத**

என்பனவாகும். சான்றாக முதல் பாடல் பின்வருமாறு:

பண் - இந்தளம்

1\. கண்டேனுன தன்புக்கொரு கரையோ எங்குமிலையே
உண்டேனதை ருசித்தேனுனை யுணரா ருணர்ந்துய்ய
விண்டேன்புகழ்ப் பாமாலையில் வெல்லையதின் விளக்கே
தொண்டேபுரிந் திடுவேனெனைச் சூழ்ந்துதினம் பேணே!

2\. அன்பாலெனை யாட்கொண்டர வணைத்தா யதனாலே
நின்பாலடைந் தடியேன்பவ நெறியாலெனை விலக்கி
முன்பாயிருந் தழுதே திரு முகநோக்கிக்கை தொழுதேன்
என்பாலென திதயத்திருந் தெந்தாயென்றும் பேணே!

3\. தேவேஉனைத் தியானஞ் செய்தல் சிந்தைக்குப்பே ரமிர்தம்
நாவாலுனைப் போற்றல்முழு நாளுக்குமா காரம்
பாவாற்புகழ்ந் திடுதல்பெரும் பரமானந்த வெள்ளம்
வாவாவென எனைத்தூக்கியுன் மடிமேல் வைத்துப்பேணே!

நசரேய புராணம்

நசரேயராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை விவரிப்பதால் இந்நூலிற்கு நசரேய புராணம் எனப் பெயரிட்டு உள்ளார். எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை தம்முடைய படைப்புகளுக்கு இரட்சணிய என்னும் சொல்லைப் பயன்படுத்தியதைப் போன்று, ஆழ்வார் பிள்ளை தம்முடைய பெரும்பாலான படைப்புகளுக்கு நசரேய என்னும் சொல்லைப் பயன்படுத்தி யுள்ளார்.

பகுப்பு முறை

நசரேய புராணத்தில் காண்டம் என்னும் பகுப்பு முறை இல்லை. இக்காப்பியம் இருபத்தி ஐந்து படலங்களாக அமைந்துள்ளது. அவை சிருஷ்டிப்புப் படலம், பூங்காவனப் படலம், வேதாளன் சதிப் படலம், இரட்சணிய வாக்குப் படலம், திரித்துவ ஆலோசனைப் படலம், திருஅவதாரப் படலம், நாசரேத்துப் படலம், ஞனதீட்சைப் படலம், உபவாசப் படலம், அற்புதப் படலம், ஆலய சுத்திகரிப்புப் படலம், திருவிருந்துப் படலம், பிடிபட்ட படலம், விசாரணைப் படலம், கேவலா வதைப் படலம், கல்வாரிப் படலம், உயிர்த்தெழுந்த படலம், தரிசனப் படலம், ஆரோகணப் படலம், ஆவி இறங்கு படலம், அப்போஸ்தல ஊழியப் படலம், துன்புறுத்து படலம், திருச்சபைப் படலம் என்பனவாகும்.

யாப்பு

இக்காப்பியத்தின் பாடல்கள் அறுசீர் ஆசிரிய விருத்தம், எண்சீராசிரிய விருத்தம், நிலைமண்டில ஆசிரியப்பா, கலித் துறை, கட்டளைக் கலிப்பா, கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் என்னும் யாப்பிலக்கண அமைப்பில் இயற்றப்பட்டுள்ளன.

முழுமையான படைப்பு

கிறித்தவக் காப்பியங்களுள் பெரும்பாலானவை விவிலியத்திலுள்ள புதிய ஏற்பாட்டை ஆதாரமாகக் கொண்டே படைக்கப்படுகின்றன. அதாவது, நற்செய்தி நூல்களான மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நூல்களில் உள்ள செய்திகள் மட்டுமே ஆதாரம். ஆனால் நசரேய புராணம் விவிலியத்தின் முதல் நூலான ஆதியாகமம் தொடங்கி அப்போஸ்தல நடபடிகள் வரையுள்ள செய்திகளைச் சுருக்கமாகத் தருவதாக இக்காப்பியம் அமைந்துள்ளது. எனவே இக்காப்பியத்தை விவிலியத்தின் பிழிவு எனக் கூறுவது மிகப் பொருத்தமாக இருக்கும்.

கற்பனை நயம்

ஆழ்வார்பிள்ளை இரண்டாவது படலமான பூங்காவனப் படலத்தில் பாடல்களைக் கற்பனை நயத்துடன் படைத்துள்ளார். ஏதேன் தோட்டத்தின் தன்மையை மிக அழகான கற்பனை நயத்துடன் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்:

> **யானையு மடிக்கவில்லை யெறும்புமோ கடிக்கவில்லைப்**
> **பூனையு முறுமவில்லைப் புலியுமோ பிடிக்கவில்லை**
> **யானையோ டெறும்பு பூனை யிடர்ப்புலி யாவுஞ்சேர்ந்து**
> **சேனையாய்ப் பூங்காதன்னிற் சேவித்து நின்றவம்மா** (ப.37)

இப்பாடலில் யானைகள் எதையும் அடிக்கவில்லை; எறும்புகள் எதனையும் கடிக்கவில்லை; பூனைகள் பகை கொண்டு உறுமவில்லை; புலிகள் பாய்ந்து எதையும் பிடிக்கவில்லை; யானை, எறும்பு, பூனை, புலி என்னும் அனைத்தும் அப்பூங்காவில் ஒன்றாகத் திரண்டு நின்று வணங்கி நின்றன என்கிறார். எல்லாவிதமான ஜீவ ராசிகளும் அங்கு கூடி வாழ்ந்ததைக் கற்பனை நயத்துடன் தருகிற தன்மை சிறப்பாக உள்ளது.

பட்டினத்தார் பாடலின் தாக்கம்

ஆழ்வார் பிள்ளை தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை உடையவர். இவருடைய நூலில் பட்டினத்தார் பாடலின் தாக்கத்தைக் காணமுடிகிறது. சான்றாக,

அத்தியே முதலெறும்பீறா கியவனைத் தினுக்கும்
நத்தியே வேறுவேறாய் நாமங்கள் சூட்டியாங்கு
சித்தியா யெல்லாங் கண்டு சிந்தையி லுவகை பூத்தே
யுத்தியா யேழாநாளி லோய்ந்திருந்திட் டானென்ப **(ப.36)**

என்னும் சிருஷ்டிப்புப் படலத்திலுள்ள பாடலில் பட்டினத்தாரின்,

அத்திமுதல் எறும்பீ றானவுயிர் அத்தனைக்கும்
சித்தமகிழ்ந் தளிக்கும் தேசிகா! - மெத்தப்
பசிக்குதையா! பாவியேன் பாழ்வயிற்றைப்பற்றி
இசிக்குதையா! காரோணரே
(சித்தர் பாடல்கள், திருப்பாடல்கள் திரட்டு, ப.74)

என்னும் பாடலின் தாக்கம் அமைந்திருப்பது கண்கூடு.

வட்டாரவழக்குச் சொற்கள்

காப்பிய ஆசிரியர்கள் தங்களது படைப்புகளில் பேச்சுமொழிச் சொற்களையும் பயன்படுத்துவது வழக்கம். கிறிஸ்தாயனம் என்னும் கிறித்தவக் காப்பியத்தில் அதன் ஆசிரியரான ஜான் பால்மர் சில பேச்சுமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். இதைப்போன்று ஆழ்வார் பிள்ளையும் சில சொற்களைக் கையாண்டுள்ளார். சான்றாக சோலி (பக்.56), யாவாரம் (பக்.62), லேஞ்சி (பக்.69) என்பவற்றைக் குறிப்பிடலாம். பேச்சுமொழியில் வேலை என்பதை சோலி எனவும், வியாபாரத்தை யாவாரம் என்றும், கைக்குட்டையை லேஞ்சி எனவும் பயன்படுத்துவது வழக்கம்.

உவமைகள்

நசரேய புராணத்தில் ஆசிரியர் பல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வுவமைகள், சொல்லும் கருத்துகளை நுட்பமாக விளக்கும் வகையில் உள்ளன. சான்றாக,

1. சர்க்கரையின் பந்தரதிற் றேனின் மாரித்
   தாரையது பொழிந்ததென (ப.53)

2. கன்றுகளோ டிருக்குங் கறவைபோல் (ப.53)
3. மரத்தினைக் கனிகொண் டறிவதுபோன்று (ப. 59)
4. இருதலைக் கொள்ளியுற்ற எறும்பென (ப.67)
5. பெரியதோர் காட்டுத்தீபோல் (ப.69)
6. செக்கினை இழுக்கும்மாடு செயலற்று நிற்பபோல் (ப.69)
7. பொல்லாத வேட்டை நாய்கள் போல் (ப. 71)
8. வட்டில் லாத மரமதைப் போல (ப.75)
9. கட்டில் லாத கலத்தினைப் போல (ப.75)
10. துறையைத் தப்பிய தோணியைப் போல (ப.75)
11. கள்வனைப் பிடித்துக் காவல் வைப்பதுபோல் (ப.86)

என்னும் உவமைகளைக் குறிப்பிடலாம்.

பழமொழி

இரட்சணிய வாக்குப் படலத்திலுள்ள ஒரு பாடலில் மக்களிடம் அதிகமாக வழக்கிலுள்ள பழமொழியைப் பயன்படுத்தியுள்ளார். அப்பழமொழி இடம் பெற்றுள்ள பாடல் பின்வருமாறு:

> **பெற்றமனம் பித்தெனவும் பிள்ளைமனங் கல்லெனவும் பேசுமாப்போன்**
> **அற்றசலாக்கி யத்தினரைத் துரத்துண்டு வீணிலழியாத வண்ணம்**
> **முற்றமுடியக் காத்துப் பவந்துடைத்து மோட்சகதி முகிக்கவாங்கே**
> **யுற்றபெருந் திட்டமொன்றைப் பரமேசன் வகுத்திட்டா னுறுதிகொண்டே**
> **(ப.41)**

பல்வேறு பெயர்கள்

இயேசு பெருமானை வேதநாயக சாஸ்திரியார் பல்வேறு பெயர்களில் குறிப்பிடுவார். அதே போன்று ஆழ்வார் பிள்ளையும் தமது காப்பியத்தில் இயேசு பெருமானை குருமூர்த்தி (ப.50), திருவாசகப் பெருமான் (ப.56), நாவரசன் (ப.56) என்னும் பல்வேறு பெயர்களால் சுட்டுகிறார்.

பழைய ஏற்பாட்டுச் செய்திகள்

நசரேய புராணத்தின் முதல் ஐந்து படலங்களும் பழைய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டவையாகும். இறைவன் ஆதாமை மண்ணிலிருந்து படைத்ததை,

> பொருந்திய தரையின் மண்ணாற் புத்துருவொன்றைச் செய்து
> திருந்திய வுறுப்பனைத்துஞ் சீர்பெறவமைத்துத் தம்போ
> லரும்பெருஞ் சீவஸ்வாச மதனைநா சினியிலூதி
> வரும்பெரு மகனுக்காதா மெனப்பெயர் வழங்கினானே (ப.35)

எனப் பாடலாக வடிக்கின்றார். ஆதாமும் ஏவாளும் சாத்தானால் வஞ்சிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த நிலையை,

> பஞ்சமு மறியார் பொல்லாப் பட்டினியறியார் நாட்டு
> வஞ்சக மறியார்சூது வாதுகளறியார் வம்பு
> கொஞ்சமு மறியார்நீசக் கொலைகள வறியாரங்கே
> நெஞ்சகத் தாயராகி நிலவியே யிருந்தாரம்மா (ப.37)

எனப் பாடுகின்றார்.

புதிய ஏற்பாட்டுச் செய்திகள்

நசரேய புராணத்தின் ஆறுமுதல் இருபத்தைந்தாம் படலம் வரையிலுள்ள செய்திகள் புதிய ஏற்பாட்டை ஆதாரமாகக் கொண்டவையாகும். திருஅவதாரப் படலத்திலிருந்து ஆரம்பமாகும் இப்பகுதியில் இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கம் சிறப்பான பாடல்களைக் கொண்டுள்ளது. சான்றாக,

> ஏழையென் றுன்னைக்கிட்டி யிரப்பவர்க் கிலையென்னாதே
> வாழ்வதிற் பொருளேதேனும் வைத்துக்கொண் டிலையெண்ணாதே
> வீழ்வதிற் கடன்கேட்போர்க்கு விழலதில் முகங்கோணாதே
> ஆழிசூழ் புவியையாளு மப்பனின் வசனமீதே (ப.57)

என்னும் பாடலைச் சுட்டலாம். துன்புறுத்துப் படலத்தில் பேதுருவைக் கொலை செய்ததை,

> பேதுருவைப் பொல்லாங்கர் பிடித்து றோமையினிறுத்தித்
> தீதுறத் தலைகீழாகச் சிலுவையி லறைந்து கொன்றார்

ஏதுமே குற்றஞ்செய்யா விவனும் யேசுவுக்காய் ரத்தம்
போதும்போ துமெனச்சிந்திப் புகழுடம் பெய்தினானே (ப.85)

எனப் பாடுகின்றார்.

எதுகை மோனை

எளிமையாக, இரத்தினச் சுருக்கமாகக் கவிதைகளை நயத்துடன் பாடுவதில் வல்லவரான இவரது பாடல்களில் எதுகை, மோனை மிகுதியாக உள்ளன. எதுகை, மோனை என்னும் இலக்கணக் கூறுகள் படலின் சிறப்பிற்கும் ஓசை நயத்திற்கும் துணையாக அமைகின்றன. சான்றாக,

பாவியை மீட்கவந்த பரமசற் குருவாம்யேசு
பாவியைத் தேடியென்றும் பாவியி னுடனேகூடி
பாவியின் வீட்டிலுண்டு பாவிக்குப் புத்திகூறிப்
பாவியைத் திருத்திநின்றார் பாக்கியஞ் சொல்லொணாதே
(ப.53)

என்னும் பாடலைச் சுட்டலாம்.

இலங்கையிலிருந்து வெளிவந்துள்ள காப்பியங்களுள் மிகவும் எளிய முறையில் அமைந்துள்ள காப்பியம் நசரேய புராணமாகும். பழைய, புதிய ஏற்பாட்டுச் செய்திகளைத் தெளிவான முறையில் அமைத்துக் கொடுத்திருக்கும் பாங்கு பாராட்டத்தக்கது.

4. உலக ஜோதி

கிறித்தவக் காப்பியங்களில் தனிச்சிறப்பு பெற்ற காப்பியம் உலகஜோதி ஆகும். உலகத்தின் ஜோதியாக விளங்கும் இயேசு பெருமானின் வரலாற்றை எடுத்தியம்பும் பொருட்டு இக்காப்பியம் படைக்கப்பட்டுள்ளது. உலகஜோதி என்னும் இக்காப்பியம் பழைய ஏற்பாட்டுப் பகுதியைச் சுருக்கமாகவும் புதிய ஏற்பாட்டுப் பகுதியை விரிவாகவும் எடுத்துரைக்கின்றது.

ஆசிரியர் வரலாறு

காப்பிய ஆசிரியர் இறையரசன் அவர்களின் இயற்பெயர் மகாராஜா என்பதாகும். இவர் பேச்சிமுத்து - குருவம்மாள் தம்பதியினருக்கு 1928 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் நாள் தூத்துக்குடியில் பிறந்தார். இவர் பிறப்பால் இந்து சமயத்தைச் சார்ந்தவர். இவர் தமது பத்தாம் வயதில் அன்றைய தூத்துக்குடி ஆயர் மேதகு ரோச் ஆண்டகை அவர்களால் கத்தோலிக்க சபைக்கு மாறினார். 1938ஆம் ஆண்டு கூட்டப்பாடு என்ற பெரியசாமிபுரத்தில் ஜேசுராஜா எனத் தம் பெயரைத் திருமுழுக்கு பெற்று மாற்றிக் கொண்டார்.

1939ஆம் ஆண்டு ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது, தூத்துக்குடி அனாதைகள் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை அடைக்கலாபுரம் அனாதைகள் இல்லத்தில் தங்கிப் படித்தார். வடக்கன் குளத்திலுள்ள சிறுமலர் மடத்தில் தங்கி ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகள் படித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழிலக்கியத்தில் முதுகலைப் பட்டத்தையும், ஆசிரியர் பயிற்சிப் பட்டம் மற்றும் வித்துவான் பட்டத்தையும் பெற்றார்.

1953ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை பல்வேறு இடங்களில் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆர்.சி. நடுநிலைப் பள்ளியில் பத்தாண்டு காலம் தலைமை ஆசிரியராகவும், சாத்தூர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆறாண்டு காலம் தமிழாசிரியராகவும், புனித பிரிட்டோ மேனிலைப் பள்ளியில் ஓராண்டு காலம் தமிழாசிரியராகவும், அமெரிக்கன் கல்லூரியில் பதினெட்டு ஆண்டுகளாகத் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

இறையரசன் அவர்கள் பல நூல்களின் ஆசிரியராவார். இவர் மணிஒலி, தந்தை அருளானந்தர் வெள்ளி விழா, தங்கத் தமிழ் இலக்கணம், எழுத்தும் சொல்லும், அறிஞர் போற்றும் ஆண்டவர், புத்தர், காந்தி, தாகூர், சி.வி. இராமன், இலக்கிய ஆய்வுகள், கருணை காட்டிய காவலர்கள், சிலையாக நிற்கின்ற செந்தமிழ்ச் செல்வர்கள், ஏன் இந்த சிலைகள், கத்தோலிக்கப் பொதுநிலையினரின் கடமைகளும் உரிமைகளும், உலகஜோதி ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது படைப்புகள் கத்தோலிக்க சேவை, நம் வாழ்வு போன்ற சமய இதழ்களில் வெளிவந்துள்ளன.

இறையரசன் 1953ஆம் ஆண்டு அருளம்மாள் என்னும் அம்மையாரைத் திருமணம் புரிந்தார். இத்தம்பதியினருக்கு ஐந்து மகன்களும் ஒரு மகளும் குழந்தைச் செல்வங்களாவர்.

சென்னை உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை இவருக்குக் கிறித்தவ அருட் கவிஞர் என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. இவர் 1991ஆம் ஆண்டு மரபு இலக்கிய வித்தகர் என்னும் விருதினைப் பெற்றார். இவர் கிறித்தவ ஐக்கியப் பேரவை, சிறுபான்மையினர் ஒருங்கிணைப்பு, திருவருட் பேரவை, கத்தோலிக்கச் சங்கம், தமிழக ஆயர் பேரவைக் கூட்டமைப்பு என்னும் அமைப்புகளில் ஆலோசகராக இருந்துள்ளார். மேலும் இந்திய கிறித்தவ ஜனநாயக முன்னணியில் நிறுவனத் தலைவராகவும், கிறித்தவ முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலராகவும் பணியாற்றியுள்ளார்.

கல்விப்பணி, இலக்கியப்பணி, சமுதாயப்பணி என்னும் பலவிதப் பணிகளைச் செய்து வந்த இறையரசன் 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். அவருடைய மறைவிற்குப் பின்னர் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் நாள் உலகஜோதி என்னும் காப்பியம் வெளியிடப்பட்டது.

உலகஜோதி-பெயர்க்காரணம்

உலகஜோதி என்னும் பெயரானது உலகை அறியாமை என்னும் இருளிலிருந்து மீட்க வந்த ஒளி என்னும் பொருளில் இங்கு ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் இயேசு கிறிஸ்துவை உலக ஜோதி என்கிறார். நான் உலகிற்கு ஒளியாக

வந்தேன் என இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். பாயிரத்தில் ஆசிரியர் இயேசு கிறிஸ்துவை உலகஜோதியாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

காந்தியை இந்திய ஜோதி - என்றே
ஏந்தல் பலரும் இயம்பிச் சென்றார்
ஆசிய ஜோதி புத்தர் என்று
தேசிய விநாயக மன்றே சொன்னார்
அலகையை வென்றிவ் வுலகின மீட்ட
ஆண்டவர் ஏசுவோ உலக ஜோதி
மாண்டவன் உயிர்த்தான் மறந்திட வேண்டாம் (பாயிரம்,பா.6)

பாயிரம்

உலகஜோதி என்னும் காப்பியத்தின் பாயிரப் பகுதி இறையடி சரணம், காப்பு, கடவுள் வாழ்த்து, தூய ஆவியிடம் வேண்டல், வாழ்த்து, உலக ஜோதி, பயன், போற்றுதல் பத்து, காரணம், அவையடக்கம் என்னும் பத்துப் பகுதிகளாலானது. பாயிரத்தின் முதல் பாடல் இறையடி சரணம் என்னும் தலைப்பில்,

அன்பால் உலகம் படைத்துக் காக்கிறாய்!
அலகை செய்கிற அநீதி அழிக்கிறாய்!
இறைவா என்பால் இரங்கிக் கிருபை செய்கிறாய்!
இறைவா நின்னடி சரணம் சரணமே! (பாயிரம், பா.1)

என அமைந்துள்ளது.

காப்பிய அமைப்பு

உலகஜோர்தி என்னும் கிறித்தவக் காப்பியம் தந்தை, மகன், பரிசுத்த ஆவியார் என்னும் மூவொரு கடவுளின் நினைவாக அகவாழ்வுக் காண்டம், புறவாழ்வுக் காண்டம், புதுவாழ்வுக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களால் ஆனது. இக்காப்பியம் 33 படலங்களால் பகுக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த 33 ஆண்டுகளின் நினைவாக 33 படலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 1530 ஆகும்.

அகவாழ்வுக் காண்டம்

முதலாவதான அகவாழ்வுக் காண்டம் கடவுள் உலகத்தைப் படைத்தது முதல் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

மற்றும் இயேசு கிறிஸ்துவின் தந்தை சூசையப்பரின் மறைவு வரையிலான செய்திகளை உள்ளடக்கியது. இக்காண்டம் படைப்புப் படலம், பழங்கதைப் படலம், பிறப்புப் படலம், இடையர்காண் படலம், அறிஞர்காண் படலம், எகிப்து சென்ற படலம், குழந்தைகள் கொலைப் படலம், காணிக்கைப் படலம், பிள்ளைப் பருவப் படலம், கர்த்தரைக் கண்டு கொண்ட படலம் என்னும் பதினொரு படலங்களை உடையது.

புறவாழ்வுக் காண்டம்

இரண்டாவதான புறவாழ்வுக் காண்டம் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு முதல் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தது வரையிலான செய்திகளை விவரிக்கின்றது. இக்காண்டமானது விடுதலை வேட்கைப் படலம், திருமுழுக்குப் படலம், திருத்தவப் படலம், தேவ அழைப்புப் படலம், புதுமைப் படலம், போதனைப் படலம், சிறுகதைப் படலம், புரட்சிப் படலம், சாபமிட்ட படலம், சந்திப்புப் படலம், தன்னை வெளிப்படுத்திய படலம், திருவிருந்துப் படலம், இறுதி மன்றாட்டுப் படலம், ஒலிவமலைப் படலம், விசாரணைப் படலம், சித்ரவதைப் படலம், சிலுவைப்பாதைப் படலம், திருப்பலிப் படலம், காட்டிக் கொடுத்தவர் கதிப் படலம் என்னும் 19 படலங்களாலானது.

புதுவாழ்வுக் காண்டம்

மூன்றாவதான புதுவாழ்வுக் காண்டம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முதல் அன்னை மரி விண்ணகம் சென்றது வரையிலான செய்திகளைத் தருகிறது. இக்காண்டம் உயிர்ப்புப் படலம், திருச்சபைப் படலம், இறையரசுப் படலம் என்னும் மூன்று படலங்களைக் கொண்டது.

யாப்பமைப்பு

இறையரசன் இலக்கணப் புலமையும் விவிலியப் புலமையும் உடையவர். இவர் தமது காப்பியமான உலகஜோதியில் நேரிசை வெண்பா, கலிவிருத்தம், ஆசிரிய விருத்தம், அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், பன்னிருசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம், கலிப்பா, ஆசிரியப்பா, நிலை மண்டில

ஆசிரியப்பா போன்ற யாப்பு வகைகளைக் கையாண்டுள்ளார். கவிமணி, கண்ணதாசன் ஆகியோரது நடையைப் பின்பற்றி காப்பியத்தைப் படைத்துள்ளார்.

விவிலியச் செய்திகள்

விவிலியத்தில் ஆதியாகமம் தொடங்கி இறுதி வரையுள்ள நிகழ்வுகளை இறையரசன் காப்பியமாகப் புனைந்துள்ளார். ஆதியாகமத்தின் தொடக்கத்தில் இறைவன் உலகத்தையும் மனிதனையும் படைத்த வரலாறு எடுத்தியம்பப் படுகிறது. இறைவன் ஆதாமையும் ஏவாளையும் படைத்த பின்னர் அவர்களைப் பார்த்து பல அறிவுரைகளைக் கூறினார். "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியில் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதியாகமம் 1: 28) என்னும் வசனத்தையும், "ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதியாகமம் 2: 17) என்னும் வசனத்தையும் அடிப்படையாகக் கொண்டு,

உலகில் உள்ளன யாவையும்
உங்களுக் காகவே படைத்திட்டேன்
பலுகிப் பெருகி வாழுவீர்
பாரை நீங்கள் ஆளுவீர்
ஆனால் ஒன்று சொல்லுவேன்
அப்படி வாழ்ந்தால் உமக்குளே
வானோர் இன்பம் தங்கிடும்
வாரிசு களுக்கும் வந்திடும்.

இன்ப வனத்தின் கனிகளை
எல்லாம் உண்க விருப்புடன்
துன்ப நடுமரம் தருமொரு
துயரக் கனியை விலக்குவீர்
விலக்கப்பட்ட கனியினை
உண்டால் இழப்பீர் அருளினை
அலகை உம்மால் ஆண்டிடும்
அடிமை ஆவீர் உலகுக்கு *(பா.35, 36)*

என்னும் பாடல்களை இயற்றியுள்ளார். புதிய ஏற்பாட்டிலுள்ள

செய்திகள் இக்காப்பியத்தில் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. இயேசு கிறிஸ்துவைச் சாத்தான் மூன்று விதமான முறைகளில் சோதிக்கிறான். அவற்றில் ஒன்று இயேசு கிறிஸ்துவிடம் கற்களை அப்பமாக மாற்றி உண்ணும் எனக் கூறுவதாகும். இச்செய்தி மத்தேயு நான்காம் அதிகாரத்திலும் லூக்கா நான்காம் அதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளது. "அப்பொழுது பிசாசு அவரை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்திரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" (லூக்கா 4: 3,4). இந்நிகழ்வை,

கடவுளின் மகனார் நீரானால்
கற்களை அப்ப மாக்கியுண்ணும்
திடமுடன் அலகை இதுகூற
தேவன் தந்த பதிலிதுதான்

உணவினால் மட்டும் ஒரு மனிதன்
உயிர்வாழ் கின்றான் என்பதில்லை
மனத்துள் இறைவன் பேசுகின்ற
மறைமொழி யாலும் வாழ்கின்றான் (பா.534,535)

எனப் பாடுகிறார். இயேசு கிறிஸ்து மக்களிடம் கருத்துகளை உவமைகள் மூலம் எடுத்தியம்பினார். அவற்றில் ஒன்று தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்னும் கருத்தாகும். அக்கருத்து லூக்கா என்னும் நற்செய்தி நூலில் இடம்பெற்றுள்ளது. "இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசம பாகம் செலுத்தி வருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்

போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" *(லூக்கா 18: 10-14)* என்னும் வசனங்களை,

இருவர் செபிக்க ஆலயம் சென்றனர்
ஒருவன் ஆயக் காரன் மற்றவன்
பரிசே யன்அவன் பீடத் தின்முன்
நின்று கொண்டு நெடுங்குரல் எழுப்பி
எல்லாம் வல்ல இறைவா இங்குள
கள்ளர் கயவர் காமுகர் போல
இல்லை நான்திருச் சட்டம் போற்றி
வாரம் தோறும் இருமுறை நோன்பு
கொள்கின் றேன்நான் கோயில் வரியாய்
கொடுக்கின்றேன் பத்தில் ஒருபா கத்தை
தான தருமம் நிறையச் செய்கிறேன்
எனத்தன் அருமை பெருமை எல்லாம்
எடுத்துச் சொல்லி விளம்பரம் செய்தான்
ஆலயக் கடைசி மூலையில் அமர்ந்த
ஆயக் காரன் அடிமையைப் போல
தலைகவிழ்ந் தவனாய் தன்னடக் கத்துடன்
தந்தாய், நானொரு பாவி என்மேல்
தயவு காட்டும் எனமன் றாடினான்.
இறைமுன் செபித்த இருவருள் அத்தினம்
இறையருள் பெற்றவன் ஆயக் காரனே
என்றார் இறைமகன் ஏசு கிறிஸ்து **(பா. 772)**

என்னும் பாடல் அடிகளாக மாற்றுகிறார். மேற்குறிப்பிட்ட பாடல்கள் விவிலியச் செய்திகளைப் பாடல்களாக மாற்றியுள்ள முறைமைக்குச் சில உதாரணங்களாகும்.

பிள்ளைத்தமிழ்

காப்பியத்தில் சிற்றிலக்கியத்தைப் புகுத்தி புதிய உத்தியைக் கையாண்டுள்ளார். அகவாழ்வுக் காண்டத்திலுள்ள பிள்ளைப் பருவப் படலமானது இயேசு கிறிஸ்து குழந்தையாக இருந்ததை விவரிக்கும் பகுதியாக உள்ளது. குழந்தையைப் பாடும் ஆசிரியர் இப்பகுதியைப் பிள்ளைத்தமிழாகவே பாடுகிறார். இப்படலத்திலுள்ள பத்துப் பாடல்களும் காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம்,

சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம், பெருந்தேர் பருவம் என்னும் தலைப்புகளில் அமைந்துள்ளன. சிற்றிலக்கியங்களில் காணலாகும் சிறுதேர் பருவத்தைப் பெருந்தேர் பருவம் என மாற்றியமைத்துள்ளார். இவர் திருச்சபையைப் பெருந்தேர் எனக் குறிப்பிடுகிறார். சிறுதேர் பருவத்தைப் பெருந்தேர் பருவம் என்பதும், காப்பியத்திற்குள் சிற்றிலக்கியம் அமையும்படிப் பாடுவதும் புதுமையாக உள்ளது. சான்றாக,

> மாதா மடியில் மனமகிழ்வாய்
> மனிதரை மீட்க மனுவுருவாய்
> மறைகட் கெட்டா மறைபொருளாய்
> மங்கல ஒலியாய்ப் பேரொளியாய்த்
> தாதை சூசை கரங்களிலே
> தவழும் தங்கப் பாலகனாய்த்
> தாமி தரசர் குலக்கொழுந்தாய்த்
> தாழ்த்தப் பட்டோர் விடிவிளக்காய்
> நீதான் வந்து பிறந்தனையோ
> நிர்மல தேவா தாலேலோ
> நீசர் செய்யும் பவங்கண்டு
> நீயழு தாயோ தாலேலோ
> வேதப் பொருளே தாலேலோ
> விண்ணக அரசே தாலேலோ
> வேண்டும் மக்கள் குறைதீர்க்கும்
> விமலா அமலா தாலேலோ (பா.3)

என்னும் பிள்ளைப் பருவப் பாடலைச் சுட்டலாம்.

பரணி இலக்கியப் பின்புலம்

பரணி இலக்கியத்தின் தன்மையையும் உலகஜோதி காப்பியத்தில் சில இடங்களில் காண முடிகிறது. இரண்டு வயதுக்கு உட்பட்ட ஆண் குழந்தைகள் அனைத்தையும் கொலை செய்துவிட அரசன் ஏரோது ஆணைப் பிறப்பித்தான். அரசனின் கட்டளையை ஏற்ற போர் வீரர்கள் குழந்தைகளை வெட்டி சாய்க்கின்றனர். குழந்தைகள் பிணமாகக் கிடப்பதை,

> ஓடிடும் குருதி ஆற்றில்
> ஓடின சிலபேர் தலைகள்
> வாடிடும் தாயின் பக்கம்
> வந்தன சிலபேர் தலைகள்

பனைமரக் காய்போல் தலைகள்
பலாச்சுளை போல மூளை
நனைந்தன ரத்தச் சேற்றில்
நஞ்சினன் நயவஞ் சகத்தால்

கொதித்திடும் குழம்பில் வீழ்ந்த
குறையுடல் மீனைப் போலக்
குதித்தன குழந்தை உடல்கள்
குருதியாம் குளத்தில் அன்று (பா.347-349)

என ஆசிரியர் கவிதை நயத்தில் பாடியிருப்பது கலிங்கத்துப் பரணியின் போர்க்களக் காட்சிகளை நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

உழைப்பின் மேன்மை

இறையரசன் தமது காப்பியத்தில் சமுதாயச் சிந்தனைகளையும் எடுத்துரைத்துள்ளார். இயேசு கிறிஸ்துவின் தந்தையார் யோசேப்பு உழைப்பாளி என்பதைக் குறிப்பிடும் போது உழைப்பின் மேன்மையை,

உழைக்காமல் உண்டுகொழுத் திருக்கும்
உலுத்தர்கள் எத்தனைபேர் உலகில்
பிழைக்கின்றார் பிறர்குருதிப் பணத்தில்
பேயாட்டம் போடுகிறார் நாட்டில்
அழைக்காத விருந்தாளி போல
அவராக வந்திடுவார் நம்முன்
உழைப்பாளர் தலைவரெனச் சொல்வார்
உண்மையில்லை ஏமாற்று வேலை (பா.182)

எனப்பாடுகிறார். மேலும் செய்யும் தொழிலே தெய்வம் என்பதை,

எத்தொழிலே யானாலும் செய்க
இழிவான தொழிலேதும் இல்லை
அத்தொழிலில் ஆண்டவனைக் கண்டால்
அருளொடு பொருள்வந்து சேரும்
இத்தகைய கோட்பாடு கொண்டார்
ஏற்றமிகு தொழிலாளி ஆனார்
இத்தரையில் மனிதனென வந்த
இறைமகனின் தந்தை எனும்சூசை (பா.186)

என்னும் பாடலில் வலியுறுத்துகிறார்.

அறிவுரைக் கருத்துகள்

காப்பியங்களில் அறிவுரைக் கருத்துகளை ஆசிரியர்கள் கவிக்கூற்றின் வாயிலாகக் கூறுவர். இக்கவிக்கூற்று பெரும்பாலானக் கிறித்தவக் காப்பியங்களில் இல்லை எனத் துணியலாம். உலகஜோதி காப்பியத்தின் ஆசிரியர் கவிக்கூற்று என்னும் தலைப்பின்றி கதையோட்டத்துடன் பல இடங்களில் மக்களுக்கு அறிவுரையாகப் பல கருத்துகளை எடுத்தியம்புகிறார். சான்றாக,

பதவி ஆசை பண்பழிக்கும்
பணத்தில் ஆசை பாழ்படுத்தும்
மதுவில் ஆசை மதிகெடுத்து
மனைவி மக்களைச் சீரழிக்கும்
உடலே தீமைக் கிருப்பிடமாம்
உணர்ச்சி களுக்கு விளைநிலமாம்
உடலை வருத்திச் சீர்செய்தால்
உண்மை மனிதன் புலப்படுவான் **(பா.530)**

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் ஒருமனிதனுக்கு பதவி ஆசை பிடித்தால் அது அவனது பண்பை முற்றிலுமாக அழித்துவிடும்; பணத்தின் மீது ஆசை கொண்டால் அது அவனைப் பாழாக்கிவிடும்; மதுவில் மயங்கினால் அது அவனது குடும்பத்தையே சீரழிக்கும். ஆதலால் எல்லாவிதமான தீமைகளுக்கும் உடல் இருப்பிடமாகவும் உணர்ச்சிகளுக்கு விளைநிலமாகவும் உள்ளது. ஒரு மனிதன் உடலை வருத்தி உழைக்கும் போது, உண்மையான மனிதன் அதில் தெரிவான் என அறிவுரை கூறுகிறார். இதைப்போன்று,

உலகை வெல்ல வேண்டுமெனில்
உன்னை முதலில் வென்று விடு
அலகை வலிமை உன்முன்னே
ஆதவன் கண்ட பனியாகும்
மெய்வாய் கண்செவி மூக்கென்னும்
மேவிய ஐம்புலன் அடக்கிதவம்
செய்வாய் ஆயின் நீநினைத்த
செயல்கள் யாவும் சித்திபெறும் **(பா.531)**

என்னும் பாடலில் ஒருவன் உலகை வெல்ல வேண்டும் என்றால் அவன் முதலில் தன்னை வெற்றிபெற வேண்டும்; அதாவது தன் ஐம்புலன்களையும் அடக்கியாள வேண்டும்; அப்போது

சூரியனைக் கண்ட பனியைப் போன்று அனைத்துத் தீமைகளும் அகன்றுவிடும்; நினைத்த செயல்கள் யாவும் நிறைவுறும் எனக் குறிப்பிடுகிறார்.

திருவாசகத் தாக்கம்

இறையரசன் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். எனவே தமிழ் இலக்கியங்களில் ஆழங்கால் பட்டவராக விளங்கினார். இவரது பன்னூல் புலமையினை உலக ஜோதி காப்பியத்தில் காணமுடிகிறது. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இறைவனை,

> **வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி**
> **யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்**
> **கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு**
> **வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே!**
> **(திருச்சதகம், பா.15)**

எனப்பாடுகிறார். இதை ஆதாரமாகக் கொண்டு காப்பியத்தின் பாயிரத்திலுள்ள கடவுள் வாழ்த்துப் பகுதியில்,

> **வானானான் ஒளியானான்**
> **வானிறைவன் மகனானான்**
> **கோனானான் குடியானான்**
> **குருவானான் பசியானான்**
> **ஊனானான் உயிரானான்**
> **உயிரனைத்தும் மீட்டுயிர்த்து**
> **வானானான் திருநாமம்**
> **வாணாளெலாம் வாழ்த்துவனே (பாயிரம், பா.3)**

எனப்பாடுகிறார்.

சிலப்பதிகாரத் தாக்கம்

சிலப்பதிகாரத்தின் முதல் காதையான மங்கல வாழ்த்துப் பாடலில்,

> **திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதும்**
> **கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன் றிவ்**
> **வங்கண் உலகளித்த லான்.**

> **ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
> **காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு**
> **மேரு வலந்திரித லான்.**

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேல்நின்று தான் சுரத்த லான்

(மங்கல வாழ்த்துப் பாடல், அடி.1-9)

என இளங்கோவடிகள் பாடுகிறார். இளங்கோவடிகள் திங்கள், ஞாயிறு, மாமழை என்னும் இயற்கையின் மூன்று அம்சங்களைப் போற்றிப் புகழ்ந்து நூலைத் தொடங்குகிறார். அதே போன்று இறையரசன் பாயிரப் பகுதியில் போற்றுதல் பத்து என்னும் தலைப்பில் போற்றுகின்றார்.

இறைவனைப் போற்றுதும் இறைவனைப் போற்றுதும்
குறையுடை மனிதரை நிறைவுறச் செய்வதால்

மனிதனைப் போற்றுதும் மனிதனைப் போற்றுதும்
மனிதனாய் மாபரன் மண்ணில் பிறந்ததால்

சிலுவையைப் போற்றுதும் சிலுவையைப் போற்றுதும்
சிலுவையே ஏசுவின் சின்னமா யிருப்பதால்

தாய்மரி போற்றுதும் தாய்மரி போற்றுதும்
தாய்மரி இறைவனைத் தாங்கி வளர்த்தலால் (பாயிரம், பா.8)

என்னும் இப்பாடலில் இறைவன், மனிதன், சிலுவை, தாய்மரி, புனிதர், ஆயர், குருக்கள், கன்னியர், பெண்ணினம், அன்பு என்னும் பத்து பொருளில் போற்றுகின்றார்.

ஆசிய ஜோதியின் தாக்கம்

கவிமணியின் ஆசிய ஜோதி நூலின் தாக்கம் உலக ஜோதியில் அதிகமாக உள்ளது. உதாரணமாக ஆசிய ஜோதியிலுள்ள புத்தரும் ஏழைச் சிறுவனும் என்னும் பகுதியும் உலக ஜோதியிலுள்ள புரட்சிப் படலத்திலுள்ள தாழ்த்தப்பட்ட பெண்ணுடன் உரையாடினார் என்னும் பகுதியும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. புத்தரும் ஏழைச் சிறுவனும் என்னும் பகுதியில் அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர், வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடையச்சிறுவன், தான் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவனானதால் பால் கறந்து புத்தருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நிலத்திற் கிடந்த ஐயன் - மெல்ல
நிமிர்ந்து தலை தூக்கிக்
"கலத்தினி லேகொஞ்சம் - பாலைக்
கறந்து தருவாய்" என்றான்

"ஐயையோ ஆகாது" என்றான் - சிறுவன்
"அண்ணலே! யானும் உனைக்
கையினால் தீண்டவொண்ணா - இடையன்ஓர்
காட்டு மனிதன்" என்றான்

(புத்தரும் ஏழைச் சிறுவனும், பா.10)

என்னும் பகுதியைப் போன்று இறையரசன் சமாரியப் பெண்ணிடம் இயேசு கிறிஸ்து உரையாடியதைத் தம் உலகஜோதியில் கொணர்கிறார்.

எமக்கும் யூத மக்களுக்கும்
ஏற்றத் தாழ்வு மிகஅதிகம்
உமக்குத் தண்ணீர் நான்தந்தால்
ஊரார் என்னை ஒதுக்கிடுவர் (பா.869)

என சமாரியப்பெண் இயேசு கிறிஸ்துவைப் பார்த்துக் கூறினாள். அதற்கு இயேசு கிறிஸ்து அவளைப் பார்த்து,

தீண்டத் தகாத மனிதரெனத்
தேவன் யாரையும் படைக்கவில்லை
ஆண்டவன் மக்கள் அனைவருமே
அவனியில் சரிசமம் அறிந்திடுவாய் (பா.870)

எனக் கூறினார். அதற்கு அவள் இயேசு கிறிஸ்துவைப் பார்த்து,

என்னவோ சாமி நானறியேன்
எங்களை யாருமே மதிப்பதில்லை
பன்னெடுங் கால மாகயிந்தப்
பழக்கம் உள்ளது புவியினிலே (பா.871)

எனக் கூறினாள். இது போன்று பல பகுதிகளைச் சான்றாகச் சுட்டலாம்.

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களின் தாக்கம்

இறையரசன் சித்தர் பாடல்களிலும் அதிக ஈடுபாடு உள்ளவர் என்பதனை அவரது காப்பியத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

நாதர்முடி மேல் இருக்கும் நாகப் பாம்மே!
நச்சுப் பையை வைத்திருக்கும் நல்லபாம்பே!
பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே!
பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே!

வளைபுகும் போதேதலை வாங்கும் பாம்பே!
மண்டல மிட்டுடல் வளை வண்ணப் பாம்பே!
தளைக்கஞ்சி நின்றிடும் சத்தியப் பாம்பே!
தலையெடுத்தே நீ விளையாடு பாம்பே

மண்டலத்தைத் தாங்குமிக வல்லமை கொண்டாய்!
மாயனுக்குப் படுக்கைக்கு வண்ணப் பாயானாய்!
கண்டபடை நடுங்கிடக் காட்சியும் பெற்றாய்;
கண்ணே செவியாகக் கொண்டாய் ஆடுபாம்பே!
(பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள், பா. 20, 21, 24)

என்னும் பாடல் பகுதி பாம்பாட்டிச் சித்தரால் பாடப் பட்டுள்ளது. இப்பாடல்களை மனதில் கொண்டு,

ஓடு பாம்பே - உடன் ஓடு பாம்பே
உலகத்தை விட்டுவிரைந் தோடு பாம்பே!

நச்சுமர மேலிருந்த நாகப் பாம்பே - உன்
நாசவேலை போதுமடா மோகப் பாம்பே
எச்சரிக்கை .....ஒடிடுக எச்சிப் பாம்பே - உன்
எரிநரகு சென்றுவிடு ஏழ்மைப்பாம்பே!

ஏவாளை வஞ்சித்த ஆசைப் பாம்பே - எம்மை
ஏமாற்ற விடமாட்டோம் மோசப் பாம்பே!
சாவாத இறைமக்கள் நாங்கள்பாம்பே - உன்னைச்
சவக்குழியில் தள்ளிடுவோம் ஓடுபாம்பே! (பா.63-65)

என்னும் பாடல்களைப் பாடியுள்ளார். பழங்கதைப் படலம் என்னும் இரண்டாம் படலத்தில் சாத்தானை விரட்டல் என்னும் பகுதியில் ஆசிரியர் எட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். மனிதன் பாவமில்லாதவனாகத்தான் படைக்கப்பட்டான். அவனுக்குப் பாவத்தைக் கொண்டு வந்தது பாம்பு வடிவில் இருந்த சாத்தான். மனிதனிடம் காணலாகும் தகாத பண்புகள் அனைத்தையும் பாம்புகளாக உருவகப்படுத்துகிறார். மோகப் பாம்பு, எச்சிப் பாம்பு, ஏழ்மைப் பாம்பு, ஆசைப் பாம்பு, மோசப் பாம்பு, வேசப் பாம்பு, மூதிப் பாம்பு, கொடிய பாம்பு, நாசப் பாம்பு, வலிமைப் பாம்பு, மோகினிப் பாம்பு, பொறாமைப்

பாம்பு, மூர்க்கப் பாம்பு, கட்சிப் பாம்பு, சூழ்ச்சிப் பாம்பு என இத்தனை விஷமிப் பாம்புகள் மனிதனிடம் காணப்படுகின்றன எனப் பட்டியலிடுகிறார். ஏவாள் ஏதேன் தோட்டத்தில் தனியாயிருந்த போது, சாத்தான் பாம்பு வடிவில் வந்து ஏவாளை ஏமாற்றினான். இச்செய்தியைச் சொல்ல வந்த காப்பியக் கவிஞர், இந்த சமுதாயத்தில் இத்தனை வகைப் பாம்புகளாகிய சாத்தான்கள் உள்ளனர் எனக் குறிப்பிடுகிறார் என்பது நோக்கத்தக்கது.

திருவருட்பாவின் தாக்கம்

உலகஜோதி காப்பியத்தில் திருவருட்பாவிலுள்ள பாடல்களின் தாக்கம் அதிகமாகவே உள்ளது. காப்பிய ஆசிரியர் இறையரசன் திருவருட்பாவில் புலமை உடையவர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. திருவருட்பாவில் வள்ளலார் பயன்படுத்தியுள்ள பாங்கியர்க்கு அறிவுறுத்தல் என்னும் தலைப்பையே இறையரசனும் உலக ஜோதியில் பயன்படுத்தியுள்ளார். அதுபோன்று இப்பகுதியிலுள்ள பாடல்கள் கண்ணிகள் என்னும் வகையில் உள்ளன. அதையே இறையரசனும் பின்பற்றியுள்ளார். சான்றாக,

அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமா ரே!-அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமாரே!

ஆடுகின்ற சேவடிமேற் பாங்கிமா ரே-மிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமாரே!

இன்படி வாய்ச்சபையிற் பாங்கிமா ரே-நடம்
இட்டவர்மே லிட்டம் வைத்தேன் பாங்கிமாரே!

ஈனவுடற் கிச்சைவையேன் பாங்கிமா ரே-நட
னேசர்தமை எய்தும் வண்ணம் பாங்கிமாரே!

(திருவருட்பா,தொகுதி.7, ஐந்தாம்
திருமுறை, பா.2820-2823)

என திருவருட்பாவில் காணப்படுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டே,

உலகிலேயே நாகரிகம் பாங்கிமாரே-முதலில்
உதித்ததுவாம் திராவிடத்தில் பாங்கிமாரே.

எண்ணங்களை வளர்ப்பதற்குப் பாங்கிமாரே-இங்குச்
சிறப்புறவே அமைந்துள்ளன பாங்கிமாரே.

சிற்பங்களும் சித்திரமும் பாங்கிமாரே-இங்குச்
சிறப்புறவே அமைந்துள்ளன பாங்கிமாரே.

உலகில் அதிசயங்கள் ஒன்பதுண்டு பாங்கிமாரே-அந்த
ஒன்பதிலே பிரமிடொன்று பாங்கிமாரே (பா.325-328)

எனப் பாடியுள்ளார். இப்பகுதியில் ஆசிரியர் பாங்கியர்களுக்கு உரைப்பது போன்று உலகியல் தொடர்பான பல செய்திகளைக் கூறுகிறார். இதைப்போன்று ஜோதி என்னும் சொல்லை வள்ளலார் அதிகமானப் பாடல்களில் கையாண்டுள்ளதைப் போன்று இறையரசனும் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

உரைமனம் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரைசுசெய் தோங்கும் அருட்பெருஞ் ஜோதி
ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ் ஜோதி
எல்லையில் பிறப்பெனும் எழுகடல் கடத்தி என்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி
ஏறா நிலைமிசை ஏற்றிஎன் தனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி
(ஆறாம் திருமுறை, அடி.11-18)

என்னும் பாடலில் ஜோதி என்னும் சொல்லை வள்ளலார் கையாண்டுள்ளார். இதைப் போன்று,

உலகஜோதி உலகஜோதி
உலகை மீட்ட உன்னத ஜோதி
ஆதாமும் ஏவாளும் அன்புடன் பழகிய
ஆதி பிதாவுடன் ஒன்றிய ஜோதி
எந்த முனிவரும் இம்மையில் காணா
இறைவனாம் ஜோதி ஏழையின் ஜோதி
முட்செடிப் புதரில் மோசே கண்ட
கர்த்தராம் ஜோதி கருணையாம் ஜோதி (பா.1520)

என இறையரசன் தமது உலகஜோதி காப்பியத்தில் ஜோதி என்னும் சொல்லைக் கையாண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உவமைகள்

உலகஜோதி காப்பியத்தில் ஆசிரியரால் உவமைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சான்றாக,

1. பனங்காய் சீவுதல் போலந்தப் பாவியின் தலையைக் கொய்திட்டார் (ப. 24)
2. சேற்றில் பூத்த செந்தா மரைபோல் (ப. 29)
3. வையெல்லாம் வாழவைக்கும் வள்ளல்போல (ப.30)
4. வறுமையைப் போக்குதற்கு வான்மழை தோன்றுமாப் போல் (ப.41)
5. கையில் யாதுமில்லையாயினும் தலைதான் கொடுத்த குமணன் போல (ப. 62)
6. அறிவு தரும் ஆசான் போல (ப.80)
7. ஆதவன் முன்னே மதிபோல (ப. 100)
8. கன்றைப் பிரிந்த கனிற்றா போல (ப. 120)
9. நல்லாயன் பின் செம்மறி போல (ப.122)
10. வண்டி மாட்டின் கழுத்திலே வாய்த்த புண்ணைப் போலவே (ப. 242)
11. வந்தாரை வரவேற்று விருந்தோம்பும் தமிழரைப் போல் (ப. 276)

என்னும் உவமைகளைக் குறிப்பிடலாம். உலகஜோதி காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகள் எளிமையானவைகள். ஒரே பாடலில் பல உவமைகளைப் பயன்படுத்தி கருத்தினை விளக்குகின்றார். சான்றாக, யோர்தான் நதியில் தண்ணீர் ஓடுவதைப் பற்றிக் கூறுவதைக் குறிப்பிடலாம். அறிவியல் உண்மையின் அடிப்படையில், யோர்தான் நதியிலுள்ள தண்ணீர் வெப்பத்தினால் ஆவியாக மாறி பின்னர் மேகமாகக் கருக்கொண்டு, மீண்டும் யோர்தான் ஆற்றில் மழையாகப் பொழிகிறது என்னும் செய்தியைக் கூறுவதில் பல உவமைகளைக் கையாளுகிறார். அப்பாடல் பின்வருமாறு:

ஆதவன் வெம்மை தாங்கும்
ஆற்றலே யின்றித் தண்ணீர்
காதலர் கனவு போல
கலந்துமேல் சென்று பரவி
யாதவர் பசுக்கூட் டம்போல்
ஒருங்கிணைந் திறுகித் தீய
காதலர் உள்ளம் போலக்
கறுத்தது மேக மாக **(பா.469)**

இப்பாடலில் மேகம் உருவாவதின் இருவேறு நிலைகளுக்கும் இருவேறு காதலர்களின் உள்ளத்தை உவமையாகக் கூறும் நயம்

பாராட்டத்தக்கது. இறையரசனின் உவமைகளின் மூலம் கருத்துகளை விவரிக்கும் ஆற்றலுக்கு மேலும் ஓர் உதாரணத்தை எடுத்துரைக்கலாம். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிப்பிடும்போது அனைவரும் வியக்கத்தக்க உவமையைக் கையாளுகிறார்.

புழுவாய்க் கூட்டுக்குள் புதைந்து கிடந்துவிட்டு
பூச்சிப் பறப்பதைப்போல் - பட்டுப்
பூச்சிப் பறப்பதைப்போல்
கழுவாய் தேடியபின் கர்த்தர் ஒளிவடிவாய்
கல்லறை விட்டெழுந்தார் - பாவக்
கல்லறை விட்டெழுந்தார் **(பா.1274)**

என்னும் பாடலில் கூட்டுக்குள் இருக்கும் புழுவானது பூச்சியாக மாறி வெளியே பறந்து செல்வதைப் போன்று கல்லறைக்குள் சென்ற இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து வெளியே வருகிறார். இதில் புழுவாய்க் கூட்டுக்குள் புதைந்து கிடந்துவிட்டு எனக் குறிப்பிடுகிறார். புழுவை யாரும் புதைப்பதில்லை; அதுவே தன்னைக் கூட்டுக்குள் புதைத்துக் கொள்கிறது. பின்னர் உருமாற்றம் அடைந்து வெளியே வருகிறது. இதைப்போன்றே இயேசு கிறிஸ்துவை யாரும் புதைக்க முடியாது; அவரே தன்னைப் புதைக்கக் கொடுத்தார். பின்னர் புதிய வளர்ச்சியோடு பரிசுத்த ஆவியாய் உயிர்த்தெழுந்தார். இக்கருத்தை விளக்குவதற்கு சிறந்த உவமையைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார். ஆசிரியரின் கவிதை நயத்திற்கும் இதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

வருணனைகள்

காப்பியத்தில் அதன் இலக்கணப்படி வருணனைகள் அமைய வேண்டும். உலகஜோதி என்னும் கிறித்தவக் காப்பியத்தில் வருணனைகள் குறைவாகவே இடம் பெற்றுள்ளன. பிறப்புப் படலத்தில் பாலஸ்தீன நாட்டின் வளம் வருணிக்கப்படுகிறது. பாலஸ்தீன நாடானது ஓங்கி வளர்ந்த தென்னையிலிருந்து முற்றிய தேங்காய்கள் வீழ்ந்து கிடக்கவும் உயர்ந்த கமுக மரத்தில் குலைகள் தாழ்ந்து கிடக்கவும் தேன் போலும் இனிக்கின்ற பலாக் கனிகள் வெடித்துச் சுளைகள் உதிரவும் தமிழின் இனிமையைப் போன்ற தேன், அதன் அடைகளிலிருந்து வழிந்து ஓட மாமரத்தில் முதிர் கனிகளும்

பழுத்த வாழைக் கனிகளும் வீழ்ந்து தேனாகி ஆறு போல் பெருகி ஓடும் வளம் பொங்கும் நாடாகும்; அங்கே வேங்கைகளும் ஆடு மாடுகளும் கீரி, பாம்புகளும் தம்முள் பகை மறந்து நட்புடனே பழகி நிற்கும் என நாட்டின் வளத்தினை,

ஓங்கிவளர் தென்னைமரப் பழங்கள் வீழ
 ஒன்றியவளர் பாக்குமரக் குலைகள் தாழ
தேங்கனியாம் பலாவுங்கீழ் உதிரத் தமிழின்
 தீஞ்சுவைபோல் அடைத் தேனும் இழிய
மாங்கனிகள் வீழக்கனி வாழை வீழ
 மதுவெல்லாம் ஆறாகப் பெருகி ஓட
வேங்கையோடு ஆடுமாடு கீரி பாம்பு
 விகர்ப்பமற நின்றுமது பருகும் நாடாம் (பா.168)

என்னும் பாடலின் மூலம் கவிதை நயத்துடன் வருணனை செய்கிறார். இயேசு கிறிஸ்துவுக்குத் திருமுழுக்குக் கொடுத்த யோவான் ஸ்நாபகனை,

நறுமணம் கமழும் கூந்தல்
 நயமுடை அஞ்சனக் கண்கள்
உறுவரை சந்தன மேனி
 உடைமட வார்புன லாட
மறுபுறம் நீறுடை நெற்றி
 மங்கையர் மயங்கும் மார்பு
கறுகறு மீசை கொண்டோர்
 களிப்புடன் குளித்தார் மாதோ (பா.472)

என ஆசிரியர் வருணிக்கிறார். மேலும் யோர்தான் நதியினை,

விண்ணார்ந்த மேகமெனும் மங்கை நல்லாள்
 வெய்யோனாம் ஆதவனின் கொடிய ஆட்சி
மண்ணார்ந்த மக்களிடை நடக்கக் கண்டு
 மனங்கொதித்து மழையாக உருவம் மாறி
சுண்ணாம்புக் கல்மலைகள் அனைத்தும் தாக்கி
 சுற்றியுள்ள அசுத்தங்கள் எல்லாம் நீக்கி
பண்ணார்ந்த படைபோல வேகத்தோடு
 பெத்தபரா நகர்மருங்கே பாய்ந்து வந்தாள் (பா.473)

என நயத்துடன் வருணிக்கிறார். கடுமையான வெப்பத்தைக் கொட்டி கொடிய ஆட்சி செய்கின்ற சூரியனால் மண்ணுலக மக்கள் கடுந்துயரடைவதைக் கண்டு, தன் மனம் கொதிக்கின்ற மேகமெனும் பெண் விண்ணில் உயர்ந்து மழையாக உருவெடுத்து சுண்ணாம்புக் கல்மலைகள் அனைத்தையும்

தாக்கி, சுற்றிக் கிடக்கும் அசுத்தங்கள் அனைத்தையும் நீக்கி, வெற்றிப் பெருமிதத்தோடு இசை கொண்டு நடக்கின்ற படை போல மிகுந்த வேகத்தோடு பெத்தபரா நகரின் அருகில் யோர்தான் ஆறு பாய்ந்து வந்தாள் என்னும் வருணனை நயம் மிக்கதாகக் காணப்படுகிறது. யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்ற இயேசு கிறிஸ்துவை,

நீண்ட அங்கி அதன் மேலே
நீள்துப் பட்டி மேலாடை
நீண்டு வளர்ந்த மயிர்க்கற்றை
நெடிது வளர்ந்த இருகரங்கள்

மதியை வெல்லும் திருமுகத்தான்
மலரினும் மென்மைத்திரு வுளத்தான்
கதியைக் காட்டும் திருவாயான்
கருணை காட்டும் திருவிழியான் (பா.509, 510)

என ஆசிரியர் வருணிக்கிறார்.

சொற்பொருள் பின்வரு நிலையணி

ஒரு சொல் பலமுறை ஒரே பொருளில் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும். உலகஜோதி காப்பியத்தில்,

சிவந்தது மேனி, சிவந்தது வாயும்
சிவந்தன கண்ணீரண்டும்
சிவந்தது மூக்கு, சிவந்தது நாக்கு
சிவந்தன செவி இரண்டும்
சிவந்தது சூரியன், சிவந்தது சந்திரன்
சிவந்தன கோளமெலாம்
சிவந்தது பூமி, சிவந்தது வானம்
சேசுவின் குருதியினால் (பா.1131)

என்னும் பாடலில் சிவந்தது என்னும் சொல் ஒரே பொருளில் தொடர்ந்து வந்து சொற்பொருள் பின்வரு நிலையணியாக அமைந்துள்ளது. இதுபோன்று அணி நயம் மிக்க பாடல்கள் அதிகமாக உள்ளன.

தமிழ்ப்பற்று

அருட்கவிஞர் இறையரசன் தமிழ்ப்பற்று மிக்கவர் என்பதை அவரது பாடல்களின் வாயிலாக அறிந்து கொள்ள

முடிகிறது. யோர்தான் ஆற்றுக்கு அருகிலுள்ள நிலம் வளமுடன் காணப்பட்டது என்பதைக் குறிப்பிடும் போது,

பெய்தவ மழையால் குறிஞ்சி
பெருமைசேர் முல்லை மருதம்
நெய்தலும் வளமை பெற்று
நீர்வளம் நிலவளம் ஆக
வெய்துறும் பாலை கூட
வளமுறு சோலை ஆதல்
மெய்யென நம்பு மாறு
மேதினி விளங்கிற் றம்மா (பா.471)

என ஐவகை நிலத்தையும் இங்கு குறிப்பிடுவது இவரது தமிழுணர்வைக் காட்டுவதாக உள்ளது. மேலும் மத்தேயுவை இயேசு பெருமான் அழைத்த போது உடனே மத்தேயு அவர் பின் சென்றார். அது சங்கத் தமிழன் சென்றது போலிருந்தது என்பதை,

சுங்கத் துறையில் பணிபுரிந்த
சுத்தன் மத்தே யுவைக் கண்டு
மங்காப் புகழ்சேர் மரியாளின்
மைந்தன் என்பின் வாவென்றார்
சங்கத் தமிழன் போலுடனே
சத்திய மூர்த்தியின் பின்சென்றார்
பங்கம் இல்லாப் பண்பாளர்
படித்தவர் லேவிஎனும் குலத்தார் (பா.545)

என்னும் பாடலில் குறிப்பிடுகிறார். இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பாடல்களும் ஆசிரியர் தமிழின் மீதும், தமிழர் மீதும் வைத்துள்ளப் பற்றினைச் சுட்டிக் காட்டுகின்றன.

இயேசு கிறிஸ்துவின் பட்டாபிஷேகம்

இயேசு கிறிஸ்து பரலோகத்திற்குச் சென்றவுடன் வானகத்தின் தந்தை இயேசு பெருமானை வரவேற்கிறார். அங்கு உடனடியாக இயேசு கிறிஸ்துவுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது. இயேசு கிறிஸ்து செங்கோலைப் பிடித்து ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றார் எனப் புதுமையாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மணிமா ணிக்கம் மரகதம் நீலம்
பதும ராகம் படிகப்பச்சை

சுவர்ண ரத்தினம் சுகந்திவை டூரியம்
இந்திர நீலம் எழில்கோ மேதகம்
புட்ப ராக மெனும்பன் னிரண்டு
முத்துகள் பதித்த சிங்கா சனத்தில்
அருமை மகனை வலப்புறம் அமர்த்தி
முண்முடி தாங்கிச் சிவந்த தலைமேல்
மும்முடி மகுடம் சூட்டி மகிழ்ந்தார்
ஆணி துளைத்த அழகுக் கரத்தில்
மாணிக் கங்கள் பதித்தசெங் கோலை
மாண்புடன் கொடுத்து மன்ன ராக்கிட
ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் ஏசு! (பா.1311)

என்னும் இப்பாடல் இயேசு பெருமான் அமரும் சிங்காசனத்தை வருணிப்பதாகவும், அவரது தலையில் மகுடம் சூட்டி மகிழ்ந்ததையும், செங்கோலைப் பிடித்துக் கொண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதையும் விவரிக்கின்றது. வருணனையுடன் கூடிய இப்பாடல் சிறப்புடையது.

இயேசு கிறிஸ்து பரலோகம் சென்ற பின்னர் உள்ள நிகழ்வுகள்

பெரும்பாலான கிறித்தவக் காப்பியங்கள் இயேசு கிறிஸ்து பரலோகம் சென்றதுடன் முடிவடைந்து விடுகின்றன. ஆனால் உலக ஜோதி என்னும் இக்காப்பியம் இயேசு கிறிஸ்து பரலோகம் சென்ற பின்னர் நடைபெற்ற நிகழ்வுகளைக் குறிப்பிடுவது பாராட்டுக்குரியதாகும். அதிலும் குறிப்பாக தோமையரின் இந்திய வருகை மற்றும் மரியாளின் உயிர்த்தெழுதல் ஆகியன குறிப்பிடத்தக்கன. இயேசு கிறிஸ்துவின் கொள்கைகளைச் சீடர்கள் பல இடங்களுக்கும் சென்று எடுத்துரைக்கின்றனர். மூன்றாவது காண்டத்திலுள்ள திருச்சபைப் படலம், இறையரசுப் படலம் என்னும் இரண்டு படலங்களும் இயேசு கிறிஸ்து பரலோகம் சென்ற பின்னர் நடந்த நிகழ்வுகளை விவரிக்கின்றன. குறிப்பாக ஆதித்திருச்சபையின் நடவடிக்கைகள் குறித்த செய்திகள், பவுலின் ஊழியம், முதல் இரத்த சாட்சி, பேதுரு மற்றும் அப்பொலோவின் அரும்பணிகள், சீடர்கள் எழுதிய கடிதம் போன்ற செய்திகளை இக்காப்பியம் விவரிப்பதால் பிற காப்பியங்களிலிருந்து வேறுபடுகிறது. பேதுருவின் அருளுரையை,

மனிதரில் வேற்றுமை காணல் - அந்தோ
மாபெரும் பாவம் ஆகும்

மனிதரில் மாண்பை உணர்த்தநம்
மாபரன் மனித ரானார்

சாதி பேதம் இன்றி - நாம்
சமமாய் வாழ்வோம் புவியில்
நீதி போற்றி வாழ்வோம் - மன
நிம்மதியோடு சாவோம் (பா.1435,1436)

என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

தோமையரின் வருகை

இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான புனித தோமையர் இந்தியாவின் தென்பகுதியான அன்றைய சேர நாட்டில் வந்து ஏழரை ஆலயங்களைக் கட்டினார். பின்னர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் வந்து தங்கி இறைப் பணியாற்றினார். இன்றைய புனித தோமையர் மலையில் இறைவனிடம் ஜெபம் செய்து கொண்டிருக்கும் போது ஈட்டியால் ஒருவன் அவரைக் குத்திக் கொன்றான். புனித தோமையர் இந்தியாவில் இரத்த சாட்சியாக இறந்தார். அவரது உடல் மயிலாப்பூரில் அடக்கம் பண்ணப்பட்டது. இவ் வரலாற்று உண்மையை இறையரசன் தமது காப்பியத்தில்,

திருமகன் திருவிலா திருக்கா யத்தினில்
விரலினை விட்டியான் அறிந்தா லன்றி
குருஉயிர்த் திட்டத்தை நம்பிடேன் என்றவர்
வருகிறார் இந்தியா இறையர சமைக்கவே

ஆன்றசீர் கிறிஸ்துவை அன்பு செய்தவர்
மான்றிரி மலையுள மலையா ளத்திலும்
தேன்றமிழ் நாட்டிலும் தேவனின் செய்தியை
வான்றரும் அருளொடு வழங்கினார் தினமுமே

இறப்பினும் ஏசுவோ டிறப்போம் என்றவர்
சிறப்புறு தமிழகம் சேர்ந்துதன் இறைவனின்
இறப்பிலா அறநெறி இயம்பிநல் மயிலையில்
இறந்ததால் இந்தியா ஏற்றம் பெற்றதே (பா.1397-1399)

என விவரித்துள்ளார். இப்பகுதி காப்பியத்தின் சிறப்புக்குச் சான்றாக உள்ள ஒரு பகுதியாகும்.

மரியாளின் உயிர்த்தெழுதல்

இயேசு கிறிஸ்து சிலுவையில் உயிர் விட்ட பின்னர் அவரை அடக்கம் செய்தனர். அவர் மூன்றாம் நாள் உயிருடன்

எழுந்தார் என்பது உலகறிந்த செய்தி. அன்னை மரியாளும் அவ்வாறே உயிர்த்தெழுந்தார் என்று காப்பியத்தின் இறுதியில் ஒரு செவிவழிச் செய்தியினைக் குறிப்பிடுகிறார்.

மாதா மரித்த செய்தி அறிந்து
மாநில மெங்கும் இறைப்பணி புரிந்த
சீடர் அனைவரும் துயரத் தோடு
யோவான் இல்லம் விரைந்து வந்தனர்
கல்லறை நோக்கிக் கடிது சென்றனர்
கன்னித் தாயின் கல்லறை யங்கே
காலி யாக இருந்ததைக் கண்டு
துயர்மிக் குற்றுத் தேடிப் பார்த்தனர்
அன்னையின் உடலோ அங்கே இல்லை
கடவுள் ஏசுவை எழுப்பிய தைப்போல்
உடலுடன் தாயை அழைத்திருப் பாரென
உள்ளத்தில் உறுதி செய்தவ ராக
தம்தம் பணிமேற் சென்றா ரென்ற
செவிவழிச் செய்தி செப்பி னேன் ஈண்டே!

(திருச்சபைப் படலம், பா.1478)

என்னும் இச்செய்தி கிறித்தவ இலக்கியங்கள் எதிலும் இடம்பெறாத செய்தியாக உள்ளது என்றே கூறலாம்.

உலகஜோதி என்னும் கிறித்தவக் காப்பியம் பிற காப்பியங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் உள்ளது. இயேசு கிறிஸ்துவை உலகஜோதியாக ஆசிரியர் மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டிலுள்ள செய்திகளைச் சுருக்கமாகவும், புதிய ஏற்பாட்டிலுள்ள செய்திகளை விரிவாகவும் ஆசிரியர் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. விவிலியச் செய்திகளுக்கு எவ்வித குறைபாடும் வராதவாறு கவிதை மற்றும் கற்பனை நயத்துடன் பொருத்தமான உவமைகளுடன் மரபிலிருந்து மாறாமல் உலகஜோதியைப் படைத்துள்ளார். கவிமணி மற்றும் கண்ணதாசனின் நடையைப் பின்பற்றிய இக்காப்பியத்தில் தமிழ் இலக்கிய நூல்களின் தாக்கம் அதிகமாக இருப்பதை உணரமுடிகிறது.

5. அருளவதாரம்

கிறித்தவக் காப்பியங்களில் ஈழத்துப் பூராடனாரின் இயேசு புராணம், மரிய அந்தோனியின் அருளவதாரம் ஆகிய காப்பியங்கள் மட்டும் விவிலியத்திலுள்ள பழைய மற்றும் புதிய ஏற்பாடு என்னும் இரு நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு முழுமையாகவும் விரிவாகவும் படைக்கப் பட்டுள்ளவைகளாகும். உலக ஜோதி, நசரேய புராணம் என்னும் இரு காப்பியங்களும் பழைய, புதிய ஏற்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு படைக்கப்பட்டாலும் பழைய ஏற்பாடு மிகவும் சுருக்கமாகவே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு புராணம் 1602 பாடல்களை மட்டுமே கொண்டது. ஆனால் அருளவதாரம் அதைவிட பன்மடங்கு பெரியது. இக்காப்பியத்தைப் படித்தால் விவிலியம் முழுவதையும் படித்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது. எனவே, கிறித்தவக் காப்பியங்களிலே தனித்தன்மை பெற்ற, முழுமை நிலையில் அமைந்த காப்பியமாக அருளவதாரம் திகழ்கிறது. முனைவர் பா. வளன் அரசு அவர்களின் முயற்சியால் இக்காப்பியம் 2006 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

ஆசிரியர் வாழ்வும் படைப்பும்

அருளவதாரம் என்னும் காப்பியம் பேராசிரியர் வி. மரிய அந்தோனி அவர்களால் 1983 ஆம் ஆண்டு எழுதி முடிக்கப் பட்டது. இந்நூலாசிரியர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலின் அருகிலுள்ள மறவன் குடியிருப்பு என்னும் ஊரில் 1915ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் பிறந்தார். இவர் பாளையங்கோட்டைத் தூய சவேரியார் கல்லூரிப் பள்ளியில் 1939 முதல் 1949 வரையிலும், திருச்சிராப்பள்ளித் தூய வளனார் கல்லூரியில் 1941 முதல் 1951 வரையிலும், விருதுநகர் செந்தில் குமார நாடார் கல்லூரியில் 1951 முதல் 1970 வரையிலும், திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியில் 1970 முதல் 1976 வரையிலும் என முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

பேராசிரியர் வி. மரிய அந்தோனி அவர்கள் மாரியும் உண்டு, இலக்கிய உலகம், அமர காவியம், பாடுகளின் கீதம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இதில் நேருவின் வாழ்வியலை

அமர காவியமும் (1968), இயேசு கிறிஸ்துவின் மீட்புச் செய்தியைப் பாடுகளின் கீதமும் விவரிக்கின்றன. இவர் ஊசிக்கோபுரம், சரோஜா, மணிமலைத் துறவி, யார் மகள்? என்னும் புதினங்களைப் படைத்துள்ளார். மேலும், மனோன்மணியம், தேம்பாவணி ஆகிய நூல்களுக்கு ஆய்வு விளக்கவுரையும் எழுதியுள்ளார். ஜூலியஸ் சீசர் என்னும் ஆங்கில நாடகத்தினை வராத வளவன் என மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இவர் பதினைந்து ஆண்டுகளாக (1968-1983) உழைத்து ஒப்பற்ற காப்பியமான அருளவதாரத்தைப் படைத்துள்ளார். இவர் 1986ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் நாள் காலமானார். இவர் மறைந்து 20 ஆண்டுகளுக்குப் பின்னர் இக்காப்பியம் வெளிவந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

பெயர்க்காரணம்

இயேசு கிறிஸ்துவின் அவதாரச் செய்தியைக் கூறுவதால் இந்நூலுக்கு ஆசிரியர் அருளவதாரம் எனப் பெயரிட்டுள்ளார். அருளவதாரம் என்னும் பெயருக்கான காரணத்தை நூலாசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> அருள் வடிவாக விளங்கும் இயேசுவின் அவதாரச் செய்தியையே, பவள மணிகள் கோத்த மாலையின் ஊடு இழை போல், தொடர்ச்சியாய்க் காட்டி நிற்றலின், அருளவதாரம் என்பது நூலுக்குப் பெயராயிற்று; இயேசுவுக்கும் ஒரு பெயராயிற்று (முன்னுரை, ப.vii)

காப்பியத்தின் அமைப்பு

விவிலியத்தின் முதல் நூலான ஆதியாகமம் தொடங்கி இறுதி நூலான வெளிப்படுத்தல் நூல் வரையுள்ள செய்திகளை முழுமையாக அள்ளித் தரும் காப்பியம் அருளவதாரம் ஆகும். கத்தோலிக்கக் கிறித்தவர்களின் விவிலியத்தை ஆதாரமாகக் கொண்டு இக்காப்பியம் படைக்கப்பட்டுள்ளது. இக்காப்பியம் ஆதிக்காண்டம், அலைச்சல் காண்டம், அதிபர் காண்டம், அரசர் காண்டம், அறிவர் காண்டம், அடிமைக் காண்டம், அவதாரக் காண்டம், அருளல் காண்டம் என எட்டுப் பெரும் பகுப்புகளை உடையது. இந்த 8 காண்டங்கள், 77 காதைகளைக் கொண்டு 8686 பாக்களால் ஆன ஈடு இணையற்ற முழுமையான காப்பியமாக அருளவதாரம் திகழ்கின்றது. இறுதியிலுள்ள அவதாரக் காண்டமும் அருளல் காண்டமும் புதிய ஏற்பாட்டை

அடிப்படையாகக் கொண்டவையாகும். மொத்தமுள்ள 8686 பாடல்களில் புதிய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இறுதியிலுள்ள இரண்டு காண்டங்களிலும் 2437 பாடல்கள் உள்ளன. இக்காப்பியம் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளது. முதல் இரண்டு தொகுதிகளும் பழைய ஏற்பாட்டையும், மூன்றாம் தொகுதி புதிய ஏற்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டது.

ஆதிக் காண்டம்

முதலாவதான ஆதிக் காண்டம் வாழ்த்துப் பாடல், படைப்புக் காதை, வீழ்ச்சிக் காதை, வினைவிளை காதை, ஆபேல் காதை, துயரக் காதை, நோவன் காதை, குழப்பக் காதை, ஆபிரகாம் காதை, ஈசாக்கு காதை, யாக்கோபு காதை, யோசேபு காதை, வாழ்த்துக் காதை என்னும் 13 காதைகளை உடையது. முதல் காண்டத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 1055 ஆகும்.

அலைச்சல் காண்டம்

இரண்டாவது காண்டமான அலைச்சல் காண்டமானது அல்லற் காதை, வாதனைக் காதை, பெயர்ச்சிக் காதை, கட்டளைக் காதை, வழிபாட்டுக் காதை, தொகை தொழிற் காதை, தண்டனைக் காதை, புகுமுகக் காதை, முடிபெறு காதை என்னும் 9 காதைகளைக் கொண்டது. அலைச்சல் காண்டத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 1007 ஆகும்.

அதிபர் காண்டம்

மூன்றாவதான அதிபர் காண்டத்தில் யோசுவன் காதை, மூவர் காதை, கீதையோன் காதை, எபுத்தன் காதை, சஞ்சோன் காதை, ஏலி காதை, சாமுவேல் காதை என்னும் ஏழு காதைகள் இடம் பெற்றுள்ளன. இக்காண்டத்தில் 887 பாடல்கள் உள்ளன.

அரசர் காண்டம்

நான்காவதான அரசர் காண்டத்தில் சவுல் காதை, தாவீது காதை, அபுசலோம் காதை, யாழ் வரி, சாலமோன் காதை, ஞானக் குறள், இரேகோபொவாமன் காதை, ஆசான் காதை என்னும் எட்டுக் காதைகள் உள்ளன. இக்காண்டத்தில் 1168 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

அறிவர் காண்டம்

ஐந்தாவதான அறிவர் காண்டத்தில் ஏலியன் காதை, எலீசன் காதை, யோனான் காதை, ஆமோசன் காதை, ஓசேயன் காதை, ஈசையன் காதை, மீட்பு வரி, தொபித்தன் காதை, எரேமியன் காதை, புலம்பல் வரி என்னும் பத்துக் காதைகள் உள்ளன. இக்காண்டத்தில் 1018 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

அடிமைக் காண்டம்

ஆறாவதான அடிமைக் காண்டத்தில் பரூக்கன் காதை, எசேக்கியல் காதை, யூதித்தாள் காதை, தானியேல் காதை, எசுத்தேராள் காதை, யோபு காதை, எசுரன் காதை, நெகேமியன் காதை, ஓனியன் காதை, மத்தாத்தியன் காதை, யூதவன் காதை, யோனத்தன் காதை, சிமெயோன் காதை என்னும் 13 காதைகள் இடம் பெற்றுள்ளன. ஆறாவது காண்டத்தில் 1114 பாடல்கள் உள்ளன.

அவதாரக் காண்டம்

ஏழாவதான அவதாரக் காண்டத்தில் முன்னுரைப் பதிகம், அறிமுகக் காதை, அறிவிப்புக் காதை, வெளிப்படு காதை, கலிலேயக் காதை, பகைதொடர் காதை, நற்செய்திக் காதை, பகைமுதிர் காதை, அணுக்கக் காதை என்னும் ஒன்பது காதைகள் உள்ளன. இக்காண்டத்தில் 1342 பாடல்கள் உள்ளன.

அருளல் காண்டம்

எட்டாவதான அருளல் காண்டத்தில் அருளுரைக் காதை, அன்புரைக் காதை, பாடுகளின் காதை, உயிர்ப்புக் காதை, ஆவியார் காதை, அடியவர் காதை, திருமுகக் காதை, திருவெளிப்பாட்டுக் காதை என்னும் எட்டு காதைகள் இடம் பெற்றுள்ளன. இக்காண்டத்தில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 1095 ஆகும்.

பின்னிணைப்பு

காப்பியத்தில் பின்னிணைப்பாக அருளவதாரச் சொற்பொருள்-பெயர்விளக்க அகராதி 139 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளமை மிகப் பாராட்டுதலுக்குரியது. அருளவதாரம் காப்பியத்தைப் படிப்பவர்களுக்கு இவ்அகராதி மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இம்முறை பிற

காப்பியங்களிலிருந்து வேறுபட்டு புதிய முறையில் அனைவரும் பாராட்டும் நிலையில் உள்ளது.

யாப்பு

ஆசிரியர் இலக்கணப் புலமை உடையவராதலால் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்களிலும் தாழிசை, துறை, விருத்தமென நின்ற அவற்றின் பாவினங்களுமாகிய வரன்முறைக் கவிதைகளையும் பயன்படுத்தியுள்ளார். இவர் எளிய ஆற்றொழுக்கான நடையில் பாடல்களை இயற்றியுள்ளார். இப்பாடல்கள் எதுகை, மோனை என்னும் அமைப்பில் காணப்படுகின்றன.

கவிதையாக்கம்

பழைய ஏற்பாட்டின் முதல் நூலான ஆதியாகமத்திலுள்ள "ஸ்திரி சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றார்" (ஆதியாகமம் 3:2,3) என்னும் வசனங்களை,

> இவ்வனத்தே வளர்மரத்தின் எக்கனியும் யாம்எடுத்துச்
> செவ்வெனவே அருந்திடலாம்: சேர்ந்தநடு மரக்கனியை
> எவ்விதமும் அருந்தாதீர்; இறந்திடுவீர்; இறப்புவந்து
> கவ்வமரம் பொருந்தாதீர் - கடவுள்உரை இது என்றாள்
>
> **(வீழ்ச்சிக் காதை, பா. 32)**

எனக் கவிதையாக்கம் செய்துள்ளார். ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். (யோவான் 1: 1,2) என்னும் வசனங்களை,

> ஆதியில் வார்த்தை இருந்தார்.அவ் வார்த்தையார்
> சோதிக் கடவு ளுடன்இருந்தார். சொல் எனப் பேர்
> ஓதிய வார்த்தை உயர்கடவு ளாய்இருந்தார்.
> ஆதித் தொடக்கத்து அவர்கடவு ளோடிருந்தார்.
>
> **(முன்னுரைப் பதிகம், பா.1)**

எனப் பாடியுள்ளார். இயேசு கிறிஸ்துவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை

நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்கா 23: 42,43) என்னும் வேதவசனங்களை,

அடியே னைநினைந் தருள்வீர்,
ஆண்ட வரே,நீர் உம்அர
சிடையே வருங்கால்!" எனவும்,
இயேசு, "இன் றுதானே நீஎன்
னொடுவான் வீட்டில் இருப்பாய்:
உறுதி!" என,முன் பாவத்
தடையால் அடைவான் வீட்டைத்
தகுவார் பெறவே திறந்தார்.

(பாடுகளின் காதை, பா.183)

எனக் கவிதையாக்கம் செய்துள்ளார். பவுலாய் மாறிய சவுல் என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்கள் சவுல் எவ்வாறு பவுலாக மாறினார் என்பதை விவரிக்கின்றன. "அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப் படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்" (அப்போஸ்தலர் 9:5,6) என்னும் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு,

ஒருகுரல், சவுல், சவூல்! ஏன்எனைத்
துன்புறுத் துவைநீ ? என்ன,
தருகுரல், ஆண்டவ ரேநிவிர்
யார் ? எனச் சவுல்கேட் டான்.நீ
பெருகுதுன் புறுத்தும்ஓர் இயேசுவே
நான்.இனி, பெயர்ந்து நீபோ
அருகுஉள நகர்:செயக் கடவதுஅங்கு
அறிவை என்று அவரே சொன்னார்

(அடியவர் காதை, பா.47)

எனப் பாடியுள்ளார். விவிலியத்தின் இறுதியில் அமைந்துள்ள வெளிப்படுத்தின விசேஷம் என்னும் நூலிலுள்ள கருத்துகள்,

அருளவதாரம் காப்பியத்தின் இறுதியில் அமைந்துள்ள திருவெளிப்பாட்டுக் காதையில் இடம் பெற்றுள்ளன. இக்காதை படிப்பதற்கு மிகவும் அருமையாக உள்ளது.

உவமைகள்

அருளவதாரம் காப்பியத்தில் ஆங்காங்கே உவமைகள் பல காணப்படுகின்றன. சான்றாக,

1. பெண்ணரசி வழிநின்று பெரியபடை திரண்டதுபோல் *(ப.8)*
2. மந்திரத்தாற் கட்டுண்ட மயிலெனவே *(ப.9)*
3. களவொடு கைப்பட் டார்போல் *(ப. 18)*
4. கண்ணினுள் மணிபோல் *(ப.19)*
5. விழிவழி அளப்பான் போல *(ப.35)*
6. கொப்பிற் படர்ந்த கொடிகாற்றில் வீழ்ந்ததுபோல் *(ப. 44)*

என்னும் உவமைகளைக் குறிப்பிடலாம். ஒரே பாடலில் மூன்று உவமைகள் அடுக்கடுக்காக இடம்பெற்றுள்ளன.

உள்ளன எல்லாம் உடைதவிர்த்து ஒருவன்
ஒருங்கிழந்து உழல்வது போல,
வெள்ளநீர் உறுமீன் வெறுந்தரை விழுந்து
விறைத்துஉயிர் துடித்திடல் போல,
கள்அவிழ் மலரைக் கொய்துசெங் கதிரோன்
கடுவெயி லிடையிடல் போல,
உள்ளமும் உடலும் உரையொடு தளர
உயர்வனம் இருவர்விட் டகன்றார்

(வினைவிளை காதை, பா.1)

என்னும் இப்பாடலில், ஆதாமும் ஏவாளும் உடை தவிர அனைத்தையும் இழந்து தவிக்கும் ஒருவனைப் போலவும், வெறுந்தரையில் துள்ளி விழுந்து விட்ட மீன் உயிருக்குத் துடிப்பதைப் போலவும், தேன் பொருந்திய மலரைக் கொய்து கொடிய கதிரவனின் கடுமையான வெயிலில் இட்டதைப் போலவும் உள்ளமும் உடலும் உரையும் (பேச்சு) தளர்ந்து இறைவன் படைத்த உயர்வனத்தை விட்டு (சொர்க்கம்) துயரத்தோடு வெளியேறினார்கள் என ஆசிரியர் ஒரே பாடலில் மூன்று உவமைகளின் மூலம் விவரிக்கும் பாங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பிற நூல்களின் தாக்கம்

காப்பியம் படைப்பவர்கள் திருக்குறள், சிலப்பதிகாரம் தொடங்கி சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களில் பண்டிதர்களாக விளங்குவர். கிறித்தவப் படைப்பாளர்கள் விவிலியப் புலமையுடன் சைவ, வைணவ இலக்கியங்களில் புலமை உடையவர்களாக இருந்ததால் பல கிறித்தவ இலக்கியங்களைப் படைக்க முடிந்தது. வேதநாயக சாஸ்திரியார் முதலிய கிறித்தவக் கீர்த்தனைக் கவிஞர்களின் கீர்த்தனைகளிலும் சைவ, வைணவ இலக்கியங்களின் தாக்கத்தைக் காணமுடிகிறது. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளைக்குக் கம்பராமாயணம் முதலிய நூல்களில் இருந்த புலமை இரட்சணிய யாத்திரிகம் படைக்க மிக உறுதுணையாக இருந்தது. அருளவதாரம் என்னும் காப்பியத்தில் ஆசிரியர் மரிய அந்தோனியின் பன்னூல் புலமையைக் காணமுடிகிறது.

சிலப்பதிகாரத் தாக்கம்

சிலப்பதிகாரத்தின் முதல் காண்டமான புகார்க் காண்டத்தின் முதல் காதையாக மங்கல வாழ்த்து தொடங்குவதைப் போன்று அருளவதாரத்தின் முதல் காண்டமான ஆதிக்காண்டத்தின் முதல்காதையாக வாழ்த்துப் பாடல் பின்வருமாறு தொடங்குகிறது:

> **தந்தையைப் போற்றுவோம், தந்தையைப் போற்றுவோம்,**
> **முந்தை உலகம்ஒரு மூன்றும் படைத்துஅளிக்கும்**
> **நம்தந்தை தான்ஆத லால்.**
>
> **மைந்தனைப் போற்றுவோம், மைந்தனைப் போற்றுவோம்,**
> **நந்தம் வினைஅகல நானிலத்து வந்து, உயிரைத்**
> **தந்து தலையளித்த லால்.**
>
> **ஆவியைப் போற்றுவோம், ஆவியைப் போற்றுவோம்,**
> **ஓவிலாது உண்மை ஒளிதந்து உயர்கதிநாம்**
> **மேவிடத் தான் அருள லால்** (வாழ்த்துப்பாடல், பா.1-3)

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவொரு கடவுளை முதல் மூன்று பாடல்களில் வாழ்த்தி நூலைத் தொடங்குகிறார். இளங்கோவடிகள் நூலின் முதல் காதைக்கு, காதை என்னும் சொல் வராமல் மங்கலவாழ்த்து எனப் பெயரிட்டதைப் போன்று, மரிய அந்தோனியும் தமது காப்பியத்தின் முதல் காதைக்கு, வாழ்த்துப்பாடல் எனப் பெயரிட்டுள்ளமைக்

குறிப்பிடத்தக்கது. மேலும் இளங்கோவடிகள் கானல் வரி எனக் காதைக்குப் பெயரிட்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டு தமது அருளவதாரம் என்னும் காப்பியத்திலும் நான்காவது காண்டமான அரசர் காண்டத்தில் யாழ் வரி என்றும், ஐந்தாவது காண்டமான அறிவர் காண்டத்தில் மீட்பு வரி, புலம்பல் வரி என்னும் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்துள்ளார்.

பெரியபுராணத் தாக்கம்

பெரியபுராணத்தில் கண்ணப்பநாயனார் தமது ஒரு கண்ணைப் பெயர்த்து எடுத்து, குருதி வழிந்து கொண்டிருந்த சிவபெருமானின் கண்ணில் வைத்தவுடன் குருதி வழிவது நின்றது. இதைப் பார்த்தவுடன் கண்ணப்ப நாயனார் மகிழ்ச்சியில் ஆனந்தக் கூத்தாடினார். இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார்,

> நின்ற செங்குருதி கண்டார் நிலத்தின் றேறப்பாய்ந்தார்
> குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்தும்ஆடி
> நன்று நான்செய்த இந்தமதியென நகையும் தோன்ற
> ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர்போல மிக்கார்
>
> (பெரியபுராணம், பா.823)

எனப் பாடுகின்றார். சேக்கிழாரின் இவ்வடிகளை மனதில் கொண்டு,

> ஆடுவார்; திளைத்திடுவார்; அன்புஉருகி நின்றிடுவார்;
> அனைத்துக் கொள்வார்.
> பாடுவார்; பதம்பெயர்வார்; பாங்குஅமர்ந்து பேசிடுவார்.
> பழுதற்று அன்பாற்
> கூடுவார்; களித்திடுவார்; கொள்ளையின்பங் கண்டிடுவார்.
> குவல யத்தில்
> நாடுவார் கடவுள்அருள்; எய்தி, மன மொழிமெய்யில்
> நலமே காண்பார். (வீழ்ச்சிக் காதை, பா.5)

என ஆதாமும் ஏவாளும் சாத்தானால் வஞ்சிக்கப்படுவதற்கு முன்னர் மகிழ்ச்சியாக இருந்ததை அருளவதாரத்தில் மரிய அந்தோனி பாடுகிறார்.

கம்பராமாயணத் தாக்கம்

அருளவதாரம் காப்பியத்தின் பல இடங்களில் இரட்சணிய யாத்திரிகத்தின் சாயலும், கம்பராமாயணத்தின் தாக்கமும் காணப்படுகின்றன. கம்பராமாயணத்திலுள்ள,

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவழை கண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம் பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ
(நாட்டுப் படலம், பா.4)

என்னும் பாடலை மனதில் கொண்டு, மரிய அந்தோனி தமது காப்பியத்தில்,

முல்லைமலர் முறுவலித்து வரவேற்க, குவளைக்கண்
முகமே நோக்க,
பல்வகைய இன்கனிகள் கிளைக்கரங்கள் வளைத்து எதிரே
பணிந்து நல்க,
கொடிமலர்கள் தேன்பிலிற்றிச் சிரமசைத்து
மெதுவாய்த் தூவ,
எல்லையிலாப் பரம்பொருளை இதயங்கொண்டு
எங்கெங்கும் இனிதே சூழ்வார்
(வீழ்ச்சிக் காதை, பா.7)

எனப் பாடியுள்ளார். இப்பாடலில் நறுமண மிக்க முல்லை மலர் முறுவலுடன் வரவேற்றது; கண் போன்ற குவளை மலர் இதழ் திறந்து முகத்தை நோக்கியது; பல்வகையான மரங்கள் தம் கிளைக் கரங்களை வளைத்து இனிய கனிகளைப் பணிவுடன் தந்தன; கொடிகள் தேனைச் சிந்தி தலையசைத்து மெதுவாய் பூக்களைத் தூவின; எல்லையில்லாத பரம்பொருளை தங்கள் இதயத்தில் கொண்டவர்களாய் அங்கே மகிழ்வுடன் சுற்றித் திரிந்தனர் எனக் கம்பராமாயணச் சாயலில் ஆசிரியர் வருணித்துள்ளார்.

பாரதியாரின் தாக்கம்

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திலுள்ள,

மனமாரச் சொன்னாயோ? வீமா! என்ன
வார்த்தை சொன்னாய்? எங்கு சொன்னாய்? யாவர் முன்னே?

கனமாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே இழந்திடுதல் குற்றமென்றாய்
சினமான தீயறிவைப் புகைத்தலாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்
(பாஞ்சாலி சபதம், அடிமைச் சருக்கம்

என்னும் பாடலை மனதில் கொண்டு,

என்னநீ சொன்னாய், அண்ணா ?
யாரைநீ கடிந்து கொண்டாய் ?
சின்னவன் குழிவீழ்த் துற்றுச்
செறிபசிக்கு இரையாய்ப் போகச்

சொன்னவன் நீ:அன் னானைச்
சுகத்தொடும் உயிர்வாழ் வித்த
என்னையோ கொடியன் என்றாய் ?"
எனச்சினந்து யூதா ஆர்த்தான்

(யோசேபு காதை, பா.44)

என்னும் பாடலை இயற்றியுள்ளார்.

ஞானக் குறள்

நான்காவதான அரசர் காண்டத்திலுள்ள ஆறாவது காதை ஞானக் குறள் என்பதாகும். சாலமோன் அரசனின் கருத்துகளை இப்பகுதி விவரிக்கிறது. இக்காதை முழுவதும் திருக்குறள்களைப் போன்ற குறள் வெண்பாக்களால் ஆனது. இக்காதை கடவுள் வழிபாடு, கடவுள் இயல்பு, அறிவின் பெருமை, ஒழுக்கக்கேடு, மனையாள் மாண்பு, புதல்வன் தன்மை, சொல்லின் சிறப்பு, ஆட்சிப் பொறுப்பு, தாழ்மைத் தகைமை, சினத்தின் இழிவு, நட்பின் தன்மை, தீயோர் இயல்பு, உழைப்பின் உயர்வு, ஈகைப் பண்பு, வாழ்க்கை முடிவு என்னும் 15 தலைப்புகளில் 184 குறட்பாக்களை உடையது. இக்காதையின் மூலமாக ஆசிரியரின் திருக்குறள் பற்றும், புலமையும் தெரியலாகின்றது. ஒவ்வொரு தலைப்பிலிருந்தும் ஒவ்வொரு பாடல்கள் சான்றாகக் கீழே தரப்படுகின்றன:

1. அன்புக் கடவுள்பால் அச்சங்கொள்: ஞானத்தின்
இன்பத் தொடக்கம் இது. (பா.2)

2. உலகப் பொருள்ஆய்ந் துணரும் அறிவின்
இலகுவார் இஃதுணரா தென் ? (பா.18)

3. ஞானமே வீடு; நிலைக்கதவோ உள்ளுணர்வு;
தானமாய்ச் சேர்வது அறிவு. (பா.29)

4. அகந்தை அழிவிற்கு அடையாளம் வீம்பின்
இகந்தது செய்தல் இழிவு. (பா.69)

5. நன்மனையாள் கண்டான் நலங்கண்டான்; கண்டதன்
பின்பெறுவான் தெய்வநற் பேறு. (பா.82)

6. சான்றோன் மகனெனல் தந்தைக்கின் பம்தன்னை
ஈன்றாட்கு இருபங்கு இனிது. (பா.88)

7. அகக்கவலை ஆளை ஒடுக்கும் அவன்நோய்
முகத்தொருசொல் தீர்க்கும் முடித்து. (பா.100)

8. எளியார்க்கு நீதி இயற்றும் அரசே
ஒளிவீசி நிற்கும் உயர்ந்து. (பா.117)

9. தாழ்மை முதலாத் தரும்மேன்மை முன்நின்று
கீழ்மை தரும்இறு மாப்பு. (பா.132)

10. சினம்சண்டை மூட்டும், சினவாது அமைந்த
மனம்மற் றதுதீர்க்கு மாறு. (பா.137)

11. மன்னிப்பு நட்பின் மரபு மறித்துந்தீங்கு
உன்னிச்செய் யின்போம் உறவு. (பா.141)

12. அயலார்க்குத் தீங்குசெய்து அன்னார் விழக்கண்
துயிலாமை தீயோர் தொழில். (பா.151)

13. சோம்பர் துயில்வார் சுழன்று வறுமையின்
தேம்புவார் காண்க எறும்பு. (பா.162)

14. கடன்ஈவான் ஏழைக்கொன்று ஈவான் கடவுட்கு
உடன்மேவு வான்பன் மடங்கு. (பா.171)

15. உலையுற்ற பொன்போல் ஒளிர்ந்து, முடிதம்
தலைபெற்று வாழ்வார்நல் லோர். (பா.185)

சாலமோனின் நீதிமொழிகள் குறள் வடிவில் மாற்றியமைக்கப் பட்டுள்ளமை பாராட்டிற்குரியது. காப்பியத்தில் இது ஒரு புதுவகை முயற்சியாகும்.

கடிதங்கள்

அருளவதாரம் காப்பியத்தின் இறுதி காண்டமான அருளல் காண்டத்தில் ஏழாவது அமைந்துள்ளது திருமுகக் காதை என்பதாகும். இக்காதை விவிலியத்தின் புதிய ஏற்பாடுப் பகுதியிலுள்ள கடிதங்களை அடிப்படையாகக் கொண்டது. கடிதத்தைத் திருமுகம் எனக் குறிப்பிட்டு அதன் பெயராலேயே இக்காதைக்குத் திருமுகக் காதை எனப் பெயரிட்டுள்ளார். பேதுரு, யாக்கோபு, யோவான், பவுலடியார் ஆகியோர் எழுதிய கடிதங்களை ஆசிரியர் இக்காதையில் உட்படுத்தியுள்ளார். இக்கடிதங்கள் வாழ்க்கை ஒழுங்கு, செயல் தழுவிய நம்பகம், பாவ விளக்கம், அன்புக் கட்டளை, இயேசுவே மெசியா

கேட்டது கிடைக்கும், நம்பகத்தின் சிறப்பு, மீட்புத் திட்டம், அருள் வாழ்வு, ஒழுக்க நெறிகள், மெய்ஞ்ஞானம், மண உறவு, ஆண்-பெண், திருவிருந்து, ஆவியார் வரங்கள், இயேசுவின் மறையுடல், அன்பின் சிறப்பு, உயிர்த்தெழுதல் உண்டு, துன்பப் பயன், சட்டமா நம்பகமா?, புதுவாழ்வு, சமுதாய உறவு, இயேசுவின் பணிவு, மெசியாவின் மேன்மை, இரண்டாம் வருகை, திருச்சபை ஆட்சி, திருந்திய வாழ்க்கை, தலைமைக்குரு, புதிய உடன்பாடு, இயேசுவின் பலி, நம்பக வாழ்க்கை, வானக எருசலேம் என்னும் முப்பத்து இரண்டு தலைப்புகளில் அமைந்துள்ளன. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தின் பன்னிரெண்டாம் அதிகாரத்தில் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி எழுதுகிறார். அப்பகுதியை,

வரங்கள் பலவகை: வழங்கு பவர்ஒரே
ஆவியார். ஆற்றுதற்கு அமைந்த பணிகள்
பலப்பல: எலாம்ஏற் பவர்ஒரே ஆண்டவர்.
வேறுவேறு உளபணி வேற்றுவேற் றவர்க்கொண்டு
இயற்றினும், உள்ளிருந்து இயக்கு பவர்ஒரே
கடவுள். ஒவ்வொரு வனுக்கும் கருதிக்
குறித்த வழியிற் கொடுத்துள ஆவியார்
வரம்ஒவ் வொன்றும்ஓர் வகைநலத் தினுக்குஆம்:
ஞானத் தோடுபோ தனைசெய் நல்வரம்.
விளக்கப் போதனை விளம்பும் வரம், மற்று
ஆழ்ந்த நம்பகத்து அருவரம், குணம் நோய்க்கு
அளிக்கும் வரம்,பின் அதிசயச் செயல்வரம்,
தெய்வக் கணியச் சிறப்பு வரம்,நுனித்து
ஆவிகள் தேர்ந்து தெளிதிறத்து அவ்வரம்,
பரவசப் பேச்சு வரம், அதிற் பகர்ந்தது
தெளிவுற விளக்கும் திறவரம் - இவற்றைத்
தரம்அறிந்து எவர்க்கும் தாம்விரும் பியவாறு
அருளு பவர்ஒரு வராம்அதே ஆவியார்.
யூதரோ, கிரேக்கரோ, அடிமையின் உளாரோ,
உரிமைக் குடிகளோ - நாம்அனை வோரும்
ஒருவராம் ஆவியார்க் குள்ளே திருமுழுக்கு
எய்தி னோம்;ஒரே ஆவியார் யாவரும்
அருந்தற் கெனவும் அருளப் பட்டுளோம்

(திருமுகக் காதை, பா.16)

எனக் காப்பிய ஆசிரியர் மரிய அந்தோனி பாடுகிறார். புதிய ஏற்பாட்டிலுள்ள இத்தகையக் கடிதப் பகுதிகளைக் காப்பியத்தில்

அமைத்துப் பாடிய பெருமை மரிய அந்தோனி அவர்களையேச் சாரும். வேறு எந்த கிறித்தவக் காப்பியத்திலும் இத்தகையப் பகுதிகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருவெளிப்பாட்டுக் காதை

அருளவதாரம் காப்பியத்தின் இறுதிக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள இறுதிக்காதை திருவெளிப்பாட்டுக் காதை ஆகும். இக்காதை விவிலியத்தில் இடம்பெற்றுள்ள இறுதி நூலான வெளிப்படுத்தின விசேஷம் என்னும் நூலினை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்நூல் யோவானுக்கு இறைவன் வெளிப்படுத்திய செய்திகளை எடுத்தியம்புவதாகும். இந்நூல் 22 அதிகாரங்களைக் கொண்டதாகும். இந்நூலின் முதல் அதிகாரத்திலுள்ள முதலாம் வசனம்,

> சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்

எனக் குறிப்பிடுகின்றது. இந்நூல் யோவானால் எழுதப்பட்டதாகும். விவிலியத்திலுள்ள அறுபத்து ஆறு நூல்களிலேயே இந்நூல் மிகவும் சிறப்பான நூலாகும். விவிலியத் திறனாய்வாளர்களாலேயே இந்நூலிலுள்ள பல பகுதிகளுக்குச் சரியான பொருள் கூற இயலவில்லை. “அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும்,

சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்" (வெளிப்படுத்தின விசேஷம், *21: 4-8*) என்னும் வாக்குகளை ஆசிரியர் புதிய எருசலேம் என்னும் உட்தலைப்பில் பின்வருமாறு பாடுகிறார்:

சாவும்இனி இலை;அழுகை துயரம் இல்லை:
சாய்ந்துமறைந் ததுபழைய உலகம் என்ன,
மேவிஅரி யணைஅமர்ந்தார் புகல்வார்: இப்போ
மெலிந்தவெலாம் புதுப்படைப்பாக் குகின்றேன். நானே
ஏவ,இது எழுது: சொனது உறுதி; உண்மை
எனநிகழ்வது: ஏற்கெனவே நிகழ்ந்தா யிற்றே!
ஆவதொரு தொடக்கமும்நான், முடிவும் நானாய்
அமைந்துளஆல் பாவும்ஒமே காவும் ஆவேன்.

தாகமுடை யவன்எவற்கும் வாழ்வுக் கேணி
தருகுளிர்நீர் இலவசமாய்த் தருவேன். வெற்றி
யாகமுடித் தவன்அதனை உரிமை கொள்வான்:
அவனுக்கு நான்கடவுள்; தான்என் மைந்தன்.
போகமொழி பிறழ்ந்து,சிலை தொழுது, பல்பொய்
புகன்று,கொலை விபசாரத்து அழுந்த வார்பங்
காகஅடை வதும்இரண்டாம் சாவு: கந்த
கத்துஎரியும் ஏரியென்பது அதுவாம் என்றார்.

எழுகலச வானவருள் ஒருவன் முன்வந்து,
என்னோடு பேசுவனாய், இங்கே வா:நான்
தொழுதகுசெம் மறியார்தாம் மணந்து கொண்ட
தூயமண மகளைக்காட் டுவென்என் றான்;அப்
பொழுதுஎனையும் ஆவிமயத்து எடுத்துக் கொண்டு
போய்,பெரிதாய் உயர்ந்தமலை உச்சி சேர்த்து,
வழுவரிய கடவுள்தர இறங்கி, வானின்
வரும்எருச லேம்புனித நகர்காண் பித்தான்

(206-208)

இது போன்ற பகுதிகளை ஆசிரியர் சிறப்பாக திருவெளிப் பாட்டுக் காதையில் பாடியுள்ளார். இப்பகுதிகள் அனைத்தும் ஆசிரியரின் புலமைக்குத் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன.

வருணனை

கிறித்தவக் காப்பியங்கள் சிலவற்றில் வருணனையைக் காணமுடிகின்றது. வருணனைகள் காப்பியச் சுவைக்கு மிகவும்

உறுதுணையாக விளங்குகின்றன. அருளவதாரம் காப்பியத்தில் வருணனைகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஆசிரியர் விவிலியத்திலுள்ள அனைத்துச் செய்திகளும் காப்பியத்தில் வரவேண்டும் என்னும் நோக்கம் உடையவராகக் காணப்பட்டதால் கற்பனை, வருணனை போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை என்பதை உணரமுடிகின்றது. முதலாவதான ஆதிக்காண்டத்திலுள்ள வீழ்ச்சிக்காதையில் ஆசிரியர் வருணனைகளைப் பயன்படுத்தியுள்ளார். இறைவன் உலகையும், மனிதனையும் படைத்த போது விலங்குகளும் பறவைகளும் ஆதாமும் ஏவாளும் மிக்க மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். ஏதேன் தோட்டத்தின் இச்சூழலை ஆசிரியர் வருணனைகளின் மூலம் விவரிக்கும் போது அவரது கற்பனையாற்றலை உணரமுடிகிறது. சான்றாக,

> தாரகைகள் கண்சி மிட்டிக் கடவுள்அரு ளொளிபரப்பும்
> தகவே காண்பார்.
> சீரமைகூன் பிறைஓடம் வான்கடலில் மிதந்துதிகழ்
> சிறப்பும் காண்பார்.
> ஓரமுற அலையெறிந்து கரைபுரண்டு கடல்மீளும்
> உவகை யோடு
> பாருலகம் இருள்மூடிப் பல்லுயிரும் துயில்மூழ்கும்
> பயனும் துய்ப்பார்.
>
> காலையிளம் பரிதியெழக் கண்விழிப்பார்; புதுவுலகங்
> கண்டு நிற்பார்.
> சோலைஒளி வெள்ளத்தில் மிதக்க அதன் புதுப்பொலிவிற்
> சொக்கி நிற்பார்,
> மாலைவரப் பால்நிலவு குளிர்தென்றல் தரும்இன்பம்
> மாந்தி, அந்த
> மேலையுல கத்தினைஇப் பாலையுலகிற்கண்டு
> மெய்சி லிற்பார் (வீழ்ச்சிக் காதை, பா.8, 9)

என்னும் பாடல்களைச் சுட்டலாம். இப்பாடல்களில் விண்மீன்கள் தம் கண்களைச் சிமிட்டி கடவுளின் அருள் ஒளியைப் பரப்புகின்ற தன்மையினைக் காண்பார்கள்; செப்பமாக வளைவோடு அமைந்த இளம் பிறையாகிய ஓடம் வானமாகிய கடலில் மிதந்து செல்லுகின்ற சிறப்பையும் காண்பார்கள்; கடலில் அலைகள் எழுந்து கரையில் புரண்டு விளையாடும் காட்சியையும் மகிழ்ச்சியோடு காண்பார்கள்;

உலகம் இருள் மூடி உயிர்கள் அனைத்தும் துயில் கொள்ளும் நிலை கண்டு தாங்களும் துயின்று இரவின் பயன் கொள்வார்கள். அதிகாலையில் இளம்பருதி எழும்பும்போது கண் விழிப்பார்கள்; கதிரவன் ஒளியில் உலகம் புதிதாகத் திகழ்வதைக் கண்டு மகிழ்வார்கள்; கதிரவனின் ஒளி வெள்ளத்தில் சோலைகள் எல்லாம் புதுப் பொலிவுடன் விளங்குவதைக் கண்டு மெய்மறந்து நிற்பார்கள்; மாலையில் பால் நிலவும் குளிர்த் தென்றலும் தரும் இன்பத்தை நுகர்ந்து பரம மண்டலத்தினை இப்பாலை உலகில் கண்டு மெய்சிலிர்த்து நிற்பார்கள் என வருணிக்கிறார்.

ஆதாமும் ஏவாளும் கடவுளின் கட்டளைகளை மீறியதனால் உலகில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றை விவரிக்கும் போது ஆசிரியர் வருணனையைப் பயன்படுத்துகின்றார்.

தண்ணொளி இரவின் தனியர சாளன்
தயங்கினன் வெளிவரல் ஒழிந்தான்,
பெண்பழி பெரிதோ பெரிது! என உடுக்கள்
கண்சிமிட் டினமுகில் மறைந்த
விண்ணெண, விரிந்த மண்ணெண எதுவும்
விதவிதம் அறிவகை இலதாய்,
துண்ணெண நினைவார் எண்ணமும் துடிக்கத்
துதைந்துஇருள் கவிந்தது புவியே!

(வினைவிளை காதை, பா.3)

என்னும் பாடலில், இரவில் ஒளியைக் கொடுக்கும் சந்திரன் வெளியே காணவில்லை. மேகக் கூட்டத்தினுள் நட்சத்திரங்கள் மறைந்து கொண்டன. இதனால் உலகம் இருளாகக் காணப்பட்டது என அந்த இரவை ஆசிரியர் வருணிக்கிறார்.

கவிதைநயம்

காப்பியப் புலவர்களின் ஆற்றல் அவர்களது கவிதையில் வெளிப்படும் என்பது இயல்பு. விவிலியம் முழுமையையும் ஆழமாக உள்வாங்கிக் கொண்டு, அதிலுள்ள செய்திகளை வாசகர்கள் விரும்பும் வகையில் கொடுக்கும் போதுதான் அவ்விலக்கியம் மக்கள் மனதில் நிலைக்கும். எனவே காப்பிய ஆசிரியர்கள் கவிதைப் படைப்பில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துவர். அருளவதாரம் ஆசிரியரின் கவிதைநயம் அவரது காப்பியம் முழுவதும் பரந்து காணப்படுகின்றது.

சிங்கங்கள் சுமந்துவர, சிறந்தபசு அணைந்துபால்
சுரந்தே ஊட்ட,
அங்கங்கு மயிலாடக் குயில்கூவ அரவுதலை
அசைத்துப் போற்ற,
பொங்குங்கண் சினப்புலியும் புள்ளிமா னொடுதுள்ளிப்
புடைசூழ்ந்து எய்த,
எங்கெங்கும் பகைகாணார்:நல்லுறவே பொருந்தக்கண்டு
இன்பம் துய்ப்பார் (வீழ்ச்சிக்காதை,பா.6)

என்னும் இப்பாடலில், சிங்கங்களினுடைய பசியினை பசுக்கள் பால் சுரந்து ஊட்டி ஆற்றின; ஆங்காங்கே மயில்கள் ஆடின, குயில்கள் கூவின; அந்த இசையையும் நடனத்தையும் கண்டு படமெடுத்தப் பாம்புகள் தலையசைத்துப் போற்றின. சினம் பொங்கும் விழிகளைக் கொண்ட புலிகள் புள்ளி மான்களோடு துள்ளி மகிழ்ந்திருந்தன. இவ்வாறு பகை என்பது எங்கும் இல்லாத காட்சியைக் கண்டு அனைத்தும் அன்பால் பிணைந்திருப்பதைக் கண்டு இன்பம் துய்த்தன. ஏதேன் தோட்டத்து நிகழ்வுகளில் ஒன்றை ஆசிரியர் விவரிக்கும் போது அவரது கவிதை நயத்தினை அறியமுடிகிறது.

தற்குறிப்பேற்றம்

அருளவதாரம் காப்பிய ஆசிரியர் இலக்கணப் புலமை நிறைந்தவர். இதை அவரது கவிதைகள் மூலம் உணர முடிகிறது. உவமைகள், வருணனைகள், அணிநயம் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக ஆசிரியர் அருளவதாரம் என்னும் காப்பியத்தைப் படைத்துள்ளார். தற்குறிப்பேற்ற அணியில் பல பாடல்களை இயற்றியுள்ளார். சான்றாக,

பெண்வழிச் சென்று பெரும்பிழை செய்த
பெருந்தகை ஆண்மகன் முகத்தே
கண்விழித் திடவும் நாணின னாகிக்
கதிரவன் கடலிடை விழுந்தான்.
மண்மகள் தனது குலப்பழி நாணி
மறைவிடம் காண்கிலள் கரிய
திண்ணிய போர்வை பொதிந்துஉடல் மூடித்
திணறிய படியில் ஆழ்ந்தாள்
(வினைவிளைகாதை, பா.2)

என்னும் பாடலைச் சுட்டலாம். சூரியன் கடலில் மறைவதும், பூமி இரவில் இருளைப் போர்த்துவதும் இயல்பாக நடக்கும் இயற்கையின் நிகழ்வுகள். அதில் ஆதாம் தவறு செய்ததை

அறிந்து சூரியன் வெறுப்படைந்து கடலில் விழுந்ததாகவும், ஏவாள் பாவம் செய்தமையால் மண்மகளான பூமி இருளால் சூழ்ந்ததாகவும் கவிஞர் தன்னுடைய குறிப்புகளை ஏற்றிச் சொல்லியுள்ளார்.

கிறித்தவக் காப்பியங்களில் விவிலியத்தை முழுமையாகத் தரும் காப்பியம் அருளவதாரம். இவ்வுன்னத முயற்சியில் ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார். காப்பியத்தைப் படிக்கும்போது விவிலியத்தைப் படித்தது போன்ற உணர்வு பெறும் வகையில் காப்பியம் படைக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் விவிலியப் புலமையும் கவிதைப் புலமையும் ஒருசேர இக்காப்பியத்தில் மிளிர்கிறது.

6. ஆதியாகம காவியம்

விவிலியத்திலுள்ள பழைய ஏற்பாடு என்னும் பகுதி ஆதியாகமம் என்னும் நூலிலிருந்து தொடங்குகிறது. ஆதியாகமம் இறைவன் உலகத்தையும், அதில் வாழ ஆதாம், ஏவாளையும் படைத்ததிலிருந்து ஆரம்பமாகிறது. ஆதியாகம புத்தகம் 50 அதிகாரங்களாலானது. இந்த 50 அதிகாரங்களிலுள்ள நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் மரபுக் கவிதையில் இலக்கிய நயத்துடன் பேராசிரியர் ச.சாமிமுத்து காப்பியமாகப் படைத்துள்ளார். இக்காப்பியம் 2008ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. இருபத்தியோராம் நூற்றாண்டில் வெளிவந்த காப்பியங்களில் குறிப்பிடத்தக்கது ஆதியாகம காவியம் ஆகும்.

ஆசிரியர் வரலாறு

முத்தமிழ் மாமணி, தளபதி எனப் போற்றப்படும் ச.சாமிமுத்து அவர்கள் சவரிமுத்து-மங்களம் என்னும் தம்பதியருக்கு திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அ.வெள்ளோடு என்னும் ஊரில் 1931ஆம் ஆண்டு பிறந்தார். இவர் 1959ஆம் ஆண்டு கிளாரா மேரி என்னும் அம்மையாரைத் திருமணம் செய்தார். இத்தம்பதியினருக்கு ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் குழந்தைச் செல்வங்கள்.

இவர் 1952ஆம் ஆண்டு திண்டுக்கல் தூய மரியன்னை பள்ளியில் படித்து, பள்ளி இறுதித் தேர்வில் பள்ளியில் முதல் மாணவராக வெற்றி பெற்றார். பின்னர் 1956ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் (பொருளியல்) பட்டமும், 1958ஆம் ஆண்டு கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுகலைப் பட்டமும், 1985இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பிஎச்.டி. பட்டமும் பெற்றார். முதுகலைப் பட்டத் தேர்வில் முதல் மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கப்பதக்கம் பெற்றார். தேசிய மாணவர் படையின் அதிகாரியாக 1960 முதல் 1978 வரை சிறப்பாகச் செயல்பட்டார். 1958ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை திருச்சி தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர், துறைத் தலைவர், துணைமுதல்வர் என்னும் பல்வேறு பதவிகளை வகித்தவர். இவர் எம்.பில்., பிஎச்.டி. ஆய்வாளர்களுக்கு நெறியாளராக இருந்து பல ஆய்வுப் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளார். இவரது பணியினைப் பாராட்டி 1989ஆம்

ஆண்டு தமிழக அரசு இவருக்கு நல்லாசிரியர் விருதும் பொற்கிழியும் வழங்கிச் சிறப்பித்தது. 1990 ஆம் ஆண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் இவருக்கு முத்தமிழ் மாமணி என்னும் விருதினை வழங்கிப் பாராட்டினார். இவர் சிறந்த மேடைப் பேச்சாளர். பட்டி மன்றங்களிலும் கவியரங்குகளிலும் முத்திரை பதித்துள்ளார்.

படைப்புகள்

1. இலக்கியச் சொற்பொழிவுக் கட்டுரைகள் (1959)
2. சுவைக்கோவை - இலக்கியக்கட்டுரைத் தொகுப்பு (1960)
3. தேன்சொட்டும் தேம்பாவணிச்சோலை (1961)
4. தமிழ் இலக்கியவரலாறு (1962)
5. மனோன்மணீயம் - பதிப்பாசிரியர் (1965)
6. வழக்கறிஞன் -நாவல் (1967)
7. கார்காலம் - மூன்று நாடகங்கள் (1967)
8. சிறுகதைத் தொகுப்பு (1970)
9. கல்லூரி மாணாக்கர் இலக்கண நூல் (1975)
10. நிழல்தரும் நெஞ்சங்கள் - கவிதை நூல் (1975)
11. அலைகடல் கரையினிலே - கவிதை நூல் (1990)
12. தமிழ் வளர்த்த வேதநாயகர் (1992)
13. சீறாப்புராணம் - கட்டுரைத் தொகுப்பு நூல் (1995)
14. திருவிவிலிய அருட்காட்சிக் கவிதைகள் (2000)
15. நெஞ்சத்தின் நிறங்கள் - மேடைநாடகம் (2007)
16. ஆதியாகம காவியம் - காப்பியம் (2008)
17. சின்ன சவேரியார் ஆக்கிய உரைநடைகள் பற்றிய திறனாய்வு (2010)
18. உறங்காத உறவுகள் - சிறுகதைத் தொகுப்பு (2011)

என்பன இவரது படைப்புகளாகும்.

காப்பிய அமைப்பு

கிறித்தவக் காப்பியமான ஆதியாகம காவியம் ஆறு பாகங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாகமும் படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாகங்களுக்கும், அதன்

உட்பிரிவாகிய படலங்களுக்கும் பெயர் குறிப்பிடாமல் முதல் பாகம், முதல் படலம் என்றவாறே காப்பியம் முழுவதும் ஆசிரியர் பின்பற்றியுள்ளார். காப்பியத்தின் தொடக்கத்தில் பாயிரம் இடம்பெற்றுள்ளது. இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள பாடல்களின் மொத்த எண்ணிக்கை 1444 ஆகும்.

பாயிரம்

பாயிரம் என்னும் பகுதியில் 37 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஆதியாகம காவியத்திலுள்ள பாயிரம் பிற காப்பியங்களிலிருந்து சற்று வேறுபட்டுள்ளது. பாயிரத்திலுள்ள இரண்டாம் பாடல் அவையடக்கப் பாடலாக அமைந்துள்ளது.

எனைத்தனிக் கொண்டணைத் திழிவறுத் திழுத்தே
இன்னெழில் நற்றமிழ்ப் பாப்புனைந் தேத்த
சுனைதிரி பூச்சியேன் சூதுடல் போர்த்தினேன்
சுருதிகள் அறிந்திடா அறிவிலி நான்எனை
வனைந்திடு வான்தமிழ்ச் சுவைத்தேன் மாந்திட
வம் என அழைத்தனை வந்துனைப் பற்றினேன்!
தினைமதி ஒளியுற திடமனம் யான்பெறத்
தினந்தொழு திரந்துனை வேண்டினேன் அப்பனே!
(பாயிரம், பா.2)

என்னும் பாடலில் தான் பூச்சி போன்றவன் என்றும், தன் அறிவு சிறிய அறிவு என்றும், விவிலியத்தை அறிந்திடாத அறிவிலி என்றும் தம்மைப் பலவாறாகத் தாழ்த்திக் கூறுகிறார். மேலும், இறைவனின் தன்மைகளை ஆசிரியர் பாயிரப்பகுதியில் தானாய் இருப்பவன், துவக்கமும் முடிவும் இல்லாதவன், உருவில்லாதவன், அளவிலா நன்மைகளுடையவன், எங்கும் நிறைந்திருப்பவன், எல்லாவற்றிற்கும் காரணமானவன் என்றெல்லாம் புகழுகின்றார். சான்றாக இறைவன் எங்கும் நிறைந்திருப்பவன் என்பதை,

உள்ளொடு புறமும் ஒளிஇருள் பரப்பொடும்
ஊடறுத் துலவிடும் ஒப்பிலா மணியே!
தெள்ளுறு நற்றமிழ்ச் சுவைநின் பான்மையாய்த்
தித்தித் தினித்திட முந்தினர் மாந்திட
உள்ளெழு நன்மையாய் ஊரெழு உண்மையாய்
ஓங்கிப் பரந்துமே உன்னருள் பொங்கிடும்
விள்ளுதல் ஒல்லுமோ தள்ளுதல் நில்லுமோ
வேறுளும் மாறுளும் மூழ்கிடும் அண்ணலே!
(பாயிரம், பா.10)

எனப் பாடுகிறார். மேலும் பழைய ஏற்பாட்டில் உள்ள இறைவெளிப்பாட்டையும், புதிய ஏற்பாட்டில் உள்ள இறைவெளிப்பாட்டையும் விளக்கி இறுதியில் விவிலியம் வெளிப்பாட்டின் களஞ்சியம் என்கிறார். இறுதியில் நூல் வந்த வழியினைக் குறிப்பிட்டு, நூலாசான் வரலாற்றுடன் பாயிரத்தை முடிக்கிறார். மூவொரு கடவுளான தந்தை, மகன், தூய ஆவியானவர் ஆகியோரின் தன்மைகளைப்பாடி மூவரும் ஒரு கடவுளே எனப் பின்வருமாறு பாடுகிறார்:

எண்ணரும் ஈடிலா மூவொரு கடவுளோ
எமையீன் றெடுத்தநல் தாயாய், தந்தையாய்
மண்ணுயிர் அணைத்திவண் அன்பருள் சுரந்திடல்
மாறிலா வாய்மையாய்ப் பார்த்ததிஞ் ஞாலமே!
புண்வலி யால்உடல் துடித்திடப் பார்த்துயிர்
புலம்பி விதிர்ப்புறல் பூதலத் தியல்பே;
விண்டிடல் வேண்டுமோ ஆண்டவன் அதனினும்
விரைந்தடுத் துயர்களைந் தாற்றுவான் அணைத்தே!

(பாயிரம், பா.15)

பாயிரத்தில் ஆசிரியர் இறைவனின் சிறப்புகளைப் பாடியதுடன் இறைவன் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து அழைத்ததைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

காலங் கனிந்திடக் கடல்போல் இறைவனின்
கருணை வெள்ளப் பெருக்கெடுத் தார்க்க
மூலப் பரம்பொருள் முதுபெருந் தந்தை
முகந்தெரிந் தாபிர காமை அழைத்தார்!
ஞாலத் தவரினம் ஒருபெரும் இனமாய்
நலிவிலா தோங்கிப் பெருகிட வைத்தார்
ஆலின் விதையாய் அவர்குலம் முளைத்தெழ
அளவிலா தன்பைச் சுரந்தர வணைத்தார்!

(பாயிரம், பா.25)

என்னும் இப்பாடலில் இறைவனை மூலப் பரம்பொருள் என்றும், ஆபிரகாமை முதுபெருந் தந்தை என்றும் குறிப்பிட்டு, ஆபிரகாமின் சந்ததி ஒரு பெரிய இனமாக வளர்ந்தது எனக் குறிப்பிடுகிறார்.

முதல் பாகம்

ஆதியாகமக் காவியத்தின் முதல் பாகம் ஐந்து படலங்களை (1-5) உடையது. இப்படலங்களில் 214 பாடல்கள்

இடம்பெற்றுள்ளன. முதல் பாகத்தில் இறைவன் உலகையும் ஆதாம் ஏவாளையும் படைத்தது; ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளின் வாழ்க்கை; ஆதாம் ஏவாள் இறைவனின் சொல்லுக்குக் கீழ்ப்படியாமல் சாத்தானின் சூழ்ச்சியால் பாவம் செய்தமையும் அதனால் அருள் வாழ்வை இழந்தமையும்; ஆதாம் ஏவாள் அடைந்த துன்பங்களும் இறைவனின் அரவணைப்பும்; அதிதூதர் தூய மிக்கேலின் இறை ஊழியம் ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் பாகம்

ஆதியாகமக் காவியத்தின் இரண்டாம் பாகம் மூன்று படலங்களால் (6-8)ஆனது. இவ்விரண்டாம் பாகம் 197 பாடல்களை உடையது. இப்பாகத்தில் ஆதாம் ஏவாளுக்கு காயின், ஆபேல் என்னும் குழந்தைகள் பிறந்தது; காயீன் தன் தம்பி ஆபேலைக் கொலை செய்தமை; ஆதாம் ஏவாளின் துயரம்; மனிதர்களின் பாவ வாழ்க்கை; இறைவனின் கட்டளைப்படி நோவா கப்பல் கட்டியமை; இறைவன் மழையால் உலகை அழித்தமை; பாபேல் கோபுரம் கட்டத் தொடங்கியமை; இறைவன் அவர்களிடம் பல மொழிகளைப் பேசவைத்து திட்டத்தை முறியடித்தமை ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மூன்றாம் பாகம்

ஆதியாகமக் காவியத்தின் மூன்றாம் பாகம் ஆறு படலங்களால் (9-14) ஆனது. இம்மூன்றாம் பாகம் 221 பாடல்களை உடையது. இப்பாகத்தில் ஆபிரகாமின் வரலாறு; ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை; ஆபிரகாமும் அங்கிருந்த ஆண்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்தல்; சோதோம், கொமோராவின் அழிவு; ஈசாக்கின் பிறப்பு; இசுமயேலின் வளர்ச்சி; ஈசாக்கைப் பலியிடச் சென்றதும் இறைவன் தடுத்து நல்லாசிகள் வழங்கியதும்; ஆபிரகாமின் மனைவி சாராவின் மரணம் ஆகிய செய்திகள் விவரிக்கப் பட்டுள்ளன.

நான்காம் பாகம்

ஆதியாகமக் காவியத்தின் நான்காம் பாகம் ஏழு படலங்களால் (15-21) ஆனது. இந்நான்காம் பாகம் 292 பாடல்களை உடையது. இப்பாகத்தில் ஈசாக்கு -இரெபேக்கா

திருமணம்; ஆபிரகாமின் இறுதி நாட்கள்; ஈசாக்கின் இல்லற வாழ்வு; ஏசா, யாக்கோபு பிறந்தது; யாக்கோபு தன் தந்தையிடம் ஏசா எனக் கூறி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டது; ஏசா யாக்கோபைக் கொல்லத் திட்டமிடலும் தன்னைப் பாதுகாக்க யாக்கோபு தன் மாமன் இலாபானைச் சென்றடைதலும்; யாக்கோபு இலேயா மற்றும் இராகேலை மணத்தல்; யாக்கோபு-ஏசா சந்திப்பில் உடன்பிறப்பு புதுப்பொலிவு பெறல்; செக்கேமில் யாக்கோபின் மகள் தீனாவுக்கு ஏற்பட்ட அவமானம்; பெத்தேலில் இறைவன் யாக்கோபுக்கு ஆசி வழங்கல் ஆகிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் பாகம்

ஆதியாகமக் காவியத்தின் ஐந்தாம் பாகம் நான்கு படலங்களால் (22-25) ஆனது. இவ்வைந்தாம் பாகம் 194 பாடல்களை உடையது. இப்பாகத்தில் யோசேப்பின் சகோதர் அவரை விலைபேசி மிதியான் நாட்டு வணிகரிடம் 20 வெள்ளிக்காசுக்கு விற்றதும் வணிகர் யோசேப்பை போத்திபாரிடம் விற்றதும்; யூதாவும் தாமாரும்; போத்திபாரும் யோசேப்பும்; பார்வோனின் கனவுகளும் யோசேப்பின் விளக்கங்களும்; எகிப்தின் ஆளுநரான யோசேப்பின் செயல்பாடுகள் ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

ஆறாம் பாகம்

ஆதியாகமக் காவியத்தின் ஆறாம் பாகம் எட்டு படலங்களால் (26-33) ஆனது. இவ்வாறாம் பாகம் 289 பாடல்களைக் கொண்டது. இப்பாகத்தில் யோசேப்பின் சகோதரர் தானியம் வாங்க எகிப்துக்குச் சென்றது; இரண்டாம் முறை யோசேப்பின் சகோதரர் பென்யமினோடு எகிப்துக்குச் சென்றதும் அங்கு நிகழ்ந்த நிகழ்வுகளும்; யோசேப்பு தான் யார் என்பதைச் சகோதரர்களுக்குத் தெரியப்படுத்தி பார்வோன் கட்டளைப்படி ஏராளமான பொருட்களைச் சகோதரர்களுக்குக் கொடுத்து அனுப்புதல்; யாக்கோபு தம் குடும்பத்தாருடன் சென்று யோசேப்பைச் சந்தித்து பார்வோன் அரசனுடன் உரையாடியது; யோசேப்பின் குழந்தைகளான எப்ராயிம், மனாசேக்கு யாக்கோபு ஆசி வழங்கி யோசேப்பின் வழிமரபைப் போற்றியமை; யாக்கோபு தமது பன்னிரெண்டு மக்களுக்கு உரைத்த இறுதி உரையும் ஆசியும் அவருடைய மரணமும்;

யாக்கோபு கானான் நாட்டில் அடக்கம் செய்யப்பட்ட பின்னர் யோசேப்பு தம் சகோதரருடன் எகிப்துக்குத் திரும்பி, சகோதரரை அங்கு தங்கி வாழச் செய்து தமது 110ஆம் வயதில் மரணமடைந்தது; ஆண்டவரின் பேரன்பைப் போற்றி வணங்குதல் ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

காவிய மாந்தர்கள்

விவிலியத்திலுள்ள ஆதியாகமம் என்னும் நூலிலுள்ள குறிப்பிடத்தக்க வரலாற்று மாந்தர்கள் அனைவரும் ஆதியாகமக் காவியத்தில் மாந்தர்களாக விளங்குகின்றனர். ஆதாம், ஏவாள், காயின், ஆபேல், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, இசுமயேல், சாராள், இரெபேக்கா, ஏசா, யாக்கோபு, இலாபான், யோசேப்பு, போத்திபார், பார்வோன், யோசேப்பின் சகோதரர்கள், எப்ராயிரம், மனாசே ஆகியோர் ஆதியாகமக் காவியத்தில் குறிப்பிடத்தக்க மாந்தர்களாவர்.

உவமைகள்

காப்பியங்களில் உவமைகள் இடம்பெற்று அதன் சிறப்பை வலுப்படுத்துகின்றன. இவ்வுவமைகள் சொல்லும் செய்திகளுக்கு வலுவைக் கொடுத்து வாசகர்கள் மனதில் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன. உலகில் மக்கள் பாவ வாழ்க்கையில் மூழ்கிக் கிடந்தனர். அவர்களுடைய எண்ணிக்கையும் பல்லாயிரக் கணக்கில் காணப்பட்டது. அம்மக்கள் பாவ வாழ்வில் வீழ்ந்திருந்தமையை,

> **பெடைவிலகிக் கொக்கரிக்கும் கோழிச் சேவல்**
> **பிய்ந்திருக்கும் கூரையிலே ஏறிக் கொண்டு**
> **நடையளந்து வேறுபெடை தேடல் போன்றே**
> **நாலுமிலா மனிதரவர் மாறாய் நின்றார்!**
> **(ஏழாம் படலம், பா.6)**

என உவமை நயத்துடன் பாடுகிறார். அங்குள்ள மக்களின் செயல்பாடுகளைச் சேவல் கோழியின் செயல்களுக்கு உவமையாகக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது. மேலும் சான்றாகச் சில உவமைகள் பின்வருமாறு:

1. காட்டிலொரு மாடடையும் கொட்டில் போல (ப.114)
2. கூர்கெட்டுப் போய்விட்ட அம்பைப் போலே (ப. 119)
3. கொதிநீர் வீழ்ந்த மீன்போலே (ப.123)

4. ஆடிக் காற்றில் அகப்படு துரும்பாய் (ப.186)
5. தூரிகை ஓவியம் பன்னிறம் காட்டித் துலங்குதல் போல (ப.191)
6. ஊறிடும் ஆமடிப் பாலென (ப.203)
7. கன்றிரண்டில் ஒன்றிற்குப் பாலை ஊட்டிக்
காலெடுத்து மற்றொன்றை உதைக்கின் றாற்போல் (ப.217)
8. பாலை நிலத்தில் உலர்ந்த தருவும்
பசுமை படர்ந்து தளிர்த்ததைப் போன்றே (ப. 262)
9. ஆரத்தில் தொடுத்தமலர் கமழ்வ தைப்போல் (ப.279)
10. மரக்கிளையில் தாவுமொரு மந்தி போன்றே (ப. 304)
11. பாட்டுக்குள் பொருளிருக்கும் பாங்கைப் போன்றே (ப.310)
12. எரிவிளக்கின் முன்வைத்த ஓவி யம்போல் (ப. 350)

இவர் எளிமையான உவமைகளைப் பயன்படுத்தி, கூறப்படும் செய்திகளை எளிமையாக்குகிறார் என்பது தெளிவு.

திருக்குறள் கருத்துகள்

பெரும்பாலான கிறித்தவக் காப்பியங்களில் திருக்குறள் கருத்துகள் இடம்பெற்றுள்ளமை இயல்பானது. காப்பிய ஆசிரியர் சா. சாமிமுத்து அவர்களும் தமது காப்பியத்தில் பல இடங்களில் திருக்குறள் கருத்துகளைக் கையாண்டுள்ளார். ஐந்தாம் படலத்தில் ஆதாமின் கூற்றாக வரும்,

> **இருள்சேர் இருவினை சேரா மேலவன்**
> **மருள்நீக்(கி) எமைமுற் றாட்கொள அழைத்தனம்!**
> **பிறவியின் பெருங்கடல் நீந்திட வென்றே**
> **அறக்கடல் அந்தணன் அருட்கடல் மூழ்கினோம்!**
> **ஏவாள் எழுந்திடு! இறைவனைத் தொழுதிடு!**
> **மூவா முதல்வனை முழுமுதல் தலைவனை**
> **விட்டினிப் பிரியா வேட்கையில் பொழுதெலாம்**
> **கூட்டிநம் உயிரினில் கலந்திட மகிழ்வோம்**
> **என்றனன் ஆதாம் எழுஞா யிறானான்!**
> **பொன்றிடத் தீமையும் புதுமையும் புலர்ந்ததே!**
> **(ஐந்தாம் படலம், பா.13)**

என்னும் பாடலில்,

> **இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
> **பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (குறள்.6)**

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் (குறள்.10)

அறாழி அந்தணன் தாழ்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறஆழி நீந்தல் அரிது (குறள்.8)

என்னும் மூன்று திருக்குறள் கருத்துகள் காணப்படுகின்றன. ஒரே பாடலில் மூன்று திருக்குறள் கருத்துகளைப் பிணைத்திருப்பது ஆசிரியரின் திருக்குறள் புலமைக்குத் தக்க சான்றாக உள்ளது. மேலும் நோவாவின் இறை ஈடுபாட்டினைக் குறித்து,

மகன்தந்தைக் காற்றுகின்ற உதவி தன்னை
மதிப்பிட்ட வள்ளுவனார் வார்த்த கூற்று
தகவார்ந்த இவன்தந்தை நோற்ற தென்னோ
தனயனிவன் சான்றோனாய் விளங்கல் நன்றே!
(ஏழாம் படலம், பா.9, அடி.1-4)

எனப் பாடும் பாடல் பகுதியில்,

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல் (குறள்.70)

என்னும் குறளின் தாக்கத்தை அறிய முடிகிறது. பதினான்காம் படலத்தில்,

அன்பிற் குமுண்டோ அடைத்திடும் தாழும்
என்பையும் தன்னுடை மகனுக் களித்தவள்
இறைவனை நோக்கியே ஏந்திய கையினள்
நிறைவுறா தன்னுடை வாழ்வினைச் சொல்லி
மகப்பே றளிக்க வேண்டிய வேண்டலைத்
தகவுடைத் தென்றே தந்தையாம் கடவுள்
ஒருதிரு மகனை ஈசாக் கினியனைத்
தருநற் கருணை எண்ணியே வியந்தாள்!
(பதினான்காம் படலம், பா.10, அடி.1-8)

எனக் காணலாகும் பாடலில்,

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும். (குறள்.71)

என்னும் திருக்குறளின் கருத்து இடம்பெற்றுள்ளது. ஆறாம் படலத்தில் இடம்பெற்றுள்ள,

அன்பகத்தில் இல்லாத உயிரின் வாழ்க்கை
அழிந்தொழியும் சுரமாகும் சுட்டெ ரிக்கும்

பொன்னொளியாம் சூரியனின் வெப்பத் தாலே
போய்மாயும் அன்பில்லாப் புழுவேைப் போலே
நன்னெறியை விட்டகன்று நடப்போ மென்றால்
நடுங்குதுயர் வந்துறுத்த நலிந்தே போவோம்
என்றுமிந்த மெய்ம்மொழிகள் இகவா தேந்தி
இணைந்தெல்லா உயிரோடும் உறவாய் வாழ்வோம்

(ஆறாம் படலம், பா.15)

என்னும் பாடலில்,

அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று (குறள்.78)

என்னும் குறளின் செல்வாக்கை உணர்ந்து கொள்ளமுடிகிறது. ஆதியாகமக் காவியத்தில் இதுபோன்று ஏராளமான திருக்குறள் கருத்துகள் விரவி காணப்படுகின்றன. இச்சான்றுகள் ஆசிரியரின் திருக்குறள் புலமைக்குச் சிறந்த சான்றுகளாக அமைவதோடன்றி, நூலின் பெருமைக்கும் சிறப்புக்கும் ஆதாரமாக உள்ளன.

சங்க இலக்கியத்தின் தாக்கம்

ஆதியாகமக் காவிய ஆசிரியர் தமிழ் இலக்கியங்களில் ஆழங்கால் பட்டவர். ஆதலால் அவரது படைப்பில் இலக்கியத்தின் தாக்கம் தேவையான அளவு காணப்படுகின்றது. தமது காப்பியத்தில் பிள்ளைப் பேறு குறித்து,

பொன்னாய் மணியாய் பூண்ணி பரிசாய்
புகலரும் செல்வச் சீராய் சிறப்பாய்
மன்னா வுலகில் மன்னுதல் எண்ணி
மாமருந் தாக மகப்பே றேற்றல்
உன்னார் யாரே உலகென் றொன்றும்
ஒழியா திருப்பதும் கான்முளை வரநால்
அன்னை தந்தை என்பார் எவரால்
அரும்பெறல் புதல்வர் அவரால் அன்றோ

(பதிமூன்றாம் படலம், பா.26)

எனப் பாடுகிறார். இப்பாடலில் ,

மன்னா வுலகில் மன்னுதல் குறித்தோர்
தம்பெயர் நிறூஉவி தாம்மாய்ந் தனரோ (புறநானூறு, 165)

என்னும் புறநானூற்றுப் பாடலின் அடிகள் இணைந்துள்ளன. மேலும், ஆதியாகமக் காவியத்தில் நற்றிணைப் பாடலின் சாயல் கொண்ட பாடலும் ஆசிரியரால் பாடப்பட்டுள்ளது. அப்பாடல் பின்வருமாறு:

சிறுமியாய் இல்லில் சிற்றிடை சிணுங்கச்
சிறுநற் குறும்புகள் செய்தவள் ஓடி
முறுவலித் தன்னையை இருகரங் கொண்டே
மூச்செலாம் அடக்கிக் கட்டித் தழுவி,
மறுநொடி தாயவள் திணறிடு மாறே
மாறி இருகனம் முத்தம் மொத்தமாய்க்
குறுமகள் ஈந்தே குதித்தகன் றோடிய
காட்சியோ இன்றவர் கவன்றிட வைத்ததே!
(பதினைந்தாம் படலம், பா.40)

இப்பாடலில் நற்றிணைப் பாடலிலுள்ள சொற்களை அப்படியே எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக, நற்றிணைப் பாடலின் சாயலாக உள்ளது. அப்பாடல் பின்வருமாறு:

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம் பால்
விரி கதிர்ப் பொற்கலத்து ஒரு கை ஏந்தி
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண் என்று ஓக்குப் பிழைப்ப, தெண் நீர்
முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று,
அரி நரைக் கூந்தற் செம் முது செவிலியர்
பரி மெலிந்து ஒழிய, பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடி வறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்,
ஒழுகு நீர் நுணங்கு அறல் போல,
பொழுது மறுத்து உண்ணும் சிற் மதுகையளே!
(நற்றிணை, பா.110)

இதுபோன்று சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், திருவருட்பா, கம்பராமாயணம், பாரதியார் பாடல்கள், பாரதி தாசன் பாடல்கள் ஆகியவற்றின் தாக்கம் காப்பியம் முழுவதிலும் பரந்து காணப்படுகிறது.

கம்பராமாயணத் தாக்கம்

ஆதாமும் ஏவாளும் இறைவனின் கட்டளையை மீறி நடந்ததால் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறினர். அவர்கள் இருவரும் நடந்து செல்லும் போது மிகுந்த துன்பங்களை அனுபவித்தனர். வழிப்பயணத்தின் போது கால்களில் முட்கள் குத்தி இரத்தம் வழிந்தது, பாதங்கள் சூரியனின் வெப்பத்தால் துன்பமுற்றன. இந்நிகழ்வை,

கூரிய முட்கள் குத்த குருதியோ கொப்ப ளிக்க
நேரிய பாதை இல்லா நெடுஞ்சுரம் நடந்த போது
சூரியன் கொதித்த லர்ந்து சுட்டெரி வெப்பம் கக்கி
வேரிய கமல பாத வேல்விழி நோக வைத்தான்

(நான்காம் படலம், பா.11)

என ஆசிரியர் பாடுகிறார். இப்பாடல் கம்பராமாயணத்திலுள்ள,

வல் அரக்கரின் மால் வரை போய் விழுந்து
அல் அரக்கின் உருக்கு அழல் காட்டு அதர்க்
கல் அரக்கும் கடுமைய அல்ல நின்
சில் அரக்குண்ட சேவடிப் போது என்றான்

(நகர்நீங்கு படலம், பா.221)

என்னும் பாடலைப் போன்று அமைந்துள்ளது. இதுபோன்ற பல சான்றுகளைக் குறிப்பிடலாம்.

சித்தர் பாடல்களின் தாக்கம்

காப்பிய ஆசிரியர் சித்தர் பாடல்களிலும் அதிக ஈடுபாடு நிறைந்தவர் என்பதை ஆதியாகமக் காவியத்தைப் படிக்கும் போது அறிந்து கொள்ள முடிகிறது. சித்தர் பாடலான,

நந்த வனத்திலோ ராண்டி-அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந் தானொரு தோண்டி-மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி

(கடுவெளிச் சித்தர், பா.4)

என்னும் பாடலை ஆதாரமாகக் கொண்டு,

நந்தவன ஆண்டிகளாய்க் கடவுள் தந்த
நற்பேற்றுக் குடம்போட்டு உடைத்தே விட்டோம்!

(இரண்டாம் படலம், பா.45)

என ஆதாம் ஏவாள் செய்த பாவத்தால் மனிதர்கள் துன்புறுவதைப் பாடுகிறார்.

வருணனை

காப்பியத்திற்கான கூறுகளுள் வருணனையும் ஒன்று. காப்பிய ஆசிரியரின் கவித்திறனுக்குத்தக்க வருணனைகள் அமையும். இரண்டாம் படலத்தில் ஏதேன் தோட்டத்தைப் பற்றியும் அங்குள்ள சூழலைப் பற்றியும் குறிப்பிடும் போது வருணனையைச் சிறிது பயன்படுத்துகிறார். ஏதேனின் சிறப்பினை,

புண்ணியத்தின் பொன்கருக்கள் தோன்றி வந்தே
பூத்தெழுந்த தோட்டந்தான் அந்தத் தோட்டம்
கண்விரித்தே காணற்கோ அழகின் கூட்டம்
கவர்ந்தீர்க்கும் படிவளர்ந்த மரங்கள் ஈட்டம்
மண்மகளின் மென்மேனி தவழு கின்ற
மாசறியாக் குழந்தைகளாய் மொட்ட விழ்ந்தே
உண்டுவக்கும் தேன்துளிர்க்கக் கண்ட தென்றல்
ஓடிவந்தே அள்ளிமணம் தூவும் எங்கும்!
(இரண்டாம் படலம், பா.6)

மணமணக்கும் சுவைகுலவு பழங்கள் எல்லாம்
மகிழ்ந்துலவும் பறவையினம் கவர்ந்தி ழுக்கும்
குணமளிக்கும் செடிகொடிகள் படர்ந்த டர்ந்தே
குளிர்நிழலில் உறவுடனே படுத்து றங்கும்
இணரவிழ்ந்தே நாறுகின்ற மலர்கள் எல்லாம்
எழிலணிந்த கோலத்தால் இசைந்தே யாடும்
உணர்வடர்ந்த உயிர்களெல்லாம் படைத்தோன் உள்ளி
ஒருங்கிணைந்தே புகழ்போற்றி உவந்தே பாடும்!
(இரண்டாம் படலம், பா.7)

என்னும் பாடல்களின் வாயிலாக வருணிக்கிறார். அதாவது புண்ணியத்தின் பொன் கருக்கள் விதையாய் விழுந்து பூக்களோடு மலர்ந்திருக்கின்ற தோட்டமே ஏதேன் தோட்டமாகும். அழகெல்லாம் ஒருங்கு கூடிய அது, விழிகள் விரிய காணவேண்டிய எழில் மிக்கதாகும். அங்கே நிறைந்து செழித்திருக்கின்ற மரங்கள் மனதைக் கவர்ந்திழுக்கும்படி வளர்ந்திருக்கும். தரையெங்கும் மண்மகளின் மென்மையான மேனியைக் குற்றமற்ற குழந்தைகள் போல கொடிகள் தழுவிக் கிடக்கும். அவற்றில் பூத்திருக்கும் பூக்களில் தேனையும் மணத்தையும் கண்ட தென்றல் ஓடிவந்து அவற்றிலுள்ள நறுமணத்தை அள்ளி எங்கெங்கும் தூவும். மணமும் சுவையும் மிக்க பழங்கள் மகிழ்ந்து பறந்து திரிகின்ற பறவைக் கூட்டங்களைக் கவர்ந்து இழுக்கும். மரங்களின் நிழலில் செடி கொடிகள் அடர்ந்து படர்ந்து ஒன்றோடு ஒன்று உறவு கொண்டு படுத்து உறங்குவது போலக் காட்சிதரும். கொத்தாக மலர்ந்த மலர்கள் நறுமணத்தோடு எழிற்கோலம் காட்டி இசைந்து தென்றலில் ஆடும். உணர்வு மிக்க உயிர்கள் எல்லாம் இறைவனை மனதுள் எண்ணி ஒன்றிணைந்து புகழினைப் போற்றிப் பாடும் என அமைந்துள்ள வருணனை கவிநயம் மிக்கது.

பாபேல் கோபுரம் கட்டுவதற்காக மக்கள் முயற்சி செய்யும்போது இறைவனுக்கு எதிராகக் கட்டும் கோபுரத்தைக் கண்ட கதிரவன் கோபமடைகிறான். ஆகாயமண்டலத்திலுள்ள கோள்கள் கோபமடைந்தன. நட்சத்திர மண்டலம் கோபமுடையதாகக் காணப்பட்டது. நட்சத்திர மண்டலம் கோபம் அடைந்ததை,

மின்னலிடி மேகங்களோ பன்னீர் அள்ளி
மேதினியின் உடல்மணக்கத் தெளித்து உவக்கும்
புன்னைமரக் காடுகளோ பூக்க ளாலே
போடுகின்ற பந்தலின்பால் நிழல்வ ளர்க்கும்
என்னவண்ணம் இல்லையெந்தன் மேனிக் கென்று
எத்தனையோ கோடிமலர் சூடிக் கொண்டு
மின்னொளிரும் மண்மகளாள் தூயன் தன்னின்
மென்மைமிகு தாளிணைக்கு அணியே யானாள்!

(எட்டாம் படலம், பா.22)

என்னும் பாடலின் மூலம் வருணனை செய்கிறார். ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் இருக்கும் போது தென்றல் வீசியதை,

பகலவனின் ஒளிக்கரங்கள் பரவித் தேடி
பாவைமணி மரகதமென் மேனி வீசும்
இகலறியாப் பொற்கதிர்கள் அள்ளிப் பார்த்தே
இளைத்ததிர்ந்து புன்னைநிழல் மயங்கிச் சாயும்
முகமலர்ந்தே முல்லைமலர்க் காவி னூடே
முத்திமகள் ஒயிலாக உலவி வந்தாள்!
தகவறிந்த தென்றலவள் மேனி தொட்டே
தாழ்ந்தலையும் குழல்குளிரப் பரவிப் பாயும்

(இரண்டாம் படலம், பா.33)

என வருணிக்கிறார். சூரியனின் ஒளிக்கரங்கள் சொர்க்கத்தைத் தேடிவந்து ஏவாளின் மரகதமணி போல் ஒளிவீசும் மேனியிலிருந்து வெளிப்படும் பொன்னிறக் கதிர்களை அள்ளிப் பார்த்து, தன் ஒளி அவைகளுக்கு ஈடில்லை என்று அதிர்ந்து வருந்தி புன்னை மர நிழலில் மயங்கிச் சாயும். முல்லைகள் மலர்ந்திருக்கின்ற சோலைகளினூடே முகமலர்ச்சியுடன் அவள் ஒயிலாக நடந்து வந்தாள். அவளுடைய பெருமையறிந்த தென்றல் அவளது மேனி தொட்டு நீண்ட குழலைக் குளிர்ச்சியடையும்படி பாய்ந்து பரவிச் செல்லும் என்னும் தென்றலைப் பற்றிய வருணனை சுவைமிக்கது.

சோதோம், கொமோராவின் அழிவைப்பற்றி குறிப்பிடும் பகுதியில் சோதோம் மண்ணின் மாலைப்பொழுதினை வருணித்துப் பாடுகிறார்.

மாலைக் கன்னி மண்மகள் மார்பில்
மணிக்கால் பதித்து மகிழ்ந்து வந்தாள்!
சோலை மயில்குழாம் அவள்வர வோர்ந்து
சொப்பனம் காணும் பூங்கிளை சேர்ந்து
ஓலைக் குடில்மகள் தலைவனைத் தேடும்
உண்மையைத் தெரிந்து திக்கெலாம் நோக்க
வாலைக் குமரிகள் முறுவலி னோடு
வந்தனர் மொய்த்து வயல்பணி விட்டே!
(பதினொன்றாம் படலம், பா.1)

என்னும் இப்பாடலில் இவ்வுலகமாகிய மண்மகளின் மார்பில் தன் மணிக்கால்கள் பதித்து மாலைப் பொழுதாகிய கன்னி மகிழ்ச்சியுடன் வந்தாள்; அவள் வருகையை அறிந்த, சோலை மயில் கூட்டமெல்லாம் பூக்களை உடைய மரக்கிளையைச் சேர்ந்து உறங்கவும், கனவு காணவும் தொடங்கின; தங்கள் வயல் வேலைகளை முடித்து இளம் பருவத்துப் பெண்கள் புன்முறுவலோடு திரும்பி வந்தனர் என மாலைப் பொழுதினை ஒரு கன்னிப் பெண்ணாக உருவகித்து வருணனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்குறிப்பேற்றம்

இயல்பாக நடக்கும் நிகழ்ச்சியில் கவிஞர் தன்னுடைய குறிப்பை ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்ற அணியாகும். யாக்கோபை ஏசா கொல்லத் திட்டமிட்டதை அறிந்தவுடன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக யாக்கோபு தனது மாமனான இலாபானைக் காணச் செல்கிறான். அப்போது பயணத்தின் போது வழியில் தூங்கினான். அதை,

தக்கதோர் இடத்தைத் தேர்ந்தவ் விடத்துத்
தலையணை யாக இருந்தகல் எடுத்து,
சொக்கிடும் தூக்கம் தழுவிடும் வேளையில்
தூங்கினார் கல்தலை வைத்தவ் விடத்தே;
பக்கமே வளர்ந்த படர்செடி கொடிகள்
பாசம் அடர்ந்த சொந்தங் களாக
அக்களிப் போடு அலைந்தொலி எழுப்பி
ஆரா ரோவென் றவருக் கிசைத்தன!
(பதினெட்டாம் படலம், பா.17)

என ஆசிரியர் பாடுகிறார். இப்பாடலில் யாக்கோபு தூக்கத்திற்காக அருகில் இருந்த கல்லைத் தலையணையாக வைத்துக் கொண்டு தூங்கினான். அப்போது அருகிலுள்ள செடிகொடிகள் காற்றால் அசைந்தாடின. இது இயல்பான ஒரு நிகழ்வு. ஆனால் ஆசிரியர் இதில் தன் குறிப்பை ஏற்றி, இச்செடி கொடிகள் யாக்கோபின் சொந்தங்களாக மாறி அவர் உறங்குவதற்காக ஆராரோ எனத் தாலாட்டுப் பாடியதாகப் பாடுகிறார்.

நிலையாமைக் கருத்துகள்

ஆதியாகமக் காவியத்தின் பல இடங்களில் ஆசிரியர் நிலையாமைக் கருத்துகளைக் குறிப்பிட்டுள்ளார். உலகில் புதியனவாகத் தோன்றும் அனைத்தும் அழிந்துபடும் என்பதை,

> **இதுவே உலகின் இயற்கை என்பதால்**
> **புதுப்புதித் தாகத்தோன்றுவ தனைத்தும்**
> **மாறிப் போவதும் மறைந்தே போவதும்**
> **ஏறி மேட்டில் இருந்தே வீழ்வதும்**
> **தடுத்திடு மாற்றல் இலையிங் கெவர்க்கும்**
> **எடுப்பதும் கவிழ்ப்பதும் எதுநிகழ்ந் தாலும்**
> **நிலைத்து நிற்பதோ நீணிலத் திலைகாண்!**
> **மலையும் வீழும் மண்டல மனைத்தும்**
> **ஒன்றோ டொன்று உருண்டும் புரண்டும்**
> **சென்றே வொழியும் தேவனின் சித்தமே!**
> **(பதினான்காம் படலம், பா.3)**

எனப் பாடுகிறார். மேலும் பதினான்காம் படலத்தில் மனிதனின் இளமைக் காலம், முதுமையின் அவலம், மனிதனின் இறுதி நாட்கள் ஆகிய கருத்துகளில் பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மேலும், வாழ்வு நிலையில்லாதது என்பது குறித்து,

> **நினைத்ததை முடிப்பவன் நான்நான் என்றெலாம்**
> **நிலையிலா மனிதன் நிமிர்த்திடின் நெஞ்சினை**
> **கனைப்பவன் செல்லும் வழியினில் வீழ்ந்தே**
> **கலங்கி அழுதிடும் காட்சிகள் ஆயிரம்**
> **பனைமரத் தேறிப் பழம்பறிப் பானும்**
> **பாவம், பிடிவிடின் வீழ்ந்திறப் பானே!**
> **வினைதனை முடிக்க விதைக்குயிர் தரும்இறை**
> **விரும்பிட விலையெனில் அனைத்தும் பாழ்படும்!**
> **(பதினைந்தாம் படலம், பா.12)**

எனப் பாடுகிறார். யோசேப்பின் மரணம் குறித்து,

பிறப்பென்றால் இறப்பிருக்கும் என்னும் உண்மை
பேருலகில் அறியாது வாழும் மாந்தர்
இறக்கின்ற நேரமதும் நெருங்கும் போது
எண்ணியதைத் தடுப்பதற்குத் துடிக்கின் றாரே!
கறக்கின்ற பால்மீண்டும் காம்பில் சென்று
கலந்திருக்க எம்முயற்சி பலிக்கும் சொல்வீர்?
நிறம்மாறி நிறம்வேறாய் மாறக் கூடும்
நீணிலத்தில் இறப்பதென்ப தாதைப்போ லன்றே!
(முப்பத்திரண்டாம் படலம், பா.40)

எனப் பாடுகிறார். பிறப்பு உண்டு என்றால் இறப்பும் இருக்கும் என்னும் உண்மையை அறியாமல் வாழ்கின்ற மக்கள் இறக்கின்ற நேரம் நெருங்கும்போது அது வராமல் தடுப்பதற்குத் துடிதுடிக்கின்றார்கள். மடியிலிருந்து கறந்த பால் மீண்டும் காம்பில் சென்று புகுதல் இல்லை. அப்படி ஒரு முயற்சி செய்தால் அது பயனளிக்குமா சொல்லுங்கள். நிறம் கூட மாறக் கூடும், ஆனால் இவ்வுலகில் இறப்பு உண்டு என்பது மாறாத உண்மையாகும். இக்கருத்தமைந்த இப்பாடலில் உலகினில் இறப்பு என்பது உறுதியானது என விளக்கம் தருகிறார்.

புதிய ஏற்பாட்டுச் செய்திகள்

பழைய ஏற்பாடான ஆதியாகமத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள காப்பியமான ஆதியாகமக் காவியத்தில், புதிய ஏற்பாட்டிலுள்ள யோவான் மற்றும் ரோமர் ஆகிய நூல்களில் காணலாகும் ஆபிரகாம் பற்றிய செய்திகளையும் ஆசிரியர் இக்காப்பியத்தில் எடுத்தாண்டுள்ளார். பதினாறாம் படலம் ஆபிரகாமின் இறுதி நாட்களைப் பற்றி விவரிக்கிறது. யோவான் எழுதிய நற்செய்தி நூலில் எட்டாம் அதிகாரம் 31ஆம் வசனத்திலிருந்து 59 ஆம் வசனம் வரையிலான செய்திகளை ஆதாரமாகக் கொண்டு மூன்று பாடல்களும், ரோமர் 4ஆம் அதிகாரம் முதலாம் வசனத்திலிருந்து 14ஆம் வசனம் வரையிலான செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இயேசு கிறிஸ்து யூதர்களைப் பார்த்து கூறியதற்கு மறுமொழியாக அவர்கள் கூறிய பகுதி சான்றாகத் தரப்படுகிறது:

என்றதும் அவர்களோ, "நாங்கள் அனைவரும்
எங்கள் தந்தை ஆபிர காமின்
பின்வரு வழிநல் மரபினர் அன்றோ,
பாரினில் எவர்க்கும் அடிமைகள் அல்லவே"

சொன்னவர் கேட்கச் சுடச்சுடச் சொன்னார்,
சொல்லிய நீங்கள் ஆபிர காமின்
நன்மர பதனின் மக்களாய் விளங்க
நாளும் அவர்போல் நடந்திட வேண்டும்
(பதினாறாம் படலம், பா.15)

ஆதாம் முதல் யோசேப்பு வரையிலான வரலாற்றுக் களஞ்சியம்

ஆதியாகமக் காவியமானது, ஆதாம் தொடங்கி யோசேப்பு வரையிலான வரலாற்றினை விவரிக்கும் வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்கிறது. விவிலியத்தின் ஆதியாகம நூல் முதன்மையானது மட்டுமன்றி தொன்மையான நிகழ்வுகளை அடக்கிய நூல். உலகம் படைக்கப்பட்ட வரலாறு மற்றும் மனிதன் படைக்கப்பட்ட வரலாறு தொடங்கி, மனிதனின் வரலாற்று நிகழ்வுகள் ஆண்டு வரிசைப்படி விரிவாக எடுத்தோதப்பட்டுள்ளன. ஆதியாகமத்தில் நோவாவின் மூலம் கடவுள் மனித இனத்தை மீண்டும் முறைப்படுத்திய நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கன.

கவித்திறம்

காப்பிய ஆசிரியர் சாமிமுத்து அவர்களின் கவித்திறனுக்குத் தக்க சான்றாக இக்காப்பியம் அமைந்துள்ளது.

கார்மேகம் இல்லாமல் மழையும் உண்டா?
கரும்விழிகள் இல்லாமல் பார்வை உண்டா?
ஏர்பூட்டல் இல்லாமல் விளைவும் உண்டா?
ஈரந்தான் இல்லாமல் முளையும் உண்டா?
மார்தட்டி நிற்கின்ற பொல்லார் எல்லாம்
மாபரனின் இசைவின்றி இயங்கல் உண்டா?
கூர்கெட்டுப் போய்விட்ட அம்மைப் போலே
கோள்கெட்டுப் போனார்கள் இறைவன் விட்டே!
(எட்டாம் படலம், பா.29)

என்னும் பாடலில் இறைவனை மக்கள் மறந்து பாபேல் கோபுரம் கட்ட எண்ணியதை ஆசிரியர் தம் கவித்துவத்தில் எடுத்தியம்புகிறார். மேலும்,

என்றவர் தமக்குள் எண்ணிடும் போதே
ஏந்திழை இரெபேக்கா வெனும் பெயரினள்
தன்னுடை தோளில் தடங்குடந் தாங்கித்
தளிர்என அசைந்தே குறுகினள் ஆங்கண்!

பொன்னெனப் பளிச்சிடும் மேனியள் அழகெலாம்
பூத்துப் பொலிந்திடும் புன்னகை முகத்தினள்
அன்னமாய் வந்தவள் ஆபிர காமின்
அருங்குடி தோன்றிய பெத்துவேல் மகளே!
(பதினைந்தாம் படலம், பா.8)

என்னும் பாடலில் இரெபேக்காவின் புன்னகைப் பூத்த முகத்தினை பாடியுள்ள திறம் பாராட்டத்தக்கது. மேலும் யோசேப்பு தம் தந்தையை அணைத்து அழுததை,

இரண்டுபுற மலைச்சரிவில் பாயும் வெள்ளம்
இறங்கிவழிந் தோடிவந்து ஓரி டத்து
மரங்களடர் பள்ளத்தில் பாயக் கண்டு
மதிப்பிட்டு முன்பின்னைப் பகர்வார் யாரோ?
வரமருளும் இறைவனுக்கே வெளிச்சம் என்றால்
வையத்துக் கூறறிவோர் எவரால் ஒல்லும்!
உரமிகுந்த யோசேப்போ தேரி னின்று
ஓடோடி வந்தணைத்துக் கொண்டார் தந்தை!
(இருபத்தொன்பதாம் படலம், பா.19)

என்னும் பாடலின் வாயிலாக வெளிப்படுத்துகிறார். மலைச்சரிவில் இரண்டு புறங்களிலிருந்து பாயும் வெள்ளம் மிக்க வேகத்தோடு வழிந்தோடி வந்து மரங்கள் அடர்ந்திருக்கின்ற பள்ளத்தில் பாய்கின்றபோது, எது முன்னே வந்தது எது பின்னே வந்தது என்று மதிப்பிட்டுரைக்க யாரால் இயலும்? அது வரம் தருகின்ற இறைவனுக்கே தெரியும் என்றால் உலகத்தில் இருக்கின்ற மனிதர் எவரால் முடியும்? வலிமை மிகுந்த யோசேப்பு தேரிலிருந்து ஓடோடி வந்து அவனை அணைத்துக் கொண்டார் என்பது இப்பாடலின் கருத்தாகும். சான்றாகக் கொடுத்துள்ள இம்மூன்று பாடல்களின் வாயிலாக ஆசிரியரின் கவித்திறனைப் புரிந்து கொள்ளலாம்.

பிற்சேர்க்கை

ஆதியாகம காவியத்தில் ஆசிரியர் பிற்சேர்க்கை என்னும் பகுதியின் மூலமாக உரைநடை வடிவில் ஆதாம், காயீன், நோவா, நாகோர், ஆபிரகாம், இஸ்மயேல், ஏசா ஆகியோரின் வழி மரபுகளைப் பட்டியலிடுகிறார். சான்றாக ஆதாமின் வழிமரபினரைப் பின்வருமாறுச் சுட்டுகிறார்:

காயீன், ஆபேலைப் பெற்ற ஆதாம் தன் மனைவியுடன் கூடி வாழ, அவளும் மகன் ஒருவனைப் பெற்று அவனுக்குச் சேத்து

> என்று பெயரிட்டான். "காயின் ஆபேலைக் கொன்றதால் அவனுடைய இடத்தில் இன்னொருவனைக் கடவுள் வைத்தருளினார்' என்றாள். சேத்து பிறந்தபின் ஆதாம் எண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்தான். ஆதாமுக்கு மேலும் புதல்வரும், புதல்வியரும் பிறந்தனர். மொத்தம் தொள்ளாயிரத்து முப்பது ஆண்டுகள் வாழ்ந்தபின் ஆதாம் இறந்தான்.
>
> சேத்துக்கு ஏனோசு பிறந்தான். ஏனோசுக்குக் கேனான் பிறந்தான். கேனானுக்கு மகலலேல் பிறந்தான். மகலலேலுக்கு எரேது பிறந்தான். எரேதுக்கு ஏனோக்குப் பிறந்தான். ஏனோக்குக்கு மெத்துசேலா பிறந்தான். மெத்துசேலாவுக்கு இலாமேக்கு பிறந்தான். இலாமேக்கிற்கு நோவா பிறந்தான். நோவாவிற்குச் சேம், காம், எப்பேத்து ஆகியோர் பிறந்தனர். அப்போது நோவாவுக்கு ஐந்நூறு வயது. (ப. 416)

இப்பகுதியின் மூலம் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள வரலாறுகளை விரிவாக அறிந்து கொள்ள முடிகிறது. காப்பியத்தைப் படிக்கும் வாசகர்களுக்கு இந்த பிற்சேர்க்கை மிகவும் உதவியாக அமைந்துள்ளது.

ஆதியாகமக் காவியம் விவிலியத்திலுள்ள ஆதியாகமம் என்னும் முதல் நூலை மட்டும் ஆதாரமாக வைத்து எழுதியதால் அனைத்துக் கருத்துகளும் இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் தாம் சொல்ல வேண்டிய செய்திகளை விரிவாகவும் சிறப்பாகவும் வெளிப்படுத்தியுள்ளார். ஆசிரியரின் கவித்திறனுக்குச் சான்று பகரும் விதத்தில் இக்காப்பியம் அமைந்துள்ளது.

> ஆதியாகமக் காவியத்தின் பக்திச் சுவையே இதன் இதயத் துடிப்பாகும். இறைப்பற்றும் மனித நேயமும் இதன் உயிரோட்டமாகும். தமிழ் மொழிக்கும் கிறித்தவ சமயத்திற்கும் இக்காவியம் ஒரு புத்தணியாகும்; தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு புதிய வரவாகும்; மொழிக்கலப்பில்லாத செம்மொழிக்கு வளங்கூட்டும் பேரிலக்கியப் படைப்பாகும் (ப.xiv)

என்னும் ஆசிரியரின் கூற்று சிந்தனைக்குரியது.

IV கிறிஸ்துவின் வரலாற்றுக் காப்பியங்கள்

7. ஞானானந்த புராணம்

இலங்கைத் தமிழர்களின் கிறித்தவ இலக்கியப்பணி கிறித்தவ இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. இலங்கையிலிருந்து வெளிவந்த கிறித்தவக் காப்பியங்களுள் திருச்செல்வர் காவியத்தைத் தவிர எஞ்சிய அனைத்தும் புராணம் என்னும் பெயரிலேயே அமைந்துள்ளன.

ஆசிரியர் அறிமுகம்

ஞானானந்த புராணம் நூலின் ஆசிரியர் இலங்கையிலுள்ள தெல்லிப்பழையைச் சேர்ந்த தொம் பிலிப்பு நாவலர் ஆவார். இவர் இலக்கண, இலக்கியங்களிலும், வேத நூல்களிலும் மிக்கப் புலமை பெற்றவர். இவர் கத்தோலிக்கக் கிறித்தவராவார். ஞானானந்த புராணத்தைத் தொம் தியோகு என்பவரின் வேண்டுகோளிற்கு இணங்க தொம் பிலிப்பு நாவலர் இயற்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புராணம் இயற்றப்பட்ட வரலாறு

ஞானானந்த புராணத்தைப் பாடினோர், பாடுவித் தோர்களைப் பற்றிய வரலாற்றைப் பின்வரும் பாடல் தெளிவுறுத்துகிறது:

அல்லலுறு மஞ்ஞானத் திமிரந்தேய
    வருள்ஞான விசுவாச விளக்கமுந்நூற்
புல்லிய சொற்சிறிதெடுத்து விருத்தப்பாவாய்ப்
    போந்தவு ரோமாபுரியின் சங்கத்தோராற்
தொல்லுலகிலுயர்ந்த குருகுலத்து மன்னன்
    றோந்தியோகெனு முதலிமுயற்சியாலே
தெல்லிநகர் வேளான் தொம்பிலிப்புச்
    செந்தமிழிற் காப்பியமாய்ச் செய்தான் மன்னோ

காப்பிய அமைப்பு

ஞானானந்த புராணம் உற்பத்தி காண்டம், உபத்திரவ காண்டம், உத்தான காண்டம் என்னும் மூன்று காண்டங்களால்

ஆனது. காண்டங்கள் சருக்கங்களால் பகுக்கப்பட்டுள்ளன. பாயிரச் சருக்கத்தைத் தவிர்த்து, பிரதம ஆரம்பச் சருக்கம், பரிசுத்த மாதாவின் திருஅவதாரச் சருக்கம், வழிப்படு புலம்பற் சருக்கம் என்னும் இருபத்து மூன்று சருக்கங்களால் இப்புராணம் அமைந்துள்ளது. ஞானானந்த புராணம் 1104 விருத்தப்பாக்களைக் கொண்டது. ஞானானந்த புராணத்திற்கு விசுவாச விளக்கம் என்னும் பெயரும் உண்டு.

நூலின் பதிப்பு வரலாறு

ஞானானந்த புராணத்தை 1874 ஆம் ஆண்டு சென்னையை அடுத்த இராயபுரம் அ. சவரியப்ப முதலியாரின் மகனாகிய ச. ஜெகராவு முதலியார் பதிப்பித்துள்ளார். இக்காப்பியத்திற்கு தி. விசாகப் பெருமாள் ஐயர் மற்றும் பல புலவர்கள் சாத்துக்கவி பாடியுள்ளனர். தொம் தியோகு 1825ஆம் ஆண்டு காலமானதால், இக்காப்பியம் 1825ஆம் ஆண்டிற்கு முன்னர் இயற்றப் பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நூலிலிருந்து ஒரு பாடல்

ஞானானந்த புராணம் நூலிலிருந்து கிடைக்கப்பெற்ற ஒரு பாடல் பின்வருமாறு:

என்றினைய நிகழ்ந்தவண்ண மருளப்ப
னன்னைதன்பா லிசைப்ப வெய்தி
பொன்னுடலம் வெயர்பொடிப்பப் பொருமியுள்ளம்
பறையடிப்பப் புலன்வாய் விம்ம
நின்றனன்மெய் தள்ளாடி நெடுந்தாரை
கண்பனிப்ப நிலத்தில் வீழ்ந்து
துன்றுமல ரடியிறைஞ்சித் தோன்றல்படுந்
துயரமெலாஞ் சொல்ல லுற்றான்.

(வழிப்படு புலம்பல் சருக்கம், பா.1)

ஞானானந்த புராணம் பற்றிய பல்வேறு நூல்களிலிருந்தும் கிடைத்த செய்திகள் மிகக் குறைவானதேயாகும். நூல் கிடைத்திருப்பின் நூல் பற்றிய செய்திகளை முழுமையாக அறிந்திருக்கலாம்.

8. கிறிஸ்தாயனம்

தமிழ் நாட்டுக் கிறித்தவரால் எழுதப்பட்ட முதல் கிறித்தவக் காப்பியம் என்னும் பெருமையை உடையது கிறிஸ்தாயனம் ஆகும். இதன் ஆசிரியர் கிறித்தவக் கீர்த்தனைகள் எழுதிப் புகழ் பெற்ற ஜான் பால்மர் ஆவார். இக்காப்பியம் ஜான் பால்மரால் 1865ஆம் ஆண்டு நாகர்கோவிலில் பதிப்பிக்கப் பட்டது. பின்னர் இக்காப்பியம் இரண்டாம் பதிப்பாக 2008 ஆம் ஆண்டு ஆசியவியல் நிறுவனத்தின் மூலம் வெளிவந்தது.

ஆசிரியர் வரலாறு

கன்னியாகுமரி மாவட்டக் கீர்த்தனைக் கவிஞர்களுள் முதன்மையானவர் ஜான் பால்மர். இவர் நாகர்கோவிலிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மயிலாடி என்னும் ஊரில் 1812ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் நாள் பிறந்தார். இவ்வூரில் தான், தென் திருவிதாங்கூரின் முதல் சீர்திருத்த ஆலயம் 1809ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இச்சபை குமரி மாவட்டம் மற்றும் தென்கேரளத் திருச்சபைகளுக்குத் தாய்ச்சபையாக விளங்குகிறது.

கிறித்தவரான வரலாறு

ஜான் பால்மரின் தந்தையார் ஞானப்பிரகாசம், தென்திருவிதாங்கூரின் முதல் கிறித்தவரான மகாராசன் வேதமாணிக்கம் தேசிகரின் நெருங்கிய உறவினர். ஆனால் வேதமாணிக்கம் தேசிகரைப் போல் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர். வேதமாணிக்கம் தேசிகர் கன்னியாகுமரி மாவட்டத்தின் முதல் கிறித்தவர் என்னும் பெருமைக்குரியவர். இவருடைய அழைப்பின் பேரிலேயே தரங்கம்பாடியிலிருந்த செர்மன் நாட்டு நற்செய்தியாளர் அருள்திரு. W.T. ரிங்கல்தௌபே மயிலாடிக்கு வந்து திருப்பணியாற்றினார் என்பது குறிப்பிடத் தக்கது. வேதமாணிக்கம் தேசிகரின் மரபில் வந்த பலரும் மிக உயர்வான நிலையை அடைந்ததுடன் இறைப்பணியுடன் கிறித்தவ இலக்கியப் பணிகளும் செய்துள்ளனர். இவர்களுள் ஜான் பால்மர், தேவவரம் முன்ஷியார், அருள்திரு. சி.மாசிலாமணி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வேதமாணிக்கம் தேசிகர் கிறித்தவ சமயத்தைத் தழுவியதால் அவரை வெறுத்த ஞானப்பிரகாசம் ஆத்திரமடைந்து

வேதமாணிக்கம் தேசிகரைச் சாபமிட்டு அவருக்கு எட்டு நாட்களுக்குள் நல்லதொரு பாடம் கற்பிப்பதாகக் கூறினார்.

எட்டு நாட்களுக்குப் பின்பும் தனது சாபம் மகாராசன் வேதமாணிக்கம் தேசிகரை நெருங்காததால் ஆத்திரம் அடைந்த ஞானப்பிரகாசம் முப்பது நாட்களுக்குள்ளாக வேதமாணிக்கம் இவ்வுலகில் உயிருடன் இருக்கமாட்டார் என மீண்டும் சாபமிட்டார். முப்பது நாட்கள் கழிந்த பின்னரும் எதுவும் நடைபெறவில்லை. வேதமாணிக்கம் தேசிகரின் பின்னிலைமையானது முன்னிலைமையைக் காட்டிலும் ஆன்மிக உற்சாகத்துடன் சிறப்பாகவே அமைந்தது. எனவே, தம் தோல்வியை ஞானப்பிரகாசம் ஒப்புக்கொண்டார். மகாராசன் வேதமாணிக்கம் தேசிகரின் தெய்வமே உண்மையான தெய்வம் என்பதை உணர்ந்து இயேசு கிறிஸ்துவைத் தம் சொந்த மீட்பராக ஏற்றுக் கொண்டார். ஞானப்பிரகாசத்திற்குப் பால்மர் எனவும், அவரது மகனுக்கு ஜான் பால்மர் எனவும் அருள்திரு. ரிங்கல்தௌபேயால் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. ஜான் பால்மரின் தந்தையார் மிஷன் வயல்களுக்கு மேற்பார்வையாளராகப் பணிபுரிந்தார். இன்றும் இவரது குடும்பத்தினர் அனைவரும் தங்கள் பெயருடன் பால்மர் என்னும் பெயரை இணைத்துள்ளனர்.

கல்வி

தமிழிலக்கியத்தில் தேர்ச்சி பெறத் தமிழ்ப் பண்டிதர் திருவம்பலத் திண்ணமுத்தம் பிள்ளையிடம் ஆரம்பக் கல்வியும் தொடர்ந்து நாகர்கோவில் இறையியல் பள்ளியில் திருமறைக் கல்வியும் பயின்றார். தமிழ், ஆங்கிலம், மலையாளம், வடமொழி மற்றும் கிரேக்க மொழி ஆகிய பாடங்கள் அங்கு கற்றுக் கொடுக்கப்பட்டன. ஜான் பால்மர் இறையியலில் அதிக நாட்டம் கொண்டு விளங்கியதால் அவர் தந்தை உயர் கல்விக்காகச் சென்னைக்கும் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்த வேதசாஸ்திரக் கல்லூரிக்கும் அனுப்பி வைத்தார். உயர்கல்வியை முடித்து மயிலாடிக்குத் திரும்பிய ஜான் பால்மரை மிஷனெரி அருள்திரு. மால்ட் தமக்கு எழுத்தராக நியமித்தார். தொடர்ந்து நாகர்கோவிலில் புதிதாக நிறுவப்பட்ட அச்சுக்கூடத்தின் பணிகளைக் கவனிக்கும் பொறுப்பாளராகவும் நியமனம் செய்யப்பட்டார்.

தொடக்ககாலப் பணி

ஜான் பால்மர் 1830ஆம் ஆண்டு ஜூலை ஐந்தாம் நாள் பேரின்பம் அம்மாளை வாழ்க்கைத் துணைவியாக்கினார். இத்தம்பதியர்க்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தனர்.

நாகர்கோவிலில் மிஷனெரியாகப் பணி செய்து வந்த அருள்திரு. மால்ட்டுக்கு ஊழியத்தில் துணை செய்யும் பொருட்டு அருள்திரு. ஆடிஸ் அனுப்பப்பட்டபோது அவருக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கும் பணியில் ஜான் பால்மர் அமர்த்தப்பட்டார். பின்னர் அருள்திரு. ஆடிஸ் கோயம்புத்தூர் பகுதியில் நற்செய்தி ஊழியத்தை ஆரம்பிப்பதற்காக அனுப்பப்பட்டபோது தம் குடும்பத்தினருடன் ஜான் பால்மரும் சென்றார். கோயம்புத்தூரின் காலநிலை திருமதி. பேரின்பம் அம்மாளுக்கு ஒத்துக் கொள்ளாததால் நோய்வாய்ப்பட்டார். எனவே ஓராண்டு நற்செய்தி ஊழியத்திற்குப் பின் குடும்பத்துடன் நாகர்கோவிலுக்குத் திரும்பினார்.

அருள்திரு. மால்ட், ஜான் பால்மர் குடும்பத்தை அன்புடன் ஏற்று, சுதேசி துணை உதவியாளராகப் பணியில் சேர்த்தார். பிற பணிகளுடன் அச்சுக்கூடத்தில் மொழிபெயர்ப்பு, மெய்ப்புகளைத் திருத்தும்பணி, கிறித்தவ நற்செய்திகளைத் துண்டுத்தாள்களில் அச்சிட்டு விநியோகம் செய்யும் பணி ஆகியவற்றையும் அருள்திரு. மால்ட்டுடன் மேற்கொண்டார்.

1845ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ஆம் நாள் இலண்டன் மிஷன் சங்கத்தின் 50ஆவது ஆண்டு விழா மயிலாடியில் நடைபெற்றது. அன்றைய தென் திருவிதாங்கூரிலுள்ள அனைத்து மிஷனெரிமார்களும், ஊழியர்களும், கிறித்தவர் பலரும் கூடி ஆராதனை செய்தனர். ஆராதனையில் இலண்டன் மிஷன் சங்கத்தைப் பற்றியும் அருள்திரு. ரிங்கல்தௌபே, வேதமாணிக்கம் தேசிகர் ஆகியோரைப் பற்றியும் அவர்களின் சேவைகளைப் பற்றியும் ஜான் பால்மர் உரை நிகழ்த்தினார். மட்டுமின்றி,

"ஆ இது சந்தோஷம், சந்தோஷம்"

என்ற பாடலை இயற்றி அன்று இராகத்துடன் பாடினார். அச்சிறப்புத் திருநாளில் தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஊழியம் செய்வதற்காகக் "கெம்பீர சத்தம்" என்னும் குழு அமைக்கப்

பட்டது. அக்குழுவில் ஜான் பால்மரும் உறுப்பினராய் இருந்தார். அக்குழுவின் முயற்சியினால் நாகர்கோவில் சேகரத்தின் வடபாகத்திலுள்ள புளிக்குடி, காட்டுப்புதூர், ஞாலம், அரசன்குழி, தாழக்குடி என்னும் கிராமங்களில் சபைகள் நிறுவப் பட்டன. ஜான் பால்மர் கவிபாடுவதுடன் புதிய சபைகளை நிறுவி ஊழியமும் செய்து வந்தார்.

நற்செய்தி ஊழியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியா முழுவதிலும் குறிப்பாகத் தென்திருவிதாங்கூர் பகுதியில் சாதிக்கொடுமை தலைவிரித்தாடியது. இதன் காரணமாக ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட மக்கள் கிறித்தவ மதத்தில் சேர்ந்தனர். உயர்சாதிக்காரர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டிருந்தவர்கள், ஏழை மக்கள் கிறித்தவ மதத்தில் சேர்வதைப் பேரிழப்பாகக் கருதினர்.

இச்சூழலில், நாகர்கோவிலிலுள்ள கிருஷ்ணன்கோவில் என்னுமிடத்திற்கு நற்செய்தியைச் சொல்ல ஜான் பால்மர் சென்றார். உயர்சாதி எனத் தங்களைத் தாங்களே சொல்லிக் கொண்ட இந்துக்கள் அப்பகுதியில் அதிகமாக வாழ்ந்து வந்தனர். விக்கிரகங்கள் யாவும் கல், பித்தளை என்று ஜான் பால்மர் சொல்வதைக் கேட்ட அங்குள்ள பூசாரிக்குக் கோபம் ஏற்பட்டு இருவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. எங்கள் தெய்வங்கள் உண்மையானவை என்பதை அறிந்து கொள்வாய் எனச் சூளுரைத்துச் சபித்தார். ஜான் பால்மர் பூசாரியின் சவாலை ஏற்றுக் கொண்டு வீடு திரும்பினார்.

பூசாரியின் கூற்றுப்படியே அன்றிரவு பேய் ஒன்று பயங்கரத் தோற்றத்துடன் ஜான் பால்மர் முன் தோன்றி 'எங்கள் தெய்வங்களைப் பழித்தவன் நீ தானே' என்று அவரது கழுத்தில் தன் பத்து விரல்களையும் பதித்துக் கொல்ல முயன்றது. கவிஞர் உடனே பத்துக் கற்பனைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்ல, ஒரு கற்பனைக்கொரு விரலாக பேயின் விரல்கள் அகன்றதாம். அன்று இரவு நடந்த சம்பவத்தை நினைவு கூர்ந்த அவர் பேயின் பிடியினின்று தன்னைக் காத்த கர்த்தரை,

பல்லவி

ஞானவாயித முண்டு பேயே நீ உன்னால்
ஆனதைப் பாரேன்

அனுபல்லவி

தினம் பாவச்சுமையைப் போற்றி
எனில்மேவு நற்குணமாற்றி - உரத்
தாள எத்தனம் பார்த்தும் நினையான்
மாளச் செய்யவே

சரணங்கள்

யேசுநாதர் எந்தனுக்காக வந்தனரே
அறியாயோ - யேசு
தாசன்முன் உன்உபாயம் வீணெனத்தான்
குறியாயோ - பின்னும்

2

ஆதித்தணுகத் துணிந்துபல வேஷமாயங்க
ளணிந்து - எனை
மோசப்படுத்தவோ வருகிறாய் மொக்கை
கெடுவையே - ஞான

என்ற பாடலால் துதித்தார்.

கீர்த்தனைகள் பாடிய விதம்

அருள்திரு. மால்ட் ஊழியத்தினின்று ஓய்வுபெற்று இங்கிலாந்துக்குச் சென்ற பின்பு, ஜான் பால்மருக்கும் மிஷன் பொறுப்பில் இருந்தவர்களுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் திருவனந்தபுரத்திலிருந்த அருள்திரு. மீட்டிடம் அடைக்கலம் புகுந்தார்.

தம் வாழ்வில் நடந்துவிட்ட துயர நிகழ்ச்சியால் தேவவரம் முன்ஷியாரின் மூத்த மகளை மூன்றாவது மனைவியாய் மணந்த அருள்திரு. மீட் மிஷன் ஊழியத்திலிருந்து விலகினார். பின் ஆங்கில அரசின் பிரதிநிதி (Resident) உதவியுடன் மாவட்டப் பள்ளி ஆய்வாளராகவும், பின்னர் திருவனந்தபுரம் அரசு அச்சகத்தின் கண்காணிப்பாளராகவும் பணியாற்றினார். அச்சமயம் அருள்திரு. மீட், ஜான் பால்மரை அன்புடன் ஏற்று அச்சுக்கூடப் பணியில் அமர்த்தினார். தம் பணியிலும், கீர்த்தனைகளை இயற்றுவதிலும், இராகங்களைக் கற்றுக் கொள்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்ட ஜான் பால்மர் பக்திப் பரவசம் ஊட்டும் பாடல்களால் இறைவனை மகிமைப்படுத்தி வந்தார். திருவனந்தபுரத்திலுள்ள பத்மநாப சுவாமி கோவிலில் அதிகாலை நடக்கும் வழிபாட்டின்போது

நாதசுர இசை ஒலிக்கும். அக்காலத்தில் சாதிக் கட்டுப்பாடும் மதவைராக்கியமும் உச்சகட்டத்தில் இருந்தன. ஜான்பால்மர் அக்கால இந்துமத ஆலய ஒழுங்குமுறையின்படி இந்துக் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படாத குலத்தைச் சார்ந்தவர். கீர்த்தனைகளை இயற்ற இராகம் மிகவும் இன்றியமையாதது. இராகங்களைக் கற்றுக் கொள்ள அதிகாலை வேளையில் தன் தலையைத் துணியால் மறைத்துக் கொண்டு கோயிலினுட் சென்று, பல புதிய இராகங்களைக் கற்று வந்து அதன் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய கீர்த்தனைகளை இயற்றுவது இவரது வழக்கம். தம் உயிரையும் பொருட்படுத்தாது இறைமகன் இயேசு கிறிஸ்துவின் புகழ்பாட புதிய இராகங்களைக் கற்றுவந்த ஜான்பால்மரின் துணிச்சல் பாராட்டுக்குரியது. ஜான் பால்மரின் இத்துணிச்சலான செயலே பின்னாளில் திருவிதாங்கூரில் யாவர்க்கும் ஆலய பிரவேச உரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னோடியாக அமைந்தது எனலாம்.

கீர்த்தனைகளின் எண்ணிக்கை

ஜான் பால்மர் எழுதிய இருநூற்றுக்கும் மேற்பட்ட கீர்த்தனைகள் அச்சேறாமல் இருந்துவிட்டதால் அவை நமக்குக் கிடைக்கவில்லை. கிறிஸ்து குல ஆசிரமம், கிறித்தவ இலக்கியச் சங்கம், கன்னியாகுமரிப் பேராயம் ஆகியவை வெளியிட்டுள்ள கீர்த்தனைகளின் தொகுப்பு நூற்களிலும், மயிலாடியைச் சேர்ந்த சி.எம். ஆகூர் என்பவரால் எழுதப்பட்ட ''திருவிதாங்கூர் சபைச் சரித்திரம்'' என்னும் நூலிலிருந்தும் 54 கீர்த்தனைகள் இன்று கிடைக்கின்றன.

பிற படைப்புகள்

கீர்த்தனைகள் மட்டுமின்றி வேறுபல நூற்களையும் இவர் படைத்துள்ளார். அவை,

1. ஞானப்பதக் கீர்த்தனம் (Christian Lyrics)
2. கிறிஸ்தாயனம் (Life of Christ)
3. மேசியா விலாசம் (Life of Christ in Lyrics)
4. சத்திய வேத சரித்திரக் கீர்த்தனை (Bible History in Lyrics)
5. பேரானந்தக் கும்மி (Heavenly delight)
6. நல்லறிவின் சார்க்கவி

என்பனவாகும்.

1. ஞானப்பதக் கீர்த்தனம்

இந்துக்களின் முத்துத்தாண்டவர் பதக் கீர்த்தனம், ஸ்ரீபராங்குச தாசர், ஸ்ரீவிஷ்ணுதர்சனசுகீதம் ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு ஞானப்பதக் கீர்த்தனம் என்னும் நூலை இயற்றினார். இந்நூல் தற்போது கிடைக்கவில்லை. இந்நூலிலுள்ள கீழ்க்காணும் ஒரு பாடல் மட்டுமே கிடைக்கின்றது.

கேதாரம்

ஆதிதாளம்

பல்லவி

இன்னுமிரங்காயோ என்றன் கோனே - அடி
யேன் விடைபெறாமல் விலகேனே
பொன்னுலகத்தின் மகிமைதன்னை மறந்தின்னிலத்தில்
மன்னுயிரை மீட்கவந்த மனுவேலரசே யனுதின
முனையுற

சரணங்கள்

1. அய்யா வெளியேனைக் காண்பாரே - யுனை
யல்லாமல் துணையெனக் கிரங்காரே
உய்யா தெளியேனழிய - உற்ற பாவத்தைத் தொலைக்க
மெய்யா யுத்தர வாதியான-மேசியா உனதிணையடி சரணம்

2. புக்கு மெனைத்தள்ள மனம்தானோ - சும்மா
போவென்றா லெங்கேனும் நான் போவேனோ
மிக்க பாரமுற்றழுந்து - வோரெல்லாரும் வாருமென்ற
தக்கவுரை தானிணைந்து-தாங்குவாயென்றனை யுறுதுயரற

3. தற்பரா வுனை விட்டெங்கே போவேன் - எனை
தாபரிக்க யாருமில்லைக் காவேன்
துப்புரவதாய் மன்றாடும் - தொண்டருக்கருளு நேசா
செப்பும் யோவானின் கவிக்கு - தேற்றலாய் நீ
செவிகொடுத்தருள்புரி.

2. மேசியா விலாசம்

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றினைக் கீர்த்தனைகளின் மூலம் விளக்குவது மேசியா விலாசம். இந்நூல் இராம நாடகம், மகாபாரத விலாசம் போன்ற நூற்களைப் போல் அமைந்துள்ளது. இந்நூல் தற்போது கிடைக்கவில்லை. சான்றாகச் சில பாடல்கள் பின்வருமாறு :

சினத்தே வலுகேசரி போலவன்
சீற்றமாயதி வீற்றமாகவே
மனத்தே தெனுமீர மிலாதிரு
வாட்டை கீழுறு மாக்கள் யாவையும்
மடிய முடியபடு கொடிய வதைபுரியக்
கடுக முறுகிரண வீரரையேவ

எழுந்தாரே ஊர் பெதுலேகம்
அகத்தும் மேல்வளை தலத்தும் வீரர்கள்
நுழைந்தாரே வீடுகடோறும்
நுனித்து சாவிட வதிர்ச்சி மேவிட
உரிய வினந்தமர் மறுக விளைஞ்ஞரை
அரிவர் கறிச்சுரைக் காய்கள் போலவே

மறைப்பார் சிலமாதர் சிறார்களை
அறைக்குளும் மறை முறிக்குளுஞ் சிலர்
விறைப்பார் அதிவீரர் முனேஎதி
ருரைக்கவே பரிதபிக்கவே அவர்
முறுகி மகவுகளைத் தறிபட வுரமுடன்
தெறுகுவர் நதியெனச் செம்புன லோட

தொடர்ந்தே ஓர் சேயும் விடாதவர்
தொகுப்புடன் மகவனைத்துமே விழப்
படர்ந்தே கூர்வாள்களி னாலுயிர்
பதைத்திடக் குரலறுத்து வீசினர்
மடிய மதலைகளி னுரியவனை கணனி
கிடுகிடென வழுதொப்பாரி கூற.

3. சத்தியவேத சரித்திரக் கீர்த்தனை

சத்தியவேத சரித்திரக் கீர்த்தனை நூல் மேசியா விலாசம் நூலைப் போன்று அமைந்துள்ளது. இந்நூல் சத்திய வேதத்தின் சரித்திரத்தைக் கீர்த்தனை வடிவில் கூறுகின்றது.சான்றாக சில பாடல்கள் பின்வருமாறு :

நாடதின்மேல் சலம் நணுகிவறாதல் கண்டு
நாட்டு மிருகமெல்லாம் வாட்டமுற் றதிர்கொண்டு
சாடிப் பலவிடத்தும் ஓடிஓடி விறு
தாவில் முயன்று மிகச்சலித்துத் தவித்தங்குறு
தாவரமற்று அமிழ்ந்திறக்க
தீவிரமுற்று தரையின் மிசை

சலமினும் எழும்பிடத் தாழ்விடங்களிலுற்ற
சருவ ஊர்வனவும் தான்மடிந் திடமற்ற
மலைகெபிகளில் தங்கி வாழும் மிருகமெல்லாம்
மருண்டு துடிதுடித்துத் திரண்டு வனங்களெல்லாம்
வக்கிரமாக ஓடிச்சாடி
திக்குமுக்காக மடிந்துவிழ
சாலவளர்ந் தோங்கும் தருக்களும் முட்டிட
சலம் அங்கெழுந் துயர்ந்தமலைகளும் எட்டிட
மேலுலாவு பட்சிசால மெல்லாம் ஒன்றி
வீற்றிருக்க ஏதும் ஆற்றல் பற்றுதல் இன்றி
விண்ணுறத்தாவி மறிந்துபேழைக்
கண்ணுறமேவி முட்டிப்புரண்டு
சடைத்துக் கண்ணுறும் எந்த இடத்தும் பறந்துசாவி
சாரும் ஓரிரையும் நேரிடாது கூவி
துடித்துப் பதைத்துச்சிற கடித்து விழுந்துசாக
தொடுக்கச் சருவநாசம் முடிக்கப் பிரவாகமாக
வந்தது பாரீர் மாபிரளயம்
வந்தது பாரீர்

4. பேரானந்தக் கும்மி

கும்மிப் பாடல்களால் இயற்றப்பட்ட இந்நூலில் 53 மற்றும் 55 ஆவது பாடல்கள் மட்டும் இன்று கிடைக்கின்றன. அவை பின்வருமாறு :

53. அங்கிரவில்லை விளக்கொளியோ மற்
றாதித்தனின் சுடரோ வேண்டாம்
துங்கமுறும் பரன்சோதிப் பிரகாசமாய்த்
துலங்கி நிற்பரே ஞானப்பெண்ணே

55. பூச்சி துருவரியாத துங் கள்ளர்
புகுந்து கொள்ளை புரியாத துமாம்
சூட்சமுள்ள நல்ல பொக்கிஷ முண்டென்றும்
சுதந்தரிக்கலாம் ஞானப் பெண்ணே

5. நல்லறிவின் சார்க்கவி

கவிஞர் வாட் (Watt) என்பவர் முதன்முதலாக எழுதிய விசுவாசப் பிரமாணத்தை ''நல்லறிவின் சார்க்கவி'' என்னும் தம் நூலில் கவிதை நடையில் படைத்துள்ளார். சான்றாக, அக்கவிதையின் நான்கு பாடல்கள் வருமாறு :

1. உன்னைப் படைத்தவர் இன்னவரா
மென்றுரைத்திடாய்? வானும்
இன்னிலமும் யாவும் பண்ணின
மெய்த்திரியேகனே.

2. அன்னபரன் உனக்கிந்நாள்
வரையுமென்செய்கிறார்? ஆடை
அன்னமோ டெல்லா மீந்தெந்நேரமும்
ரட்சை செய்கிறார்.

3. இத்தனை நன்மைசெய் கர்த்தருக்கென்
செய்ய வேண்டும் நீ - அவர்
சித்தமறிந்தவர்க் குற்றபணி
செய்ய வேண்டும் யான்.

4. சித்தப்படி செய்யக் கர்த்தரென்
கட்டளை யிட்டனர்? - பரி
சுத்தவசனமாஞ் சத்திய
வேதநூலிட்டனர்.

ஜான் பால்மரின் கீர்த்தனைகள் நற்செய்திக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் எளிய நடையில் அமைந்துள்ளன. கீர்த்தனைக் கவிஞர் ஜான் பால்மரைப் பற்றி பால்ம் (Balm) என்பவர்,

> இங்கிலாந்துக் கவிஞர் வாட் குழந்தைகளுக்காய் எளிய முறையில் இயற்றிய பாடல்களைப் போன்றே தென் இந்தியத் திருச்சபையில் ஜான் பால்மர் விளங்குகிறார். இவரது பாடல்கள் யாவரும் போற்றும் வகையில் எளிய அமைப்பினை உடையன

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய இனிய படைப்புகளைக் கிறித்தவத் தமிழ் உலகிற்குப் படைத்துத் தந்த ஜான் பால்மரின் முன்னோர்கள் பக்தி வைராக்கியம் மிகுந்த இந்துக்களாய் வாழ்ந்தவர்கள். சோதிடம், மருத்துவம், இலக்கியம் போன்ற கலைகளில் ஆழ்ந்த அறிவும் ஈடுபாடும் உடையவர்கள். இவர்கள் தொன்மை வாய்ந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். பல தலைமுறைகளுக்கு முன்னரே காவிரி பாயும் தஞ்சை பகுதியிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வல்ல நாட்டுப் பகுதியில் சென்று குடியேறியவர்கள். பின்னர் அங்கிருந்து நாஞ்சில் நாட்டுப் பகுதியான மயிலாடிக்குக்

குடிபெயர்ந்தனர். வைதீக இந்துக் குடும்பத்தில் பிறந்த ஜான் பால்மரை மகத்துவம் மிக்கக் கீர்த்தனைக் கவிஞராக, காப்பியப் புலவராக மாற்றியது மயிலாடி மண்.

துணைவியாரின் மறைவு

ஜான் பால்மரின் துணைவியார் பேரின்பம் அம்மாள் நோய்வாய்ப்பட்டு 1859 பெப்ரவரி ஒன்பதாம் நாள் காலமானார். இச்சோகமான சூழலில் ஜான் பால்மர் எழுதிய கீர்த்தனை பின்வருமாறு :

பல்லவி

நொந்திடுமென் மனந்தேற - உறுதியுடன்
தந்தருள் கருணை தேவே!

அனுபல்லவி

எந்த வேளையிலும் துணையென
உந்தன் முன்னுற வந்த பாதகர்
நந்தவிடாதரு டந்துரு குந்திரு
எந்தையேகனின் னிணையடி சரணம்

சரணங்கள்

1. கொல்லவும் பிராணனீயவும்
அளவிலா வல்லமை சிறந்த கோவே
நல்லுறவரில் இல்லெனச் சிலர்
தொல்லுலகதின் எல்லை தாண்டினர்
புல்லறிவால திலல்லலுற்றேனினி
சொல் லநின்று ணையலாது வேறிலையே - நொந்திடு

2. பூதலத்தில் யான் வசிக்கும் காலமெலாம்
ஏதுகுறை மேவினாலும்
போதுமென்றுரை சாதுளத்தோடு
மாதவமதே யூதியம்மென
நீதிநெறி வழுவாதொழு கிடயான்
பாதுகாப்புனது பாதமே சரணம் - நொந்திடு

ஜான் பால்மரின் மறைவு

எளிய இனிய கிறிஸ்தவக் கீர்த்தனைகளை எழுதிக் கொண்டும், கர்த்தரின் புகழ் பாடிக் கொண்டும் இருந்த கவிஞர் 1883 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2 ஆம் நாள் தன்னுடைய 71 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

ஜான் பால்மரின் மரணச் செய்தியைக் கேட்டு அவருடைய நெருங்கிய உறவினரும் கவிஞருமான அருள்திரு. சி. மாசிலாமணி மிகுந்த மனவருத்தத்துடன் பின்வருமாறு தம் கருத்தை வெளியிட்டார் :

> திருச்சபையுள்ள மட்டும் அவர் கீர்த்தி மங்காமல் பிரகாசித்துக் கொண்டிருக்கும். கிறித்தவச் சபைகளுக் குள்ளும் குடும்பங்களிலும் அவருடைய கீர்த்தனை தொனிக்கப்படாத நாள் கிடைப்பது அபூர்வம். அவர் மரித்தும் பேசுகிறார். கிறித்தவ ஓய்வு நாட்களிலும், திருநாட்களிலும், விவாகோற்சவங்களிலும், ஜனனோற்சவங்களிலும் சபை அனைத்தும் மங்களப்படுத்தும் அவருடைய கீர்த்தனைகளே அவர் சபைக்காக வைத்துவிட்டுப் போன சம்பாத்தியம். இன்றியமையாத, யாவரும் மகிழ மேற்கொள்ள மலரும் மலராகிய இந்த மகானுடைய நாவும் வாடி அவருடைய உடலையும் அழிவு பட்சிக்கும்படி நேரிட்டதே? ஐயோ, தமிழ்நாட்டுச் சபையே! இவரைப் போன்ற ஒரு சுவிசேஷக் கவிராயர் இனியார் உனக்குக் கிடைக்கப் போகிறார்? இவருடைய ஒரே நாவு பாடி தனது மீட்பரை மகிமைப் படுத்துவதைப் பொறுக்க மனமில்லாமல் இவ்வளவு நிஷ்டூரமாய் அவ்ரை அழிவுக்குள் ஒப்புவித்த மரணமே! ஆயிரம் பதினாயிரங்களான நாவுகளாய் அவருடைய மதுர கீர்த்தனைகளைத் தொனிக்கப் பண்ணுகிற கீத ஓசைகளை அழிக்க உன்னாலாமோ?

ஜான் பால்மருடைய உடல் திருவனந்தபுரத்திலுள்ள கிறிஸ்துநாதர் ஆலயத்தின் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இவருடைய நீங்காத நினைவாக இவர் பிறந்து வளர்ந்த மயிலாடி ஊரில் உள்ள ஒரு தெருவுக்கு 'ஜான் பால்மர் தெரு' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கிறிஸ்தாயனம்

இயேசு கிறிஸ்துவின் வாழ்வை விவரிக்கும் முதல் கிறிஸ்தவக் காப்பியம் கிறிஸ்தாயனம். இராமபிரானின் வரலாற்றை விவரிக்கும் காப்பியத்திற்கு இராமாயணம் எனப் பெயர் சூட்டியது போன்று, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதால் இந்நூலிற்கு கிறிஸ்தாயனம் (Life of Christ) எனப் பெயரிட்டுள்ளார். இக்காப்பியம் கிறித்தவ கலாவிருத்திச் சங்கத்தாருக்காக நாகர்கோவில் இலண்டன் மிஷன்

அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்டு வெளிவந்த முதல் காப்பியம் கிறிஸ்தாயனம் என்பதால், அக்காலத்தில் இக்காப்பியத்திற்கு மிகுந்த வரவேற்பு இருந்தது. மேலும், ஜான் பால்மர் ஏராளமான கிறித்தவக் கீர்த்தனைகளையும், கிறித்தவச் சிற்றிலக்கியங்களையும் படைத்திருந்ததன் மூலம் இந்நூல் மிகுந்த சிறப்புடையதாகத் திகழ்ந்தது.

காப்பிய அமைப்பு

கிறிஸ்தாயனம் பாயிரம், தெய்வ வணக்கம், நூல் வரலாறு என்னும் பகுதிகளுடன் தொடங்குகிறது. இக்காப்பியம் பால காண்டம், கிரியா காண்டம், அவஸ்தா காண்டம், ஆரோகண காண்டம் என்னும் நான்கு காண்டங்களைக் கொண்டு 842 விருத்தப் பாக்களால் ஆனது. ஒவ்வொரு காண்டமும் பல்வேறு உட் தலைப்புகளைக் கொண்டது.

தெய்வ வணக்கம்

தெய்வ வணக்கம் என்னும் பகுதியில் பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்னும் திரியேகக் கடவுளைத் தனித்தனிப் பாடல்களின் மூலம் வணங்குகிறார். பிதாவை,

விண்ணதோடு பூவெலாம் விண்டுருப்படுத்தியே
அண்ணலாய்அ ரூபியாய் ஐம்புலன்கடந்து நின்
றெண்ணவும்விளம்பவும் எட்டொணாமலெங்கணும்
திண்ணமாய்நி றைந்த மா திவ்யதாதை காப்பதாம்

(காப்பு, பா.1)

என தெய்வ வணக்கத்தில் பாடுகிறார்.

நூல் வரலாறு

தெய்வ வணக்கம் என்னும் பகுதியின் இறுதியில் நூல்வரலாறு இடம் பெற்றுள்ளது. இதிலுள்ள இரண்டு பாடல்களும் நூல் எழுதுவதற்கான காரணத்தையும், நூலில் இடம் பெற்றுள்ள செய்திகளையும் தெரிவிக்கின்றன. பாடல்கள் பின்வருமாறு:

பண்டிறைவன் விதித்தளித்த பழவேற்பாடதில் குறியாய்
விண்டுரைத்த தேவசுதன் விடுத்தாந்த மதுவிரிவாய்க்
கொண்ட சுவிசேஷமதைக் கூர்ந்தாராய்ந் தெளிதுணரத்
தண்டமிழால் இங்கமைத்துத் தமியேனு ரைக்கலுற்றேன்

ஆண்டவனிங் கேமனுவாய் அவதரித்த வாறதுவும்
ஈண்டிரட்சிப் பின்கிரியை இயற்றிவந்த வாறதவும்
மாண்டுயிர்த்தெ ழுந்ததற்பின் வானடைந்த வாறுமவன்
மீண்டுவந்து நடுத்தீர்க்கும் மேரையையும் கூறலுற்றேன்
(நூல் வரலாறு, பா.5,6)

1. பால காண்டம்

கிறிஸ்தாயனத்தின் முதல் காண்டமான பால காண்டம், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் அவரது பன்னிரண்டு வயது வரையுள்ள செய்திகளைத் தருகிறது. கம்பராமாயணத்தைப் பின்பற்றி இயேசு கிறிஸ்துவின் இளமைப் பருவத்தை விவரிக்கும் முதல் காண்டத்திற்குப் பால காண்டம் எனப் பெயரிட்டுள்ளார். பால காண்டம் 55 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் ஒன்பது தலைப்புகளில் உள்ளன. இயேசு கிறிஸ்துவின் சிறப்பை திருக்குமாரன் மாட்சிமை என்னும் பகுதியில் கீழ்வருமாறு பாடுகிறார்:

ஆதியும் அந்தமும் அகன்ற நித்தியன்
சோதியிலணு கொணாத் துலங்கு சோபிதன்
கோதிலாதியலுசற் குணதயாபரன்
நீதியின் சூரியன் நிமல நாதனே (பால காண்டம், பா.7)

2. கிரியா காண்டம்

இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களை விளக்குவதால் இப்பகுதிக்குக் கிரியா காண்டம் எனப் பெயரிட்டுள்ளார். இரண்டாவதான கிரியா காண்டத்தில் இயேசு கிறிஸ்து தம் சீடர்களைத் தெரிந்து கொண்டது முதல் பத்து ராத்தல் திரவியம் பெற்ற ஊழியக்காரரைக் குறித்து சொன்ன உவமை வரையிலான செய்திகள் இடம் பெற்றுள்ளன. கிரியா காண்டம் 50 உட்தலைப்புகளைக் கொண்டது. இக்காண்டத்திலுள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை 426 ஆகும். கடல் கொந்தளிப்பமர்த்தல் என்னும் உட்தலைப்பின்கீழ் காணலாகும் மூன்று பாடல்களும் பின்வருமாறு:

ஜேசொரு நாள் படகேறிச் சீஷரோடு
பாசமொடு செலும்வேளை பள்ளி கொள்ள
மாசுழல் காற் றெழும்பியந்த மரக்கலத்தை
மோசமுறத் தக்கதாய் மோதிற்றன்றே

அங்கதிர்ச்சியால் சீஷர் ஐயரே யாம்
இங்கழிந்து போகிறோ மென்றெழுப்ப
உங்கள் விசுவாசமெங்கன் றுரைத்து ஜேசு
பொங்கு கடல் காற்றுடனே பொறு நீ என்றார்.

அவரதட்டக் கடல் காற்றும் அமர்ந்துபோக
நவமலவோ இதுவென்று நடுங்கிச் சீஷர்
தவமகத்வர் தாமிவரே சலதி காற்றும்
இவருரைகேட் கின்றனவே யென வியந்தார்.

(கிரியா காண்டம், பா.210-212)

3. அவஸ்தா காண்டம்

இயேசு கிறிஸ்து பட்ட பாடுகளை விவரிப்பதால் இதற்கு அவஸ்தா காண்டம் (அவஸ்தை-துன்பம்) எனப் பெயரிட்டுள்ளார். அவஸ்தா காண்டத்தில் மரியாள் இயேசு நாதருக்குப் பரிமளத் தைலம் பூசுவதிலிருந்து அவர் சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்ட செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. அவஸ்தா காண்டம் 24 உட்தலைப்புகளைக் கொண்டது. இக்காண்டத்திலுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 249 ஆகும்.

அவஸ்தா காண்டம் ஏழு வாரங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. ஆதித்த வாரம் என்னும் பகுதியில் 10 பாடல்களும், சோம வாரம் என்னும் பகுதியில் 3 பாடல்களும், குச வாரம் என்னும் பகுதியில் 50 பாடல்களும், புத வாரம் என்னும் பகுதியில் 4 பாடல்களும், குரு வாரம் என்னும் பகுதியில் 86 பாடல்களும், சுக்கிர வாரம் என்னும் பகுதியில் 82 பாடல்களும், மந்த வாரம் என்னும் பகுதியில் 10 பாடல்களும் உள்ளன. ஜான் பால்மர் கிழமை என்பதற்கு வாரம் என்னும் வடமொழிச் சொல்லைக் கையாண்டுள்ளார். (ஆதித்த வாரம் - ஞாயிற்றுக் கிழமை; சோம வாரம் - திங்கள் கிழமை; குச வாரம் - செவ்வாய் கிழமை; புத வாரம் - புதன் கிழமை; குரு வாரம் - வியாழக் கிழமை; சுக்கிர வாரம் - வெள்ளிக் கிழமை; மந்த வாரம் - சனிக் கிழமை). பேதுரு ஆண்டவரை மறுதலித்தல் என்னும் தலைப்பில் பதினொரு பாடல்கள் உள்ளன. அவற்றில் இறுதி மூன்று பாடல்கள் இங்கு சான்றாகத் தரப்படுகின்றன:

அப்பொழுது பேதுருதான் அதிகபய முற்று நீர்
செப்பியஅந் நரனாரோ தெரியாதெ னக்கெனவே
இப்படி மறுதலித்தவ் இகலாரின் கையினின்று
தப்ப உன்னிச் சாபமிட்டுச் சத்தியமும் பண்ணினனே.

கோழியிரண் டாந்தரமும் கூவிடத்தன் சென்னியது
தாழவிடாதே சபித்துச் சத்தியமும் பண்ணி அங்கே
சூழநிற்கும் மாந்தரின்முன் துணிவுகொண்ட பேதுருவை
வீழவிடா தேகருத்தர் விழிநோக்கிப் பார்த்தனரே.

மீண்டிருகால் கோழி கூவிடுமுன் நீ முக்காலும்
மூண்டறியே னென்றெனைத்தான் முழுதுமறுப் பாய் எனவே
ஆண்டவர்உ ரைத்த வாக் கதையவன் அப் போதுணர்ந்து
தாண்டி வெளி சென்று மிகு தாபமுட னேஅழுதான்.

(அவஸ்தா காண்டம், பா.155-157)

4. ஆரோகணக் காண்டம்

இசைப்பாட்டின் ஏறுமுகக் குறிப்பினை நினைவில் நிறுத்தி, இயேசு கிறிஸ்து வானுலகம் சென்ற செய்திகளை விவரிக்கும் பகுதிக்கு ஆரோகணக் காண்டம் எனப் பெயர் சூட்டியுள்ளார். ஆரோகணக் காண்டத்தில் இயேசு பெருமான் உயிர்த்தெழுந்தது முதல் அவரது இரண்டாம் வருகை வரையுள்ள செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஆரோகணக் காண்டம் 11 உட்தலைப்புகளைக் கொண்டது. இக்கண்டத்திலுள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை 106 ஆகும். பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள் மேல் இறங்கினது என்னும் தலைப்பிலுள்ள இரண்டு பாடல்கள் பின்வருமாறு:

மேவிய சீஷர் ஜேசு விண்ணெழுந்தீரைந்தாம் நாள்
தாவிஓர் வீட்டில் தங்க சடுதியாய்ப் பரிசுத்தாவி
மாவதிர் முழக்கத்தோடே வகிர்ந்த அக் கினிக் கொழுந்து
நாவுகட்கிணையாய் அன்னோர் நடுவினில் தோன்றினாரே.

அந்தவாறாவி சீஷர்க் களித்திடப்படவே அந்த
பெந்தெகோஸ்தெனும் விழாவில் பெயர்ந்தெலாத் திசை யினின்றும்
வந்தவர் பலரும் சீஷர் மறுபல பாஷை தன்னில்
விந்தையாய்ப் பேசக்கேட்டு மிகவும் ஆச்சரியமுற்றார்.

(ஆரோகண காண்டம், பா.72, 73)

காப்பியத் தலைவர்

பெருங்காப்பியம் "தன்னேரில்லாத் தலைவனை உடைத்தாய்" அமைதல் வேண்டும் எனத் தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது. தேம்பாவணியில் சூசையப்பர் காப்பியத் தலைவராகவும், இரட்சணிய யாத்திரிகத்தில் கிறித்தவனாகிய

யாத்திரிகன் காப்பியத் தலைவராகவும், பவுலடியார் பாவியத்தில் பவுல் காப்பியத் தலைவராகவும், திருத்தொண்டர் புராணத்தில் தேவசகாயம் பிள்ளை காப்பியத் தலைவராகவும் படைக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தாயனம் விவிலியத்திலுள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நால்வர் எழுதிய நற்செய்தி நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டுள்ளதால் இக்காப்பியத்தின் தலைவர் இயேசு கிறிஸ்து. காப்பியத்தின் தலைமை மாந்தரை அடிப்படையாகக் கொண்டு கடவுள் காப்பியம், அடியவர் காப்பியம், அரசகாப்பியம், மக்கள் காப்பியம் எனக் காப்பியங்களைப் பகுக்கலாம் என்பர். அவ்வகையில் இது கடவுள் காப்பியம் என வகைப்படுத்தத் தகுதி உடையதாகும்.

கவிதையாக்கம்

விவிலியத்திலுள்ள நிகழ்வுகளை எளிமையான கவிதைகளாக மாற்றுவதில் வல்லவராக ஜான் பால்மர் விளங்கியுள்ளார். கிறித்தவக் கீர்த்தனைகளை இயற்றியுள்ள பயிற்சியின் மூலம், விவிலியத்திலுள்ள செய்தியை நேரடியாக, தெளிவாக, எளிமையாக, சுருக்கமாகக் காப்பிய வடிவில் அமைத்துள்ளார். பாயிரத்தில் இது குறித்த செய்தியை,

> **கற்றவரன்றியுங் கல்லாதவரு**
> **முற்றெளிதாய்க்கண் டுணருதற்கிடனா**
> **யதியரும்பதங்க ளகல மிக்காறும்**
> **பொதுநிகழுரைகள் புலப்பட வமைத்து (பாயிரம், அடி.13-16)**

என நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளார். இவரது கவிதையாக்கத்தின் மூலம் இவருக்குக் கம்பராமாயணத்தில் இருந்த புலமையையும், பிற பக்தி இலக்கியங்களில் இருந்த பயிற்சியையும், இலக்கண அறிவையும் அறிந்து கொள்ள முடிகிறது. பல்வேறு இலக்கியங்களைப் படித்து அவற்றை உள்வாங்கி அவற்றின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றைப் பாடியுள்ளார். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை எளிமையாக எவ்வித வர்ணமும் இன்றிக் கவிதை நடையில் கொடுப்பதே இவரது இலக்கியக் கொள்கையாகும். திருமறையில் இல்லாத எக்கருத்தையும் ஆசிரியர் எவ்விடத்திலும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தாயனத்தில் ஆசிரியரின் தடையற்ற கவிதை ஓட்டத்தைக் காணமுடிகிறது. சான்றாகச் சில:

"எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்ச ரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான்" (யோவான் 2:10) என்னும் வசனத்தை,

ஏற்றவ்விருந்ததிபன் ரசமினிதாய் ருசிகொண்டே
மாற்றந்தகை யோராதவன் மணவாளனோடெவனும்
ஈற்றில் ருசிதாழ்வானதை இடுவா னிதுவரை நீர்
ஊற்றாது நல்ரசமானதை ஒளித்தீரென உரைத்தான்

(கிரியா காண்டம், பா.38)

எனப் பாடுகின்றார். இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தைச் சிறப்பாகக் கவிதையாக்கியுள்ளார். சான்றாக,

அகத்துளா துலர் அங்கடை வார்கதி
சுகத்துளாவர் துயர்படுவோர் பொறை
தொகுத்த சாந்தர்சு தந்தரிப்பார் புவி
திகைத் திடாரவர் சீருறு செல்வரே

நீதிவாஞ்சையி னோர்நிறை வாகுவர்
மாதயையுளர் மன்னிடுவார் தயை
தீதில் தூய்நெஞ்சர் தேவனைக் காண்பரே
ஆதலால் வரும்மிகு செல்வரே

சாந்தி செய்பவர் தற்பரன் மக்களே
ஆர்ந்திதம் புரிந்தல்லுற் றோர்பரம்
சேர்ந்திருப்பர்ஜெ யத்துட னாகையின்
கூர்ந்தன்னோ ரனுகூலநற் செல்வரே

(கிரியா காண்டம், பா.122-124)

என்னும் பாடல்கள் அமைந்துள்ளன. "ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ" (மத்தேயு 5:11) என்னும் விவிலிய வாக்கினை,

ஒருவன் தன்னுடன் உன்னையொர் காதமே
வரமிகப்பல வந்தமியற்றிடில்
மருவி நீயிரு காதவரையுமே
உருவச் செல்லவ னோடிடை யாமலே

(கிரியா காண்டம், பா.136)

என்னும் எளிமையான பாடலாக மாற்றியுள்ளார். "விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்து

மிதியுண்டது, ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டது. சில விதை கற்பாறையின் மேல் விழுந்தது; அது முளைத்தபின் அதற்கு ஈரமில்லாததினால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் கூட வளர்ந்து, அதை நெருக்கிப் போட்டது. சில விதை நல்ல நிலத்தில் விழுந்தது, அது முளைத்து, ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது என்றார். இவைகளைச் சொல்லி, கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று சத்தமிட்டுக் கூறினார்" (லூக்கா 8: 5-8) என்னும் விவிலிய வசனங்களை ஜான் பால்மர் கீழ்வரும் கவிதைகளாக மாற்றியுள்ளார்:

விதைத்தானோ ருழவனங்கு விதைத்த வித்தில்
சிதைப்பாக வித்துசில தெருக்கண் வீழ
மிதிப்பார்தாள் பட்டுழல மீது புட்கள்
கதிப்பாய்வந் தருந்தினவே கண்ணுற்றன்றே

வேறு சில விதை பாறை மீதில் வீழ
கூறுபெற முளைத்ததற்பின் குளிர்மை யற்று
மீறியெழு பரிதியதின் வெப்பத்தாலே
ஊறுபட அதுசால உலர்ந்த தன்றே

மற்று சில வித்து முட்கள் மத்தி வீழ
உற்றவையு முளைத்தெழும்ப ஊறாய் முட்கள்
சுற்றியுற எழும்பியவை சோர்ந்து போக
முற்று நெருக்கின அவற்றை முரிக்கத் தானே

சேதமுறா நன்னிலத்தில் சிலவித் துக்கள்
பேதமற விழமுழைத்துப் பெருகி ஓங்க
ஓது பலவாறு பலன் உண்டாயிற்று
காதுளவன் இதைக்கேட்கக் கடவன் என்றார்.

(கிரியா காண்டம், பா.200-203)

ஜான் பால்மர் விவிலியச் செய்திகளை எளிமையாக, இலக்கணமுறைப்படி கவிதைகளாக மாற்றியுள்ளமைக்கு மேற்குறிப்பிட்டவை சில சான்றுகள்.

யாப்பு

ஜான் பால்மர் செவ்வியல் நெறிப்பட்ட யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தியுள்ளார். காப்பியத்தில் எளிமையான கவிதை வடிவத்தைப் (சிந்து போன்ற வடிவம்) பயன்படுத்தவில்லை. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்,

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீரடி ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலிநிலைத்துறை, விருத்தக் கலித்துறை, சந்தவிருத்தம், கலிசந்தவிருத்தம், வெளிவிருத்தம், வஞ்சி விருத்தம் முதலிய இலக்கண வடிவங்களைப் பயன்படுத்தியுள்ளார். இதன் மூலம் இவரது இலக்கண அறிவினை அறிய முடிகின்றது.

ஜான் பால்மர் தமது காப்பியத்தின் அனைத்துப் பாடல்களிலும் இயல்பாக எதுகை, மோனையைப் பயன்படுத்தியிருப்பது அவருடைய கவித்திறனுக்குச் சான்றாக அமைகின்றது. இலக்கண அறிவும் பயிற்சியும் நிரம்பியவராகக் காணப்பட்டதால் இத்தகைய காப்பியத்தை அவரால் படைக்கமுடிந்தது எனலாம். ஒரு பாடலின் இறுதிச் சொல்லோ, சீரோ (அந்தம்) அடுத்த பாடலின் தொடக்கத்தில் (ஆதி) வருவதை அந்தாதி என்பர். இக்காப்பியத்தின் பல இடங்களில் அந்தாதி முறையில் பாடல்களை இயற்றியுள்ளார் .

வடமொழிச் சொற்கள்

ஜான் பால்மர் தமது காப்பியத்தில் சில இடங்களில் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். ஜலம், ரசம், ஜெனனம், சம்பாஷனை, ஸ்திரி, புத்திரி, சிரசு, அவஸ்தா (அவஸ்தை) முதலிய வட சொற்களைத் தன்கால நிலைக்கேற்பத் தடையின்றி எடுத்தாண்டுள்ளார். சமயக் கலைச் சொற்களே மிகுதியாக இவ்வாறு கையாளப்பட்டுள்ளன.

வட்டார வழக்குச் சொற்கள்

அன்றைய தென்திருவிதாங்கூரின் ஒரு பகுதியான இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தில் வழக்கிலிருக்கும் வட்டாரச் சொற்களை ஜான் பால்மர் தமது காப்பியத்தில் இயல்பாகவே பயன்படுத்தியுள்ளார். சான்றாக, சூம்பின கையனைச் 'சொத்துக் கையன்' (கிரியா காண்டம், பா. 172) என்றும், ஆலயங்களில் விருந்து கொடுப்பதை 'அசனம்' (கிரியா காண்டம், பா. 182) என்றும், ஒரு மனிதரை அழைப்பதை 'ஓய்' (கிரியா காண்டம், பா. 185) என்றும், திக்கித் திக்கிப் பேசுவதைக் 'கொன்னைவாய்' (கிரியா காண்டம், பா. 288) என்றும், சுகவீனத்தைத் 'தீனம்' (கிரியா காண்டம், பா. 389) என்றும், சந்தேகப்படுவதைச் 'சமுசயம்' (அவஸ்தா காண்டம், பா. 13), என்றும், நாட்களை 'திவசம்' (கிரியா காண்டம், பா. 43)

என்றும், சிறிய கூர்மையானதுரும்பை 'சிரா' (கிரியா காண்டம், பா.153) என்றும் தம் காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஜான் பால்மர் தமது காப்பியத்தில் சில இடங்களில் இயேசு என்றும், பெரும்பாலான இடங்களில் ஜேசு என்றும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். ஜான் பால்மர் இறைத் தொண்டர்களுடன் திருவனந்தபுரத்தில் பலகாலம் தங்கியிருந்ததால் மலையாள மொழியின் தாக்கம் இவரிடம் இயல்பாகவே இருந்திருக்க அதிக வாய்ப்பு உள்ளது. மலையாள மொழி பேசுவோர் இயேசுவை "ஜேசு" எனச் சொல்வர். ஆதலால், ஜேசு என்னும் பெயர்ச்சொல்லைப் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

> **ஜெருசலை நகர்சுற் றிடங்களிற் சென்று ஜேசு**
> **போதித்ததுமன்றி** (கிரியா காண்டம், பா.61)
>
> **நாசரேத்தூரன் ஜேசுவைத் தேடி நாங்கள் வந்தோமென**
> (அவஸ்தா காண்டம், பா.124)

என்னும் பாடலடிகளைச் சுட்டலாம். வேறு எந்தக் கிறித்தவ இலக்கியங்களிலும் ஜேசு என்னும் சொல் பயன்படுத்தப் படவில்லை. ஆனால் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் இயேசுவை, சேசு எனக் கூறுவர். இச்சொல்லை சில கத்தோலிக்கர்களும் தங்கள் இலக்கியத்தில் பயன்படுத்து கின்றனர். சான்றாக, சுடர்மணி என்னும் காப்பியத்தின் ஆசிரியர் எஸ்.ஆரோக்கியசாமி காப்பியம் முழுவதிலும் சேசு எனக் குறிப்பிட்டுள்ளார்.

சில மாறுபாடுகள்

ஜான் பால்மர் சில பெயர்களை உட்தலைப்புகளில் பயன்படுத்தும்போது மொழிமுதல் எழுத்துகளை மனதில் கொண்டு எழுதுகிறார். யோவான் என்னும் பெயரை உட்தலைப்பில் பயன்படுத்தும் போது இயோவான் எனவும், லேவி என்னும் பெயரை இலேவி எனவும் பயன்படுத்துகிறார். மேலும், சகேயு என்னும் பெயரை சக்கேயு எனக் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை விளக்கும் காப்பியங்கள் இயேசு கிறிஸ்து விண்ணகம் சென்றதோடு முடிவடைந்து விடுகின்றன. ஆனால் இயேசு கிறிஸ்துவின்

வரலாற்றுடன் அவரது இரண்டாம் வருகையைக் குறித்த செய்திகளையும் சொல்வதில்தான் ஒரு முழுமை நிலையினை உணரமுடிகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து கிறிஸ்தாயனத்தில் 11 பாடல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலுலகில் எழுந்து சென்ற விதமே ஜேசு
மீண்டும் இங்கு வருவரென விண்ணோர் சொன்னாற்
போலவர்மே கத்தெழுந்து சேனைதூதர்
புடைசூழ்ந்து வர வதிக மகிமையோடே
தாலமதில் ஆதிமுதல் இறந்தோர் உய்வோர்
சகலமனுக் குலத்தோர்க்கும் நியாயந்தீர்க்க
சால வொளிர் `சோதிமயமாய் இறங்கிச்
சகமெலாம் கிடுகிடுங்கத் தோன்றுவாரே
(ஆரோகண காண்டம், பா.94)

சோரன் வரும் தன்மையதாய் நினையாவேளை
தோன்றிடுவர் சாமமோ காலையோ அந்
நேரமதை யாரும் அறியார் அவர்க்கு
நேர் புனிதராய்த் தெளிந்து நிற்பதற்கு
பாருலகில் பிழைத்திருக்கும் போதே உங்கள்
பாவமதை உணர்ந் தறிக்கையிட்டு நல்ல
சீரடைந்தப் பரன்பாதம் சேர்ந்து கொள்ளும்
சிதைவிலா வாழ்வடைதல் திண்ணந்தானே
(ஆரோகண காண்டம், பா.103)

என்னும் பாடல்களைச் சான்றாகச் சுட்டலாம். இவ்வகையில் இக்காப்பியம் பிற கிறித்தவக் காப்பியங்களிலிருந்து மாறுபட்டு முழுமையுடன் விளங்குகிறது.

கிறிஸ்தாயனம் எளிமை நோக்குடன் எழுதப்பட்ட கிறித்தவக் காப்பியம். அனைவரும் படித்தறிய வேண்டும் என்னும் ஆசிரியரின் நோக்கம் பாராட்டிற்குரியதாகும். மக்களிடம் அறியப்படாமல் இருந்த இக்காப்பியம் இரண்டாம் பதிப்பின் மூலம் அண்மைக் காலத்தில் வெளிவந்ததால் இன்று பேசப்பட்டும் ஆய்வு செய்யப்பட்டும் வருகின்றது.

9. கிறிஸ்து மான்மியம்

சீர்திருத்தச் சபையைச் சார்ந்த மேலைநாட்டு கிறித்தவ சமயத் தொண்டர்கள் இருவர் தமிழில் காப்பியம் படைத்துள்ளனர். இக்காப்பியங்களின் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதைக் காட்டிலும் அவர்களது முயற்சியைப் பாராட்டுவது இன்றியமையாதது. கிறிஸ்து மான்மியம் என்னும் கிறித்தவக் காப்பியம் ஜெர்மன் நாட்டு இறைத்தொண்டர் அருள்திரு. ஸ்தொஷ் (Rev. Stosch) முயற்சியால் வெளிவந்தது.

ஆசிரியர் வரலாறு

அருள்திரு. ஸ்தொஷ் 1851ஆம் ஆண்டு செப்டம்பர் இரண்டாம் நாள் பான்சென் என்னும் ஊரில் பிறந்தார். இறையியல் கல்விக்குப் பின்னர் 1876ஆம் ஆண்டு அக்டோபர் பத்தாம் நாள் குருப்பட்டம் பெற்றார். 1888ஆம் ஆண்டு அக்டோபர் பன்னிரண்டாம் நாள் மிஷனெரியாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். இவர் தரங்கம்பாடியிலிருந்த அச்சகத்தின் மேலாளராகப் பணிபுரிந்தார். அருள்திரு. ஸ்தொஷ் தமிழகத்தில் ஐந்து ஆண்டுகள் தங்கியிருந்து இறைத் தொண்டு செய்தார். இவர் தரங்கன்பாடி லுத்தரன் மிஷன் அச்சகத்தின் மூலம் 1891ஆம் ஆண்டு கிறிஸ்து மான்மியம் என்னும் கிறித்தவக் காப்பியத்தை வெளியிட்டார்.

நூல் பகுப்பு

கிறிஸ்து மான்மியம் என்னும் காப்பியம் காண்டங்கள் என்னும் பெரும் பகுப்பு இல்லாமல் சருக்கம் என்னும் வகையிலான சிறு பகுப்புகளை மட்டுமே கொண்டுள்ளது. இக்காப்பியத்தில் தேவதூதன் கன்னிமரியாளிடம் வந்த சருக்கம் முதல் பரமண்டலமேறிய சருக்கம் ஈறாக 39 சருக்கங்கள் உள்ளன. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றினை விவரிக்கும் இந்நூல் 583 விருத்தப்பாக்களினால் ஆனது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் மகதலேனா மரியாளுக்குக் காட்சி கொடுத்ததையும் எம்மாவூரில் இருவருக்குக் காட்சி கொடுத்ததையும் சீடர்களுக்கும் தோமாவுக்கும் காட்சி கொடுத்ததையும் தீபேரியாக் கடற்கரையில் காட்சி கொடுத்ததையும் ஆசிரியர் தனித்தனிச் சருக்கங்களாக அமைத்து, இறுதியில் பரமண்டலமேறிய சருக்கத்துடன் நூலை

முடித்துள்ளார். இந்நூலில் எவ்வித வருணனைகளும் உவமை நயங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைச் செய்யுள் வடிவில் இந்நூல் கொடுக்கின்றது.

சருக்கங்கள்

கிறிஸ்து மான்மியம் 39 சருக்கங்களால் பகுக்கப் பட்டுள்ளது. அச்சருக்கங்கள் தேவதூதன் கன்னிமரியாளிடம் வந்த சருக்கம், கிறிஸ்து திருவவதாரச் சருக்கம், விருத்தசேதனச் சருக்கம்,சாஸ்திரிகள் வந்த சருக்கம், பன்னிரண்டாவது வயதில் தேவாலயம் சென்ற சருக்கம், ஞானஸ்நானச் சருக்கம், பிசாசு சோதனைச் சருக்கம், நிக்கோதேமுச் சருக்கம், தண்ணீரை திராட்ச ரசமாக்கிய சருக்கம், சமாரியப் பெண் சருக்கம், காற்றையு கடலையு மடக்கிய சருக்கம், திமிர்வாதந் தீர்ந்த சருக்கம், யவீரு மகளை யெழுப்பிய சருக்கம், விதவை மகனையுயிர்ப்பித்த சருக்கம், அய்யாயிரருக் குணவளித்த சருக்கம், அறிவுணர்த்திய சருக்கம், பிறவிக் குருடன் கண் பெற்ற சருக்கம், சமாரியன் சருக்கம், கெட்டுத் தேறினவன் சருக்கம், இலாசரு சருக்கம், குஷ்டரோகர் குணப்பட்ட சருக்கம், வேற்றுருவடைந்த சருக்கம், எருசலேஞ் சென்ற சருக்கம், அடக்கப்பட்ட விலாசரு வெழுந்த சருக்கம், கடைசி நாளில் கிறிஸ்து வருவாரென்ற சருக்கம், மரணத்தோடு போர் செய்த சருக்கம், காட்டிவிட்ட சருக்கம், ஆசாரியன் முன்னே பாடுபட்ட சருக்கம், பிலாத்துக்கு மெரோதேயுக்குமுன் பாடுபட்ட சருக்கம், ஆக்கினைத் தீர்ப்புச் சருக்கம், சிலுவையிலறையுண்ட சருக்கம், மரணமடைந்த சருக்கம், அடக்கப்பட்ட சருக்கம், உயிரோடெழுந்த சருக்கம், மக்தலாவூர் மரியாள் கண்ட சருக்கம், எம்மவிலிருவர் கண்ட சருக்கம், சீடர்களுந் தோமாவுங் கண்ட சருக்கம், தீபேரியாக் கடற்கரையில் கண்ட சருக்கம், பரமண்டல மேறிய சருக்கம் என்பவைகளாகும். இச்சருக்கங்கள் குறைந்தது ஏழு பாடல்களையும் அதிகமாக 32 பாடல்களையும் கொண்டுள்ளன.

பிறவிக் குருடன் கண்பெற்ற சருக்கம்

பிறவிக் குருடன் கண்பெற்ற சருக்கம் என்னும் பதினெட்டாவது சருக்கம் 32 பாடல்களை உடையது. பிறவிக் குருடனின் கண்களில் உமிழ் நீர் கலந்து மண்ணை இயேசு கிறிஸ்து பூசியபின் அவரது சொற்படி அவன் சீலோவாம் குளத்தில் சென்று கண்களைக் கழுவிப் பார்வை பெற்று

மகிழ்ச்சியடைந்ததைக் கீழ்க்காணும் பாடல்களின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்:

வாயினுமிழ்நீரை யொரு மண்டரை யுமிழ்ந்தா
ராயவதனாலளறு செய்ததை யெடுத்தார்
தூயபிறவிக் குருடனோக்கிடை துமித்தார்
போயி சிலொவாங் குளம்புகுந்து கழுவென்றார்.

பெற்றவர்கண் மற்றவர்கள் பெற்றவிரு கண்ணா
வுற்றவர்களாற் புவியிலுள்ள வைகளோர் வான்
பற்றுமொரு கோல் கைகொடுபார் மிசைநடப்பான்
சற்றுமதியாமலே சரேரென வெழுந்தான்.

மண்ணதனை வாரியிரு கண்ணினிடையிட்ட
வண்ணலது சொற்படியடைந்து கழுவுங்கால்
விண்ணுலகு மண்ணுலகு மேன்மைசெய் கிறிஸ்தைப்
பெண்ணொருவள் பெற்றுபெறு பேருவகை பெற்றான்.

(பிறவிக் குருடன் கண்பெற்ற சருக்கம், பா.7-9)

எளிமையான கவிதை அடிகளுக்குத் தக்க சான்றாக இப்பகுதி அமைந்துள்ளது.

கவிதையாக்கம்

விவிலியத்திலுள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நற்செய்தி நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இக்காப்பியம் இந்நூல்களிலுள்ள செய்திகளைச் சுருக்கமாகத் தருகிறது. லூக்கா எழுதிய நற்செய்தி நூலிலுள்ள "தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ, நீ கற்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்" (லூக்கா 1:30-32) என்னும் வசனங்களை,

அத்தருணத்தவன் மரியாளே நீ யஞ்சாதே
கர்த்தர் கிருபை பெற்றாயிதோ நீ கர்ப்பங் கொண்டோர்
புத்திரனைப் பெற்றேசுவெனப் பேர் புகல்வாயவ்
வுத்தமராய வருன்னத மானவரோர் சேயே

என்னப்படுவார் பரம பிதாவே யேசுப்பே
ரன்னவருக்குத் தாவிதிராசாசன மீவார்
மன்னவராயவர் யாகோபின் குலவழியாள்
முன்னவ ராசாங்கத்துக்கோர் முடிவிலை யென்றான்
(தேவதூதன் கன்னிமரியாளிடம் வந்த சருக்கம், பா.7,8)

எனக் கவிதையாக மாற்றம் செய்கிறார். மேலும் "ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப்போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய்ச் சிதறிப்போனதைத் தேடாமலிருப்பானோ? அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக் குறித்துச் சந்தோஷப்படுகிறதைப் பார்க்கிலும், அதைக் குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப் போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" (மத்தேயு,18:12-14) என்னும் வசனங்களை,

உங்களிலோர் மனிதனூ றாடுகளை யுடையானேற்
றங்கவைகட மினொன்றுதான் காணாதோடி விட்டா
லங்கவை தொண்ணூற் றொன்ப தாட்டை வனாந்தரம்விட்டே
யெங்கணிலு மோராட்டைக் காணளவு மேகானோ

கண்டுபிடித்த தன்பின்பு களிப்புடனே தன்றோண்மேற்
கொண்டு வீடெய்திச் சினேக ரயலகத்த ரைக்கூய்ப்
பண்டுகாணா வென்றனாட்டை யான்பற்றி வந்தே
னண்டிய நீரென்போ லானந்திப்பீ ரென்கானோ

ஈதுபோலொ ருபாவியினைத் தேடியிவனுக்குச்
சேதமிகப் படர்பாசியொ துக்கி நீர்தேறுவன்போற்
போதமறி யறிவுவரப் புரிந்தளவிலா மகிமை
நீதிகொள் பராபரனை நேசிக்கும்படிச் செய்தல்
(கெட்டுத் தேறினவன் சருக்கம், பா.2-4)

எனப் பாடுகிறார். இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போது சொல்லிய ஏழு வார்த்தைகளுள் இறுதி வார்த்தையை லூக்கா என்னும் நற்செய்தி நூல் "இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்" (லூக்கா 23:46) எனக் குறிப்பிடுகின்றது. இவ்வசனத்தை ஸ்தொஷ் போதகர்,

ஓ ஓவென்றே பிதாவே யுங்கையிலென்
னாவியை யொப்பிக்கின்றே னென்றார்த் தென்றுஞ்
சாவிலா வேசுவுந் தலையைச் சாய்த்துத்தஞ்
சீவனை விட்டனர் திரும்ப வல்லவர்

(மரணமடைந்த சருக்கம், பா.18)

என்னும் பாடலாகப் பாடுகிறார்.

கிறிஸ்து மான்மியம் என்னும் நூலை ஸ்தொஷ் போதகர் எழுதவில்லை என்றும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி தமிழ்ப் புலவர் ஒருவரிடம் சொல்லி எழுத வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் நூலில் பிறமதத்தைச் சார்ந்த அப்புலவரின் பெயரைப் போடாமல் நூல் எழுதக் காரணமான ஸ்தொஷ் போதகரின் பெயரை நூலில் அச்சிட்டிருக்கலாம் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இக்கருத்து எவ்வளவு உண்மை எனத் தெரியவில்லை. எனினும், கிறிஸ்து மான்மியம் என்னும் கிறித்தவக் காப்பியம் தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்தது பாராட்டுதலுக்குரியதாகும்.

10. சுவிசேட புராணம்

மேலை நாட்டைச் சேர்ந்த மூவர்களால் கிறித்தவக் காப்பியங்கள் படைக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று சுவிசேட புராணமாகும். இக்காப்பியம் இன்று கிடைக்காத நூல்களில் ஒன்றாகக் காணப்படுகிறது.

ஆசிரியர் வரலாறு

சுவிசேட புராணம் என்னும் காப்பியத்தின் ஆசிரியர் ஸ்காட் (Scott) என்பவராவார். இவர் மதுரை மாவட்டத்தில் அரசாங்கப் பணி செய்து வந்த ஓர் ஆங்கிலேயர். இவர் தமது பெயரைத் தமிழ் நடைக்கேற்ப சுகாத்தியர் என மாற்றியிருப்பதன் மூலம் இவரது தமிழ்ப் பற்றினை உணர்ந்து கொள்ள முடிகிறது.

சுகாத்தியர் முழுவதும் வித்தியாசமான முறையில் திருக்குறளைத் திருத்த முயன்றார். இவர் திருக்குறளின் முதல் அடியும் இரண்டாம் அடியும் தொடக்கத்தில் இசைநயத்துடன் சரியாக அமைந்திருக்கவேண்டும் என்னும் எண்ணத்தில் திருத்தங்களை மேற்கொண்டார். இத்திருத்தத்தை ஒருவரும் ஆதரிக்கவில்லை. திருக்குறளிலுள்ள சொற்களை மாற்றியதால் பொருளும் மாறின. இத்திருத்த நூல் 1889இல் அச்சாகியது. முதலில் ஒன்றிரண்டு நூல்கள் விற்பனையானது. இந்நூலினைப் பற்றி கேள்விப்பட்ட இராமநாதபுரம் சேதுபதி உடனடியாக சுகாத்தியர் வெளியிட்ட நூல்கள் அனைத்தையும் வாங்கித் தீயிட்டுக் கொளுத்தினார். (கா. மீனாட்சி சுந்தரம், ஐரோப்பியர் தமிழ்ப்பணி, பக். 111, 112) முதலில் விற்பனையான நூல்களின் மூலம் திருக்குறளை மாற்றிய முறையினை அறிந்துகொள்ள முடிகிறது.

யான்நோக்கும்காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும் (குறள்.1094)

என்னும் குறளை சுகாத்தியர்,

நே நோக்குங்காலை நிலநோக்கு நோக்காக்கான்
மே னோக்கி மெல்ல நகும்

என மாற்றினார். இக்குறளின் சொற்களை மாற்றியதால் இதன்பொருளும் மாறுபடுகிறது. அதாவது நேயமாகப் பார்க்கும்

போது நிலத்தைப் பார்க்கும்; பார்க்காத போது மேலே பார்த்து மெல்ல நகும் என்பது சுகாத்தியர் மாற்றியமைத்தப் பாடலின் பொருளாகும். அதுபோல,

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற **(குறள்.34)**

என்னும் குறளை,

ஆகுள மாசினாதல னய்த் தறன்
பேகுல நீர பிற

என மாற்றினார். இப்பாடலில் சீர்களை எதுகைக்காக மாற்றியிருக்கிறார். இம்மாற்றங்கள் நகைப்புக்கு உரியனவாகக் காணப்படுகின்றன.

சுவிசேட புராணம் - பெயர்க்காரணம்

சுவிசேடம் என்பதன் பொருள் நற்செய்தி என்பதாகும். விவிலியத்திலுள்ள புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நற்செய்தி நூல்கள் உள்ளன. இந்நான்கு நூல்களையும் சுவிசேட நூல்கள் என்பர். இந்நான்கு நூல்களிலுமுள்ள நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இக்காப்பியம் எழுதப்பட்டதால் இந்நூலுக்கு சுவிசேட புராணம் என ஆசிரியர் பெயரிட்டுள்ளார். எனினும் இந்த நான்கு நூல்களை மட்டுமல்லாமல் புதிய ஏற்பாட்டிலுள்ள பிற நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு இந்நூலைப் படைத்துள்ளார். ஐந்தாவதான அப்போஸ்தல காண்டம் விவிலியத்திலுள்ள அப்போஸ்தலர், முதலாம் தீமோத்தேயு, இரண்டாம் தீமோத்தேயு, தீத்து, வெளிப்படுத்தல் ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டது. இயேசு கிறிஸ்துவின் வரலாறு விருத்தப்பாவினால் பாடப்பட்டுள்ளது. இது குறித்து சுகாத்தியர் இந்நூலின் முன்னுரையில்,

> தமிழில் வசனரூபமாகச் செய்திருக்கிற நமது வேதமானது மனனஞ் செய்தற்கும் பொருள் சொல்லுதற்கும் எல்லோருடைய மனங்களையுங் கவர்ந்து கொள்ளும்படி போதித்தற்கு மெதுவாக இந்நாட்டிற்குப் பொருந்துமாறு புதிய வேற்பாட்டை விருத்தங்களிற்பாடிச் சுவிசேட புராணமெனப் பெயரிட்டனம்

என எழுதியுள்ளார்.

நூலின் அமைப்பு

சுவிசேட புராணம் 1891 ஆம் ஆண்டு மதுரை கிளக்ஹார்ன் அச்சாபீஸ் மூலம் வெளியிடப்பட்டது. இந்நூல் 420 பக்கங்களையும் பின்னிணைப்புப் பகுதி 24 பக்கங்களையும் கொண்டது. இந்நூல் மத்தைய காண்டம், மாற்க காண்டம், லூக்க காண்டம், யோவா காண்டம், அப்போஸ்தல காண்டம் என்னும் ஐந்து காண்டங்களைக் கொண்டது. ஒவ்வொரு காண்டமும் பன்னிரண்டு மூர்த்திகளைக் (பகுதிகளை) கொண்டது. ஒவ்வொரு மூர்த்தியும் ஏழு படலங்களை உடையது. ஒவ்வொரு படலமும் எட்டு பாடல்களை உடையது. ஆக, ஐந்து காண்டங்களை உடைய இந்நூல் அறுபது மூர்த்திகளையும் 420 படலங்களையும் 3360 பாடல்களையும் கொண்டுள்ளது. இதனால் நாள் ஒன்றுக்கு ஒரு படலமாக படித்து வந்தால், ஓர் ஆண்டில் இந்நூல் முழுவதையும் படித்து விடலாம் என்பது ஆசிரியரின் கருத்தாகும். பாடல்களை அமைத்துள்ளதைப் பற்றி சுகாத்தியர் தம் முன்னுரையில்,

> ஒவ்வொரு படலத்தினு முதற்பாட்டின் முதலடியானது எவ்வெச் சீரினாலெவ்விடத்து மோனைப் பெற்றதோ அப்படியே அடிகளெல்லாம் அவ்வச் சீரினாலவ்விடத்து மோனைப் பெறவமைத்து குறில் நெடில் குறிலிணை யென்னுந் தொடர்களுடன் முதற் பாட்டின் முதலடியெந்தத் தொடரோ வந்தத்தொடரே படல முழுவதும்வரப் பாடினோமாதலிற் சில விடங்களிற் குறுக்கன் முதலிய விகார விலக்கணங்களைக் கொள்ள வேண்டியதாயிற்று

எனக் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு பக்கத்தின் கீழ்ப்பகுதியிலும் அப்பக்கத்திலுள்ள பாடல்களின் செய்திகள் இடம் பெற்றுள்ள விவிலியப் பகுதிகளைக் குறித்துள்ளார். இம்முறையானது படிப்பவர்களுக்குப் பெரிதும் துணையாக உள்ளது. அவ்வாறு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடும்போது, பேதுரு என்பதைப் பேதர் எனவும் கொரிந்தியர் என்பதைக் குரிந்தியர் எனவும் ரோமர் என்பதை ரூமர் எனவும் யோவான் என்பதை சனகன் எனவும் குறிப்பிட்டுள்ளார். இதைப்போன்று காண்டங்களின் பெயர்களிலும் சில மாற்றங்களைச் செய்துள்ளார். மத்தேயு எழுதின நற்செய்தி நூலை அடிப்படையாகக் கொண்ட காண்டத்திற்கு மத்தைய காண்டம் எனவும், அதைப்போல பிற நற்செய்தி நூல்களை

அடிப்படையாகக் கொண்ட காண்டங்களில் முறையே மாற்க, லூக்க, யோவா எனச் சுருக்கிப் பெயர்களை அமைத்துள்ளார்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்த பெயர்கள்

புதிய ஏற்பாட்டை அடிப்படையாகக்கொண்டு படைக்கப் பட்டுள்ள இக்காப்பியத்தில் ஐந்து காண்டங்களும் 60 பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகள் பொதுவாக மூர்த்தி எனக் குறிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் கூறப்பட்டுள்ள கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு காண்பருள் மூர்த்தி, மாண்பருள் மூர்த்தி எனப் பெயர் அமைத்துள்ளார். ஆனால் இறுதிக் காண்டத்திலுள்ள பகுதிகள் அரசர் என்னும் பொருளில் வேந்து என அமைக்கப்பட்டுள்ளன. இத்தகையப் பகுப்பு பிற நூல்களிலிருந்து மிகவும் மாறுபட்டதாக அமைந்துள்ளது. அறுபது படலங்களின் பெயர்களும் பின்வருமாறு :

1. காண்பருண் மூர்த்தி 2. மாண்பருண் மூர்த்தி 3. ஆற்றருண் மூர்த்தி 4. சேர்பருண் மூர்த்தி 5. ஊக்கருண் மூர்த்தி 6. பேறருண் மூர்த்தி 7. ஆய்வருண் மூர்த்தி 8. ஓம்பருண் மூர்த்தி 9. ஆர்வருண் மூர்த்தி, 10.போப்பருண் மூர்த்தி, 11.பாங்கருண் மூர்த்தி 12. ஊனருண் மூர்த்தி 13. தேர்வருண் மூர்த்தி 14. சீரருண் மூர்த்தி 15. சேரருண் மூர்த்தி 16. சூழ்வருண் மூர்த்தி 17. மீட்பருண்மூர்த்தி 18. ஓர்வருண் மூர்த்தி 19. பாடருண் மூர்த்தி 20. கேழுருண் மூர்த்தி 21. சாற்றருண் மூர்த்தி 22. மாடருண் மூர்த்தி 23. ஏமருண் மூர்த்தி 24. பீடருண் மூர்த்தி 25. ஓதருண் மூர்த்தி 26. ஞாட்பருண் மூர்த்தி 27. கோளருண் மூர்த்தி 28. ஈர்ப்பருண் மூர்த்தி 29. ஆள்பருண் மூர்த்தி 30. சார்பருண் மூர்த்தி 31. நீர்ப்பருண் மூர்த்தி 32. போற்றருண் மூர்த்தி 33. எல்வருண் மூர்த்தி 34.நேர்வருண் மூர்த்தி 35. ஏணருண் மூர்த்தி 36. ஏரருண் மூர்த்தி 37. பூப்பருண் மூர்த்தி 38. ஊரருண் மூர்த்தி 39. தாளருண் மூர்த்தி 40. ஊற்றருண் மூர்த்தி 41. வாழ்வருண் மூர்த்தி 42. வாய்ப்பருண் மூர்த்தி 43. தீர்வருண் மூர்த்தி 44. காப்பருண் மூர்த்தி 45. வீடருண் மூர்த்தி 46. சால்பருண் மூர்த்தி 47. ஓய்வருண் மூர்த்தி 48. மேவருள் வேந்து 49. ஈடருள் வேந்து 50. சாந்தருள் வேந்து, 51. கோளருள் வேந்து 52. ஊங்கருள் வேந்து 53. வாக்கருள் வேந்து 54. ஏந்தருள் வேந்து 55. பேணருள் வேந்து 56. நோன்பருள் வேந்து 57. ஆடருள் வேந்து 58. சான்றருள் வேந்து 59. தூய்தருள் வேந்து 60. வேந்தருள் வேந்து என்பனவாகும்.

ஆசிரியரின் தமிழ்நடை

சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் 63 தொண்டர்களைக் குறிப்பிடுவதைப் போன்று, சுகாத்தியரும் மூர்த்தி எனவும் வேந்து எனவும் குறிப்பிட்டிருக்கலாம். சுவிசேட புராணத்தின் பின்பகுதியில் சற்பதி மூர்த்திகளின் திருமுறை என்னும் தலைப்பில் பின்வரும் செய்திகளைக் குறிப்பிடுகிறார் :

> வேதத்தின் முதலிற் பரனொருவர் முற்பதியாக விளங்கிய காரணத்தாற் சுலோகத்தொண்டர் அவரைத் தொழுது வந்தனர். இவ்வாறு நரருற்பவமுதல் யூதருக்கரசனாகிய தாவிதுடய காலத்தளவுமந்த முற்பதியே அறுபது மூர்த்தியாகத் தம்மைத் தோற்றியருளினர்.
>
> வேதத்தினிடயிலப் பரனே சிற்பதியாக விளங்கிய காரணத்தாற் சாமீபத்தொண்டர் அவரைத் தொழுது வந்தனர். இவ்வாறு தாவிதுடைய குமாரன் சாலோமோன் காலமுதல் மாலக்கி தீர்க்கதரிசி காலத்தளவு மந்தச் சிற்பதியே அறுபது மூர்த்தியாகத் தம்மைத் தோற்றியருளினர்.
>
> வேதத்தின் கடயிலப்பரனே சற்பதியாக விளங்கிய காரணத்தாற் சாரூபத்தொண்டர் தொழுது வருகின்றனர். இவ்வாறு சனக முற்றூதனுடைய சத்வோற்பவகாலமுதற் சனக நற்றூதன் கண்ட வேதாந்த தரிசன காலத்தளவுமந்தச் சற்பதியே அறுபது மூர்த்தியாகத் தம்மைத் தேற்றியருளினர்.
>
> அம்முப்பதிகளுடைய தரிசன மூர்த்தங்கள் திசைக்கொன்றாக நான்கு முகமாகவும் உலகப்பிரசித்தமாக ஒரே முகமாகவும் ஒவ்வொரு முகத்தினும் பன்னிரு மூர்த்திகளாய் மெய்ஞ்ஞானவுபதேசம் விளங்கவருளினர்.
>
> அவ்வாறாக ஆதியிலுண்டான திருச்சபை நான்கினுள் யூதசபை சற்பதியுடய நன்மையும் கிரேக்குசபை சற்பதியுடைய உண்மயும் ரூமசபை சற்பதியுடய மேன்மையும் ஆசியசபை சற்பதியுடைய ஒண்மையும் தற்சிறப்புத் தன்மயாகவும் அதற்குரிய மூர்த்தங்கள் பன்னிரண்டிற்கும் பொதுவான குணமாகவுங் கொண்டிருந்தன.
>
> இத்தேசத்தும் பபிலோன் சிகரிச்சிதைவின் மூலமாக முற்பதியினுடைய மூர்த்தி விசேசங்களும் சாலோமோனிறைவன் ஞானப்பிரசித்த முயற்சியினாலும்

யூதசாதியார் சிறைப்பட்ட சிதைவினாலுஞ் சிற்பதியினுடைய மூர்த்தி விசேசங்களுங் கிறிஸ்து நாதருடைய பன்னிரு சீடரிற் றொம்மயார் இத்தேசத்திற் கெழுந்தருளி உபதேசித்தமாயாலுங் கிறிஸ்து மார்க்க முரோம ராச்சியமெங்கும் பரவியதாலும் சற்பதி மூர்த்தியினுடைய விசேடங்களும் விளக்கமுற்று எவ்வகை மதஸ்தரும்பரனைச் சச்சிதானந்தராகவும் கிறிஸ்தவர் பிதா சுதன் பிரான் என்னு மும்மூர்த்திகளாகவும் தொழுது வருகின்றனர்.

இந்நூல் முறையே ஐந்து வகையாகச் சற்பதியின் அறுபான் மூர்த்திகளையும் ஒவ்வொரு மூர்த்தியின் விசேசங்களையுந் தினந்தோறும் வேதத்தில் வாசித்துணர்ந்து பயன்படும் பொருட்டியற்றலாயிற்று

என்னும் இப்பகுதியின் மூலம் ஆசிரியரின் புலமையையும் தமிழ் நடையையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

விவிலியச் செய்திகள்

சுகாத்தியர் விவிலியச் செய்திகளை எவ்வித மெருகும் இன்றி அவ்வாறே விருத்தப்பாவில் வடித்துள்ளார். இந்நூலிலுள்ள பாடல்களில் கற்பனை நயம், உவமை நயம் என ஏதும் இல்லை. முதலாவது காண்டத்தில் பிணியர்க்கருளி மணமுறை கூறிச் சிறுவரையேற்றுத் துறவுணர்த்திய படலத்தில் “சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது” (மத்தேயு 19:14) என்னும் வசனத்தை,

பாலரைப் பரிசித்தோம்பப் பலர்கொடங்குற லுஞ்சீட
ரேலுறாத்தட்ட நாதரிடங் கொடுமிவர்க் கின்னார்க்கே
மேலுலகுரிய தென்றுமிளிர்கரமவர் மேல்வைத்து
ஞாலமதகன்று சென்றார் நடந்திடுபொழு தோர்மாந்தன்(ப.36)

எனப் பாடலாக வடிக்கிறார். கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரைத் திராட்சை இரசமாக்கிய படலத்தில் இடம் பெற்றுள்ள,

நிறைமின் சாடியினீரெனவாட்களத்
துறையின் முற்றினர் தூயவர் மொண்டிதைப்
பறையும் பந்தியன் பாற்கொடு போமென
முறையி னாங்கவர் மொண்டுகொண் டேகினார்

எவணின்றிம்மது வெய்திய தென்றுநீ
ரவிட மொண்டவர்க்கல்லது பந்தியிற்
கவினு மேலவன் காண்கிலனா னுகர்ந்
தவண மன்றலுக் காதிபற் கூவியே

எனைய மாந்தனு மின்ரச முன்படைத்
தனைவரும் மகிழ்வார்ந்தபின் பல்கிய
வினிய தீகுவனித் துனையும் நீவிர்
மனியநல் ரசம்வைத் துளீரென்றான் (ப.258)

என்னும் பாடல்களில் இயேசு பெருமானின் முதல் அற்புதத்தை விவிலிய வசனங்களின் அடிப்படையில் செய்யுளில் அமைத்துத் தந்துள்ளார். நான்காவது காண்டமான யோவா காண்டத்திலுள்ள வாழ்வருண் மூர்த்தி என்னும் பகுதியிலுள்ள பிறவிக் குருடனுக்கு உமிழ்நீர் சேற்றால் பார்வை யருளிய படலத்திலிருந்து சான்றாகச் சிலபாடல்கள் பின்வருமாறு:

புண்ணிய ரிவன்புரி புரையன் றீன்றவர்
பண்ணிய தலவிறை படைப்புத் தோன்றுவா
னண்ணி னன்பகல் வரைநணி யிங்குய்த்தவ
ரெண்ணு றுவினைக ணானியற்ற வேண்டுமே.

செய்ய வற்றிடுமி ராச்செறிவ தாமியான்
வையகத் தொளியென வதிந்நு ளேனெனா
வொய்யெ னப்புவியினி லுமிழ்ந்து சேறுசெய்
தையவந்த கன்கணி லதனைப் பூசிநீ

சென்று சீலவாங் குளந்திகழ மண்ணுதி
யென்றன ரனுப்பினோ னெனும்பொ ருட்டதா
மன்றவா றணிக்கு ளமதனின் பிண்ணியே
நன்றுறு விழியொடு நடந்து வந்தனன்.

அப்பொழு தயலகத் தவரு மந்தனா
யெப்பொழு தினுமய மெடுத்து வைகிய
வெப்பறிந் தவர்களும் விளங்கி டும்மிவ
னிப்படி யிரந்தன னினைய னல்லனோ

என்றனர் சிலரவனி வனென் றார்சில
ரொன்னிடு மனையவ னுருவம் போன்றுளான்
மன்றவு மெனவெதிர் வழுத்த வாங்கவன்
துன்றுநா னவனெனத் துலங்கக் கூறினான் (ப.281)

ஐந்தாவது காண்டத்திலுள்ள பவுல், முன் கொண்டிருந்த வைராக்கியமும் பின் குணப்பட்டது முரைத்த படலத்தில்,

உடனிருந்தவர் தெரிந்தன ரொளியினயறைந்த
படியறிந்திலர வணியான் பரமவென் புரிவ
தடியனே னெனவெழுந் துநீயடை தமஸ்குவயப்
புடயியற்றலா நியமனம் புகலுமென் றுரைத்தார்.

விழியிழந்து மாணொழியினால் விரவினோர் கரத்தால்
வழிநடந்து நான்றமஸ்குவை மருவினேன் மறயிற்
கெழுவுமன் பின்னவண்குடிக் கிளயுதரெவரு
மொழியுஞ் சான்றுள வொழுக்கினன் முயலனனியவாம்

ஒருவனென்னிடமணைந் தெனக்குறு சவுல்விழிநீ
தெரிவயென்றலும் விழித்தனன் றெளிந்தவன் முதியோர்
பரமனுள்ள நீயறியவும் பரிந்து கண்ணுறவு
முரைவினாவ வுமவருன யுணர்ந்தனர் முனமே

நயனங்கண்டன செவிகளான ணியனகுறித்து
வியனிலத் தருக்கெதிர் கரிவிளம்பு வயிவணீ
பயணந் தாழ்ப்பதெனமு தொழுபரன் பெயர்சிதநீர்
கயினடைந் துனதவமறக் கழுவுகென்று ரைத்தான் (ப.374)

என சவுல் பவுலாக மாறியதைப் பாடுகின்றார்.

புதுமைக் காப்பியம்

சுவிசேட புராணம் தமிழ்மொழியின் மீது ஆர்வமும் பற்றும் கொண்ட ஒரு ஆங்கிலேயரால் சிறப்பாகப் பாடப்பட்ட ஒரு காப்பியம் ஆகும். அவர் தனதுபெயரைச் சுகாத்தியர் என மாற்றிக் கொண்டது அவரது தமிழ்ப் பற்றுக்குச் சிறந்த சான்றாகும். படலத்திற்குப் பெயரிட்டமுறை பிற கிறித்தவக் காப்பியங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவும் புதுமையதாகவும் அமைந்துள்ளது. ஒரு காப்பியத்திற்குரிய தன்மைகளை முழுமையாக சுவிசேட புராணம் பெற்றிருக்கவில்லை யென்றாலும், கிறித்தவ இலக்கிய உலகில் சுவிசேட புராணம் ஒரு காப்பியமாகவே மிளிர்கிறது. எனினும், சுகாத்தியரின் கடினமான மொழிநடையே இக்காப்பியம் மக்களிடம் அதிகமாகப் பரவாமைக்குக் காரணம் எனலாம்.

11. இரட்சகராகிய இயேசுநாதர்

கிறித்தவக் காப்பியங்களுள் பல மிகவும் எளிமைத் தன்மையில் மக்கள் இலக்கியமாகப் படைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது இரட்சகராகிய இயேசுநாதர் என்னும் காப்பியமாகும். இக்காப்பியம் தே.அ. ஞானாபரணம் பண்டிதர் அவர்களால் படைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வரலாறு

தே.அ. ஞானாபரணம் பண்டிதர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சேனம்விளை என்னும் ஊரில் 1885ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் தேவவரம் அருமைநாயகம் ஆவார். இவரது முன்னோர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நெய்யூர் என்னும் ஊரில் ஊழியம் செய்துவந்த பேலீஸ் ஐயரின் காலத்தில் கிறித்தவர்களாக மாறினர். ஞானாபரணத்தின் தாத்தா சாந்தமுடையான் உபதேசியார் சேனம்விளை என்னும் ஊரில் பிரபலமானவராக விளங்கினார். சாந்தமுடையான் உபதேசியார் நில உரிமைப் பத்திரங்கள் எழுதுவதில் வல்லவர். தமிழ்ப் புலமையும் சபைகளை நடத்துவதிலும் திறமை படைத்தவர். இத்திறமைகளும் புலமையும் ஞானாபரணத்திற்கும் இயல்பாக அமைந்திருந்தன.

இளம் வயதிலேயே ஞானாபரணம் நாகர்கோவிலிலுள்ள பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார். போர்டிங் சாலையிலும் (விடுதி) பள்ளிக்கூடத்திலும் பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து வந்தார். இவருடைய குருவாகக் கீர்த்தனைக் கவிஞர் டி.ஐ. ஜேக்கப் விளங்கினார். பின்னர் வித்வான் தேர்வில் வெற்றி பெற்றார். படிப்பு முடிந்த பின்னர், தான் படித்த பள்ளியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பின்னர் பெண்கள் பள்ளியிலும் நாகர்கோவிலிலுள்ள கிறித்தவக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் பாளையங்கோட்டையிலுள்ள சாராள் தக்கர் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். இச்சூழலில் நீரிழிவு நோயினால் மிகவும் துன்பப்பட்டார். எனவே தமது ஆசிரியப் பணியிலிருந்து 36 ஆவது வயதில் விலகிவிட்டு நாகர்கோவிலில் ஞானாயி தெருவிலுள்ள ஞானவிலாசம்

காம்பவுண்டில் தங்கியிருந்து நூற்களை எழுதி வந்தார். இலண்டன் மிஷன், லுத்தரன் மிஷன், இரட்சணிய சேனை ஆகிய பிரிவுகளிலுள்ள மிஷனெரிமார்களுக்குத் தமிழ்க் கற்றுக் கொடுத்தும் வந்தார். வடக்கன்குளம் வரை சென்று மிஷனெரிமார்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பது இவரது வழக்கமாகும். நாகர்கோவிலிலுள்ள ஸ்காட் கிறித்தவக் கல்லூரியில் முதல்வராக இருந்த மார்ஸ்டன்துரைக்கும், நெய்யூர் மருத்துவமனையிலுள்ள மிஷனெரிமார்களுக்கும் இவர் தமிழ் கற்றுக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தே.அ. ஞானாபரணத்தின் மனைவியின் பெயர் ஞானம்மாள். இத்தம்பதியினருக்குக் குழந்தைகள் இல்லை. எனவே தனது தம்பியின் மகளான ஆக்னஸை வளர்த்தார். (திருமதி. ஆக்னஸ் நல்லதம்பி நாகர்கோவிலிலுள்ள பெண்கள் கிறித்தவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர்)

வேதாகமத்தைத் திருத்தியமைப்பதற்காக வேதாகமச் சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட குழுவில் அங்கத்தினராக ஞானாபரணம் செயல்பட்டார். கீர்த்தனை நூலின் புதிய திருந்திய பதிப்பை உருவாக்கக் கிறித்தவ இலக்கிய சங்கம் 1947 இல் ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவின் தலைவர் எச்.ஏ. பாப்லி ஆவார். அக்குழுவில் எல்லாத் தமிழ்ச் சபைகளிலிருந்தும் பலர் தெரிந்து கொள்ளப்பட்டனர். அவர்களில் தே.அ. ஞானாபரணமும் ஒருவர்.

நாகர்கோவிலில் தங்கியிருந்தாலும் தமது சொந்தச் சபையான சேனம்விளை சபைக்காக மிகவும் உழைத்தார். இருபத்தி ஐந்து ஆண்டுகள் சேனம்விளை சபையின் செயலராகத் தொண்டாற்றினார். இவரது உழைப்பின் பயனாக சேனம்விளை சபை முன்னேற்றம் அடைந்தது. பேராயத்திலுள்ள பல்வேறு குழுக்களில் உறுப்பினராக இருந்தார். தென்சேகரத்துக் கவுன்சிலில் 25 ஆண்டுகள் உறுப்பினராக இருந்து பல ஆலோசனைகளைக் கூறிவந்தார். குமரித் தந்தை நேசமணி இவரை 'அம்மாச்சா' என அழைப்பார். ஞானாபரணத்தை 'ஞானத்தின் ஆபரணம்' என அக்காலத்தில் புகழ்ந்து கூறுவர்.

ஞானாபரணத்தின் கால் பெருவிரலில் முள் குத்தியதால் மிகவும் துன்பப்பட்டார். பின்னர் நாகர்கோவிலின் அருகிலுள்ள புத்தேரி என்னுமிடத்தில் அமைந்துள்ள காதரின் பூத்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு 1955 மார்ச்சு மாதம் 28 ஆம் நாள் தமது 70 ஆவது வயதில் காலமானார். அவருடைய உடல் சொந்த ஊரான சேனம்விளையில் நல்லடக்கம் பண்ணப்பட்டது.

படைப்புகள்

கீர்த்தனைகள் பல எழுதி அவற்றை ''இரட்சணியப் பாமாலை'' என்னும் நூலாக வெளியிட்டார். நூற்றுக்கும் மேற்பட்ட திருமணப் பாடல்கள் எழுதியுள்ளார். குடிவெறியின் கெடுதி, அமிழ்தினும் இனிய தமிழ்மொழி, குணபதி - தளபதி என்னும் உரைநடை நூல்களை எழுதியுள்ளார். மேலும் 'ஆகாத மகன் அப்சலோமின் வரலாறு' என்னும் நாடக நூலைப் படைத்துள்ளார். இந்நூலிலிருந்து சான்றாக ஒரு பாடல் பின்வருமாறு:

கொண்டையடி கொண்டை
அப்சலோமின் கொண்டை
தொங்குது பார் கொண்டை
கருவாலி மரத்தண்டை

இரட்சகராகிய இயேசுநாதர்

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் எளிதாகப் படித்துப் பயனுறும் வகையில் இரட்சகராகிய இயேசுநாதர் என்னும் இக்காப்பியம் எழுதப்பட்டுள்ளது. இக்காப்பியத்தில் எளிமை, நயங்கள், வருணனைகள், தெளிந்த நீரோடை போன்ற கவிதை நடை ஆகிய பல்வேறு சிறப்பம்சங்கள் உடையன. இந்நூலிலுள்ள பாடல்கள் படிப்பதற்கு இனிமையாகவும் மனப்பாடம் செய்வதற்கு எளிமையாகவும் உள்ளன.

இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை விளக்கும் ''இரட்சகராகிய இயேசுநாதர்'' என்னும் நூலை மூன்று பாகங்களாக எழுதி ஞானாபரணம் வெளியிட்டார். முதல் பாகமான இளமைப் பருவமும், இரண்டாம் பாகமான சேவைப்பருவமும் இரண்டாம் பதிப்பாக 1950 இலும், மூன்றாம் பாகமான சிலுவைப் பருவம் இரண்டாம் பதிப்பாக 1951 இலும் வெளியானது. இந்நூல் நாகர்கோவிலுள்ள இலண்டன் மிசன் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது. இந்நூலின் முன்னுரையில்,

> சத்தியவேத புத்தகமே இயேசு பெருமான் சரித்திரத்திற்கு உத்தம ஆதாரம். விசேசமாக நான்கு சுவிசேச ஆகமங்களும், அவர் வாழ்க்கை வரலாற்றை நன்கு விளக்குகின்றன. அவற்றை ஆதாரமாக வைத்து அன்று முதல் இன்று வரை அநேக நூல்கள் அவரைப் பற்றி எழுதப்பட்டிருக்கின்றன. நன்மொழியெனும் எம்மொழியிலும் இந்நூல்கள் ஏராளம் உண்டு. அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியிலும் அவற்றிற்குக் குறைவில்லை. சரித்திர நூல்களுக்கிசைய வெவ்வேறு பருவமாக வகுத்துத் தொகுத்த தொடர்ச்சியான ஒரு சுருக்க வரலாறு எழுத்தறிவு பெற்ற யாவருக்கும், மிக விளங்கிப் பயன்படும் எனக் கருதி நான் இதை எழுதலானேன். நுட்பமான ஆராய்ச்சித்துறை ஒன்றினும் நான் புகுந்திலேன்; வேத சாஸ்திர நுணுக்கங்களொன்றினும் நான் நுழைந்திலேன்; புனைந்துரை புகழுரை யாதும் நினைந்திலேன். எளிய செய்யுள்நடை தமிழர் மனதை நன்கு கவரும் என்பதை எண்ணித் தெள்ளத் தெளிந்த விருத்தப்பாவில் இயேசுநாதரின் சரித்திரத்தை அமைத்துள்ளேன்

என ஆசிரியர் குறிப்பிடுகிறார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இந்நூலின் கையெழுத்துப் பிரதிகள் முழுவதையும் மிக்க ஆர்வத்துடன் படித்துப் பல திருத்தங்கள் செய்துள்ளார். இந்நூலைப் பாராட்டிக் கவிமணி பாடிய வெண்பா பின்வருமாறு:

> **பாவ இருளகற்றும் பானுவாய் வந்துதித்த**
> **தேவகுமாரன் திருக்கதையை - ஆவலொடு**
> **ஞானாபரணம் நவின்றான் அழகாகத்**
> **தேனார் தமிழில் தெரிந்து**

1949ஆம் ஆண்டு வெளிவந்த 'சத்தியசாட்சி' என்னும் மாத இதழ் இந்நூல் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகிறது :

> இயேசு பெருமானின் சரித்திரத்தைப் பண்டிதரும் பாமரரும் போற்றும் வகையில் எளிய செய்யுள் நடையில் இயற்றித் தமிழ் இலக்கியத்திற்கும் இந்தியத் தமிழ்க் கிறித்தவர்களுக்கும் அருந்தொண்டாற்றியுள்ளார் பண்டிதர் தே. அ. ஞானாபரணம் அவர்கள். இந்நூலில் காணலாகும் செய்யுட்களில் பல சொல்லோவியமாய் விளங்குகின்றன. இப்பாடல்கள் மனப்பாடஞ் செய்து பாடுவதற்கு எளிமையும் இனிமையுமாய் உள்ளன.

நூல்பகுப்பு

'இரட்சகராகிய இயேசுநாதர்' என்னும் இக்காப்பியம் குருபூஜையுடன் ஆரம்பமாகிறது. இக்காப்பியத்தில் குருபூஜை என்னும் பகுதி 14 பாடல்களையும், இளமைப் பருவம் 107 பாடல்களையும், சேவைப் பருவம் 164 பாடல்களையும், சிலுவைப் பருவம் 131 பாடல்களையும் கொண்டு இந்நூலில் மொத்தம் 416 பாடல்கள் உள்ளன.

குரு பூஜை

நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து என்பதற்குப் பதிலாக குரு பூஜை எனத் தலைப்பிட்டு இயேசு கிறிஸ்துவை வணங்குகிறார். இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அப்பாடலில் இடம் பெற்றுள்ள விவிலியப் பகுதிகளைச் சுட்டியுள்ளார். குருபூஜையிலுள்ள பெரும்பாலான பாடல்கள் 'உம்மைக் கும்பிட்டேன் இயேசு நாதா' என முடிவுறுகின்றன. குரு பூஜை கீழ்க்கண்ட பாடலுடன் தொடங்குகிறது:

ஆதியில் வானம் பூமி அனைத்தையும் படைத்த நாதா!
மேதினி மீட்பரான மேசியா கிறிஸ்து நாதா!
நீதியின் கதிரோன் என்னும் நிர்மல தூயநாதா!
கோதிலாக்குருவே! உம்மைக் கும்பிட்டேன் இயேசு நாதா!

(குருபூஜை, பா.1)

இப்பகுதியிலுள்ள பதினான்கு பாடல்களும் இயேசு கிறிஸ்துவின் சிறப்புகளைக் குறிப்பிடுவனவாக உள்ளன. இப்பதினான்கு பாடல்களும் சுவை மிகுந்த, கருத்துச் செறிவு மிக்கப் பாடல்களாக அமைந்துள்ளன.

1. இளமைப் பருவம்

முதல் பாகமாகிய இளமைப் பருவம் பெத்லகேம் படலம், நாசரேத்துப் படலம், யோர்தான் நதிப்படலம் என்னும் மூன்று படலங்களை உடையது. இளமைப் பருவம் என்னும் முதல் பாகத்தில் அகஸ்துராயன் கட்டளை பிறப்பித்ததிலிருந்து சாத்தானின் சோதனைகளை வென்றது வரையிலான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

2. சேவைப் பருவம்

இரண்டாம் பாகமாகிய சேவைப் பருவம் கலிலேயாப் படலம், யூதேயாப் படலம், சமாரியாப் படலம், உபதேசப்

படலம் என்னும் நான்கு படலங்களைக் கொண்டது. சேவைப் பருவம் என்னும் இரண்டாம் பாகத்தில் இயேசு கிறிஸ்து சீடர்களைத் தெரிந்தெடுத்து தமது சேவையைத் தொடங்கியது முதல் இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்யத் திட்டம் தீட்டுவது வரையிலான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

3. சிலுவைப் பருவம்

மூன்றாம் பாகமாகிய சிலுவைப் பருவம் பெத்தானியாப் படலம், கெத்சமனே படலம், எருசலேம் படலம், கொல்கதாப் படலம், உயிர்த்தெழுதல் படலம் என்னும் ஐந்து படலங்களை உடையது. இப்பாகத்தில் இயேசு கிறிஸ்து பெத்தானியா ஊருக்குச் சென்றது முதல் உயிர்த்தெழுந்து பரலோகம் சென்றது வரையிலான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

நாட்டு, நகர வருணனை

காப்பியங்களில் வருணனை காப்பிய வளர்ச்சிக்கும் காப்பியத் தன்மைக்கும் உறுதுணையாக அமைகின்றது. இவ்வருணனைகள் காப்பியத்திற்கு ஊட்டம் அளிக்கும் வகையில் அமைந்து சிறக்கின்றன. கிறித்தவக் காப்பியங்களில் நாட்டு, நகர வருணனைகள் குறிப்பிடத்தக்கன. பெத்லகேம் ஊரின் வளமையை,

காடெல்லாம் கழனி யங்கே! கரையெலாம் பயிர்கள் அங்கே!
நாடெல்லாம் உழவர் அங்கே! நடையெலாம் தழைகள் அங்கே!
மேடெல்லாம் மரங்கள் அங்கே! விளையெலாம் பழங்கள் அங்கே!
வீடெலாம் கறவை அங்கே! வெளியெலாம் பறவை அங்கே!
(இளமைப் பருவம், பா.20)

எனப் பாடுகின்றார். பெத்லகேம் ஊரில் காடுகள் எல்லாம் வயல்களாகக் காட்சி தரும்; கரைகளில் எல்லாம் பயிர்கள் இருக்கும்; நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் உழவர்கள் ஆவர்; பாதைகளில் எல்லாம் தழைகள் மலிந்திருக்கும்; தோப்புகளில் எல்லாம் பழங்கள் நிறைந்திருக்கும்; வீடுகளில் எல்லாம் கறவைகள் நிறைந்திருக்கும்; வான் வெளிகளில் எல்லாம் பறவைகள் மலிந்திருக்கும் என பெத்லகேமை வருணிக்கிறார். மேலும் நாசரேத்தூரை,

குலைகுலையாய்த் திராட்சைக் கொடிகளில் பழங்கள்
தொங்கும்;
மலைஎனக் குவித்திருக்கும் மாதுளம் பழத்தை எங்கும்;

இலைகனி சுமந்தே அத்தி எனும் மரம் நனிவருந்தும்;
தலமதைப் பழவூர் என்று சாற்றினும் மிகப் பொருந்தும்
(இளமைப் பருவம், பா.48)

என்னும் பாடல் மூலம் வருணனை செய்துள்ளார். திராட்சைக் கொடிகளில் குலைகுலையாகப் பழங்கள் தொங்கும்; மாதுளம் பழங்கள் மலை மலையாகக் குவிந்திருக்கும்; அத்தி என்னும் மரம் இலைகளும் கனிகளும் மிகுந்து தாங்க முடியாமல் வருந்தி நிற்கும்; ஆகவே எங்கும் பழங்கள் நிறைந்த அந்த ஊரைப் பழவூர் என்று சொன்னாலும் பொருத்தமுடையதே ஆகும். இவ்வருணனைகள் கவிஞரின் கற்பனையாற்றலுக்குச் சான்றாக அமைகின்றன.

தமிழ் மரபு சார்ந்த வருணனை

கம்பர், வீரமாமுனிவர், உமறுப் புலவர் ஆகியோர் இலக்கியங்களைப் படைக்கும் போது அதிலுள்ள நிகழ்வுகளை தமிழகத்தில் நடந்தது போன்ற உணர்வுடன் தருகின்றனர். அவற்றைப் போன்று, பாலஸ்தீன நாட்டில் நடந்த நிகழ்வுகளைக் கூறும் போது தமிழகத்தில் நடந்தது போன்ற உணர்வினை ஆசிரியர் கொணர்வது, அவரது இலக்கியப் படைப்பின் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது. யோசேப்பு, மரியாள், பன்னிரண்டு வயது நிரம்பிய இயேசு ஆகியோர் நாசரேத்திலிருந்து எருசலேம் நகருக்குச் செல்கின்றனர். அவ்வழியின் இயல்புகளைத் தமிழக கிராமங்களுக்கு இடையே காணப்படும் வழியின் இயல்புகளாக ஆசிரியர் படைத்திருப்பது மிக அருமை. சான்றுகள் பின் வருமாறு:

ஏருழும் உழவர் ஓசை எங்குமே நனி முழங்கும்
பாருறும் பறவை எல்லாம் பாடி நன்றாய் முழங்கும்
ஊரடை சோலை வண்டும் ஓய்விலாதே முழங்கும்
நேர்மலை அருவி எங்கும் நிறைந்து கல்லென முழங்கும்
(இளமைப் பருவம், பா.47)

கோபுரங் குளங்களாறு குன்றுகள் மேடுபள்ளம்
நேர்பட வளர்விருட்சம் நிறைந்த பூஞ்சோலைக்காடு
ஊர்தொறும் ஆடுமாடு உற்றநல் வயல் நிலங்கள்
சோர்பினை அகற்றுங்காட்சிப் பொருளென நேர்ந்ததங்கே.
(இளமைப் பருவம், பா.59)

பயிர் நிலந்தன்னைப் பார்க்க பச்சையாய்த் திகழ்ந்தது தோன்றும்
அயர் வினையகற்றியோட்டும் அழகுறும் பறவைக் கூட்டம்
உயர்மலை விலங்கு தூரத்தோடுவதுதப்பை யூட்டும்
குயில் மயில் குறுக்கிட்டோடிக் குதூகலந்தனை விளைக்கும்
(இளமைப் பருவம், பா.60)

ஏர் கொண்டு உழவர்கள் நிலத்தை உழுகின்ற ஓசை எங்கும் மிகுதியாக முழங்கியிருக்கும்; பாடும் பறவைகளின் ஒலியும் நன்றாகக் கேட்டிருக்கும்; சோலை மலர்களில் தேனருந்திய வண்டுகள் ஓயாமல் ரீங்காரம் செய்யும்; மலையிலிருந்து நிறைந்து வீழ்கின்ற அருவி கல் என முழங்கும்; கோபுரங்கள், குளங்கள், ஆறுகள், குன்றுகள் மிக உயர்ந்து வளருகின்ற மரங்கள் நிறைந்த பூஞ்சோலைக் காடு, ஊர் தோறும் ஆடு மாடுகள் நிறைந்திருக்கின்ற வயல் நிலங்கள் காண்பவர் சோர்பினை அகற்றி இனிதாகக் காட்சி தரும்; பயிர் வளர்ந்திருக்கின்ற நிலங்கள் பார்ப்பதற்குப் பச்சையாய்த் தோன்றும்; அழகியப் பறவைக் கூட்டம் காண்போர் சோர்பினை அகற்றும்; உயர்ந்த மலையில் ஓடுகின்ற விலங்குகள் மகிழ்ச்சியை ஊட்டும்; குயில்களும் மயில்களும் குறுக்கே பறந்து மிகுந்த மகிழ்ச்சியினை வழங்கும் என தமிழ் நாட்டை வருணிப்பது போன்று வருணிக்கும் தன்மை குறிப்பிடத்தக்கது.

சுருங்கச் சொல்லல் உத்தி

சுருங்கச் சொல்லிப் புரிய வைப்பது ஞானாபரணம் பண்டிதரிடம் இயல்பாகவே அமைந்துள்ளது. இயேசு நாதர் செய்த அற்புதங்களை நான்கு அடிகளில் மிக எளிமையாகக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

குருடர்கள் பார்க்கச் செய்தார்; குஷ்டநோய் பறக்கச் செய்தார்;
செவிடர்கள் கேட்கச் செய்தார்; செத்தவர் பிழைக்கச் செய்தார்;
கபடரை அகலச் செய்தார்; கறைபவம் விலகச் செய்தார்;
இருடனை ஓடச் செய்தார்; இலகொளி கூடச் செய்தார்
(சேவைப் பருவம், பா.21)

இதைப்போன்று இயேசு நாதர் கற்பித்துக் கொடுத்த பரமண்டல ஜெபத்தையும் இரண்டு பாடல்களில் படைத்திருப்பது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

விவிலியச் செய்திகள்

ஞானாபரணம் பண்டிதர் விவிலியச் செய்திகளை எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் பாடல்களாக மாற்றியுள்ளமை பாராட்டத்தக்கது. இயேசு கிறிஸ்து கானாவூர் கலியாண வீட்டில் தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றிய முதல் அற்புதத்தை,

மேவுமவ் வீட்டார் மிக்க விசனமுற்றேயச் செய்தி
யாவுமே அவர்க்குச் சொல்ல இருமூன்று ஜாடி நீரைத்
தாழ்விலா ரசமே ஆக்கித் தந்து தம் தன்மை காட்டித்
தேவகுமாரனாகத் திகழ்ந்தனர் இயேசுநாதர்
(சேவைப்பருவம், பா.5)

என அற்புதமாகப் பாடுகின்றார். "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி, நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்" (மத்தேயு 7: 3,4,5) என்னும் வசனங்களை,

மற்றவன் கண்ணிற்குள்ளே மறைதுரும்பினையும் காண்பாய்!
உற்றுன் கண்ணிலேயோ உத்திரம் உள்ளதோராய்!
குற்றம் நீஅகற்றி மற்றோர் குறைகளை நீக்கச்சென்றால்
சற்றுமே கபடம் வேண்டாம்; சத்தியம்வேண்டு மென்றார்
(சேவைப்பருவம், பா.76)

என்னும் பாடலாக வடித்துள்ளார். "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (மத்தேயு 7:7,8) என்னும் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு,

தேடுவோர் கண்டடைவர்; திறந்திடும் தட்டுவோர்க்கே;
நாடுவோர் பெற்றுக்கொள்வார்; நல்ல நம்பரம தந்தை

> வாடுதன் மக்களைத்தான் வறியராய் விடுவாரோ ? ஓர்
> கேடுமே செய்யாரே ? நீ கேட்டதைத் தருவார் என்றார்
> (சேவைப்பருவம், பா.77)

எனப் பாடியுள்ளார். யோவான் எழுதிய நற்செய்தி நூல் 12ஆம் அதிகாரம் 12 முதல் 19 வரையிலான வசனங்களில் இயேசு கிறிஸ்து கழுதைக் குட்டியின் மீது அமர்ந்து பவனி சென்றமையை விவரிக்கின்றது. இந்நிகழ்வை ஞானாபரணம் பண்டிதர்,

> வருகிறார் அரசரென்று வாழ்த்தினார் ஜனங்கள் சென்றே
> உரியவர் உமக்கோசன்னா, ஓசன்னா என்று பாடி;
> மர இலைதழை பறித்தே வழியெலாம் விரித்துத் தொண்டர்
> பரம சந்தோஷங் கொண்டார்; பாக்கியரானோம் என்றார்
> (சேவைப் பருவம், பா.161)

எனப் பாடலாக வடித்தெடுக்கிறார்.

மேலும், யோவான் எழுதிய நற்செய்தி நூல் 20ஆம் அதிகாரம் 26 முதல் 29 வரையிலான வசனங்களில் இயேசு கிறிஸ்து தோமாவிற்குக் காட்சி கொடுத்து அவிசுவாசியாக இராதே எனக் கூறியதை,

> அறைதனைப் பூட்டியுள்ளே அனைவரும் தோமாவும் சேர்ந்
> திறைவனைக் குறித்துப்பேசி இருதயம் மகிழும் வேளை
> குறைவிலாதுறுதி கொள்வாய் குருவிடம் நீ தோமாவே!
> திறமிது என்று சொல்லித் திருச்சுதன் காட்சிதந்தார்
> (சிலுவைப் பருவம், பா.126)

என அழகாகவும் எளிமையாகவும் பாடுகிறார். லூக்கா எழுதிய நற்செய்தி நூல் 5ஆம் அதிகாரம் 18 முதல் 21 வரையிலான வசனங்களிலுள்ள திமிர்வாதக்காரனை இயேசு கிறிஸ்து குணமாக்கிய நிகழ்வினை,

> வாதநோய் பிடித்த ஓர் நோயாளியைக் கட்டிலோடே
> ஓதுயர் வீட்டின் கூரை உடன் பிரித்திறக்கி விட்டார்
> ஆதரவுடனவர் நோய் அகற்றினார் 'உன்றன் பாவம்
> நாதர் நான் பொறுத்தேனெ'ன்றார் நரர் பலர் முறுமுறுத்தார்
> (சேவைப் பருவம், பா.52)

எனப் பாடுகிறார். விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்ணை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு சென்ற போது உங்களில் பாவம்

செய்யாதவன் இவள் மீது கல்லெறியட்டும் என்றும், அவர்கள் இவளை விட்டுச் சென்றபோது இனிமேல் பாவம் செய்யாதே என்றும் கூறியதை (யோவான் 8; 3-11) ஆசிரியர்,

> **ஊரினிலிருந்து வேசியொருத்தியைப் பிடித்துவந்தே**
> **சீரிலா இவளுக்கென்ன சிட்சை யென்றவர்கள் கேட்க,**
> **பாருமே பழியொன்றில்லாப் பரிசுத்தர் இருப்பீராயின்**
> **காரிகையிவளைக் கொல்லும் கல்லெறிந்தெனப் பகர்ந்தார்.**
>
> **நன்றிது என்று சொல்லி நழுவிவிட்டார் எல்லோரும்**
> **அன்றவள் தனைச் சிட்சிக்க அவர்களில் ஒருவனில்லை;**
> **கன்றினுக்கிரங்கும் தாய்போல் கர்த்தரும் மனமிரங்கி**
> **என்றுமே பாவஞ்செய்யாய்! இனியிதோ பெண்ணே! என்றார்**
>
> **(சேவைப் பருவம், பா.137,138)**

எனப் பாடலாக அமைத்துள்ளார். இவ்வாறு ஞானாபரணம் பண்டிதர் விவிலியத்திலுள்ள செய்திகளை மிக அருமையாக எளிமையான பாடல்களாகப் பாடியுள்ளமை அவரது கவித்திறனுக்குச் சான்று பகர்வனவாக அமைந்துள்ளன.

தாலாட்டுப் பாடல்

கிறித்தவக் காப்பியங்கள் சிலவற்றில் மட்டுமே குழந்தையாகிய இயேசு பாலகனைத் தாலாட்டுவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன.

> **கண்ணினுள் மணியே! சோலைக் கரும்பே!**
> **அமிர்தே! தேனே!**
> **விண்ணுறும்சுடரே! பொன்னே! விழையும்**
> **நற்கனியே! வேந்தே!**
> **எண்ணுறும் நிதியே! பூவே! இளந்தளிர் எனுங்குருந்தே!**
> **அண்ணலே உறங்குறங்கென்றன்னை தாராட்டினாளே!**
>
> **(இளமைப்பருவம், பா.29)**

என்னும் இப்பாடல் மட்டுமே தாலாட்டுப் பாடலாக இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது.

உவமைகள்

நான்கு நற்செய்தி நூல்களை ஆதாரமாகக் கொண்டு படைக்கப்படும் சில கிறித்தவக் காப்பியங்களில் உவமை, உருவகம் போன்றவற்றை ஆசிரியர்கள் அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. இக்காப்பியத்தில் உவமைகள்

குறைவாகவே ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு:

1. விண்டொளி இருண்ட கண்கள் மீண்டும் நல்லொளி பெற்றார்போல்
2. படவுகள் நிறைந்தெப்போதும் பாம்பென நெளிந்தே ஊரும்
3. இடமகல் ஊரில் மாந்தர் ஈயென மொய்த்து வாழ்ந்தார்
4. கன்றினுக் கிரங்கும் தாய்போல்
5. குரை கடல்போல நீசர் குழுறினர்

இரட்டைக்கிளவி

இரண்டு சொற்களைப் பிரித்தால் பொருள் தராதது இரட்டைக் கிளவி எனப்படும். சான்றாக,

> படபடவென நடந்தான்; பயந்து சந்தேகம் கொண்டான்;
> கடகட எனச் சீமோனைக் கரத்தினாலிழுத்தார் நாதர்;
> விடுவிடு சந்தேகத்தை மேலுமே எனப் போதித்தார்
> தடதடவென எல்லோரும் தம்பிரான் மகன் நீரென்றார்
> (சேவைப்பருவம், பா.107)

என்னும் பாடலைச் சுட்டலாம்.

அடுக்குத்தொடர்

சேர்ந்திருக்கும் இரண்டு சொற்களைப் பிரித்தால் பொருள் தருவது அடுக்குத்தொடர் ஆகும். சான்றாக,

> திரள்திரளாய் ஜனத்தைச் சேர்ந்தவர் பிரசங்கித்தார்;
> திரள்திரளாக நோய்கள் தீர்த்தவர் சுகமளித்தார்;
> திரள்திரளாகப் பேய்கள் செய்யிருள் வினைதுடைத்தார்
> திரள்திரளாய் ஜனங்கள் திருச்சுதன் எனத் துதித்தார்
> (சேவைப்பருவம், பா.102)

என்னும் பாடலைச் சுட்டலாம்.

எதுகை, மோனை

ஞானாபரணம் பண்டிதரின் காப்பியப் பாடல்கள் பெரும்பாலும் எதுகை மோனை உடையனவாகவே இயல்பாக அமைந்துள்ளன. முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை; இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும். சான்றாக,

அழுதனர் சீஷர்க்காக; அழுதனர் நீசர்க்காக;
அழுதனர் பாவிக்காக; அழுதனர் சேவைக்காக;
அழுதனர் அலகைக்காக; அழுதனர் உலகுக்காக;
அழுதனர் இனத்திற்காக; அழுதனர் ஜனத்திற்காக
(சிலுவைப்பருவம், பா.40)

என்னும் பாடலைக் குறிப்பிடலாம். மேலும் இப்பாடல் சொற்பொருள் பின்வருநிலையணியாகவும் உள்ளது. இப்பாடலில் அழுதனர் என்னும் சொல் ஒரே பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளது.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து பரலோகம் செல்வது வரையிலான செய்திகள் இக்காப்பியத்தில் எளிமையாகப் படைக்கப்பட்டுள்ளன. ஆரவாரமின்றி, இயல்பாக, எளிமையாக, அனைவரும் படிக்க வேண்டும் என்னும் நோக்கில் இக்காப்பியம் எழுதப் பட்டுள்ளது. விவிலியச் செய்திகளைச் சுருக்கி, பாடல்களில் வடித்துத் தரும் முறை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பல வசனங்களைச் சுருக்கி ஒரே பாடலில் சுவை குன்றாமல் தருதலில் வல்லவராக ஞானாபரணம் விளங்குகிறார்.

12. சுடர்மணி

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கிறித்தவக் காப்பியங்களுள் சிறந்த ஒரு காப்பியமாக சுடர்மணி விளங்குகிறது. உரோமன் கத்தோலிக்கர்கள் பயன்படுத்தும் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு இக்காப்பியம் படைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வரலாறு

சுடர்மணி என்னும் கிறித்தவக் காப்பியத்தின் ஆசிரியர் எஸ். ஆரோக்கியசாமி (1912-1985) அவர்கள். இவர் விழுப்புரத்திற்கு அருகிலுள்ள கோலியனூரில் சவரியப்பன் - குழந்தையம்மாள் தம்பதியருக்கு 1912ஆம் ஆண்டு செப்டம்பர் எட்டாம் நாள் மகனாகப் பிறந்தார். திண்டிவனத்திலுள்ள உரோமன் கத்தோலிக்க ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் எட்டாம் வகுப்புவரைப் படித்தார். 1929 முதல் 1931 வரை அதே பள்ளியில் ஆசிரியர் பயிற்சியும் பெற்றார். ஓவியம் வரைவதில் வல்லவராக விளங்கியதால் அப்பள்ளியிலேயே ஓவிய ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார்.

தமது தமிழாசிரியர் சுந்தரேச ஐயரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். குறிப்பாக வெண்பா, விருத்தம் ஆகியவற்றை இயற்றும் நுட்பங்களைத் தெரிந்து கொண்டார். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்பவராகவே வாழ்ந்து வந்தார். 1931ஆம் ஆண்டு முதல் 1934 வரை தேனீர் என்ற ஊரில் பணியாற்றிய போது அருகிலுள்ள கிராமங்களிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு வரும் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவாகக் கேழ்வரகுக் கூழ் ஊற்றி அவர்களைத் தவறாது வந்து படிக்க ஆவன செய்தார். தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நாட்டாண்மைக் கழகப் பள்ளிகளில் 37 ஆண்டுகள் பணிபுரிந்து தலைமை ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

நாடகங்கள் வழி மக்களிடையே பல நல்ல கருத்துகளைப் பரப்பினார். 1937இல் "பால சுந்தரம்" என்னும் நாடகத்தை அரங்கேற்றி கொல்லாமை என்னும் அறத்தை மக்களிடம் பரப்பினார். மாணவர்களுக்குக் கணிதத்தை விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் கற்பிக்கும் முறைகளை இவருடைய "கணித ஜாலம்" (1951) என்னும் நூல் விவரிக்கின்றது. இம்முறையில்

மாணவர்கள் தங்கள் கணக்குகளைத் தாங்களே உருவாக்கிச் செய்வார்கள். தமிழையும் கணிதத்தையும் ஒன்றாக இணைத்துக் கற்றுக் கொடுக்கும் முறை ஒன்றையும் உருவாக்கினார். இதன் மூலம் இரண்டு பாடங்களையும் ஒரே பாடமாகக் கற்பிக்க முடியும் என்பதை நிறுவினார். இவரது "இளந்தமிழ் வாசகம்" என்னும் நூல் படங்கள் மூலம் மொழியைக் கற்பிக்கின்றது. இது முதல் வகுப்பு நூலாக இருந்தது. முதியவர்கள் அறுபது நாட்களில் தமிழை எழுதவும் படிக்கவும் தகுந்த புதிய முறையில் "பைந்தமிழ் வாசகம்" என்னும் நூலை எழுதினார். "ரகர றகர வேற்றுமை விளக்கம்" என்னும் நூல் அனைவரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டது. நான்கு பகுதிகளாக அமைந்துள்ள இந்நூல் ஒரு சிறு அகராதி போல் காணப்படுகின்றது.

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் இயேசு நாதருடைய வரலாற்றைச் "சுடர்மணி" என்னும் பெயரில் காப்பியமாக இயற்றினார். மேலும், சிலுவைப் பாதை, ஜெபப்பாமாலை, அர்ச்.வேளாங்கண்ணி மாதா சரித்திரம் முதலிய சிறு நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய பல நூல்கள் அச்சில் வராமல் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது எண்பது புனிதர்களின் வரலாற்றைக் கூறும் "மறைத்தொண்டர் புராணம்" ஆகும்.

1956இல் இவர் பணியாற்றி வந்த தூக்கணாம்பாக்கம் ஊர் மக்கள் இவரது ஆசிரியப் பணியின் வெள்ளிவிழாவைக் கொண்டாடினர். 1962இல் தமிழக அரசின் நல்லாசிரியர் விருதினைப் பெற்றார். சென்னை யுனெஸ்கோ மன்றம் கல்வித் துறையில் சிறப்பாகப் பணியாற்றிய இவருக்கு 1970ஆம் ஆண்டில் "Roll of Honour" என்னும் பட்டத்தை வழங்கியது.

இவருக்கு ஒன்பது ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் உள்ளனர். கணித ஜால ஆசிரியர் என்றும் ஆசுகவி என்றும் தமிழக மக்களுக்கு அறிமுகமாயிருந்த எஸ். ஆரோக்கியசாமி அவர்கள் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் அன்று மாரடைப்பால் காலமானார். எஸ்.ஆரோக்கியசாமி குறித்து கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் மேனாள் பொதுச் செயலாளர் அருள்திரு. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

என்னால் மறக்கமுடியாதவரும் என்னைப் பெரிதும் கவர்ந்தவரும் அருட்கவிஞர் எஸ். ஆரோக்கியசாமி ஆவார். அவர் அருட் கவிஞர் மட்டுமல்லர், ஆசுகவியும் கூட. கவி பாடுவது அவருக்குத் தண்ணீர் பட்டபாடு என்று எளிதாக மரபுப்படி சொல்லி நிறுத்திவிட முடியாது. அவருடைய மூச்சே கவிதை மணம் கொண்டதாய் அவரை இ ல க் கி ய சுவாசிப்பில் இயக்குவதை என்னால் காணமுடிந்தது. பல கோணங்களிலிருந்து நோக்கும் ஆய்வுத் திறனும், பண்பார்ந்த வகையில் சொற்கள், தொடர்கள், கருத்துகள் இழையும்படி செய்யும் ஆற்றலும் அவரிடம் இயல்பாகவே அமைந்திருந்தன. (கிறிஸ்தவ அருட் கவிஞர்கள், ப.117)

கிறித்தவக் காப்பியம் படைக்க வேண்டும் என்னும் எண்ணம் எஸ். ஆரோக்கியசாமிக்கும், இவருடைய மகன் ஆ. பிரான்சிஸ் அந்தோணி இராசுக்கும் ஏற்பட்டதன் விளைவாக "சுடர்மணி" என்னும் காப்பியம் படைக்கப்பட்டது. இந்நூலை எழுதி முடித்த சூழலில், இந்நூலிலுள்ள இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள், சிலுவைப்பாதை, உயிர்த்தெழுதல் முதலிய பகுதிகளை இசைச் சொற்பொழிவுகளாகப் பல கத்தோலிக்கப் பேராயங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் வழங்கினார். இக்காப்பியம் 1976ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பதிப்பாகவும், 1987ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்தது.

காப்பியக் கட்டமைப்பு

விவிலியத்தில் காணப்படும் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நற்செய்தி நூல்களின் அடிப்படையில் சுடர்மணி எழுதப்பட்டுள்ளது. இந்நூல் இனிய தமிழில் எளிய நடையில் அமைந்துள்ளது. வெண்முத்துக்களில் கதிரவன் ஒளியைக் காண்பதுபோல் சுடர்மணியில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை ஒளியைக் காணமுடிகிறது. இந்நூல் விருத்தப்பாவினால் அமைந்துள்ளது. இந்நூல் பாயிரத்தைத் தொடர்ந்து பாலகாண்டம், உபதேசகாண்டம், மீட்புக் காண்டம், உத்தான காண்டம் என்னும் நான்கு காண்டங்களையும் 1201 பாடல்களையும் உடையது. ஒவ்வொரு காண்டமும் படலங்களால் பகுக்கப்பட்டுள்ளது. நூலின் பாயிரம் மூன்று பாடல்களால் ஆனது.

1. பால காண்டம்

முதலாம் காண்டமான பால காண்டம் 141 பாடல்களைக் கொண்டது. இக்காண்டம் தூதுப் படலம், அவதாரப் படலம்,

காட்சிப் படலம், நசரைப் படலம் என்னும் நான்கு படலங்களைக் கொண்டது. தூதுப் படலத்தின் தொடக்கத்தில் உலகப்படைப்பு குறித்தும் ஆதாம், ஏவாள் பாவியாக மாறியது குறித்தும் விளக்கி, அதைத் தொடர்ந்து புதிய ஏற்பாட்டுச் செய்திகளைப் பாடுகிறார். இப்படலத்தில் மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தது வரையிலான செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவதாரப்படலம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பையும், காட்சிப் படலம் சிமியோனின் வருகை முதல் திருக்குடும்பத்தினர் எகிப்துவுக்குச் செல்வது வரையிலான செய்திகளையும் தருகிறது. இதைத் தொடர்ந்து வரும் நசரைப் படலம் சூசையப்பர் இறந்தது வரையிலான செய்திகளைத் தருகிறது.

2. உபதேச காண்டம்

இரண்டாம் காண்டமான உபதேச காண்டமானது திருமுழுக்காட்டுப் படலம், சோதனைப் படலம், சீடரைச் சேர்த்த படலம், திருமணப் படலம், ஆலயப் படலம், நிக்கோதேமுப் படலம், சமாரியப் படலம், கலிலேயாப் படலம், வினை விலக்குப் படலம், திருமலைப் படலம், அற்புதப் படலம், உவமப் படலம், பொய்கைப் படலம், சயீர்ப் படலம், தூதுவிடு படலம், சீவ அப்பப் படலம், மரபு கண்டனப் படலம், தரிசனப் படலம், பண்டிகைப் படலம், கோவிற் படலம், ஆயற் படலம், நல்லுரைப் படலம், வாதுப் படலம், விருந்துப் படலம், கருணைப் படலம், செல்வப் படலம், உயிர் மீட்ட படலம், செபப் படலம், இல்லறப் படலம், எரிக்கோ படலம் என்னும் 30 படலங்களால் ஆனது. இக்காண்டத்தில் 703 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

3. மீட்புக் காண்டம்

மூன்றாவது காண்டமான மீட்புக் காண்டம் ஊர்வலப் படலம், திங்கள் படலம், கண்டனப் படலம், ஊழிப் படலம், பாஸ்காப் படலம், நற்கருணைப் படலம், சிறையேற்ற படலம், விசாரணைப் படலம், சிலுவைப் படலம், சமாதிப் படலம் என்னும் பத்துப் படலங்களை உடையது. மீட்புக் காண்டத்தில் 437 பாடல்கள் உள்ளன.

4. உத்தான காண்டம்

நான்காவது காண்டமான உத்தான காண்டமானது எருசலைப் படலம், திபேரியாப் படலம், ஆரோகணப் படலம்

என்னும் மூன்று படலங்களைக் கொண்டது. இக்காண்டத்தில் 60 பாடல்கள் உள்ளன.

சுடர்மணி - பெயர்க்காரணம்

இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் வரலாறும் மக்கள் வாழ்க்கைக்கு என்றும் குன்றாத சுடராக விளங்குகின்றன. 'நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்' என்று தன்னுடைய ஒளியை மக்களுக்கு அளித்து அவர்களையும் ஒளியாக மாற்றிய இயேசு நாதர் வரலாற்றைக் கூறுவதால் சுடர்மணி எனப் பெயர் பெறுவதாயிற்று.

கவிதையாக்கம்

விவிலியச் செய்திகளுக்குக் கவிதை வடிவம் கொடுப்பதில் வல்லவர் ஆரோக்கியசாமி அவர்கள். " அங்கே சூம்பின கையையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான். அப்பொழுது, அவர் மேல் குற்றஞ்சாட்டும்படிக்கு ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்கள். அதற்கு அவர் உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வு நாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிட மாட்டானோ? ஆட்டைப் பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மை செய்வது நியாயந்தான் என்று சொன்னார். பின்பு அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அவன் நீட்டினான். அது மறுகையைப்போல் சொஸ்தமாயிற்று' (மத்தேயு 12: 10-13) என்னும் வசனங்களை,

பின்னவர் செபக்கூ டத்தில்
பேசிட, முன்இ ருந்தோன்
'எந்தையே! ஓய்வு நாளில்
இதஞ்செயத் தகுமோ?' என்ன,
'நன்றுன(து) ஆட்டில் ஒன்று
நடுக்குழி நீரில் வீழ்ந்தால்
அன்றுநம் ஒய்வை யெண்ணி
அமர்ந்திருப் பாயோ?' என்றார்.

கூட்டத்தில் கைம்மெ லிந்து
குறுகிய ஒருவன் தன்னை
'நீட்டிடு கரத்தை' என்ன,
நீண்டஅக் கரத்தைக் காட்டி,

'ஆட்டினும் மனிதன் மேலோன்
அவன்பிணி ஒய்வு நாளில்
ஓட்டுதல் நன்றே அன்றோ?'
உன்னுங்கள் இதனை' என்றார் (பா.338-339)

என்னும் பாடல்களாகப் பாடுகிறார். இயேசு கிறிஸ்துவிடம் சிறு பிள்ளைகளை அவர்களின் மீது கைகளை வைத்து செபம் செய்ய அழைத்து வந்தனர். அவர்களை சீடர்கள் அதட்டினார்கள். இயேசு கிறிஸ்து அவர்களைப் பார்த்து சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வர தடை செய்யாதிருங்கள்; பரலோக ராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது எனச் சொல்லி அப்பிள்ளைகளை ஆசீர்வதித்து அனுப்பினார் என்னும் நிகழ்வை,

நல்லதோர் நாளில் மக்கள்
நலமுடன் தாங்கள் ஈன்ற
செல்வரைக் கொண்டு வந்து
சேசுபால் விடுத்தே, 'எந்தாய்!
நல்லவ ராகி மக்கள்
நாட்டிற்குத் தொண்டு செய்து
புல்லராய் வாழா தென்றும்
புகழ்பட வாழ்த்தீர்' என்றார்.

சிறுவரை விலக்கி ஓட்டச்
சீடரும் முனைந்த வேளை,
'சிறுவரைத் தடுக்க வேண்டாம்;
சிறப்புடன் என்பால் வந்து
சிறுவர்கள் ஓடி யாடின்
சினங்கொள்ள வேண்டாம்; நீங்கள்
சிறுபிள்ளை போலே மாறிச்
சிறப்பொடு வாழ்தல் நன்றாம்.

'பாலரின் உள்ளம் என்றும்
பாவத்தை அறியா நிற்கும்;
சீலமாய்க் களங்க மற்ற
செயலதில் துடித்து நிற்பர்;
கோலமே கொண்டு நீங்கள்
கொள்கையில் சிறுவ ரானால்
மேலவர் நாடு தன்னை
மேவலாம்' என்றார் சேசு. (பா.794-796)

எனக் கவிதையாக்கம் செய்கிறார்.

வருணனை

சுடர்மணி காப்பியத்தில் இயற்கை வருணனை சிறப்பாக அமைந்துள்ளது. இலக்கண நூலார் மலை, கடல், நாடு, நகர், பெரும்பொழுது, சிறுபொழுது, ஞாயிறு, திங்கள் தோற்றம் ஆகியவற்றின் வருணனைகளும் காப்பியத்தில் அமைதல் வேண்டும் என்பர். காப்பியத் தேவைக்கும் போக்கிற்கும் ஏற்ப, சுடர்மணியில் வருணனைகள் பல இடம்பெற்றுள்ளன. பாலகாண்டத்தில் ஏதேன் தோட்டத்தின் அமைப்பை,

தேனலர் மலர்கள் மல்கித்
தென்றலால் வாசம் ஊட்டும்
மீனினம் மகிழ்ந்து துள்ளி
மின்னியே ஓடும் நீரில்
மானினம் மயில்க ளோடு
மட்டிலா நடனம் ஆடும்
வானிடைப் புள்ளி னங்கள்
வணங்கிப்பல் வாழ்த்து கூறும் (பா.5)

என வருணிக்கிறார். தேனோடு மலர்ந்த மலர்களில் உள்ள மணத்தினைத் தென்றல் எடுத்துச் சென்று பரப்புவதால் எங்கும் நறுமணம் கமழ்ந்திருக்கும்; ஓடும் நீரில் மீன்கள் துள்ளி விளையாடியிருக்கும்; மான்கள் மயில்களோடு சேர்ந்து மகிழ்வோடு நடனமாடும்; வானத்துப் பறவைகள் வாழ்த்துக் கூறும் என வருணனை அமைந்துள்ளது. மேலும் காப்பியத்தில் ஞாயிறு, திங்கள் ஆகியவற்றின் தோற்றத்தை,

பகலவன் நாளும் வந்து
பணிந்துபின் மேற்கே செல்வன்
உகந்திடு மதியும் அல்லில்
உறவொடு தோன்றி மீழ்வன்
மிகுந்திடும் வெயிலில் மேகம்
மேனின்று நிழலை ஈவன்
சுகமதை அருளக் காற்றும்
சுழன்றெங்கும் சூழ்ந்து நிற்பன் (பா.7)

என்னும் பாடல் மூலம் வருணித்துள்ளார். பகலவன் தினமும் வந்து பணிந்து மாலையில் மேற்றிசைச் செல்வான்; இரவில் மகிழ்ச்சியோடு தோன்றி சந்திரனும் மீண்டு செல்வான்; வெயில் மிகும்போது மேலிருந்து மேகம் நிழலைச் செய்யும்; இன்பத்தை

வழங்குவதற்காகக் காற்று சுழன்று செல்லும். இவ்வருணனைகள் காப்பியச் சிறப்புக்குச் சான்றாக அமைகின்றன.

உவமைச்சிறப்பு

கவிதைக்கு அணிகள் அழகு சேர்க்கின்றன. பாயிரத்திலுள்ள அவையடக்கம் என்னும் பகுதியில் நூல் எழுத முனைந்ததைக் கூறுமிடத்து மூன்று உவமைகளை ஒரே பாடலில் தருகிறார். அப்பாடல் பின்வருமாறு:

வளர்மதி யொளியில் மின்னும்
மின்மினி போலும் வானில்
விளங்கிடும் பரிதி முன்னே
விளக்கொளி தருதல் போலும்
குளமலர்க் கமலம் முன்னே
கொட்டியும் மலர்தல் போலும்
அளவிலான் வாழ்க்கை நூலை
அடியனும் எழுத லுற்றேன் **(பாயிரம், பா.3)**

இப்பாடலில், நித்தம் வளருகின்ற நிறைந்த நிலவொளியின் முன்னால் மின்னும் மின்மினி போலவும் விண்ணில் விளங்கிடும் சூரியன் ஒளி முன்னால் சிறு விளக்கொளி போலவும் அழகுற குளத்தில் மலர்ந்திருக்கின்ற தாமரையின் முன்னால் மிகச்சிறிய கொட்டி மலர் மலர்தல் போலவும் எல்லையற்றவனாகிய இறைக்குமரனின் வாழ்க்கை நூலை சிறியவனாகிய நான் எழுதலுற்றேன் என உவமைகளின் மூலம் அவையடக்கச் செய்தியினைக் கூறுகிறார்.

காட்சிப் படலத்தில் ஏரோது என்னும் அரசனின் ஆணைப்படி இளங்குழந்தைகளைக் கொல்லப் புறப்பட்ட கொலைகாரர்களுக்கு சிங்கக் கூட்டத்தையும் நீர்த்தேக்கத்தையும் பின்வரும் பாடலில் உவமையாகக் காட்டுகிறார்:

அரையனின் ஆணை கேட்டே
அங்குள கொலைஞர் எல்லாம்
இரையதைத் தேடி யோடும்
இளமரிக் கூட்டம் போலும்
கரையதை உடைத்துப் பாயும்
கனத்தநீர்த் தேக்கம் போலும்
புரையிலார் உயிர்க்கு டிக்கப்
புகுந்தனர் ஊரில் என்னே **(பா.103)**

அரசனின் ஆணையைக் கேட்டு அங்கே கூடியிருந்த கொலைகாரர்கள் எல்லாம் இரையைத் தாக்கப் பாய்ந்து செல்லும் இளம் சிங்கக் கூட்டம் போலவும் கரையை உடைத்துப் பாயும் தேங்கியிருந்த வெள்ளம் போலவும் குற்றமற்ற அவரது உயிரைக் குடிக்க ஊரில் புகுந்த கொடுமையை என்ன சொல்வேன் என உவமைகளின் வாயிலாக எடுத்தியம்புகிறார்.

உருவகச் சிறப்பு

உவமையையே பொருளாகக் கூறுவது உருவகமாகும். சிலுவைத் துன்பத்தைச் சந்திக்க முற்படும் இயேசு கிறிஸ்துவின் அவல நிலைக்கு உருகி ஆற்றாது கடல், மரம், குன்று, மண், பறவைகள் என இயற்கையெல்லாம் தவித்ததை உருவகமாகப் பல பாடல்களில் பாடுகிறார். இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பதற்காக யூதர்களிடம் யூதாஸ் பணம் கேட்டபோது அவர்கள் முப்பது காசு கொடுப்பதாக உரைத்த நிகழ்ச்சியைக் கூறும்போது,

ஓடியை வந்த சீடன்
உறுதியை ஆய்ந்த யூதர்
கூடியே மூன்று பத்துக்
காசதைக் கொடுப்ப தாக
நாடியே சொன்ன போது
வஞ்சக நரியும் ஒப்பிக்
கூடியே குழிப றிக்கக்
குறிவைத்(து) அலைந்த(து) ஆங்கே (பா.956)

என்று குறிப்பிட்டு யூதாசை வஞ்சக நரியாக உருவகப் படுத்துகிறார்.

தற்குறிப்பேற்றம்

இயற்கையின் வழக்கமான செயல்பாடுகளில் தன் குறிப்பை அவற்றின் மேல் ஏற்றி தற்குறிப்பேற்ற அணியாக அமைந்துள்ள பல பாடல்கள் சுடர்மணியில் உள்ளன.

இவர்க்கு நன் னிழலை ஈய
எண்ணிடு மரங்கள் எல்லாம்
இவரொடு செல்லும் பேறிங்(கு)
இல்லையே என்று சோரும்
அவரவர் தலையின் மீதங்(கு)
அயர்வின்றிப் பறந்து செல்லும்

தவறிலாப் பறவைக் கூட்டந்
தம்நிழல் சிறிதென் றேங்கும் (பா.60)

என்னும் இப்பாடல் மரியன்னைக்கு நிழல் கொடுக்க மரங்களிடையே போட்டி நிலவியதாகப் பாடும் திறம் பாராட்டத்தக்கது. மரியன்னைக்கு நல்லதொரு நிழலை வழங்க எண்ணிய மரங்கள் எல்லாம் நம்மால் அவரோடு நடந்து செல்லும் பேறு இல்லையே என்று எண்ணி மனச்சோர்வு அடைந்தன. தலை மீது பறந்து சென்று நிழல் தரலாம் என்று எண்ணுகின்ற பறவைகள் நம் நிழல்கள் சிறிதாக உள்ளனவே என்று வருந்தி ஏங்கும் என ஆசிரியர் தன் குறிப்பை ஏற்றிப் பாடியுள்ளார். மீட்பரின் சிலுவைச் சுமையால் ஆழ்கடல் ஆட்டம் கொண்டு தன் அலைகளை எழுப்பி அழுது ஏங்கியதாகப் பின்வரும் பாடல் மூலம் விவரிக்கிறார்:

மீட்பர் சிலுவை யின்சுமையால்
மெலிந்தே வீழும் நிலைகண்டு
ஆட்டங் கொண்ட ஆழ்கடலும்
அலையை எழுப்பி அழுதேங்க
ஓட்டங் கொண்ட உயிரினங்கள்
உலகை விட்டே மடியாமல்
நாட்டார் தம்மைப் பழிதீர்க்க
நாடி யாங்காங் கோடினவே. (பா.109)

கடலில் அலைகள் ஆடுவது இயற்கை. ஆனால் சிலுவையில் அறையப்பட்ட துயர் கண்டு அலைகளை உயர எழுப்பி கடல் ஓலமிட்டு அழுதது என்று கவிஞர் தன் குறிப்பை ஏற்றியுள்ளதால் அது தற்குறிப்பேற்றமாகும். தற்குறிப்பேற்ற அணியிலமைந்துள்ள பாடல்கள் காப்பியத்திற்குச் சிறந்த அணிகலன்களாக விளங்குகின்றன.

திருக்குறள் கருத்து

சுடர்மணி காப்பியத்தில் ஆசிரியர் திருக்குறள் கருத்தைக் கையாண்டுள்ளார்.

உடுக்கை இழந்தவன் கைபோலே ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள்.788)

என்னும் குறளை அடிப்படையாகக்கொண்டு,

உடுக்கையை இழந்த வேளை
உதவிடுங் கையைப் போல

இடுக்கணை வலியச் சென்று
களைந்திடும் இயல்பை மக்கள்
அடுத்துள வாழ்வில் கொள்ள
அருந்தமிழ்ப் புலவன் சொன்ன
எடுப்பினை முன்பே சேசு
எடுத்திதன் மூலம் ஈந்தார் (பா.390)

என்னும் பாடலைப் பாடியுள்ளார். இப்பாடலில் அருந்தமிழ்ப் புலவன் என்று திருவள்ளுவரையே ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

சொல்லாட்சி

ஆசுகவி என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற ஆரோக்கியசாமி அவர்கள் கவிதை எழுதுவதில் வல்லவர். அவரது கவிதைகள் சொல்லாட்சி நயத்துடன் அமைந்துள்ளன. கீழ்க்காணும்,

வலைதனை விட்டுச் சீமோன்
வரபில வேந்தி ரன்தன்
வலைதனை வீசி அண்ணன்
வழிவர மேலுஞ் சேசு
வலைதனைப் பழுது பார்க்கும்
வேறிரு வலைஞர் தம்மை
வலைதனை விட்டென் பின்னே
வாருங்கள் என்று அழைத்தார் (பா.288)

என்னும் பாடலில், சீமோன் தன் வலையினை விட்டு வந்தான்; பிலவேந்திரனும் தன் வலையினை வீசி எறிந்து விட்டு அண்ணன் வழியில் தொடர்ந்து வந்தான்; மேலும் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த இரு வலைஞர்களை நோக்கி "வலையினை விட்டு விட்டு என் பின்னே வாருங்கள்" என இயேசு பெருமான் அழைத்தார் என்னும் கருத்து இடம் பெற்றுள்ளது. இப்பாடல் சொல்லாட்சியுடன் சந்தச் சிறப்பு மிக்கதாய் ஆசிரியரால் பாடப்பட்டுள்ளது நயமிக்கது.

கவிக்கூற்று

காப்பியக் கவிஞன் தன் மன உணர்வுகளை வெளியிடும் பகுதியைக் கவிக்கூற்று என்பர். சுடர்மணிக் காப்பியத்தில் 52 பாடல்கள் கவிக்கூற்றாக அமைந்துள்ளன. கவிக்கூற்று என்னும் உத்தியை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு அறிவுரையும் வழங்குகிறார். சான்றாக,

பாம்பினைப் போலே வந்து
பசப்பிப்பல் வினைகள் மூட்டி
வீம்பொடு செல்லும் வீணர்
உலகிடை யுள்ளார் என்றும்
நாம்பிறர் மொழியை ஆய்ந்து
நடந்திடல் வேண்டும் என்றும்
பாம்பினால் கெட்ட முன்னோர்
படிப்பினை யூட்டும் அல்லோ! (பா.18)

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் பாம்பினைப் போல வந்து பசப்பு மொழிகளைக்கூறி பல தீவினைகளை மூட்டி வீம்பொடு சொல்லுகின்ற வீணர்கள் உலகத்தில் உள்ளார்கள் என்பதையும் எப்பொழுதும் பிறர் கூறுவதைக் கேட்டு ஆராய்ந்து நடந்திட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு பாம்பினால் கேடடைந்த நம் முன்னோர்களின் வாழ்க்கை படிப்பினையாக அமைகிறது எனக் கூறுகிறார். மேலும் சிலுவைப் படலத்தில் மக்கள் அழுகையுடன் மேகமும் மழையாக அழுதது என்பதைத் தனது கூற்றால் பின்வருமாறு விவரிக்கிறார்:

கழுமரம் மீதில் தொங்கும்
கர்த்தரைக் கண்ட மேகம்
பழுதின்றி நிலைத்து நின்ற
பான்மையை விடுத்தே ஓடி
அழும்மக்க ளோடு சேர்ந்தே
அழுததை இன்றும் எண்ணி
அழுவதே மழையாம் என்றிங்(கு)
அறிந்தவர் உண்டோ அம்மா! (பா.1106)

இப்பாடலில் சிலுவை மரத்தில் தொங்குகின்ற கர்த்தரைக் கண்ட மேகம் அங்கே நின்று கொண்டிருந்த தன்மையை மாற்றி ஓடி, அழுது நின்ற மக்களோடு சேர்ந்து அழுதது. அவ்வாறு அன்று தான் அழுததை இன்றும் எண்ணி அழுவதே மழையாகும் என்பதை அறிந்தவர்கள் இங்கு இருக்கிறார்களா? எனக் கேட்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் புதுமைப் பொலிவுடன் மக்களுக்கு அறிவித்தலே இவருடைய காப்பியக் கொள்கையாக விளங்குகிறது. பழமைக் காப்பிய மரபுகளைப் போற்றியும், புதிய மரபுகளை வகுத்துக் கொண்டும் சுடர்மணியைச் சிறந்த காப்பியமாகப் படைத்துள்ளார்.

13. திருஅவதாரம்

கிறித்தவக் காப்பியங்களுள் விரிவாகவும் எளிமையாகவும் எழுதப்பட்டவற்றுள் திருஅவதாரம் குறிப்பிடத்தக்கது. இறைவன் மனிதராக அவதாரம் எடுத்து இம்மண்ணுலகில் மக்களுக்காக வந்தார். இதை அடிப்படையாகக் கொண்டு நூலுக்குப் பெயர் அமைத்து காப்பியத்தை முழுமையாகப் படைத்தளித்துள்ளார். இந்நூலின் மூலம் ஆசிரியரின் இலக்கிய, இலக்கண, இறையியல் புலமை வெளிப்படுகின்றது. ஆசிரியருக்குப் புலமை இருந்த போதிலும் நூலை மக்கள் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் எளிமையாகப் படைத்திருப்பது ஆசிரியரின் அடிப்படை நோக்கத்தைப் புலப்படுத்துகிறது.

ஆசிரியர் வரலாறு

திருஅவதாரம் என்னும் கிறித்தவக் காப்பியம் அருள்திரு. மாணிக்கவாசகம் ஆசீர்வாதம் அவர்களால் எழுதப்பட்டது. இவருடைய முன்னோர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள டோனாவூருக்கு அருகிலுள்ள சூரங்குடி என்னும் சிற்றூரில் வாழ்ந்தவர்கள். அக்குடும்பத்தில் ஆசீர்வாதம் அவர்களுடைய பாட்டனார் சுவாமிநாத பிள்ளைதான் முதன் முதலாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அவர் நாம மகிமைக்காக வாழ்ந்தவர். சூரங்குடியில் பல இன்னல்கள் ஏற்பட்டமையால் அவ்விடத்தை விட்டு வெளியேறி நல்லூருக்குச் சென்று குடியேறினார்கள். நல்லூர் வாழ்க்கைக்கு உகந்ததாக இருந்தமையால் அவ்விடத்திலேயே நிரந்தரமாகத் தங்கினர். இக்குடும்பத்தில் மாணிக்கவாசகம் பிள்ளை - முத்துநாயகம் அம்மையாருக்கு 1865ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் நாள் ஆசீர்வாதம் பிறந்தார். இவர் சுவாமிநாத பிள்ளையின் மகன் வழிப் பெயரராவார்.

சிறுவயதிலேயே ஆசீர்வாதத்தை இறைப்பணிக்காக வளர்த்து வந்தனர். இவர் திருநெல்வேலியிலுள்ள சி.எம்.எஸ் கல்லூரியில் உயர் கல்வி கற்றார். இவர் கல்வியில் மட்டுமன்றி உடற் பயிற்சியிலும் இறையியற் பயிற்சியிலும் ஆர்வம் காட்டினார். கல்விக்குப்பின் வருவாய்த்துறையில் ஓராண்டு பணியாற்றினார். பெற்றோரின் விருப்பத்தினை மனதில் கொண்டு வருவாய்த்துறையிலுள்ள பணியினை விட்டுவிட்டு

இறைப்பணிக்குத் தம்மை முற்றிலும் அர்ப்பணித்தார். இவர் 1899 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்று இறைத் தொண்டராகப் பொறுப்பேற்றார். இவர் சேரன்மாதேவி, பண்ணைவிளை, திருவில்லிபுத்தூர், பாளையங்கோட்டை, நல்லூர் ஆகிய ஊர்களிலும் ஓய்வு பெற்ற பின்னர் சில ஆண்டுகள் உக்கிரமன் கோட்டை, பார்வதியாபுரம் என்னும் சேகரங்களிலும் இறைப்பணியாற்றினார்.

அருள்திரு. மாணிக்கவாசகம் ஆசீர்வாதம் மக்கள் படித்து முன்னேற வேண்டும் என்னும் முனைப்பில் ஆரம்பப் பாடசாலை நிறுவ முயன்ற போது பல துன்பங்களைச் சந்தித்தார். எனினும், எஸ்.ஏ. பொன்னையா உபதேசியாரின் துணையுடன் தம் பொருளையும் செலவிட்டு பாடசாலையை நன்கு நடத்தி வந்தார். தமது உடல் நலம் குன்றிய காலத்திலும் உக்கிரன் கோட்டையில் இறைப்பணியாற்றி வந்தார்.

திருச்சபை ஐக்கியம் என்னும் பொருள் பற்றி, ஓர் ஆங்கிலேயத் திருச்சபைக்குரு என்னும் அடிப்படையில் ஆழ்ந்த கருத்துகளைத் தெளிவாக எழுதி வந்தார். இக்கருத்துகள் அக்காலத்திலுள்ள இதழ்களான தீபிகை, நற்போதகம் என்னும் இதழ்களில் வெளிவந்துள்ளன. விவிலியத்திலுள்ள நான்கு நற்செய்தி நூல்களின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை 1936இல் எழுத ஆரம்பித்து 1946இல் முடித்தார். திருஅவதாரத்திலுள்ள சில பகுதிகள் 1936 பெப்ரவரி முதல் ஆகஸ்டு முடிய ஏழு மாதங்களாக நற்போதகம் இதழில் வெளிவந்தன. இதற்கு வாசகர்களிடம் அதிக வரவேற்பு காணப்பட்டதால், இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை நூல் வடிவில் முழுமையாக எழுத ஆரம்பித்திருக்கலாம். இவர் ஒரு தமிழ் இலக்கிய வித்தகராக மட்டுமன்றி, இறையியல் வல்லுனராகவும் திகழ்ந்தார். இவரது சீரியத் தொண்டினை மதித்து அன்றைய ஆங்கில அரசாங்கம் இவருக்கு 'இராவ் சாகிப்' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. பாளையங் கோட்டையிலுள்ள சமாதானபுரம் கிறிஸ்து ஆலயத்திற்கு ஆசீர்வாதம் அவர்கள் கால்கோள்விழா எடுத்துச் சிறப்பித்தார். இவருடைய துணைவியார் பெயர் மேரி ஞானம். இத்தகைய இலக்கிய பணியும் இறைப்பணியும் ஒருங்கே ஆற்றி வந்த அருள்திரு. மாணிக்கவாசகம் ஆசீர்வாதம் 1948ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் நாள் காலமானார். இவரது இளைய மகன்

ஜே. ஆர்தர் ஆசீர்வாதம் அவர்களின் முயற்சியால் 1979ஆம் ஆண்டு திருஅவதாரம் நூல் வடிவில் வெளியிடப்பட்டது.

ஆசிரியரின் நோக்கம்

ஆசிரியர் இக்காப்பியத்தை எளிமையாக, இனிமையாக அனைவரும் எளிதில் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் படைத்துள்ளார். கவிதையின் அழகுக்காகக் கவிஞர்கள் பயன்படுத்தும் உவமைகள், அணிகள், வருணனைகள் போன்றவற்றை ஆன்ம ஈடேற்றங் கருதி எழுதிய தம் நூலில் ஆசிரியர் எடுத்தாளவில்லை. நற்செய்தி நூல்களிலுள்ள செய்திகளைக் கோர்வைப் படுத்தி திருமறை வாக்குகளின் அடிப்படையில் எளிமையான கவிதைகளாக்கி ஆசிரியர் இக்காப்பியத்தைப் படைத்துள்ளார்.

நூலின் அமைப்பு

திருஅவதாரம் என்னும் இக்காப்பியம் கடவுள் வாழ்த்து, பாயிரம் நீங்கலாக 2294 விருத்தப்பாக்களால் ஆனது. இக்காப்பியம் பால காண்டம், உத்தியோக காண்டம், ஜெயகாண்டம், ஆரோகண காண்டம் என்னும் நான்கு காண்டங்களை உடையது. ஒவ்வொரு காண்டமும் பல்வேறு பர்வங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பர்வத்தினுள்ளேயும் உட்தலைப்புகளுடன் நிகழ்ச்சி தொடர்பான பாடல்கள் அமைந்துள்ளன. படிப்பவர்களுக்குத் துணைபுரியும் வகையில் உட்தலைப்புகளோடு விவிலியத் தொடர்புடைய நற்செய்தி நூல் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

இயேசு கிறிஸ்துவின் இளம் பருவ நிகழ்வுகளைப் பாலகாண்டமும், அவரது ஊழியம், அற்புதங்கள், அருட்பொழிவுகள் போன்ற பணிகளை உத்தியோக காண்டமும், சாத்தானையும் மரணத்தையும் வென்ற நிகழ்வுகளை ஜெயகாண்டமும், இசைப்பாட்டின் ஏறுமுகக் குறிப்பினை நினைவில் நிறுத்தி அவர் வானுலகம் சென்ற செய்திகளை ஆரோகண காண்டமும் விவரித்துச் சொல்கின்றன.

1. பால காண்டம்

இறைமைந்தன் பிறப்பைத் திருஅவதாரம் என்ற உட்தலைப்பால் நூலைத் தொடங்குகின்ற ஆசிரியர், அவர் பிறந்த ஊரை திருக்ஷேத்திரம் எனக் குறிக்கின்றார்.

முன்னறிவித்தல் தொடங்கி தேவாலயத்தில் திருமைந்தன் பிரதிஷ்டை செய்யப்படுதல், ஏரோதுவின் பாதகத்தால் எகிப்து சென்று மீண்டு நாசரேத்தூர் செல்வது ஆகிய செய்திகளைப் பாலகாண்டத்தில் கவிதையாக்கியுள்ளார். இக்காண்டத்தில் 143 பாடல்கள் உள்ளன.

2. உத்தியோக காண்டம்

இரண்டாவது காண்டமான உத்தியோக காண்டம் 1756 பாடல்களைக் கொண்டு பிறகாண்டங்களைவிட அளவில் மிகப் பெரியதாக அமைந்துள்ளது. இக்காண்டம் இரண்டு பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்பகுதி உத்தியோகப் பிரவேசப் பர்வம், உத்தியோக ஆரம்பப் பர்வம், கலிலோயா ஊழிய பர்வம் என்னும் மூன்று உட்பிரிவுகளாகவும், இரண்டாம் பகுதி எருசலேம் யூதேயா ஊழிய பர்வம், கடைசிப் பட்கா வார பர்வம், பன்னிருவருக்கும் பிரிவுரைப் பர்வம் என்னும் மூன்று உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இக்காண்டத்தில் சகரியா முன் தூதன் தோன்றுவது முதல் முன் தூதனின் ஊழியம், இறைமைந்தன் திருமுழுக்குப் பெற்றது, இறைமைந்தனின் அற்புதங்கள், பன்னிரு சீடரைத் தெரிந்தெடுத்தல், இறைமைந்தனின் ஊழியம், சீடனின் கடமை, இயேசுவின் பவனி, நியாயத்தீர்ப்பு, திருவிருந்து நியமனம், சீடர் இடறல், இறுதி உரையாடல், சீடரைப் பிரிதல் முதலான செய்திகளை யெல்லாம் சுட்டிச் செல்கிறார்.

3. ஜெயகாண்டம்

சாத்தானை வென்ற பர்வம், மரணம் வென்ற பர்வம் என்னும் இரண்டு பர்வங்களை உடையதான ஜெயகாண்டத்தில் யூதாஸ் காட்டிக் கொடுத்தது, பேதுருவின் மறுப்பு, விசாரணை, சிலுவைப்பாதை, பாடுகளின் முடிவு, உயிர்த்தெழுந்த இறைமகன் காட்சி கொடுத்தல் ஆகிய நிகழ்வுகளைக் கூறியுள்ளார். ஜெயகாண்டத்தில் 350 பாடல்கள் உள்ளன.

4. ஆரோகண காண்டம்

இறுதி காண்டமான ஆரோகண காண்டம் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் நாற்பது நாட்களில் நடந்த நிகழ்வுகளையும், அவர் பரமேறிச் சென்றதனையும் விளக்குகின்றது. இக்காண்டத்தில் பர்வம் என்னும் பகுப்பு இல்லை. இக்காண்டத்தில் 45 பாடல்கள் உள்ளன.

கவிதையாக்கம்

'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது' (யோவான் 1:1) என்னும் இறைவாக்கினை,

காலமேதோன் றாமுனுள வார்த்தையதே
காலமாதி யந்தமிலா வார்த்தையதே
மூலதெய்வ மோடிருந்த வார்த்தையதே
மூலதெய்வ மாயிருந்த வார்த்தையதே
ஞாலமாமெல் லாந்தனது வன்மையினால்
ஞானமாய்ப் படைத்ததோரே வார்த்தையதே
காலமாக ரூபமாகி மானுடனாய்க்
காசினியிற் தோன்றிய தாம் வார்த்தையதே

(பால காண்டம், பா.1)

எனக் காப்பியத்தின் முதற் பாடலாகக் கவிதையாக்கம் செய்கிறார். இது போன்று விவிலிய வசனங்களைக் கவிதையாக மாற்றி காப்பியமாகப் படைத்துள்ளார். இதற்கு இவரது இலக்கண, இலக்கிய அறிவும், விவிலியப் புலமையும், போதகராகப் பணியாற்றிய அனுபவமுமே அடிப்படைக் காரணங்களாகும்.

அற்புதங்கள்

இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களுள் முதலாவது அற்புதம் கானாவூர் திருமணத்தின்போது ஆறு கற்சாடிகளிலிருந்த தண்ணீரைத் திராட்ச இரசமாக்கியதாகும். விவிலியத்திலுள்ள யோவான் எழுதிய நற்செய்தி நூலின் இரண்டாம் அதிகாரத்தின் முதல் பன்னிரெண்டு வசனங்களும் முதல் அற்புதம் குறித்து தெரிவிக்கிறது. திருஅவதாரம் ஆசிரியர் இவ்வற்புதத்தை பதினொரு பாடல்களில் படம் பிடித்துக் காட்டுகிறார். இப்பகுதியிலிருந்து சான்றாக ஒரு பாடல்:

வெறுஞ்ஜலமே நல்லரச மாகவேசெய் விந்தைமுத
லற்புதமா மீதுசெய்தோர்
வெறுமனுட னேயலப ரத்திருந்தே யிங்குவந்த விண்ணவரே
யென்றெவரும்
பெரும்வியப்ப டைவதற்கே தம்முடைய பேர்மகிமை
வல்லமைவி ளக்கினரே
பெரும்வியப்ப டைந்தனரே சீடருமே கொண்டனர்பேர்
விஸ்வசமே யண்ணலார்மேல்

(உத்தியோக ஆரம்பப் பர்வம், பா.9)

இப்பாடலில் ஆசிரியர் தண்ணீரை ஜலம் என்னும் வடமொழிச் சொல்லால் குறிப்பிடுகிறார். பன்னிரெண்டு ஆண்டுகளாக நோயினால் கடுமையாகத் துன்பமடைந்து கொண்டிருந்த ஒரு பெண் இயேசு கிறிஸ்துவின் ஆடையின் விளிம்பை விசுவாசத்துடன் தொட்டாள். அவள் தொட்டவுடன் இறைவனின் வல்லமையினால் குணமானாள். இதை,

> **தொட்டா லவருட ஆடையைச் சுகமடை வேனென**
> **விசுவசித்தே**
> **திட்டமா யவர்பின் வந்தனளே திரண்டுநெ ருங்கிய**
> **மக்களூளே**
> **தொட்டன ளுடையின் தொங்கலையே சுகமடைந் தனளே**
> **சண மதிலே**
> **பட்டவோ ரவதியும் நீங்கியேதன் பிணியுமே பறந்தே**
> **சுகமடைந்தாள்**
> **(கலிலோயா ஊழிய பர்வம், பா.348)**

எனப் பாடுகிறார். இயேசு கிறிஸ்து நாயீன் என்னும் ஊருக்குச் செல்கையில் இறந்த ஒருவனை அடக்கம் பண்ணக் கொண்டு சென்றனர். இறந்தவன், விதவையானத் தாய்க்கு ஒரே மகன். இயேசு கிறிஸ்து பாடையில் கிடத்தப்பட்டிருந்த அவனைப் பார்த்து, வாலிபனே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே அவன் எழுந்திருந்து அவர்களிடம் பேசத் தொடங்கினான். அங்கிருந்த அனைவரும் தேவனை மகிமைப் படுத்தினார்கள். இவ்வற்புதத்தை,

> **யுவனே யெழும்பு உரைக்கிறே னுனக்கே யெனவுரைக்**
> **கவேமரித் தவனாம்**
> **அவனெழுந் தனனே யமர்ந்துபா டையினில் அமைதலா**
> **யுரையா டினனே**
> **எவர்துயர் வருத்தம் எதுமகற் றுபவர் அவனனை**
> **யிடமொப் புவித்தார்**
> **அவரது வலமை யருளையு மறிந்தோர் அனைவரு மருண்டதி**
> **சயித்தார்**
> **(கலிலோயா ஊழிய பர்வம், பா.256)**

எனப் பாடுகிறார். இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களை ஆசீர்வாதம் அவர்கள் பாடலாக்கியிருப்பது மிக அருமை.

மலைப்பொழிவு

இயேசு கிறிஸ்து மலைப்பொழிவின்போது மொழிந்த 'இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள்

தேவனைத் தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்' (மத்தேயு 5: 8, 9) என்னும் வசனங்களை,

இருதய சுத்தம் உள்ளோர் என்றுமே பாக்ய ராவார்
ஒருவருங் காணக் கூடா உனதரைத் தர்சிப்பாரே
இருசமா தானஞ் செய்வோர் இன்புறும் பாக்ய ராவார்
அருணிறை தெய்வந் தம்மின் அன்புறும் புத்ரர் ஆவார்
(உத்தியோக காண்டம், பா.144)

எனப் பாடலாக்கியுள்ளார்.

உவமைகளின் வழி போதனை

இயேசு கிறிஸ்து மக்களுக்கு உவமைகளின் மூலம் பல போதனைகளை நிகழ்த்தியுள்ளார். விதைப்பவன் விதையை எடுத்துக் கொண்டு செல்லும்போது சில விதைகள் வழியில் விழுந்தன. அவை மிதிபட்டு பறவைகள் அவற்றை உண்டன. சில விதைகள் பாறை நிலத்தில் விழுந்தன. அவை மண் அதிகம் இல்லாததால் முளைத்தவுடன் காய்ந்து விட்டன. சில விதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்தன. முள் வளர்ந்ததனால் செடியை வளர விடாமல் நெருக்கிப் போட்டது. நல்ல நிலத்தில் விழுந்த விதை முளைத்து சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலனைக் கொடுத்தது. இந்த உவமையின் மூலம் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்னும் கருத்தை விளக்கினார். இப்போதனையை,

விதைப்பவ னொருமக னெழுந்தன்னே விதைக்கவே
தனதுட நிலத்தினிலே
விதைசில விழுந்தன வழியருகே வெளியிலே
கிடந்தவை மிதிபடவே
அதனையே பொறுக்கியே விழுங்கினவே யநேகமாம்
பறவைகள் பல்வகையே
விதைசில விழுந்தன பாறைநிலம் அதிலுள மண்ணோ
மிகக்குறைவே.

விதைமுளைத் தனவெகு சீக்கிரமே மேல்மணோ
சிறிதுமேயாழமிலை
விதைமுளை யுலர்ந்தன வேரிலையே மேல்மண்
ணீரமே காய்ந்ததினால்

விதைசில விழுந்தன முள்நிலமே வித்துமே முளைத்தே
முட்களுளே
அதைநெருக் கினதே முள்வளர்ந்தே யானதா
லதன்பலன் ஒனுமிலையே.

சிலவிதை வீழ்ந்தன நல்நிலமே முளைத்தவை
செழித்தே வளர்ந்தனவே
சிலபயிர் தந்தன நூறுபலன் சிலபயிர் கொடுத்தன
அறுபதாயே
சிலபயிர் தந்தன முப்பதுமே சிறந்தநற் பலனே நிலம் நலமே
நலமொடு கேட்கவே காதுளோனோ நலம்பெறச்
செவிகொடுத் திடுகவென்றார்
(கலிலோயா ஊழிய பர்வம், பா.281-283)

என்னும் பாடல்களில் விவரிக்கிறார். ஆசிரியரின் புலமைக்கு இப்பாடல்கள் சான்றுகளாக அமைகின்றன.

உயிர்த்தெழுதல்

இயேசு கிறிஸ்துவின் பாடு மரணங்கள் சிறப்பாக ஜெய காண்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. இப்பகுதி கிறித்தவ இலக்கியங்கள் அனைத்திலும் உயிர்நாடியான பகுதியாகும். கிறிஸ்தவத்தின் விசுவாசம் இப்பகுதியில் நிலைத்திருக்கிறது. உயிர்த்தெழுதல் குறித்து,

சிங்கமா முமதுட திருமகனார் சென்றுமே ஜெனித்தனர்
புவியினிலே
துங்கனா மனுமகன் ஜேசுபரன் துர்மனப் பேயொடு
பொருதனரே
பங்கமே செய்தன ரலகையையே பாரினிற் ஜெயித்தார்
சிலுவையிலே
மங்கா மகிமையோ டெழுந்தனரே மாரண மிருந்தே
யிதுதினமே
(மரணம் வென்ற பர்வம், பா.4)

எனப் பாடுகின்றார். கிறித்தவக் கீர்த்தனைக் கவிஞர் ஒருவர் யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார் என உயிர்த்தெழுதல் குறித்துப் பாடுகிறார். ஆசிரியரின் கவித்திறனுக்கு இப்பாடலும் ஒரு சான்றாகும்.

ஒரு விதவையின் காணிக்கை

ஒரு விதவை போட்ட இரண்டு காசுகளைக் குறித்து ஆசிரியர் எழுதியுள்ள இரண்டு பாடல்கள் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அப்பாடல்கள் பின்வருமாறு:

காணிக்கை போடுமிடம் வந்தனரே காணிக்கைப்
பெட்டியெதி ரேயமர்ந்தார்
காணிக்கைப் பெட்டியுளே பற்பலபேர் காணிக்கைகள்
போடுவதைப் பார்த்திருந்தார்
காணிக்கை போட்டனரே ஐசுவரியர் காணமிக வேயதிகங்
காசுகளே
காணிக்கை போட்டனளே யோர்விதவை கட்டமொடே
சேர்த்தஇரு காசுகளே.

கண்டனரே காணிக்கை போடுவதை சீடரைய ழைத்தவர்க்கே
மாகனிவாய்
விண்டனரே யிவ்வசனம் இவ்விதவை மற்றவர்க்கு
மேலதிகம் போட்டனளே
பண்டமேது மற்றவளே யேழையிவள் பண்பொடுமி
ருந்தவெல்லாம் போட்டனளே
பண்டநிறை ஐசுவரிய ராமிவர்தம் பரிபூரணத்
தேயிருந்தே போட்டவரே
(கடைசி பட்காவார பர்வம், பா.159, 160)

இவை போன்று அனைத்துப் பாடல்களிலும் வேத வசனங்களைக் கவிதையாக்கிய வளமை மெச்சத்தக்கது.

உணர்ச்சி வெளிப்பாடு

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய பாடலை எழுதும்போது உணர்ச்சியில் மூழ்கிப் பாடுகிறார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு உலக மக்களுக்கே ஓர் அதிசயமான, மகிழ்ச்சியான செய்தியாகும். பின்வரும் பாடலில் மகிழ்ச்சி வெள்ளத்தில் உணர்ச்சியைக் கொட்டி,

என்னோஇவ் வற்புதம்பார் ஈசனிங்கே வந்தார்புவில்
என்னோஇவ் வற்புதம்பார் எம்முருவங் கொண்டாரன்றோ
என்னோஇவ் வற்புதம்பார் இந்நிலைமை யேயானாரே
என்னோஇவ் வற்புதத்தை எப்படிமறப் பாய்பாவி
(பாலகாண்டம், பா.55)

எனப் பாடுகிறார். மேலும் இறைவன் மண்ணுலகில் வந்து, உயிர் துறந்து, உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு எழுந்த முப்பத்து மூன்று ஆண்டுகால வரலாற்றை நான்கு அடிகளில் உணர்ச்சி பூர்வமாக,

பாவியே யுனக்காய் பரனுல குதித்தார்
பாவியே யுனக்காய் பரனுயிர் துறந்தார்

பாவியே யுனக்காய் பரனுயிர்த் தெழுந்தார்
பாவியே யுனக்காய் பரன்பர மெழுந்தார்
(ஆரோகண காண்டம், பா.31)

எனப் பாடுகின்றார். இரத்தினச் சுருக்கமாக இப்பாடல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கற்பனைத் திறன்

கவிஞர்களுக்குக் கற்பனைத் திறன் இயல்பாகவே அமைந்துவிடும். திருஅவதாரம் ஆசிரியரும் அதற்கு விதிவிலக்கல்லர். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த போது வானவர்கள் கொண்டாடியதை,

மண்ணிதில் மனுமக னுயிர்த்தெழவே மரணமு
மலகையும் வென்றவராய்
விண்ணிலே யமரரா மனைவருமே வியந்தன
ரெழுந்தேயார்த் தனரேமிக
பண்ணினுக் கிசைவாய் நடித்தனரே பலவித
மாய்மகிழ் கொண்டனரே
பண்ணொடு துதித்தனர் பரமனையே புகழ்ந்தன
பரவச மாயினரே
(மரணம் வென்ற பர்வம், பா.2)

எனக் கற்பனை நயத்துடன் பாடுகிறார். மண்ணுலகத்தில் மரணத்தையும் பேயினையும் வென்று மனுமகன் உயிர்த்தெழுந்தார். அதனைக் கண்டு விண்ணில் இருந்த தேவர்கள் அனைவரும் வியந்தனர்; எழுந்து ஆர்த்தனர்; இசைக்குப் பொருந்த ஆடினர்; பலவிதமாய் மகிழ்ந்து கொண்டாடினர்; மேலோனாகிய இறைவனை இசையோடு பாடித்துதித்து புகழ்ந்து பரவசமுற்றனர் என்னும் கற்பனைநயம் சிறப்புமிக்கது.

அணிநயம்

இறைமகனின் வாழ்வைக் காப்பிய வடிவில் விவரிப்பதே காப்பியக் கவிஞரின் பேராவல். எனவே அணிநயங்களை அதிக அளவில் ஆசிரியர் கையாளவில்லை. ஒரு சில பாடல்களில் சொற்பொருள் பின்வரு நிலையணியைக் கையாண்டுள்ளார். சான்றாக,

தன்னையே பகைத்தே தன்னுளே பிரிந்த நாடாம்
பாழாய் விழுமே
தன்னையே பகைத்தே தன்னுளே பிரிந்த பட்டணம்
நிற்பதெப் படியாம்

தன்னையே பகைத்தே தன்னுளே பிரிந்த வீடுமி
டிந்துமே யழியும்
தன்னையே பகைத்தே தன்னுளே பிரிந்தால் சாத்தான்
ராசியம் நிலையா
(கலிலோயா ஊழிய பர்வம், பா.226)

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் ஒரு சொல்லே பல இடங்களில் ஒரே பொருளைத் தந்து கவிதை இன்பத்தை நமக்குத் தருகின்றது.

தலையாகு எதுகை

மாணிக்கவாசகம் ஆசீர்வாதம் தம் காப்பியத்தில் பல இடங்களில் தலையாகு எதுகையில் அமைந்துள்ள பாடல்களைப் படைத்துள்ளார். முழுச் சீரும் அப்படியே திரும்பி வருவது தலையாகு எதுகை ஆகும். சான்றாக,

விசாரணை செய்தான் ஜேசை வேந்தனோ நீயென் றானே
விசாரணை யேசெய் தானே வேதியர் மற்றுள் ளோரை
விசாரணை யேதென் றாலும் வீணென அறிந்தா னிவன்
விசாரணை யாவுஞ் செய்ய யாதுமே விகற்பங் காணான்
(சாத்தானை வென்ற பர்வம், பா.127)

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் விசாரணை என்னும் சீர் அப்படியே திரும்ப வருகிறது.

இயைபுத்தொடை

ஒரு செய்யுளின் ஒரு அடியிலுள்ள இறுதிச் சீரும் அடுத்த அடியில் வரும் இறுதிச் சீரும் ஒன்றி வந்தால் அதை இயைபுத் தொடை என்பர். திருஅவதாரம் என்னும் காப்பியத்தில் பல பாடல்களில் இயைபுத் தொடை பயின்று வருவதைக் காணலாம். சான்றாக,

விண்ணவர் தொழுகைவிண் ணுலகையும் விடுத்தாய்
மண்ணுல கடுத்தொருமா னுடனாக ஜெனித்தாய்
மண்ணவர்க் கெனவே மரித்துயிர்த் தெழுந்தாய்
விண்ணுல கெழுந்துவிண் ணரியணை யமர்ந்தாய்
(ஆரோகண காண்டம், பா. 38)

என்னும் பாடலைக் குறிப்பிடலாம்.

நற்செய்திக் நூற்குறிப்புகளோடு உட்தலைப்புகள் அமைத்திருக்கும் முறை, திருமறை வாக்குகளின் அடிப்படையிலான எளிய கவிதைகள், செய்திகளை நேரடியாகச் சொல்லும் திறம் முதலியவை இக்காப்பியத்தின் சிறப்புக்குக் காரணமாகின்றன.

14. இயேசு காவியம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களாகப் பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியோர் திகழ்ந்தனர். பாரதியாருக்குப் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனுக்குப் பாண்டியன் பரிசு போலக் கவிஞர் கண்ணதாசனுக்கு இயேசு காவியம் புகழ் சேர்த்துள்ளது. ஆயிரக்கணக்கான திரையிசைப் பாடல்களை இயற்றி தமிழ் மக்களின் மனதில் நிலையான இடத்தைக் கண்ணதாசன் பெற்றிருந்தாலும், அமர காவியமாக இயேசு காவியத்தைப் படைத்துத் தமிழ் இலக்கிய உலகில் காவியக் கவிஞராக நிலைத்த புகழ் தேடிக் கொண்டுள்ளார். தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் போன்ற கிறித்தவக் காப்பியங்களின் வரிசையில் இடம்பெறும் இருபதாம் நூற்றாண்டுப் பெரும் படைப்பாக இயேசு காவியம் திகழ்கிறது.

கிறித்தவக் காப்பியங்களில் அனைவருக்கும் தெரிந்த எளிமையான காப்பியம் இயேசு காவியம் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட இக்காவியத்தை மக்கள் படித்து இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், கண்ணதாசனின் கவிச்சுவையையும் உணர்ந்து கொண்டனர். "பல சமயங்களில், பலர் என்னை இறவாக் காவியம் ஒன்று எழுதுங்கள் என்று வற்புறுத்தியதுண்டு. அந்த இறவாக் காவியம் 'இயேசு காவியம்' தான் என்று நான் உறுதியாகக் கூறமுடியும்" என்று கவியரசு கண்ணதாசன் கூறியதிலிருந்தே இயேசு காவியத்தின் சிறப்பினை அனைவரும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. விவிலியத்திலுள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நற்செய்தி நூல்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்நூல், திருச்சியிலுள்ள கலைக்காவிரியின் மூலம் 1982ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

ஆசிரியர் வரலாறு

கவிஞர் கண்ணதாசன் சிறுகூடல் பட்டி என்னும் ஊரில் 1927ஆம் ஆண்டு சூன் மாதம் 24ஆம் நாள் சாத்தப்பன் - விசாலாட்சி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, கமகப் பிரியா, பார்வதி நாதன், ஆரோக்கிய சாமி என்னும் புனைபெயர்கள் உண்டு. இவர் சண்ட மாருதம், திருமகள், திரைஒலி, மேதாவி, தென்றல், தென்றல் திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின்

ஆசிரியராக இருந்தவர். இவர் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளையும், ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும் எழுதியுள்ளார். மேலும், நாவல்கள், வாழ்க்கை சரிதம், கட்டுரைகள், நாடகங்கள் போன்றவற்றைப் படைத்ததுடன் பகவத்கீதைக்கு உரையும் அபிராமிப் பட்டரின் அபிராமி அந்தாதிக்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார். 1980ஆம் ஆண்டு இவர் எழுதிய சேரமான் காதலிக்காக சாகித்திய அகாடமி பரிசினைப் பெற்றார். தமிழக அரசவைக் கவிஞராக இருந்தவர். உடல்நலம் இன்மையால் 1981ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ஆம் நாள் அமெரிக்காவில் காலமானார்.

அமைப்பும் பகுப்பும்

பாயிரத்துடன் தொடங்கும் இயேசு காவியம் ஐந்து பாகங்களைக் கொண்டது. முதல் பாகம் 'பிறப்பு' என்கின்ற தலைப்பினை உடையது. இப்பகுதியில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, அவருடைய வளர்ச்சி பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. இரண்டாம் பாகம் 'தயாரிப்பு' என்பதாகும். அருளப்பர் இயேசு கிறிஸ்துவிடம் ஞானஸ்நானம் பெறுதல் மற்றும் சாத்தானால் சோதிக்கப்படுதல் முதலிய செய்திகள் இடம்பெறுகின்றன.

மூன்றாம் பாகம் 'பொதுவாழ்வு' என்ற தலைப்பினை உடையது. இப்பகுதியில் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் பன்னிருவர் உருவாதல், இயேசு கிறிஸ்துவின் போதனைகள் இடம்பெறுகின்றன. நான்காவது பாகம் 'பாடுகள்' என்பதாகும். பாடுகளைப் பற்றி இயேசு கிறிஸ்து அறிவித்தல், நம் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து பட்ட பாடுகள், இயேசு கிறிஸ்து உயிர் நீத்தல் முதலிய செய்திகள் கவிநயத்துடன் கூறப்படுகின்றன.

இறுதியாக ஐந்தாம் பாகம் மகிமை என்னும் தலைப்பினைக் கொண்டு அமைந்துள்ளது. இயேசுகிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுகின்ற மகிமை நிகழ்ச்சி கூறப்படுகின்றது. முடிவில் மங்களம் பாடி, 'மண்ணிடை இயேசு கிறிஸ்து மறுபடி வருவார் என்பது சத்தியமே!' என்று காவியம் முற்றுப் பெற்றுள்ளது.

தன்னேரில்லாத் தலைமகன்

தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய இலக்கணங்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கதாகிய தன்னேரில்லாத் தலைமகன்

என்னும் இலக்கணத்தைக் கண்ணதாசனின் இயேசு காவியத்திலும் முழுநிலையில் காணமுடிகிறது. தன்னேரில்லாத் தலைமகனாக இயேசு கிறிஸ்துவைக் கண்டு போற்றிப்பாடும் போது, இயேசு கிறிஸ்துவைப் பற்பல பெயர்களால் கண்ணதாசன் சிறப்பிப்பது கருதத்தக்கதாகும்.

இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் பெயர்கள்

இயேசு கிறிஸ்துவைக் குறிக்க தம் காவியத்தில் பல விதமான சொற்களைக் கவிஞர் பயன்படுத்துகிறார். சில சமயங்களில் அவரின் பண்புகளை விளக்குவதாகவும் பெயர்களை அமைத்திருக்கிறார்.

'இளங்கதிரோன்', அன்பின் மைந்தன், தேவ குமாரன், 'திருமகன்', 'தகைசால் மைந்தன்', 'ஆற்றல் சால் மைந்தன்', 'அருந்திறல் மைந்தன்', 'தனிப்பெரும் மைந்தன்', 'தானென்ற அகந்தை இல்லாதவன்', 'கருணையர்', 'மாமன்னன்', 'தூயவன்', 'ஞானி', 'நித்திய மைந்தன்', 'உலகநாதன்', 'ஐயன்', 'தேவநேயன்', 'மோகன மன்னன்' என பல பெயர்களிட்டு அழைக்கிறார் கவிஞர்.

இதே போல இயேசுவின் தாய் மரியாளைக் குறிப்பிடும் போது 'சுடர் விளக்கனைய கன்னி', 'மாதருள் மணி', 'மெய்யருள் மகள்', 'திருமாதா', என்றும், சூசையப்பரை 'பொன்னிகர்' சூசையப்பர் என்றும் அழகாகப் பெயர்களிட்டிருக்கிறார்.

தேவகுமாரன்

இயேசு காவியத்தில் தன்னேரில்லாத் தலைமகனாய் இயேசு கிறிஸ்து பாடப்பட்டுள்ளார். இயேசு கிறிஸ்துவை விவிலியம் குறிப்பிடும் தேவகுமாரன் என்ற திருப்பெயரால் கண்ணதாசன் சிறப்பித்துள்ளார். கடவுளின் மகன் எனப் பொருள்படும் இப்பெயர், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதற்காக நூறுமுறை பயன்படுத்தப் பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவின் தனித்தன்மையையும், தெய்வீகத்தையும் குறிப்புணர்த்தும் தேவகுமாரன் என்னும் சொல்லைக் காவியத்தில் விரும்பி கண்ணதாசன் பயன்படுத்தி யுள்ளமையிலிருந்து, கிறித்தவ மெய்ஞானத்தில் அவருக்கிருந்த பயிற்சியை அறியமுடிகின்றது.

பரிசுத்த ஆவி உன்மேல்
　　　பரிவுடன் இறங்கி நிற்பார்
ஒருபத்து மாதம் சென்று
　　　உன்மகன் பிறப்பான் அந்தத்
திருமுத்து விளக்கம் நாட்டில்
　　　தேவகு மாரன் என்னும்
மருவற்ற பேரைப் பெற்று
　　　வளம் பெறும் என்றான் ஆங்கே! (ப.12)

என்னும் இப்பாடல் வழியே, விவிலியத்தில் தேவகுமாரன் என்ற உயர்தனிப் பெயர் சித்திரிக்கப்பட்டுள்ள முறைமையை உள்வாங்கியே கண்ணதாசன் இயேசு கிறிஸ்துவைப் பாடியுள்ளமையை அறியலாம்.

தேவகுமாரன் என்னும் பெயருடன் இயேசு என்கிற பெயரையும், அதற்குள்ள கிறித்தவ மதிப்புடன் கண்ணதாசன் பாடியுள்ளமையைப் பின்வரும் பாடலால் அறியலாம்:

மேலும்அத் தூதன் சொன்னான்
　　　மெய்யருள் மகளே, வாழ்க!
ஏலுமோர் பிள்ளைக் கேநீ
　　　இயேசுஎன் கின்ற பேரைப்
பாலுடன் ஊட்டிச் சூட்டிப்
　　　பாவிகள் பாவம் தீர்க்கச்
சீலமிக் கோனாய் என்றும்
　　　வளர்த்துவா சிறக்கக் காண்பாய்! (ப.13)

இயேசு என்னும் சொல் எபிரேய மொழியில் யோசுவா என வழங்கப்படுகிறது. யோசுவா என்பதற்குக் கடவுளின் மீட்பு என்பது பொருளாகும். இந்த உள்பொருளைத் தெளிவாக உணர்ந்தே இயேசு என்னும் பெயரைத் தம் காவியத்தில் பல இடங்களில் பொருளாழத்துடன் கண்ணதாசன் பயன்படுத்தியுள்ளார் எனலாம்.

ஆண்டவர்

தேவகுமாரன், இயேசு என்னும் பெயர்களைப் பயன்படுத்துவது போலவே, ஆண்டவர் என்னும் பெயரையும் தம் காவியத்தில் கண்ணதாசன் நுட்பமாகப் பயன்படுத்துகிறார். இயேசுவைப் பெற்றெடுத்த அன்னை மரியம்மையே ஆண்டவர் என்று இயேசுவை விளித்துப் பேசுவதாகக் கண்ணதாசன்

காட்டுகிறார். இந்த உலகில் தாயைக் காட்டிலும் மேலான உறவு வேறு ஒன்றும் இல்லை. அத்தகைய தாயே வணங்கிப் போற்றும் பெருமை கடவுளைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. இத்தகைய புரிதலுடன் தான் அன்னை மரியே தன் மகனை ஆண்டவர் என்று அழைக்கும்படி கவிஞர் படைத்துள்ளார்.

என்கண்கள் அவர்உருவை வியந்து பார்க்கும்
என்கைகள் அவர்உருவை வணங்கி நிற்கும்
என்றென்றும் தலைமுறைக்கு அவரே நின்று
இரக்கத்தை அருளுகிறார் மறக்க மாட்டேன்!
நன்மைசெயும் ஆண்டவரே போற்றி! போற்றி!
நமைமீட்க வந்தவரே, போற்றி! போற்றி!
இன்றெனவே எந்நாளும் நினைப்பேன் உம்மை
இறவாத புகழ்தந்தாய் நீயே என்றாள்! (ப.15)

என்னும் மேற்சுட்டிய பாடல்வழி, நன்மை செய்பவர் ஆண்டவர், ஏழைகளைக் காப்பவர் ஆண்டவர், இரக்கத்தின் உருவம் ஆண்டவர், பாவிகளான மனிதர்களை மீட்க வந்தவர் ஆண்டவர், புனிதமான பெயர் ஆண்டவர் என்னும் கருத்துகளைக் கண்ணதாசன் குறிப்புணர்த்துவது அறியத் தக்கதாகும்.

மனிதகுல மருத்துவன்

நல்லவர் உள்ளம் போல நலம்பெறப் பிறந்த செல்வனாகவும், ஆற்றல்சால் மைந்தனாகவும், விளக்கெனப் புன்னகைக்கும் வெளிச்சமாகவும், இல்லை என்று கூறாமல் இருகரம் விரித்து நின்ற வள்ளலாகவும், தூளியில்லாத போதும் தூங்கிய பாலனாகவும், சோதிமணிப் பெட்டகமாகவும், சுடர் ஒளியாகவும், யூதருக்கு ஆதி மகனாகப் பிறந்த அருந்தவமாகவும், ஏழைத் தொழுவில் வந்த இறைமகனாகவும், பேரொளியை ஏற்ற வந்த திருமகனாகவும் இயேசுவைப் பலவாறுப் போற்றிப் பரவும் கண்ணதாசன், இத்தகைய அடைமொழிகளுக்கெல்லாம் சிகரமாக,

வானளந்த திருக்குமரா! மனிதகுல
மருத்துவனே!
தேனமுதத் திருவாயில் சித்திரங்கள்
தீட்டவந்தாய்!

பல்லாண்டு பல்லாண்டு பாலைவனம்
போலிருந்து

எல்லாமும் இழந்துவரும் இஸ்ரேலை
வாழவைப்பாய்! (ப.25)

என மனித உயிர்களைப் பாவங்களிலிருந்து மீட்க வந்த இறைவனாக, வானளந்தத் திருக்குமாரனாக, மனிதகுல மருத்துவனாகப் போற்றிக் கண்ணதாசன் தாலாட்டுப் பாடுவது போற்றத்தக்கதாகும்.

உலகை மீட்கும் உத்தமச் செல்வன்

உலகை மீட்கும் உத்தமச் செல்வன் என்னும் பெயரால் இயேசு கிறிஸ்துவைச் சிமியோன் போற்றுவதாகக் கண்ணதாசன் காட்டுகிறார். விவிலியத்தில் இச்சிமியோன் என்னும் பெயர் கடவுள் கேட்டார் என்னும் பொருள் கொண்ட பெயராகக் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேல் நாட்டுக்கு இறைவனின் மைந்தன் வருவதைப் பார்த்த பின்னரே மடிவேன் என்னும் மனவுறுதியுடன் வாழ்ந்து வந்தச் சிமியோனைக் கொள்கையில் குன்றாதவராகக் கண்ணதாசன் படைத்துக் காட்டுகிறார். இச்சிமியோன்,

கன்னியின் குழந்தையைக் கையினில் ஏந்தி
இறைவா, உனக்கு என்றும் நன்றி!
நன்மொழி உரைத்தாய் நடந்தது இன்று!
அடியேன் என்னை அமைதியாய்ச் செலவிடு
உலகை மீட்கும் உத்தமச் செல்வனைக்
கண்ணாற் கண்டதே கழிபேர் உவகையே!
நன்னாள் இதுவே நம்கடன் முடிந்தது
என்றார் மகனை இருகரம் வைத்து! (பக்.32-33)

எனக் குழந்தை இயேசுவைக் கரத்தினில் ஏந்தி உலகை மீட்கும் உத்தமச் செல்வன் எனப் போற்றி மகிழ்வதாகக் கண்ணதாசன் விவரிக்கிறார். இஸ்ரவேல் மக்கள் அனைவருக்கும் விடுதலை வழங்கப் பிறந்த நாயகனாக இயேசு கிறிஸ்து திகழ்வதால் சிமியோன் வழங்கும் 'உலகை மீட்கும் உத்தமச் செல்வன்' என்ற அடைமொழி இயேசு நாதருக்கு முழுவதும் பொருந்துவதாகிறது.

ஒளியாய் வந்த விண்ணவன்

விண்ணில் வாழும் தெய்வமகன் ஆண்டவரின் ஆணையால் விண்ணை விட்டு இறங்கி மண்ணுக்கு வருகிறார். மண்ணில் அவரை உணர்வோர் மட்டுமே மரணம் தடுத்து வாழ்தல் இயலும் என்கிறார் கண்ணதாசன். இத்தேவமகன்

உலகோர் அறியப் பெருமையாக உயர்த்தப்பட்டால்தான் உலகோர்க்கு உயர்வும், நன்மையும் உண்டு என்றும் ஆசிரியர் வலியுறுத்துகிறார். கடவுள் தம் ஒரே மகனை இம்மண்ணுக்கு அனுப்பியது என்பது அவரது அன்பு வழியின் வெளிப்பாடாகும். உலக வாழ்வில் சிக்கி அல்லலுற்றுக் கலங்கும் மண்ணுலக மக்களை மீட்பதிலே கடவுள் செய்த தியாகம் என்று இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கண்ணதாசன் கொண்டாடுகிறார். கருணையின் மூல ஊற்றாகத் திகழும் இயேசுவின் பிறப்பை உடனே அறியும் மானிடருக்கு ஒவ்வொரு நாளும் நலமுண்டு என்பது கண்ணதாசனின் மனத் துணிவாகும்.

மேலே இருந்து வருபவனே
மேலா னவனாய் இருக்கின்றான்!
ஞாலந் தனிலே பிறந்தவனோ
லௌகீ கம்தான் பேசுகிறான்!
சாலும் அந்த விண்ணவனோ
தந்தை யிடத்துக் கண்டவற்றைக்
காலும் தலையும் வைக்காமல்
கச்சித மாகச் சொல்லுகிறான்! (ப.73)

என்னும் பாடலில் இருண்டு கிடக்கும் இந்த உலகுக்குக் கடவுள் வழங்கிய ஒளியாக, மேலேயிருந்து வந்த விண்ணவனாக அதாவது ஒளியாய் வந்த விண்ணவனாகக் கண்ணதாசன் இயேசு கிறிஸ்துவைக் கண்டு போற்றுவது கருதத்தக்கதாகும்.

கிறிஸ்து - மீட்பர்

கிறிஸ்து என்னும் பெயருக்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர், யூதர்கள் எதிர்பார்த்திருந்த மேசியா என விவிலியம் பொருளுரைக்கின்றது. இயேசு காவியத்தில் சமாரியப் பெண்ணின் வாய்மொழி வாயிலாக கிறிஸ்து என்ற பெயரைக் கண்ணதாசன் வெளிப்படுத்துகிறார். தாம் பிறந்த யூதேயா நாட்டை விட்டு விலகித் தங்கி வாழ்வதற்காகக் கலிலேயா நாட்டை நோக்கி இயேசு செல்கிறார். அப்போது வழிப்பாதையில் குறுக்கிடும் சமாரியா நாட்டுக்குள் சீகார் என்னும் சிற்றூரில், யாக்கோபுவின் தோட்டத்தில் சமாரியப் பெண் எதிர்ப்படுகிறார். அவளிடம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்கிறார். யூதருக்கு, நான் தண்ணீர் தரலாமா? பாவமில்லையா? எனச் சமாரியப்பெண் வினவுகிறாள். அதற்கு இயேசு கிறிஸ்து பாவமில்லை, கடவுள் தந்த பயன் என பதிலுரைக்கிறார்.

அப்போது அப்பெண்ணுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் இடையில் பின்வருமாறு உரையாடல் நிகழ்கிறது:

பேசவொணாக் கிறிஸ்துஇங்கு வருகின் றராம்
பிறர்சொல்லிக் கேட்டறிவோம் நாங்கள் அந்தப்
பாசமகன் வரும்போது அனைத்தும் சொல்வார்
பாவங்கள் தீர்ப்பார்நாம் பார்ப்போம்! என்றாள்.
பேசுகின்ற நானேஅப் பெயரில் உள்ளேன்
பெண்ணேநீ அறிவாயா? என்றார் இயேசு
ஆசையுடன் அவள்பார்த்தாள் சீடர் வந்தார்
அன்புமகன் பெண்ணோடு பேசக் கண்டார்! (ப.78)

சமாரியப் பெண்ணின் கூற்றுவழி பாவங்கள் தீர்க்கும் பாசமகன் இயேசு கிறிஸ்து என்பதையும் நெடுங்காலமாக உலக மக்கள் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த மேசியா கிறிஸ்து என்பதையும் அறியமுடிகிறது. சமாரியப் பெண் கூறிய சொற்களால் மட்டும் கிறிஸ்துவை மீட்பராக ஊரார் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரவர் சொந்த கண்களால் கண்ட பின்னரே கிறிஸ்துவை மீட்பராக ஊரார் ஏற்றுக் கொண்டதாகக் கண்ணதாசன் பாடுகிறார்.

பரமபிதாவின் மைந்தர்

கிறிஸ்து என்பவர் கேள்வியைக் கடந்தவர் என்றும், மெசையா என்னும் மீட்பர் இயேசு என்றும், பரமண்டலத்து பரமபிதாவின் மைந்தர் கர்த்தர் என்றும் இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான இராயப்பர் கூறுவதாகக் கண்ணதாசன் பதிவு செய்கிறார்.

கிறிஸ்து என்பவர் கேள்வியைக் கடந்தவர்
மெசையா என்னும் மீட்பர் நீரே!
பர மண்டலத்துப் பரமபிதாவின் மைந்தர் என்றார்
(ப.177)

எனக் கூறும் இராயப்பர், இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்திற்குரிய முதன்மைச் சீடராவார். இராயப்பரின் பெயர் கிரேக்க மொழியில் பேத்ரோஸ் என்றும், ஆங்கிலத்தில் பீற்றர் என்றும், இலத்தீனில் பெத்ரூஸ் என்றும் வழங்கப்படுகிறது. இச்சொற்களுக்குப் பாறை அல்லது கல் என்பது பொருளாகும். பாறையைக் குறிக்கும் தெலுங்குச் சொல்லாகிய இராய் என்பதை வைத்து இவரை இராயப்பர் என வழங்குவர். இப்பெயரையே

இயேசு காவியத்தில் கண்ணதாசன் பயன்படுத்தியுள்ளார். இந்த இராயப்பர், உயிருள்ள கடவுளின் மகனாக இயேசுவைக் கண்டு, பரமண்டலத்துப் பரமபிதாவின் மைந்தர் என இயேசு கிறிஸ்துவைப் போற்றுவது குறிப்பிடத்தக்கதாகும்.

நல்ல ஆயன்

இந்த உலகில் வாழும் உயிர்களை ஆடுகளாகவும், அந்த ஆடுகளை மேய்க்கும் நல்ல ஆயனாகத் தன்னையும் இயேசு உருவகப் படுத்துகிறார். விவிலியத்தில் மிகவும் புகழ் வாய்ந்த கிறித்தவ சமயச் சொல்லாடலாக இந்த நல்ல ஆயன் என்ற கருத்தாக்கம், பின்வரும் இயேசு காவியப் பாடல்களில் மிகவும் சிறப்பாகக் கண்ணதாசனால் பாடப்பட்டுள்ளது.

ஆய னாக நானிருக் கின்றதால்
மேயும் ஆடு யாவும்என் பின்வரும்
தூய ஆயன் குரலொலி என்றுமே
மேய நாயகன் விண்ணொலி அல்லவோ ?

ஆடு அந்த ஆயனை அறிவதும்
தேடும் ஆயன் ஆட்டினை அறிவதும்
நாடு முற்றும் நடப்பவை அல்லவோ !
ஆடு கூலி யாள்தனை அறியுமோ ?

.. ..

நல்ல ஆயன் உயிரையும் கொடுக்கிறான்
சொல்லொ ணாப்பிற இனத்தையும் சேர்க்கிறான்
வல்ல தான மந்தையைக் காண்கிறான்
இல்லை வேறு ஆயனென் றாகிறான் !

மந்தை ஒன்று ஆயனும் ஒன்றுகாண்
விந்தை யல்ல வியப்பிதே அன்றுகாண்
எந்த ஆடும் என்னிடம் சேருமே
அந்த மேய்ப்பன் என்வடி வாகுமே **(பக்.240-241)**

என்னும் பாடலின் மூலம் உலக உயிர்கள் செய்த பாவங்களை எல்லாம் தன் மீது ஏற்றுக் கொண்டு, உயிர்களின் பாவங்களுக்காகத் தான் சிலுவை சுமந்த இரட்சகரான இயேசு கிறிஸ்துவின் பெருமையை நல்ல ஆயன் என்ற அடைமொழி கொண்டு கண்ணதாசன் போற்றுவதன் மூலம் தேவகுமாரனின் அருட்குணத்தை விவரிக்கின்றார்.

அருளாளர் இயேசு

தம் சீடர்களிடம் நற்கருணை செய்யும் அருளாளராக இயேசுபிரான் திகழ்கிறார். தன் உடலுக்கு அடையாளமாக அப்பத்தையும், தன் இரத்தத்திற்கு அடையாளமாகத் திராட்சை ரசத்தையும் சீடர்களுக்குத தருகிறார். பரமபிதாவிற்கு அர்ப்பணிக்க வேண்டிய தம் உடலையும் இரத்தத்தையும் சீடர்களுக்கு வழங்கிப் பாவத்தை மன்னிக்கும் உடன்படிக்கையைச் செய்து கொள்கிறார். இவ்வாறு சீடர்களிடம் நற்கருணையை இயேசுநாதர் நிறுவுகிற காரணத்தால் தான், தேவகுமாரனை அருளாளர் இயேசு எனக் கண்ணதாசன் போற்றிக் கொண்டாடுகிறார்.

தன்கையால் அப்பத்தை எடுத்துத் தந்தை
தனைத்தொழுது கூறாகப் பிட்டு வைத்து
என்கையில் உள்ளதுஎன் உடலம் தந்தேன்
எல்லோரும் உண்ணுங்கள் என்று ரைத்தார்!
தன்கையில் சீடரெல்லாம் வாங்கிக் கொள்ள
திராட்சைரசக் கிண்ணத்தைத் தந்த இயேசு
என்கையில் உள்ளதுஎன் இரத்தம் என்றார்
எல்லோரும் பருகுங்கள் என்று ரைத்தார்! (ப. 314)

தேவகுமாரனாக மண்ணுக்கு வந்த இயேசு, தம்மை இங்கு அனுப்பிய பரமபிதாவிடம் தாம் திரும்பிச் செல்ல வேண்டிய தருணம் நெருங்கி விட்டதாக உணர்ந்து, தமக்குப் பிறகும் இவ்வுலகில் நெடுங்காலம் வாழ்ந்து, தாம் அறிவுறுத்திய நெறிகளை உலக மக்களிடம் பரப்பப் போகும் தம் சீடர்களுக்காக அப்பமாகவும், திராட்சை இரசமாகவும் அளிக்கும் கருணையைப் போற்றி, அருளாளர் இயேசு எனக் கண்ணதாசன் கொண்டாடுவது கருதத்தக்கதாகும்.

தருமத்தின் தேவன்

எங்கும் எதிலும் எவரிடமும் எத்தகைய வேறுபாடும் கருதாமல் ஒழுகும் பெருநெறியைத் தருமம், நீதி, அறம், சால்பு, மேன்மை எனப் பெரியோர் வழங்குவர். இத்தகைய தரும தேவனாக, உலக உயிர்கள் அனைத்துக்கும் நியாயம் செய்கிற அறத்தின் நாயகனாகக் கண்ணதாசன் இயேசுவைக் காண்கிறார். பரமபிதாவிடம் பன்னிரு சீடர்களின் நல்வாழ்வுக்காகப் பின்வருமாறு இயேசு கிறிஸ்து வேண்டுவதாகக் கண்ணதாசன் காட்டுகிறார்:

பரிசுத்த தந்தை யேநீர்
 பரிசாக எமக்க ளித்த
வரிசையாம் நண்பர்க் காக
 வணங்கியே உம்மைக் கேட்பேன்
தரித்துநாம் ஒன்றாய் நிற்கும்
 தன்மைபோல் அவர்க ளுக்குள்
பிரித்திட இயலா ராகப்
 பெருமன்பு செலுத்தல் வேண்டும்! (ப.320)

தமக்காக ஒருநாளும் வாழாதவர் இயேசு கிறிஸ்து. உலக உயிர்களின் அமைதிக்காகவும், நிறைவுக்காகவுமே தம் வாழ்வை அர்ப்பணித்தவர் அவர். அனைவருக்கும் மகிழ்ச்சி நல்கும் வழியைக் காட்டி அருளுமாறு பரமபிதாவிடம் நாளும் வேண்டியவர் இயேசு. தமக்குப் பின்பும் நீடித்த புகழோடும் நிலைத்த பெருமையோடும் மண்ணுலகில் தம் சீடர்கள் வாழ்ந்து தம் நெறியைப் பரப்ப வேண்டும் என்பது அவரது விழைவாகும். பரமபிதாவும் தாமும் போலத் தம் சீடர்களும் அவர்களுக்குள் பிரிவற்றவர்களாகப் பேரன்பு கொண்டவர்களாகத் திகழ வேண்டும் என இயேசு கிறிஸ்து விரும்பியதாகக் கண்ணதாசன் காட்டுகிறார். தம் சீடர்களைச் சதிகாரர் வலைகளுக்கு ஆட்படாமல் காத்தருள வேண்டும் எனப் பரமபிதாவிடம் இயேசு கிறிஸ்து வேண்டுவதிலிருந்து, தனியறம் கூறிய தருமத்தின் தேவனாக இயேசு கிறிஸ்து திகழ்வதை அறியலாம்.

இரட்சகர் இயேசு

ஐந்து பாகங்களைக் கொண்ட இயேசு காவியத்தின் இறுதிப் பாடலாக இடம்பெறும் மங்களம் என்ற பாடலில், இயேசு பிறந்தமையால் இந்த உலகில் தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றதாகவும், சத்திய வேதம் நின்று நிலைத்ததாகவும் கண்ணதாசன் அறிவிக்கிறார். மங்களம் பாடி முடித்தல் என்ற தமிழ் மரபுக்கேற்ப இடம் பெற்றுள்ள இந்த இறுதிப் பாடலில் இயேசு காவியத்தைப் படிப்பவருக்கெல்லாம் பரமனின் வீடு கிடைக்கும் என்றும், நன்மைகள் கோடி தேடிவரும் என்றும் கண்ணதாசன் பயனுரைக்கின்றார். இதன் முடிவாக இயேசு கிறிஸ்துவை இரட்சகர் எனக் கண்ணதாசன் போற்றுவதைப் பின்வரும் பாடலால் அறியலாம்:

வாழிய சூசை வாழிய மரியாள்
 வாழிய இயேசுபிரான்!
ஆழியும் வானும் உள்ள வரைக்கும்
 வாழிய தேவபிரான்!

ஏழைகள் பாவிகள் இரட்சக ராக
எங்கும் நிறைந்தபிரான்!
ஆழ்தமி ழாலே அவர்புகழ் சொன்னேன்
துன்பங்கள் சேரவிடான்! (ப.399)

மண்ணிடை இயேசு மறுபடி வருவார்
என்பது சத்தியமே!
புண்கள் இருக்கும் வரையில் மருந்து
தேவை நித்தியமே!
விண்ணர சமையும் உலகம் முழுதும்
இதுதான் தத்துவமே!
எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே
இயேசுவை நம்புவமே! (ப. 399)

இயேசு கிறிஸ்து பெரும் செல்வந்தராகப் பிறக்கவில்லை. ஏழைத் தச்சனின் மகனாகத் தான் பிறந்தார். மாபெரும் மாளிகையில் தேவகுமாரனின் பிறப்பு நிகழவில்லை; மாட்டுக் கொட்டிலுக்குத்தான் பாக்கியம் கிடைத்தது. வறியோர், எளியோர், ஆதரவற்றோர், ஒடுக்கப்பட்டோர், துன்பப்படுவோர், தீராத நோயுற்றோர் போன்ற போராடும் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் இரட்சகராக இயேசு கிறிஸ்து வாழ்ந்து முடித்தமையைக் கண்ணதாசன் இரட்சகராக எங்கும் நிறைந்த பிரான் எனப் பெருமைமிகு அடைமொழி கொடுத்துப் போற்றுகிறார். விண்ணரசு அமையும் உலகம் முழுவதும் என்ற கிறித்தவத் தத்துவத்தை இம்மண்ணில் நினைவூட்டி, நிலைநாட்டிட அவதரித்த இரட்சகராக இயேசு கிறிஸ்துவைக் கண்ணதாசன் காட்டுகிறார்.

பகைவனுக்கு அருளும் தன்மை

இன்றைய வாழ்க்கையில் மனிதர்கள் பிறர் தமக்குச் செய்கின்ற தீங்குகளுக்குப் பழிக்குப் பழி வாங்குகின்ற நிலையுடன் இருக்கின்றனர். ஆனால் இயேசு காவியம் துன்பம் செய்தவர்களுக்கும் நன்மையே செய்ய வேண்டும் என்பதை,

உன்னொரு கன்னத்தில் இட்டால் - நீ
ஓங்கி அடித்து விடாதே!
இன்னொரு கன்னத்தைக் காட்டு - இது
என்றென்றும் ஞானத்தின் பாட்டு (பா.101)

எனக் கூறி விட்டு அதற்கான காரணத்தையும் அழகாகத் தன் கவிதையில் விளக்கியுள்ளார்.

அன்பு செய்தாருக்கு அன்பு - என்றால்
ஆனந்தம் அதிலென்ன உண்டு
அன்பற்ற பேருக்கு அன்பு - செய்தால்
அதுவன்றோ மானிடப் பண்பு (பா.102)

என்று மனிதன் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டிய காரணத்தைக் கூறுகிறார். ஒரு தவறும் செய்யாத தேவமைந்தனுக்கே துன்பம் வழங்கியதை,

முள்ளில் மகுடத்தைச் சூட்டினர் - ஒரு
மூங்கில் தடியையும் நாட்டினர் - அவர்
எள்ளி நகைத்தனர் சூழ்ந்தனர் - காறி
எச்சிலைத் துப்பினர் பாய்ந்தனர் - தம(து)
உள்ளங்க டுத்தவர் மண்டியில் - நின்று
யூதரின் ராஜனே என்றனர் - இயேசு
பிள்ளைமு கத்தினில் குத்தினர் - கொச்சைப்
பேச்சுக்க ளாயிரம் பேசினர்! (ப.351)

என்கிறார். இந்த அளவு துன்பத்தைக் கொடுத்தபோதும் இவர்கள் அறியாது செய்கிறார்கள் என்று கூறுகிறார். எனவே நாமும் பிறரிடம் அதாவது துன்பம் தருபவர்களுக்குக் கூட அருள் செய்ய வேண்டும் என்ற இயேசுவின் கொள்கையை இக்காவியம் கூறுகிறது என்கிறார்.

இறைவனை வழிபடும் முறை

பழங்காலந் தொட்டே மனிதர்கள் அவரவர்கள் தேவைக்காக இறைவனிடம் வேண்டிக் கொண்டு நோன்பிருக்கும் வழக்கம் காணப்படுகிறது. ஆனால் எவ்வாறு நோன்பிருக்க வேண்டும் என்று இயேசு கூறியதை கவிஞர் அவர்கள்,

நோன்பிருக் குங்கால் நோயாளி போல
வேட மணிந்து வேதனை காட்டிப்
போலித் தனத்தில் புகழ்பெற வேண்டாம்!
முகத்தைக் கழுவி முடியினைச் சீவி
அகத்துத் தூய்மையை முகத்தினில் காட்டி
அடுத்தவர் நோன்பை அறியா வண்ணம்
ஆண்டவர் மட்டுமே அறியும் வண்ணம்
இருந்தால் அதுதான் இகத்திலும் பரத்திலும்
சுகத்தைத் தரும்நான் சொன்னது உண்மை (பா.106)

எனக் குறிப்பிடுகிறார். நோன்பிருக்கும் போது நோயாளிகள் போல வேடமிடுவதைத் தவிர்க்க வேண்டும். அதுவே விண்ணிலும் மண்ணிலும் இன்பத்தைத் தரக் கூடியது என்கிறார்.

மேலும் இறைவனிடம் நாம் கொண்ட பக்தியை வெளிப்படுத்துவதற்காக ஆயிரம் பேரை அழைத்து வழிபடுவது சிறந்தது அல்ல. மாறாக இறைவனை எவ்வாறு வழிபட வேண்டும் என்பதை,

> **தாழிட்ட வீட்டினில் நின்று - பூசை**
> **தந்தைக்குச் செய்வதே நன்று**
> **நாளில் மறைந்துநிற் கின்ற - தந்தை**
> **நன்மையே செய்குவன் அன்று** (பா.103)

என்று பாடுகிறார். இறைவனை வழிபடும் முறையிலும், நோன்பிருக்கும் முறையிலும் எத்தகைய ஆடம்பரமும் இல்லாத அமைதியான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று கண்ணதாசன் அவர்கள் தன் கவிதையில் கூறுகிறார்.

நிலையான செல்வம்

பற்றும் பாசமும் நிறைந்த இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது என்பதை மனிதன் உணர மறுக்கின்றான். மறந்து விட்டு நிலையில்லாத செல்வத்தைத் தேடி அல்லும் பகலும் அலைகிறான். அச்செல்வம் நிலையற்றது என்பதை,

> **மண்ணில் சேர்க்கும் மாபெரும் பொருளை**
> **எண்ணரும் பூச்சிகள் எளிதில் அரிக்கலாம்**
> **கள்வர் திருடிக் கரைந்தும் போகலாம்**
> **செல்வம் அழிந்தும் சிதைந்தும் போகலாம்** (பா.107)

என்னும் கவிதை அடிகளால் பாடுகிறார். இப்படிப்பட்ட நிலையில்லாத செல்வத்தை விரும்புவதை விட்டு விண்ணில் செல்வத்தைச் சேருங்கள். ஏனென்றால் அந்த வியப்பிற்குரிய செல்வம்தான் குறையாது பெருகும். அச்செல்வம் எதுவென்றால் அன்பு நிறைந்த வாழ்க்கை, போலியான ஆடம்பரமற்ற தன்மை, சிறந்த பண்புகளுடன் கூடிய வாழ்வு. இது போன்ற இயேசு கிறிஸ்துவின் போதனைகளைக் கடைப்பிடித்து வாழ்கின்ற மனிதனே விண்ணில் செல்வம் சேர்த்து வைப்பவன் என்று இயேசு காவியம் கூறுகிறது.

கவிதையாக்கம்

விவிலியச் செய்திகளை எளிமையானப் பாடல்களால் மக்கள் மனதில் இடம்பிடிக்கச் செய்து விடுகிறார். சான்றாக,

விண்ணரசின் செய்தியினை உணரா தானே
வீதியிலே விதைக்கின்ற விதைபோல் ஆவான்!
கண்ணிறைந்த அவர் மொழியை ஏற்றும் ஏலான்
கல்லினிலே விதைக்கின்ற விதைபோல் ஆவான்!
எண்ணத்தில் இவைஇருந்தும் மாயை மிக்கோன்
எப்போதும் முள்விழுந்த விதைபோல் ஆவான்!
நண்ணுமிதை முற்றிலுமே பற்றிச் செல்வோன்
நல்லநிலம் தனில்விதைத்த விதையே ஆவான்! (ப.136)

என்னும் பாடலைச் சுட்டலாம். கெட்ட குமாரன் கதையை, ஊதாரிப் பிள்ளை என்னும் தலைப்பில் நயத்துடன்,

ஒருதந்தை இருமக்கள் ஊர்முழுதும்
சொத்து
ஒருபிள்ளை அவர்களிலே மணியான
முத்து!
சிறுபையன் ஊதாரி தேறாத
நெத்து
தீராத மழையினிலே கரையேறும்
வித்து! (ப.209)

எனத் தொடங்குகிறார். நிகழ்வுகள் எளியவர் மனதிலும் படியும் வண்ணம் பாங்குறப் பாடல்களைப் பாடியிருப்பது நம்மை வியக்கச் செய்கிறது. மனிதர்கள் அனைவரும் தத்தம் பண்புகளில் சில குறைகள் உடையவர்களாகத் தான் இருக்கிறார்கள். இருந்தாலும் பிறருடைய குறைகளைப் பெரிதாக நினைக்கிறார்கள். அதனைப் பற்றிப் புறம் கூறுகிறார்கள். அவ்வாறு வாழ்வதைக் கைவிட வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கூறியதை அழகாகத் தம் காவிய அடிகளில்,

உமது கண்ணில் உத்தரம் கிடக்க
சோதரன் கண்ணில் துரும்பைப் பார்ப்பதா?
சொந்தக் கண்ணைத் துடைப்பீர் முன்னே
அந்தக் கண்ணை அப்புறம் பார்க்கலாம். (ப.109)

எனக் கூறியுள்ளார். எனவே மனிதர்கள் பிறர் குறைகளைக் காணும் தன்மையைக் கைவிட வேண்டும்.

தாலாட்டுப் பாடலும், கையறுநிலைப் பாடலும்

உலகத்தை மீட்க மீட்பர் பிறந்தவுடன் அழகான தாலாட்டுப் பாடலைக் கண்ணதாசன் பாடுகிறார்.

சோதிமணிப் பெட்டகமே சுடரொளியே
யூதருக்கு
ஆதி மகனாய்ப் பிறந்த அருந்தவமே
தாலேலோ (ப.25)

என்று பாடுகிறார். மேலும் இயேசு கிறிஸ்துவை மருத்துவனே, அனைவரையும் வாழ வைக்க வந்தவனே என்றெல்லாம் பாடுகிறார். பழைய ஏற்பாட்டில் இறைமகனின் வருகை குறித்த செய்திகளைத் தொடர்புபடுத்திப் பாடியிருக்கிறார்.

அந்நாளில் நூலோர்கள் ஆன்றோர்கள்
பெரியோர்கள்
சொன்னபடி மீட்பதற்கு தோன்றி வந்தாய்
தாலேலோ (ப.25)

என்றும்,

இன்னின்ன காலமெல்லாம் இவ்வாறு
நடக்குமென
சொன்ன இறைவாக்கினர்க்குத் தொடர்பான
உதாரணமே (ப.26)

என்றும் பாடுகிறார். மேலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தாலாட்டுப் பாடலில் தன்னை ஏழையாகவும் இயேசு கிறிஸ்துவைச் செல்வனாகவும் கூறுகிறார். இத்தாலாட்டுப் பாடல் நாட்டுப்புறப்பாடல் சாயலில் அமைந்து நம்மை மகிழ வைக்கிறது.

இவ்வளவு அழகாகத் தாலாட்டுப் பாடியவர் அவலத்தையும் அழகாக வெளிப்படுத்துகிறார். 'கையறு நிலை' என்றால் 'செயலற்ற நிலை' என்பார்கள். யூதாசு இயேசுவைக் காட்டிக் கொடுத்த பிறகு, தான் செயலற்ற தன்மையை உடையவனாகி நினைக்கிறான். தன்னைத் தானே நொந்து கொள்வதை,

தாய் வயிற்றில் பிறந்த உடல் முழக்கயிற்றில் போகட்டும்
சாவே வாராய்!

நாய் வயிற்றை வளர்ப்பது போல் நான் வளர்க்க
நினைப்பதெல்லாம்
நான்று கொள்வேன்!
பேய்களென வாழ்வோர்க்குப் பாடமென ஆனேன் நான்
பின்னால் என்னை
ஒய்வுடைய நேரமெல்லாம் வசை பாடி மகிழட்டும்
உலகந் தானே! (ப.355)

என்று பாடுகிறார்.

இயேசு தன் ஆவியை இறைவனிடம் ஒப்படைத்த நிமிடங்கள் இயற்கையின் செயலற்ற நிலையைப் பற்றி அழகாகப் பாடுகிறார்.

நீலவானில் இடியெழுந்து சூரியன்ம றைந்தது
நேரில்நின்ற பாறையோடு பூமியும்வெ டித்தது
கோலமிக்க கல்லறைகள் கூவியேபி ளந்தன
கோவிலில்இ ருந்தசீலை பாதியாய்க்கி ழிந்தது

பூவிருந்த பொன்மரங்கள் போய்விழுந்து பட்டன
பூமிதன்னை வானகத்து மீனினங்கள் தொட்டன
காவலர்கள் மெய்சிலிர்த்துக் கைநடுங்கி நின்றனர்
தேவமைந்தன் என்றசேதி உண்மையென்று
கண்டனர் (ப.37)

என்று இயற்கையின் தன்மையைப் பற்றி அழகாகப் பாடுகிறார். தேவ அன்னை தன் மகனின் நிலையைப் பார்த்துச் செயலற்று இருப்பதை,

தாயிருக்கப் பிள்ளை சாகும் சங்கடங்கள் கொஞ்சமோ
சாட்டையாலே வேட்டையாடி சாவதென்றால்
தாங்குமோ?
வாயிருந்தும் தேவ அன்னை மௌனமாக நின்றனள்
வாழ்வு தாழ்வை தெய்வம் பார்க்கும் என்பதை
அறிந்தனர் (ப.371)

எனப் பாடுகிறார். இவ்வாறு துன்ப உணர்வையும் தன் கவித்திறமையால் அழகாக விளக்குகிறார்.

வருணனைகள்

இயேசு காவியத்தைப் படிக்கும் போது சிறந்த இலக்கியங்களைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

சங்க இலக்கியச் சாயல் ஆங்காங்கே வருணனைகளில் காணப்படுகின்றது. மரியம்மையை அழகின் தெய்வம் என்று கூறி,

நிலவெனும் வதனம் நெற்றி
நெடுமழை அனைய கூந்தல்
மலரெனும் கண்கள் கைகள்
மரியம்மை அழகின் தெய்வம் (ப.10)

என வருணிக்கிறார். இயேசுவின் முதல் புதுமை கானாவூர் திருமணத்தில் நடந்தது. அந்தத் திருமண வீட்டில் இருந்த பெண்களை,

முன்னலங் காரம் என்ன
முகப்பலங் காரம் என்ன
பின்னலங் காரம் என்ன
பெருகிய மாதர் யாரும்
தன்னலங் காரம் காட்டும்
தனியலங் காரம் என்ன (ப.63)

என்று அழகாக வருணிக்கும் இப்பாடல் இயைபு என அமைந்த அழகான வருணனைப் பாடலாகும்.

இலக்கிய நயம்

கண்ணதாசன் எழுதிய இக்காவியத்தில் நயங்கள் பல நிறைந்து காணப்படுகின்றன. எதுகை, மோனை, இயைபு மூன்றும் ஒருங்கே அமைந்து காவியம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இசையுடன் பாடுவதற்கு ஏற்றபடி பற்பல இடங்கள் இக்காவியத்தில் சந்தநயத்துடன் கவிஞர் அமைத்திருக்கிறார் என்றே கூறலாம். இயேசு சொற்பொழிவு செய்ததை இடையிடையே அந்தாதி நயத்துடன்,

ஊனுருக உயிருருக உள்ளமெல்லாம்
நெக்குருக
வானுருகும் சொற்பொழிவை வள்ளலார்
செய்தாரே!
வானுருகும் சொற்பொழிவை வள்ளலவர்
செய்கையிலே
தானுருகி அங்கேயே தாய்வந்து
நின்றாளே

தானுருகி அங்கேயே தாய்வந்து
நிற்கையிலே
தம்பியென சிலபேரும் தான் வந்து
நின்றனரே (ப.135)

என பாடியிருக்கிறார். இப்பாடல் சந்த நயத்துடன் அமைந்திருக்கிறது. ஊதாரிப் பிள்ளை என்ற தலைப்பில் தந்தையின் அன்பைப் புரிந்து கொள்ளாத மைந்தன் படுகின்ற பாட்டை அழகாக நயத்துடன் தம் கவிதை அடிகளில் விளக்கியுள்ளார்.

பன்றிக்குத் தருகின்ற உணவேதான்
உணவு
பாவிக்கு நாளெல்லாம் தந்தையவன்
கனவு
அந்நேரம் தெளிந்ததுகாண் அவனுடைய
அறிவு
அப்பாவின் கால்களிலே விழுகின்ற
நினைவு (ப.210)

என இலக்கிய நயம் நிறைந்த பாடல்கள் பல இக்காவியத்தில் காணப்படுகின்றன.

போலி ஆடம்பரங்கள்

மனிதன் தன் வாழ்க்கையையே போலியாக வாழ்கிறான். தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் ஆடம்பரத்தை வெளிக்காட்டுகிறான். இவ்வுலகில் மனிதர்கள் பிறருக்குச் செய்கின்ற உதவியை விளம்பரப்படுத்துகிறார்கள். அதன் மூலமாகத் தனக்குப் புகழ் வர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் செய்கின்ற உதவியினால் எப்போதும் பயனில்லை என்று கூறுகிறார்.

ஊரில் மதிப்புற வேண்டி - சில
உதவிகள் செய்பவன் ஆண்டி
வாரிஎதைக் கொடுத் தாலும் - அதை
மறைத்துக் கொடுப்பவன் மன்னன்! (பா.102)

என்னும் பாடலில் புகழை விரும்பாமல், வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாது இருக்கட்டும் என்ற இயேசு கிறிஸ்துவின் பொன்மொழிக்கு இணங்க மனிதன் வாழ்ந்தால் அவன் மன்னன் போன்றவன் என்று கண்ணதாசன் கூறுகிறார்.

இறவாக் காவியம் படைத்த கண்ணதாசன் தன் கவிச்சிறப்பால் இக்காவியத்தின் மூலம் இறவாத கவிஞராகவும் இருக்கிறார். நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டு இயேசுவின் போதனைகளை அழகாக விளக்கியுள்ளார். எதுகை, மோனை, இயைபு, சந்த நயம் இவையெல்லாம் இடையிடையே கலந்து காணப்படும் கதம்பமாக இவ்விலக்கியம் திகழ்கிறது. நீதிக்கருத்துக்கள் அதாவது மனித வாழ்வில் பின்பற்ற வேண்டிய ஒவ்வொரு நீதிகளும் அழகாக தன் கவித்திறமையால் சிறப்பாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

15. அருட்காவியம்

கிறித்தவக் காப்பியங்கள் பல எளிமையும் கவிதை நயமும் உடையனவாக விளங்குகின்றன. அவ்வரிசையில் அருட்காவியமும் ஒன்றாகும். அருள்நாதராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பாடுவதால் இக்காப்பியத்திற்கு அருட்காவியம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இக்காவியத்தின் பாடல்கள் அனைத்தும் வெண்பாக்களால் ஆனது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் வரலாறு

சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டத்திலுள்ள தேவண்ணகவுண்டனூர் என்னும் ஊரில் பாப்பண்ணன்-பெரியநாயகியம்மாள் தம்பதியினருக்கு 1942 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் நாள் மதலைமுத்து எட்டாவது மகனாகப் பிறந்தார். இவர் எட்டாவது மகனாகத் தோன்றிய காரணத்தால் வேண்டா வெறுப்பாக வளர்க்கப்பட்டார். கல்வி அறிவு இல்லாத குடும்பத்தில் பிறந்த இவர் சேலத்திலுள்ள சிறுமலர் உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புவரைப் பயின்றார்.

1963-65இல் இடைநிலை ஆசிரியப் பயிற்சியைப் பெற்று 1966 முதல் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றினார். தமது நண்பர் காவேரியப்பன் அவர்களின் தூண்டுதலினால் தமிழ் மீது ஆர்வம் கொண்டு எம்.ஏ., எம்.எட்., ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

இவர் 1967ஆம் ஆண்டு ஆரோக்கியமேரி என்னும் அம்மையாரைத் திருமணம் புரிந்தார். இத்தம்பதியருக்கு இரண்டு மகனும் ஒரு மகளும் குழந்தைச் செல்வங்களாவர். இவரது மூத்த மகன் அருள்தந்தை வின்செண்ட் பாபு. இவர் ஆப்பிரிக்காவில் வேதபோதகராகப் பணியாற்றி வருகிறார். இரண்டாவது மகன் பெயர் தமிழ்ச்செல்வன். இவர் பெங்களூருவிலுள்ள மென்பொருள் தொழிலகத்தில் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார். கடைசி மகள் பெயர் பூங்குழலி. இவர் கணினி படிப்பில் முதுகலைப் பட்டம் பெற்று தனியார் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

பா. மதலைமுத்து எளிமையான தோற்றம் உடையவர். பழகுவதற்கு இனிமையானவர். தமிழ் மீது தாழாத

ஆசையுடையவர். தம் பணிக் காலத்தில் வெளிப்படையாக உண்மைக்காக வாதிட்ட காரணத்தால் பல்வேறு பள்ளிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இவ்வாறு நேர்மையாகப் பல்வேறு பள்ளிகளில் தமிழ்ப்பணியாற்றி 2000ஆம் ஆண்டு ஆர்.வி. அரசு மேல்நிலைப் பள்ளியில் பணி ஓய்வு பெற்றார். பிறந்தோம், இறந்தோம் என்றில்லாமல் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் இவரிடம் இயல்பாகவே இருந்தது. விவிலியத்தை மையப்பொருளாக்கி வெண்பாவில் படைத்திட எண்ணம் உடையவராகக் காணப்பட்டார். இச்சூழலில் திருச்சியிலுள்ள தூய வளனார் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் முனைவர் ச.சாமிமுத்து அவர்களின் தொடர்பு கிடைக்கப்பெற்று ஊக்கம் பெற்றார்.

அருட்தந்தை எரோணிமுசு அவர்கள் விவிலிய ஆசானாகி விவிலிய முக்கிய நிகழ்வுகளை விளக்கியதோடு அருட்காவியம் படைத்திட ஏதுவாக விவிலிய விளக்க நூல்களும், சார்பு நூல்களும், துணைநூல்களும் கிடைக்குமாறு செய்து உன்னால் முடியும் தம்பி என உற்சாகப்படுத்தினார். மேலும் அருட்தந்தை அமுதன் அவர்களின் பார்வையில் இப்படைப்பு பட்டு ஆலோசனையைப் பெற்று பெரும் கவிஞர்கள் தயக்கம்காட்டும் வெண்பாவை, மரபுக்கவிதைகள் மாண்டுவரும் இக்காலக் கட்டத்தில் மரபுக்கவிதைக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் வரலாற்று நாயகராம் இயேசு கிறிஸ்துவின் அருட்காவியத்தை 1050 இன்னிசை வெண்பாக்களால் பாடியுள்ளார்.

மட்டுமன்றி கற்றோர் அனைவரும் நல்லோர் இலர் என்ற காரணத்தால் பல்வேறு துறைகளில் வளர்ந்துள்ள ஊழல்களையும், சுரண்டல்களையும் மாணவர்களுக்குச் சுட்டிக்காட்டி மாணவர்களால் மட்டுமே இவ்வுலகை நேர்நிறுத்தக் கூடுமென எண்ணி அவர்களையே மையப் பொருளாக்கி விடியா வெள்ளி என்னும் நூலைப் படைத்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது. இந்நூல் 2009 ஆம் ஆண்டு வெளியானது. இந்நூலில் ஆசிரியர் 43 பல்வேறு தலைப்புகளில் தம் மன உணர்வுகளை வெளிப்படுத்துகிறார். சான்றாக, வயதான காலத்தில் பெற்றோர்களை முதியோர் இல்லத்தில் கொண்டு விடுபவர்களைப் பார்த்து,

முதியோரின் இல்லமதில் பெற்றோரைத் தள்ளி
கதியிலார் தன்மைபோல் கண்கலங்க வைத்த

மதியிலா மண்மைந்தா! மண்மகள் தூற்ற
மதிமயங்கி நிற்பதேனோ சொல்? **(பா.100)**

எனப் பாடுகிறார்.

நூல் அமைப்பு

இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை விளக்கும் அருட்காவியம் இன்பப் பொழிவுறு காண்டம், புரட்சிப் பொழிவுறு காண்டம், துன்பப் பொழிவுறு காண்டம் என்னும் மூன்று காண்டங்களாகப் பகுக்கப்பட்டு 1050 வெண்பாப் பாடல்களால் படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காண்டமும் ஏழு சாரல்களாகப் (காதை) பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சாரலும் ஐந்து உட்தலைப்புகளைக் கொண்டுள்ளதாக அமைந்துள்ளது.

1. இன்பப் பொழிவுறு காண்டம்

முதலாவதான இன்பப் பொழிவுறு காண்டமானது காட்சியுறு சாரல், அன்புக் கசிவுறு சாரல், தோற்றமுறு சாரல், இன்புறு சாரல், இடருறு சாரல், ஞானமுறு சாரல், சோதனை மீட்புறு சாரல் என்னும் ஏழு பகுப்புகளாகப் பகுக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு சாரலும் ஐந்து உட்தலைப்புகளைக் கொண்டது. காட்சியுறு சாரல் என்னும் பகுதியில் காட்சியுறு சாரல், நகர் வளம், மக்கட்படி நிலையும் படுதுயரும், செக்கரியாவின் இறைக்காட்சி, மாமரியின் இறைக்காட்சி என்னும் உட்தலைப்புகள் இடம்பெற்றுள்ளன. அன்புக் கசிவுறுசாரல் என்னும் பகுதியில் மாமரியும் எலிசபெத்தும், மாமரியின் வாழ்த்துப்பா, மக்களின் மருட்சி, ஊமை நீங்கல், செக்கரியாவின் சான்று ஆகிய உட்தலைப்புகள் உள்ளன. தோற்றமுறு சாரல் என்னும் பகுதியில் யோசேப்பின் கலக்கம், யோசேப்பின் தெளிவு, மக்கட் படுதுயர், மீட்பரின் தோற்றம், மீட்பின் அறிவிப்பு என்னும் உட்தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. இன்புறு சாரல் என்னும் பகுதியில் அன்னையின் அரவணைப்பு, தாலாட்டு, மாண்புறு ஞானியர், மீட்பர் அர்ப்பணம், இறைவாக்கு என்னும் உட்தலைப்புகள் உள்ளன. இடருறு சாரல் என்னும் பகுதியில் கொடுங்கோவின் கொடுமனம், இறை எச்சரிக்கை, இரத்தக் களரி, ஏரோதின் மறைவு, ஆசானிடர் என்னும் உட்தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. ஞானமுறு சாரல் என்னும் பகுதியில் அன்னையே

ஆசான், வல்லுநரிடை சொற்போர், யோசேப்பின் மறைவு, யோவானின் எரிசினம், கேள்விக்கணை என்னும் உட்தலைப்புகள் உள்ளன. சோதனை மீட்புறு சாரல் என்னும் பகுதியில் அன்பு யோர்தனில் கரைதல், முப்பெருஞ் சோதனைகள், முக்கிய சீடரின் தெரிவு, கானாவூர் மன்றல், அரிமத்தியா ஊரினன் என்னும் உட்தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. இன்பப் பொழிவுறு காண்டம் 270 வெண்பாக்களால் ஆனது.

2. புரட்சிப் பொழிவுறு காண்டம்

இரண்டாவதான புரட்சிப் பொழிவுறு காண்டமானது பெண்ணடிமை தகர்வுறு சாரல், பகிர்வுறு சாரல், மூடப்பழக்கம் முறிபடு சாரல், அன்பதிர்வுறு சாரல், மனமாற்றமுறு சாரல், பற்றுறு சாரல், இறையரசு நிறுவுறு சாரல் என ஏழு பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சாரலும் ஐந்து உட்தலைப்புகளாலானது. பெண்ணடிமை தகர்வுறு சாரல் என்னும் பகுதியில் சமாரியப் பெண், இரத்தப்போக்குடைய பெண், விபச்சாரப் பெண், ஊர் சுவைத்த ஊரறி பாவை, மணவிலக்கு என்னும் உட்தலைப்புகள் உள்ளன. பகிர்வுறு சாரல் என்னும் பகுதியில் பணிப் பகிர்வு, யோவானின் துன்பப் பகிர்வு, அப்பப் பகிர்வு, அரியவழிப் பகிர்வு, விசுவாசப் பகிர்வு, என்னும் உட்தலைப்புகள் உள்ளன. மூடப்பழக்கம் முறிபடு சாரல் என்னும் பகுதியில் கதிர் கொய்தல், சூம்பிய கையினன், உண்ணும் முறை, இறந்த மகன், குட்ட நோயாளன் என்னும் உட்தலைப்புகள் உள்ளன. அன்பதிர்வுறு சாரல் என்னும் பகுதியில் ஏசுவின் சகோதரர், பாடுகளின் முன்னறிவிப்பு, மலைப்பொழிவு, நல்லாயன், நல்ல சமாரியன் என்னும் உட்தலைப்புகள் இடம்பெற்றுள்ளன. மனமாற்றமுறு சாரல் என்னும் பகுதியில் ஏரோது, செல்வச் செழிப்புள வாலிபன், சக்கேயு, இலேவியர், ஊதாரி மைந்தன் என்னும் உட்தலைப்புகள் உள்ளன. பற்றுறு சாரல் என்னும் பகுதியில் பேதுரு, யாவீர், பிறவிக் குருடன், நூற்றுவர் தலைவர், கானானியப் பெண் என்னும் உட்தலைப்புகள் உள்ளன. இறையரசு நிறுவுறு சாரல் என்னும் பகுதியில் இறையரசில் யார் பெரியோன்?, இறையரசும் பட்டுச் சிறாரும், இறையரசும் திராட்சைத் தோட்டமும், இறையரசும் நையாண்டியும், இறையரசும் நல்விருந்தும் என்னும் உட்தலைப்புகள் உள்ளன. புரட்சிப் பொழிவுறு காண்டத்தில் 440 வெண்பாக்கள் உள்ளன.

3. துன்பப் பொழிவுறு காண்டம்

மூன்றாவதான துன்பப் பொழிவுறு காண்டமானது சதியுறு சாரல், விழிப்புணர்வுறு சாரல், பிடிபடு சாரல், வதைபடு சாரல், கொலைபடு சாரல், காவலுறு சாரல், மாண்புறு சாரல் என்னும் ஏழு சாரல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சாரலும் ஐந்து தலைப்புகளைக் கொண்டுள்ளது. சதியுறு சாரல் என்னும் பகுதி ஒளிவிழா, இலாசரின் மாண்பு, சதியாலோசனை, கயபாவின் சூழ்ச்சி, விருந்தேற்பு என்னும் உட்தலைப்புகள் உள்ளன. விழிப்புணர்வுறு சாரல் என்னும் பகுதியில் ஆரவாரப் பவனி, சீசருக்கு வரி, வாக்களித்த இறையரசு, விவேகமிலாத் தோழியர், பாரக வீழ்ச்சி என்னும் உட்தலைப்புகள் உள்ளன. பிடிபடு சாரல் என்னும் பகுதியில் மும்முத்தப் பரிசு, ஈற்றுணவு, மும்முத்தக் காட்சி, பேதுருவின் பேதமை, இரத்த நிலம் என்னும் உட்தலைப்புகள் இடம்பெற்றுள்ளன. வதைபடு சாரல் என்னும் பகுதியில் முன் விசாரணை, ஏரோதின் எள்ளல், பிலாத்துவின் நப்பாசை, கற்றூணில் வதைபடல், முள்முடி என்னும் உட்தலைப்புகள் உள்ளன. கொலைபடு சாரல் என்னும் பகுதியில் கொலைபடு தீர்ப்பு, கொலைக்களப் பயணம், வறுமைக் கோலம், எள்ளலுரை, அன்பருவி என்னும் உட்தலைப்புகள் உள்ளன. காவலுறு சாரல் என்னும் பகுதியில் என்புகள் முறிபடாமை, அஞ்சியோர் அஞ்சாமை, புண்ணுறு புண்முகம், நல்லடக்கம், காவலுறு கல்லறை என்னும் உட்தலைப்புகள் உள்ளன. மாண்புறு சாரல் என்னும் பகுதியில் சாவுக்குச் சாவுமணி, மாண்புற்ற மதலேன்மரி, வழிப்போக்கரின் மாண்பு, சீடர்களின் மாண்பு, விண்ணேற்பு என்னும் உட்தலைப்புகள் இடம்பெற்றுள்ளன. துன்பப் பொழிவுறு காண்டத்திலுள்ள பாடல்களின் எண்ணிக்கை 340 ஆகும்.

நூலின் யாப்பமைதி

அருட்காவியத்தின் மூலம் ஆசிரியரின் இலக்கணப் புலமையை அறிந்துகொள்ள முடிகின்றது. இக் காப்பியத்திலுள்ள பாடல்கள் ஈற்றடி முச்சீராய், ஏனைய அடிகள் நாற்சீராய், இரண்டாம் அடி தனிச்சொல் பெறாமல் வந்த நேரிசை ஆசிரியப்பா வகையினைச் சார்ந்தனவாகும். மேலும் இக்காப்பியப் பாடல்கள் அனைத்தும் ஒரு விகற்பத்தால் (நான்கு அடிகளிலும் ஒரே எதுகை) அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

விளக்கக் குறிப்பு

அருட்காவியத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களில் காணலாகும் சில சொற்கள் தொடர்பான விளக்கங்களை ஆசிரியர் ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் தந்துள்ளமை நூலைப் படிப்பவர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக விளங்குகிறது. திருக்குறள், தேம்பாவணி ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள சொற்களைப் பயன்படுத்தும்போது அது பற்றிய குறிப்புகளைத் தருகிறார். மேலும் கடினமான சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்துள்ளார். மட்டுமன்றி, சில சொற்களுக்கு விவிலியத்தில் இடம்பெற்றுள்ள பகுதிகளையும் சுட்டிக் காட்டியுள்ளார். இம்முறை நூலிற்குச் சிறந்த அணிகலனாகத் திகழ்கின்றது.

வருணனை

காப்பியங்களில் வருணனை இன்றியமையாத உறுப்பு. ஆனால் எல்லா கிறித்தவக் காப்பியங்களிலும் வருணனை அமையவில்லை என்பது நோக்கத்தக்கது. காரணம் என்னவெனில், விவிலியக் கருத்துகளுக்கு ஆசிரியர் முக்கியத்துவம் அளிப்பதால் வருணனை, அணிநயம், பிற இலக்கியத் தாக்கம் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்துவதில்லை. அருட் காவியம் ஆசிரியர் தமது காப்பியத்தின் முதல் காண்டத்திலுள்ள நாட்டு வளம், நகர வளம் ஆகிய பகுதிகளில் சில வருணனைகளைப் பயன்படுத்தி யுள்ளார். ஒவ்வொரு பாடல்களிலும் பத்துப் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. யோர்தான் ஆற்றின் வளத்தினை,

> **நலமெலா மீய குளமெலாம் மேவி**
> **சலசல வென்று மதகெலாம் தாவி**
> **நிலவளம் நல்க நிறைபுகழ் யோர்தான்**
> **நிலமெலாம் பாய்ந்த தணைத்து** (பா.6)

என்னும் இப்பாடலில் வருணிக்கிறார். நலங்கள் அனைத்தையும் தருவதற்காக குளங்கள் அனைத்தொடும் சேர்ந்து மதகு தொறும் சலசலவென்று தாவி வந்து, நிறைந்த புகழ் மிக்க யோர்தான் ஆறு நிலமெல்லாம் பாய்ந்து சேர்ந்தது என்னும் வருணனை நயமிக்கது. மேலும் பெண்களின் கண்களைக் கயல்மீன்களுக்கு வருணனை செய்வது இயல்பு. இங்கு, பெண்களின் கண்கள் கயல் மீன்களைப் போலத் தோன்றியதால் வயலில் களையெடுக்கும்போது பெண்களின் கண்களைப் பார்த்து சிறு மீன்கள் துள்ளிக் குதித்தன என்று வருணனை செய்கிறார்.

கயலார்தம் கூந்தல் சரியக் குனிந்து
உயர்களையை அன்னோர் களைய விழிகள்
கயல்களெனத் தோன்ற அயிரை திரளோ
அயர்ந்தனவே துள்ளிக் குதித்து (பா.8)

என்னும் இப்பாடலில் தங்கள் கூந்தல் சரிய, மீன் போன்ற கண்களைக் கொண்ட பெண்கள் குனிய, அவர்களுடைய விழிகள் மீன்கள் போலத் தோன்றுவதைக் கண்டு அயிரை மீன் கூட்டம் துள்ளிக் குதித்தது என வருணிக்கும் திறம் போற்றத்தக்கது. இதைப்போன்று எருசலேம் நகரத்தின் வளத்தினை,

மஞ்சுறங்கும் ஆலயநல் உச்சிதனைச் சொந்தமெனத்
தஞ்சமான வானரங்கள் மஞ்சுதனைத் தட்டியே
மஞ்சமாக்கித் துஞ்சுதற்கு மந்திகளைக் கொஞ்சியே
கெஞ்சுவதைக் கண்ணுயர்த்திக் காண் (பா.14)

என்னும் பாடலில் வருணனை செய்கிறார். மேகங்கள் உறங்குகின்ற உயர்ந்த ஆலய உச்சியைத் தனது சொந்தமெனக் கொண்டு தஞ்சமடைந்த ஆண் குரங்குகள், மேகத்தைத் தட்டித் தூங்குவதற்குரிய படுக்கையாக அமைத்து, பெண் குரங்குகளை உடன் வந்து தங்கும்படி கொஞ்சி கெஞ்சுவதைக் கண்ணுயர்த்திக் காண்பாயாக என்று வருணனை செய்கிறார்.

உவமை

காப்பிய ஆசிரியரின் புலமைக்குச் சான்றுகளாக உவமைகள் உள்ளன எனலாம். ஒரு சிறந்த காப்பிய ஆசிரியன் தமது காப்பியத்தில் பலவிதமான இலக்கிய உத்திகளையும், சுவைகளையும், நயங்களையும் வெளிப்படுத்துவான். அவ்வகையில் மதலைமுத்து தனது காப்பியத்தில் ஏராளமான உவமைகளைக் காப்பியத்தின் சிறப்புக்காக எடுத்தாண்டுள்ளார். சான்றாகச் சில உவமைகள் பின்வருமாறு:

1. இன்றுள்ள பொல்லா அரசியல் கும்பல்போல் (பா. 24)
2. ஊரகமே போற்றிடப் பொங்கிடும் ஊருணிபோல் (பா.68)
3. பாழ்நிலத்தில் பைங்கூழைப் பார்த்தாற்போல் (பா.71)
4. தொன்னிதியை மண்ணகத்தே பெற்றாற்போல் (பா.85)
5. வாவியிலே ஊற்றெடுத்த தெள்ளியநல் ஊருணிபோல் (பா.144)
6. வெற்றுளத்தை நல்லாவி பொங்கி நிறைத்தாற்போல் (பா.225)

7. பிந்தியோர் முந்தியோடி பந்தயத்தில் முந்தினாற்போல் (பா.256)
8. உள்ளங்கை நெல்லிக் கனிபோல் (பா.280)
9. செம்மறியை ஓநா யிடையே அனுப்பினாற்போல் (பா.341)
10. புள்ளினம்தம் குஞ்சுகளைப் புல்லியே காத்தற்போல் (பா. 836)
11. வங்கக் கரையினிலே தங்கமணல் கண்டோர்போல் (பா.838)
12. பட்டினியால் வாடலுறு நால்வயிறு ஓநாய்போல் (பா.923)
13. சூழ்வளியில் சிக்கியுள ஆழ்கடல் நாவாய்போல் (பா. 955)

மேற்குறிப்பிட்ட உவமைகள் மட்டுமல்லாது இன்னும் ஏராளமான உவமைகள் காப்பியம் முழுவதும் நிறைந்து காணப்படுகின்றன.

கையறுநிலை

இயேசு கிறிஸ்துவின் மீது பழி சுமத்தி, துன்புறுத்தி அவரைச் சிலுவையில் அறைவதற்காகக் கொல்கதா மலைக்கு அழைத்துச் செல்கின்றனர். இப்பகுதியிலுள்ள பல பாடல்களும் கையறுநிலையில் உள்ளனவாக அமைந்திருப்பது ஆசிரியரின் கவித்திறனுக்குச் சான்றாக அமைந்துள்ளன. இயேசு நாதர் கால்கள் தள்ளாட சிலுவையைச் சுமந்து மலை மேல் ஏறிக்கொண்டிருக்கும் போதும், அவரைத் துன்புறுத்துவதாக விவரிக்கும் கீழ்க்காணும் பாடல் கையறுநிலைப் பாடலாக உள்ளது:

> **வீழ்ந்திட்ட மாபரனை வீணராம் வீரர்கள்**
> **சூழ்ந்தாங்கு சாட்டையால் சூரர்போல் மாறிமாறி**
> **காழ்ப்புற்றுக் கைநோவக் காட்டமுடன் வாட்டினரே**
> **வீழ்ந்திட்டோர் மீண்டெழா வாறு** (பா.946)

இயேசு கிறிஸ்து துன்பப்படுவதை நேரில் பார்த்த அவரின் தாயார் மரியாள் கையறுநிலையில் துன்புறுவதை,

> **பத்துமாதம் தன்வயிற்றில் பத்திரமாய்த் தான்சுமந்த**
> **நித்தியனாம் நித்தியா நந்தமீயும் புத்திரனைச்**
> **சத்துருக்கள் வாட்டுவதைத் தம்கணால் கண்டயர்ந்து**
> **சத்தமின்றி நைந்தழுதாள் நொந்து** (பா.948)

என்னும் பாடல் மூலம் விளக்குகிறார். இதுபோன்ற கையறுநிலைப் பாடல்களில் ஆசிரியர் சோக உணர்வை, அவலச்சுவையை இயல்பாக வெளிப்படுத்துகிறார்.

அணிநயம்

இலக்கணப் புலமை பெற்றவர்கள் பாடல்கள் இயற்றும்போது உவமைகள், உருவகம், அணிகள், பழமொழிகள் போன்றனவற்றைப் பாடல்களில் அதிக அளவில் பயன்படுத்துவது வழக்கம். காப்பிய ஆசிரியர் மதலைமுத்து பல வகையான அணிகளைப் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

போற்றிடுமே போற்றிடுமே யென்னான்மா ஆண்டவரைப்
போற்றிடுமே போற்றிடுமே போற்றிடுமே ஆற்றுநரைப்
போற்றிடுமே போற்றிடுமே போற்றிடுமே பேரருளைப்
போற்றிடுமே யேற்றமுற வாழ்ந்து (பா.64)

என்னும் பாடலில் போற்றிடுமே என்னும் சொல் ஒரே பொருளில் திரும்பத் திரும்ப வந்துள்ளமையால் சொற்பொருள் பின்வருநிலையணியாக அமைந்துள்ளது. இதைப்போன்று,

கண்ணறையின் உள்ளுயிராம் கண்மணியைக் காத்துள
கண்ணிமைபோல் தன்மகனைக் காத்துளநம் கன்னிமரி
கண்கசிந்து தன்னுயிரின் கண்ணுள்கண் சிக்கிடவே
கண்ணிலியாய் நின்றனளே காய்ந்து (பா.949)

என்னும் பாடலில் கண் என்னும் சொல் ஒரே பொருளில் திரும்பத் திரும்ப வருவதால் சொற்பொருள் பின்வரு நிலையணியாகும். அருட்காவியத்தில் இதுபோன்ற பாடல்கள் ஏராளம்.

விவிலியச் செய்திகள்

கானாவூர் கலியாண வீட்டில் திராட்சை இரசம் தீர்ந்த போது, இயேசு கிறிஸ்து தண்ணீரைத் திராட்ச இரசமாக மாற்றினார். இதுவே இயேசு கிறிஸ்து செய்த முதல் அற்புதமாகும். இதைக் காப்பிய ஆசிரியர் மதலை முத்து,

வெற்றுளத்தை நல்லாவி பொங்கி நிறைத்தாற்போல்
கற்சாடி மூவிரண்டும் தண்ணீர் கொளச்செய்தே
அற்புதனோ அற்புதமாய் ஊறும் கனிச்சாறாய்த்
தெற்றெனவே மாற்றினார் ஆங்கு (பா.255)

எனப் பாடுகிறார். இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களுள் ஒன்று ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்தளித்ததாகும். இந்நிகழ்வை காப்பிய ஆசிரியர்,

உண்டனரே அத்தனை பேரும் சிதறியநற்
துண்டுகளை முன்னான்கு கூடை நிறைத்தனரே

எண்ணிடவை யாயிரம் ஆண்கள் கணக்கிலையே
பெண்ணினமும் பிஞ்சுகளு மாங்கு (பா.374)

எனப் பாடுகிறார். இதைப்போன்று இயேசு கிறிஸ்துவின் முன்னால் விபச்சாரப் பெண் ஒருத்தியை அழைத்து வந்து, இவளைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்றனர். அவர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து, உங்களில் பாவமில்லாதவன் இவள் மீது கல்லெறியட்டும் என்றார். இதை ஆசிரியர்,

கல்லினை யேந்திய புல்லரை நோக்கியே
சொல்லிய குற்றமிலான் உங்களிடை யுண்டெனில்
கல்லினை வீசென்ன குத்துண்ட நெஞ்சினராய்த்
சொல்லிழந் தேகினரே சோர்ந்து (பா.306)

எனப் பாடுகிறார். விவிலியச் செய்திகளை எளிமையான வெண்பாக்களில் அமைத்துத் தருவதில் வல்லவராக மதலை முத்து விளங்குகிறார் என்பது மேற்கண்ட சான்றுகளின் மூலம் நிரூபணமாகின்றது.

திருக்குறள் கருத்துகள்

அருட்காவியத்தில் திருக்குறள் கருத்துகள் ஆங்காங்கே இடம்பெற்று காவியத்திற்கு அழகூட்டுவதாகவும், கருத்துச் செறிவிற்கு துணைசெய்வதாகவும் அமைந்துள்ளன. சான்றாக,

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (குறள்.314)

என்னும் திருக்குறளை ஆதாரமாகக் கொண்டு,

இன்னலினை யீந்தவர்க்கு இன்னலினை யீந்துநீவிர்
இன்புறுதல் இன்பமோ இன்னலீந்தோர் இன்புற
இன்செயலாம் நற்செயலை இன்பமுற வாற்றிடுக
இன்னலரோ நாணமுற வீங்கு (பா.453)

என்னும் பாடலைப் படைத்துள்ளார். இப்பாடலில், நமக்குத் துன்பத்தைத் தந்தவர்க்கு நாம் நற்செயல் புரிந்தால், துன்பத்தைக் கொடுத்தவர் நாணமடைவர் என்னும் கருத்தை வெளிப் படுத்துகிறார். இக்கருத்து திருக்குறளின் கருத்தைப்போல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உணர்ச்சி வெளிப்பாடு

காப்பிய ஆசிரியர், காப்பிய மாந்தர்களின் மன உணர்வுகளைப் பாடல்கள் மூலம் சிறப்பாக வெளிப்படுத்துவதில்

வல்லவராக விளங்குகிறார். இயேசு கிறிஸ்து பிறந்த செய்தியைக் கேள்விப்பட்ட ஏரோது மன்னுக்கு இதுபற்றிய செய்திகள் முழுமையாகக் கிடைக்காமையால் செய்வதறியாது குழப்பத்தில் ஆழ்ந்தான். இதை ஆசிரியர்,

நறநற வென்றே நொறுக்கிய பல்லை
மொறமொற வென்றே முறுக்கெனத் தின்று
பறபற வென்றே பகட்டுடன் மன்னன்
திறம்பட வாய்ந்தான் திரிந்து (பா.155)

எனப் பாடுகிறார். இப்பாடலின் மூலம் ஏரோது மன்னனின் கோப உணர்ச்சி தெளிவாக வெளிப்படுகிறது. இதைப்போன்று, இயேசு கிறிஸ்து சமாரியப் பெண்ணிடம் உரையாடினார். அவ்வுரையாடலின் போது கிறிஸ்து எனப்படும் மேசியா இவர்தான் என்பதை அறிந்தவுடன் அந்நற்செய்தியை ஊராரிடம் சொல்வதற்காக ஓடினாள். அவளது ஆர்வத்தையும் வேகத்தையும்,

ஓடினள் ஓடினள் நீர்க்குடத்தை விட்டவள்
ஓடினள் ஓடினள் ஊரின்கண் ஓடினள்
தேடினள் தேடினள் ஊரவரைத் தேடினள்
தேடியே கண்சுழல விட்டு (பா.288)

என்னும் பாடல் மூலம் உணர்ச்சியுடன் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். காப்பிய மாந்தர்களின் படைப்பில் அவர்களது மன உணர்வுகளைப் பாடல்கள் வாயிலாகப் படம்பிடித்துக் காட்டுவது காப்பிய ஆசிரியரின் ஆளுமையாகும். இதுபோன்ற ஏராளமான சான்றுகள் காப்பியம் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

இலக்கிய உணர்வும் இறை உணர்வும் ஒன்று சேர்ந்த காவியம் அருட்காவியமாகும். விவிலியச் செய்திகளை எளிமையான கவிதைகளில் படைத்திருப்பது போற்றுதலுக் குரியது. இனிய ஓசையும் இனிய சொற்களும் அமையப்பெற்று நான்கடிகளிலும் ஒரே எதுகை பெற்று செப்பலோசை குன்றாமல் பாடல்களை இயற்றியுள்ள காப்பியக் கவிஞரின் இலக்கணப் புலமைக்கும் விவிலியப் புலமைக்கும் இந்நூல் சான்றாக அமைகின்றது.

16. மீட்பதிகாரம் என்னும் பேரின்பக் காப்பியம்

இறைவன் மனுக்குல மக்களை மீட்பதற்காக விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு வந்தார். அவரது வருகை மனுக்குல மக்களுக்கு ஒரு பேரின்பமாக விளங்கியது. இதை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள காப்பியத்திற்கு மீட்பதிகாரம் என்னும் பேரின்பக் காப்பியம் என ஆசிரியர் பெயர் சூட்டியுள்ளார். இக்காப்பியம் பேராசிரியர் மு.பவுல் இராமகிருட்டிணனால் படைக்கப் பட்டுள்ளது.

ஆசிரியர் வரலாறு

பேராசிரியர் மு. பவுல் இராமகிருட்டிணன் 1916ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் நாள் முத்துக்கருப்ப பிள்ளை-மீனாட்சி அம்மை தம்பதியினருக்கு மதுரை மாநகரிலுள்ள கீரைத்துறை என்னும் ஊரில் பிறந்தார். இவரது பெற்றோர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர் தமது இளமைக் கல்வியை மதுரை மாநகரிலுள்ள கீழவாசலில் அமைந்துள்ள கத்தோலிக்கக் கிறித்தவப் பள்ளியில் பெற்றார்.

பவுல் இராமகிருட்டிணன் ஓவியம் வரைவதிலும் இசைக்கருவிகளை வாசிப்பதிலும் நகைச்சுவையாகப் பேசுவதிலும் இனிய பாடல்கள் இயற்றுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் சித்தாந்த நுணுக்கத்தினையும் நன்கு கற்றார். 1941ஆம் ஆண்டு மனோன்மணி அம்மையாரைத் திருமணம் புரிந்தார். இத்தம்பதியினருக்கு ஏழு குழந்தைகள்.

இவர் அமெரிக்கன் கல்லூரியில் வரலாற்றுப் பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர் ஆசிரியப்பணிக்கானப் பயிற்சிப் பட்டத்தையும் பெற்றார். இவர் காவல்துறை, திரைப்படத்துறை, கூட்டுறவுத்துறை ஆகியவற்றில் பணியாற்றினார். பின்னர் மதுரையிலுள்ள சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியிலும் பாத்திமா பெண்கள் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் மதுரையிலுள்ள தியாகராஜர் உயர்நிலைப் பள்ளியிலும், இராஜபாளையத்திலுள்ள அன்னப்ப ராஜா நினைவு உயர்நிலைப் பள்ளியிலும், மதுரையிலுள்ள பிள்ளைமார் சங்க உயர்நிலைப் பள்ளியிலும் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் ஆசிரியப்

பணியில் சேர்ந்த பின்னர் தமிழ் இலக்கியப் பிரிவில் முதுகலைப் பட்டம் பெற்றார். அதன்பின்னர் இவர் 1965ஆம் ஆண்டு முதல் 1976 வரை வாணியம்பாடியிலுள்ள இசுலாமியர் கல்லூரியிலும், கோயம்புத்தூரிலுள்ள சுவாமி விவேகானந்தர் கல்லூரியிலும் தரங்கம்பாடிக்கு அருகிலுள்ள பொறையாறில் அமைந்துள்ள தமிழ் நற்செய்தி லுத்தரன் கல்லூரியிலும் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இளைஞனாக இருக்கும்போது பெரியார் இயக்கத்தில் இணைந்து தீவிரமாக ஈடுபட்டார். பின்பு இசுலாமிய நூல்களோடு தொடர்பு பெற்று, உலகத்தைப் படைத்த ஓர் இறைவன் உண்டு என்னும் நம்பிக்கைக்கு வந்தார். இசுலாமிய நூல்களைக் கற்றதன் மூலம் இசுலாமியர்களால் ஈசாநபி என்று அழைக்கப்படும் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் விவிலியத்தைப் பற்றியும் அறிந்தார். இதன் விளைவாக 1972 ஆம் ஆண்டு தமது 56 ஆவது வயதில் இயேசு கிறிஸ்துவைத் தமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பவுல் இராமகிருட்டிணன் என்னும் பெயரால் திருமுழுக்குப் பெற்றார். கிறித்தவராக மாறிய பின்னர் இறைவனின் திருவருளால் கிறித்தவ நூல்களைப் படைத்தார். இவர் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆறாம் நாள் காலமானார்.

பேராசிரியர் பவுல் இராமகிருட்டிணனால் படைக்கப் பட்ட பாடல்கள் திருவடிமாலை என்னும் தொகுப்பு நூலாக 1977ஆம் ஆண்டு மதுரையிலுள்ள பவுல் பதிப்பகத்தின் மூலம் வெளிவந்துள்ளது. இந்நூலில் "இயேசுவின் தூய குருதியால் ஈடேற்றம் பெற்றவர் அவருக்காகச் சான்று பகர்தல் கடனாகும். சான்றாக, என் உள்ளத்தில் எழுந்த பாக்களின் தொகையே திருவடிமாலையாக ஆவியானவரின் அருளால் உருப்பெற்றது" என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவர் சாலமோன் திருவருட் கோவை என்னும் தெய்வத்திருமுல்லை என்னும் நூலை 1977ஆம் ஆண்டு எழுதி முடித்தார். இந்நூல் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள சாலமோன் எழுதிய உன்னதப்பாட்டு என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டது. இந்நூல் முனைவர் வீ. ஞானசிகாமணி அவர்களால் வேதாகம மாணவர் பதிப்பகத்தின் மூலம் 1982ஆம் ஆண்டு வெளியானது.

காப்பியக் கதை

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் உயிர்த்தெழுந்து சீடர்களுக்குக் காட்சி கொடுத்து, பரலோகம் சென்றது

வரையிலான புதிய ஏற்பாட்டு நிகழ்வுகளைக் காப்பியக் கதையாகப் பயன்படுத்தியுள்ளார். ஒரு காதையில் மட்டும் பழைய ஏற்பாட்டுச் செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

காப்பியத்தின் அமைப்பு

மீட்பதிகாரம் என்னும் பேரின்பக் காப்பியம் காண்டம், காதை என்னும் பகுப்பு முறையினில் அமைந்தது. இக்காப்பியம் பிறப்பியற் காண்டம், திருப்பணியுவந்த காண்டம், அறிவுரைக் காண்டம், அருட்புலக் காண்டம், பகைபுலக் காண்டம், வேள்விக் காண்டம், மாட்சிமைக் காண்டம் என்னும் ஏழு காண்டங்களை உடையது. ஒவ்வொரு காண்டமும் ஏழு காதைகளைக் கொண்டது. இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள அடிகளின் எண்ணிக்கை 8499 ஆகும்.

பிறப்பியற் காண்டம்

முதல் காண்டமான பிறப்பியற் காண்டமானது வாய்மொழி வாழ்த்துப் பாடல், கருவுறு காதை, கருவுயிர்த்த காதை, வழிபடு காதை, கரந்துறை காதை, காவுகோட் காதை, கடந்துசெல் விழாக் காதை என்னும் ஏழு காதைகளை உடையது.

திருப்பணியுவந்த காண்டம்

இரண்டாம் காண்டமான திருப்பணியுவந்த காண்டமானது திருமுழுக்கேற்ற காதை, கனிச்சாறருளிய காதை, இறை வெளிப்பாட்டுக் காதை, உயிர்ப்பு நீரூட்டிய காதை, விழாக்காண் காதை, நாசரத்தில் நவின்ற காதை, நோய் நீக்கு காதை என்னும் ஏழு காதைகளைக் கொண்டது.

அறிவுரைக் காண்டம்

மூன்றாம் காண்டமான அறிவுரைக் காண்டத்தில் அறமுரைத்த காதை, எளியோர்க் கருளிய காதை, இறையரசறிவித்த காதை, கடலையடக்கிய காதை, பன்னிருவரைப் பணித்தருள் காதை, அருள்முனிவர் குருதிச்சான்றளித்த காதை, பசிப்பிணி மருத்துவரின் பரிசுரைத்த காதை என்னும் ஏழு காதைகள் இடம் பெற்றுள்ளன.

அருட்புலக் காண்டம்

நான்காம் காண்டமான அருட்புலக் காண்டத்தில் வான் வருமப்பத்தின் வளமுரைத்த காதை, அகந்தூய்மை

அறிவுறுத்திய காதை, மூவணியாடிய முதல்வர் பூட்கையுரைத்த காதை, பாடுநிலை சுட்டிய காதை, கூடாரவிழாக் காதை, விடுதலை நெறிபகர்ந்த காதை, காணாற்குக் கண்ணளித்தக் காதை என்னும் ஏழு காதைகள் உள்ளன.

பகைபுலக் காண்டம்

ஐந்தாம் காண்டமான பகைபுலக் காண்டத்தில் நல்ல மேய்ப்பர் நலமுரைத்த காதை, மன்றாட்டுக் கற்பித்த காதை, கூடாவொழுக்கத்தின் கேடுரைத்த காதை, உய்த்துணர்த்திய காதை, உவமையுரைத்த காதை, உற்ற நண்பனை உயிர்த் தெழுப்பிய காதை, காணாமற் போனதைக் கண்டுபிடித்தக் காதை என்னும் ஏழு காதைகள் இடம்பெற்றுள்ளன.

வேள்விக் காண்டம்

ஆறாம் காண்டமான வேள்விக் காண்டத்தில் உலாவரு காதை, வரும்பொருளுரைத்த காதை, திருவிருந்தளித்த காதை, நச்சுக்கலன் நயந்தருள் காதை, பழிசுமத்திய காதை, பாடேற்ற காதை, உயிர்நீத்த காதை என்னும் ஏழு காதைகள் உள்ளன.

மாட்சிமைக் காண்டம்

இறுதிக் காண்டமான மாட்சிமைக் காண்டத்தில் உயிர்த்தெழுந்த காதை, அழற் கொழுந்தூட்டிய காதை, மேலறைக் காட்சிக் காதை, கடற் காட்சிக் காதை, வானிவர்ந்த காதை, தெரிந்துகோட் காதை, திருமன்றம் தோற்றிய காதை என்னும் ஏழு காதைகள் இடம்பெற்றுள்ளன.

யாப்பமைதி

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்ற பண்டைத் தமிழ்க் காப்பிய இலக்கியங்கள் கதை கூறும் முறைக்கு உகந்த ஆசிரியப்பாவையும் அதன் வகைமைகளையும் கொண்டது போன்று இந்நூல் ஆசிரியப்பா யாப்பு கொண்டு இயற்றப்பட்டுள்ளது. பேரின்பக் காப்பியத்தில் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, நேரிசை ஆசிரியப்பா, வஞ்சி நிலைத்துறை, நிலைமண்டில ஆசிரியப்பா, கலித்தாழிசை, கலிவிருத்தம், வெண்கலிப்பா, அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், அடிநிமிர்ந்தோடிய அயன் மயங்கிசைக் கொச்சகம், ஆறடிநாற்சீர் ஒருவிகற்பக் கொச்சகக் கலிப்பா, கலிவெண்பாட்டு, அறுசீர் ஆசிரிய விருத்தம், தரவு கொச்சகக் கலிப்பா, எழுசீராசிரிய

விருத்தம், எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், தாழிசை, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, எட்டடித்தரவு கொச்சகக் கலிப்பா, தனிச்சொல், நாற்சீர் ஈரடித்தாழிசை ஆகிய யாப்பு வகைகளை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

திருக்குறளின் தாக்கம்

கிறித்தவ இலக்கியப் படைப்பாளிகள் பன்னூல் புலமை உடையவர்களாக விளங்குவது அவர்களது படைப்பின் வாயிலாகத் தெரிவது கண்கூடு. குறிப்பாக, திருக்குறள் கருத்துகளைப் பயன்படுத்தாத கிறித்தவ இலக்கியப் படைப்பாளிகள் இல்லை எனக் கூறும் அளவிற்கு கிறித்தவ இலக்கியங்களில் திருக்குறளின் தாக்கம் அதிக அளவில் காணப்படுகிறது. பவுல் இராமகிருட்டிணனும் தமது காப்பியத்தில் ஏராளமான திருக்குறள் கருத்துகளைப் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு **(குறள்.60)**

என்னும் குறளை ஆதாரமாகக் கொண்டு,

மங்கல மெனுந்தன் மனைமாட்சி யதற்கொரு
நன்கல மாகும் நன்மக்கட் பேறின்றி
(கருவுறு காதை, அடி. 50, 51)

என்னும் அடிகளை அமைத்துள்ளார். புற உடலின் தூய்மை நீராலே ஏற்படும்; உள்ளத்தின் தூய்மையானது, ஒருவன் வாய்திறந்து சொல்லும் அவனது வாய்மையாலே அடையப் படும் என்னும் பொருளமைந்த,

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் **(குறள். 298)**

என்னும் குறளை ஆதாரமாகக் கொண்டு,

அகந்தூய்மை வாய்மையாற் காணுதற் பேணார்
புறந்தூய்மை நீரா லமைதலே சாலுமென்
(அகந்தூய்மை அறிவுறுத்திய காதை, அடி. 55, 56)

என்னும் அடிகளை அமைத்துள்ளார். இதைப்போன்று,

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற **(குறள்.34)**

என்னும் குறளை அடிப்படையாக வைத்து,

மனத்துக்கண் மாசைத் துடைக்கக் கருதார்
இனத்துளர் காசை யெடுத்தோத மறவார்
(அகந்தூய்மை அறிவுறுத்திய காதை, அடி.68, 69)

என்னும் அடிகளை அமைத்துள்ளார். மேலும்,

தனக்கோ ருவமையிலார் தக்கவா றுவமை கூறி
மனக்கொள வாய்மையெலாம் மாந்தர்க் குரைத்தா ரன்றே
(உவமையுரைத்த காதை, பா.83)

என்னும் அடிகளை,

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது (குறள்.7)

என்னும் குறளை அடிப்படையாகக் கொண்டு படைத்துள்ளார். இயேசு கிறிஸ்து நீரின் மேல் நடந்து வருவதைப் பார்த்த சீடர்கள் அச்சமடைந்து செய்வதறியாது திகைத்தனர். அதைப் பார்த்த இயேசுவானவர் மணற்கேணியில் நீர் சுரப்பதைப் போன்று அவரது மனதில் அருள் சுரந்து அவர்களைப் பார்த்து அஞ்சாதீர்கள் எனக் கூறுகிறார். இதை,

தொடுமணற் கேணியிற் சுரந்தருள் பொங்க
(பசிப்பிணிமருத்துவரின் பரிசுரைத்த காதை, அடி.87)

எனக் குறிப்பிடுகிறார். இதற்கு,

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு (குறள்.396)

என்னும் குறள் அடிப்படையாக அமைந்துள்ளது. இன்னும் இது போன்ற பல திருக்குறள் கருத்துகளின் தாக்கம் நூல் முழுவதும் விரவி காணப்படுகின்றது. திருக்குறள் கருத்துகளின் செல்வாக்கு காப்பியத்தின் சிறப்புக்குச் சான்றாக அமைகின்றன.

சிலப்பதிகாரத் தாக்கம்

பேராசிரியர் பவுல் இராமகிருட்டிணன் சிலப்பதிகாரத்தின் மீது ஈடுபாடு உள்ளவர். சிலம்பை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட காப்பியத்திற்கு சிலப்பதிகாரம் எனப் பெயர் சூட்டியது போன்று, மனுக்குலத்தை மீட்ப்பதற்காக வந்த இறைமைந்தனைப் பற்றி விவரிப்பதற்கு மீட்பதிகாரம் எனப் பெயர் சூட்டியுள்ளார். சிலப்பதிகாரத்தைப் போன்று காதை என்னும் பகுப்பு முறையைக் கையாண்டாலும், சிலப்பதிகாரத்தை

அடியொற்றி முதல்காதைக்கு வாய்மொழி வாழ்த்துப் பாடல் எனப் பெயரிட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. சிலப்பதிகாரத்தின் முதல் காதையான மங்கல வாழ்த்துப் பாடலில்,

திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேல்நின்று தான் சுரத்த லான்

(மங்கல வாழ்த்துப் பாடல், அடி.1-9)

என ஆசிரியர் பாடுகிறார். இளங்கோவடிகள் திங்கள், ஞாயிறு, மாமழை என்னும் இயற்கையின் மூன்று அம்சங்களைப் போற்றிப் புகழ்ந்து நூலைத் தொடங்குகிறார். அதே போன்று பவுல் இராமகிருட்டிணன் தமது காப்பியத்தின் முதல் காதையினை வாய்மொழி வாழ்த்துப் பாடல் என அமைத்துள்ளார். இதில் தந்தை, மைந்தர், தூய ஆவி என்னும் மூவொரு கடவுளை வாழ்த்தி நூலினைத் தொடங்குகிறார். அப்பகுதி பின்வருமாறு:

தந்தையைப் போற்றுதுந் தந்தையைப் போற்றுதும்
மைந்தரைத் தந்தருளி மாந்தரைக் காத்தற்கு
முந்தவே யோர்ந்தருள லான்.

மைந்தரைப் போற்றுதும் மைந்தரைப் போற்றுதும்
நைந்துட லாணியில் ஞான்றுயிர் நீப்பினும்
முந்த னுயிர்த்தெழுத லான்.

தூயாவி போற்றுதுந் தூயாவி போற்றுதும்
நேயமாய் மன்றத்தில் நேர்ந்துயிர் காப்பாராய்
வாய்மை வழிநடத்த லான்

(வாய்மொழி வாழ்த்துப் பாடல், அடி.1-9)

கம்பராமாயணத் தாக்கம்

கம்பருக்குப் பின்னர் வந்த காப்பியப் படைப்பாளர்களின் படைப்புகளில் கம்பராமாயணத்தின் தாக்கம் இயல்பாகவே அமைந்துள்ளது. கம்பராமாயணத்தின் முதல் பாடலான,

உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்,
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் - அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே (பாயிரம், பா.1)

என்னும் பாடலை மனதில் கொண்டு பவுல் இராமகிருட்டிணன் தமது மீட்பதிகாரம் என்னும் காப்பியத்தின் இரண்டாவது காதையில்,

உலகம் யாவையுந் தாமுள வாக்கியவ்
வுலகினிற் றோன்று மொவ்வொரு மகற்கும்
இலகொளி காட்டும் இறையரு ளாகி
மலர்தலை யுலகத்து மன்னிய வொருவரை
அலகையி னிருளா லறிந்தில துலகு

(கருவுறு காதை, அடி. 23-27)

எனப் படைத்துள்ளார். இப்பகுதியில் கம்பராமாயணப் பாடலின் ஒரு அடியை அவ்வாறே பயன்படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது.

நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் தாக்கம்

மீட்பதிகாரம் காப்பிய ஆசிரியர் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் நன்கு புலமையுடையவர் என்பதை அவரது காப்பியத்தின் மூலம் அறிய முடிகிறது. குழந்தையாகிய இயேசு கிறிஸ்துவைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் போது,

அன்பினாற் கட்டி யருளு மிடைகட்டிப்
பைம்பொனால் யாத்தமெய்ப் பற்றுறுதித் தொட்டில்
நம்பிக்கை யாளர்தாம் நன்றியின் நல்கினார்
எம்பெரு மானே தாலேலோ.
எம்முன் வருவாயே தாலேலோ!

(கருவுயிர்த்த காதை, பா.22)

எனத் தாயார் தாலாட்டுகிறார். இத்தாலாட்டுப் பாடல் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் குலசேகர ஆழ்வாரின் பாடலான,

மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறுத்தொட்டில்
பேணிஉனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ!
வையம் அழந்தானே தாலேலோ!

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பா.44)

என்னும் பாடலை அடிப்படையாகக் கொண்டு இயற்றப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதைப் போன்று, நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் பெரியாழ்வார் இயற்றியுள்ள,

சீதக் கடலுள் அமுது அன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்து உண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே!
பவள வாயீர்! வந்து காணீரே!

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பா.23)

என்னும் பாடல் கண்ணனின் திருமேனி அழகினை விவரிப்பதாக அமைந்துள்ளது. இப்பாடலைத் தழுவி பவுல் இராம கிருட்டிணன், இயேசு பாலகனின் மேனியழகினைக் கண்டு இன்புறுமாறு அழைக்கிறார். அப்பாடல்,

பெத்தலை நல்லூரிற் பிறங்குமாக் கொட்டிலில்
நெய்த்தலை நாயகன் நேர்ந்து பிறந்தனன்
எத்தலை நோக்கினு மீடில்லாப் பெம்மானைக்
கைத்தலை யாடலே காணீரே. கார்குழ லீர்வந்து காணீரே

(கருவுயிர்த்த காதை, பா.1)

என்பதாகும். இவ்வழைப்புப் பகுதியில் 21 பாடல்கள் உள்ளன. பெரியாழ்வார்,

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

(நாலாயிர திவ்ய பிரபந்தம், காப்புச் செய்யுள்)

எனக் காப்புச் செய்யுள் பாடியுள்ளார். இப்பாடலை அடிப்படையாகக் கொண்டு இயேசு கிறிஸ்து பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் பகுதியின் காப்புச் செய்யுளாக,

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
சொல்லாண்ட வாய்மைத் திருமகனேநின்
சேவடித் திருத்தாமங் காப்பு

(மீட்பதிகாரம், காப்புச் செய்யுள்)

என்னும் இப்பாடலைப் பாடியுள்ளார். இத்திருப்பல்லாண்டுப் பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகையச்

சான்றுகளின் மூலம் ஆசிரியரின் நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் மீதுள்ள புலமையினை அறிய முடிகிறது.

திருவாசகத் தாக்கம்

இறைவன் ஐம்பொருளாக இருக்கிறான் எனபது சைவ, வைணவத் தத்துவங்கள் ஆகும். இதை அடிப்படையாகக் கொண்டு மாணிக்கவாசகர் திருமந்திரத்தில்,

> **வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி**
> **யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்**
> **கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு**
> **வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே!**
>
> **(திருச்சதகம், பா.15)**

எனப் பாடுகிறார். மீட்பதிகாரக் காப்பிய ஆசிரியர் இப்பாட்டின் தாக்கத்தால் கிறித்தவ மெய்யியலின்படி,

> **வானாக்கி மண்ணாக்கி வளியாக்கித் தீயாக்கி**
> **நீராக்கி யுயிர்காக்கும் ஒளியானார்க் கரிதேதென்**
>
> **(கூடாவொழுக்கத்தின் கேடுரைத்த காதை, அடி. 102-103)**

எனப் பாடியுள்ளார். இப்பாடலில் இறைவன் வானத்தைப் படைத்தார்; பூமியைப் படைத்தார்; காற்றைப் படைத்தார்; தீயைப் படைத்தார்; தண்ணீரைப் படைத்தார் என இறைவனைப் போற்றிப் புகழுகிறார். திருவாசகப் பாடலின் தாக்கமாக இப்பாடல் இருப்பினும் கிறித்தவக் கொள்கையிலிருந்து மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வருணனைகள்

மீட்பதிகாரம் காப்பியத்தின் ஆசிரியர் விவிலியக் கருத்துகளை காப்பிய அமைப்பில் எளிமையாகச் சொல்ல வேண்டும் என்னும் நோக்கம் உடையவராகக் காணப்பட்டதால் அதிகமாக வருணனைகள் போன்றவற்றைக் கையாளவில்லை எனலாம். கிறித்தவக் காப்பிய ஆசிரியர்கள் பலரின் நோக்கமும் இதுவாகவே இருந்துள்ளது என்பதை அவர்களது படைப்புகளின் மூலம் அறிய முடிகிறது. மீட்பதிகாரத்தின் கருவுறு காதையில் ஆசிரியர் வருணனையைப் பயன்படுத்தியுள்ளார். யோசேப்பும் மரியாளும் சகரியா வாழும் ஊரை நோக்கிச் செல்லும் போது வழியிலுள்ள நிகழ்வுகளை ஆசிரியர் வருணனை மூலம் விளக்குகிறார். புறநகரைக் கூட

அறியாதவளாகிய அழகுடைய மரியாள், அறம் திகழும் தன் நெஞ்சில் தூதன் சொல்லிய மந்திர மொழி விளங்க, பஞ்சினைப் போன்ற மெல்லிய அடிகளை உடைய அவள் கூர்மை பொருந்திய பரற் கற்களை உடைய வழியில் கொடுமையான மலைப்பாதையில் சென்றாள். பாறைகளும் மலைகளும் அடுத்தடுத்து வரச் சென்றாள். காடும் வேலி சூழ்ந்த தோட்டமும் கொடுமையானத் துன்பத்தைத் தரும் என அஞ்சாமல் அந்த வழி சென்றாள்.

யூதர்களின் சிங்கமாகிய இயேசு பெருமானைத் தன்வயிற்றில் தாங்கிய மாதாவைக் காண்பதற்கு அஞ்சி, சிங்கங்கள் குகைக்குள் சென்று முடங்கின. மேலும் அவை கரடி முதலியவை கலைமான் கூட்டத்தோடு முரன்பாடு நீங்கிக் கலந்து மகிழ்ந்து நின்றன. மேகங்கள் சூழ்ந்த மலையில் மரப் பொந்துகளில் வசித்த வலிமை மிக்க வரிகளையும் புள்ளிகளையும் உடைய புலிகள் மரியாளைக் கண்டதும் வேங்கை மரத்தின் பின்னால் சென்று ஒழிந்தன. கள்ளிப் புதரிலிருந்து புள்ளிகளை உடைய பாம்பு தலையை உயர்த்தியதும் வெள்ளை நிறக் கழுத்தினை உடைய சிவந்த பருந்து பாய்ந்து சென்று அவற்றை அடித்தன. இத்தகையக் காட்டு வழியைக் கடந்து சென்று இறைவனை வாழ்த்திய வண்ணம் வண்ணமலர் நிறைந்த குளிர்ந்த சோலையில் வாதுமை மரங்களிலும் கோதுமைக் கழனியிலும் தேனுண்ணும் வண்டுகளும் புறாக்களும் எங்கும் திரிந்து கொண்டிருக்க, பூங்குயில்கள் பாடும் நீர்ச்சுனைகள் நிறைந்த மலைப் பகுதியில் சகரியா வாழும் ஊரைச் சென்றடைந்தனர். இத்தகைய வழியின் இயல்பினை,

> **யூதாவின் சீயத்தை யுதரத்துத் தாங்கிய**
> **மாமாவைக் காணவு மடங்கலு மஞ்சி**
> **முழைஞ்சினுப் புக்கது முரணில தாகி**
> **வளைதா ளெண்கு வண்பறழ் கவ்வி**
> **கலைமான் பிணையொடு கவலாது நிற்ப**
> **மழைதாழ் வரையின் மரப்புழை வதிந்தது**
> **வரியும் புள்ளியும் வயங்கிய வயப்புலி**
> **இரியிப் பாயா வேங்கையின் மறைந்தது**
> **கள்ளிப் புதரிடைக் கட்செவி யெழுந்து**
> **புள்ளிப் படத்தைப் பொருக்கென வுயர்த்தவும்**

வெள்ளிய கழுத்தின் செவ்விய பருந்து
பொள்ளெனப் பாய்ந்து புடைத்தது புயங்கத்தை
இன்னன கடந்துசென் றிறைவரை வாழ்த்தி
வண்ண மலர்நிறை தண்ணிய காவில்
வாதுமை மரங்களிற் கோதுமைக் கழனியில்
தாதுணும் வண்டரும் தூதுணம் புறவும்
யாங்கணுந் திரிதரப் பூங்குயி லிசைக்கும்
சோங்குஞ் சுனையுஞ் சூழ்தரு குறிஞ்சியில்

(கருவுறு காதை, 187-203)

எனப் பாடுகிறார். தீமை ஏற்படாமல் இயற்கை பாதுகாக்கின்றது; தீய விலங்குகளை நல்ல விலங்குகள் தடுத்து நிறுத்தின; பகை கொண்ட விலங்குகள் பகையை மறந்தன என ஆசிரியர் வருணிக்கும் திறம் போற்றத்தக்கது.

விவிலியச் செய்திகள்

விவிலியத்திலுள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு நற்செய்தி நூல்களிலுள்ள செய்திகளையெல்லாம் ஒன்று திரட்டி காப்பிய வடிவில் ஆசிரியர் தந்துள்ளார். சிலப்பதிகாரத்தை மனதில் வைத்து இக்காப்பியத்தை வடிவமைத்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது. நற்செய்தி நூல்களிலுள்ள செய்திகளைக் காப்பிய வடிவில் விவரித்துள்ளமை சிறப்பாக உள்ளது. சான்றாக சில பகுதிகளைச் சுட்டலாம். ஜெப ஆலயத்தில் சூம்பின கையையுடைய ஒருவன் இருந்தான். அப்போது பரிசேயர்கள் இயேசு கிறிஸ்துவைப் பார்த்து ஓய்வு நாளில் ஒருவனைக் குணமாக்குவது நியாயமா எனக் கேட்டனர். அதற்கு இயேசு கிறிஸ்து உங்களுடைய ஆடு ஒன்று ஓய்வு நாளன்று குழியில் விழுந்தால் தூக்கிவிடுவீர்கள் தானே? ஆட்டைவிட மனிதன் உயர்ந்தவனல்லவா எனக் கூறி, சூம்பின கையை குணப்படுத்தினார். இதனால் பரிசேயர்கள் இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்ய ஆலோசனை செய்தனர். மத்தேயு நற்செய்தி நூலில் இடம்பெற்றுள்ள இந்நிகழ்வை,

குழியி லாடொன் றோய்வு நாளில்
வழிதப்பி வீழின் விழியுடை யீரே
தூக்கி யெடுத்துத் துயர்துடைப் பீரன்றோ
ஆக்கம் யாதென வறிந்துகொள் வீரென்று
குறையுடைக் கையனை நீட்டுக வென்றார்

மறுகை போலது மாறிற்று நீட்டவும்
வல்லவ ரியேசுவைக் கொல்லவே யூதர்
பொல்லா வெரோதியர் தம்முடன் சூழ்ந்தார்
(நோய் நீக்கு காதை, அடி. 234-241)

என ஆசிரியர் பாடியுள்ளார். சகேயு என்பவன் குள்ளமான மனிதன். இவன் அளவுக்கு அதிகமாக மக்களிடம் வரி வசூலித்து வந்தான். இயேசு கிறிஸ்து அவ்வழியாகச் செல்வதை அறிந்து, அவரைப் பார்ப்பதற்காக ஒரு மரத்தில் ஏறி மறைந்திருந்தான். அவ்விடத்தின் வழியாக இயேசு கிறிஸ்து வரும்போது, சகேயுவைப் பார்த்து மரத்திலிருந்து கீழே இறங்கி வா, இன்று உனது வீட்டில் தங்க வேண்டும் என்றார். இயேசு கிறிஸ்துவிடம், நான் பெற்ற அதிகமான வரிப் பணத்தை மக்களுக்குத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்றான். இயேசு கிறிஸ்து சகேயுவைப் பார்த்து இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது எனக் கூறினார். மேலும் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். லூக்கா எழுதிய நற்செய்தி நூலில் இப்பகுதி இடம் பெற்றுள்ளது. இதனை,

பிறர்கண் படாமல் மறைந்திருந் தையரைக் காண
கறங்கு சகேயுவைக் காவலர் இயேசுமேல் நோக்கி
விரைந்து வருக சகேயுவே இன்றுன தகத்தில்
உறைந்து செல்ல விழைந்தனம் உவப்பிதே யென்றார்.

கண்ணிலான் காட்சிதான் பெற்றனன் போலவே மகிழ்ந்தான்
விண்ணிழி யமிழ்தினைப் பருகவி ழைந்தவா விரைந்தான்
எண்ணிலா ரிடைச்சென்று இயேசுவின் திருவடி புனைந்தான்
அண்ணலே அடியேன் உடைமையின் பகுதியைத் தருவேன்

காணாமற் போனதைக் கண்டுபி டிக்கவே வந்தோம்
பேணாமற் போனாரைப் பேணி யழைக்கவே வந்தோம்
நாணாமல் வாரீர் நல்வினை யாளரா யாவீர்
வாணாளை வீணாளாய்ப் போக்கிடீர் என்றனர் வள்ளல்
(காணாமற் போனதைக் கண்டுபிடித்த காதை, பா.11,12,15)

எனப் பாடியுள்ளார். முப்பத்து எட்டு ஆண்டுகளாக சுகவீனமாக இருந்த மனிதனிடம் இயேசு கிறிஸ்து நீ குணமாக விரும்புகிறாயா எனக் கேட்டார். அதற்கு அவன் குளம் கலக்கப்படும் போது என்னைக் குளத்தில் ஒருவரும் கொண்டு விடவில்லை; நான் போவதற்கு முன்னரே வேறொருவன்

சென்று விடுகிறான் என்றான். இயேசு கிறிஸ்து அவனைப் பார்த்து 'நீ உன் படுக்கையை எடுத்துக் கொண்டு போ' என்றார். அந்த மனிதன் குணமாகி தன் படுக்கையை எடுத்துக் கொண்டு சென்றான். யோவான் எழுதிய நற்செய்தி நூலில் இடம் பெற்றுள்ள இந்நிகழ்வினை,

முப்பதோ டெட்டாண்டு முடக்குநோய் கொண்டொருவன்
செப்பருந் துயருடன் சிதைவுற்றுக் கிடந்தனன்
பன்னெடுங் காலமாய்ப் பாடுற்றா னெனவறிந்து
பன்னரும் பாடுறுவார் பரிந்தவன் பாங்கருற்று
நின்னுடை நோய்நீங்கி நலம்பெற நினைதியோ
பன்னுக வென்றனர் பாடுற்றான் பகர்ந்தனன்
அண்ணலே தூதுவன் தண்ணீரைக் கலக்குங்கால்
முன்னரே யெனைத்தூக்கித் தண்ணீரி லிடுவாரில்
எழுந்துநான் செல்லுமுன் னிறங்குவான் மற்றொருவன்
அழுந்தியான் கிடக்கின்றேன் ஆற்றுவார் துணையிலேன்
என்றவ னினைதர விரக்கமே யுருவானார்
நன்றுநீ எழுந்துன்றன் படுக்கையை யெடுத்துடன்
நடவென நடந்தனன் படுக்கையை யெடுத்தவன்

(விழாக்காண் காதை, அடி.145-157)

எனக் காப்பிய ஆசிரியர் கவிதையாக்குகிறார். இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான தோமா இயேசு கிறிஸ்துவின் விலாவிலுள்ள காயத்தைத் தொட்டுப் பார்த்தால் தான் அவர் உயிர்த்தெழுந்ததை நம்புவேன் என்றார். சீடர்கள் இருந்த அறையில் இயேசு கிறிஸ்து வந்து, தோமாவைப் பார்த்து, என்னுடைய காயங்களைத் தொட்டுப் பார் என்றார். அதற்கு தோமா, என் ஆண்டவரே, என் தேவனே என்றார். இயேசு கிறிஸ்து தோமாவைப் பார்த்து நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். இந்நிகழ்வை,

ஆண்டவர் தோம னேயென் அங்கையில் விரலை யிட்டும்
நீண்டவுன் கையா லென்றன் விலாவினைத் தொட்டுப்
பார்த்தும்
தீண்டிய பின் ரேனும் தெருமரல் நீங்க நம்பென்(று)
ஈண்டிய வன்பி னாலே யேன்றருள் செய்தா ரன்றே.

தீற்றிய தேற லுண்டு திமிரத்தின் நீங்கித் தோமன்
ஆற்றிய வன்பின் மேலோய் ஆண்டவர் நீரே யென்றான்

போற்றரு மிறைவர் நீரே பொறுத்தருள் கென்று வேண்டி
சாற்றினன் எங்கும் சான்று சார்ந்தனன் இயேசு நற்றாள்.

கண்டுநீ நம்பு கின்றாய் காணாமல் நம்பு வோனே
தொண்டருள் பேறு பெற்றான் தோமனே என்றார் கோமான்
பண்டு போல் என்று முள்ளார் தொண்டர்க்கு மறைந்து
சென்றார்
அண்டர்தம் நாய கர்தாள் அனைவரும் போற்றி நின்றார்.
(மேலறைக் காட்சிக் காதை, பா.17-19)

எனக் காப்பிய ஆசிரியர் படைத்துள்ளார். விவிலியச் செய்திகளைக் கவிதையாக்குவதில் தலைசிறந்தவராக பவுல் இராமகிருட்டிணன் விளங்குகிறார் என்பதற்கு மேலே உள்ளவை சில சான்றுகளாகும்.

காவுகோட் காதையின் சிறப்பு

பிறப்பியற் காண்டத்தில் ஆறாவது காதையான காவுகோட் காதையில் பழைய ஏற்பாட்டிலுள்ள யாத்திராகமம் நூலின் 7ஆம் அதிகாரம் முதல் 14ஆம் அதிகாரத்திலுள்ள நிகழ்வுகள் 180 அடிகளில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இக்காப்பியத்தில் இப்பகுதி மட்டுமே பழைய ஏற்பாட்டை ஆதாரமாகக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டுச் செய்திகள் புதிய ஏற்பாட்டுக்குள் அடங்கியிருப்பதை வெளிப்படுத்திச் சொல்கிறார். இரண்டு ஏற்பாடுகளை ஒருங்கிணைத்து, அவற்றிலுள்ள சிறப்புகளை, ஒன்றில் ஒன்று நிறைவடைவதை இப்பகுதி தெளிவாக்குகிறது. புனித அகஸ்டின் என்பவர், The Old Testament is New Testament concealed and the New Testament is Old Testament revealed எனக் குறிப்பிடுவார். அதாவது பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டின் மறைவிடம்; புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டின் வெளிப்பாடு என்பது இதன் கருத்தாகும். இதன் அடிப்படையிலேயே புதிய ஏற்பாட்டு நிகழ்வை விவரிக்கும் போது பழைய ஏற்பாட்டுச் செய்திகளை எடுத்துரைக்கிறார்.

இயேசு பாலகனை எடுத்துக் கொண்டு யோசேப்பும் தாய் மரியாளும் கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் சொந்த ஊரான நாசரேத்துக்கு வந்தனர். எருசலேம் தேவாலயத்தில் பஸ்கா பண்டிகையைக் கொண்டாட மூவரும் சென்றனர். இவ்விரண்டு நிகழ்வுகளுக்கும் நடுவில் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளைக் கவிதையாக்குகிறார். கர்த்தர் இஸ்ரவேல் மக்களை எகிப்தின்

அடிமைத்தனத்திலிருந்து மோசேயின் மூலம் மீட்ட நிகழ்வுகளைக் காவுகோட் காதையில் தெளிவுபடுத்துகிறார்.

எகிப்திய வேந்த னிழைத்ததீ வினையால்
அகங்குழைந் தழுது மாற்றியுந் துன்புறு
மக்களின் கூக்குரன் மடுத்தன ராகலின்
உட்குதல் நீக்கத் திக்குவாய் மோசேக்குச்
சீனாய் மலைமிசை சிறுபைம் புதரிடை
வானாற் றிறங்கிய வகையறு செந்தீ
அழல்வயிற் றோன்றி யஞ்சற்க மகனே
கழற்காற் பார்வோன் கடுங்கோல் கையற
விடுக்க ணுற்றார்மேற் கடைக்கண் சார்த்தினன்

(காவுகோட் காதை, அடி.11-19)

என்னும் பகுதியைச் சான்றாகச் சுட்டலாம். இதனைத் தொடர்ந்து வரும் காதையான கடந்துசெல் விழாக் காதையில் இத்தகைய மோசேயின் வழியில் வந்த சாலமோன் அரசனால் கட்டப்பட்ட எருசலேம் தேவாலயத்தில் அம்மூவரும் சென்றனர் என்கிறார். இப்பகுதியிலிருந்து மீண்டும் புதிய ஏற்பாட்டு நிகழ்வுகள் தொடருகின்றன.

ஆக்கியோன் சான்றுரை

மீட்பதிகாரத்தின் ஆசிரியரான பேராசிரியர் மு. பவுல் இராமகிருட்டிணன் நூலின் தொடக்கத்தில் ஆக்கியோன் சான்றுரை என்னும் பகுதியில் 216 அடிகளில் தன் வரலாற்றை முழுமையாக உரைத்துள்ளார். இப்பகுதியின் இறுதியில் இடம்பெற்றுள்ள மறுபிறப்பு என்னும் தலைப்பின் கீழ் 34 அடிகளில் தான் கிறித்தவராக மாறி, இறைவனின் அருளைப் பெற்றதைப் பாடியுள்ளார். சான்றாக,

தாவிலாச் செம்மல் தாவீதின் மைந்தரே
என்னுயிர் காக்கும் இறைவனென் றுணர்ந்தேன்
மன்னுயிர் காக்கப் பொன்னுலகை வெறுக்கை
அனைத்தையும் விடுத்தவர் அவனியில் வந்ததை
நினைத்தும் கண்கள் நிறைந்தன நீரால்
வணங்காக் கழுத்தை வணக்கிய தவருரை
இணங்காத நெஞ்சம் இளகிக் கரைந்தது
கூப்பாத கைகள் கூப்பின தாமாய்
நோய்ப்பால வெல்லாம் நொடியினில் மாய்ந்தன (அடி.20-28)

என்னும் பகுதியைச் சுட்டலாம்.

சிலப்பதிகாரத்தை மனதில் வைத்து அதன் அடிப்படையில் விவிலிய நற்செய்தி நூல்களிலுள்ள செய்திகளை ஒன்று சேர்த்து காப்பியமாக வடிவமைக்கப் பட்டுள்ளது கிறித்தவக் காப்பிய வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும். ஆசிரியரின் காலத்தில் வெளிவராமலும், அவரது காலத்திற்குப் பிறகு மறக்கப்பட்டும் இருந்த இப்பேரின்பக் காப்பியம் இப்பொழுது கிறித்தவ இலக்கிய ஆர்வலர்களின் முயற்சியால் வெளிவருவது இறைவனுடைய சித்தம் என்பதில் ஐயமில்லை.

V திருமறை மாந்தர் வரலாற்றுக் காப்பியங்கள்

17. யோசேப்புப் புராணம்

கிறித்தவக் காப்பியங்களுள் முழுமையாகக் கிடைக்காத கிறித்தவக் காப்பியம் யோசேப்புப் புராணம் என்பதாகும். இலங்கையில் எழுதப்பட்ட கிறித்தவக் காப்பியங்களுள் இது தொன்மையானது என்பதும் குறிப்பிடத்தக்கது. யோசேப்புப் புராணம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் கூழங்கைத் தம்பிரான் ஆவார்.

ஆசிரியர் வரலாறு

கூழங்கைத் தம்பிரான் தொண்டைமண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்தில் வேளாளர் குடியில் 1699ஆம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. ஆனால் இவரது இயற்பெயர் கனக சபாபதி யோகி என்று இருக்கலாம் எனக் கருதுகின்றனர் (பொ.பூலோகசிங்கம்(ப.ஆ), பாவலர் சரித்திர தீபகம், பகுதி 2, ப.140). தமது இளம் வயதில் காஞ்சிபுரத்தில் கல்வி பயின்ற பின்னர் தஞ்சை சார்ந்த திருவத்தூர் மடத்திலுள்ள தம்பிரானிடம் தத்துவமும் இறையியலும் கற்றார். இவருடைய கல்வித்திறனை அறிந்த தம்பிரான் தம் மடத்தில் உரிய மரியாதை கொடுத்தது மட்டுமன்றி தம்பிரான் பட்டமும் வழங்கிச் சிறப்பித்தார். இதுகண்டு பொறாமை கொண்ட மடத்திலுள்ள சிரேட்ட தம்பிரான் இவர் மீது வீண் பழிகளைச் சுமத்தியதுடன் கண்டிகை ஒன்றைத் திருடினார் என்ற திருட்டுப் பட்டத்தையும் சுமத்தினார். மேலும், இக்குற்றத்தைச் செய்யவில்லை என்றால் பழுக்கக் காய்ச்சிய இரும்பை வலது கையால் பிடித்து குற்றமின்மையை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டார். இவர் தன் நேர்மையை நிரூபிக்க, பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தம் வலது கையால் தூக்கினார். நல்ல கை வெந்து கூழங்கை ஆனது. அன்று முதல் இயற்பெயர் மறைந்து கூழங்கையார் என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது. இவர் திருவாவடுதுறை மடத்தில் தம்பிரானாக இருந்தார் என்றும்,

திருவாரூர் மடத்தில் தம்பிரானாக இருந்தார் என்றும், திருவத்தூர் மடத்தில் தம்பிரானாக இருந்தார் என்றும் மூன்று விதமான கருத்துகள் நிலவுகின்றன.

பின்னர் பிறந்த நாடு துறந்து, யாழ்ப்பாணம் சென்று, கண்டிக்குழை என்னும் பகுதியில் வாழ்ந்து வந்தார். இவருடைய கல்விச் சிறப்பைக் கேள்வியுற்ற பலரும் இவரிடம் வந்து கல்வி பயின்றனர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த கோபாலஞ் செட்டியாரும் கூழங்கைத் தம்பிரானும் நெருங்கிய நண்பர்களாயினர். இதனால் கோபாலஞ் செட்டியாரின் மகனான வைத்தியலிங்க செட்டியாருக்கு தம்பிரான் கல்வி கற்றுக் கொடுத்தார். ஆறுமுக நாவலரின் தந்தையான ப. கந்தப்பபிள்ளை இவரது மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இருபாலை நெல்லையப்ப முதலியார், மாதகல் மயில்வாகனப் புலவர், இருபாலை சேனாதிராச முதலியார், வைத்தியலிங்கச் செட்டியார் முதலானோர் கூழங்கைத் தம்பிரானின் மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இவரிடம் பயின்றதால் அருள்திரு. காபிரியேல் பச்சேக்கோ (Rev. Gabriel Pacheco) என்பவர் 'தேவப்பிரசைகளின் திருக்கதை' என்ற நூலை எழுதினார். தம்பிரான் தமிழில் மட்டுமின்றி டச்சு, போர்த்துக்கீசிய மொழிகளிலும் வல்லவராக விளங்கினார்.

கூழங்கைத் தம்பிரானுக்கும் கோவிந்த முதலியாருக்கும் கறவைப்பசு தொடர்பாக ஒரு வழக்கு இருந்தது. கோவிந்த முதலியாருடன் சண்டையிடுவது நல்லதல்ல எனப் பலரும் கூழங்கையாரிடம் அறிவுறுத்தினர். ஒரு நாள் முதலியார் வீட்டிலிருக்கும் போது இவர் அக்கறவைப் பசுவை அவிழ்த்து கோவிந்த முதலியாரின் தோட்டத்தில் அதனைக் கொண்டு நிறுத்திவிட்டு, கோவிந்தா! கோவிந்தா!! என உரக்க சத்தமிட்டார். இச்சத்தம் கேட்ட உடனேயே வீட்டிலுள்ளவர்களும் பக்கத்திலுள்ளவர்களும் கோவிந்த முதலியாரை இவ்வாறு அவமதிக்கலாமா எனக் கேட்டனர். உடனே அவர்களைப் பார்த்து இதில் என்ன தப்பு இருக்கிறது? கோ என்றால் பசு; இந்தா என்றால் வாங்கிப் போவீராக; அதாவது பசுவை வாங்கிப் போவீராக என்றுதானே கூறினேன் என அவர்களிடம் விளக்கம் செய்தார். இருவருக்கும் இருந்த வழக்கு அன்றோடு தீர்ந்து நட்பு பாராட்டினர். (சு.அ. இராமசாமிப் புலவர், தமிழ்ப் புலவர் வரிசை, பக். 76-78)

இலங்கையிலுள்ள நீதிமன்றத்தில் கோவிந்த முதலியார் என்பவர் நீதிபதிக்கு மொழிபெயர்ப்பாளராகச் செயல்பட்டு வந்தார். கோவிந்த முதலியார் தற்செருக்குடன் நடந்து கொள்பவர். கோவிந்த முதலியாரின் செயல்பாடுகள் கூழங்கைத் தம்பிரானுக்குப் பிடிக்காது. கூழங்கைத் தம்பிரான் ஒருநாள் அலுவல் நிமித்தமாக கோவிந்த முதலியார் பணியாற்றும் நீதிமன்றத்திற்குச் சென்றார். அங்கு அமர்வதற்கு இருக்கை இல்லாதபடியால் அங்கு நின்ற ஒருவரிடம் கோவிந்த முதலியாரைத்தேடி ஒருவர் வந்து காத்துக் கொண்டிருக்கிறார் என அவரிடம் கூறுவாயாக எனச் சொன்னார். அதனைக் கேள்விப்பட்டவுடன் கோவிந்த முதலியார் வெளியே வந்தார். ஆனால் அதே நேரத்தில் தம்பிரான் வேறு வழியாகச் சென்று முதலியாருடைய இருக்கையில் அமர்ந்தார். வெளியில் வந்து பார்த்து ஒருவரையும் காணாமல் உள்ளே சென்ற முதலியார் தமது இருக்கையில் தம்பிரான் அமர்ந்திருப்பதைக் கண்டார். அங்கிருந்த ஆங்கிலேயரான நீதிபதி இதைப் பார்த்து மிகுந்த கோபம் கொண்டார். தமிழ் தெரியாததால் நீதி வழங்குவதில் நீதிபதிக்கு முதலியார் உதவியாக இருந்து வந்தார். நீதிபதி கோவிந்த முதலியாரைப் பார்த்து, இந்த கருங்குரங்கு ஏன் உம்முடைய இருக்கையில் அமர்ந்தது? எனக் கேட்டார். தம்பிரான் சற்று கருப்பாக இருந்ததால் அவ்வாறு கேட்டார். நீதிபதியின் கூற்றைக் கேட்ட கூழங்கைத் தம்பிரான் கோபத்துடன் வெள்ளை நாயைக் கண்டமையால் குரங்கு மரத்தில் ஏறிக் கொண்டது என்றார். செல்வாக்குடைய தம்பிரானை நீதிபதியால் ஒன்றும் செய்ய இயலவில்லை (சு.அ. இராமசாமிப் புலவர், தமிழ்ப் புலவர் வரிசை, ப. 76).

கூழங்கைத் தம்பிரான் ஒருநாள் வைத்தியலிங்கச் செட்டியாரின் வீட்டிற்குச் சென்றார். அங்கு செட்டியாரின் தாயாரான சோழநாட்டிலுள்ள சங்கந்தி என்னும் ஊரைச் சார்ந்த தையலாச்சி அம்மையார் தம்பிரானை வரவேற்று அவருடைய கால்களில் விழுந்து வணங்கினார். தம்பிரான் அவர்களை வாழ்த்தி,

சங்கேந்தி தங்கச்சி தையலென்பாரிங்கவளும்
சங்கேந்தி தங்கச்சி தையலே - அங்கவளைக்
கோபாலன் றேவியெனக் கூறுவா ரிங்கவளும்
கோபாலன் றேவியெனக் கூறு

எனப் பாடினார். வைத்தியலிங்கச் செட்டியாரின் தந்தையார் பெயர் கோபாலச் செட்டியார் என்பதாகும்.

யாழ்ப்பாணத்தில் வைத்து யோசேப்புப் புராணம் இயற்றிய கூழங்கைத் தம்பிரான் முதிர்ந்த வயதில் 1795ஆம் ஆண்டு காலமானார். இவரது நல்லுடல், இலங்கையிலுள்ள நல்லூர் பங்கைச் சார்ந்த திருநெல்வேலியில் அடக்கம் செய்யப்பட்டது. இவர் அடக்கம்பண்ணப்பட்டது பற்றி ஒரு குறிப்பு உள்ளது. மிகவும் புனிதமானவர்கள் என்று சொல்லப் பெறுபவர்களில் சிலர் உப்பில் புதைக்கப்படுவதுண்டு. அவ்வாறு புதைக்கப்படும்போது இருக்கையில் இருந்த நிலையிலேயே அவர்கள் புதைக்கப் பெறுவர். அவர்கள் தொடர்ந்து பிரார்த்தனைப் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் எனக் கருதும் வகையில் இவ்வாறு அடக்கம் பண்ணப்படுவர். இவ்வாறு அடக்கம் பண்ணப் பட்டவர் கூழங்கைத் தம்பிரான் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

படைப்புகள்

கூழங்கைத் தம்பிரான் அவர்கள் சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை, நல்லைக் கலி வெண்பா, கூழங்கையர் வண்ணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். சித்தி விநாயகர் இரட்டை மணிமாலை என்னும் நூலிலிருந்து சான்றாக பாடல்:

முரட்டை யடக்கு மணிமூச்சரட்டிற் கோத்தாங்
இரட்டை மணிமாலை யென்னூற் - சரட்டேற்றக்
குக்கடவன் பனைமாக்கூழ்களி பனாட்டுநல்லைக்
கைக்குடவன் பனைமாக் காப்பு

தனிச்செய்யுள்
ஆசிரிய விருத்தம்

நதியரவ மதியிதழி புரிசடை யவிழ்ந்துநட
நண்ணுமா காசலிங்கம்
நால்வருக்குக் கலானிழலினல்லுபதேசம்
நவிலுற்ற மவுன லிங்கம்
நீதிபதி தனைப் புடைந்தோடினா யீசான
நிலைநின்றவேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க் கழற்கம்ப வடிவாகி
நின்றெழுஞ் சோதி லிங்கம்

துதிது திக்கையானையன் பொடும் போற்றிடுஞ்
சுயம்பான வம்பு லிங்கம்
துய்யவுணர் வோரி திய கமலாலியத்திலெழு
சுடற்போற் கொழுந்து லிங்கம்
மதிதவழு மதிலோடு கோபுரந் திகழ்வுறும்
வண்ணையெல்லை யினிறுத்தம்
மாதங்கபுரி தையல்பாகமிசை மீதமரும்
வைத்தீச மாலிங்கமே

மேலே குறிப்பிட்டுள்ள பாடல்களைச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நன்னூலுக்கு முதன் முதலாகக் காண்டிகையுரை கூழங்கைத் தம்பிரானால் எழுதப்பட்டது. அ. தாமோதரன் அவர்கள் மூலம் மறைந்து கிடந்த இவ்வுரையை ஹைடல்பெர்க் பல்கலைக்கழகத் தெற்காசிய நிறுவனத்தின் இந்தியவியல் துறை பதிப்பித்தது. இவ்வுரையில் அகத்தியம், தொல்காப்பியம், அகநானூறு, ஆத்திசூடி, ஐங்குறுநூறு, களவியல், களவியல் நாற்பது, குறுந்தொகை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, சூளாமணி, திருக்குறள், தேவாரம், நாலடியார், நான்மணிக்கடிகை, புறப்பொருள் வெண்பாமாலை, பதிற்றுப்பத்து, புறநானூறு, முத்தொள்ளாயிரம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் இடம்பெற்றுள்ளன. இவரது படைப்புகளில் இன்று முழுமையாகக் கிடைப்பது நன்னூலுக்கு இவர் எழுதிய உரையேயாகும்.

யோசேப்புப் புராணம்

யாழ்ப்பாணத்தில் போதகராக இருந்த அருள்திரு. தெ மெல்லோ (Rev. De Melho) மூலம் கூழங்கைத் தம்பிரான் கிறித்தவராக மாறினார். அதன் பயனாக யோசேப்புப் புராணம் என்னும் காப்பியத்தைப் படைத்தார். இக்காப்பியத்தைத் தான் கிறித்தவராக மாறுவதற்குக் காரணராக இருந்த அருள்திரு. மெல்லோப் போதகருக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளார். இக்காப்பியத்தை 21 காண்டங்களில் 1023 விருத்தப்பாக்களில் இயற்றியுள்ளார். காண்டங்கள் பல படலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இப்புராணம் நூலாக வெளிவரவில்லை. யோசேப்புப் புராணத்தின் ஒரு சில பகுதிகளே கிடைத்துள்ளன. அவற்றுள் இரண்டாவது படலமாகிய ஆற்றுப் படலத்திலிருந்து கீழ்க்கண்ட பாடல்கள் சான்றாகத் தரப்படுகின்றன:

1. பயம்பு விக்கருள் பயோதர மியாவும்வெண் டிரையால்
பயங்கொள் வேலையில் பரந்துவா ரிதியிடை படிந்து
பயங்க ளானவை பருகியப் பரவையின் வடிவாய்ப்
பயங்கள் கோரகை கொண்டிடப் பரந்ததம் பரமேல்

2. பரவு மால் ககு பங்களோ ரெட்டொடு வானைப்
புரவு வேந்தராள் புவியினைப் போர்த்தென விருண்டு
விரவு கின்றது விண்ணெனும் பந்தரின் கண்ணே
இரவு நேர்கரும் படாத்தினால் விதானஞ்செய் தென்ன

3. திருவு லாங்கலைப் பிலிப்புமே லோன்குருச் சிந்தை
மருவு ஞானநல் லொளியென மின்னிமற் றொன்வாய்ச்
சுருதி யாமெனத் தொனித்துன்னோ னுயிர்க்கரு டொலைமாக்
கருணை யாமெனப் பொழிந்தது காரிருட் புயலே

4. தேவ தேவநம் பராபரன் சீரணி சிறந்த
தாவி லாத்திரு நாமமே தயங்குறுஞ் சுத்த
மேவி டுஞ்சியோன் வரைக்குமஞ் சனம்புரி விதம்போல்
ஓவி லாமழை பெய்தென உலகுளோர் உவப்ப

5. இறும்பி னுச்சியில் பெய்திடும் புனலெலா மிழிந்தே
யெறும்பு சீயம்புல் லிருக்குடா வடியெலா மீர்த்து
நறும்ப ணைத் தரங்களைக் கொளித்துடன் நடந்து
வறும்பு னத்திடை உலாயது கடல்புரை வாவி

மண்ணுலகத்திற்குப் பயன்தர வேண்டும் என விரும்பிய மேகங்கள் யாவும் வெள்ளை நிறமானத் திரைகளைக் கொண்ட கடலில் பரவி, அங்குள்ள நீர்த் திவலைகளைப் பருகி, உலகம் பயன் கொள்வதற்காகக் கடலின் வடிவமாக மாறி வானத்தில் பரவியது. எட்டு திசைகளிலும் பரந்த அரசர்களுடைய படைகள் புவியினைச் சுற்றி வளைத்தது போன்று, மேகமானது இருள் நிறமாக அனைத்து இடங்களிலும் பரவுகிறது. வானமாகிய பந்தலுக்குக் கருந்துணி கட்டியது போன்று மேகமானது வானப் பந்தலில் காட்சியளித்தது. திரு உலாவுகின்ற கலைகள் நிறைந்த பிலிப்பினுடைய சிந்தையின் ஞான மிகுந்த ஒளி போல வானம் மின்னியது. அவனுடைய கடுமையான வாய்ச்சொல் போல் மேகம் முழங்கியது. அவனுடைய உயிருக்கு அருள் வழங்குவது போல மழைப் பொழிந்தது. உலகத்தவர்கள் மகிழ்ச்சியடைய தேவதேவன் நம் பராபரன் திருநாமத்தால் பொலிகின்ற தூய்மையான சீயோன் மலையை நீராட்டியது போல குறைவில்லாத மழை பெய்தது. மலையின் உச்சியில் பெய்த மழையெல்லாம் கீழே வழிந்து எறும்பு, சிங்கம், கரடி

எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு வந்து, மூங்கில்களிலுள்ள முத்துகளையெல்லாம் சேர்த்துக் கொண்டு முல்லை நிலத்திற்குள் புகுந்தது என்பது இப்பாடல்களின் கருத்தாகும். இப்பகுதிப் பாடல்கள் கம்பராமாயணத்திலுள்ள ஆற்றுப் படலத்திலுள்ள பாடல்களைப் போன்று உள்ளன.

யோசேப்பின் வரலாற்றைச் சிறந்த ஒரு காப்பியமாக இலங்கைப் புலவர் ஒருவர் ஆரம்ப காலத்தில் எழுதியிருப்பது போற்றத்தக்கது. இக்காப்பியம் முழுமையாகக் கிடைத்திருப்பின் அதன் இனிமையைச் சுவைத்திருக்கலாம். எனினும் மேற்கண்ட ஐந்து பாடல்களின் மூலம் காப்பியத்தின் சிறப்பினை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடிகின்றது.

18. எஸ்தர் காவியம்

கிறித்தவ இலக்கியத்தில் விவிலிய மாந்தர்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையான நூல்கள் உள்ளன. அவற்றுள் கிறித்தவக் காப்பியங்களான யோசேப்பு புராணம், எஸ்தர் காவியம் ஆகியவை விவிலிய மாந்தர்களைக் கொண்டு படைக்கப்பட்டவை. விவிலியத்திலிலுள்ள பழைய ஏற்பாடு என்னும் பகுதி 39 புத்தகங்களை உடையது. அவற்றுள் 17 ஆவது புத்தகம் எஸ்தரின் வரலாற்றை விளக்குகிறது. இப்புத்தகம் பத்து அதிகாரங்களால் ஆனது. எஸ்தர் காவியம் இன உணர்வை அடிப்படையாகக் கொண்டு இராபின்சன் குருசோ அவர்களால் படைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வரலாறு

செ.இராபின்சன் குருசோ 1938ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் நாள் உதகமண்டலத்தில் செ. செபாஸ்டியன் - பாக்கியமேரி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இத்தம்பதியினருக்கு ஒன்பது புதல்வர்களும் மூன்று புதல்வியரும் குழந்தைச் செல்வங்களாவர். இவர்களுள் மூன்றாமவர் இராபின்சன் குருசோ. இராபின்சன் குருசோ கல்லட்டி என்னும் ஊரிலுள்ள சி.எஸ்.ஐ. பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவரது மனைவியார் திருமதி பி.ஜி. பிரிஜிட் லவ்டேலிலுள்ள புனித அந்தோணியார் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றியவர். இராபின்சன் குருசோ தமிழ் இலக்கியப் பணிகள், ஆசிரியர் இயக்கங்களின் பணிகள், சமூக சேவைகள் ஆகியவற்றில் ஓய்வின்றிப் பணியாற்றியவர். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற நீலகிரி மாவட்டச் செயலராக இருந்தவர். நீலகிரி மாவட்ட ஜாக்டியின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக இருந்து ஆசிரியர்களின் ஊதியக்குழு ஆணை எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு 19 நாள் கோவை மத்தியக் குழுச் சிறையில் இருந்தவர்.

காப்பியக் கதைச் சுருக்கம்

அகாஸ்வேரு என்ற மன்னன் இந்து தேசம் முதல் எத்தியோப்பியா வரையிலான 127 நாடுகளையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் ஆண்ட பெருமைக்குரியவன். தன்னுடைய ஆட்சியின் சிறப்பை அனைவரும் அறிந்து கொள்ள

வேண்டும் என்பதற்காக 180 நாட்கள் நடைபெறும் விழா ஒன்றை ஏற்பாடு செய்தான். அவ்விழாவில் அனைத்து நாடுகளிலிருந்தும் மன்னர்கள் மற்றும் பிரபுக்கள் வரவழைக்கப்பட்டார்கள். அவ்விழாவின் முடிவிலுள்ள ஏழு நாட்களைச் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்து, நாட்டிலுள்ள அனைவருக்கும் அரண்மனையிலுள்ள அழகான மண்டபத்தில் விருந்து கொடுத்தான். அகாஸ்வேருவின் மனைவி வஸ்தியும் அரண்மனையில் பெண்களுக்காக விருந்து கொடுத்தாள்.

இறுதி நாளில் தன் மனைவி வஸ்தியின் பேரெழிலை விருந்துக்கு வந்த பிரபுக்கள் மற்றும் பிற மக்கள் காணும்படி, தம் முன்னர் அவளை வரவழைக்க ஏற்பாடு செய்தான். ஆனால் வஸ்தி வர மறுத்து விட்டாள். அதனால் அரசன், அமைச்சர்களின் ஆலோசனையைப் பெற்று வஸ்தியை பட்டத்தரசி என்னும் பட்டத்திலிருந்து தள்ளிவிட்டு வேறொரு அழகிய பெண்ணைத் தேர்ந்தெடுக்க உறுதி பூண்டான். அதன் பின்னர், அரசனுக்கு மறுமணம் செய்துவைக்க பற்பல நாடுகளிலிருந்து அழகிகளை வரவழைத்தனர்.

மொர்தெகாயின் சித்தப்பாவினுடைய மகள் எஸ்தர் என்பவள். இவள் பெர்சிய நாட்டிலுள்ள சூசான் என்னும் ஊரில் வாழ்ந்து வந்தாள். எஸ்தரின் தந்தையும் தாயும் இல்லாததால் தன் தங்கையான எஸ்தரை மகளைப் போன்று மொர்தெகாய் வளர்த்து வந்தான். பேரழகி எஸ்தரும் அரசனைத் திருமணம் செய்ய வந்திருக்கும் அழகிகளுடன் சேர்ந்து ஒப்பனை செய்யப் பட்டாள். அரசன் பல அழகிகளைப் பார்த்த போதும், மனம் எஸ்தரை விரும்பியது. அதன் பின்னர் அரசன் எஸ்தருக்கு மகுடம் அணிவித்துத் திருமணம் செய்து கொண்டான். மொர்தெகாயின் அறிவுரைப்படி தான் யூத இனத்தைச் சேர்ந்தவள் என்பதை வெளிப்படுத்தாமல் நடந்து கொண்டாள். மொர்தெகாய் வாசலில் உட்கார்ந்திருந்தபோது, வாசலில் காவல் காக்கின்ற காவலாளிகளாகிய மித்தானும் தேரேசும் அரசனின் மீது கொண்ட கோபத்தினால் அவரைக் கொலை செய்யச் சதி செய்தனர். அதனை மொர்தெகாய் எஸ்தருக்குத் தெரியப்படுத்தினான். அதை எஸ்தர் அரசனுக்கு அறிவித்தாள். மித்தானும் தேரேசும் தூக்கிலிடப்பட்டனர்.

பின்னர் அரசன் ஆமான் என்பவனுக்கு மேன்மையான நிலையைக் கொடுத்து அவனை அனைவரும் வணங்கும்படி

செய்தார். ஆனால் மொர்தெகாய் ஆமானை வணங்குவது இல்லை. இதனால் மொர்தெகாய் மீது ஆமான் கடுங்கோபம் கொண்டான். அரசனின் முத்திரை மோதிரத்தைப் பெற்ற ஆமான், யூதகுல மக்களை அழிக்க அரசன்பேரில் உத்தரவு பிறப்பித்தான். யூத மக்களுக்கு அழிவு ஏற்படப்போவதை அறிந்த மொர்தெகாயின் செயல்கள் மூலம் செய்தி எஸ்தருக்குச் சென்றது. யூதரினப் படுகொலைக்கு நாள் குறிக்கப்பட்டதை அறிந்த மொர்தெகாய் பொங்கி எழுந்து எஸ்தருக்கு இன உணர்வினை ஊட்டினான். எஸ்தரை யூதரின வெற்றிக்குக் கருவியாகப் பயன்படுத்தினான். எஸ்தர் அரசருக்கும் ஆமானுக்கும் ஒரு விருந்து ஏற்பாடு செய்தாள். ஆனால் அன்றிரவு அரசரின் உத்தரவு பெற்று மொர்தெகாயைத் தூக்கிலிட ஆமான் திட்டம் தீட்டியிருந்தான்.

அரசன் நளபடி புத்தகத்தை எடுத்துப் படிக்கும்போது அதில் மொர்தெகாய் அரசனைக் காப்பாற்றிய வரலாறு எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்த அரசன் ஆமானிடம் மொர்தெகாய்க்குச் சிறப்பு செய்யக் கட்டளையிட்டான். மொர்தெகாயை அழிக்கத் திட்டத் தீட்டிய ஆமானுக்கு அரசனின் இச்செயலை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அதனால் ஆமான் நிலை கலங்கினான்.

ஆமானின் சூழ்ச்சியை எடுத்துக்கூறுவதற்காக எஸ்தர், அரசனையும் ஆமானையும் விருந்துக்கு அழைத்தாள். பின்னர் அரசனிடம் எஸ்தர் என் இனத்தையை அழிக்கத் திட்டமிட்டவன் ஆமான் என்பதை எடுத்துக் கூறினாள். இதனைக் கேட்ட அரசன் ஆமான் மீது கோபம் கொண்டான்.

அரசி எஸ்தரிடம் ஆமான் உயிர்ப் பிச்சைக் கேட்கச் சென்றான். அப்போது ஆமான் நிலைதடுமாறி அரசியின் படுக்கையில் வீழ்ந்தான். இதனைக் கண்ட அரசன், எஸ்தர் அரசியிடம் தவறாக நடந்து கொள்ள முற்பட்டான் என நினைத்து ஆமானைத் தூக்கிலிட ஆணை பிறப்பித்தார். அதன் பின்னர் எஸ்தர் அரசனிடம் யூதரினத்தைக் காப்பாற்ற சட்டமியற்றக் கூறினாள். அதனால் யூதர்கள் காக்கப்பட்டனர்.

நூல் எழுதிய சூழலும் நோக்கமும்

இராபின்சன் குருசோ எஸ்தர் காப்பியத்தைப் படைத்ததற்கான சூழலைத் தமது நூலின் முன்னுரையில்,

> கவியரசர் கண்ணதாசன் எழுதிய இயேசு காவியத்தை என் அன்புத் தங்கை மேரி லாரன்ஸ் கண்டு அதை என்னிடம் வழங்கி, அண்ணா இதுபோல ஒரு இறவாத காவியத்தை நீங்களும் எழுதக் கூடாதா? என்று என் உள்ளத்தைக் கிளறிச் சென்றாள். எஸ்தர் வரலாறு என்னைத் தட்டி எழுப்பியது. இதுவரை காவியத்தில் எவரும் தொடாத இனமான நூலாக எஸ்தர் காவியத்தைப் படைத்தேன் (என்னுரை, ப. IX)

எனக் குறிப்பிடுகிறார். மேலும் நூலின் நோக்கத்தை,

> காவியத்தில் காணும் இனஉணர்வை, ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் பெற்று உலகமெங்கும் பரவியுள்ள தமிழன், இனத்தால் மொழியால் ஒன்றாதல் வேண்டும் என்பதே எஸ்தர் காவியத்தில் கூறும் நல்லுரையாகும் (என்னுரை, ப. IX)

என விவரிக்கிறார். இக்கருத்தை முன்னுரையில் மட்டுமன்றி நூலின் தொடக்கப் பகுதியான சுத்த வரலாறு சத்திய வேதம் என்னும் தலைப்பில்,

> **கற்பனைக் காதைதான் இல்லையீது என்பதால்**
> **காவியம் செய்திடத் துணிந்தனன் உணர்வால்**
> **தற்பொழுது வேண்டியது இனமான உணர்வே**
> **தாகமாய் எழுதினேன் தன்மானம் செழிக்க** (பா.3)

எனக் கவிதையாக வடிக்கிறார். இன உணர்வைக் காவியத் தலைவி எஸ்தருக்கு ஊட்டியவர் மொர்தெகாய் என்பவர். எஸ்தர் என்னும் பெண்ணின் இன உணர்வினால் யூத இனம் முற்றிலுமாக மீட்கப்பட்டது என்பதை மையப்படுத்துவதே இந்நூலின் நோக்கமாக அமைகிறது.

அமைப்பும் பகுப்பும்

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கும் எஸ்தர் காவியம் ஏழு பாகங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை 1. மகத்தான வாழ்வும் மகாராணி வஸ்தியும், 2. மன்னவர் மனமாற்றம், 3. அழிவுப்பாதை நோக்கி ஆமான், 4. இனப்படு கொலையும் இதயம் குமுறிய மொர்தெகாயும், 5. இனமான உணர்வு கொண்ட எஸ்தர் எழுச்சியும் ஆமான் வீழ்ச்சியும், 6. எழுச்சி கொண்ட போர்முரசு, 7. இனத்தின் வெற்றியும் இனிய விழாவும்

என்பனவாகும். இக்காப்பியத்திலுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 860 ஆகும்.

முதல் பாகம்

மகத்தான வாழ்வும் மகாராணி வஸ்தியும் என்னும் முதல் பாகத்தில் மன்னனின் மகத்துவம், அகாஸ்வேருக்காக எடுக்கப்பட்ட 180 நாள் விழா, சூசான் அரண்மனையின் அலங்காரம், விருந்தின் சிறப்பு, அரசி வஸ்தி மன்னனின் வேண்டுகோளை அவமதித்தது, மன்னனின் சீற்றம், பண்டிதர் மெமுகான் உரைத்த ஆலோசனை, அரசர் வஸ்தியை நீக்குதல், வஸ்தியின் வீழ்ச்சி ஆகிய செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. இப்பாகம் 81 பாடல்களை உடையது.

இரண்டாம் பாகம்

இரண்டாம் பாகமான மன்னவர் மனமாற்றம் என்னும் பகுதியில் மன்னவர் மனநிலை, மொர்தெகாய் வரலாறு, எஸ்தர் வரலாறு, எஸ்தரின் எழில், கன்னிமாடத்தில் கன்னியரைச் சேர்த்தல், எஸ்தரைக் கன்னிமாடத்தில் சேர்த்தல், காவலர் யேகாயின் கண்களில் எஸ்தர் இரக்கம்பெறல், எஸ்தர் முறையும் மன்னர் நிலையும், மணமும் விருந்தும், மன்னரைக் கொல்லும் சதியை முறித்த மொர்தெகாய் ஆகிய செய்திகள் விளக்கப் பட்டுள்ளன. இரண்டாவது பாகம் 98 பாடல்களைக் கொண்டது.

மூன்றாம் பாகம்

அழிவுப்பாதை நோக்கி ஆமான் என்னும் மூன்றாம் பாகத்தில் அரசன் ஆமானை உயர்த்துதல், ஆமானை வணங்க மொர்தேகாய் மறுத்தல், ஆமானிடம் ஊழியர் புறங்கூறல், யூத இனத்தை அழிக்க ஆமான் நடத்திய சூழ்ச்சி, ஆமானுக்கு மன்னர் அளித்த அதிகாரம், ஆமானின் உரை, சூசான் நகரக் கலக்கம் ஆகிய செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. இம்மூன்றாவது பாகம் 57 பாடல்களை உடையது.

நான்காம் பாகம்

இனப்படுகொலையும் இதயம் குமுறிய மொர்தெகாயும் என்னும் நான்காம் பாகத்தில் இனப்படுகொலைச் செய்தி கேட்ட மொர்தெகாயின் கதறல், யூத இனத்தின் புலம்பல், தாதிகள் எஸ்தருக்குச் செய்தி உரைத்தல், ஊழியர் மொர்தெகாயைக் கண்டு ஆடை வழங்கலும் மொர்தெகாய் மறுத்தலும், ஆத்தாகு

மொர்தெகாயைக் காணல், மொர்தெகாய் ஆத்தாகுக்கு கூறிய மறுமொழி, ஆத்தாகு எஸ்தரிடம் உரைத்தல், மறுப்புரை கூறி மீண்டும் ஆத்தாகுவை அனுப்புதல், மொர்தெகாயின் கடுமையான எச்சரிப்பு, மொர்தெகாய் எஸ்தரிடம் சொல்லச் சொன்ன உருக்கமான கூற்று, எஸ்தர் உரைத்தபடி மொர்தெகாய் செய்தல் ஆகிய கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன. நான்காவது பாகம் 84 பாடல்களைக் கொண்டது.

ஐந்தாம் பாகம்

இனமான உணர்வு கொண்ட எஸ்தர் எழுச்சியும் ஆமான் வீழ்ச்சியும் என்னும் ஐந்தாவது பாகம் வெள்ளையாடை உடுத்தி எஸ்தர் வேந்தனிடம் செல்லுதல், ஐயன் கருணையும் எஸ்தர் பிழைப்பும், அரசன் அன்பும் அவன் வினாவிய பண்பும், எஸ்தர் அழைப்பை அரசன் ஏற்றல், எஸ்தர் மனையில் எழில் பெறும் விருந்து, அரசன் வினாவும் எஸ்தர் விடையும், ஆமான் மகிழ்ச்சியும் அதிர்ச்சியும், ஆமானின் அறைகூவல், ஆமான் தன் மனைவியாகிய சிரேசாளிடம் கூறல், ஆமான் நண்பர்களுடன் ஆலோசனை நடத்துதல், ஆமானின் தற்புகழ்ச்சி, மனைவியின் சொல்லைத் தட்டாத ஆமான், தூக்கு மரம் நிறுவ ஆணையிடல் ஆகிய செய்திகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. ஐந்தாவது பாகம் 105 பாடல்களைக் கொண்டது.

ஆறாம் பாகம்

எழுச்சி கொண்ட யூதரின் போர் முரசு என்னும் ஆறாம் பாகத்தில் மக்களின் நிலையும் மன்னன் நிலையும், நாட்குறிப்பைப் புரட்டிப் பார்த்தல், மொர்தெகாய் உயர்த்தப்படுதல், நினைத்த காரியம் நிறைவேறா ஆமான், ஆமானின் ஆசைக் கூற்று, ஆமானின் அதிர்ச்சியும் வீழ்ச்சியும், மொர்தெகாயை உலாக் கொணர்தல், ஆமான் மனங்கசந்து கலங்குதல், எஸ்தரின் இனம் மீட்கும் மன்றாட்டு, துரோகி ஆமான், அரசன் பார்வையும் ஆமான் நிலையும், ஆமானின் மறைவு ஆகிய செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆறாவது பாகம் 141 பாடல்களை உடையது.

ஏழாம் பாகம்

இனத்தின் வெற்றியும் இனிய விழாவும் என்னும் இறுதிப் பாகமான ஏழாவது பாகம் ஆமான் அரன்மனையை அரசிக்கு அளித்தல், எஸ்தர் தான் யூதர் இனமென இயம்புதல்,

ஆமானின் கணையாழியை மொர்தெகாய்க்கு அணிவித்தல், எஸ்தருக்கு மொர்தெகாய் இன உணர்வை மூட்டுதல், அரசன் அவையில் எஸ்தர் முறையீடு, அரசன் கூற்று, எஸ்தர் மன்றாட்டு, எஸ்தர் கண்ணீர் முறையீடு, அரசன் பெயரில் மடல் வரைய உரிமையளித்தல், மூப்பர்களுடன் ஆலோசனை, முத்திரை பதித்த அரசன் மடல், அரச உடையில் மொர்தெகாயின் உணர்ச்சி உலா, யூதர்கள் நிலை, வஞ்சகர் வதைப்படல், யூதரின் போர்க்களப் பாடல், எஸ்தரின் இரண்டாம் மன்றாட்டு, அரசன் கூற்று, பூரீம் விழா, இன உணர்வு வென்றதால் மகிழ்ச்சி, மொர்தெகாயின் கடிதம் கண்ட யூதர்கள் மகிழ்ச்சி, யூதர் இனத்தின் தானைத் தலைவன் மொர்தெகாய், இனமான உணர்வு காத்த இளவரசி எஸ்தர், யூதர் இனப் பெருமை, எஸ்தர் காட்டிய இன உணர்வு, காவியத் தலைவி எஸ்தர் வாழ்த்து ஆகிய செய்திகளைக் கொண்டது. ஏழாவது பாகம் 292 பாடல்களைக் கொண்டுள்ளது.

தலைமை மாந்தர் - எஸ்தர்

எஸ்தர் காவியத்தின் தலைமை மாந்தராக எஸ்தர் படைக்கப்பட்டுள்ளாள். வரலாற்று மாந்தரான எஸ்தரின் வரலாறு விவிலியத்தில் இடம்பெற்றுள்ளது. எஸ்தர் யூத இனம் வாழ வழிகாட்டியவள் என்பது குறிப்பிடத்தக்கது. எஸ்தர் அழகு, அன்பு, பண்பு என்னும் அனைத்தையும் ஒருங்கே பெற்றவள். இதை ஆசிரியர்,

> **சொற்கள் உள்ளத்தை அள்ளும்**
> **சொக்கிடும் புன்னகை துள்ளும்**
> **பற்களே முத்துச் சரங்கள்**
> **பாளைச் சிரிப்பின் முகத்தாள்**
> **கற்கண்டு இனிமை அதரம்**
> **காட்டுத் தேனின் மதுரம்**
> **நற்குணப் பண்பின் சிகரம்**
> **நறுந்தேன் பொற்குடம் எஸ்தர்** ***(பா.119)***

எனவும்,

> **கிளிமொழி பேசும் குரலினாள்**
> **கீர்த்தி பெற்றுள்ள அழகினாள்**
> **கனிமனங் கொள்ளும் எழிலினாள்**
> **கனியா யினிக்கும் சுவையினாள்**
> **விழிகள் இரண்டும் நீலமலர்**
> **வீணை ஒலியின் பேச்சினாள்**

குழிகள் விழுந்திடும் கன்னத்தாள்
குமுத மலரெனச் சிரித்திடுவாள் (பா.121)

எனவும் பாடல்களாக வடிக்கின்றார். கிளி போல் மொழி பேசும் குரலை உடையவள், உலகப் புகழ் பெற்ற அழகை உடையவள், மனதைக் கனிவிக்கும் எழிலைக் கொண்டு கனிபோல் இனிக்கும் சுவையுடையவள், நீல மலர்கள் போன்ற விழிகள் கொண்ட அவள் வீணை போல் ஒலிக்கின்ற இனிய பேச்சை உடையவள். குழி விழுந்திடும் கன்னத்தைக் கொண்ட அவள் குவளை மலரெனச் சிரித்திடுவாள் என்றெல்லாம் எஸ்தரை வருணிக்கும் ஆசிரியர்,

மானது மானம் என்பது
மாண்புற அவளிடம் காண்பது
தேனது சுவையின் இனிமையைத்
தேக்கியே வைத்துள பொற்குடம்
வானது நீரிலே பூத்திட்ட
வாடா மலரினள் எஸ்தர்தான்
காணும் அழகினைச் செப்பிடக்
கவிதை வரிகள் போதாவே (பா.123)

என்னும் பாடல் வாயிலாக எஸ்தர் கவரிமானினது மானம் போன்ற மாண்பைக் கொண்டவள், தேன் நிறைந்துள்ள பொற்குடம் போல் இனிமை அனைத்தையும் தேக்கி வைத்துள்ளவள், எப்பொழுதும் வாடாத மலரைப் போன்றவள், அவளது மேனியழகினை முழுவதும் சொல்லிடக் கவிதை வரிகளே போதாது என்கிறார். இப்படிப்பட்ட சிறந்த அழகையும், 'மட்டில் குணத்தின் குன்றத்தாள்', 'நற்குணப் பண்பின் சிகரம்' என்று ஆசிரியர் கூறும் அளவிற்கு சிறந்த பண்பையும் கொண்டவளாகத் திகழ்கிறாள். தன்னுடைய சிறிய தந்தையின் மீது மிகுந்த பாசம் நிறைந்தவளாகவும், தன்னுடைய கணவன் அகாஸ்வேருவிடம் மதிப்பும் அன்பும் கொண்டவளாகவும் விளங்குகிறாள். யூத இனத்தைக் காப்பதற்காகத் தன்னுடைய உயிரைப் பெரிதாக மதிக்காதத் தன்மை நிறைந்தவளாக இருக்கின்றாள். அரசனிடம் தனது இனத்தின் நிலைமையைப் பின்வருமாறு விவரிக்கின்றாள்:

நக்கியே இனத்தின் ரத்தத்தை
நரிபோற் குடிக்க மாறினார்

சிக்கியே தவிக்கும் மறிகளாய்
செத்திடும் பிறவிகள் எங்களினம்
மக்கியே மண்ணாவ துறுதிதான்
மானத்தோ டேயுயிர் போகுக
உக்கியே யானும் அழுகின்றேன்
உயர்ந்தநும் சமுகத்தைத் தொழுகின்றேன்
(பா.621)

இப்பாடலில் நரிகளிடம் அகப்பட்டுக் கொண்ட ஆடுகளைப் போல யூத இனம் அகப்பட்டுக் கொண்டு துன்பம் அனுபவிப்பதை ஆசிரியர் விவரிக்கிறார். எஸ்தர் இரண்டாவது முறையாக அரசனிடம்,

இனத்தை மீட்கும் எண்ணத்தால்
இதயங் குமுறி நின்றேன்
மனத்தின் கவலை நீங்க
மன்ன என்னைத் தாங்கினை
கனத்தில் உயர்ந்துநான் ஓங்கக்
காவல கனிவு காட்டினை
தனத்தைப் பணத்தை வேண்டிலேன்
சனத்தைக் காக்க வேண்டினேன் (பா.718)

என முறையிடுகின்றாள். எஸ்தர் இறுதியில் யூத இனத்தையே காக்கின்ற ஒப்பற்ற படைப்பாகப் படைக்கப்பட்டுள்ளாள். யூத இனத்தைக் காப்பதற்காக தன்னுடைய உயிரைக் கூட பெரிதாக மதிக்காத தன்மை கொண்டவளாக இருக்கின்றாள்.

எஸ்தர் தன்னுடைய இனம் துன்புறாமல் இருக்க வேண்டும் என்னும் நல்லெண்ணம் உடையவளாகக் காணப்பட்டாள். எஸ்தரின் மானுட மேம்பாட்டுச் சிந்தனை இன்றைய நிலையில் குறிப்பிடத்தக்கது. இனமான உணர்வை எஸ்தருக்கு ஊட்டிய மேதை மொர்தெகாய்; இனமான உணர்வு கொண்டு யூத இனத்தை மீட்டவள் இளவரசி எஸ்தர். ஒரு பெண் கொண்ட இனமான உணர்வால் யூத இனம் மீட்கப்பட்டது. யூத இனம் எஸ்தரால் மேம்பாடு அடைந்தது.

இனத்தின் உணர்ச்சி யொன்றே
யின்னைய என்கோ ரிக்கை
சினத்தின் மன்னன் மாறின்
சிறிதும் அஞ்சா திறப்பேன்
மனத்தின் எண்ணிப் பார்த்து
மதித்தென் வேண்டுகை நாளைத்

தினத்தில் செயல்பட வேண்டும்
சிந்தைச் செய்தி இதுவே (ப.169)

என எஸ்தர் உரைக்கிறாள். மனிதர்கள் ஒருவருக்கொருவர் நேசம் உடையவர்களாக விளங்க வேண்டும். உலக அமைதிக்கு இதுவே அடிப்படை. இதை,

அயலானை நேசியென்று இயேசுவும் சொன்னார்
அவரது மொழியில் உலக அமைதி
வியலுற அடங்கியே யுள்ளதை யுணர்ந்தால்
வீழ்த்தி அழிக்கும் போர்வகை மூழுமா
கயமையைப் பிணஞ்சுடு காடென உலகைக்
கடிதினில் ஆக்கும் கருவியை ஒழிப்போம்
நயனுற ஒருவரோ டொருவரை நணுகி
நாம்வரு நாள்முதல் நன்மைகள் புரிவோம் (ப.267)

என்கிறார். எஸ்தர் காவியத்தின் ஆசிரியரான இராபின்சன் குருசோ தன்னுடைய காவியத்தில் பல விவிலிய மாந்தர்களை உலவ விட்டிருக்கிறார். இவர்களைப் போல் வாழ வேண்டும் என்பதை விளக்கும் விதமாக எஸ்தர், மொர்தெகாய், அரசனாகிய அகாஸ்வேரு ஆகியோரையும், இவர்களைப் போல வாழக் கூடாது என்பதற்காக வஸ்தி, ஆமான், ஆமானின் மனைவியான சிரேசாள் முதலியவர்களையும் படைத்திருக்கிறார்.

மொர்தெகாய்

மொர்தெகாயின் சிறிய தந்தையின் மகள் எஸ்தர் ஆவாள். இவர் அன்புடனும் பாசத்துடனும் எஸ்தரை வளர்க்கிறார்.

அண்ணன் முறையான் மொர்தெகாய்
அனைவரையும் இழந்த எஸ்தரைக்
கண்மணி போல கலங்காமல்
காத்தனன் அன்பாய் வளர்த்தனன் (பா. 117)

என்னும் இத்தகைய பாசம் நிறைந்த அண்ணனாக இருக்கின்றான். எஸ்தரின் மேல் கொண்ட பாசத்தைப் போல் இன உணர்வின் மீது அவன் கொண்ட பற்றும் அளப்பரியது. மொர்தெகாய் இன உணர்வு மிக்கவன் என்பதை, 'இனமதன் உணர்வுதான் இமயம் போன்றுற முனகிய வாயினன்' என்கிறார். மேலும் அவருடைய பண்பை விளக்குவதற்கு, 'ஊணுறக்கம் இல்லாத மொர்தெகாயன்' என்றும் 'தர்மம் ஒன்றே தலையெனக் கருதும் மொர்தெகாய்' என்றும் கூறுகிறார். யூத இனம் எஸ்தர்

மூலம் விடுதலை அடைவதற்குக் காரணமாக இருந்தவன் மொர்தெகாய். இவனுடையத் திட்டங்களின்படி எஸ்தர் செயல்பட்டதால் யூத இனத்திற்கு விடுதலைக் கிடைத்தது. இப்படிப்பட்ட மொர்தெகாயின் இன உணர்வினைப் பாராட்டும் வகையில் குருசோ அவர்கள் 'யூதர் இனத்தின் தானைத் தலைவன் மொர்தெகாய்' என்று காவிய முடிவில் பல பாடல்களை எழுதியிருக்கிறார். சான்றாகச் சில பாடல்கள் வருமாறு:

வேர்முதலா கச்சாய்க்கும் வெறிபிடித்த இனப்போரில்
போர்முனைக் கவசத்தைப் போலப் படைதடுக்கும்
ஏர்தரும் கேடயத்தை யேய்ப்பவன் யூதர்க்குக்
கூர்மதியாய்த் துணைபுரிந்த கோமகனே மொர்தெகாய்
(பா.801)

எத்தனை தாக்குதல் எத்தனை ஏச்சுகள்
எத்தனை இழிமொழி எத்தனை தூற்றுதல்
அத்தனை யும்அம் பாகநெஞ் சுற்றபோது
வித்தக உணர்வினால் வென்றவன் மொர்தெகாய் (பா.803)

இனவுணர் வாமுரம் இட்டும் அன்புநீர்
தினந்தினம் சொரிந்தும் எஸ்தர்ச் செங்கரும்பு
தனதனாய் மன்னவன் இன்பமாம் சாற்றினை
மனமுறப் பருகவே வளர்த்தவன் மொர்தெகாய் (பா.805)

மண்ணிடை மாந்தரில் மலையென வாழ்ந்தவன்
கண்ணிடை இரக்கமும் கனிவுங் கொண்டவன்
புண்ணிய வடிவினன் புந்தியில் மிக்கவன்
விண்ணள வுயர்புகழ் மேயவன் மொர்தெகாய் (பா.806)

வஸ்தி

மன்னன் அகாஸ்வேருவின் முதல் மனைவி வஸ்தி. சினம் உடையவள், கர்வம் கொண்டவள் என்று வஸ்தியை அறிமுகம் செய்கிறார். தன்னுடைய இறுமாப்பினால் அரசி என்ற கௌரவத்தை இழந்தாள். வஸ்தியின் பண்பைக் குறிப்பிடும் போது ஆசிரியர்,

நச்சுறு பாம்பின் நாவினை உடையவள்
அச்சமது இல்லா செருக்கின் கடையவள் (பா.59)

என்று குறிப்பிடுகிறார். வஸ்தி என்ற மாந்தர் படைப்பு எதற்காக என்று தன்னுடைய பாடல் அடிகள் மூலமே விளக்குகிறார்.

நாக்கு நீண்டிட்ட வஸ்தியோ
நாணி நடுத்தெரு நின்றாள்
தூக்கி யெறியவும் பட்டாள்
துணையும் புகழுமே விட்டாள்
போக்குறும் ஆட்டினைப் போன்றாள்
போகுத லானாள் தனித்து
நாக்கு அடங்காமலே பேசும்
நங்கையர்க்கு அவளொரு பாடம் (பா.81)

என்று வஸ்தியின் மாந்தர் படைப்பைப் பாகம் ஒன்றிலேயே முடித்துவிடுகிறார்.

அரசன் அகாஸ்வேரு

மன்னன் அகாஸ்வேரு பற்றி ஆசிரியர், 'தன்னிகர் இல்லா அரசன்', 'சால்பும் மேன்மையும் மிக்கான்' என்று கூறுகிறார். மேலும் மன்னன் தன் நாட்டு மக்கள், அமைச்சர்கள் ஆகியோரின் சொற்களை மதிக்கும் தன்மை வாய்ந்தவனாக இருக்கிறான். எஸ்தரின் மீது அளவு கடந்த பாசம் கொண்டவனாக விளங்குகிறான். 'நின்றாரும் எனதுயிர் உள்ளது வரையில் நீங்காது நின்மீது வைத்துள பாசம்' என்றும், 'எனதுயிர் வேண்டித் தொடரினும் வழங்குவேன்' என்றும் அவன் எஸ்தரிடம் கூறிய சொற்களே அவனுடைய பாசத்தைப் பிரதிபலிக்கின்றன. இவ்வாறு அரசன் இக்காவியத்தில் படைக்கப்பட்டுள்ளான்.

ஆமான்

ஆமான் என்ற மாந்தரை மையமாகக் கொண்டே காவியம் இறுதிவரைச் செல்கிறது. மொர்தெகாயின் பண்புகளோடு ஒப்பிட முடியாத முரண்பட்ட பண்புகள் நிறைந்தவனாக ஆமான் காணப்படுகின்றான்.

அரசனிடமும் உண்மையான நேர்மையான தன்மை கொண்டவனாக நடக்கவில்லை. இம்மாந்தரின் பண்புகளை விளக்க இதை விட சிறந்த சான்றுகளே தேவையில்லை என்று கூறும் அளவிற்கு, சொல்லாட்சிகளை குருசோ பயன்படுத்தி இருக்கிறார். 'மதியேயில்லா ஆமான்', 'முரண்படு நெஞ்சுடையவன்', 'ரத்தம் பருகும் ஓநாயைப் போன்றவன்', 'கயவன்', 'ஈனன்', 'கோணல் அறிவுடையவன்', 'தொத்துநோய் போன்றவன்', 'கொடுமை கோபுரம்' என்று கூறுகிறார். மொர்தெகாய் தன்னை வணங்கவில்லை என்பதற்காக

ஒட்டுமொத்த யூத இனத்தையே அழிக்க சட்டம் வகுத்த கொடும்பாவியாகச் சித்திரிக்கப்படுகிறான். இறுதியில் மொர்தெகாய்க்கு ஏற்படுத்தப்பட்ட கழுமரத்தில் ஆமான் தூக்கிலிடப்பட்டான்.

சிரேசாள்

ஆமானின் மனைவி சிரேசா. அவனுடைய அனைத்து குறுக்குச் சிந்தனைகளுக்கும் துணையாக இருக்கிறாள் என்பதை அழகாக தன் பாடல் அடிகளில்,

மனைவியின் மொழியை மறாத ஆமான்
மந்திர மொழியென மதிப்பான் அவள் மொழி
மனைவியைக் கலந்தே மாண்வினை தொடர்வான்
மனத்தி லவள்மொழி மலையென நிற்கும் (பா.402)

என்று குறிப்பிடுகிறார். இவளுடைய முக்கிய நோக்கமே யூத இனத்தை அழிக்க ஆமானைத் தூண்டி விடுவதாகும். ஆமானுக்கு மொர்தெகாயைக் கொல்ல வழிமுறைகளைக் கூறுகிறாள்.

ஐம்பது முழத்திற் கழுமரம்
ஐயன் செய்ய வேண்டும்
வம்பது செய்யும் யூதனை
வளைத்துப் பிடித்துக் கட்டித்
தெம்பது குறையப் பண்ணிச்
சிறுகச் சிறுக ஏற்றிக்
கம்பது சாயா வண்ணம்
கழுத்தை நெரிக்க வேண்டும் (பா.408)

புழுவாய்த் துடித்துச் சாகவும்
புல்லன் உயிர்தான் போகவும்
கழுகுகள் கொத்தி உடலினைக்
காக்கைப் பறவைகள் தின்னவும்
கழுவில் மொர்தெ காயனின்
காட்சியை யூதர்கள் காணவும்
அழுதவர் புலம்பிக் கதறவும்
அவனைக் கொல்லுதல் வேண்டும் (பா.409)

என ஆவேசமாக ஆமானிடம் கட்டளையிடுகிறாள். இவ்வாறு மனித நேயமற்ற பல தீய சிந்தனைகளை விதைத்து அவனை அழிவுப் பாதைக்கு அழைத்துச் சென்ற முக்கியமான படைப்பாக விளங்குகிறாள்.

இலக்கிய நடை

எஸ்தர் காவியத்தில் ஆசிரியர் இன்ப, துன்ப உணர்வுகளை விளக்கும் அழகான வருணனைகளைப் பயன்படுத்தி இருக்கிறார். சங்க இலக்கியத் தாக்கத்துடன் சில வருணனைகள் காணப்படுகின்றன. இன உணர்வுச் செய்திகளைப் பல வருணனைகள் கொண்டு விளக்குகிறார். மேலும் உவமைகள், பழமொழிகள், குறட்கருத்துகள் உலகியல் உண்மைகள் போன்ற பல கருத்துகள் காவியம் முழுதும் ஊடாடி வருகின்றன.

வருணனைகள்

காவியத்தை மேன்மேலும் அழகுபடுத்திக் கூறுவது குருசோ அவர்களின் வருணனைகளே. ஆசிரியருக்குத் துன்பத்தை நம் மனதில் ஏற்படுத்தும் திறமையும், இன்பத்தில் திளைக்க வைக்கும் திறமையும் காணப்படுகின்றன.

சான்றாக, சூசான் நகர் எவ்வாறு விழாக் கோலம் பூண்டது, எப்படி அந்நகரத்தை அலங்கரித்தார்கள் என்ற செய்தியைப் படிக்கும்பொழுது, ஒரு மாபெரும் திருவிழாவிற்குச் சென்று வந்தது போன்ற உணர்வு நம்மிடை ஏற்படுகிறது. அரும்பு மீசையை உடைய ஆண்களும், ஆசை மொழிகளைப் பேசும் பெண்டிரும் அவ்வழியே கடந்து செல்கிறார்கள். மேலும்,

ஊதும் குழல்கள் ஏந்தியோர்
ஊதி வருமொடு கூட்டம்
காதுகள் குளிரும் இசைகள்
கானக் குயில்கள் போலும்
மாதுகள் பாடிடும் பாட்டை
மயங்கி ரசிக்கும் கூட்டம்
சாதுக்கள் என்பார்கண் டாலும்
சபலம் கொள்ளும் காட்சி **(பா.10)**

எனப் பாடுகிறார். இப்படிப்பட்ட ஆடம்பரத்திற்கு இடையில் படைகள் அணி அணியாகச் செல்கின்றன. இதேபோல் நாட்டுக்கு வந்த ஆபத்து போல ஆமானிடம் சூசான் நகரம் படுகின்ற துன்பத்தையும் அழகாக வருணிக்கின்றார்.

அற்பக் குணமுள்ளோர் ஆட்சிசெய் இந்நாளில்
அழுது புலம்பிற்றுச் சூசான் நகர் **(பா.236)**

நத்திப் பிழைக்கும் நரிகள் ஆள் இந்நாளில்
நடுங்கிக் கலக்கிற்றுச் சூசான் நகர் **(பா.237)**

என்று துன்பத்தை ஏற்படுத்தும் வருணனைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்.

சங்க இலக்கியச் சாயல் கொண்ட வருணனைகள்

எஸ்தர் காவியத்தில் சங்க இலக்கியச் சாயல் கொண்ட வருணனைகள் காணப்படுகின்றன.

1. வட்ட நிலா வடிவின் முகத்தாள்
2. கிளி மொழி பேசும் குரலினாள்
3. பவள வாய் அழகின் பான்மையளாள்
4. விழிகள் இரண்டும் நீலமலர்
5. அன்னம் நாணும் நடையாள்
6. மெல்ல நடந்தாள் முல்லை மலராள்

என்று எஸ்தரைப் பற்றிய வருணனையில் சங்க இலக்கியத்தின் தாக்கம் காணப்படுகிறது. பல்வேறு பாடல்களிலுள்ள இச்சான்றுகள் எஸ்தர் நிலவினைப் போன்ற வட்டமான முகத்தினை உடையவள், கிளியின் மொழி போன்ற இனிய குரலில் பேசுபவள், பவளத்தின் நிறம் போன்ற அழகிய வாயிதழ்களைக் கொண்டவள், நீல மலர்கள் போன்ற விழிகளைக் கொண்டவள், அன்னமும் நாணுகின்ற அழகிய நடையினை உடையவள், முல்லை மலர் போன்ற அவள் மெல்ல நடந்தாள் என ஆசிரியர் வருணிப்பதை எடுத்தியம்பு கின்றன. மேலும், அவளுடைய சிரிப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது,

அன்றன்று அலர்ந்த தாமரை போலவே
அகன்று மலர்ந்த நகைமுக எஸ்தர் **(பா.135)**

என்று இராபின்சன் குருசோ குறிப்பிடுகிறார். மன்னன் அகாஸ்வேரு அமர்ந்திருந்த விதத்தைக் குறிப்பிடும்போது,

அவையிடை அரியேறு போலவே
அரசன் அரியணை வீற்றிருந்தான்

என்பது போன்ற பல வருணனைகள் சங்க இலக்கியச் சாயலை உணர்த்துகின்றன.

உவமைகள்

இராபின்சன் குருசோ தன்னுடைய காவியத்தில் உவமைகளை வைத்தே காவியத்தின் கதைப் போக்கைக் கொண்டு சென்றிருக்கிறார். உவமைகளாலே பாடல்கள் சில படைக்கப்பட்டுள்ளன.

அகலக் கோவில் கலச மேலோர்
ஆந்தை அமர்ந்தது போல
அகலின் விளக்கடித் திரியில் எரிந்த
அவிந்த சிட்டம் போல
புகழ் சேர் சூசான் நகர நடுவில்
பூதம் நின்றது போல
இகழ்சார் தேக்குத் தூக்கு மரந்தான்
இங்கே நின்ற தெனலாம் **(பா.420)**

என்னும் பாடலிலுள்ள உவமைகளால் ஆமானின் சூழ்ச்சியால் நகரின் நடுவில் நாட்டிய தூக்கு மரத்தினை விவரிக்கிறார். மேலும் விண்ணில் மின்னும் மீன்போல் (பா.23) கூட்டைவிட் டலையும் குருவியைப் போலவே (பா.50) துடுப்புகள் இல்லா மரக்கலம் போலவே (பா.89), அகலின் விளக்காகத் திரியில் எரிந்த அவிர்ந்த சிட்டம் போல (பா.420), அனலில் உருகிடும் மெழுகைப் போல (பா.296), புனலில் கரையும் மண் வீடே போல் (பா.296), இலைகள் உதிர்ந்த மரம் போல் (பா.389), மதமிகு களிற்றி யானை மண்ணில் புரளுதல் போல (பா.391), கண்ணில் பாய்ந்த ஈட்டி போல (பா.479) மடுவிடை வீழ்ந்த சிங்கம் போல் (பா. 480) ஆட்டியும் ஆப்பை அசைத்தும் அலறும் குரங்கு போல (பா.எண்.530) வெட்டி வீழ்த்திய மரம் போல (பா.533), முகில்தான் மூடிய நிலாப்போல் (பா.534), தரிசு நிலம் போல் (பா.542), கள்ளுண் மந்தியைப் போல(பா.345), எரியும் நெருப்பில் எண்ணெயை எடுத்து வார்த்தது போல (பா.549), தினையை விதைத்தவன் தானே தினையை அறுப்பான் அதுபோல (பா.563), மடைவிட்ட வெள்ளம் போல (பா.608), உருவச் சிதைவுகொள் ஓவியம் போல (பா 744), நாடித் துடிப்பு நிற்கும் வேளையில் நல்ல மருத்துவர் கிடைத்தாற் போல (பா.788) என்பன போன்ற பல எளிய உவமைகள் காவியத்தினிடையில் காணப்படுகின்றன.

எதுகை மோனைச் சிறப்புகள்

காவியத்தின் அழகுக்கு அழகு சேர்ப்பதுபோல ஓசை நயத்துடன் கூடிய எதுகை மோனைகள் காவியம் முழுவதும் காணக் கிடைக்கின்றன. சான்றாக,

அரும்பு மீசை ஆண்கள்
　　ஆசை மொழிகள் பேசிக்
கரும்பு இதழ்க்கன் னியர்கள்
　　கடந்து செல்லும் காட்சி
பருவம் பூத்த இளமை
　　பார்க்க உள்ளம் மகிழும்
உருவம் எல்லாம் மகிழ்ச்சி
　　உணர்வெல் லாமும் கிளர்ச்சி (பா.15)

என்னும் பாடலைச் சுட்டலாம். இது போன்று பல பாடல்களிலும் எதுகை மோனைகள் பயின்று வருகின்றன.

பழமொழிகளும், குறட்கருத்துகளும்

இராபின்சன் குருசோ, எஸ்தர் கதைக்கு வலுவூட்ட பழமொழிகளையும், குறட்கருத்துகளையும் காவியத்தில் பயன்படுத்தி இருக்கிறார். 'நுணலும் தன் வாயால் கெடும்' என்ற பழமொழியை 'நுணலும் வாயால் கெட்டால் நொடியில் பாம்பும் விழுங்கும்' என்கிறார். 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்ற பழமொழியை 'கண்பட்டுப் போயின பின்னர் கதிரவன் காண்பது மடமை' என்று கூறுகிறார்.

குறள்களைப் பொறுத்த வரையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்படுத்தி இருக்கிறார். ஆமானுக்குத் துயர் நேர்ந்த போதும் அவனுடைய மனைவி அவனைக் கடிந்தாளே தவிர அவனைத் திருத்தவில்லை. ஆசிரியர் அதனை விளக்க,

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி (குறள்.1030)

என்னும் குறளைப் பயன்படுத்துகிறார். மேலும் ஆமானின் சூழ்ச்சியை உற்றுநோக்காமல் இருக்கும் மன்னனின் செயலுக்காக,

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் (குறள்.448)

என்னும் குறளை எடுத்துக் காட்டியுள்ளார். மேலும்,

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும் (குறள்.639)

போன்ற குறள்களை நேரடியாகவும், உயிரை விட மானத்தைப் பெரிதாகக் கொண்டவள் எஸ்தர் என்றும், அவள் கவரிமானது மானம் கொண்டவள் என்றும் கூறுவதிலிருந்து, மறைமுகமாக,

மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் (குறள்.969)

என்னும் இக்குறளைப் பயன்படுத்தி இருக்கிறார். மேலும் ஆமானின் சூழ்ச்சி அவனையே வீழ்த்தியது என்பதை,

தன்னெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும் (குறள்.293)

என்ற குறளின் செய்தியை மறைமுகமாகப் பயன்படுத்தி இருக்கிறார்.

உலகியல் உண்மைகள்

குருசோ அவர்கள் மனிதனின் வாழ்க்கையில் காணப்படும் எதார்த்தங்களையும், எக்காலத்திற்கும் பொருந்தும் உண்மைகளைப் பற்றியும் தெளிவாகக் கூறி இருக்கிறார். ஆமானை வணங்க மறுத்த மொர்தெகாய் வரப் போகின்ற துன்பம் உடனிருக்கிறது என்பதை அறியவில்லை என்று,

உடன்பிறந் தேநோய்கள் கொல்லுதல் செய்திடல்
உலகினில் உண்டென்ப தோர்கிலன் மொர்தெகாய்
இடங்கிடைத் தாலுடன் பச்சோந்தி யாவதும்
இவ்வுல கினர்செயல் என்பதும் எண்ணிலன் (பா.186)

என்றும்,

படமெடுத்தாடிடும் பாம்புகள் நம்மிடைப்
பாழும் மனிதராம் உண்டென்ற உண்மையைத்
தடம்பிற ழாதவம் மொர்தெகாய் கிஞ்சிற்றும்
தன்னது நெஞ்சினில் எண்ணவே யில்லையால்
(பா.187)

என்றும் கூறுகிறார். இன்றும் புகழுக்காக மயங்காத மக்களில்லை என்பதை,

திறங்கூறிப் புகழ்கூறும் போதினில்
திளையாத மக்களும் உள்ளரோ (பா.145)

என்று கூறுகிறார். சாவுகள் இயற்கை என்ற நிலையாமைக் கருத்தை,

சதமில்லா உலகில் சாவுகள் இயற்கை (பா.592)

என்கிறார். மேலும் வஞ்சம் புரிந்தவர்கள் அழிவார்கள் என்பதை,

வஞ்சம் புரிந்தவர் வாழ்ந்ததுண்டோ,
வாய்மை கொண்டவர் தாழ்ந்தது உண்டோ? (பா.628)

என்று தன் சொல்லாட்சியைப் பயன்படுத்தி இருக்கிறார். கடமைகளை உரிய காலத்தில் செய்ய வேண்டும் என்பதை,

கடுமை நிறைந்த காலத்துச் செய்யா
கடமை பின்னே யாருக் குதவும்? (பா.297)

என்று கூறுகிறார். மனிதன் உயர்வதற்கு,

தொண்டுகள் செய்பவன் உயர்வான்
தொடர்ந்து சிறப்புகள் பெறுவான் (பா.557)

என்று கூறுகிறார். இவையனைத்துமே கதையுடனே தொடர்புடையனவாகக் காணப்படினும், ஆசிரியர் எக்காலத்திற்கும் பயன்படக் கூடிய உலகியல் உண்மைகளைத் தான் கூறியிருக்கிறார் எனலாம்.

இன உணர்வுச் செய்திகள்

கதிரவனுடைய ஒளியை எவ்வாறு அதனிடம் இருந்து பிரித்தெடுக்க முடியாதோ அதுபோல குருசோ அவர்கள் இயற்றிய எஸ்தர் காவியத்தையும் இன உணர்வுச் செய்திகளையும் பிரிக்க முடியாதபடி எங்கும் விரவிக் கிடக்கின்றன.

ஆமான் யூத இனத்தை அழிக்க நாள் குறித்ததைக் கேட்ட மொர்தெகாய் கொதித்து, எஸ்தரை உடனே சென்று அரசனைப் பார்க்குமாறு கூறுகிறான். அரசன் அழைக்காமல் அரண்மனை செல்வது பெரிய குற்றம் என்பதால் தயங்கிய எஸ்தரிடம் ‘இன உணர்வு’ என்னும் புரட்சி விதையை,

ஆமையாய் நாமும் அடங்கி இருந்தால்
ஆமான் கொண்ட ஆணவம் உயரும்
ஊமையாய் நீயும் மௌனம் கொண்டால்
உலகம் தூற்றிச் சரித்திரம் வரையும் (பா.289)

என அறிவுறுத்துகிறான். மேலும்,

செத்துநாம் மடியினும் மடிவோம் யானின்று
செப்பிடும் மொழியினைக் கேளாய் எஸ்தர்!
எத்தனாம் ஆமான் செய்திடும் புரட்டை
எடுத்துநீ உரைத்திட அஞ்சுதல் வேண்டா

தொத்துநோய் ஆவான் நாட்டினுக் கன்னோன்
தொல்லையை நீக்கிடும் எல்லையைக் காண்பாய்
புத்துணர் வதுகொண்டு எழுகநீ எஸ்தர்!
பூமியில் வாழ்வா சாவா பார்ப்போம் (பா.303)

என வீறு கொண்டு மொர்தெகாய் பேசுகிறான். மேலும் எஸ்தரிடம் யூத இனம் இன்பமாக வாழ்ந்த நாட்களையும் தற்பொழுது அலையில் அகப்பட்ட துரும்பைப் போலவும், யானையின் வாயில் போடப்பட்ட கரும்பைப் போலவும் இருக்கிறது என்று யூதர்களின் அவல நிலையைக் கூறுகிறான். அதனால் ஏற்பட்ட தன் நிலையைக் கூறும்போது,

குலத்திற்கு வந்துற்ற அழிவால்
குமுறும் எரிமலை ஆகினேன் (பா. 613)

எனக் குறிப்பிடுகிறான். இவ்வாறெல்லாம் கூறி, இதனால் உனக்கு ஏற்பட்ட பயத்தை போக்கிக் கொள் என்று கூறினான். மேலும்,

திண்ணிய நெஞ்சமும் வேண்டும் அதன்கண்
தீவிர உணர்வு வேண்டும் (பா.303)

என்றும்,

குறைவாய் உன்னையே எண்ணியே விடலாம்
குலத்தையே காக்கும் கருவி நீ ஆகலாம்

என்றும் பலவிதமாகக் கூறி இன உணர்வினை எஸ்தருக்கு ஊட்டினான். உடனே எஸ்தர் தன் மனதில் துணிவை வரவழைத்துக் கொண்டாள். மேலும் தன் இன உணர்வை உணர்த்தும் வகையில்,

இனத்தின் உணர்வின் மிகையால்
இறக்கவுந் துணிந்து விட்டேன்
மனத்திற் கவலை கொள்ளது
மன்னவன் மண்டபஞ் செல்லுவேன்
சினத்திற் செங்கோல் நீட்டாது
சீறியே மன்ன னிருந்தால்
இனத்தின் மானங் காத்தாங்கு
இன்பமாய் இறந்து மடிவேன் (பா.315)

என்று கூறி அரசனிடம் சென்று, அவனுடைய அனுமதியைப் பெற்று யூதரினத்தைக் காக்கலாம் என்று நினைத்து தைரியமாகச் செல்கிறாள்.

இறுதியில் எஸ்தரின் நிலையைப் பார்த்து, அரசன் அனைத்தையும் ஆராய்ந்து அறிந்து அதன் பிறகு தன் முடிவைத் தெரிவிக்கிறான். இறுதியில் மன்னன்,

> **தொல்லை கண்டவர் யூதரினத்**
> **துன்பத்தை இன்பமாய் மாற்றுவேன்** (பா. 621)

என்று கூறி, எஸ்தரின் துன்பத்தை இன்பமாய் மாற்றினான்.

இனமான உணர்வு

இராபின்சன் குருசோ தமது காவியத்தில் இனமான உணர்வு பற்றிய தமது கருத்துகளைப் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். இக்கருத்துகளைக் கூறுமிடத்து உணர்வு பொங்க கூறியிருப்பதை பாடல்களைப் படிக்கும்போதே அறிந்து கொள்ள முடிகிறது. சான்றாக,

> **இனமான உணர்வுகள் என்பன மாந்தரின்**
> **இரத்தத்திற் கலந்த இயல்பான உணர்வு**
> **தனதாட்சித் திமிராலே ஒன்றுமற் றொன்றினைத்**
> **தாக்குதல் இனங்களுக் கழகான தில்லை**
> **வனவிலங் கல்லவே மக்களின் இனங்கள்**
> **வதைத்திடல் கொன்றிடல் மறைநெறி யாகுமா**
> **இனமான மக்களில் யாரையும் மதிப்போம்**
> **இனங்களில் வேற்றுமை யின்றென விதிப்போம்**
> (பா.827)

என முழங்குகிறார்.

சிறப்புகள்

எஸ்தர் காவியத்தில் இன உணர்வை மையமாகக் கொண்டு அழகான எதுகை மோனையுடன், உவமைகள், பழமொழிகள், குறட் கருத்துக்கள் இவற்றையெல்லாம் பயன்படுத்தி உலகியல் உண்மைகளை விளக்கியிருக்கிறார்.

> **உண்மை தேரில் வந்தால்**
> **ஊரில் பொய்ம்மை அழியும்** (பா.668)
> **நீதிமான் ஆளுகை செய்தால்**
> **நேர்மை அமைதி நிலவும்** (பா.670)

என்கிறார். இவ்வாறு ஊரில் அமைதி நிலவ நீதிமான்கள் ஆட்சி நடத்த வேண்டும். இதுபோன்று எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய உண்மைகளைக் காவியத்தில் அழகாக

ஆசிரியர் கூறியிருக்கிறார். மனித நேயம் வளருவதற்கு எஸ்தர் காவியம்,

வர்மங் கொள்ளற்க வாழ்வை மறவற்க
தர்மந் தான் செய்க தானங்கள் பண்ணுக
சர்வம் மீட்பினைச் சார்ந்தனம் ஆதலால்
கர்வம் பண்ணற்க காட்டற்க வேற்றுமை (பா.772)

என உரைக்கிறது. மானுடம் மேம்பாடு அடைவதற்கு,

உலகில் மக்கள் தம் இனமெல்லாம் ஒன்றே
உயர்வு தாழ்வு மக்களில் இல்லை
நலமொடு மக்கள் அனைவரும் கூடி
நாடெங்கும் வாழ்ந்தால் நிலைக்குமே அமைதி (பா.266)

என்று தன்னுடைய முடிவை எஸ்தர் காவியம்வழி ஆசிரியர் விளக்குகிறார். இன உணர்வை மையமாக வைத்து எழுதப்பட்ட ஒரே கிறித்தவக் காவியம் எஸ்தர் காவியம் ஆகும். இராபின்சன் குருசோ அவர்களின் கருத்துத் தேர்வும் நடைச்சிறப்பும் எஸ்தர் காவியத்தைக் கிறித்தவக் காப்பியங்களில் சிறந்த காவியமாக்கியது.

19. அருள்நிறை மரியம்மை காவியம்

கிறித்தவக் காப்பியங்களில் இயேசு கிறிஸ்துவின் தாய் மரியாளை மையமாக வைத்து எழுதப்பட்ட காப்பியம் அருள்நிறை மரியம்மை காவியம் ஒன்றேயாகும். அருள்நிறை மரியம்மை காவியம் 1996ஆம் ஆண்டு புதுச்சேரியிலுள்ள மரியம்மை பதிப்பகத்தின் மூலம் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியர் துரை. மாலிறையன் ஆவார்.

ஆசிரியர் வரலாறு

துரை. மாலிறையன் 1942ஆம் ஆண்டு ஆகஸ்டு 29 ஆம் நாள் துரைசாமி-கோவிந்தம்மாள் தம்பதியினருக்குப் புதுவையில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் துரை. நாராயணசாமி என்பதாகும். ஆசிரியப் பயிற்சியினை முடித்த பின்னர், முதன் முதலாக பாண்டிச்சேரியிலுள்ள புராணசிங்கு பாளையம் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாம்நிலை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் 1965ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வித்துவான் தேர்வில் தேர்ச்சி பெற்றார். அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் சூரிய விசய குமாரி என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். பல்வேறு பள்ளிகளிலுமாக புதுச்சேரியில் 42 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றி 2002ஆம் ஆண்டு கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

படைப்புகள்

துரை. மாலிறையன் இருபத்து ஐந்து நூல்கள் எழுதியுள்ளார். இவற்றுள் ஏழு காப்பியங்களாகும். அக்காப்பியங்கள் பின்வருமாறு:

1. குழந்தைகள் விரும்பும் நேரு காவியம்
2. அருள் ஒளி அன்னை தெரேசா காவியம்
3. அருள்நிறை மரியம்மை காவியம்
4. பாவேந்தர் காப்பியம்
5. தீண்டாமையை ஒழித்த அம்பேத்கர் காவியம்
6. கல்வி வள்ளல் காமராசர் காவியம்
7. இறை பேரொளி நபிகள் நாயகம் அருட் காவியம்

சிறப்புகள்

துரை. மாலிறையன் பல நூல்களைப் படைத்தது மட்டுமன்றி தமிழக, புதுவை அரசிடமிருந்து ஏராளமான பரிசுகளையும், விருதுகளையும் பெற்றுள்ளார். குறிப்பாக புதுவை அரசின் சிறந்த தமிழாசிரியர் விருதினையும், நடுவண் அரசின் தேசிய நல்லாசிரியர் விருதினையும், புதுவை அரசின் தமிழ் மாமணி விருதினையும் பெற்றுள்ளார். மேலும் இவர் புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினராகவும், கனடா உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தின் புதுவைக் கிளைச் செயலராகவும் செயல்பட்டு வருகின்றார்.

காப்பிய அமைப்பு

அருள்நிறை மரியம்மை காவியம் பாயிரத்தைத் தொடர்ந்து உருக்காட்சிக் காண்டம், திருக்காட்சிக் காண்டம், அருட்காட்சிக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களை உடையது. இக்காவியம் 4745 விருத்தப் பாக்களாலானது.

பாயிரம்

பாயிரத்தில் 26 பாடல்கள் உள்ளன. பாயிரத்திலுள்ள முதல் பாடல் மொழி வாழ்த்தாக அமைகிறது. இப்பகுதியில் மூன்று பாடல்களின் மூலமாக பிதா, குமாரன், தூய ஆவி என்னும் மூவொரு (திரியேக) தெய்வத்தை வணங்குகிறார். குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை,

> **முற்கண்ட ஏற்பாட் டைஓர் முழுமைக்குக் கொண்டு வந்து**
> **பிற்கண்ட புதுஏற் பாட்டின் பெருமையை உலகம் போற்ற**
> **நற்கொண்ட லாகி வாழ்க்கை நலம்பெற அருள்வி ளைக்கும்**
> **கற்கண்டின் இனிமை சான்ற கழலடி வாழ்த்து வோமே!**
> **(பாயிரம், பா.3)**

என வணங்குகிறார்.

உருக்காட்சிக் காண்டம்

முதல் காண்டமான உருக்காட்சிக் காண்டம் மரியன்னையின் பிறப்பு முதல் புனித சூசையின் மறைவு வரை உள்ள வரலாற்றை விவரிக்கிறது. இக்காண்டமானது படைப்புப் படலம், இறையாணை மீறிய படலம், உலக மீட்பு உன்னிய படலம், அன்னம்மாள் கருவுற்ற படலம், தூய மரியம்மை பிறப்புப் படலம், மரியா வளர்ச்சிப் படலம், தேவாலயத்

திருவாழ்க்கைப் படலம், திருமண ஒப்பந்தப் படலம், திருத்தோற்றம் அறிவிப்புப் படலம், திருவுரு புக்க படலம், திருத்தோற்றம் அருளிய படலம், பேறு பெற்ற படலம், எகிப்துப் பயணப் படலம், எருசலேத்தில் திருவொளி காட்டிய படலம், சூசைநாதர் மறைவுப் படலம் என்னும் 15 படலங்களையும் 1105 பாடல்களையும் கொண்டது.

திருக்காட்சிக் காண்டம்

இரண்டாம் காண்டமான திருக்காட்சிக் காண்டம் இயேசு கிறிஸ்து திருமுழுக்குப் பெறுவதிலிருந்து உயிர்த்தெழுதல் வரையுள்ள செய்திகளை விவரிக்கின்றது. இப்பகுதி இறைமகனைச் சோதித்தப் படலம், புதுமை தொடங்கிய படலம், உயிருள்ள நீர்விளக்கிய படலம், மலைப்பொழிவுப் படலம், உவமைகள் உரைத்தப் படலம், விசுவாசத்தின் பெருமை சொன்ன படலம், நல்ல அயலான் யார்? என்ற படலம், வான்வீடு கட்டிய படலம், நானே ஒளி என்ற படலம், நல்ல ஆயன் நானே என்ற படலம், சூழ்ச்சி தொடங்கு படலம், காட்டிக் கொடுத்த படலம், பிலாத்துத் தீர்ப்பு வழங்கிய படலம், திருப்பாடுகள் ஏற்ற படலம், ஏழு கருத்துரைகள் அருளிய படலம், அன்னையின் மாட்சிமை உரைத்த படலம், உயிர்த்தெழுந்த படலம் என்னும் 17 படலங்களையும் 1460 பாடல்களையும் கொண்டது.

அருட்காட்சிக் காண்டம்

அருட்காட்சிக் காண்டம் என்ற மூன்றாவது பகுதியானது தமிழகம் மற்றும் உலக நாடுகளில் அருள் நிறைந்த மரியன்னை அளித்த மிக முக்கியமான காட்சிகளை மட்டும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அருட்காட்சிக் காண்டமானது தூய ஆவி திருத்தோற்றப் படலம், எருசலேம் திருப்பேரவை வளர்ச்சிப் படலம், தாயாகிக் காத்த படலம், மரியம்மை விண்ணேற்புப் படலம், திருமுடி சூட்டுப் படலம், பெரிய நாயகியம்மை அருட்புகழ்ப் படலம், அடைக்கல அன்னையின் அருட்புகழ்ப் படலம், வேளாங்கண்ணியின் அருட்புகழ்ப் படலம், வினைதீர்க்கும் வில்வநல்லூர் அருட்புகழ்ப் படலம், சேத்துப்பட்டு அன்னையின் அருட்புகழ்ப் படலம், பூண்டி அன்னையின் அருட்புகழ்ப் படலம், உறைபனி அன்னை அருளிய படலம், தூய தோற்றம் அருளிய படலம், உலூர்து புதுமை செய் படலம், பாத்திமா அருட் குழந்தைகள் தோற்றம்

படலம், பாத்திமா அன்னை திருக்காட்சி அருளிய படலம், சோதனை சாதனையான படலம், சிறுவர்கள் வான்வீடு புக்க படலம், ஆசியப் பேரொளி காட்டிய படலம், அமெரிக்க மண்ணில் அருள்ஒளி காட்டிய படலம், பிரஞ்சு நாட்டில் பேரொளி காட்டிய படலம், இசுபெயின் நாட்டில் எழில் மரியன்னைப் படலம், இத்தாலி நாட்டில் இன்னொளி காட்டிய படலம், நிலைத்த உதவி செய்யும் அன்னை படலம், மேலை நாடுகளில் அருள்ஒளி காட்டிய படலம் என்னும் 25 படலங்களை உடையது. இக்காண்டத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 2180 ஆகும்.

நூல் படைத்ததன் நோக்கம்

துரை. மாலிறையன் தான் படைத்த நூலின் நோக்கம் பற்றிக் கூறும் போது படைத்தவனின் மாண்பைப் போற்றுவதற்காகவும், அவருக்கு நன்றி கூறுவதற்காகவும் இந்நூலைப் படைத்திருப்பதாகக் கூறுகிறார்.

அழிவினை நீக்கிக் காக்க ஆண்டவன் மண்ணில் தோன்றி
இழிவினை எல்லாம் ஏற்க இணங்கிய அன்னை யாகிப்
பழவினை மக்க ளுக்கே படராமல் காத்து நிற்கும்
எழிலினை எண்ணிப் போற்றும் எண்ணத்தைத் தருவ தாக
(பாயிரம், பா.14)

செயலாண்மை மிக்க தந்தை செவ்வண்ணம் ஈந்த வற்றை
இயலாமை காரணத்தால் எண்ணாமல் பழிகள் ஏற்று
முயல்ஆமை போல்வா ழாமல் முன்னேற்றம் பெறும்நோக்
கத்தால்
உயர்வாம்இக் காப்பி யத்தை உருவாக்கி வைத்தேன் நன்றே
(பாயிரம், பா.15)

என்று அவர் பாடுவதிலிருந்தே அன்னையைப் போற்றுவதற்காகவே இக்காவியம் படைக்கப்பட்டது என்பது புலனாகிறது. மேலும் அன்னை மரியாளின் தாய்மைத் தூய்மையை தான் கூறுவதற்குக் காரணம் இவ்வுலகத்தில் உள்ள அனைவரும் அன்புடன் இணைந்து வாழ்வதற்கும், அனைத்து மக்களும் எந்த வேறுபாடும் இன்றி மேன்மையாய் ஒளிர்வதற்கும் வாழ வழி வகை செய்யவே இந்நூலைப் படைத்திருப்பதாகக் கூறுகிறார்.

ஆசிரியரின் தன்னடக்கம்

அன்னை தெரேசாவின் தொண்டுகளை மனதில் கொண்டு 'அன்னை தெரேசா' காவியத்தை சிறப்பாகப் படைத்த கவிஞர்

துரை.மாலிறையன், இக்காவியத்தைப் படைத்திருக்கின்ற தன்னுடைய செயல் எப்படிபட்டது என்பதைத் தன்னடக்கத்துடன் கூறுகிறார்.

சிறுகொசு புவியைத் தூக்கச் சிந்தித்த தன்மைபோல
வறுங்கையோன் உலகை எல்லாம் வாங்குவேன் என்னல் போல
நறும்புகழ் இயேசு நற்றாய் நனிதவப் பெருமை எல்லாம்
வெறுங்கவி ஒன்றால் யானும் விளம்புதல் வியப்பே அம்மா!
(பாயிரம், பா.10)

எனத் தன்னைத் தாழ்த்தி, இக்காவியத்தைத் தான் பாடுவது ஆச்சரியமானது என்கிறார். மேலும்,

பெருங்கடல் முழுதும் மொண்டு பெருநிலம் நனைப்பேன் என்று
கருங்கையால் சேந்தும் சின்ன கடுவனின் முயற்சிபோல
அருந்தமிழ்க் கடலின் ஓரம் அணுகவும் அஞ்சி அஞ்சி
இருந்தவன் துணிந்தே அன்னை எழிற்புகழ் பாட வந்தேன்
(பாயிரம், பா.11)

என கடலின் தண்ணீரைக் கொண்டு வந்து உலகத்தையே நனைப்பேன் எனக் கூறிய குரங்கின் முயற்சியைப் போன்று கடலின் அருகில் போவதற்கே பயப்படும் நான், அன்னையின் புகழைப் பாட வந்தேன் எனப் பாடுகிறார். மேலும் தான் முயல், ஆமை போல் வாழாமல் முன்னேற்றம் பெறுவதற்காகவும் இம்முயற்சியை எடுத்திருப்பதாகக் கூறுகிறார். மலையளவு திறமையைத் தான் பெற்றிருந்தாலும் தன்னுடைய செயலைக் கடுவனின் முயற்சி என்றும், தமிழின் கரையைக் கண்டிருந்தாலும் ஓரத்தை அணுகவும் அஞ்சுவதாகவும் கூறுவதே அவருடைய தன்னடக்கத்தைப் புலப்படுத்துகின்றன. ''நிறைகுடம் நீர் தளும்பல் இல்'' என்பதற்கேற்ப வாழ்கிறார் கவிஞர். தன்னைத் தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான் என்ற விவிலிய வரிகளுக்கு ஏற்ப, தன்னைத் தாழ்த்தி இக்காவியத்தைப் படைத்திருக்கும் கவிஞர் அவர்கள் தன் கவித் திறத்தால் உயர்ந்து இருக்கிறார்.

தமிழ்ப்பற்று

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்
(நாமக்கல் கவிஞர் பாடல்கள்)

என்பதற்கேற்ப அமிழ்தமாகிய தமிழ் மொழியின் சிறப்பைக் காவியத்தின் பல இடங்களில் கூறியுள்ளார்.

அருந்தமிழ்க் கடலின் ஓரம் அணுகவும் அஞ்சி

என்று தமிழ்மொழி கடல் போன்ற ஆழம் உடையது என்கிறார். அன்னை மரியாளின் வளர்ச்சியைப் பற்றிக் கூறும்போது,

தளர்ச்சியே இன்றி நம் தமிழ் வளர்வதைப்போல

வளர்வதாகக் குறிப்பிடுகிறார். தஞ்சையின் சிறப்பைப் பற்றிக் கூறும்போது,

தாய்மரி மாதா தங்கித் தமிழ் கேட்டு மகிழும் தஞ்சை

என்றும், வில்லியனூரைப் பற்றிக் குறிப்பிடும் போது,

முத்தமிழ் வளர்க்கும் ஊராம்

என்றும் கூறுகிறார். மேலும் பொறுப்புடன் பிறந்த அன்னையின் புகழை எம்மொழியில் புகழ்வோம் என்ற வினா எழுப்பி,

சிறப்பினால் உயர்ந்த எங்கள்
செந்தமிழ் மொழியே!

என்று கூறுகிறார். இவ்வாறு கவிஞர் தம் காவியத்தின் பல இடங்களின் தமிழின் சிறப்பைப் பற்றியும், அதன் புகழைப் பற்றியும் பாடியிருக்கிறார். இவை கவிஞரின் தாய்மொழிப் பற்றுக்குச் சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

சங்க இலக்கியத் தாக்கம்

சங்க இலக்கியத்தின் அகம், புறம் பற்றிய நூல்களை நினைவுபடுத்துவது போன்ற வருணனைகள் பல இக்காப்பியத்தில் காணப்படுகின்றன. சுவக்கீன், அன்னம்மாள் இருவரும் ஒருவரையொருவர் பார்க்கிறார்கள் என்பதை,

கண்ணொடும் கண்ணி ணைத்துக் கருத்தினைப் பொருத்தி வைத்தார்
தண்ணியர் இருவ ரையும் தனிமையில் வரவ ழைத்து
மண்ணிலே அவர்கள் காதல் மலர்ந்திட வழிவ குத்துப்
புண்ணியம் மண்ணில் பொங்கப் பொழிந்தனர் அருள்நோக் கையே!

(உலக மீட்பு உன்னிய படலம், பா.60)

என்று கூறும் முறை தலைவனும் தலைவியும் நோக்க முதலில்

கண்கள் கலந்தன என்று கூறும் அகவாழ்க்கையை நம் கண் முன் நிறுத்துகின்றன.

மரியாளின் தாயாகிய அன்னம்மாளை 'மானைப் போன்றவள்', 'தேனைப் போல் பேசுபவள்', 'அன்னம் போல் நடப்பவள்', 'வண்ணத்து மயிலைப் போல் வருவாள்' என்றெல்லாம் ஆசிரியர் வருணனை செய்கிறார். இப்பகுதியைப் படிக்கும்போது சங்க இலக்கியத்தைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. அன்னம்மாளை சுவக்கீன் புகழ்ந்து பேசும்போது,

> **அன்னமே! அன்பே என்றன் ஆருயிர்ப் பொன்னே! முற்றல்**
> **கன்னலே! கனியே இன்பக் கற்கண்டே! சுவையே! எந்த**
> **மன்னரும் அடைய ஒண்ணா மாமணி முடியே! இந்நாள்**
> **உன்னாலே இம்மா மண்ணில் உய்ந்தேனே செந்தே னாளே!**
> **(அன்னம்மாள் கருவுற்ற படலம், பா.17)**

எனக் கூறுவது சங்க இலக்கியத் தலைவனும் தலைவியும் பேசுவது போன்று இருக்கிறது. மரியம்மையின் பிறப்பின் போது பலரும் புகழ்கிறார்கள். அவளுடைய கண்களைப் பற்றி,

> **விண்மீன்கள் கண்க ளாக விழைந்துவந் தனவோ? அன்றி**
> **மண்மீதில் நீர்வாழ் கெண்டை வாழவந் தனவோ? தண்ணார்**
> **கண்மீதில் குவளைப் பூக்கள் கலந்துகொண்ட னவோ? என்று**
> **பண்மீதில் சொல்ல டுக்கிப் பகர்ந்தவர் வியந்து சென்றார்**
> **(தூய மரியம்மைப் பிறப்புப் படலம், பா.56)**

எனக் கூறுவதிலிருந்து மூன்று உவமைகளையும் கண்களுக்காக பயன்படுத்தும் இவரது போக்கு சிறந்த வருணனை நிறைந்த இலக்கியத்தைப் படிப்பது போல் இருக்கிறது. பாண்டியன் அறிவுடை நம்பி புறநானூற்றில் தன்னுடைய பாடலில் மக்கட்பேற்றின் சிறப்பைப் பற்றிக் கூறும்போது,

> **மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
> **பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே**
> **(புறநானூறு, பா.188)**

என்று கூறியதைப் போல, துரை.மாலிறையன் அவர்களும் சேய் இல்லாத வாழ்க்கை பயனற்றது என்பதை,

> **கண்ணொளி இல்லா வாழ்வும், கலைஉணர் வில்லா நெஞ்சும்**
> **பண்ணொளி இல்லாப் பாட்டும், பண்புடன் பழகா நட்பும்**

விண்ணொளி சூழாப் பற்றும், விளங்கிடாக் கல்வி தானும்
மண்ணில்சேய் இல்லா வாழ்வும், மதிப்பினைச் சேர்த்தி டாவே
(உலக மீட்பு உன்னிய படலம், பா. 75)

என்று அழகாகக் கூறுகிறார். இது போன்ற சங்க இலக்கியத் தாக்கங்கள் காவியம் முழுவதும் நிறைந்து கிடக்கின்றன என்றே கூறலாம்.

உவமைகள்

காவியத்தில் பாடல்களுக்கிடையில் உவமைகள் காணப்பட்டாலும், ஒரு சில பாடல்கள் உவமைகளைக் கொண்டே பாடப்பட்டிருக்கின்றன. சான்றாக, ஆதாம், ஏவாளின் அன்புடை வாழ்க்கையை,

தூசியே படாமல் பூத்த தூய்மலர்த் தாம ரைபோல்
மாசிலாக் குயில்இ ரண்டு மகிழ்ந்துற வாடு தல்போல்
ஆசையும் அன்பும் கொண்ட அரசனும் அரசி யும்போல்
ஈசனும் அடியா ரும்போல் இருவரும் மகிழ்ந்தி ருந்தார்
(இறையாணை மீறிய படலம், பா.8)

என உவமைகளாலேயே விளக்குகிறார். மாசு படாமல் பூத்த தாமரை மலரும் மணமும் போல, குற்றமற்ற குயில்கள் இரண்டு மகிழ்ந்து உறவாடுதல் போல, அன்பும் ஆசையும் கொண்ட அரசன் அரசியைப் போல, இறைவனும் அவனது அடியாரும் போல இருவரும் மகிழ்வுற்று இருந்தனர் என நான்கு உவமைகளால் இப்பாடல் அமைந்துள்ளது. இது தவிர,

1. அழல் கக்கி வருவாரைப் போல்
2. தழல் மெய்யில் தோன்றல் போல
3. காயவை நடுவில் உள்ள கனியினைக் கண்டாற் போல
4. வலைக்குள் ஓர் மான் போல் மாட்டி
5. வானில் வெண்புறாவைப் போல
6. மானின் ஓர் துள்ளல் போல
7. கொடியினைப் போல் ஒல்லியும்
8. தாமரை போல் ஒளியும்

என்பன போன்ற பல உவமைகள் காவியம் முழுவதும் நிறைந்து கிடக்கின்றன.

எதுகை மோனையும், சொல்லாட்சித்திறனும்

கவிஞர் துரை.மாலிறையன், எதுகை மோனையுடன் சிறந்த சொல்லாட்சிகளை காவியத்தில் பயன்படுத்தி இருக்கிறார். குறிப்பாக, உணர்வுகளை வெளிப்படுத்தும் பல சொல்லாட்சிகள் காவியத்தில் காணப்படுகின்றன.

இறைவனின் செயலை அழிக்க நினைத்த அலகையின் செயலைக் குறிப்பிடும்போது, பரதனின் படையைக் கண்ட குகனின் மனக் கோபத்தை விளக்கும் கம்பரைப் போன்று துரை. மாலிறையனும் விவரிக்கிறார் என்றே கூறலாம்.

> அதக்கினான் உதட்டை; நாவால் அரற்றினான் வெப்ப மூச்சால்
> வதக்கினான் தழை மரத்தை; வருத்தினான் புள்கு லத்தை
> மதத்தினாம் களிறு போல மரங்களை உலுக்கி யாவும்
> விதைத்தநல் இறைச்செய் கையை வீழ்த்திடச் சூள்கொண்
> டானே
>
> (இறையாணை மீறிய படலம், பா.11)

என்று கூறி தன் சொல்லாட்சியில் மிஞ்சி நிற்கின்றார். இயேசு பிறந்த புனிதமான இரவுப் பொழுதை,

> நள்ளிர வென்பார் கற்றோர் நல்லிரவென்பேன் நானே;
> ஒல்லிரவு என்பார் கற்றோர் ஒள்ளிர வென்பேன் நானே;
> வல்லிரவு என்பார் கற்றோர் வள்ளிரவு என்பேன் நானே;
> அல்லிரவு என்பார் கற்றோர் எல்லிரவு என்பேன் நானே;
>
> (திருத்தோற்றம் அருளிய படலம், பா.89)

என்று தம் சொல்லாட்சித் திறத்தால் விவரிக்கிறார்.

இது தவிர 'இருகை, வருகை, தருகை' என்றும் 'ஒளி, வெளி, களி, பளி' என்றும் 'கரு, உரு, பெரு, திரு' என்றும் இதுபோல பல அடுக்கடுக்கான எதுகை மோனைகளைக் காவியம் முழுவதும் பயன்படுத்தியுள்ளார்.

காவியம் கூறும் இன்றைய நிலைகளும் நீதிகளும்

அருள்நிறை மரியம்மை காவியம் இன்றைய மக்களின் சமுதாய நிலையையும், மனிதன் வாழவேண்டிய முறைகளைப் பற்றியும் மிக அழகாகக் கூறுகின்றது. லூசிப் பேயின் இயல்பினை வருணிக்கும் ஆசிரியர் தற்காலத்தில் லூசிப் பேய்கள் சமுதாயத்தில் வாழ்கின்றன என்பதைக் கூறுவது போல் இருக்கின்றது.

இறைவன்மேல் பற்றும் இல்லை இயக்கத்தில் நலமும் இல்லை
மறைவான தீய பண்பால் மகிழ்ச்சியும் பிறக்க வில்லை
நிறைவான உள்ளம் இல்லை; நிழலையும் ஐய முற்றான்
இறைமொழி நலத்தைக் கூட எளியவன் நம்ப வில்லை

(படைப்புப் படலம், பா.7)

என்று பாடுகின்றார். சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் பண்புகள் எவ்வாறு இருக்கின்றன என்றும் தம் காவியத்தில் வெளிப்படுத்துகின்றார்.

தான் என்ற அகந்தை கொண்டு இருப்பவர்களும், கூன் போன்ற வளைந்த மனதைக் கொண்டவர்களும், தீய திருட்டுகள் செய்பவர்களும், அன்பைக் கொன்று கொலைத் தொழில் புரியக் கூடிய பலரும் சமுதாயத்தில் வசிக்கின்றார்கள். எனவே இறைவனே அருள் செய்ய வேண்டும், தீமைகள் பெருகிவிட்டன என்று மக்களே இறைவனிடம் வேண்டுகிறார்கள். இதைக் கொண்டு இன்றைய மனிதர்களின் மனநிலைகளைக் கவிஞர் புலப்படுத்துகின்றார்.

அதுமட்டுமல்லாது மனிதர்கள் எத்தகைய நீதி நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதையும் கூறுகிறார். இறைவன் கிடைப்பதற்கரிய மனிதப் பிறப்பை உருவாக்கியதற்குக் காரணம் அனைத்தையும் ஆள வேண்டும், மனிதன் எல்லா உயிர்களைக் காட்டிலும் மேன்மை அடைய வேண்டும் என்பதற்காகவேயாகும். மனிதன் வாழ வேண்டிய முறையை இறைவன் கூறுவதாகத் தன் காவியத்தில்,

அறிவினில் சிறத்தல் வேண்டும் அன்பினில் திளைத்தல் வேண்டும்
செறிவினில் உயரல் வேண்டும் செம்மையில் மிளிர்தல் வேண்டும்
நெறியினில் எல்லாம் உற்ற நேர்மையை வளர்த்தல் வேண்டும்
சிறுமையே சிந்தி யாத சீர்மையன் ஆதல் வேண்டும்

(படைப்புப் படலம், பா.45)

என மறைமுகமாகக் கூறுகின்றார். இயேசுவைத் துயரத்திற்கு உட்படுத்தியவர்கள் அனைவரும் துயரம் அடைந்தார்கள் என்பதனை,

அடிகொடுத் தையன் மேனி அருந்துயர் அடைய வைத்தோர்
இடிகுரல் கேட்ட திர்ந்தே இதயமே வெடித்துச் செத்தார்

முடியில்முள் முடிஅ மைத்தோர் முடிகளைப் பிய்த்துக் கொண்டார்
கொடியதீச் செயல்பு ரிந்தோர் கொடுந்துயர் தாமே கண்டார்.
(தூய ஆவி திருத்தோற்றப் படலம், பா.33)

என்று கூறுகிறார். ''வினை விதைத்தவன் வினை அறுப்பான்'', ''தன் வினை தன்னைச் சுடும்'' என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து வாழ்ந்தாலே வாழ்க்கை வளம் பெறும் என்பதை மறைமுகமாக இப்பாடலில் கூறுகிறார்.

விவிலியச் செய்திகளும், கவிநலனும்

அருள்நிறை மரியம்மை காவியத்தில் முதல் இரண்டு காண்டங்களிலும் விவிலியச் செய்திகள் காணப்படுகின்றன. இறைவன் உலகத்தைப் படைத்தல், ஆதாம் ஏவாளை உருவாக்குதல், லூசிப் பேயின் இயல்பு, தவறு இழைத்ததால் ஆதாமும் ஏவாளும் பாவத்தைச் சுமத்தல், கடவுள் லூசிப் பேயிடம் பெண்ணின் வித்துக்கும் உன் வித்துக்கும் பகை உண்டாகும் என்று கூறுதல், உலகத்தில் தீமைகள் பெருகியதால் மீட்க வேண்டி அன்னை மரி தோன்றுதல், அவள் வயிற்றில் இருந்து இயேசு தோன்றுதல், பிறப்பு, உரைநடையில் போதனைகள், சிறப்பு, உயிர்த்தெழுதல் வரை உள்ள அனைத்து விவிலியக் கருத்துகளையும் தனக்கே உரிய கவிநலனுடன் சிறப்பாய் படைத்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டின் தொடக்க நூலான ஆதியாகமத்திலுள்ள செய்திகளான இறைவன் செடி,கொடி, மரங்களைப் படைத்ததைப் படைப்புப் படலத்தில் தன் கவிதை அடிகளால் விளக்குகிறார். விவிலியம் "அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று (ஆதியாகமம்: 1:11) எனக் கூறுகிறது. இதைக் கவிஞர்,

புல்லினை, விதைஉண் டாக்கும் பூண்டினைப் படைத்தார் மண்ணில்
பல்லினக் கனிகள் ஏந்திப் பழுத்திடும் மரம்ப டைத்தார்
சொல்லின வாறு யாவும் தோன்றிடக் கண்டு மன்னர்
நல்லன என்றார் மண்மேல் நாட்டிய பெருமை யாலே
(படைப்புப் படலம், பா.27)

எனப் பாடுகிறார். பழங்கள் என்ற ஒரு சொல்லைக் கொண்டு பழ வகைகள் கனிந்தன என்ற தன் கவித்திறனை, கற்பனையாக விரிவுபடுத்தி இருக்கிறார்.

கனிந்தது வாழை; தேறல் கசிந்தது பலாவின் தொங்கல்
இனித்தது தேமா; கண்முன் இரைந்தது பழத்தின் கொத்தே
தனித்தசீர் மாதுளையாம் தகும்பல பழங்கள் காய்கள்
நனிசுவை யோடு எங்கு, எங்கும் நலமுறத் தோன்றச் செய்தார்
(படைப்புப் படலம், பா.28)

என்று அழகாகக் கூறுகிறார். இயேசு பாலகனை யோசேப்பும் மரியாளும் விருத்தசேதனம் பண்ணுவதற்காக எருசலேம் தேவாலயத்திற்குக் கொண்டு சென்றனர். அப்பொழுது சிமியோன் என்பவர் குழந்தையைக் கைகளில் வாங்கி தேவனைத் துதித்தார். மேலும் சிமியோன் மரியாளைப் பார்த்து, "இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்" (லூக்கா,2:34,35) என்னும் வசனங்களை,

இதோ இந்தக் குழந்தை மக்கள் இசுரவேல் தம்வீழ்ச் சிக்கும்
எதிர்வரும் எழுச்சிக் கெல்லாம் ஏற்றதாய்ச் சிறக்கும்; நெஞ்சுள்
புதைந்தவை வெளியாம் உந்தம் புகழ்உள்ளம் தன்னி லேஓர்
வதைத்திடும் வாள்பு குந்து வருமேஊ டுருவி என்றார்
(பேறு பெற்ற படலம், பா.58)

என்னும் பாடலாக வடித்துள்ளார். புதிய ஏற்பாட்டில் கெத்சமனேத் தோட்டத்தை வருணிக்கும் போதும் கவிநலனில் மிஞ்சி நிற்கின்றார்.

ஒலிவேத்துக் குன்றின் கீழே ஒளிகொண்ட பசுமைத் தோட்டம்
மலிகின்ற நறும ணங்கள் மாறாத எழில்முன் னேற்றம்
நிலைஆலிவு உயர்ம ரங்கள் நின்றிலை களின்ஆர்ப் பாட்டம்
தலையாட்டி மலர்க்கு லங்கள் தாம்வர வேற்கும் தோட்டம்
(காட்டிக் கொடுத்த படலம், பா.53)

என்று கூறும் அவரது கவிச்சிறப்பே கெத்சமனேத் தோட்டத்தை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த பின்னர் அவர் சிலுவையிலிருந்து ஏழு வார்த்தைகளைக் கூறினார். இவற்றை

துரை மாலிறையன் துயர உணர்வு மிக்கக் கவியாகப் பாடுகிறார். "ஒன்பதாம் மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்" (மாற்கு, 15:34) என்னும் இவ்வசனத்தை,

என்னருங் கடவு ளாரே! என்னருங் கடவு ளாரே!
என்னைஏன் கைவிட் டீரோ? என்றென்றி ரங்கி ஏங்கி
மன்னினார் "ஏலி ஏலி லெமாசபக் தானி" என்று
சொன்னவர் தம்மைப் பார்த்துச் சூழ்ந்தவர் எள்ளி னாரே!
(ஏழு கருத்துரைகள் அருளிய படலம், பா.23)

எனப் பாடுகிறார். இவ்வாறு விவிலியம் கூறும் செய்திகளைத் தனக்கே உரிய கவிநலனுடன் அழகாக விளக்கி உள்ளார்.

மரியம்மையின் மாண்புகள்

தீமைகள் பெருகுகின்றதை நினைத்து மக்கள் அனைவரும் நிலைகலங்கி இறைவனிடம் வேண்டியதன் காரணமாக, இறைவன் யூதேயா நாட்டில் உள்ள கலிலேயாவைத் தேர்ந்தெடுத்தார். அங்குள்ள அன்னம்மாள் சுவக்கினுக்கு மகளாக மரியம்மையைப் பிறக்க வைத்ததாக ஆசிரியர் கூறுகின்றார். அவ்வாறு பிறந்த அக்குழந்தை தோன்றியதற்கானக் காரணத்தை,

கருவாகி நின்றார்; மக்கள் கலக்கமும் துயரும் போக்க
உருவாகி நின்றார்; தொண்டின் உயர்வதன் பெருமை காய்க்கும்
தருவாகி நின்றார்; வையத் தகைமையைக் காட்டப்போகும்
திருவாகி நின்றார் யாரும் தெளிவாகிச் சிறப்ப தற்கே
(தூய மரியம்மைப் பிறப்புப் படலம், பா.12)

என்று அனைவரும் வாழ்வில் சிறப்பதற்காகப் பிறந்தவள் எனக் கூறுகிறார்.

மரியாளின் பிறப்பு முதல் வளர்ச்சி வரை ஆசிரியர் சிறு பிள்ளைத்தமிழ் பாடியிருப்பதைப் போலவே தெரிகிறது. மரியாளின் அருள் ஒளியைப் பார்த்து முத்துக்கள், பவளங்கள், நீலமணிகள், பச்சைமணிகள், வைரங்கள், மாணிக்கம் முதலிய அனைத்து மணிகளும் ஒளியிழக்கின்றன என்று கூறுகிறார்.

மரியாள் பணிவொடு பழகக் கூடிய நல்ல பண்பினைக் கொண்டவள். பிறருக்குத் துன்பம் என்றால் துடிப்பாள். பிறருடைய துன்பங்களை எல்லாம் இன்பமாய் அடியாள் ஏற்க

அருள்புரிய வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவாள். இத்தகைய சிறந்த பண்புகளைக் கொண்ட மரியாள் வாழ்க்கையில் நான்கு விருப்பங்களை இறைவனின் முன் வைத்து வேண்டினாள். அவை, கற்பென்னும் உறுதியால் என் கன்னித் தன்மையைக் காத்திடல் வேண்டும்; ஏழ்மைக்காக மூன்று பொழுதும் முயற்சி செய்ய வேண்டும்; அர்ப்பமான நான் முழுமுதற் பொருளாம் ஆண்டவனுக்கு அடிமையாக இருத்தல் வேண்டும்; நற்புகழ்மிக்க ஆலயத்துள் நான் சென்று நிலைத்திருக்க வேண்டும் என்பனவாகும். இதை,

> **கற்பென்னும் திண்மை யாலே கன்னிமை காக்க வேண்டும்**
> **முற்படும் ஏழை மைக்கே முப்போதும் முயல வேண்டும்**
> **அற்பம்நான் முழுமு தல்முன் அடிமையாய் இருக்க**
> **வேண்டும்**
> **நற்புகழ் ஆல யத்துள் நான்நிலைத் துயிர்க்க வேண்டும்**
> **(மரியா வளர்ச்சிப் படலம், பா.59)**

என அன்னை மரியாளின் விருப்பங்களாக ஆசிரியர் பாடுகிறார்.

மரியாள் தம்மைக் காட்டிலும் இவ்வுலகத்தில் பேறு பெற்றவர்கள் யாரும் இல்லை என்கிறாள். உலகத்தை மீட்கும் மீட்பர் தன் வயிற்றில் பிறந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறாள். இயேசு குழந்தையாக இருக்கும்போதே அன்னைக்கு வரம் அளிப்பதாகக் கவிஞர்,

> **கண்டதம் தாயைக் கண்ட கடவுளார் குழந்தை "தாயே!**
> **வண்டலர் தாம ரைமெய் வழங்கினீர் எனக்கே; யானும்**
> **அண்டும்என் தெய்வத் தன்மை அனைத்தையும் தங்க ளுக்கும்**
> **உண்டென வரம்கொ டுத்தேன் உளத்தினால்" எனச்சி ரித்தார்**
> **(திருத்தோற்றம் அருளிய படலம், பா.101)**

எனப் பாடுகிறார். அவ்வாறு சிறு வயதிலே வரம் கொடுத்த இயேசு கிறிஸ்து, தான் இறந்து உயிர்த்தெழுந்த பின்பு பிதாவிடம்,

> **திருச்சபை காப்ப தற்குத் தேர்ந்தவர் இவரே; பாவம்**
> **பெருத்தமக் களைப் பரிந்து பேசுவோர் இவரே; உள்ளம்**
> **திருத்தநல் இறையன் பாலே தெளிந்தவர் இவரே; தூய்மைக்கு**
> **ஒருத்தராய் மண்ணில் வந்த ஒளியாரும் இவரே ஆவார்;**
> **(உயிர்த்தெழுந்த படலம், பா.63)**

எனக் கூறுகிறார். இப்பாடலில் நம் அனைவருக்காகவும் பரிந்து பேசுபவர் அன்னை என்று குறிப்பிடுகிறார். அன்னையின் தோற்றத்தைப் பற்றிக் கூறும் போது ஆசிரியர்,

அன்புதான் அன்னை தோற்றம் அன்புதான் அன்னை
வாழ்க்கை
அன்புதான் பெற்ற துன்பம் அன்புதான் பெருகும் ஆற்றல்
அன்புதான் எல்லாம் ஆகி அரியவிண் மேலே ஏக
அன்புதான் அனைத்தி னுக்கும் அடிப்படை ஆன தாங்கே!
(மரியம்மை விண்ணேற்புப் படலம், பா.69)

எனக் குறிப்பிடுகிறார். இவ்வாறு அன்புரு கொண்ட அன்னையின் வாழ்வை, நம் வாழ்வின் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்கிறார் கவிஞர்.

மரியம்மையின் காட்சிகள்

அன்னையின் காட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, அருட்காட்சிக் காண்டத்தில் ஆசிரியர் விவரிக்கிறார். காட்சி கொடுக்கும் இடங்களை மையமாக வைத்து அன்னைக்கு பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்டு இருக்கின்றன. சான்றாக, வில்லியனூர் அன்னை, சேத்துப்பட்டு அன்னை, பூண்டி அன்னை போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம். இது தவிர பெரிய நாயகியம்மை, அடைக்கலத்தாய் வேளாங்கண்ணி, லூர்து, எழில் மரியன்னை, பாத்திமா அன்னை, உறைபனி மாதா, குளிர்முக அன்னை, சலேத்து அன்னை போன்ற பல பெயர்களிலும் அன்னை காட்சி கொடுத்திருக்கிறார்.

வில்லென்னும் புருவம் உடைய பெரியநாயகி அம்மாளைக் கண்டபோதே நம் பாவம் விலகும், அடைக்கலத் தாய் வரம் வழங்குவதற்காகவே இருப்பவள். மேலும் அவள் நம்முடைய தரத்தினை உயர்த்துவாள் என்கிறார். அதேபோல் வேளாங்கண்ணித் தாயை,

சீராக்கும் வேளாங் கண்ணி சிந்திக்கும் மனத்தி னோர்முன்
கூராக்கும் பகைப்ப டைகள் கூறாமல் விலகிப் போகும்
நாராக்கும் மலர்மா லைகள் நல்கிடும் தாய்ப்பா தம்சேர்
ஆர் ஆர்க்கும் அல்லல் நீங்க அளிக்கின்றாள் அருட்கன்
னித்தாய்
(வேளாங்கண்ணியின் அருட்புகழ்ப் படலம், பா.85)

எனப் போற்றிப் பாடுகிறார். வேளாங்கண்ணித் தாயை மனதினால் சிந்தித்தாலே நம்முடைய துன்பம் எல்லாம் நீங்கும் என்று கூறுகிறார்.

மேலும் வில்லியனூர் மாதா நம்முடைய நோயெல்லாம் போக்குவாள். பூண்டி மாதா நம்முடைய மனதிற்கு உறுதியைத்

தந்து நன்மை பல செய்வாள். லூர்து அன்னை வாடி நொந்து வருபவர்களுக்கு ஆறுதல் அளிப்பாள். பாத்திமா அன்னை ஒவ்வொருவரும் விசுவாசம் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

அன்போடும் ஆறுதலோடும் பேசுகின்ற அன்னை, மக்கள் மனம் திரும்ப வேண்டும் என்பதற்காக நரகக் காட்சியையும் காட்டினார்.

வெந்தவர் சிவந்தி ருந்தார் வேதனை யோடும் பல்லோர்
சிந்திடும் குருதியைப் போல் செந்தணல் நிறத்தோர் பல்லோர்
வெந்துபின் கரியா னார்போல் விதிர்த்தனர் கறுத்தார் பல்லோர்
வந்திடும் நெருப்பு நாக்கில் வருந்தியே விழுந்தார் பல்லோர்
(பாத்திமா அன்னை திருக்காட்சி அருளிய படலம், பா.66)

என்னும் பாடலில், இக்காட்சியைப் பார்த்து மனிதர்கள் மனம் திரும்ப வேண்டும் என்கிறார். தகுந்தவராய் வாழாவிட்டால் தண்டனை உறுதி என்றும் கூறுகிறார். இறுதியாக மாதா தன்னுடைய ஆசையாக மக்களிடம் விரும்புவதை,

சீர்கோலக் கோயில் வேண்டும் செபமாலை மாதா யாமே
போர்க்கோல வையம் மாறிப் புகழ்க்கோலம் காணும்; மாயும்
நீர்க்கோல வாழ்வுக் காக நெடும்பாவம் புரிகின் றார்கள்
நேர்க்(கு)ஓலம் நீங்கி மக்கள் நெடுமனம் திரும்ப வேண்டும்
(சோதனை சாதனையான படலம், பா.110)

என ஆசிரியர் பாடுகிறார். இவ்வாறு மாதாவின் விருப்பத்திற்கு ஏற்ப மனிதர்கள் நிலையாமை உணர்வு கொண்டு பாவங்களை விலக்க வேண்டும் என்பதைக் கடமையாகக் கொண்டு வாழ வேண்டும்.

மரியாளின் புகழ்பாடும் காப்பியம்

அருள்நிறை மரியம்மை காவியத்தின் மூன்றாம் காண்டம் மரியாளின் புகழைப் பாடுவதாக அமைந்துள்ளது. இக்காண்டத்தில் அன்னை மரியாள் தமிழகத்திலும் மற்றும் உலக நாடுகளிலும் காட்சி கொடுத்துப் புதுமைகள் ஆற்றியமையை ஆசிரியர் சிறப்பாக விவரித்துள்ளார். உதாரணமாக போர்த்துக்கல் நாட்டில் மரியாள் ஓர்டிகா அன்னை என அழைக்கப்படுகின்றார். ஒருநாள் வாய் பேசாத, காது கேட்காத பெண் காட்டில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தாள். அவளிடம் அன்னை வந்து ஒரு ஆட்டுக் குட்டி கொடுப்பாயா?

எனக் கேட்டார். அதுவரை பேசாதிருந்த அக்குழந்தை அப்பாவிடம் கேட்டுக் கொண்டு தருகிறேன் என்றாள். வீட்டிற்கு வந்த அக்குழந்தை நிகழ்ந்தவற்றைத் தந்தையிடம் கூறினாள். தன் மகள் பேசுவதைக் கேட்ட தந்தை மகிழ்ச்சியடைந்து எதைக் கேட்டாலும் கொடு என்றார். அங்குள்ளோர் அனைவரும் நிகழ்ச்சி நடந்த இடத்திற்குச் சென்றனர். அங்கிருந்த புதரில் மாதாவின் சிலை ஒன்று காணப்பட்டது. அம்மக்கள் அனைவரும் மண்டியிட்டு மாதாவை வணங்கினர். அவ்விடத்தில் கட்டப்பட்ட கோவிலில் உறைந்துள்ள மாதா ஓர்டிகா அன்னை என அழைக்கப்படுகிறார். இதுபோன்று, இக்காண்டம் முழுவதும் அன்னை மரி செய்த புதுமைகளையும், அவரது புகழையும் விவரிப்பதாகக் காணப்படுகிறது.

கவிக்கூற்று

கிறித்தவக் காப்பியங்கள் ஒருசிலவற்றுள் கவிக்கூற்று என்னும் பகுதி இடம்பெற்றுள்ளது. கவிஞர் தன் உள்ளக் கருத்தைக் கூறும் பகுதி கவிக்கூற்று எனப்படும். அருள்நிறை மரியம்மைக் காவியத்தில் பல பாடல்கள் கவிக்கூற்றாக இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் படலத்தின் தொடக்கத்திலும், இடையேயும், இறுதியிலும் அமைந்துள்ளன. சான்றாக,

> **அரியநன் மைந்தர் தம்மை அருளிய பரிவுத் தாயின்**
> **விரிஒளி விளக்கச் சீரை விளம்புதல் எவரா லாகும்?**
> **வரிவரி யாய்ஆ கிர்த மரியாபோல் எழுதி வைத்தால்**
> **தெரியாதோர் என்போன் றோர்கள் தெரிவிக்க முயல லாமே!**
> **(திருமுடி சூட்டு படலம், பா.44)**

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் ஆசிரியர் துரை மாலிறையன் தேம்பாவணியின் மூலநூலான கடவுளின் நகரம் என்னும் நூலை எழுதிய ஆகிர்த மரியாள் போல பிறரும் எழுதி வைத்தால் என்னைப் போன்றோர்கள் மரியாளைப் பற்றி முழுவதுமாகத் தெரிந்து கொள்ளலாமே எனத் தன் கருத்தை முன் வைக்கிறார்.

வருணனை

காப்பியத்தின் கூறுகளில் வருணனை இன்றியமையாதது. சூரியனின் தோற்றத்தை,

> **சுட்டிடா நெருப்பைப் போலத் தூயநல் ஆவி கிட்டி**
> **எட்டாத பெருமை எல்லாம் எட்டிய எட்டாம் நாளில்**

மொட்டான மலரும் பூத்து முழுமலர் தெரிவ தைப்போல்
வட்டமாய்க் கதிர வன்தான் வாழ்த்துடன் ஒளிர்ந்து வந்தான்
(தாயாகிக் காத்த படலம், பா.1)

என வருணனை செய்கிறார். சுடாத நெருப்பைப் போல, தூய நல் ஆவி பெற்று அடையமுடியாத பெருமைகளை அடைந்த எட்டாம் நாளில் மொட்டான மலர் முழு மலராக மலர்வதைப் போல வட்டமானக் கதிரவன் வாழ்த்துடன் ஒளி விட்டு வந்தான் என்பது இவ்வருணனையின் கருத்தாகும். இது போன்று பல இடங்களில் ஆசிரியரின் வருணனைத்திறன் நிறைந்து காணப்படுகிறது.

வாழ்த்து

திருமுடி சூட்டு படலத்தில் மரியாளை வாழ்த்துவதாக பதினேழு பாடல்கள் உள்ளன. இப்பாடல்களின் அனைத்து அடிகளும் வாழ்க என முடியும் வகையில் உள்ளன. சான்றாக,

அருள்நிறைந் தவளே வாழ்க! அணிசிறந் தவளே வாழ்க!
பொருள்மிகுந் தவளே வாழ்க! புண்ணியம் வளர்ப்போய் வாழ்க!
இருள்அகல் விப்போய் வாழ்க! இறைவனின் தாயே வாழ்க!
மருள்களை பவளே வாழ்க! மணிஒளி மரியே வாழ்க!
(திருமுடி சூட்டு படலம், பா.75)

என்னும் பாடலைச் சுட்டலாம். வாழ்த்துப் பாடல்கள் அனைத்தும் மரியாளின் சிறப்புகளை விளக்கும் வகையில் அமைந்துள்ளன.

கவிஞரின் கற்பனைத் திறன், சொல்லாட்சித் திறன், உவமை நயங்கள், இலக்கிய நயங்கள் காவியத்தின் சிறப்புக்கு அணிசேர்க்கின்றன. கவிக்கூற்றாக வரும் பாடல்களில் எல்லாம் ஆசிரியரின் கவித்துவம் மிளிர்கிறது. மரியம்மையின் வரலாற்றை முழுவதுமாக விளக்கும் காவியமாக அருள்நிறை மரியம்மைக் காவியம் ஒளிவிடுகிறது.

20. பவுலடியார் பாவியம்

பாவியம் என்பதை ஒருவருடைய வரலாற்றைக் கூறும் நூல் எனக் கொள்ளலாம். பல கிறித்தவக் காப்பியங்கள் இயேசு கிறித்துவைத் தலைமை மாந்தராகக் கொண்டும், சில காப்பியங்கள் அன்னை மரியாளைத் தலைமை மாந்தராகக் கொண்டும், இறை அடியவர்களைத் தலைமை மாந்தராகக் கொண்டும் அமைந்துள்ளன. இவற்றுள் விவிலியத்தில் இடம் பெற்றுள்ள இறைஅடியவரான பவுல் என்னும் அப்போஸ்தலரைத் தலைமை மாந்தராகக் கொண்டு படைக்கப்பட்ட காப்பியம் பவுலடியார் பாவியம் என்பதாகும். இக்காப்பியம் பவுலடியாரின் காலச் சூழ்நிலைகளையும், வரலாற்றுப் பின்புலத்தையும் தெளிவாகத் தருகின்றது.

ஆசிரியர் வாழ்வும் படைப்பும்

பவுலடியார் பாவியம் 2003 ஆம் ஆண்டு ம. யோவேல் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இவரது முழுமையான பெயர் ம. ஜோயல் டேவிட்சன் சாமுவேல் என்பதாகும். இவர் மணிமுத்து சாமுவேல் - மேரி பாக்கியம் தம்பதியினருக்கு 1931ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி தாலுகா பகுதியில் சுரண்டை என்னும் ஊரின் அருகிலுள்ள ஊற்றுமலை என்னும் கிராமத்தில் பிறந்தார். பெற்றோர் இருவரும் ஆசிரியப் பணி புரிந்தவர்கள். யோவேல் அவர்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியராக நெல்லைப் பேராயத்திலுள்ள செவல் வட்டாரப் பள்ளிகளில் 1951 முதல் 1961 வரை பணியாற்றினார். இவர் 1961ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்ற பின்னர் தமிழாசிரியராக 1961 முதல் 1971 வரை புதியம்புத்தூரிலுள்ள யோவான் ஸ்நானகன் உயர்நிலைப் பள்ளியிலும், 1971 முதல் 1982 வரை சாயர்புரத்திலுள்ள போப் நினைவு மேனிலைப் பள்ளியிலும், 1982 முதல் 1990 வரை பாளையங் கோட்டையிலுள்ள தூய யோவான் மேனிலைப் பள்ளியிலும் சிறப்பாகக் கல்விப் பணியாற்றினார். இவர் ஆசிரியராக 39 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

திருஅவதாரப் பாடல்கள்(1961), நன்னெறிக் குறள் (1988), இறைமகன் பிறப்பும் அருள்மகன் சிறப்பும் (1989), கிறிஸ்துவின் அன்பு(2005) முதலியவை ஆசிரியரின் பிற நூல்களாகும்.

இறைமகன் பிறப்பு என்பது அந்த வார்த்தை என்னும் தலைப்பில் செய்யுளும் உரைநடையும் விரவிய ஒரு சொற்சித்திரமாகும். இதில் அருள் மகன் சிறப்பு என்பது முழுக்கு முனிவர் யோவானைப் பற்றிய உரைநடை நாடகம். இது முழு நாடகமாகவோ, சில காட்சிகளை மட்டும் தேர்ந்தெடுத்து ஓரங்க நாடகமாகவோ நடித்தற்கேற்ற முறையில் அமைந்தது. பவுலடியார் பாவியத்தின் முதல் காண்டம் மட்டும் 'இறையருள் தொண்டர் பவுல்' என்னும் தலைப்பில் 1983ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நன்னெறிக் குறள்

நன்னெறிக் குறள் என்னும் இந்நூல் 1988 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இந்நூல் விவிலியத்திலுள்ள சாலமோனின் நீதிமொழிகளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப் பட்டுள்ளது. அதிகாரத்திற்குப் பத்துப் பத்துப் பாடல்களாக நூறு குறட் பாக்களைக் கொண்டுள்ளது. குறளின் கருத்துகளை எளிதில் அறிந்து கொள்வதற்காகக் குறள்களின் வலப்பக்கத்தில் நீதிமொழிகள் நூலில் அவை வரும் இடங்கள் குறிக்கப் பட்டுள்ளன. சான்றாக இறையச்சம் என்னும் அதிகாரத்திலிருந்து சில குறள்கள் பின்வருமாறு:

1. மெய்யறிவு நல்லுணர்வு மேவ விறையச்சம்
   மெய்யிறை யோர்வுறுவை மேல். (நீதி.2: 3,5)

2. எப்பொருட்கு முற்பொருளை யேற்றஞ்சு வோராயுள்
   துப்பிலார்க் குண்டாமோ சொல். (நீதி.10:27)

3. வற்றிடா வூற்றனைய வான்பொரு ளச்சமே
   எற்றிடனாய்ச் சாவெல்லு மெஃகு. (நீதி.10:27)

4. உலகச்சங் கண்ணி யுயரிறை நம்பல்
   அலகி லடைக்கல மாம். (நீதி.29:25)

5. இறையச்சந் தாழ்மை தரும்பயன் நேடின்
   நிறைதிரு பேழுயி ராம். (நீதி.22:4)

பவுலடியாரின் வரலாறு

சிலிசியா நாட்டிலுள்ள தருசு நகரில் பிறந்தவர் சவுல் என்பவர். இவர் தமது இளமைக் காலத்தில் யூத சமயத்தில் தீவிரப் பற்றாளராக இருந்து வந்தார். இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் வாழ்ந்துவந்த இவர், இயேசு கிறிஸ்துவின் புகழ் உலகின்

பல்வேறிடங்களுக்குப் பரவுதலை எதிர்த்தார். ஸ்தேவான் என்னும் கிறித்தவரைக் கொல்வதற்கு உடன்பாடு அளித்தவர். கிறித்தவர்களைத் துன்புறுத்தி சிறைக்கு அனுப்பினார். இயேசு கிறிஸ்துவின் புகழை அழிக்க தமஸ்கு நகரத்திற்குச் சிலருடன் பயணமானார். சவுல் தமஸ்கு நகரை நெருங்கும்போது வானிலிருந்து வந்த பேரொளியால் கண் பார்வையை இழந்தார். உடனே பார்வை இழந்த சவுலிடம் இயேசு கிறிஸ்து பேசினார். பின்னர் மூன்றாம் நாள் இயேசு கிறிஸ்து, அனனியா மூலம் சவுலுக்குக் கண்பார்வையைக் கொடுத்தார். வாழ்நாள் முழுவதும் இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாக இருந்து, பவுல் என்னும் புதிய பெயருடன் அவருடைய நற்செய்தியைப் பல்வேறு துன்பங்களுக்கிடையேயும் பரப்பினார்.

பவுலடியார் தற்கால சீரியா, துருக்கி, யூகோசுலேவியா, அல்பேனியா, கிரீசு, இத்தாலி, பிரான்சின் தென்பகுதி, ஸ்பெயின் முதலிய நாடுகளுக்குச் சென்று இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பினார். ஆங்காங்கே சபைகளை நிறுவி அவற்றிற்கான கண்காணிகளையும், மூப்பர்களையும் ஏற்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பல அற்புதங்களைச் செய்தார். பவுலடியார் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இறைப்பணி ஆற்றினார். தம் பணிக் காலத்தில் பல முறை சிறை சென்றார். கல்வி, குடிப்பிறப்பு, உரோமக் குடியுரிமை, பன்மொழிப் புலமை முதலான பல்வேறு சிறப்புகளைப் பெற்றிருந்தாலும், இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக அவையெல்லாவற்றையும் குப்பை எனக்கொண்டு சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்டியவர். ஆதித் திருச்சபைக்கு அறிவுரை கூறும் வகையில் பவுலடியார் பதிமூன்று கடிதங்களை எழுதியுள்ளார். விவிலியத் திருமறையின் புதிய ஏற்பாட்டுப் பிரிவில் பெரும் பகுதியாக அமைவன இக்கடித இலக்கிய நூல்களே என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியில் உரோம் நகரத்து மன்னன் நீரோ என்பவனது ஆணைப்படி வாளால் வெட்டப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார்.

பாவியம் எழுதக் காரணம்

ஒரு நாள் ஆலயவழிபாட்டில் காப்பிய ஆசிரியர் யோவேல் கலந்து கொண்டபோது உள்ளத்தில் எழுந்த ஒலியின் தூண்டுதலை இறைச்சித்தம் என உணர்ந்து கொண்டார்.

இறைவனின் சித்தத்தை நிறைவேற்றும் வகையில் பவுலடியார் பாவியம் இயற்றப்பட்டுள்ளது.

நூல் அமைப்பு

பவுலடியார் பாவியம் இளமைக் காண்டம், மனமாற்றக் காண்டம், பணிபுரி காண்டம், வெற்றிக் காண்டம் என நான்கு காண்டங்களை உடையது. இந்நான்கு காண்டங்களில் 57 படலங்கள் உள்ளன. இக்காப்பியத்திலுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 2697 ஆகும். ஒவ்வொரு படலத்தின் ஆரம்பப் பகுதியிலும் படலத்திலுள்ள செய்திகளை உரைநடையில் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது. பாடல்களிலுள்ள கடினமான சொற்களுக்குப் பாடலின் அடியில் பொருள் கொடுத்திருப்பது படிப்பவர்களுக்குப் பெருந்துணையாக உள்ளது. இக்காப்பியம் சவுல் என்பவர் பவுலாக மாறிய விதத்தினையும், பவுலின் நற்செய்தி ஊழியத்தினையும், அதில் அவர் பட்ட பாடுகளையும், அவருடைய கடிதங்கள் குறித்தும் தமிழ் உணர்வு ததும்ப விவரிக்கிறது. இக்காப்பியத்தின் மூலம் பவுல் அப்போஸ்தலரின் காலச்சூழலையும், வரலாற்றுப் பின்னணியையும் அறிந்துகொள்ள முடிகிறது. பவுலடியார் பற்றி வெளிவந்துள்ள முதல் கிறித்தவ இலக்கியம் என்னும் சிறப்பினை இந்நூல் பெற்றுள்ளது.

பாயிரம்

நூலின் தொடக்க நிலையிலுள்ள பாயிரத்தில் இறைவேண்டல், அவையடக்கம், தொண்டரின் தோற்றப் பொலிவு, தொண்டர் அருள்வாக்குப் பயன், நம் கடன் என்னும் தலைப்புகளில் பன்னிரெண்டு பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

இளமைக் காண்டம்

பவுலடியார் பாவியத்தின் முதல் காண்டமான இளமைக் காண்டம் தருசுப் படலம், நாடுகாண் படலம், நகரப் படலம், அறிஞர் அடிசேர் படலம், குருதிச் சான்றோன் படலம் என்னும் ஐந்து படலங்களைக் கொண்டது. இக்காண்டத்தில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 346 ஆகும்.

மனமாற்றக் காண்டம்

இரண்டாவது காண்டமான மனமாற்றக் காண்டமானது அவைமலர் படலம், காட்சிப் படலம், புதுநெறியேற்ற படலம்

என்னும் மூன்று படலங்களாலானது. இக்காண்டத்தில் 345 பாடல்கள் உள்ளன.

பணிபுரி காண்டம்

மூன்றாவது காண்டமான பணிபுரி காண்டமானது அருளடியார் ஒருங்குணர்வுப் படலம், சாலமி சென்றடைந்த படலம், மந்திரவாதி பார்வையிழந்த படலம், பிசிதியன் அந்தியோகு சென்றடைந்த படலம், கல்லெறியுண்ட படலம், நற்செய்தி நகர் மீண்ட படலம், பேரவைப் படலம், அவை தேற்றுப் படலம், தூய ஆவியானவர்க்கடங்கிய படலம், சிறைகண்ட படலம், தெசலோனிக்கே சென்றடைந்த படலம், அத்தனே நகரடைந்த படலம், அறியப்படாத தேவனை அறிவித்த படலம், கொரிந்தியருக்கு நற்செய்தி நவின்ற படலம், எபேசு சென்றடைந்த படலம், மாயவித்தைக்காரர் மனம் மாறிய படலம், கொரிந்தியருக்கு நல்லாறு காட்டிய படலம், தெமேத்திரியு தொல்லை தந்த படலம், அறக்கொடை ஈட்டிய படலம், ஐத்திகு உயிர்த்த படலம், எபேசு மூப்பரைச் சந்தித்த படலம், தீரு நகரத்தார்க்கு விடையளித்த படலம், அகபு இறைவாக்கு கூறிய படலம், எருசலேம் மூப்பரைச் சந்தித்த படலம், ஆசிய யூதர்கலாம் விளைத்த படலம், யூதர்முன் சான்று சொன்ன படலம், அவையோர்முன் சான்று சொன்ன படலம், அடிகளாரைச் செசரியாவிற்கு அனுப்பிய படலம், நாட்டுத் தலைவன் முன் சான்று சொன்ன படலம், வேந்தனுக்கு அபயமிட்ட படலம், மன்னன் முன் சான்று சொன்ன படலம், செந்துறை சேர்ந்த படலம், கப்பல் சேதமுற்ற படலம், மெலித்தாப் படலம், கடற்செலவேற்ற படலம், அன்பர் எதிர்கொண்ட படலம், படைத்தலைவனிடம் ஒப்படைத்த படலம் என்னும் 37 படலங்களைக் கொண்டது. பணிபுரி காண்டத்திலுள்ள பாடல்களின் எண்ணிக்கை 1586 ஆகும்.

வெற்றிக் காண்டம்

நான்காவது காண்டமான வெற்றிக் காண்டமானது யூதர்க்கு உண்மை விளக்கிய படலம், குடிக்கூலி இல்லில் நற்செய்தி நவின்ற படலம், ஒநேசிமுவை நெறிப்படுத்திய படலம், ஒநேசிமுவை ஊருக்கனுப்பிய படலம், ஊர்களுக்குக் கடிதம் அனுப்பிய படலம், பிலிப்பியருக்கு மடல் அனுப்பிய படலம், விடுதலையடைந்த படலம், பிலிப்பி நகர் சென்றடைந்த படலம், சபைகளைக் கண்டுூக்கிய படலம், நீரோ தீங்கிழைத்த படலம், கடுஞ்சிறையுற்ற படலம், வெற்றிப்

படலம் என்னும் 12 படலங்களால் ஆனது. இக்காண்டத்தில் 420 பாடல்கள் உள்ளன.

வரலாற்றுச் செய்திகள்

விவிலியத்திலுள்ள பவுலடியார் தொடர்பான நிகழ்வுகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு பாவியத்தைப் படைக்காமல், அக்கால வரலாற்று நிகழ்வுகளையும், வரலாற்றுப் பின்னணியையும் சேர்த்து முரண்பாடின்றி இப்பாவியத்தைப் படைத்திருப்பது இந்நூலுக்குப் பெருஞ் சிறப்பாகும். ஒவ்வொரு நாடும் நகரமும் உருவான சூழல், மற்றும் அவற்றை உருவாக்கியவர்கள் தொடர்பான வரலாற்றுச் செய்திகளை விளக்கியிருக்கும் திறம் ஆசிரியரின் வரலாற்று அறிவினையும் விவிலியத் திறனாய்வு நூல்களிலுள்ள புலமையினையும் வெளிப்படுத்துகிறது. சிலிசியா நாட்டை வளப்படுத்தும் 'சைட்னசு' என்னும் ஆற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது அவ்வாற்றில் கிளியோப்பாத்திரா பொற்படகில் சென்றாள் என்னும் வரலாற்றுண்மையைக் குறிப்பிடுகிறார். நகரங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவற்றின் வரலாற்றுச் சிறப்பினையும், அந்நகர்கள் இன்று எப்பெயரால் அழைக்கப்படுகின்றன என்பது பற்றிய விபரங்களையும் குறிப்பிடுவது ஆசிரியரின் வரலாற்றறிவினைப் புலப்படுத்துகிறது. எருசலேம் நகரைப் பற்றியும், எருசலேம் ஆலயத்தைப் பற்றியும் நகரப்படலத்தில் வரலாற்றுப் பின்னணியில் விவரிக்கப்பட்டுள்ளது. அத்தேனே நகரடைந்த படலத்தில் பெரேயா நகர் தெசலோனிக்கே நகருக்குத் தென்மேற்கே ஐம்பது கல் தொலைவிலிருந்தது என்றும், தற்காலத்தில் இது வெரியா என்றழைக்கப்படுகிறது என்றும் வரலாற்றுக் குறிப்புகளை ஆசிரியர் தருகிறார்.

பணிபுரி காண்டத்தின் முதல் படலத்தில் அந்தியோகியா என்னும் நகரைப் பற்றி விவரிக்கிறார். அந்தியோகியா நகர் உரோமைப் பேரரசின் மூன்றாம் பெருநகராக விளங்கியது என்றும், இந்நகர் செலுக்கஸ் நிக்கேதாரால் கட்டப்பட்டது என்றும், அந்நாளில் புறச்சமய நகரங்களுக்கெல்லாம் அரசியாகத் திகழ்ந்தது என்றும் பல வரலாற்றுச் செய்திகளை ஆசிரியர் தருகிறார். தெமேத்திரியு தொல்லை தந்த படலத்தில் எபேசு நகரில் இருந்த உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக விளங்கிய தியானாளின்(டயானா) கோவில் பற்றிய செய்திகளை

ஆசிரியர் வரலாற்றுப் பின்னணியுடன் குறிப்பிடுகிறார். இக்கோவிலைச் சுற்றிலும் அமைந்த பளிங்கு பீடங்களில் ஒளி வீசும் நூறு மஞ்சள் வண்ணத்தினாலமைந்த மணித்தூண்கள் நின்றன. ஆலயத்தின் கூரையில் சிவப்பு வண்ணமும் பொன்முலாமும் பூசப்பட்டிருந்தன. மே மாதத்தில் தியானாளுக்குச் சிறந்த விழா எடுக்கப்படும். அந்நாட்களில் தியானாளின் சிலையைத் தெருக்களில் மான்கள் இழுத்துச் செல்லும். இவ்விழாவைக் கண்டு களிக்க பல நாடுகளிலிருந்தும் வருவர். அவர்கள் தங்கள் தகுதிக்குத்தக்க வெள்ளி, மரம் முதலியவற்றால் செய்யப்பட்ட தியானாளின் உருவத்தையும் மாதிரிக் கோவிலையும் விலை கொடுத்து வாங்கிச் செல்வர். இத்தகைய எபேசு நகரில் பவுலடிகளார் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இறைப்பணியாற்றி வந்தார் என ஆசிரியர் எபேசு நகரின் சிறப்பை விளக்குகிறார்.

பவுலடிகளார் இறைப்பணியாற்றிய பிலிப்பி நகரைப் பற்றி விளக்கும்போது பிலிப்பி நகர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கிரினைட்ஸ் என்று அழைக்கப்பட்டது என்றும், கிரினைட்ஸ் என்பதற்கு ஊற்றுகள் என்பது பொருள் எனவும் குறிப்பிடுகிறார். நீரோ மன்னனின் ஆணைப்படி பவுலடியார் மாமர்டின் என்னும் சிறையில் அடைக்கப்பட்டார். இச்சிறையைப் பற்றி ஆசிரியர், உரோமப் பேரரசன் கொடிய குற்றவாளிகளை அடைக்கும் சிறையே மாமர்டின் சிறை; இச்சிறை வசதிக் குறைவானது; இச்சிறை வலிய கற்கள் கொண்டு கட்டப்பட்டுப் பெயர்க்க இயலாதவாறு இரும்புக் கம்பிகளாலே இணைக்கப்பட்டிருந்தது என கடுஞ்சிறையுற்ற படலத்தில் குறிப்பிடுகின்றார். பாவியத்தின் இறுதிக் காண்டமான வெற்றிக் காண்டத்தில் உரோமானிய வரலாற்றிலுள்ள நீரோ மன்னனின் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாற்றுச் செய்தியை ஆதாரமாகக் கொண்டு பவுலடியார் வாளால் வெட்டுண்டு இறந்ததைக் கூறுகிறார். பவுலடியார் வாளால் வெட்டுண்டு இறந்த செய்தி விவிலியத்தில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்று பல விரிவான வரலாற்றுச் செய்திகளுடன் இப்பாவியம் படைக்கப் பட்டிருப்பதன் மூலம் ஆசிரியரின் பரந்துபட்ட அறிவினையும், பவுலடியாரின் இறைப்பணியினுடைய பின்புலத்தை விவரிக்க வரலாற்றுச் செய்திகள் பயன்படும் பாங்கினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

புலமைத்திறன்

பவுலடியார் பிறந்த இடம் தருசு என்னும் நகரமாகும். இந்நகரத்தின் சிறப்புகளையும், பெருமைகளையும் ஆசிரியர் நூலின் முதல் படலமான தருசுப் படலத்தில் விவரிக்கிறார். தருசு நகரில் செல்லும் ஆற்றுச் சிறப்பு, நகரச் சிறப்பு, பல்கலைக்கழகத்தின் சிறப்பு, காட்டு வளம், கதிரவன் தோற்றம், கடற்கரை அழகு, மலைக்காட்சி போன்ற பல்வேறு சிறப்புகளை 59 பாடல்களில் சிறப்பாக விவரித்துள்ளார். ஆசிரியர் யோவேலின் புலமைத்திறன் நூல் முழுவதிலும் வெளிப்படுகிறது. இந்நூலிலுள்ள அனைத்துப் பாடல்களும் எதுகை, மோனை நயத்தில் அமைந்த பாடல்களாகும். பவுலடியார் பாவியத்தில் ஓசை நயமுடையப் பாடல்கள் பல உள்ளன. பவுலடியார் பிறந்து வளர்ந்த சிலிசியா நாட்டை வளப்படுத்திய சைட்னசு என்னும் ஆற்றின் வளத்தினை,

விரைதரு குறிஞ்சி தன்னில் விரைவுடன் இளமை காட்டி
நிரைவரு முல்லைக் காட்டில் நினைந்திடு பொருளை ஈட்டித்
தரையுரு மருதங் கண்டு தகவினைப் பெற்று மேன்மேல்
திரைவரும் நெய்தல் நோக்கும் சைட்னசாம் இறைத்தொண்டாளே
(தருசுப் படலம், பா.1)

எனத் தமிழ்நாட்டின் நிலப் பாகுபாட்டினைப் பின்னணியாக வைத்துப் பாடுகின்றார். இப்பாடலில் மணம் மிக்க குறிஞ்சி மலர்கள் மலருகின்ற மலையிலிருந்து இளமை வேகத்துடன் விரைந்து இறங்கி, ஆனிரைகள் மேய்கின்ற முல்லைக் காட்டில் தனக்குத் தேவையான பொருள்களைத் தேடிக் கொண்டு, வயல் சார்ந்த நிலமான மருதம் வந்து, மேலும் நீர் வளம் பெற்று, அலைகளைக் கொண்ட கடலை சைட்னசு ஆறு அடைந்தது எனக் கவி நயத்துடன் பாடுகிறார்.

கதிரவனின் தோற்றம்

கதிரவனின் தோற்றத்தினைத் தற்குறிப்பேற்ற அணியின் மூலமாக விவரிக்கின்றார். சான்றாக,

மலர்தலை யுலகில் மண்டும் மாயிருள் நீக்கத் தன்னின்
பலகதிர் பரப்பி யாண்டும் பாருளோர் வியந்து போற்ற
அலகிலா வெளியில் தோன்றும் அஞ்சுடர்ப் பரிதி யானும்
உலகவர் ஒளியின் கற்றை உயர்மகன் காண வந்தான்
(தருசுப் படலம், பா.48)

என சொல் நயத்துடன் பாடுகிறார். இப்பாடலில் இடம் அகன்ற

உலகின் மீது மண்டிக் கிடக்கின்ற பேரிருளை நீக்கிடத் தனது பல்கதிர்களைப் பரப்பி, உலகில் உள்ளோர் வியந்து போற்ற ஒளி செய்து, எல்லையில்லா வான் வெளியில் தோன்றும் அழகிய சுடர் பருதியால் ஒளியின் கற்றை வீசுகின்ற உயர் மகனைக் காணுவதற்காகக் கதிரவன் வந்தான் என நயமுடன் பாடுகிறார். மேலும்,

வறுமையால் வாடி நிற்கும் உளத்தூயர் வாழ்வை எண்ணி
நறுமையாங் கொள்கை கொண்டு நகரெரு சாலையை நண்ண
சிறமைதீர் உதவு ஈகைச் செல்வரின் சார்பு நல்லார்
உறுமுகங் காண வேண்டி உதித்தனன் எல்லோன் வானில்
(எபேசு மூப்பரைச் சந்தித்த படலம், பா.1)

என்னும் இப்பாடலில் கொடிய வறுமையால் வாட்டமுற்று நிற்கும் உள்ளத்தில் தூய்மையான நல்லவர்கள் வாழ்வை உணர்த்த வேண்டும் என்று நெஞ்சில் எண்ணி, அவ்வினிய கொள்கையோடு எருசலேம் நகரை அடைய, அந்த ஈகைக் குணம் கொண்ட செல்வந்தரால் நல்லோர்கள் நன்மை பெற்று நல்லோர்கள் முகம் மலர்வதைக் காண்பதற்காக கதிரவன் வானத்தில் உதித்தான் என்னும் கருத்தை நிலைநிறுத்துகிறார். இவ்விரண்டு பாடல்களிலும் கதிரவன் உதித்து வருவது இயல்பான ஒன்று. ஆனால் இவர்களைப் பார்க்க வருவது போல ஆசிரியர் தற்குறிப்பேற்ற அணியை மனதில் கொண்டு பாடியுள்ள நயம் பாராட்டத்தக்கது.

வருணனை

பவுலடியார் பாவியத்தில் வருணனைகள் மிகுதி. இது ஆசிரியரின் கவித்திறமைக்குச் சிறந்த சான்றாகும். நாடுகாண் படலத்தில் ஒலிவமலையின் சிறப்பினை,

குருவுறு கொடிவரைக் குடுமிவான் பற்றிட
அருவிநீர்க் கயிறுகொண் டாவலால் ஈர்த்திடும்
உருவெழில் இறைமக னுயரடி தால்குநல்
இருநிலத் தொலிவ்வெற்(பு) இணையிலா(து) ஒளிர்ந்ததே.
(நாடுகாண் படலம், பா. 27)

எனப் பாடுகிறார். குருவாகிய இயேசு பிரான் இருந்த ஒலிவ மலையின் உச்சி, வானைத் தொட்டிருந்தது. அருவி நீர் கயிறுகள் போல் காணப்பட்டிருந்தன. எழில் மிக்க உருவமைந்த இறைமகனின் திருவடியைத் தாங்குவதால் இவ்வுலகில் இணையற்ற ஒளியோடு ஒளிர்ந்தது என்பது இப்பாடலின் கருத்தாகும். மேலும்,

உயர்மலையில் வளைந்துவளைந் தோடி விளை யாடும்
அயர்விலாமல் அகந்துள்ளி ஆங்குவிரைந் தோடும்
பெயர்பெற்ற பெருமரமாம் சிந்தூரஞ் சிரிக்க
மயர்விலாமல் வியர்தூவி மனங்களிக்கு மாறே

(சாலமி சென்றடைந்த படலம், பா.6)

என்னும் பாடலில் உயர்ந்த மலையில் வளைந்து வளைந்து ஓடி விளையாடும்; ஒரு துளியும் அயர்வில்லாமல் மனம் மகிழ்ச்சியோடு அங்கு விரைந்தோடும்; புகழ் மிக்க பெருமரமான சிந்தூர மரம் சிரிக்க அயர்வில்லாமல் வியர்வை போன்ற நீர்த்துளிகளை அதன் மீது தூவி மனம் களிக்கும் என ஓராந்தீசு ஆற்றினை வருணிக்கிறார். மட்டுமன்றி,

தன்னைநோக்கித் தலைவணங்கும் தாள்பயிரைப் பார்க்கும்
மன்னனது மனத்தினிலே மகிழ்கொளநீர் வார்க்கும்
இன்னலெதும் எய்திடாமல் இன்வளமே சேர்க்கும்
உன்னிடவே நடமாடும் ஓரந்தே சாறே

(சாலமி சென்றடைந்த படலம், பா.8)

என்னும் பாடலில் ஓராந்தீசு ஆறு தன்னால் பயன் பெற்று, நன்றியுணர்ச்சியோடு தன்னை நோக்கித் தலை வணங்கும் பயிர்களைப் பார்க்கும். மன்னனது மனதில் மகிழ்வு ஏற்பட நீர் வார்க்கும். துன்பம் அணுகாமல் இருக்க நல்வளம் சேர்க்கும். பிறர் தன்னை எப்பொழுதும் எண்ணும்படி மகிழ்ந்து நடமாடிச் செல்லும் என வருணிக்கிறார்.

பவுலடியார் பாவிய ஆசிரியர் கடலையும் மலையையும் வருணிக்கும் திறம் போற்றத்தக்கது. பவுலடியார் எக்னேசியன் சாலை வழியாக அப்பொலோனியா நகருக்குச் செல்லும் வழியில் கடல் மற்றும் மலையைக் காண்கிறார். அதை,

நீலாடை நன்கு டுத்து நேர்அலைக் கரங்கள் நீட்டிப்
பாலாடை கொடுக்கும் பாங்கைப் பார்த்தவர் எதிரே பார்க்க
வாலாடை மேகம் சூட்டி வாழ்த்தினை வானும் நல்கக்
கோலாடைத் தேனும் நல்கும் கொடுமுடி வரையுங் கண்டார்

(தெசலோனிக்கே சென்றடைந்த படலம், பா.11)

என ஆசிரியர் வருணிக்கிறார். இப்பாடலில் நீல நிறமான ஆடையை நன்கு உடுத்த கடல், தனது அலைக்கரங்களை நீட்டி வெண்மையான நுரைகளைப் பாலாடை போலக் கொடுக்கும் பாங்கினைப் பார்த்து மகிழ்ந்தவர், அதற்கு எதிரே ஒளி

பொருந்திய மேகத்தினைச் சூடிய வாழ்த்தினை நல்கும் வானத்தையும், உயர்ந்த மரங்களில் பெரிய தேனினை விளைவித்து வழங்கும் உயர்ந்த சிகரங்களை உடைய மலையினையும் கண்டார் என ஆசிரியர் பாடுகிறார். இவ்வாறு பவுலடியார் பாவியத்தில் ஆங்காங்கே வருணனைகளின் மூலம் பாவியத்தைக் கொண்டு செல்லும் உத்தி சிறப்பாக அமைந்துள்ளது.

எருசலேம் நகரச் சிறப்பு

எருசலேம் நகரினை ஆசிரியர் விவரிக்கும் பாங்கு சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

அருட்பெருக்கும் வெறிப்பெருக்கும் உறைந்த ஊராய்
அறப்பெருக்கும் உரைப்பெருக்கும் நிறைந்த ஊராய்
தெருப்பெருக்கும் விருப்பிருக்கும் தகைசால் ஊராய்
தெருட்பெருக்கும் கலிப்பெருக்கும் திளைந்த ஊராய்
பொருட்பெருக்கும் மாப்பெருக்கும் பொருந்து ஊராய்
பலிப்பெருக்கும் படைப்பெருக்கும் படைத்த ஊராய்த்
திருப்பெருக்கும் நிறைந்தவூரில் விழவு மக்கள்
இருப்பெண்ணிப் பொருப்பிருக்க அமைந்த ஊரோ
(எருசலேம் மூப்பரைச் சந்தித்த படலம், பா.30)

என்னும் பாடலில் அருள் பெருக்கம், ஆன்மீக வெறிப் பெருக்கம் உறைந்த ஊராகவும்; அறப்பெருக்கம், அறவுரைப் பெருக்கம் நிறைந்த ஊராகவும்; தெருப் பெருக்கம், விரும்பி உறைகின்ற தகைமைப் பெருக்கம் உடைய ஊராகவும்; மனத்தெளிவுப் பெருக்கம், மகிழ்ச்சி ஆரவாரப் பெருக்கம் பொதிந்த ஊராகவும்; செல்வப் பெருக்கம், மரங்களின் பெருக்கம் படைத்ததாகவும்; பலிப் பெருக்கம், படைப் பெருக்கம் படைத்த ஊராகவும்; எல்லா வகையான வளங்களும் நிறைந்து அமைந்ததாகவும் எப்பொழுதும் மக்கள் விழாக்கள் கொண்டாடி மகிழ்ந்திருக்கின்ற ஊராகவும் இருந்தது என எருசலேம் நகரினை வருணனை செய்யும் திறம் பாராட்டத்தக்கது.

ஜெபத்தின் சிறப்பு

பவுலடியார் பாவியத்தில் ஜெபத்தின் சிறப்பு ஆசிரியரால் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. இறைவனுடைய அருள் வேண்டுதல் ஈடு இணையற்ற ஒன்றாகும். ஜெபம் குறைவுகளை

முற்றிலும் போக்கும். கடவுளின் நல் அன்பினை நிறைவாகக் கொண்டு வந்து சேர்க்கும். நாம் எண்ணியவற்றை வழங்கும். பகைவர்களை வீழ்த்தி வெற்றியை வழங்கும். உடலினை வாட்டுகின்ற பெரு நோயை நீக்கும். அறியாமையிலிருந்து உள்ளம் விடுபட்டு மாண்புறத் திகழும். வாழ்வு புகழ் ஒளியோடு விளங்கும். உடலுக்கு அது மூச்சாகவும் உயிருக்கு அது எஃகு போன்ற உறுதியாகவும் அமையும் என விவரிக்கிறார். இதைப் பின்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன:

இறையருள் வேட்டல் இணையற்ற தாகும்
குறை(வு)அறப் போக்கும் கடவுளின்நல் அன்பு
நிறை(வு)உற அருளும் நினைத்தாங்கு கூட்டும்
சிறைப்பகை வீழ்த்தி நிறைவேற்றி யருளும்.

உடல்தனை வாட்டும் உறுநோய் நீக்க
மடம்அற உள்ளம் மாண்புற் றார்க்க
திடம்உறு வாழ்வு தேசுற்(று) ஓங்க
உடற்(கு)அரும் உயிர்ப்பாம் உயிர்க்கோர் எஃகு.

(புதுநெறியேற்ற படலம், பா.625, 626)

போற்றி அகவல்

இறைவனின் பல்வேறு நலங்களையும் குணங்களையும் போற்றிப் புகழுதல் போற்றி அகவலின் சிறப்பாகும். இறைவனை அகரவரிசையில் பாடிப் போற்றியிருப்பது ஆசிரியரின் புலமைக்குத் தக்க சான்றாக உள்ளது. அப்பாடல் பின்வருமாறு:

அன்பே அருளே அற்புதா போற்றி
ஆதி முதலே அந்தமே போற்றி
இன்ப இறையே ஈகாய் போற்றி
ஈகைப் பொருளே இயவே போற்றி
உண்மைப் பொருளே உருவே போற்றி
ஊன்று கோலே உறவே போற்றி
என்று முளாயே எழிலே போற்றி
ஏகனே ஏற்பனே ஏற்றமே போற்றி
ஐயனே அறிவே அறமே போற்றி
ஒன்றி யுறைந்த ஒளியே போற்றி
ஓங்க லுரையை உதவினாய் போற்றி
ஔவிய மில்லா அண்டனே போற்றி
இயேசு நாதனின் இணையடி போற்றி.

(சிறைகண்ட படலம், பா.89)

கவிதையாக்கம்

இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்த 'பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமென்' என்னும் மன்றாட்டினை (மத்தேயு 6:9-13),

மீமிசை மண்டிலம் மேவிடு பிதாவே
சாமிநும் பெயரே தூய்மை யுறுகவே
வருகநும் மரசு திருச்சித்தம் விண்போல்
இருநிலந் தனிலே வினைப்பட லாகுக
எங்கட்கு வேண்டிய இனிதூண் தன்னை
எங்கட் கினிதின் றீந்திடு வீரே
எங்கள் கடனரை யாம்மனிப் பதுபோல்
எங்கள் கடன்களை எங்கட்கு மன்னிப்பீர்
சோதனைக் குள்ளே சேர்ந்திடப் பண்ணாமல்
ஏதத்தி னின்றுநீர் எங்களை மீட்டருள்வீர்
ஆட்சியும் ஆற்றலும் மாட்சியு முமக்கே
நீட்சிகொள் காலம் என்றென்றும் ஆமென்

(சிறைகண்ட படலம், பா.90)

என நயமிக்கப் பாடலாக வடித்துள்ளார்.

உவமைகள்

பவுலடியார் பாவியத்தில் ஆசிரியர் நிகழ்வுகளை விளக்கப் பல உவமைகளைக் கையாண்டுள்ளார். சான்றாகச் சில:

1. இரையினை வாங்க நோக்கும் இளங்குஞ்சு போன்றா ராகி
2. தகநீரில் தூண்டிற் காரன் தக்கைமேல் வைக்கும் கண்போல்
3. திண்கொழு சென்ற வாற்றில் துன்னூசி செல்லல் போல
4. பிறவுறுப் பூறு கண்டு பொங்கியழு கண்ணே போல

5. உவர்க் கடலில் வாழ்ந்திட்டாலும் உப்பினை ஏலா மீன்போல்.
6. வாடிய பயிர்களுக்கு வாய்த்தநல் மாரிபோல
7. மயிலினைக் கண்டு வந்து வான்கோழி ஆடல் போல
8. மென்குரல் ஒலிக்கச் செய்தி வழங்கிய பான்மை போல
9. முட்டையைத் தீண்டச் செல்லும் மிகுநீளப் பாம்மைப் போல
10. மதியிலாச் செல்வன் உற்ற மாபெரும் பொருளைப் போல

என்னும் இத்தகைய உவமைகளால் பாவியம் சிறக்கிறது.

அடுக்கு உவமை

ஒரே பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட உவமைகள் அடுக்கி வருமாயின் அது அடுக்கு உவமை எனப்படும். பவுலடியார் இயேசு கிறிஸ்துவுக்காகத் தம் இன்னுயிரைக் கொடுத்து சாட்சியானதை,

> **காய்த்தாலும் சுவையில் சற்றும் குறைந்திடா ஆப்பால் போன்றும்**
> **தீய்த்தாலும் மணத்திற் குன்றாச் சந்தனக் கட்டை போன்றும்**
> **மாய்த்தாலும் இயல்பில் மாறாப் பண்பினன் பவுலும் தம்மைச்**
> **சாய்த்தாலும் பகைவன் நாட்டில் சான்றானார் இயேசுவுக்காய்**
> **(வெற்றிப் படலம், பா.12)**

என உணர்வுபூர்வமாகப் பாடுகிறார். இப்பாடலில் எவ்வளவுதான் காய்ச்சினாலும் தன் சுவையில் குன்றாத ஆவின் பால் போலும், எவ்வளவுதான் தேய்த்தாலும் தன் மணத்தில் குறையாத சந்தனக் கட்டை போலவும், மாய்த்திட முயன்றாலும் தன் பண்பிலிருந்து மாறாத பவுல், பகைவன் நாட்டில் இயேசு கிறிஸ்துவுக்காய் குருதிச் சான்றானார் எனப் பாடுகிறார். கொடியவனான நீரோ மன்னனை ஆசிரியர்,

> **குளவிக் கொடுக்க னாயும் கொல்புலி நகத்தனாயும்**
> **அளவில் வஞ்சம் மிஞ்சும் அருங்கான் நரிய னாயும்**
> **களவார் காக்க னாயும் கடுவார் பாம்ப னாயும்**
> **உளனாம் நீரோ என்பான் உத்தமர் சிறையி லிட்டான்**
> **(கடுஞ்சிறையுற்ற படலம், பா.3)**

என விவரிக்கிறார். இப்பாடலில் குளவியின் கொடுக்கு போலவும் கொல்புலியின் நகத்தைப் போலவும் அளவற்ற

வஞ்சம் கொண்ட காட்டில் வாழும் நரியைப் போலவும் திருடனைக் காப்பவனாயும் நஞ்சுடைய பாம்பாகவும் இருக்கின்ற நீரோ என்பவன் உத்தமரைச் சிறையில் அடைத்தான் என விளக்குகிறார். நீரோ மன்னனின் கீழ்மையை விவரிப்பதற்குப் பல்வேறு உயிரினங்களின் தீய இயல்புகளை உவமையாக்கிப் பட்டியலிடும் பாங்கு, கவிஞரின் கற்பனைத் திறத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

திருக்குறளின் தாக்கம்

பவுலடியார் பாவியத்தில் திருக்குறளின் தாக்கம் சில இடங்களில் காணப்படுகிறது. இப்பகுதிகள் ஆசிரியரின் திருக்குறள் புலமையினைத் தெளிவுபடுத்துகின்றன.

அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை (குறள்.555)

என்னும் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு,

அல்லலும் அலைபோல் எய்த ஆற்றிடார் அருவிக் கண்ணீர்
செல்வத்தை அழிக்கு மென்று செருக்குளன் அறியா னானான்
கல்லினும் கடிய நெஞ்சான் கரவுளான் கோல ரங்கில்
கொல்லரி கிறித்தோர் பீறும் கோரங்காண் களிம றத்தான்
(நீரோ தீங்கிழைத்த படலம், பா.43)

என ரோம் நாட்டு மன்னன் நீரோ என்பவன் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய மக்களைக் கொடுமைப்படுத்தியதை விவரித்துள்ளார். அல்லலுற்ற அலைகள் போல மேலும் துயர்கள் மோத, ஆற்றிடாதவர்களின் கண்களிலிருந்து அருவிபோல் வழிகின்ற கண்ணீர் செல்வத்தை அழிக்கும் என்று ஆணவம்மிக்க அவன் அறியாதவனாயிருந்தான். மனதில் வஞ்சனையும் கல்லைவிட கொடிய நெஞ்சும் உடைய அவன் அரங்கத்தில் கொலை வெறி மிக்க சிங்கம் கிறித்தவர்களை அடித்துக் கிழிக்கும் கோரமான காட்சியைக் கண்டு மகிழும் கொடிய நெஞ்சினை உடையவன் என விளக்குகிறார். இதுபோல கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, தாயுமானவர் பாடல்கள், குற்றாலக் குறவஞ்சி போன்ற நூல்களிலுள்ள ஆசிரியரின் புலமை இந்நூலில் வெளிப்படுகின்றது.

யாப்பமைதி

பவுலடியார் காப்பியத்தில் பல வகையான யாப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம்,

கலிவிருத்தம், கலித்தாழிசை, கண்ணிகள் என இவை பல வகைகளில் அமைந்துள்ளதால் படிப்பதற்குச் சுவையாகவும் விறுவிறுப்பாகவும் இக்காப்பியம் அமைந்துள்ளது. பாவலரின் கவிதைகள் எளிமையாகவும், இனிமையாகவும், ஆழமாகவும் அமைந்துள்ளமை காப்பியத்தின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

பவுலடியாரின் அறிவுரைகள்

பவுலடியார் பாவியத்தின் இறுதிப் படலமான வெற்றிப் படலத்தில் மக்களின் வெற்றி வாழ்விற்கு வழிகாட்டும் அருளுரைகள், அறிவுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆவியின் வரங்கள், ஆவியின் கனிகள் என்பனவாகும். மேலும் அன்பு, விசுவாசம், மன்னிப்பு, கணவர்க்கு அறிவுரை, மனைவியர்க்கு அறிவுரை, பெற்றோர்க்கு அறிவுரை, பிள்ளைகட்கு அறிவுரை, வேலைக்காரர்க்கு அறிவுரை, முதலாளிகளுக்கு அறிவுரை என்பனவும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. பவுலடியார் கொரிந்தியருக்கு, "ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது (1 கொரிந்தியர் 12: 8-10) என எழுதுகிறார். இப்பகுதியை ஆசிரியர்,

> **மெய்யுணர்வு கற்பிக்கும் மேலாம் மொழியும்**
> **உய்ய அறி(வு) உணர்த்தலும் உயர்விசு வாசமும்**
> **அற்புதஞ்செய் ஆற்றலும் ஆவிபகுத் தறிதலும்**
> **முற்காண்(பு) உரைத்தலும் குணமாக்கும் வரங்களும்**
> **பற்பல மொழிகளைப் பாங்குறப் பேசலும்**
> **மொழிகளை விளக்கி மொழிதலு மாமிவை**
> **அழிவிலா ஆவியர் அளிக்கும் வரங்களாம்**
>
> **(வெற்றிப் படலம், பா.19)**

எனப் பாடுகிறார். மேலும் பவுலடியார் கலாத்தியருக்கு எழுதும் கடிதத்தில், " ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம்,

நீடிய பொறுமை, தயவு, நற்குணம் விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை(கலாத்தியர் 5:22-23) எனக் குறிப்பிடுகிறார். இக்கருத்தை காப்பிய ஆசிரியர்,

ஆவியின் கனிகள் அமைவுறக் கூறின்
அன்பு மகிழ்ச்சி அமைதி தயவு
இன்புறு விசுவாசம் இச்சைகள் அடக்கம்
நற்குணம் சமாதானம் நீடிய பொறுமை
பொற்புறும் இவைக்கெதிர் பிறிதொன்றும் இல்லை

(வெற்றிப் படலம், பா.19)

எனப் பாடலாக வடிக்கிறார்.

பவுலடியார் பாவியத்தைப் படிக்கும்போது விவிலியத்திலுள்ள அப்போஸ்தலர் நடபடிகள் மற்றும் பவுல் எழுதிய கடிதங்கள் அனைத்தையும் வரலாற்றுப் பின்புலம் மற்றும் இலக்கிய இலக்கணச் சுவைகளுடன் படித்த இறைஇன்பத்தைப் பெறமுடிகிறது. பவுலடியாரின் வாழ்வு காப்பிய வடிவில் பல்வகை நயங்களுடன் படைக்கப் பட்டிருப்பது கிறித்தவ இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல் என மதிக்கத்தக்கது ஆகும்.

21. மீட்பரசி

கத்தோலிக்கக் கிறித்தவர்களின் விவிலியத்தில் உள்ள தள்ளுபடி புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது புரட்சிப் பெண்ணான யூதித்துவின் வரலாறு. தற்போது வெளிவந்துள்ள பொது விவிலியத்திலும் யூதித்துவின் வரலாறு இணைத்திருமறை என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இஸ்ரவேலர்களுக்கு அசீரிய அரசன் நேபுகத்நேசனிடமிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்த யூதித்து என்னும் புரட்சிப் பெண்ணின் வரலாறைக் கவிஞர் லோட்டஸ் எடிசன் காப்பியமாகப் புனைந்துள்ளார்கள். இக்காப்பியம் 2002ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் திக்கணம்கோடு என்னும் ஊரிலுள்ள திரேசா நூல் ஆலயத்தின் மூலம் வெளிவந்துள்ளது.

காப்பியச் சுருக்கம்

இஸ்ரவேலர் அடிமை வாழ்வைக் கடந்து, வளமான வாழ்க்கை வாழ முயன்று கொண்டிருந்தனர். அப்போது நேபுகாத்நேசர் என்னும் மன்னன் நினிவே மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு அசீரியர்களை ஆட்சி புரிந்து வந்தான். அவன் தன் ஆட்சியின் பதினேழாம் ஆண்டில் அர்ப்பகசாது என்னும் அரசனைப் போரினில் வென்றான். இந்த வெற்றியை 120 நாட்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். பின்னர் நெபுகாத்னேசரின் கட்டளைப்படி அவனது படைத் தளபதி ஒலோபெரின் என்பவன் படையைத் திரட்டிக் கொண்டு, யூதேயாவில் வாழ்ந்து வரும் இஸ்ரயேலர்களை அழிக்கப் புறப்பட்டான். ஒலோபெரின் மிகவும் மூர்க்கமானவன்.

இதைக் கேள்விப்பட்ட இஸ்ராயேலர்கள் மிகுந்த துக்கத்திற்குள்ளாயினர். இஸ்ராயேலின் ஆண்கள் கடவுளிடம் வேண்டி, நோன்பிருந்தனர். அவர்களும் அவர்களுடைய மனைவியர், மக்கள், உடன் வாழும் அன்னியர்கள், கூலியாட்கள், அடிமைகள் என அனைவரும் சாக்கு உடை அணிந்து கொண்டனர். எருசலேமில் வாழ்ந்து வந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய அனைவரும் தலையில் சாம்பலைத் தூவிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் இஸ்ராயேலரின் கடவுளை நோக்கி மன்றாடினர். இறைவன் அவர்களது குரலுக்குச் செவிசாய்த்தார். இறுதியில் பெத்தூலியா என்னும் இடத்தில் இருந்த இஸ்ரயேலர் அனைவரும்

ஒலோபெரினின் படைகளைக் கண்டு நடுக்கம் கொண்டனர். பலவிதமானத் துன்பங்களை அப்படைகளின் மூலம் அடைந்த பின்னர், இஸ்ராயேலர் அனைவரும் நேபுகாத்நேசர் மன்னனுக்கு அடிமையாகிவிடலாம் எனத் திட்டமிட்டனர். ஆனால் அவர்களது தலைவனான ஊசியாவின் ஆணைப்படி பின்வாங்கினர்.

பெத்தூலியா நகரில் செல்வச் செழிப்பு மிக்கவளும் மிகுந்த அழகுள்ளவளுமான யூதித்து என்னும் விதவைப் பெண் வாழ்ந்து வந்தாள். அவள் தன் கணவன் மனாசே இறந்த பின்னர் விதவைக் கோலம் பூண்டு கைம்பெண்ணுக்குரிய ஆடைகளை அணிந்து வந்தாள். அவள் இறைவனிடம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கும்போது, இஸ்ரயேலரை ஒலோபெரின் என்னும் படைத்தளபதியிடம் இருந்து மீட்பது குறித்து இறை ஏவுதலால் உணர்த்தப்பட்டாள். இவ்இறை உணர்த்துதலை ஊசியாவிடம் கூறி யூதித்து தன் திட்டத்தை வெளிப்படுத்தினாள்.

யூதித்து இளவரசி வேடம் தாங்கி தலைவர்கள், மூப்பர்கள், மக்கள் அனைவரிடமும் ஆசி பெற்று தன் பணிப்பெண் மரியாவுடன் மலை மீது பாசறையில் தங்கியிருந்த படைத் தளபதி ஒலோபெரினைச் சந்திக்கப் புறப்பட்டாள். யூதித்தும் மரியாவும் செல்லும் போது ஒற்றர்கள் நீ எந்த நாட்டைச் சேர்ந்தவள்? எங்கு செல்கிறாய் எனக் கேட்டனர். அதற்கு அவள் நான் ஓர் எபிரேயப் பெண்; ஆனால் எபிரேயர்களிடமிருந்து தப்பி ஓடிக் கொண்டிருக்கிறேன்; உங்கள் படைத்தலைவர் ஒலோபெரினைப் பார்த்து உண்மை நிலையை எடுத்துரைக்கச் சென்று கொண்டிருக்கிறேன் என்றாள். இதனால் சந்தேகம் அடையாத ஒற்றர்கள் அவளைப் பாசறைக்குள் செல்ல அனுமதித்தனர். யூதித்து ஒலோபெரினின் கால்களில் விழுந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினாள். ஒலோபெரின் கொடுத்த உணவை உண்ணாமல், யூதித்து தான் கொண்டு வந்த உணவையே உண்டாள்.

நான்காம் நாள் ஒலோபெரின் தனக்கு வேண்டியவர்களுக்கு விருந்து அளித்தான். அவ்விருந்துக்கு யூதித்தும் அழைக்கப் பட்டிருந்தாள். அவ்விருந்தில் யூதித்தின் மீதுள்ள மயக்கத்தின் காரணமாக அளவுக்கு அதிகமாக மதுவைக் குடித்தான். விருந்திற்கு வந்தவர்கள் அனைவரும் சென்ற பின்னர் கதவைப் பூட்டி, இறைவனிடம், “ஆண்டவரே, எல்லாம் வல்ல கடவுளே,

எருசலேமின் மேன்மைக்காக இவ்வேளையில் நான் செய்யவிருப்பதைக் கண்ணோக்கும். உமது உரிமைச் சொத்தாகிய இஸ்ராயேலுக்கு துணைபுரியவும், எங்களுக்கு எதிராக எழுந்துள்ள பகைவர்களை அழிக்கும்படி நான் செய்த சூழ்ச்சியைச் செயல்படுத்தவும் இதுவே தக்க நேரம்" என மன்றாடினாள்.

பின்னர் மது மயக்கத்தில் வீழ்ந்து கிடந்த ஒலோபெரினின் தலையை அங்கிருந்த வாளால் கொய்து கூடாரத்தின் வெளியே நின்று கொண்டிருந்த மரியா வைத்திருந்த உணவுப் பையினுள் வைத்தாள். உடனே இருவரும் இரவோடு இரவாக பெத்தூலியா நகருக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் ஒலோபெரின் கொலை செய்யப்பட்டதை விவரித்தாள். இதைக் கண்ட மக்கள் அனைவரும் இறைவனைப் போற்றினர். ஊசியா யூதித்தை வாழ்த்திப் பாராட்டினார். அசீரியர்களை எதிர்த்துப் போரிட்டு வெல்லும்படி யூதித்து இஸ்ராயேலருக்கு அறைகூவல் விடுத்தாள். ஆற்றல் பெற்ற இஸ்ராயேலர் அசீரியர்களின் பெருங்கோட்டையைக் கைப்பற்றி, அவர்களை அழித்து வாகை சூடினர். யூதித்து தன்னுடைய செல்வங்களை அனைவருக்கும் கொடுத்துவிட்டு துறவுக் கோலம் பூண்டாள்.

காப்பிய அமைப்பு

மீட்பரசி காப்பியம் நான்கு காண்டங்களால் ஆனது. இக்காப்பியத்தில் 625 பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் போன்ற யாப்பமைதியில் அமைந்துள்ளன.

விண்ணகத் தந்தைக்கு வணக்கம்

பாயிரம் என்னும் தலைப்பிற்குப் பதிலாக விண்ணகத் தந்தைக்கு வணக்கம் எனத் தலைப்பிட்டு, ஏழு பாடல்களில் இறைவனை வாழ்த்தி காப்பியம் எழுதுவதற்கான வரத்தை இறைவனிடம் வேண்டுகிறார். சான்றாக,

> **நிலைபெறும் உன்னருள் அன்பினில் ஊறிட**
> **நிலைகுலை யாவரம் தாராய்!**
> **அலையுறும் மனதினை ஒருமையில் அழைத்துநல்**
> **உணர்வினில் எழுதவா தந்தாய்!**

உயிர்கலந் திடுவாய் ஊன்கலந் திடுவாய்
ஒழுகுதேன் எழுதிட உதவாய்!
உலுக்கிடும் குவலய நிகழ்வுகள் அழிந்திட
கவிவலி வரம்புரிந் திடுவாய்! (பா.6)

என்னும் பாடலைச் சுட்டலாம்.

1. போர் காண்டம்

மீட்பரசி காப்பியத்தின் முதலாவது காண்டமான போர் காண்டத்தில் ஒருங்கிணைந்த இஸ்ராயேலர், நினிவே மாநகர், அசீரிய சர்வாதிகாரி, மேதியரின் கோட்டை, போர்ப் பலிகள், வெற்றியின் ஆணவம், தூது பெற்ற நகரங்கள், தளபதியும் போர்த்திட்டமும், படையெடுப்பின் பேரொலிகள், மரண ஓசைகள், அச்சமுறும் அபலைகள், அடங்காத பசி, பதுங்கிய சிறுத்தை, பாதுகாப்பு ஆயத்தங்கள், நோன்பும் மன்றாட்டும், இஸ்ராயேலரை எதிர்ப்பவன், உணர்த்துகின்ற அக்கியோர், அரசவை முடிவு, மீட்க்கப்படும் அக்கியோர், அடைக்கலமும் விருந்தும், பெத்தூலியாவின் சோகம், ஆலோசனை பெறும் ஒலோபெரின், சோதனையில் இஸ்ராயேலர், தளர்ச்சியும் தேற்றரவும் என்னும் தலைப்புகளில் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

2. அறத்துக் காண்டம்

இரண்டாவது காண்டமான அறத்துக் காண்டத்தில் இயற்கையின் எழில்நகர், மங்கையருள் தங்கம், ஈகையின் ஊற்று, மனையற மகிழ்ச்சி, விவேக உரையாடல், தொழிலாளர் சமத்துவம், வயல்காடும் வாலிபப் பெண்ணும், மரியாவின் அடைக்கலம், மூர்ச்சையற்ற மனாசே, யூதித்தின் மன்றாட்டு, மனாசேயின் பிரிவு, தோழியின் தேற்றுதல், உழைப்பாளர் கண்ணீர், கனவில் வந்தவர், துறவின் தொடக்கம் என்னும் தலைப்புகளில் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

3. வெற்றிக் காண்டம்

மூன்றாவது காண்டமான வெற்றிக் காண்டத்தில் உணர்த்தப்படும் யூதித்து, அரவணைக்கும் யூதித்து, வாழ்த்தும் கட்டளையும், விண்ணகத் தந்தையும் யூதித்தும், ஒப்பனையின் பேரழகு, மூப்பர்களின் ஆசீர், பயணமாகும் வீராங்கனை, மலைப்பாதையில் இரண்டு பெண்கள், பாசறையை நோக்கி, மயங்கும் ஒலோபெரின், நியாயமான தந்திரம், வைகறையில்

தெய்வீகம், பேராசையின் தூது, விருப்பமான உணவு, போதையின் அலைகள், இறைவனின் திட்டம், விடுதலை கொணர்ந்தவள் என்னும் தலைப்புகளில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

4. விடுதலைக் காண்டம்

நான்காவது காண்டமான விடுதலைக் காண்டத்தில் வீராங்கனையின் போர் விளக்கம், அக்கியோரின் மனமாற்றம், இஸ்ராயேலரின் போர் முழக்கம், ஆற்றல் இழந்த அசீரியர், தோல்வி கண்ட வீரர்கள், அசீரியரின் வீழ்ச்சி, போற்றப்படும் யூதித்து, தொடரும் துறவறம், கனவுக் காட்சி, பொதுவுடைமைப் புனிதை, மங்களப் பாடல் என்னும் தலைப்புகளில் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

புரட்சிக் காப்பியம்

யூதித்து ஒரு புரட்சிப் பெண்ணாகச் செயல்பட்டு இஸ்ராயேலருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தாள். எனவே இதை ஒரு புரட்சிக் காப்பியம் எனலாம். விதவைப் பெண்ணான யூதித்து, பகைவர்களின் பாசறைக்குள் தைரியமாக எவ்வித ஆயுதங்களின்றி செல்கிறாள். அவள் இறைவனை மட்டுமே நம்பி அங்கு செல்கின்றாள். ஒலோபெரின் மதுவுண்டு மயங்கிய நிலையில் அவனது தலையைக் கொய்து, அத்தலையுடன் அங்கிருந்து வெளியேறி இஸ்ராயேலர் இருந்த இடத்திற்கு வெற்றியுடன் வருகிறாள். புரட்சி பெண்ணாக யூதித்து காணப்பட்டதால் இஸ்ராயேலருக்கு வெற்றி கிடைத்தது. எனவே இக்காப்பியத்தை ஒரு புரட்சிக் காப்பியம் எனலாம்.

காப்பிய மாந்தர்கள்

மீட்பரசி காப்பியத்தில் யூதித்து தலைமை மாந்தராகவும் ஒலோபெரின் எதிர்நிலை மாந்தராகவும் படைக்கப் பட்டுள்ளனர். துணைமாந்தர்களாக நெபுகாத்நேசன், அக்கியோர், மனாசே, ஊசியா ஆகியோர் படைக்கப்பட்டுள்ளனர்.

யூதித்து

விவிலியத்தில் இடம்பெற்றுள்ள வரலாற்று மாந்தரான யூதித்து ஒரு இஸ்ரேலியப் பெண். இவளது கணவன் மனாசே. இக்காப்பியத்தில் வறியவர்களுக்குக் கொடுக்கும் சிறந்த பண்புடையவளாக யூதித்து படைக்கப்பட்டுள்ளாள். இதை,

அளவு மீறி பெற்ற செல்வம்
அமைதி குலைக்குமாம் - என்று
சமயம் கூறும் தத்துவத்தைக்
கற்ற யூதித்து
இளமை வாழ்வில் பொருள் பிறர்க்கு
பகிர்ந்து நகரின் - மக்கள்
அனை வரது அன்பு தன்னைத்
திரட்டி சிறந்தாள்! (ப.132)

என ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ததன் மூலம் யூதித்து அனைவரின் அன்பையும் ஆதரவையும் பெற்றவளாகக் காணப்படுகிறாள். யூதித்து உழைக்கும் வர்க்கத்திடம் அன்பாகப் பழகும் தன்மை வாய்ந்தவள்.

அநியா யத்தினை
அழிப்பது தான்இறைப்
பணியென முழங்கிடும் யூதித்து
இனிதாய் ஒற்றுமை
தொழிலா ளர்மனம்
அடைதலே சமத்துவ மென்பாள் (ப.140)

என்னும் அடிகளின் மூலம் யூதித்துவின் நல்ல மனதை அறிந்து கொள்ள இயலுகிறது. தன் கணவன் மனாசே உடல் நலமின்றி காணப்படும் போது,

பாவிஎன்றன் உயிர்பறித்து
கணவனுயிர் காத்திடில்
பாரிலுன்றன் ஊழியத்தால்
ஞானம் உம்மில் தேடுவேன்
ஆவிஎன்னை விட்டுப் பிரியும்
அவ்வுணர்ச்சிப் போலவே
கணவருடல் வருந்தக் கண்டு
குருதிபொங்கித் துடிக்கிறேன் (ப.152)

என ஓலமிடுகிறாள். தனது உயிரை எடுத்துக் கொண்டு கணவனின் உயிர் நிலைநிற்க இறைவனிடம் மன்றாடுகிறாள். இத்தகைய நல்ல உள்ளம் கொண்ட யூதித்து தன் கணவனான மனாசே இறந்த பின்னர் உண்மையான துறவற வாழ்க்கையை வாழ்ந்து வந்தாள். இஸ்ராயேலரை ஒலோபெரின் மற்றும் அவனது படைவீரர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக யூதித்து இறைவனிடம்,

ஆயுதங்கள் சேனைகொண்டு
அத்தனையும் வெல்வோமென
கூவிதங்கள் ஆணவத்தை
உம்மிடத்தில் வீசுகின்ற
பேய்உறையும் நெஞ்சுடையார்
தந்தைஉமை உணர்ந்துமீள
வாய்மொழிந்து கதறுகின்ற
என்குரலைக் கேட்டருள்வீர்! (ப.180)

என வேண்டுகிறாள். ஒலோபெரினை அழிப்பதற்காக யூதித்து விதவைக் கோலத்திலிருந்து அழகான உருவத்திற்கு மாறுகிறாள். அவள் அழகை,

விண்ணுலகின் ஆசனமோ
தேவதைகள் துணையிருப்போ
பொன்னொளியில் மரகதமோ
ஒலோபெரின் பாசறைக்குள்
பட்டுநிறப் புடவைகளோ
பக்கமெலாம் ஒளிருவதோ
கட்டுக்கடங் காதபொன்னின்
ஒளிக்கதிரோ பாசறைக்குள்! (ப.195)

என வியந்து பாடுகிறார். யூதித்து சூழ்ச்சியால் ஒலோபெரினை வீழ்த்தத் திட்டம் தீட்டினாள். அதற்காக இறைவனிடம்,

எல்லாமும் இல்லாமை ஆக்குவோரே! - இன்னும்
இல்லாமை உள்ளதாய் மாற்றுவோரே!
ஒடுக்கப்பட் டோரைதான் மீட்பவரே - உம்
கருவியாய் என்னையே ஆள்பவரே!
பொல்லாப்பு வீழ்த்தியே உரிமையுடன் - உம்
அடியாரை என்றென்றும் மீட்பவரே!
கடுகடுப் புடையோரை வீழ்த்திபுது - வாழ்வு
தந்திடும் சூழ்ச்சியைச் செய்தருள்வீர்! (ப.213)

என மன்றாடுகிறாள். யூதித்தின் மன்றாட்டை இறைவன் கேட்டு அவளுக்கு உதவுகிறார். யூதித்து தனது உயிரைத் துச்சமாக நினைத்து எதிரியின் பாசறைக்குள் செல்கிறாள். யூதித்து தனது திட்டப்படி ஒலோபெரின் மது உண்டு மயங்கிக் கிடக்கும் வேளையில், வாளால் அவனது தலையைக் கொய்கிறாள். யூதித்து தன்நம்பிக்கை உடைய புரட்சிப் பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளாள். அவளது துணிவினால் இஸ்ரயேல்

மக்கள் வெற்றி அடைந்தனர். யூத மக்களுக்கு எஸ்தர் விடுதலையை வாங்கிக் கொடுத்தாள். அதைப் போன்று யூதித்து இஸ்ரயேல் மக்களுக்கு அசீரிய அரசனிடமிருந்து விடுதலையை வாங்கிக் கொடுக்கிறாள். பெண்களின் பெருமையை மீட்பரசி காப்பியம் யூதித்து என்னும் உண்மை மாந்தர் மூலம் வெளிப்படுத்துகிறது.

ஒலோபெரின்

அசீரிய நாட்டு அரசன் நெபுகத்நேசனின் படைத்தளபதி ஒலோபெரின் என்பவன். அவன் அதிக கர்வமும், செருக்கும், ஆணவமும் நிறைந்தவன். ஒலோபெரினை காப்பிய ஆசிரியர்,

> **யாரென்னச் சொன்னாலும்**
> **எடுத்துள்ளப் போர்ப்பணியை**
> **பார்சூழ்ந்து எதிர்த்தாலும்**
> **பிறவிக்குண வீரத்தால்**
> **மார்குன்றிப் போனாலும்**
> **மரணத்தின் விளிம்பினிலும்**
> **நேர்நின்று வேளேந்தும்**
> **நெஞ்சுடையான் ஒலோபெரின்** (ப.46)

என அறிமுகப்படுத்துகிறார். ஒலோபெரின் தனது ஆணவத்தால் தன் படைகளை அனுப்பி பல அப்பாவி நாட்டினரைக் கொள்ளையிட்டும் கொலை செய்தும் பல நாசங்களைச் செய்கிறான். ஒலோபெரினின் கொடுமையைக் கண்டு அச்சமடைந்த பக்கத்து நாட்டிலுள்ள மக்கள் அடிமையாகிவிட நெபுகத்நேசனிடம் தூது பேச வந்தனர். ஆனால் ஒலோபெரின் அவர்களிடம் இரக்கம் காட்டாமல் படைகளால் அவர்களை அடித்துத் துன்புறுத்தி, நெபுகத்நேசனைக் கடவுளாய் வழிபடக் கூறி மீண்டும் போர் ஆயத்தம் செய்கிறான். இதைத் தொடர்ந்து இஸ்ரயேல் மக்களை அழிப்பதற்காகப் படைகளுடன் பாசறையில் முகாமிட்டிருந்தான். இச்சூழலில் தன் பாசறைக்கு வந்த யூதித்தைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் அவளது அழகில் மயங்கினான். யூதித்து இஸ்ராயேலர்களில் ஒருத்தி. ஆனால் ஒலோபெரினிடம் தான் இஸ்ராயேலர் அல்ல, இஸ்ராயேலரை அழிப்பதற்கு வழி கூறுகிறேன் எனக் கூறியதை ஒலோபெரின் நம்பினான். அவளது அழகில் மயங்கி,

> **உலகமெலாம் தேடியுமே உன்னெழில்போல் ஞானம்போல்**
> **ஒருவருமே இல்லைஇன்பப் பெண்ணே !**

ஒருபொருளாய் சூரியனோ வானில்தினம் ஒளிருவதால்
மாட்சிமையோ நிரந்தரமாம் கண்ணே!
கலகமுடை இஸ்ராயேலர் கணப்பொழுதில் அழிந்துபட
ஞானமுடன் சொன்ன எழிற் சுகமே!
உன்மொழியோ நிகழ்ந்துவிடின் நானொருவன் கடவுளாவேன்!
(ப.201)

என ஒலோபெரின் புகழுகிறான். இதனால் மதுவை அதிகமாக உண்டு, அவளது வாளுக்குப் பலியானான். ஒலோபெரினின் பெண்ணாசை இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலையை வாங்கிக் கொடுத்தது.

வருணனை

காப்பியங்களில் வருணனை இயல்பான ஒன்று. இவ்வருணனை ஆசிரியரின் புலமைக்குத் தக்கதாக மாறுபடும். வருணனைகளின் மூலம் ஆசிரியரின் கவித்துவத்தை எளிதில் அறிந்து கொள்ளலாம். நினிவே நகரின் வளத்தினை,

சில்லெனும் தேன்காற்றாம் - மனம்
செழிக்கத் தூண்டும் மலையெழிலாம்!
முல்லை நிலமெங்கும் - பசுந்
தேவதை உறைவிடம் போல்உளதாம்!
எல்லையில் லாதபயிர் - நல்
விளைச்சலைப் போல்பிற நகரிலையாம்!
சொல்லரும் மலைமுகடாம் - அவை
நாட்டினைக் காத்திடும் மறஅரணாம்! (ப.26)

என ஆசிரியர் வருணிக்கிறார். இப்பாடலில் குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய செழிப்புள்ள மூன்று வகை நிலங்களின் வளமும் ஒருங்கே பெற்றதாக நினிவே நகரினை ஆசிரியர் வருணிக்கும் திறன் குறிப்பிடத்தக்கது. மேலும்,

நதிமகள் பாதைகளாம் - வான்
புனலூறும் அற்புதப் பொய்கைகளாம்!
அதிசயக் கனிவகையாம் - பிற
அரசுகள் வியந்திடும் தேன்பலவாம்!
வான்மதி ஆதவனும் - இந்த
நினிவேயில் தங்கிட விரும்புவராம்!
சுதியெழும் ராகங்களாம் - அவை
பறவைகள் இசைவிழா பாட்டரங்காம்! (ப. 27)

என வருணிக்கிறார். இப்பாடலில் சூரியன் நினிவே

நகரிலேயேத் தங்கி இருப்பதற்கு விரும்புவான் என வருணிக்கிறார். இவ்வருணனைகள் நினிவே நகரின் சிறப்பினையும் பெருமையினையும் புலப்படுத்துவனவாக அமைந்து காப்பியத்திற்குச் சிறப்பு சேர்க்கின்றது. ஒலோபெரினின் பாசறைக்குள் யூதித்து அழைத்துவரப்பட்டாள். அவள் வந்ததால் அவனது பாசறை ஒளிமயமானது என்பதை,

> **விண்ணுலகின் ஆசனமோ**
> **தேவதைகள் துணையிருப்போ**
> **பொன்னொளியில் மரகதமோ**
> **ஒலோபெரின் பாசறைக்குள்**
> **பட்டுநிறப் புடவைகளோ**
> **பக்கமெலாம் ஒளிருவதோ**
> **கட்டுக்கடங் காதபொன்னின்**
> **ஒளிக்கதிரோ பாசறைக்குள்** (ப.195)

என்னும் பாடல் மூலம் வருணிக்கும் ஆசிரியரின் திறம் போற்றத்தக்கது.

உவமைத்திறன்

மீட்பரசி காப்பியத்தில் ஏராளமான உவமைகள் காணப்படுகின்றன. இவ்வுவமைகள் காப்பியத்திற்கு அணிகலன்களாக அமைந்துள்ளன. மீட்பரசி காப்பியத்தில் ஒரே பாடலில் பல உவமைகள் உள்ளன. இவற்றை அடுக்கு உவமைகள் எனலாம். சான்றாக,

> **வானகம் வியக்குதற்போல் - இந்**
> **நினிவேயில் எங்கணும் செழிப்புகளாம்!**
> **தானமே வழங்குதல்போல் - இந்**
> **நகரிலே பற்பல பொருள்உளதாம்!**
> **மானமோ காப்பதுபோல் - இந்**
> **நகரிலே மாதர்கள் நடையுடையாம்!**
> **ஞானமோ கொண்டவர்போல் - இந்**
> **நாட்டினை ஆள்பவர் ஆட்சியதாம்!** (ப.26)

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் நான்கு உவமைகள் பயின்று வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும்,

1. பரிதி உருவம் கிணற்றினுள் தெரிவதைப் போல
2. வருமுன் அறியார் வாழ்க்கை வந்தபின்னால் கெடல்போலே

3. மொக்குகள் தான்தோன்றி மடிவனபோல்
4. ஏழையர் நொய் அரிசிக்கு பசியுடன் முனையுதற் போலே
5. கரியமேகம் அடுக்கடுக்காய் தோன்றும் காட்சிபோல்
6. மணமுடித்து கலவி செய்து கருசு மந்த மங்கைபோல்
7. கூட்டைவிட்டு வேறுகூட்டில் புகுந்த உயிர்போல்
8. பொறுமை மான்கள் சிறுத்தையின்முன் கதறுவனபோல்
9. காட்டுநதிகள் வெறிசுமந்து பாய்ந்து வருதற்போல்
10. தீட்டிய ஓவியம் அழிக்கப்பட படைத்தவன் மனது பதறிடல்போல்

என்பன போன்ற உவமைகள் காப்பியத்தினுள் ஏராளமாக உள்ளன. இவ்வுவமைகள் மீட்பரசி காப்பியத்தின் கதைக்கு வலுவூட்டுவனவாக அமைந்துள்ளன.

செலூக்கியர் ஆட்சியின்போது யூதர்கள் அனுபவித்த துயரத்தின் வரலாற்றையும் மக்கபேயர் வழியாகக் கடவுள் அவர்களுக்கு அளித்த முழுவிடுதலையையும் பின்னணியாகக் கொண்டது விவிலியத்தில் இடம்பெற்றுள்ள யூதித்து என்னும் நூல். இந்நூல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது முதல் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இயற்றப்பட்டிருக்கலாம். விவிலியத்தில் உள்ள சில நூல்களை ஆதாரமாகக் கொண்டு கிறித்தவக் காப்பியங்கள் பல படைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெண்களை மையமாகக் கொண்டவை எஸ்தர் காவியம் மற்றும் மீட்பரசி என்பவைகளாகும். யூதித்து என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டது மீட்பரசி காப்பியம். ஒருவர் கடவுள் மீது பற்றுறுதி கொண்டு செயல்பட்டால், எத்துணை வலிமை படைத்த உலக ஆற்றல்களையும் வென்றுவிடலாம் என்பது இக்காப்பியத்தின் மையக்கருத்தாகும்.

VI திருமறைசாரா மாந்தர் வரலாற்றுக் காப்பியங்கள்

22. அர்ச். சவேரியார் காவியம்

மேலைநாட்டுத் திருத்தொண்டர்கள் தங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்து, தமிழகம் வந்து இறைப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி ஆகியவற்றை எவ்விதத் தன்னலமுமின்றி செய்தனர். இவர்களுள் முதன்மையானவர் புனித சவேரியார் ஆவார். இவரைக் காப்பியத் தலைவராகக் கொண்ட காப்பியம் அர்ச். சவேரியார் காவியம் என்பதாகும். இறைத்தொண்டர் ஒருவரைத் தலைமை மாந்தராகக் கொண்டு படைக்கப்பட்ட ஒரேயொரு காவியம் அர்ச். சவேரியார் காவியமாகும்.

ஆசிரியர் வரலாறு

அர்ச். சவேரியார் காவியம் சிலுவை முத்து நாயகர் என்பவரின் புதல்வர் அந்தோனிமுத்து என்பவரால் 1877 ஆம் ஆண்டு இயற்றப்பட்டுள்ளது. இவர் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்திலுள்ள பள்ளிக் கூடத்தான் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் கொச்சி நகரையடுத்த அத்திக்கோட்டில் வாழ்ந்து வந்த ஆரோக்கிய நாயகரின் தலைசிறந்த மாணாக்கருள் ஒருவர்.

நூலின் பதிப்பு வரலாறு

1877ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ஆம் தேதி இக்காவியம் பாடத் துணிந்ததாகப் பாயிரத்தில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இக்காவியம் 1882ஆம் ஆண்டு பாப்பான்வெளிக் கதிபதியாகிய பண்டிதர் அ. சவேரிமுத்து நாயகர் அவர்களின் பொருளுதவியால் சென்னையிலுள்ள இந்தியன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. இக்காவியம் கோயம்புத்தூர் மேற்றிராசன ஞானவாளுகையைச் சேர்ந்த அத்திக்கோடு விசாரணைக் குருசுவாமியாராகிய சங்.

அருள்மரிநாத சுவாமியார் அவர்களின் அனுமதியுடன் வெளியிடப்பட்டது.

நூன்முகம்

அர்ச். சவேரியார் காவியத்தின் நூன்முகம் என்னும் பகுதி சொ. முனிஷி அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இந்நூன்முகத்தில் புனித சவேரியாரைப் பற்றியும், நூலாசிரியர் மற்றும் நூல் பதிப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாத்துகவிகள்

அர்ச். சவேரியார் காவியத்தில் சொ. முனிஷி அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர், கை.பெ. தெரிசன முதலியார், வி.அ. சவேரிமுத்துராய முதலியார், பு.அ. மிக்கேல்சாமி செட்டியார் ஆகியோர் சாத்துகவிகள் படைத்துள்ளனர். பு.அ. மிக்கேல்சாமி செட்டியார் இயற்றிய விருத்தப்பாவில் அமைந்துள்ள சாத்துகவி வருமாறு:

சத்தியமறை தீபத்தை பத்தியுடனேந்தியே வித்தேயமதனிலுற்ற
சகலோர்க்கு போதித்து பகலோனை யொப்பவே தகதகெனவே
ஜொலித்த
உத்தமன் சவேரியார் பத்தியுறு சரிதைதனை வித்தனந்தோனி
யென்போன்
உலகினோர் வியக்கவே நலமுறும் புராணமாய் விலையுற
வியற்றிதந்தான்
இத்தகமையாந் திவ்வியபுத்தகந் தன்னையே கத்தோலிக்கு
களியாவரும்
இங்கிதமுடன் கொண்டு சங்கையுடன் பலநாளும் மங்காமல்
வாசிப்பதால்
முத்தியின் பேறார்ந்த சத்தியச்சவேரியார் அத்தனை
வேண்டி யன்பாய
முப்போது மொத்தாசை தப்பாது புரிகுவார் இப்புவியில்
மீதுதானே (ப.4)

காவியத்தின் அமைப்பு

அர்ச். சவேரியார் காவியம் பாயிரம் மற்றும் 12 படலங்களால் ஆனது. இக்காவியத்தில் இடம் பெற்றுள்ள பாடல்களின் மொத்த எண்ணிக்கை 820 ஆகும். புனித பிரான்சிஸ் சவேரியார் இக்காப்பியத்தின் தலைவராவார். புனித சவேரியார்

மக்களுக்குச் செய்த உதவிகளை இக்காப்பியம் விவரிக்கிறது. இந்நூல் விருத்தப்பாக்களால் ஆனது. இக்காவியம் திருநாட்டுப் படலம், திருநகரப் படலம், உற்பவித்துப் பிறந்த படலம், துறவறத்துரிமை கொண்ட படலம், லிஸ்போநகர்க் கெழுந்தருளி நவப்படலம், சிந்து ராச்சியத்துக்கு சேர்நவப் படலம், பரவ தேசத்துக் கெழுந்தருளி நவப் படலம், திருவான் கோட்டிற் கெழுந்தருளி நவப் படலம், மலாக்கா பட்டணத்துக் கெழுந்தருளி நவப் படலம், சப்போனியா தேசத்துக் கெழுந்தருளி நவப் படலம், யாத்திரைப் படலம், முடிசூட்டுப் படலம் என்னும் 12 படலங்களை உடையது.

யாப்பு

அர்ச். சவேரியார் காவியத்திலுள்ள விருத்தப் பாடல்கள் கலிவிருத்தம், அறுசீரடி ஆசிரிய விருத்தம், எழுசீரடி ஆசிரிய விருத்தம், அளவடி கலிவிருத்தம், அஞ்சீர் நெடிலடி ஆசிரிய விருத்தம், நாற்சீர் அளவடி விருத்தம், கலிநிலைத்துறை, எண்சீரடி சந்தத்துறை, எழுசீர்கழிநெடில் ஆசிரிய விருத்தம், அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம், சிந்தடி கலிவிருத்தம் என்னும் யாப்பமைதியினை உடையன.

பாயிரம்

அர்ச். சவேரியார் காவியத்திலுள்ள பாயிரம் என்னும் பகுதி 28 பாடல்களால் ஆனது. இப்பாயிரப் பகுதி தற்சிறப்புப் பாயிரம், திரித்துவ வணக்கம், சூசையப்பர் வணக்கம், அர்ச்சிஷ்டர் பொது வணக்கம், மிக்கயேல் சம்மனசின் வணக்கம், சரிதை நாயகன் வணக்கம், குரு வணக்கம், ஆசான் வணக்கம், அவையடக்கம் என்னும் தலைப்புகளால் ஆனது. சான்றாக அறுசீரடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ள திரித்துவ வணக்கப் பாடல்,

> **சீரான திரிலோக முழுதுமொரு தோற்றமதாற் செய்தஜீவம்**
> **நேரான நிலவொளியா யரூபியதாயுலகமெங்கு நிறைந்தூடாடிப்**
> **பாராலுமடங்காதாய்ப் பரகதியோர்க் கெட்டாதாய்ப்**
> **படியின்மீதில்**
> **வீராக வெனதுளத்தில் வீற்றிருக்கும்**
> **விமலனிருதாட்கொள்வாமால்**
> **(பாயிரம், பா.3)**

என அமைந்துள்ளது. ஆசான் வணக்கம் என்னும் பகுதியில் தன்னுடைய ஆசிரியர்களைப் பற்றிப் பாடுகிறார்.

காவியக்கதை

அர்ச். சவேரியார் காவியம் புனித பிரான்சிஸ் சவேரியாரின் வாழ்வும் இறைப்பணிகளும் பற்றி விவரிப்பதாக அமைந்துள்ளது. புனித சவேரியார் ஸ்பெயின் நாட்டிலுள்ள நவார் என்னும் பகுதியிலிருந்த சவேரியார் கோட்டையில் 1506 ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் நாள் யுவான் தெயாசு - டோனா மரியா தம்பதியரின் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். இவரது தந்தை அந்நாட்டின் அரசவையில் நிதியமைச்சராகப் பணியாற்றி வந்தவர்; சட்டவியலில் முனைவர் பட்டம் பெற்றவர். தன்னுடைய ஒன்பதாம் வயதில் தந்தையை இழந்த இவர் தாயின் பராமரிப்பிலேயே அதே அரண்மனையில் படித்து வந்தார்.

புனித சவேரியார் பாரீசிலிருந்த பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்று, அங்கேயே பேராசிரியராகப் பணியாற்றினார். அங்கு புனித இலயோலா இஞ்ஞாசியாருடன் பழகி, அவரது இயேசு சபையில் சேர்ந்தார். உரோமை நகருக்குச் சென்று இஞ்ஞாசியாரோடும் ஏனைய துறவிகளோடும் போப்பாண்டவரைச் சந்தித்தார். 1540ஆம் ஆண்டு ரோமில் இருந்து புறப்பட்டு லிஸ்பான் சென்றார். அங்கு ஒரு வருடம் இறைப்பணியைச் செய்த பின்னர், இந்தியாவிற்கு வரும் வழியில் மொசாம்பிக் தீவில் ஆறு மாதங்கள் இறைப்பணியைச் செய்துவிட்டு 1542 மே மாதம் 6ஆம் நாள் கோவாவை வந்தடைந்தார். முதல் நான்கு மாதங்கள் கோவாவிலும் பின்னர் தென் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகக் கடற்கரைக் கிராமங்களில் தனது இறைப்பணியைச் செய்தார்.

முதலில் தூத்துக்குடியை அடுத்துள்ள பழையகாயல் என்னும் இடத்தில் இறைப்பணியாற்றினார். 1543 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் தன் இறைப்பணியைத் தொடர்ந்தார். சுமார் பதினைந்து மாதங்கள் இப்பகுதியிலுள்ள கிராமங்கள் தோறும் மணியடித்தபடி சென்று அங்கு ஆட்கள் கூடியதும் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய செய்திகளைக் கூறியும் நோயாளிகளைச் சந்தித்தும் வந்தார். குமரி மாவட்டத்திலுள்ள கோட்டாறு என்னும் இடத்தில் புனித சவேரியார் ஆலயம் ஒன்று கட்டினார். இதுபோன்று பல இடங்களிலும் ஆலயங்கள் கட்டியது குறிப்பிடத்தக்கது. மேலும் மதுரை மன்னர் 1544ஆம் ஆண்டு திருவிதாங்கூர் அரசோடு போர் தொடுக்கப் படைகளோடு நெருங்கிய போது திருவிதாங்கூர்

அரசர் புனித சவேரியாரின் உதவியை நாடினார். புனித சவேரியார் அப்படைகளின் முன்பாகத் தன் சிலுவையைக் காண்பித்தபடியே செல்ல, மதுரை மன்னனின் படைகள் பின்வாங்கி விட்டனவாம். இன்னும் இதுபோன்ற ஏராளமான புதுமைகள் புனித சவேரியாரால் செய்யப்பட்டன.

மணப்பாடு என்னும் இடத்தில் அவர் தங்கியிருந்த குகை, மற்றும் அதற்குள் இருக்கும் சிறிய கிணறு ஆகியன இன்றும் உள்ளன. அந்தக் கிணறு, கடற்கரையில் உள்ளது. ஆனால் அதன் தண்ணீர் உப்பு இல்லாத நல்ல குடிநீராக இன்றும் புதுமையாக இருக்கிறது. கிறித்தவர்களாக மாறிய கிராமத்தைத் தாக்க வந்தவர்களைத் திரும்பிப் போகும்படியாகக் கேட்டும் போகாதபோது, அருகில் காணப்பட்ட ஒருநாளுக்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்ட கல்லறையை நோக்கி, கிறிஸ்துவே உம்முடைய வார்த்தையை இவர்கள் அங்கீகரிக்கும்படியாக இந்த கல்லறையானது திறக்கட்டும் என்றார். உடனே கல்லறையானது திறந்தது. பின்னர் இறந்தவரை எழும்பி வெளியே வரும்படி கூற அவரும் அவ்வாறே வெளியே வந்தார். இதை பார்த்ததும் அங்கிருந்த நூற்றுக்கும் அதிகமானோர் கிறித்தவர்களாக மாறினர். மேலும், கால்கள் புண்களால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு பிச்சைக்காரரின் கால்களைக் குணமாக்கினார்.

புனித சவேரியார் அவர்கள் கொம்புதுற என்னும் இடத்தில் கிணற்றில் விழுந்து இறந்த ஒரு சிறுவனின் மேல் கையை வைத்து செபிக்க அவன் உயிர் பிழைத்தான். ஜப்பானில் பார்வை இல்லாத ஒரு வியாபாரியின் தலை மீது சிலுவையை வைத்து செபிக்க அவன் மீண்டும் பார்வை பெற்றான். புனித சவேரியார் கடலில் பயணம் செய்யும் போது சிலுவை கடலில் விழுந்து விடுகிறது. ஆனால் கரையை அடைந்ததும் ஒரு நண்டு அந்த சிலுவையைக் கொண்டுவந்து சேர்த்தது. மலாக்காவில் தவறுதலாக நஞ்சினை உண்டு இறந்த ஓர் இளைஞனை உயிர்ப்பித்தார்.

புனித சவேரியார் சுமார் 38000 மைல்கள் கடல் மற்றும் தரை வழியாகப் பயணம் செய்து இறைப்பணியாற்றினார். காயல்பட்டினம், தூத்துக்குடி, மணப்பாடு, திருவிதாங்கூர் தேசம், கோவளம், யாழ்ப்பாணம், மன்னார், மயிலாப்பூர், மலாக்கா தீவு, ஜப்பான், காங்கோசிமா தீவு, பீரந்தோ நகர்,

அமங்குஷி நகர், மெய்யாக்கோ நகர், பொங்கோ நகர், சஞ்சியான் தீவு என்னும் பல இடங்களுக்கு, நாடுகளுக்கு, தீவுகளுக்குச் சென்று இறைப்பணி செய்தார். இறுதியாக சஞ்சியான் தீவில் நோயால் பாதிக்கப்பட்டார். புனித சவேரியார் 1552ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் நாள் மரணமடைந்தார். புனித சவேரியாரை அந்தோணியோ என்பவர் அத்தீவிலேயே அடக்கம் செய்துவிட்டுச் சென்றார்.

மீண்டும் சுமார் இரண்டரை மாதங்கள் கழித்து (1553ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் நாள்) அத்தீவின் வழியாக வரும்போது அவருடைய கல்லறையைத் திறந்து பார்த்தனர். அப்போது அவரது உடல் எவ்வித பாதிப்பும் இன்றி வைத்தது போலவே காணப்பட்டது. பின்னர் அவரது உடலை சாந்தாக்குரூஸ் என்னும் கப்பல் மூலம் மலாக்கா கொண்டு சென்றனர். அங்கும் அவரது உடல் கெட்டுப் போகாமல் நறுமணம் வீசியுள்ளது. பின்னர் சவேரியாரின் உடல் அங்குள்ள மலைமாதா கோவிலில் நடுப் பீடத்திற்கு முன் வெட்டியிருந்த கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

ஐந்து மாதங்களுக்குப் பின்னர் தந்தை ஜூவான் தெ பெய்ரா புனித சவேரியாரின் உடலை கோவா கொண்டு செல்ல ஏற்பாடு செய்தார். 1554ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் நாள், சாந்தாக்குரூஸ் கப்பலில் புனிதரின் உடல், கோவா கொண்டு வரப்பட்டது. "பாம் இயேசு தேவாலயத்தில்" மிகவும் பாதுகாப்புடன், கோவா அரசாங்கத்தின் உதவியுடன் இன்றுவரை சவேரியாரின் உடல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சுமார் 460 ஆண்டுகள் கழிந்த பின்னரும் இப்புனிதரின் உடல் இன்றும் மக்கள் பார்க்கும் படியாகவே காணப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தின் தாக்கம்

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி மதுரை நோக்கிச் சென்றபோது அங்குப் பறந்த கொடிகள் அவர்கள் மதுரைக்கு வரவேண்டாம் என்று கைகளை அசைப்பதாக,

> **போருழந் தெடுக்க ஆரெயில் நெடுங்கொடி**
> **வாரலென் பனபோல் மறித்துக்கை காட்ட**
>
> **(புறஞ்சேரியிறுத்த காதை, அடி.189-190)**

என இளங்கோவடிகள் பாடுகிறார். இதை அடிப்படையாகக் கொண்டு அர்ச். சவேரியார் காவியத்திலும் பாடல் புனையப்

பட்டுள்ளது. ஆசிரியர் விவிலியச் செய்திகளை விவரிக்கும் இறைத் தொண்டரான புனித சவேரியாரை சுருதிநூற் கலைஞர் என்கிறார். அங்குப் பறக்கும் கொடிகள் தூய சவேரியாரை அழைப்பதை,

எல்லையிலோடும் யோசனையெனச்சே ணிலங்கிய
சிகரமேற்கொடிகள்
தொல்லையில்லாமல் ஆடியுலாவிச் சுருதிநூற்கலைஞரை
யழைக்கும்
புல்லியசிகரந் தனிலும்பொற்றசும்போ பூருவமனிதருக்கமலன்
சொல்லியும் விலக்குஞ் சீவகவிருட்சத் தூய்கனியென்னலாங்
கொல்லோ
(திருநாட்டுப்படலம், பா.21)

என்று பாடுகின்றார் காவியக் கவிஞர்.

உவமைநயம்

அந்தோனிமுத்து நாயகர் தமது காப்பியத்தில் ஏராளமான உவமைகளைக் கையாண்டுள்ளார். இவ்வுவமைகள் காப்பியத்திற்கு அணிகலன்களாக உள்ளன. சான்றாகச் சில உவமைகள் பின்வருமாறு:

1. நாகமலை வெள்ளியுயர் நற்கிரணக் கூட்டமென.
2. புயல்வானுடு நடுவேமிளிர் பொங்கு மதியென.
3. மாற்றுறும் பொன்னைத் தீயில் வதைப்பது போல.
4. சுயம்பர கதியில்வாழும் அணிபடை மேலோர் போல.
5. மதியொளி யதுமுன்னேதான் வருகுமின் மினிப்பூச் சொப்போ.
6. மெஞ்ஞானி கண்முன் மூகைகதை சொன்னதென.

மேலும் ஒரே பாடலில் பல உவமைகளையும் ஆசிரியர் கையாண்டுள்ளார். சவேரியாரிடம் கட்டெறும்புகளைப் போல மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர்; நாரைகள் தலையைத் தூக்கி இரையைத் தேடுவது போல மக்கள் சவேரியாரை அணுகினர்; தென்னை மரத்திலுள்ள இளநீரைத் தேரைக் குடிப்பது போல மக்கள் புனிதரது போதனைகளை அருந்தினர்; காரைகள் சுவரில் படுவதுபோல மக்கள் கதிவழி நிலைமையில் இருந்தனர் என்னும் கருத்தமைந்த பாடலில் பல உவமைகள் தொடர்ந்து வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அப்பாடல் பின்வருமாறு:

தாரைகள் விடுங்கட் டெரும்புபோற் சனர்கட்
தவமுனியிடத்தினிற் சார்ந்து
நாரைகள் தலையை யெடுத்து முன்னிரையை
நாடுமொப்பென நலனுரையைத்
தேரை தென்னிளநீர் குடிப்பதொப்பாகச் சென்றனர்
சிந்தையிலருந்திக்
காரைகள் சுவரிற் படிவனபோலுங் கதிவழி
நிலமையுற்றிருந்தார்
(சப்போனியா தேசத்துக் கெழுந்தருளி
நவப்படலம், பா.61)

இயற்கை வளம்

அர்ச். சவேரியார் காவியத்திலுள்ள திருநாட்டுப் படலம், திருநகர்ப் படலம் என்னும் முதல் இரு படலங்களில், சவேரியார் பிறந்த நாட்டின் வளங்களைத் தமிழ் நாட்டின் மரபில் ஆசிரியர் பாடுகிறார். இப்படலப் பாடல்களின் மூலம் தமிழ் நாட்டு மருத நிலங்களைத்தான் காப்பியக்கவிஞர் வருணிக்கிறார் என்னும் உணர்வு வாசகர்களுக்கு வருவது,

உழுனரோதையு மொழுகிய நீர்தடுப்பவரு
மொழிவிலாவிதைப் பவர்களி னார்ப்பு மொண்ணகரில்
வழுவிலாத் திருநாள் வரும் போதவர் மகிழ்வாய்ச்
செழுமையானதேர் சிறப்பலங்கார நாடெனவாம்.

நீசர்தன்மன மெனநிமிர்ப் பயிர்கள்நேர் வளர்ந்து
வேசைமாதர்க டுதடென விளைந்தசெந்நெற்க
ளாசையோடறுத் தவரவர் களத்திடை குமித்தல்
நேசமுன்னவர் பபேலெனுங் கோபுர நிகர்த்தே
(திருநாட்டுப்படலம், பா.9,10)

என்னும் இப்பாடல்கள் மூலம் அறியலாகின்றது. கலப்பையில் ஏர் உழுகின்றவர்களின் ஓசையும், ஓடி வருகின்ற நீரைத் தடுப்பவர் மற்றும் ஓய்வில்லாமல் விதைப்பவர் ஓசையும்கேட்டுக் கொண்டிருந்தன. ஒளி மிக்க அந்நகரில் குற்றமில்லாத திருநாள் வரும் போது அந்நகரத்தார் மகிழ்வாய் சிறப்பான அலங்காரத்தை அந்நாடு முழுவதும் செய்தார்கள். அந்நாட்டில் பயிர்கள் அற்ப நீசர்களின் மனம் எப்பொழுதும் பணியாமல் நேராக நிற்பது போல் வளர்ந்து நிற்கும். விலைமாதர்கள் உதடு போல் சிவந்த செந்நெல்கள் விளைந்தன.

அச்செந்நெல்லை அறுத்து வந்து களத்திடை குவித்த போது அது பாபேல் கோபுரத்தைப் போன்றிருந்தது என விவரிக்கிறார்.

வருணனைகள்

காப்பிய இலக்கணப்படி காப்பியத்தில் வருணனைகள் இருப்பது இயல்பான ஒன்றாகும். அர்ச். சவேரியார் காவியத்திலுள்ள முதல் இரு படலங்களான திருநாட்டுப் படலம், திருநகரப் படலத்தில் வருணனைகள் இயல்பாக அமைந்துள்ளன. வண்டுகள் மலரிடைத் தேனெடுத்து பருகி பண்ணிசைத்து இருக்கும்; இளகிய சேற்றில் சங்குகள் படுத்துறங்கும்; வயல்களில் தாமரைகள் விளைந்து முத்துகளை உதிர்க்கும்; செழும் சோலைகள் வளர்ந்து செழித்திருக்கும்; வயல்களிடையே கம்புள் இனங்கள் தங்களுடைய மனைவியாகிய பெண் பறவைகள் மூங்கிலில் விளைந்திடும் முத்து இனங்களை எறிய அதற்கு அஞ்சியிருக்கும்; முத்துகளிலிருந்து விரிகின்ற சுடரால் ஆம்பல் மலர்கள் காலமல்லாத வேளைகளிலும் இதழ் விரிக்கும் என,

> வண்டுளானது மலரிடைபடுத்து பண்ணிசைக்கும்
> அண்டசங்கிளஞ் சேற்றிடையடுத்துவங் குறங்கும்
> புண்டரீகங்கள் செழும்பணை புகுந்துமுத் துறுஞ்சி
> கண்டினஞ்செழுஞ் சோலைகணாடிகண் கரிக்கும்
>
> கழனிவாயிடை கம்புளி னினங்கள் தந்தாரம்
> கழைகணீன்றிடுங் கதிரின்முத்தினங்களுங் கஞ்சம்
> விளைந்தளித்தமுத் தங்களும் விரிகதிர் சுடரால்
> திளைத்தவாம்பல்வாய் முகைகதவகற்றிடுஞ் சிறப்பாய்
>
> (திருநாட்டுப் படலம், பா.6,7)

என்னும் பாடல்களின் மூலம் வருணனை செய்கிறார். மேலும்,

> பொன்னினாற்செய்த தண்டிகை யொருபாற்
> புகரினாற்செய்த போதிகையும்
> வன்னிபோற்சிவந்த பவழத் தூணொருபால்
> வயிரத்தாற்றாங்கியகாலில்
> பன்னியதகர முத்துகளிழைத்துப் பயிற்றிய
> தூணுகளொருபால்
> சென்னிவான்சுடர்போ லுலகமெத்திசைக்குந் தீபமாஞ்
> சவரியார் கோட்டை
>
> (திருநாட்டுப் படலம், பா.23)

என்னும் பாடலில் சவேரியார் பிறந்த சவேரியார் கோட்டையை ஆசிரியர் வருணிக்கும் திறம் வியக்கத்தக்கது. சவேரியார் கோட்டையானது பொன்னால் செய்த தண்டிகைகள் ஒருபுறமும், அழகிய போதிகைகளும், தீப் போலச் சிவந்த பவளத் தூண்களும், உறுதி மிக்க கால்களில் முத்துக்கள் இழைக்கப்பெற்ற தூண்கள் ஒரு பக்கமும் அமைந்து உயர்ந்த வான் சுடர் எல்லா திசையில் உள்ளவர்களாலும் அறியப்படுவதைப் போல உலக மக்கள் அனைவராலும் அறியப்பட்ட சிறப்பினை உடையதாக இருந்தது என வருணிக்கிறார். காப்பிய ஆசிரியரின் வருணனைகள் தமிழ் மரபை ஒட்டியே அமைந்துள்ளன.

குளங்கள்நீர் மாதரீட்டங் கொம்பிருங் குயிலினீட்டம்
இளமைசேரினிப் பெண்கூட்ட மிராசகட் பேரியீட்டம்
வளங்கொளும் புலவரீட்டம் வரையரண் கொடைகணீட்டம்
நளினநாட்டகத்தின் கேண்மை நாவலர் புகழுமாரோ

(திருநாட்டுப் படலம், பா.13)

என்னும் பாடலில் நீர் நிறைந்த அழகிய குளங்களும், சோலைகளில் கூவும் குயில்களும், இளமையானப் பெண்களும், முரசின் மங்கல ஒலிகளும், அறிவுசான்ற புலவரும், மலை அரண்களும், பல வகையான அருட்கொடைகளும், கூட்டம் கூட்டமாக நாவன்மை மிக்கப் புலவர்களால் புகழ்ந்துரைக்கும் வண்ணம் அந்நாட்டில் விளங்குகின்றன என வருணிக்கிறார்.

விவிலியச் செய்திகள்

அர்ச். சவேரியார் காவியம் புனித சவேரியாரின் இறைப்பணியை விவரித்தாலும் காவியத்தில் ஆங்காங்கே விவிலியச் செய்திகளை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக திருநாட்டுப் படலம், திருநகர்ப்படலம், உற்பவித்துப் பிறந்த படலம், லிஸ்போநகர்க் கெழுந்தருளி நவப் படலம், சிந்துராச்சியத்துக்குச் சேர் நவப்படலம், முடிசூட்டுப் படலம் ஆகிய படலங்களில் விவிலியச் செய்திகள் சிறு அளவில் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக திருநாட்டுப் படலத்தில் பாபிலோன் கோபுரம் பற்றிய குறிப்பினையும், உற்பவித்துப் பிறந்த படலத்தில் ஏவாள் பழத்தைப் புசித்தனால் ஏற்பட்ட தீமையினைப் பற்றிய குறிப்பினையும் சொல்லலாம்.

சவேரியார் செய்த அற்புதங்கள்

புனித சவேரியார் இயேசு கிறிஸ்துவின் அருளால் பல அற்புதங்களைச் செய்தார். அவற்றில் குறிப்பிடத்தக்கது

இறந்தவர்களை உயிரோடு எழுப்பியதாகும். சவேரியார் கோவளத்தில் இறைப்பணி செய்யும்போது மக்கள் இவரது அருளுரைகளைக் கேட்டாலும் கிறித்தவர்களாக மாற மனமின்றி காணப்பட்டனர். அவர்களுக்குத் தம் அருளுரையின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக சில அற்புதங்களைச் செய்தார். அவற்றில் ஒன்று இறந்தவரை உயிருடன் எழுப்பியது ஆகும். இந்நிகழ்வு நடைபெற்ற இடம் திருவிதாங்கூர் பகுதியாகும். சவேரியார் செய்த அற்புதத்தையும் அதனால் மக்கள் கிறித்தவத்தில் சேர்ந்ததையும்,

> சாம்பிணமே சருவேஸ னாமத்தாலே சடலமொடு
> வுயிர்தோன்றி யெழுந்தேநில்லு
> காம்பவர்கண் முன்னாகத் துயிலைநீத்துக் கண்முழித்தாற்
> போலெழுந்தான் கண்டோரெல்லா
> மாம்பல்மல ரடிதொழுதா ரையன்வேத மற்புதமா யிப்புதுமை
> யார்செய்தார்கள்
> தேம்படுஞ்சொல் சத்தியமறை மெய்யாம்வேதஞ்
> செப்பரிதாங் கிறீஸ்துமறை சேர்ந்தாரெல்லாம்
> (திருவான்கோட்டிற் கெழுந்தருளி
> நவப் படலம், பா.32)

எனக் காப்பிய ஆசிரியர் பாடுகிறார். மலாக்காவில் ஒரு பெண் இறந்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்று நாட்கள் ஆகியிருந்தது. அப்பெண்ணுடைய தாயின் வேண்டுதலை ஏற்று கல்லறையிலிருந்து அப்பெண்ணை உயிருடன் எழுப்பினார். இதை,

> பிளைத்தாளென்று பேசுரீரையா பெற்றவட்கு
> குளத்தாமரைபோல் வாயாற் போதன் கூறுதலை
> யிளக்காதேயிச் சேதியைநம்பி யிடங்குழியில்
> வளுக்காதோடிப் பாருன்றன்மகளும் வருவளென்றான்.
>
> தாயாள் நம்பி சத்தகுழியிற் சார்ந்தவுடன்
> சேயாளுயிராய்த் தேகநோயில்லாச் செபம் பண்ணி
> வாயாற்சேசு நாதனேயென்று வாய்மலர்ந்து
> வோயாதோதி வாரதுகண்டா ளொன்றொடியாள்
> (மலாக்காபட்டணத்துக் கெழுந்தருளி நவப் படலம், பா.19, 20)

எனத் தெளிவுபடுத்துகிறார்.

சிந்து போதகன்

அர்ச். சவேரியார் அன்றைய சிந்து தேசமான இன்றைய இந்தியாவிற்கு வந்தமையால் சிந்து போதகன் எனக் காப்பிய ஆசிரியரால் சுட்டப்படுகிறார்.

சிந்துதேயத்துப் போதகனிங்கண் செய்நவங்கள்
முந்தியறிந்த மலாக்கெனுனாட்டின் மூலையெங்கும்
விந்தையுடனே சத்தியவேத வித்துகளைச்
சிந்தவும்வந்தச் சிந்திறைபோதன் சிறந்தனராம்
(மலாக்கா பட்டணத்துக் கெழுந்தருளி நவப் படலம், பா.24)

என்னும் மேற்குறிப்பிட்ட பாடலிலும் சிந்து ராச்சியத்துக்குச் சேர் நவப் படலத்திலும் (பா. 46) சவேரியார் சிந்து போதகன் என அழைக்கப்படுகிறார். இது அவரது தனித்தன்மைக்குச் சான்றாக விளங்குகிறது.

புனித சவேரியார் இந்திய மக்களுக்காகத் தம் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர். அவரது இறைப்பணி ஈடு இணையற்றது. மனித நேயம் உடையவராக அவர் விளங்கினார். அவரது வாழ்வும், பயணங்களும், அனுபவங்களும், அற்புதங்களும், முடிவும் காப்பியமாகத் தமிழில் படைக்கப்பட்டுள்ளது தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் கிறித்தவ உலகிற்கும் ஏற்றம் தருவதாகும்.

23. ஞானாதிக்கராயர் காப்பியம்

ஞானாதிக்கராயர் காப்பியம் ஞானாதிக்கராயர் என்பவரது வாழ்க்கை வரலாற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது. இக்காப்பியத்தில் விவிலியத்திலுள்ள பல செய்திகள் கிளைக்கதைகளாகப் பாடப்பெற்றுள்ளன. குறிப்பாக, திருமந்திரப் படலத்தில் விவிலியச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இக்காப்பியத்தின் ஆசிரியர் வித்துவான் ச. சாமிநாத பிள்ளை என்பவராவார்.

நூலாசிரியர் வரலாறு

ஞானாதிக்கராயர் காப்பியத்தின் ஆசிரியர் பாண்டிச்சேரியைச் சார்ந்த சவரி முத்துவின் மகன் வித்துவான் சாமிநாத பிள்ளை என்பவராவார். சாமிநாத பிள்ளையின் காலம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். சாமிநாதபிள்ளை தம்வாழ்நாளின் பிற்பகுதியில் சென்னையில் வாழ்ந்து வந்தார். அப்போது சென்னையில் வாழ்ந்து வந்த எல்லீஸ் என்னும் அறிஞருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். இக்காப்பியத்தின் மாரிவாழ்த்துப் பகுதியிலிருந்து இரண்டு பாடல்களை எல்லீஸ் தமது திருக்குறள் மொழிபெயர்ப்பில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். சாமிநாத பிள்ளை ஞானாதிக்கராயர் காப்பியம் மட்டுமன்றி, நசரைக் கலம்பகம், சேசுநாதர் பிள்ளைத்தமிழ், அர்ச். செபஸ்தியார் அம்மானை ஆகிய இலக்கியங்களையும் படைத்துள்ளார்.

காப்பிய அமைப்பு

ஞானாதிக்கராயர் காப்பியம் பாயிரப் பகுதியுடன் தொடங்குகிறது. இக்காப்பியம் 30 படலங்களால் பகுக்கப்பட்டுள்ளது. அவை நாட்டுப் படலம், நகரப் படலம், கோவியற் படலம், ஞானாதிக்கனுற்பவப் படலம், ஞான மஞ்சனப் படலம், புனல் விளையாட்டுப் படலம், நூற்றேர்ச்சிப் படலம், தரிசனப் படலம், அரசாட்சிப் படலம், புரசன் றூது படலம், மணமணத்த படலம், விரதநிலைப் படலம், நீதிநிறைமாட்சிப் படலம், அயிர்ப்புற்ற படலம், இன்புறு படலம், அபிநவயுத்தப் படலம், சமர்செய் படலம், இரோமைசேர் படலம், மாமகுடம் புனைந்த படலம், அருண்மாட்சிப் படலம், முடியப்ப மன்னன் வரவு படலம்,

தர்க்கவாதப் படலம், திருமந்திரப் படலம், இசேலம்மாள் மணவினைப் படலம், சங்கிராம்வாகைப் படலம், நகர்நீங்கு படலம், கசினமாமலையடைந்த படலம், பிணிப்படு படலம், திருவுருசேமப் படலம், ஞானாதிக்க நிலைபேறுறு படலம் என்பனவாகும். 30 படலங்களிலும் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 2222 ஆகும்.

காப்பியப் பதிப்பு வரலாறு

ஞானாதிக்கராயர் காப்பியம் 1774ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ஆம் நாள் அரங்கேற்றம் செய்யப்பட்டது. ஆனால் நூலாசிரியரின் காலத்திற்குப் பின்னர் அவரது பேரர்களாகிய தி. துரைசாமிப்பிள்ளை, இராயர். முத்துச்சாமிப்பிள்ளை, இராயர். பொன்னுசாமிப்பிள்ளை, அப்பாசாமிப்பிள்ளை, அ. சாமிநாத பிள்ளை ஆகியோர்கள் கேட்டுக் கொண்டதன்படி, இக்காப்பியம் வெளிவந்துள்ளது. காப்பியத்தின் கையெழுத்துப் பிரதி சென்னைப் பட்டணத்திலுள்ள கல்லூரியின் மேலாளரான அ. முத்துசாமிப் பிள்ளையிடம் இருந்தது. அப்பிரதியையும் பிற பிரதிகளையும் ஆதாரமாகக் கொண்டு ப.அ. சவரிநாத உபாத்தியாயர் அவர்களின் உதவியினால் ம. சா. இயாகப்ப பிள்ளை அவர்களால் பிழையறப் பரிசோதிக்கப்பட்டது. பின்னர் தஞ்சை நகரத்தில் பூங்கொடியிலுள்ள சின்னப் பிள்ளையின் மகன் அப்பாவுப் பிள்ளை அவர்களால் 1865 ஆம் ஆண்டு முத்தியாலு நாயகரது சென்னைப்பட்டணத்திலுள்ள வாணிநிகேதன அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

சாற்றுகவி

ஞானாதிக்கராயர் காப்பியத்தின் தொடக்கத்தில் சாற்றுகவி இடம்பெற்றுள்ளது. இக்கவி நிலமண்டில ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது. சாற்றுகவி 56 அடிகளை உடையது. சாற்றுகவியில் இடம்பெற்றுள்ள செய்திகள் பின்வருமாறு:

விண்ணவரும் மண்ணவரும் தொழுது ஏத்துகின்ற இயேசு கிறிஸ்துவை மரியாள் பெற்றெடுத்தபின் 972ஆம் ஆண்டில் ஞானாதிக்கராயர் பிறந்தருளினார். 1002 ஆம் ஆண்டு சூரியனைப் போன்ற சுடர்முடியைச் சூடினான். பன்னிரெண்டு ஆண்டுகள் இளவரசனாக இருந்தான். பின்னர் நிலைபெற்ற அரசனாக மணிமுடி சூடினான். அவன் 52 ஆண்டுகள் ஆட்சி

செய்த பின்னர் மண்ணுலகில் மரணமடைந்து விண்ணுலகம் சென்றான். அவ்வரலாற்றை 2222 பாடல்களால் கருத்தாழத்துடன் தமது முப்பதாவது வயதில் முப்பது படலங்களாகப் பாடினான். புதுவையில் மாட்சிமையுடன் குற்றமற விளங்கும் மரியன்னையின் தேவாலயத்தில் அதிபராக இருந்த அருந்தவத்தைச் செய்த தூய மேற்றிராணி நிக்கோலோ என்பவரும் ஏனைய மறைநூல் அறிஞர்களும் கேட்டுக் கொண்டதன்படி ஞானாதிக்கரின் வரலாற்றைக் காவியமாகப் பாடி முடித்தார். அந்நூலை 1774ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ஆம் நாள் முழுமதி நாளன்று கற்றறிந்த கலை வல்லோர்களும் சிறப்பு மிக்கப் பெரியோர்களும் தருமம் மிகுந்த திருச்சபையோர்களும் கூடியிருந்த சபையில் அரங்கேற்றினார். புகழ்மிக்க வாழ்வை நடத்திய மன்னவனுடைய நிலைபெற்ற வரலாற்றை, சிறப்புறு நற்றமிழ் காப்பியமாக உரைத்தவன் சொல்லமுடியாத சிறப்புகளை உடைய புதுவை நகரில் புகழுற வாழ்ந்திருந்த கங்கை குலத்தைச் சேர்ந்த கவிமலர் மாலையணிந்த வேளாளர் குலத்தைச் சேர்ந்த வணிகராக விளங்கிய சவரி முத்து பெற்றெடுத்த மகன் சாமிநாதன் செய்த இந்தத் தமிழ் நூல் வேதம் தழைக்க குன்றின்மேல் வைத்த சுடர் விளக்காகக் காலத்தை வென்று நின்று ஓங்கி இலங்கச் செய்தான்.

பாயிரம்

சாற்றுகவியைத் தொடர்ந்து பாயிரம் இடம்பெறுகிறது. இப்பாயிரம் 21 பாடல்களைக் கொண்டது. பாயிரத்தில் காப்பியக் கதை மிகச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. பாயிரத்தின் முதல் பாடல்,

> **மணிகொண்ட கடலுடுத்த வையகமு மதின்மிக்க**
> **வணிகொண்ட பல்லுயிரு மண்டலமுந்தீ யனிலமம்புந்**
> **துணிகொண்ட பருதியுடு சோமனிவை விதித்தேவற்**
> **பணிகொண்ட நிறைநீதிப் பரஞ்சுடரின் பதம்பணிவாம்**
>
> **(பாயிரம், பா.1)**

என அமைந்துள்ளது. இப்பாடலில் மணிகொண்ட கடலை ஆடையாக உடுத்த உலகமும், அவ்வுலகத்தின் மிகுந்த அழகுள்ள உயிர்களும், ஆகாயம், தீ, காற்று, மேகம், சூரியன், நட்சத்திரங்கள், சந்திரன் என்னும் இவையாவையும் படைத்த பரம சுடராகிய கடவுளின் திருப்பாதத்தைப் பணிவோம் எனப் பாடுகிறார். பாயிரத்தில் அவையடக்கமாக,

விற்றருங் கிரணமாலி யின்முன்னர் விளக்கொளிநின்
றனபோல்
முற்றரிது ணர்ந்துகற் றவர்முன் னான்மொழிவதற்
கிசைந்தனத்தன்மை
நற்றகவமுத மட்கலத்திருப்ப நயப்புடன் கொள்ளுவர்போலச்
சொற்றருமென்னாற் குறைகளுண் டெனினுந்துத்த மாஞ்சரிதை
கொள்ளுவரால்
(பாயிரம், பா.6)

எனப் பாடுகிறார். ஒரு பெரிய ஞாயிற்றின் ஒளிக்கு முன்னர் சிறிய விளக்கொளி போன்று, முற்றுணர்ந்த கற்றவர்களின் முன்னர் நான் சொல்லத் தலைப்பட்டேன். அமிழ்தமானது மட்கலத்தில் இருந்தாலும் மட்கலத்தில் இருந்ததென்று அமிழ்தத்தை யாரும் வெறுக்கமாட்டார்கள். என்னுடைய கவிதை மட்கலம் போன்று இருந்தாலும் ஞானாதிக்கராயர் கதை அமிழ்தம் போன்றது என்கிறார்.

காப்பியக் கதை

பவாரி நாட்டினை ஆட்சி செய்து வந்த அரசன் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைக்கின்றான். புதுமணத் தம்பதியரான அவர்கள் மகிழ்வுடன் அரண்மனையில் வாழ்ந்து வருகின்றனர். இத்தம்பதியினருக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கின்றது. ஆண் குழந்தை பிறந்ததனால் அரண்மனையில் நாட்டு மக்களுக்கு ஏராளமாகப் பொருள்களை வாரி வழங்கினான். குழந்தை பிறந்த எட்டாவது நாளில் ஞானாதிக்கராயன் எனப் பெயர்சூட்டி ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஞானாதிக்கராயன் கல்வி கற்கும் பருவம் வந்தவுடன் மேற்றிராணியாரிடம் கல்வி பயின்றான். ஞானாதிக்கராயன் இளம் பருவத்திலிருந்தே கிறித்தவ நெறியில் வளர்ந்து வந்தான். வேத சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், தரும சாஸ்திரம் ஆகியவற்றை ஞானாதிக்கராயன் முறைப்படி கற்றான். அனைவரும் போற்றும் வகையில் ஆட்சி செய்து வந்தான். ஞானாதிக்கராயனுக்குத் திருமணம் நடைபெற்றது. கணவனும் மனைவியும் இல்லற வாழ்க்கையில் விரதநிலையைப் பின்பற்றினர். ஞானாதிக்கராயனின் ஆட்சிமுறை சிறப்பாகக் காணப்பட்டது. பின்னர் விரதநிலை முடிவடைந்து மனைவியுடன் இன்பமாக வாழ்ந்து வந்தான்.

ஞானாதிக்கராயன் பகைவர்களை அழிப்பதில் வல்லவன். பல பகைவர் இவனுடன் போரிட்டு மரணம் அடைந்துள்ளனர். குறிப்பாக காந்தன், வாசவன் என்னும் இருவரும் ஞானாதிக்கராயனிடம் தோல்வியடைந்தனர். ஞானாதிக்கராயனின் இறுதிப் போர் இயக்கியன் என்னும் அரசனிடம் நடைபெற்றது. ஞானாதிக்கராயனே வெற்றி பெற்றான். ஞானாதிக்கராயன் முடியப்பன் என்னும் அரசனிடம் இறைவன் மனிதனையும் பல்வேறு உயிரினங்களையும் படைத்தது முதல் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, அவர் செய்த அற்புதங்கள், அவர் பட்ட பாடுகள், சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சி, உயிர்த்தெழுதல் ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறார். இறுதியில் ஞானாதிக்கராயன் வனவாசம் செல்கிறார். இக்காப்பியத்தில் விவிலிய நிகழ்வுகள் கிளைக்கதைகளாக வருவது குறிப்பிடத்தக்கது.

வருணனை

ஞானாதிக்கராயர் காப்பியத்தின் முதல் இரண்டு படலங்களான நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகியவற்றில் வருணனைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. சான்றாக,

கூந்தலம் பனைகளுங் கொடுங்கை யாகவு
மாந்தியம் மரமிரு வரிசை யாகவுஞ்
சேர்ந்திடுங் குங்குமஞ் செண்ப கங்களு
மார்ந்திட நடுவினி லமைந்த சோலையும்

இலந்தைகன் ணியணி யிருக்குஞ் சோலையும்
பலந்தரும் பனசமே படருஞ் சோலையு
நலந்தருஞ் சந்தன நறுந்தண் சோலையுங்
குலந்தரும் பலமரக் கூட்டச் சோலையும்

கற்றறி வுயரமுங் கனிநிகர்ப் பொருள்
நற்றெருள் வெண்மலர் நறவு கீர்த்திநேர்
சொற்றமிழ் மதுரநேர் துளித்த தேறலுங்
கற்றவர்க் கிணையதாங் காவி னங்களே

(நாட்டுப் படலம், பா.22-24)

என்னும் பாடல்களைக் குறிப்பிடலாம். கூந்தல் பனைகள் இரு வரிசைகளாகவும், குங்கும மரங்களும், செண்பக மரங்களும் நடுவில் அமைந்த சோலைகளும், இலந்தை மரங்கள் அணிஅணியாக நிற்கும் சோலைகளும் பலா மரச் சோலையும், சந்தன மரங்கள் உடைய சோலையும் சான்றோர்கள்

உயர்ந்திருப்பதைப் போன்று அவைகள் உயர்ந்திருந்தன. அவர்கள் இனிய பொருள்களைத் தருவது போன்று அம்மரங்களில் இனிய கனிகள் இருந்தன. மலர்த்தேன் போல அந்த சொற்றமிழ் இனிமை போல மலர்களில் தேன் துளிர்த்தது. ஆகவே அந்த சோலைகள் கற்றவர்களுக்கு இணையாக இருந்தன என சோலைகளை வருணனை செய்கிறார். மேலும்,

கமலமு மாம்பலுங் கமழுங் காவியுஞ்
சுமமுறை குளத்தினிற் றோகை யார்களு
மிமிழுடன் குளித்திட மருண்டங் கீயளி
யமலநன் முகமுதட டக்கி மொய்க்குமே

(நாட்டுப் படலம், பா.30)

என்னும் பாடலில் தாமரை, ஆம்பல் முதலிய மணமிக்க மலர்கள் நிறைந்திருக்கும் குளத்தில் பெண்கள் குளிக்கின்றனர். அங்கு தேன் உண்ண வந்த வண்டு மருண்டு போய், எது முகம் எனத் தெரியாமல் பெண்களின் முகத்திலும் மலரிதழ்களிலும் போய் மொய்க்கும் என வருணிக்கிறார்.

வெண்கொடித் திரளும்வாகை விருதுமுன் னடக்கவெள்ளைத்
தண்குடைத் திரளும்பூப்பச் சாமரையிரட்ட வாங்கு
விண்குடி லத்துமேக விரிவுபோ லிருளு ருப்பக்
கண்கடி மணியுமாரக் கலனொளி யாக்குமாறே

(நகரப் படலம், பா.28)

என்னும் பாடலில் வெண்கொடிக் கூட்டமும் வெற்றிச் சின்னங்களும் முன் நடக்க, குளிர்ச்சி தரும் வெண்கொற்றக் கொடையின் கூட்டங்கள் விரிந்திருக்க, வெண்சாமரைகள் அசைய, இதனால் வானத்தில் மேகம் திரண்டு இருண்டது போல் இருளைச் செய்தன. ஆனால், கண்ணைக் கூசச் செய்யும் நவரத்தினங்களும், அணிகலன்களில் இருந்த மணிகளும் இருளை அகற்றி ஒளியைக் கொடுத்தன என வருணனை செய்கிறார். அரசனும் அரசியும் கசினமாமலைக்குச் செல்லும் போது அவர்கள் வழியில் பலவற்றைக் காண்கின்றனர். இவற்றை ஆசிரியர் வருணனையுடன் கூறியிருப்பது சிறப்பாக உள்ளது.

கும்பிகள் குளத்தில் வீழ்ந்து குழப்பவும்வரி வரால்கள்
கும்பிகணீத்துநீர் மேற்குதித் தெழுந்து யரப்பாய்ந்து
கும்பிகணிறைந்து நீண்ட கொம்பரிற் றங்கமேலார்
கும்பிகள் வாயாற் கவ்விக் கொண்டிடக் கண்டு சென்றார்

(கசினமாமலை யடைந்த படலம், பா.70)

என்னும் இப்பாடலில் யானைகள் குளத்தில் விழுந்து குழப்பவும், சேற்றில் புகுந்திருந்த வரி வரால்கள் நீரின் மேலெழுந்து குதித்துப் பாய்ந்து தேக்கு மரங்கள் நிறைந்த நீண்ட கொம்புகளில் தங்கவும், அவற்றின் மேலுள்ள பெரிய பாம்புகள் அவ்வரால்களை வாயால் கவ்விக் கொள்ளவும் அரசனும் அரசியும் இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டு சென்றனர் என்று ஆசிரியர் வழியிலுள்ள நிகழ்வுகளை வருணிக்கிறார். இது போன்று பல வருணனைகள் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.

கவித்திறன்

காப்பிய ஆசிரியர் சாமிநாத பிள்ளை சிறந்த கவித்திறன் உடையவராகக் காணப்படுகிறார். இதற்கு அவரது கவிதைகள் மிக்க சான்றுகளாக அமைகின்றன. சான்றாக,

கார்க்கள மல்லது கறையில் லுள்ளமுங்
கார்க்கள மல்லது கடித லில்லைநெற்
போர்க்கள மல்லது புகை யெழும்பகைப்
போர்க்கள மில்லதே பொற்பி னாட்டினே

(நாட்டுப் படலம், பா.33)

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் கார் நெல் அடிக்கின்ற களம் உண்டே தவிர கறை கொண்ட உள்ளம் இல்லை; நெற் போர்க்களம் உண்டே தவிர புகை எழும் பகைப் போர்க்களம் அந்நாட்டில் இல்லை என ஆசிரியர் தம் கவித்திறனை வெளிப்படுத்துகிறார்.

உவமை நயம்

காப்பியங்களில் உவமைகளைப் பயன்படுத்துவது ஆசிரியர்களின் தனித் திறமை எனலாம். ஞானாதிக்கராயர் காப்பியத்திலும் ஆசிரியர் உவமைகளைக் கையாண்டு காப்பியத்திற்கு அழகைக் கொடுக்கிறார். சான்றாகச் சில உவமைகளைக் கீழே காணலாம்:

1. விற்றருங் கிரணமாலி யின்முன்னர் விளக்கொளிநின் றனபோல்.
2. வேடனைக் கண்டுளம் வெருவு மான்கணேர்.
3. கார்திரண்ட கணமோ ரிரண்டுமிடி நேர்திரண்டு சமரிடுமெனா .

4. கடியொருங்கு படகன லெழுந் ததென.
5. நகமிடைந் தருவிபுனல் சரிந்தவென.
6. வரைமிசை யேறுமடங் கலென.
7. முத்தொடு பவளத்தைக் கோத்ததென்ன.
8. தாருவை வெட்டி மீண்டு நிலத்திற் றானூன்ற
வேருறிதளி ருண்டாவது மறியுமெய்போல.

ஆசிரியர் ஒரே பாடலில் பல உவமைகளையும் கையாண்டுள்ளார். சான்றாக,

கரியழித்தன விடியெனபகமிக கெடவழித்தன
வுயருவணமுமென
வுரியழித்தன வரியென நவிலருமெரிய ழித்தனவறலெ
னவிடமுள
கிரியழித்தன விடியெனபகமிக கெடவழித்தன
வுயருவணமுமென
வரியழித்தன கருடனுநிகரவே யமரழித்தெழுமரசி
கல்பொருதுவான்
(சங்கிராமவாகைப் படலம், பா.35)

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் மத யானையை அழித்த சிங்கம் போலவும், கடலிலுள்ள மீன்களை அழித்த வீர சுறாப் போலவும், கூட்டமுள்ள நரிகளை அழித்த புலியைப் போலவும், நெருப்பை அழித்த தண்ணீரைப் போலவும், பெரிய மலையை அழித்த இடியைப் போலவும், கொக்குகளை அழித்த விராசாளியைப் போலவும், பாம்பை அழித்த கருடனைப் போலவும் போரை அழித்தெழுந்த ஞானாதிக்கராயன் போரிலிருந்து வெற்றியுடன் திரும்பினான் என்கிறார். இப்பாடலில் ஏழு உவமைகள் காணப்படுகின்றன. இதே போன்று,

மேகமெனக் கருநாக முனஞ் செலவு
நரகமெனப் பலவாகிரதஞ் செலவும்
யூகமெனப் பாய்வேகவயஞ் செலவு
மூகமெனத் திரளாகபடர்ச் செலுவார்
(சங்கிராமவாகைப் படலம், பா.7)

என்னும் பாடலிலும் அடுக்கு உவமை கையாளப்பட்டுள்ளது. இப்பாடலில் மேகக் கூட்டம் போலக் கரிய யானைக் கூட்டங்கள்

போகவும், மலைக் கூட்டம் போல அழகிய தேர்க் கூட்டங்கள் போகவும், குரங்குக் கூட்டம் பாய்வது போல வேகமாய்ப் பாயும் குதிரைக் கூட்டங்கள் போகவும், புலிக் கூட்டம் போலத் திரண்ட வீரரும் போவார்கள் என உவமைகளின் மூலம் கருத்தை விளக்குகிறார். இது போன்ற அடுக்குவமைகள் பல இக்காப்பியத்தில் உள்ளன. இவைகள் காப்பிய ஆசிரியரின் கவித்திறனுக்குத் தக்க சான்றுகளாகக் கொள்ளலாம்.

ஆசிரியரின் இசைப் புலமை

காப்பிய ஆசிரியர் வித்துவான் சாமிநாதபிள்ளை இசைப் புலமை உடையவர். இதற்குப் பின்வரும் பாடலும் அதற்கு அவர் எழுதிய உரையுமே சான்றாக அமைகின்றது.

எழுநரம்புவீணையும் பல்லினியாழுமூது குழலியம்புமின்பு
மெழுதுருவதானமுதற் பல்லியங்கண்முறை
முறையாயிசைக்குமின்பு
மெழுநரம்பா லெழுத்தசை சீர்தளையடியுந் தொடைப்பா
நாவலர்களின்பு
மெழுசுரசங்கீதர் முறைதவறாமற் பாடுமின்புமென் றென்றாமே
(நகரப்படலம், பா.41)

என்பது பாடல். இப்பாடலுக்கு ஆசிரியர், "வீணையின் ஏழு நரம்பு அவையாவன: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். இவற்றுள் மிடற்றாற் குரல் நாவினாற்றுத்தம் அண்ணத்தாற் கைக்கிளை சிரத்தாலுழை நெற்றியாலிளி நெஞ்சத்தால் விளரி மூக்காற்றாரந் தனித்தனிப் பிறக்கும். இவற்றிற் கோசையுவமை மயில் இடபம் ஆடு கொக்கு குயில் குதிரை யானை யிவ்வீணையுமன்றிப் பலவினியயாழு மூதுகுழலியம்பு மின்பமும். எழுதாளம் அவையாவன: துருவதானம், மட்டியதாளம், உருபகதாளம், சம்பைதாளம், திரிபுடைதாளம், அடதாளம், ஏகதாளம். அன்றியும் அரிதாளம் அருபதாளம் சமதாளம் சயதாளம் சித்திரதாளம் நிவர்த்ததாளம் படிமதாளம் விடதாளமுங் கொண்டு பலவாச்சியங்கள், முறைமுறையா யொலிக்கு மின்பமும் விருப்பமுண்டாகி நாவலரெழுத்தசைசீர்தளையடி தொடைப்பாவாற் பாடுமின்பமு மெழுசுரமாவன -ச-ரி-க-ம-ப-த-நி- யென்னுஞ் சுரத்தோடிராகமுறை தவிராது சங்கீதர் பாடுமின்பமு மென்றென்று முள்ளதாமென்க" என இசைப் புலமையுடன் விளக்கம் எழுதியுள்ளார். இச்சான்றிலிருந்து ஆசிரியரின் இசைப் புலமையை அறிந்து கொள்ள முடிகின்றது.

பரணி இலக்கியக் கூறுகள்

தமிழ் இலக்கியத்தில் போர் பற்றிய விரிவான செய்திகளைக் கூறுவனவாகப் பரணி இலக்கியங்கள் காணப்படுகின்றன. ஞானாதிக்கராயர் காப்பியத்தில் ஞானாதிக்கராயர் பகை மன்னர்களுடன் போர் செய்வது குறித்த செய்திகள் விரிவாகத் தரப்பட்டுள்ளன. இதனால் பரணி இலக்கியக் கூறுகள் இக்காப்பியத்தில் இயல்பாகவே இடம்பெற்றுள்ளன. ஞானாதிக்கராயர் போர் புரிந்த போர்க்களத்தின் கொடூரத்தை,

> **துரிகதங்களொடு குரகதங்களட றுனிநடுங்க கனருசியென**
> **வுரகதங்களொடு வளைவுகொண்டு மிகவுழலவந்து**
> **படையபையரும்**
> **பரகதங்களொடு சமர்புரிந்துவர பரியினங் கடுடைகுடன்மடி**
> **மரகதங்களொடு மணிபுனைந்த வுளைவடிவுகண்ட மறமடிவன**
> ***(சங்கிராமவாகைப் படலம், பா.19)***

எனப் பாடுகிறார். குதிரைகளோடு குதிரைகள் போர்க்களம் நடுங்க மின்னலைப்போல் வளைந்து, தம்வலியுஞ் சினமுமிகக் கொண்டு சுழன்று திரிய அவற்றின் மேலிருக்கும் படைவீரர் தங்களுடைய உள்ளடங்கா சினத்தோடு போர் செய்யும் போது சிலகுதிரைகள் துடைகளற்றும், சிலது குடலற்றும், சிலது காலற்றும், சிலது பச்சைமணி முதல் நவமணிகளைப் பிடரி மயிர்களில் வைத்துப் பின்னிய வடிவுள்ள கழுத்துகளும் அற்றுவிழ மடிந்துகிடந்தன என்பது இப்பாடலின் கருத்தாகும். ஞானாதிக்கராயர் காப்பியத்தில் சமர்செய் படலம், சங்கிராமவாகைப் படலம் என்னும் இரண்டு படலங்களிலும் போர்க்கள வருணனைகள் அதிகம் காணப்படுகின்றன. இன்னுமொரு பாடலைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

> **இருபுறஞ்சரிந்து பாயுமிரத்த வெள்ளாற்றின்மீதே**
> **ஒருபுறஞ்சரிந்த கையுமுபையகாற்சென்னிவீழப்**
> **புருபுறஞ்சரிந்து மூளைபுனனுரை போன்மிதப்பச்**
> **செருபுறங்கொண் டொன்னாருந்திகைத் தகமெலிந்திட்டாரே**
> ***(சமர்செய் படலம், பா.29)***

என்னும் இப்பாடலில், இரு புறங்களும் சரிந்துவிழ குருதியானது ஆறு போல் பாய்ந்து ஓடியது; அவ்வெள்ளத்தில் கைகளும் கால்களும் தலைகளும் ஒரு புறம் சரிந்து விழுந்தன; மற்றொரு புறத்தில் சரிந்து விழுந்த மூளைகள் நீரில் நுரை போல் மிதந்து சென்றன; இத்தகையப் போர்க்களத்தைக் கண்டு திகைத்த

பகைவர்கள் உள்ள உறுதியை இழந்தனர் என ஆசிரியர் கலிங்கத்துப் பரணியின் போர்க்களக் காட்சிகளை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளார்.

விவிலியக் கருத்துகள்

ஞானாதிக்கராயர் காப்பியத்தில் விவிலியக் கருத்துகள் கிளைக்கதைகளாகவே இடம்பெற்றுள்ளன. ஞானாதிக்கராயர் காப்பியத்தில் காணலாகும் 30 படலங்களுள் திருமந்திரப் படலம் முழுவதும் விவிலியக் கருத்துகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இப்படலப் பகுதிகள் அனைத்தும் ஞானாதிக்கராயன், முடியப்பன் என்னும் அரசனிடம் திரியேகக் கடவுள் பற்றியும் உலகத்தை, மனிதனை இறைவன் படைத்தது பற்றியும், இயேசு கிறிஸ்துவின் வரலாறு பற்றியும் உரைப்பதாகக் காணப்படுகின்றன. ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாளைப் படைத்தமையை,

> அன்றுதித்தமனிதனுக்களித்தவயதுமுப்பதாய்
> நின்றுதிப்பத் துணைவிசெய்ய நித்திரைப்படுத்தியே
> நன்றுரத்தின் பக்கமீது நடுவெலும்புசதையெடுத்
> தென்றுரத்தவாவிதன்னையீயவேயுதித்தனள்
>
> (திருமந்திரப் படலம், பா.31)

எனப் பாடுகிறார். மேலும் முடியப்பன் என்னும் அரசனிடம் ஏவாள் செய்த தவறினால் அவள் குழந்தை பெறும் போது மிகுந்த வேதனையை அடைவாள் என்றும் ஆண் பெண்ணை ஆள்வான் என்னும் கடவுளின் சாபத்தை,

> பேதையாமேவைநீ பிள்ளைகள் பெறுங்கான் மிக்க
> வாதைதுன்பத்தின் மூழ்கிவருத் தமுற்றிருப்பதன்றிக்
> காதலன் சொற்குத் தாழக்கைத் தலத்துன்னை யாள்வான்
> சாதமாயுனக்கி யானுந் தந்திடுஞ் சாபமீதே
>
> (திருமந்திரப் படலம், பா.49)

என எடுத்துரைக்கிறார். மோசேக்குக் கடவுள் கொடுத்த பத்து கற்பனைகளை,

> கருத்துறு முதற்கற்பனை யுமக்கினிய கடவுணாநமக்கு
> முன்பாக
> விருத்தமாந் தெய்வமுமக்கு வேறில்லை விளங்கு
> மெம்மாக்கியந் தன்னைப்
> பொருத்தலில்லா வீண்கருமமான தற்காய்ப்பு
> கலொணாதென்று மென்றீரத்தம்

மிருத்திய நாளையாசரிப்பீரென் றெழுதி வைத்திருந்ததோர்
கல்லில்
தந்தைதாய் தமக்குச் சங்கை செய்திருப்பீர் தருக்கொடு
கொலைப் பவங்குயிற்றீர்
நிந்தையா மோகவகந்தயைச் செய்யீர் நிதிய மற்றவைகளும்
வவ்வீர்
சிந்தையோ டொருபொய் செப்பிடீர் பிறரின் றேவியைக்
கவர்ந்திடீர் பலரின்
விந்தையாம் பொருளை விழைவுறீரென்று வேறுகல்
லெழுதினதன்றே
(திருமந்திரப் படலம், பா.64, 65)

எனக் கவிதையாக்குகிறார். இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்து தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்தினார். அவர் செய்த அற்புதங்களை,

விழியற்றார்க் கொளியளித்து மிகப்பெரு கப்பிணிகொண்டோர்
வினையைத் தீர்த்து
மொழியற்ற மூங்கையரும் பேசமுட மெழுந்தோட
மொய்தாய்தந்நை
வழியற்றார் மனங்களிப்ப மகவீய மாண்டவரு மண்ணிலுள்ள
குழியற்றார்ந் திருந்தவர்க்கு முயிர் கொடுத்த
நவங்கோடாகோடியாமே
(திருமந்திரப் படலம், பா.85)

எனக் கவிஞர் தொகுத்துப் பாடுவது நலமுள்ளதாக அமைகிறது. இயேசு கிறிஸ்துவைக் கொலை பாதகர்கள் பலவிதமாகத் துன்புறுத்தி, சிலுவையில் அறைந்து, இறுதியில் உயிர் இருக்கிறதா என்பதை அறிவதற்காக விலாவின் வலது பக்கத்தில் ஈட்டியால் குத்தினான். இக்கொடிய நிகழ்வினைக் கவிஞர் ஒரே பாடலில் இரத்தினச் சுருக்கமாக,

கலைமுகத்தில் விளங்கு சுதன் வருத்தந்தாங்காக்காறளர்ந்து
மெலிந்தூ சலாடிச் சென்று
மலைமுகட்டிலிறக் கவிருகையுங்காலும் வாராணியாலறைந்து
மடக்கிமீட்டு
நிலைமுகத்து நாட்டிடவேழ முதவாக்குநிகழ்த்திய பின்ன
மக்காக விளிந்தானன்று
கொலைமுகத்துக் கொடியவனோ ரீட்டியாலேகுத்த
விலாச்செந்நீராற்குருடு தீர்ந்தான்
(திருமந்திரப் படலம், பா.101)

எனப் பாடுகிறார். விவிலியச் செய்திகள் முழுவதையும் ஞானாதிக்கராயர் சுருக்கமாக, தெளிவாகக் கூறியதைக் கேட்ட அரசன் முடியப்பன், அவரைப் பார்த்து, அரசே விவிலிய நிகழ்வுகளை எல்லாம் ஏற்றுக் கொள்கிறேன் எனக் கூறி மனம் மாறி கிறித்தவனானான்.

விசுவாசப் பிரமாணம்

அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம் பின்வருமாறு:

> வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன். அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன், பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

இந்த அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்தை,

விண்டலமும் பூவுலகும் விதித்த பரனையுஞ் சேசுநாதரென்று
விளங்குமவர் சுதனையு முட்பத்தியுடன்
விசுவாசிக்கின்றேன்சேயுந்

தண்டருமிஸ் பிரீத்துவால் மரியுதரந்தனி
னின்றுபிறந்தாரென்றுந்

தகமைபிலாத் தாற்பாடுபட்டு மரத்தறையுண்டு
மரித்தாரென்றும்

பண்டுறு பாதலத்திருந்து மீண்டெழுந் தும்பிதா
வலப்பாலமைந்தா ரென்றும்

பார்மீதினடுக் கேட்கவருவரென்று மிவரையுமிஸ் பிரீத்து
சாந்தும்

உண்டென்றுந் திருச்சவையு மர்ச்சியர்கள் சமநலமுமுள்ள
பாவ
வோர்ப்பது முத்தானமென்றுஞ் சீவியமும் விசுவாசிக்கின்
றேனென்றார்
(திருமந்திரப் படலம், பா.105)

எனப் பாடலாக வடித்துள்ளார். ஆசிரியரின் புலமைக்கு இது ஒரு தக்க சான்றாக அமைகிறது.

தற்குறிப்பேற்றம்

காப்பிய ஆசிரியர் காப்பியத்தின் பண்புகளுக்குத் தக்கவாறு உவமைகள், பழமொழிகள், வருணனைகள், கற்பனைகள் ஆகியவற்றைக் கையாள்வது வழக்கம். அவ்வகையில் சாமிநாத பிள்ளையவர்கள் பல பண்புகளைக் கையாண்டுள்ளார். அவற்றில் ஒன்று தற்குறிப்பேற்ற அணியாகும். சான்றாக,

வேங்கையினிறத்த நல்லமேனி யீர்வன் பாற்றீயால்
வேங்கையின கமுடைத்தாய் வெஞ்சினங் கொண்டுபாயும்
வேங்கையுமிகுத்த தீங்கண் மிடைந்து செல்லற் பீரென்று
வேங்கையுந் தளிர்மென் கையால் விருப்புடன் வணங்கல்
போன்றே
(கசினமாமலையடைந்த படலம், பா.68)

என்னும் இப் பாடலில், பொன்னினும் நன்னிறைத்த வடிவுள்ள மேனியை உடையோரே, பாலை நிலத்தின் அக்கினித் தீயால் வேகப்பட்ட கையினகமுண்டாகி வெஞ்சினம் கொண்டு பாயும் வேங்கைகள் மிகுந்திருக்கின்றன. ஆகையால், நீங்கள் இவ்விடம் விட்டுப் போகாதேயுங்கள் என்று வேங்கை மரங்கள் தம் தளிராகிய மென்மையான கையால் விருப்பத்தோடு வணங்கியது போலத் தோன்றியது எனக் குறிப்பிடுகிறார். மரங்களின் தளிர் இலைகள் வணங்கியது போலக் காணப்படுவது இயல்பு. ஆனால் கவிஞர் அவ்விலைகள் அவர்களை வேறு இடத்திற்குப் போக வேண்டாம் என வணங்கிக் கேட்கின்றன என்னும் குறிப்பின் மூலம் விவரிக்கிறார்.

தேம்பாவணியின் தாக்கம்

காப்பிய ஆசிரியர் சாமிநாத பிள்ளையின் காலத்தில் தேம்பாவணி நூலாக வெளிவந்துவிட்டது. எனவே தேம்பாவணியின் தாக்கம் ஞானாதிக்கராயர் காப்பியத்தில் இயல்பாகவே அமைந்துள்ளது. சான்றாக,

மருமலிந்த மலரடியை வணங்குமிருவரை நோக்கிக்
குருமலிந்த தவனாசிகொடுத் தெழுமின்னென வெழுந்தார்
திருமலிந்தோ ரேயிருக்குத் தேடியுறுங் கருத்ததனை
யுருமலிந்த மலர்வாயா லுரையுமென வுரைத்தனனால்
(இரோமைசேர் படலம், பா.41)

என்னும் பாடல் தேம்பாவணியின் இரண்டாம் காண்டத்திலுள்ள,

மருமலி மலர் நிழலே மறை மலி உயர் பயனே
திருமலி கர முகிலே சிவம் மலி தனி முதலே
இருமலி உலகு உளரே இணரொடு தொழும் அடியே
குருமலி அற நெறியே கொழு மலர் அடி தொழுதேன்
(சோசுவன் வெற்றிப் படலம், பா.185)

என்னும் பாடலின் தாக்கத்தினால் அமைந்துள்ளது எனலாம்.

கிறித்தவக் காப்பியங்களுள் பழமையானக் காப்பியம் ஞானாதிக்கராயர் காப்பியமாகும். இக்காப்பியத்தில் விவிலியச் செய்திகள் கிளைக்கதைகளாக இடம்பெற்றிருப்பினும், இறைவன் ஆதாம் ஏவாளைப் படைத்தது முதல் இயேசு கிறிஸ்து பரலோகம் சென்றது வரையிலான செய்திகள் இரத்தினச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மறுபதிப்பில் வராமல் மறைந்து கொண்டிருக்கும் இக்காப்பியம் மீண்டும் வெளிவருவது கிறித்தவ இலக்கியத்திற்குப் பெருமை.

24. அன்னை தெரேசா காவியம்

கிறித்தவக் காப்பியம் என்பது விவிலியத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டது என்னும் வரையறையின்றி, கிறித்தவ அடியார்களைப் பற்றி விவரிக்கும் இலக்கிய வகைகளையும் கிறித்தவக் காப்பியமாகக் கொள்ளலாம். அவ்வகையில் அன்னை தெரேசா காவியம் ஒரு கிறித்தவக் காப்பியமாக விளங்குகிறது. புதுச்சேரியைச் சேர்ந்த கவிஞர் துரை. மாலிறையன் அன்னை தெரேசாவின் வாழ்வியல் சிறப்புகளை விளக்கும் வகையில் இந்நூலை அழகுபட எழுதியிருக்கிறார். துரை மாலிறையன் கிறித்தவக் காப்பியமான அருள்நிறை மரியம்மை காவியத்தையும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியரது வரலாறு குறித்த செய்திகள் அருள்நிறை மரியம்மைக் காவியம் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளன. ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்து, பழுத்தப் பழமாகப் புவியில் வாழ்ந்து மறைந்த கிறித்தவ மூதாட்டி அன்னை தெரேசாவின் மகத்தான வாழ்வைச் சித்திரிக்கும் மாபெரும் படைப்பாக அன்னை தெரேசா காவியம் திகழ்கிறது.

காப்பியக் கதைச் சுருக்கம்

யூகோஸ்லோவியா நாட்டில் உள்ள அல்பேனியாவில் இருக்கின்ற சுகோப்சி என்ற ஊரில் நிக்கோலஸ் பொஜாக்ஸ்-டிரானாபைல் பீமாய் (Nicholas Bojax - Dranafile Bemai) என்னும் தம்பதியினருக்கு அன்னை தெரேசா மகளாகப் பிறந்தார். சிறுவயதிலேயே இயேசு கிறிஸ்துவின் கொள்கைகளைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்தார். பெற்றோர் அவருக்கு சூட்டிய பெயர் அக்னச்கான் சாபெசாட்சூ என்பதாகும். அன்னை இளம் வயதிலேயே பிறருக்குத் தொண்டு புரிய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டவராக விளங்கினார். சாதாரண உலகியல் இன்பங்களில் அவர் மனம் செல்லவில்லை. எனவே சோடாலிட்டியில் உறுப்பினராகச் சேர்ந்தார். தமது 15 ஆவது வயதிலே மத ஆசானிடம் பொதுப்பணி புரிய அறிவுரை கேட்டார். அதன் பிறகு இந்தியா வந்து கன்னியர் மடமான லொரேட்டா மடத்தில் சேர்ந்தார். பின்னர், கல்கத்தாவில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். மடத்தின் எதிரில் உள்ள மோத்திசி என்ற சேரியின் நிலையையும் அங்குள்ள மக்களின் வறுமை, கல்லாமை, சாதி, மதப்பிரச்சினை ஆகியனவற்றை எண்ணிப்

பார்த்துக் கண் கலங்கினார். தாம் பிறந்த நாட்டில் இத்தீமைகளெல்லாம் இல்லை. எனவே இந்திய நாட்டையும் அதுபோல் மாற்ற வேண்டும் என்ற எண்ணம் அன்னையின் மனதில் குடிகொண்டது. 1937 ஆம் ஆண்டில் எண்டேலி புனித மேரி உயர் பள்ளியில் முதல்வராகப் பொறுப்பேற்றார். அன்பு, கற்பு, பணிவு ஆகிய மூன்றையும் எப்போதும் தவறாமல் தாம் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று நோன்புகளாக அன்னை மேற்கொண்டார். அன்னையின் தொண்டின் சிறப்பால், சான்றோர் பெருமக்களால் 'அக்னஸ்' தெரேசா என்று புதுப்பெயர் சூட்டப்பட்டுப் போற்றப்பட்டார். அதன் பிறகு தார்சிலிங்கில் உள்ள இறைப்பணிப் பேரவையை அணுகினார். குருவானவேன் என்ற அடிகளாரிடம் தன் பொதுத் தொண்டு ஆர்வத்தைக் கூறினார். இதற்கிடையில் மடத்திலிருந்து வெளியே சென்று பொதுத் தொண்டு புரிய அனுமதி இல்லை என்று எண்ணி வருந்தினார். பின்னர் உரோம் நகரில் உள்ள போப்பிடம் அனுமதி பெற்று தன் தொண்டு வாழ்வினை ஆரம்பித்தார்.

மோத்திசி சேரிக்குச் சென்று அங்கு வாழும் சேரிப் பிள்ளைகளின் மேம்பாட்டுக்காகக் கடுமையாக அன்னை உழைத்தார். அன்னை கேட்காமலேயே அவருடையத் தொண்டுகளுக்காகப் பலரும் நன்கொடைகளை வழங்கினர். தூய்மை பேணல், நோய் நீக்கல், நற்பண்புகளை வளர்த்தல், கல்வி அறிவு புகட்டுதல் ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு அன்னை அளித்தார். அன்னையின் அருட்தொண்டால் கற்க வரும் குழந்தைகளின் எண்ணிக்கை பெருகியது. பாரத நாட்டின் சிறந்த குடிமகளாகத் தன்னை அன்னை மாற்றிக் கொண்டார். அவர் செய்து வந்த தொண்டுகள் நாளும் வளர்ந்தன. அறப்பணி இயக்கம் என அன்னையின் இயக்கம் பெயர் பெற்றது. நிர்மல் இதயம் என்னும் பெயரில் இறப்போர் நல இல்லத்தையும் தோற்றுவித்துப் பொறுப்பாக அன்னை நடத்தினார். அன்னையின் தொண்டுள்ளத்தை பல சான்றோர்கள் போற்றி வணங்கினர்.

பத்மஸ்ரீ என்னும் தாமரைத்திரு பட்டத்தை அன்னைக்குப் பாரதம் அளிக்க முன்வந்தது. ஆனால் அந்தப் பட்டத்தை அன்னை விரும்பவில்லை. பின்னர் பேராயரின் அறிவுரையை ஏற்றுப் பட்டத்தை அன்னை ஏற்றுக் கொண்டார். பிலிப்பைன்ஸ்

நாட்டின் 'ராமோன் மாக் சேசாய்' பரிசு அன்னைக்கு வழங்கப்பட்டது. அப்பரிசுத் தொகையைக் கொண்டு ஆக்ராவில் கன்னியர் இல்லத்தை அமைத்தார். ஆண் உடன் பிறப்பாளர்களுக்காகத் தொண்டர் அவையை அன்னை அமைத்தார். இதனால் அன்னை போப்பாண்டவரிடம் பாராட்டினைப் பெற்றார். அமெரிக்க மேனாள் அதிபர் ஆபிரகாம் லிங்கன் தமக்கு வழங்கிய மகிழ்வுந்தைப் போப்பாண்டவர் அன்னைக்கு அளித்தார். ஆனால் அன்னை அம்மகிழ்வுந்தை விற்று, தொழுநோயாளர் மருத்துவமனையை அமைத்தார். இந்தியா மட்டுமன்றி வெனிசுலா, இலங்கை, ரோம், ஆஸ்திரேலியா, யோர்தான், காசா, எத்தியோப்பியா, பிரான்ஸ், அமெரிக்கா, பிரேசில், பொலிவியா, கொலம்பியா, லெபனான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் அன்னை அரும்பணியாற்றினார். பத்மஸ்ரீ, நல்ல சமாரியன் பரிசு, அனைத்துலகப் போப் ஜான் XXIII பரிசு, ஜான் கென்னடி குடும்பப் பரிசான 'நிர்மல் கென்னடி இதயம் பரிசு', ஜவகர்லால் நேரு பரிசு, தெம்பிள்டன் பரிசு, அசிசி சவேரியார் பரிசு, ஆல்பிரட் சுவைசர் பன்னாட்டுப் பரிசு, இங்கிலாந்தின் தலைசிறந்த குடிமகள் என்னும் விருது, பால்சான் அனைத்துலக விருது, நோபல் பரிசு, பாரத ரத்னா விருது, சோவியத் நாடு இதழின் நேரு புகழ்ப் பரிசு, யுனெஸ்கோ அமைதி விருது, இந்தியாவின் தவப்புதல்வி விருது, பாரத சிரோன்மணி விருது, வாஷிங்டன் வழங்கிய மனித நேயத்துக்கான டாக்டர் பட்டம், சாந்தி நிகேதன் விஸ்வபாரதி பல்கலைக்கழகம் வழங்கிய டாக்டர் பட்டம் போன்ற பட்டங்களை அன்னை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நூலின் அமைப்பு

அன்னை தெரேசா காவியம் என்னும் இந்நூல் 3 காண்டங்களையும், 262 உட் தலைப்புகளையும், 843 பாடல்களையும் கொண்டுள்ளது. இக்காப்பியத்தில் காணப்படும் பெரும்பாலான பாடல்களும் அறுசீர் விருத்தத்தில் அமைந்தனவாகும்.

முதற் காண்டம்

அன்னை தெரேசா காப்பியத்தின் முதற் காண்டமானது அன்னையின் பிறப்பு, அவரது பணிகள், அதனால் அவருக்குக் கிடைத்த பெருமை பற்றிப் பேசுவதாகத் திகழ்கிறது.

இக்காண்டத்தில் 49 உட்தலைப்புகளின் கீழ் செய்திகள் எடுத்தியம்பப்படுகின்றன. முதற் காண்டத்தில் 201 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் காண்டம்

அன்னை தெரேசா காப்பியத்தின் இரண்டாம் காண்டமானது அன்னையின் பல்வேறு விதமான தொண்டுகளை விவரிக்கிறது. இக்காண்டம் 61 உட்தலைப்புகளைக் கொண்டது. இக்காண்டத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 308 ஆகும்.

மூன்றாம் காண்டம்

அன்னை தெரேசா காப்பியத்தின் மூன்றாம் காண்டத்தில் உலகத் தலைவர்கள் அன்னையைப் பாராட்டியமை பற்றியும், அன்னை பெற்ற பல்வேறு பட்டங்கள் குறித்தும் விளக்கப் படுகின்றது. இக்காண்டத்தில் 102 உட்தலைப்புகள் உள்ளன. மூன்றாம் காண்டத்தில் 239 பாடல்கள் உள்ளன.

நூலின் நோக்கம்

அன்னை தெரேசா காவியத்தை ஆசிரியர் பாடுவதற்கான நோக்கத்தை நூற்பொருள் என்னும் உட்தலைப்பில் கூறுகிறார். மண்ணில் வாழ்கின்ற உயிர்களுக்குத் தொண்டு செய்வதில் அன்னைத் தெரேசாவைப் போல வேறு யாரும் இல்லை என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காக இந்நூலைப் படைத்தாக,

> **மானுண்டு; மயிலும் உண்டு;**
> **மதியுண்டு; வானம் உண்டு;**
> **தேனுண்டு மகிழ்வண் டைப்போல்**
> **திளைத்திட எழில்கள் உண்டு;**
> **நானுண்டு தொண்டுண் டென்றே**
> **நாளெல்லாம் உழைக்க அன்னை**
> **தானுண்டு புவியில் என்றே**
> **தமிழினால் பாட வந்தேன்!** (ப.18)

என்னும் பாடலின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

இலக்கியப் புலமை

அன்னை தெரேசா காவியத்தைப் படிக்கும் போது ஒரு சிறந்த இலக்கியத்தைப் படிப்பது போன்ற உணர்வு

வாசகர்களுக்கு ஏற்படுகிறது. இதற்கு ஆசிரியரின் தமிழ் இலக்கியப் புலமையே காரணமாகும். தமிழகத்தின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடும்போது,

கடையெழு வள்ளல் வாழ்ந்த
கவின்மிகு தமிழகம் (ப. 259)

என்று கடையெழு வள்ளலைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மேலும்,

பையவே மலைப் பக்கத்தில்
படர்ந்த ஓர் கொடிமுல்லையைக்
கையினால் ஏந்தித் தேர்மேல்
கருணையினால் படர விட்டான் (ப. 259)

என்று வள்ளல் பாரியைப் பற்றியும்,

கார்முகில் பெருக்கம் கண்டு
கவின்தோகை விரித்தே ஆடி
நேர் வந்த மயிலுக்குள்ளம்
நெகிழ்ந்தவன் பேகன் (ப. 260)

என்று பேகனைப் பற்றியும் குறிப்பிடுகிறார். சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளல்களின் இயல்புகள் பற்றியும், வறியவர்கள், புலவர்கள், பாணர்கள், பொருநர்கள், கூத்தர்கள், செல்வநலம் இல்லாத மனிதர்கள் இவர்களுக்கெல்லாம் கொடுத்து உதவி செய்தவர்களே வள்ளல்கள் என்ற இலக்கியச் செய்தியையும் தன் நூலில் குறிப்பிடுகிறார். மேலும் அமெரிக்காவிற்கும் ஈராக்கிற்கும் போர் தொடங்குவதை அறிந்து அவர்களுக்குக் கடிதம் எழுதுவதாக அமைந்திருக்கும் பகுதியில் சங்க இலக்கிய நிகழ்வுகள் மூலம் சமாதானத்தை வேண்டுகிறார். நெடுங்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் நடக்க இருந்த போரை கோவூர்கிழார் தடுத்து நிறுத்தியதைப் போன்றும் தொண்டைமான் திரையனுக்கும் அதியனுக்கும் நடக்கவிருந்த போரை ஔவையார் தமது கடிதத்தின் மூலம் தடுத்து நிறுத்தியதையும் எடுத்துக்காட்டி அதைப்போன்று அன்னை தெரேசா அமெரிக்க ஈராக் போரைத் தடுத்து நிறுத்தியதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். மேலும், வாடிய பயிரினைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்னும் வள்ளலாரின் கருத்தினையும், மனம் நெகிழ்ந்து ஆருயிர்க்கு அன்பு செய்ய வேண்டும் என்ற சித்தர் கருத்தையும், உலகத்தில் உள்ளவர் அனைவரும் உறவினர் என்று கூறிய கணியன் பூங்குன்றனார்

கருத்தையும் தன்னுடைய காவியத்தில் கூறியிருக்கிறார். இவ்வாறு பல்வேறு இலக்கியங்கள் கூறும் செய்திகளைச் சொல்லும் இலக்கிய அறிவு நிறைந்தவராகக் காப்பிய ஆசிரியர் திகழ்கிறார்.

தலைவர்கள், மகான்கள் பற்றிய செய்திகள்

துரை. மாலிறையன் தலைவர்களைப் பற்றியும், மக்களுக்கு முன் மாதிரியாக வாழ்ந்த மகான்களைப் பற்றியும் அன்னை தெரேசா காவியத்தில் கூறுகிறார். வாய்மையைத் தன் பண்பாகக் கொண்டவர் காந்தி என்றும், பன்னரும் பெருமை சான்றவர் காமராசர் என்றும், பேரறிவு உடையவர் அறிஞர் அண்ணா என்றும் குறிப்பிடுகிறார். இது தவிர மக்களை நல்வழிப்படுத்தும் மகான்களான புத்தர், மகமது நபி, வள்ளலார், ராமகிருஷ்ணர் ஆகியவர்களைப் பற்றியும் தம் காவியத்தில் எடுத்துக்காட்டி இருக்கிறார். புத்தரைப் பற்றி,

> ஆட்டுக்கும் மனம் திறந்த
> ஐயனாம் புத்தன் போல் (ப.113)

என்றும்,

> புல்லிய செயலைச் செய்து
> புகழ்பெற நினைத்தி ருக்கும்
> நல்லியல் பில்லா தார்க்கும்
> நயந்தன்பு காட்டி விட்ட
> கல்லினைத் தள்ள வந்த
> கயவர்க்கும் கை கொடுத்த
> மல்லிகை மனத்தார் ஆன
> முகமது நபிபோல் (ப.133)

என்று முகமது நபியின் பண்பையும்,

> பெண்மையே தெய்வம் என்னும்
> பெருமையை உலகம் போற்றும்
> உண்மையை உரிமை தன்னை
> உயர்வினை உளத்தில் ஏந்தித்
> தண்மையைத் தாங்கி வந்த
> தலைமை சேர் சக்தி என்னும்
> நுண்மையை உணரச் செய்தார்
> நோற்ற ராம் கிருஷ்ணர் தாமே! (ப.99)

என்று ராமகிருஷ்ணர் பற்றியும்,

வாடிடும் பயிரைக் கண்டால்
வாடிடும் உள்ளம் கொண்டே
நீடிடும் பசிநோய் போக்கும்
நெடும்பணி புரிந்தார்; அன்பால்
பாடிடும் அருள்உள் ளத்தார்
பார்புகழ் இராமலிங்கர்
தேடிடும் அருள்நெறிக் கண்
திகழ்ந்தவர் அவரே அன்றோ? (ப.260)

என்னும் பாடல் வாயிலாக வள்ளலார் பற்றியும் தன் காவியத்தில் அழகாக எடுத்துக்காட்டுகிறார்.

உவமைச் சிறப்பு

அன்னை தெரேசா காவியத்தில் இலக்கியநயம் நிறைந்த உவமைகள் பல புனையப்பட்டுள்ளன. இந்த உவமைகளின் வழியே தாம் கூற விரும்பும் கருத்தைத் தெளிவாகவும் சிறப்பாகவும் படிப்போர் மனங்களில் பதிய வைப்பதில் கவிஞர் பெரு வெற்றி பெற்றுள்ளார் எனலாம்.

தூண்டிலைப் போட்டு மீனைத்
தோண்டியில் நிரப்புவார் போல் (ப.31)

என்னும் பாடல் அடிகளில், தூண்டிலைப் போட்டு மீனைப் பிடித்துத் தோண்டியில் நிரப்பும் மனிதர்கள், சுயநல வாழ்வுக்காகப் பொருள் சேர்க்கும் மனிதர்களுடன் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளனர். தாம் வேண்டும் சுயநல நன்மைக்காக வெளியில் தொண்டு செய்யும் மனிதர்கள், தாம் சேர்த்த பொருளில் ஆண்டவனுக்கும் சிறிது பங்களித்து ஆறுதல் தேடிக் கொள்வதாகக் கவிஞர் காட்டுகிறார்.

மீட்டாரைத் துறந்த நம்யாழ்
மிகுநலம் இழந்ததைப் போல்
நாட்டார்முன் பாரதம் தான்
நலமிழந்திருக்கக் கண்டார் (ப.22)

என்ற அடிகளின் மூலம், மீட்டுபவர் இல்லாமல் நலமிழந்த யாழ் போலப் பாரதமும் காப்பவர் இல்லாமல் வளமிழந்ததாகக் கவிஞர் சுட்டுகிறார்.

மணிமாலைத் தொங்கலைப் போல்
வழிந்தோடும் பனிநீர் ஓட்டம் (ப.24)

என்று ஆல்ப்ஸ் மலையின் இயற்கைத் தோற்றத்தை வருணிக்கிறார். பின்வரும் உவமைத் தொடரிலும் ஆல்ப்ஸ் மலையின் அழகைக் கவித்துவத்துடன் கவிஞர் பாடுவது போற்றத்தக்கதாகும்.

வெள்ளித் தட்டொன்றில் வைத்த
வெள்ளி வைரக் கோவை
துள்ளிக் கீழ்ச் சிதறுதல் போல்
தோன்றிடும் ஆல்ப்சு குன்றம் (ப. 26)

என்று ஆல்ப்ஸ் மலையைக் கவிஞர் போற்றுகின்றார். அன்னையின் இயல்பினை உவமைகளின் மூலம்,

அருளெலாம் உருக்கொண்டாற்போல்
அன்னையும் உருவெடுத்தார்
இருளெலாம் நீக்கத் தோன்றும்
எழிற்கதிர்ச் சூரியன்போல்
பெரும்பணிக் கதிர்கள் நீட்டிப்
பேணியே வறுமை போக்கி
ஒருமணி என ஒளிர்ந்தார்
உயர்த்திடும் தொண்டினாலே! (ப.142)

என விவரிக்கின்றார். அருள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து உருவம் பெற்றதைப் போன்று அன்னை உருவெடுத்ததாகப் பாடுவது சிறப்புடையதாக அமைந்துள்ளது. பின்வரும் பாடலில் காணப்படும் அடுக்கு உவமைகள் மூலமும் அன்னையின் பெருமையைக் கவிஞர்,

காட்டுத்தீ பரவும் போது
கடுமழை பெய்தல் போலும்
வீட்டுக்குள் பசித்தீ போக்க
விரைந்திடும் வள்ளல் போலும்
நாட்டுக்குள் இயற்கை சீறின்
நலஞ்செயும் படைஞர் போலும் (ப.36)

எனக் காட்டுகிறார். உலக மக்களைக் காத்து யாவருக்கும் நன்மை செய்து வாழப் போகிறவராகக் குழந்தையாகப் பிறந்த அன்னையைத் தேவர்கள் வாழ்த்திச் செல்வதாகக் கவிஞர் உவமைப்படுத்துகிறார். இக்காவியத்தில் தனிச்சிறப்பான உவமைகளுக்குப் பின்வருவனவற்றைச் சான்றுகளாகக் கொள்ளலாம்:

1. கவ்விய இருட்டுள்ளத்தில் கவின் விளக்கேற்றுதல் போல் *(ப.19)*
2. மணிமாலைத் தொங்கலைப் போல் *(ப. 24)*
3. பாலாவி எழுதல் போல *(ப.25)*
4. கூண்டிலே கிளிபோல் சென்று கூடுவார் நூலகத்தில் *(ப.39)*
5. செவ்வானம் நீங்கிப் பின்னே சீரொளி பரவுதல் போல *(ப.45)*
6. இடிக்கிடி தோன்றுகின்ற ஈடிலா மின்னலைப் போல் *(ப. 76)*
7. களத்தினில் நெல்லைக் கண்டு களிப்புறும் உழவன் போல் *(ப. 89)*
8. இருளினை கிழித்துக் கொண்டே எழுகின்ற சூரியன் போல் *(ப. 107)*
9. வைக்கோற் போர்க்குள்ளே ஓணான் மறைதல் போல் *(ப. 113)*
10. வானத்தில் வெண்முகில் போல *(ப. 260)*
11. சூரியன் இருளைப் போக்கச் சுடரொளி பரப்புதல் போல *(ப. 262)*
12. ஆலையில் கரும்பு போல் *(ப. 262)*
13. பழங்களை நினைக்கும் போது பழச்சுவை உணர்வதைப் போல *(ப.266)*
14. வடுவிலாத் திங்கள் அன்ன *(ப. 267)*
15. தேனிட்ட கூட்டின் மேலே தீப்பந்தம் காட்டுதல் போல் *(ப.315)*
16. எறும்பு போல் சுறுசுறுப்பே; எருதுபோல் உழைப்பே *(ப. 324)*

கவிஞர் துரை. மாலிறையன், புதுப்புது உவமைகளைப் பயன்படுத்தி அன்னையின் பெருந்தொண்டைப் படிப்பவர் நெஞ்சில் பரப்புகிறார். கவிஞர் கூறவரும் கருத்தைத் தெளிவுபடுத்துவதற்கு, இந்த உவமைகள் சிறப்பாகப் பயன்பட்டுள்ளன எனலாம்.

வருணனைகள்

ஆசிரியர் தன்னுடைய காவியத்தில் பல இடங்களில் பண்பை விளக்குவதற்காகவும் நிகழ்ச்சிகளை கூறுவதற்காகவும் வருணனைகளைப் பயன்படுத்தினாலும் ஆல்ப்சு மலையின்

இயற்கைத் தோற்றத்தை வருணிக்கும் போது மிக அழகாக வருணிக்கின்றார்.

வெள்ளியை உருக்கி வார்க்கும்
வெளியிது தானோ ? அன்றி
ஒள்ளிய மணிக் குப்பையின்
ஒங்கலோ ? வெயில்மேல் பட்டுத்
துள்ளிய மீன் கூட்டத்தின்
தொகுதியோ ? என நினைக்க
வெள்ளிய ஆல்ப்சுக் குன்றம்
விளங்கிடும் ஐரோப்பாவில் (ப.24)

என்னும் இப்பாடல் ஐரோப்பாவில் விளங்கும் ஆல்ப்சு மலையானது வெள்ளியை உருக்கி வார்த்தெடுக்கப்பட்டதோ அல்லது ஒளிபொருந்திய நவமணிகளின் கூட்டமே ஒளியாக உள்ளதோ அல்லது வெயில் மேல் பட்டு மின்னித் துள்ளும் மீன் கூட்டமோ என ஐயுறும் வண்ணம் ஒளியோடு திகழ்ந்தது என வருணிக்கின்றது. வெள்ளித் தட்டொன்றில் வைத்த வெள்ளிய வைரக் கோவை போன்ற ஆல்ப்சு மலையின் அழகைக் கண்ட மக்கள், அங்கேயே தங்குவார்கள். ஏனென்றால்,

ஓடுதல் பனிமேல்; மக்கள்
உறங்குதல் பனிமேல்; பிள்ளை
ஆடுதல் பனிமேல்; வீட்டை
அமைப்பதும் பனிமேல்; ஒன்று
கூடுதல் பனிமேல்; கல்விக்
கூடமும் பனிமேல்; என்றும்
நீடுதல் பனியே என்றால்
நிற்றலும் பனிமேல் தானே ! (ப.26)

என்று அதனுடைய தோற்றச் சிறப்பை வருணிக்கின்றார். இத்தகையச் சிறப்புமிக்க ஆல்ப்சு மலையினை துரை. மாலிறையன் ஒன்பது பாடல்களில் வருணனை செய்கிறார்.

இன்றைய உலகின் நிலை

கவிஞர் துரை. மாலிறையன் தம் காவியத்தில் இன்றைய நாட்டின் நிலையையும், மக்களின் நிலையையும் அழகாகக் கூறுகிறார். குமரிக் கண்டம் கடல்கோளால் அழிந்தது போல், தற்பொழுது தமிழ்நாட்டின் பெருமையும் அழிந்து விட்டது; பண்பாடும் படுத்துவிட்டது என்று கூறுகிறார்.

அறியாமை, மூடச் செய்கை
அளவின்றிப் பெருகி, நன்மை
புரியா மைஉளத்த வர்கள்
புலையாமை போல் மறைந்து
விரியா மைஉள்ளத் தாலே
விளைத்தஅத் தீமை தன்னை
அறியா மைந்தரேஇந் நாட்டில்
ஆங்காங்கே தோன்றி னாரே! (ப.22)

என்னும் பாடலில் தீமை செய்கிறவர்களை அறியாத மைந்தர்களே இந்நாட்டில் தோன்றுகிறார்கள் என்றும், மூடச் செயல்களும் நாட்டில் பெருகிக் கிடக்கின்றன என்றும் கூறுகிறார். இவ்வாறு மக்கள் ஒருபுறம் இருக்க மற்றொரு புறமோ,

ஊரெலாம் பகைமை; வாழ்வின்
ஊடெலாம் வறுமை; செய்கை
வேரெலாம் சீறும் வெம்மை;
விளைவெலாம் சிறுமை

என்று காணப்படும் நம் ஊரில் வாழ்பவர்களில் பலர் எலும்புகள் போர்த்திய வெற்றுடம்பே என்று கூறுகிறார். இவ்வாறு நம் நாட்டில் உள்ள மக்களைப் பற்றியும் இன்றைய நம் நாட்டின் நிலையைப் பற்றியும் எடுத்துரைக்கிறார்.

பண்புகளும் தொண்டுகளும்

ஒரு மனிதனுக்குத் தாயைக் காட்டிலும் சிறந்த உறவு வேறு இல்லை என்பார்கள். உலக உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்கியவர் அன்னை அவர்கள்.

புரட்சியே மிகுந்த நெஞ்சும்
புகழதே பெருக்கும் மூச்சும்
உரமிகு செய்கை தாமும்
உண்மையே பேசும் நாக்கும்
இரவிலும் பகலும் எந்த
இமைப்பிலும் இயேசு நோக்கும் (ப. 29)

என்னும் இத்தனை பண்புகளையும் தனக்குள்ளேக் கொண்டவர். அன்னையின் தொண்டினைக் குறிப்பிடும் போது ஆசிரியர்,

அன்பினால் பண்பை ஊட்டி
ஆர்வத்தால் அறிவை ஊட்டி

மன்பெருந் திறமை யாலே
மாணவர்க்கு ஒழுக்கம் ஊட்டி
என்பையும் எளியார்க்கு ஈயும்
எண்ணமாம் அன்பை ஊட்டி
பொன் பொருள் யாவை முன்னும்
புகழ் பெறும் கல்வி தந்தார் (ப.68)

என்று கூறுகிறார். அனாதைக் குழந்தைகளுக்குக் கல்வியைத் தருவதற்காக அவர் அடைந்த இன்னல்களோ மிக அதிகம். மானுடம் சிறப்பதற்காக அன்னை ஊன், உடல், உயிர் பற்றி எவ்வகைக் கவலையும் கொள்ளாமல் வாழ்வில் உழைத்தார். அன்னையின் எளிமையினை,

கஞ்சியே குடிப்பார்; அந்தக்
கஞ்சியும் ஏழைக்(கு) ஏதென்(று)
அஞ்சியே குடிப்பார்; மானம்
அதுகாக்க வெண் பருத்திப்
பஞ்சினால் ஆடை கூடப்
பாராதார் இருக்கும் போது
மிஞ்சிஓர் இழையும்கூட
மன்மையாய் அணிந்ததில்லை (ப.326)

என்னும் பாடலின் மூலம் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். சேரியில் முதலில் பணியைத் தொடங்க ஆரம்பித்தார். தான் பிறரிடம் சென்று கேட்டதன் மூலமும், பலர் செய்த உதவியினாலும் குழந்தைகளுக்குக் கல்வி கொடுத்தார். அதன் பிறகு நிர்மல் இதயம் என்ற பெயரில் முதியோர் இல்லம் ஆரம்பித்தார். மதவேறுபாடு காட்டாமல் அனைவருக்கும் தொண்டு புரிந்தார். கல்கத்தாவில் குழந்தைகள் காப்பகத்தைத் தொடங்கினார். திட்டகாரில் தொழுநோயர் இல்லம் ஒன்றை ஆரம்பித்தார். பல வித இன்னல்கள் பட்டு பொருளில்லாமல் தவிக்கின்ற சூழ்நிலையிலும் பல மனித நேயம் உள்ளவர்கள் அவருக்கு அருளிய உதவியினால் தொண்டுகளைத் தொடர்ந்து செய்தார். ஆங்காங்கே ஆதரவற்றவர்களுக்கு ஆதரவு கொடுத்த அவருடைய பெருமையையும், தியாகத்தையும் உணர்ந்து பலரும் அன்னைக்கு விருது வழங்கினார்கள். 'தொல்லைக்கும் துன்பத்திற்கும் சோர்வு தோன்றாத அன்புப் பார்வையே அன்னையின் பார்வை' என்று ஆசிரியர் கூறுகிறார்.

விருதுகளும், பட்டங்களும்

அன்னை செய்த தொண்டுகளுக்குப் பலனாக விருதுகள் பெற்றார் என்று கூற முடியாது. ஏனென்றால் அவர் ஆற்றிய

தொண்டுகளுக்கு எப்பலனையும் பதிலாகக் கொடுக்க முடியாது. இருந்த போதிலும் அவரைக் கௌரவப்படுத்தும் முறையில் பல விருதுகள் வழங்கப்பட்டன. அவர் நேரு விருது, தெம்பிள்டன் விருது, அசிசி சவேரியார் பரிசு, ஆல்பிரட் சுவைசர் பன்னாட்டு விருது, இங்கிலாந்து அரசின் தலைசிறந்த குடிமகள் விருது, பாலுசான் விருது, நோபல் பரிசு, பாரத ரத்னா விருது, சோவியத்து நாடு இதழின் 'நேரு புகழ்ப் பரிசு' போன்ற ஏராளமானப் பரிசுகளைப் பெற்றார். மேலும் இவர் இந்தியத் தாயின் தவப்புதல்வி, உயரிய பெண்மணி போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளார்.

மனித நேயம்

இன்றைய உலகில் மனித நேயம் மிகவும் அடிப்படையானதும் தேவையானதுமாகும். அன்னை தெரேசா மனித நேயத்தின் வடிவாகவும், மானுட மேம்பாட்டின் ஆதாரமாகவும் வாழ்ந்தார்கள். பிறருக்கு உதவுவதற்காகவே தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்தார்கள். மனித நேயத்திற்கு ஒரு முன் உதாரணம் அன்னை தெரேசா அவர்கள். அன்னை ஏழை மக்களின் பசியைப் போக்கியது மட்டுமன்றி அவர்களது உடலில் காணப்படும் புண்களுக்கு மருந்து போட்டும், காதுகளில் வடியும் சீழைத் துடைத்தும் தாயற்ற குழந்தைகளுக்குத் தாயாக இருந்தும் அவர்களைக் காத்து வந்தார். அன்னையின் மனித நேயத்தை,

புண்மருந் திட்டுக் காத்தும்
    புதுத்துணிக் கட்டுப் போட்டும்
கண்மருந் திட்டுக் காத்தும்
    காதில்சீழ் துடைத்துக் காத்தும்
உண்மருந் திட்டுத் தீய்க்கும்
    உறுபசி போக்கிக் காத்தும்
மண்மருந்தாக அன்னை
    மலர்ந்திங்குத் தொண்டு செய்தார் *(ப.137)*

தாயற்ற குழந்தை கட்குத்
    தாயாகிக் காத்த தோடு
பாயற்ற ஏழை கட்கும்
    பாய்தந்தார்; உணவைத் தந்தார்
வாயற்ற ஏழையோர் தம்
    வயிலுற்ற பசியைப் போக்கத்
தாயுற்ற தவிப்பை எந்தத்
    தறிநாடா உற்ற தம்மா? *(ப.156)*

என்னும் பாடல்கள் வாயிலாக ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார். அன்னையின் மனித நேயம் மதங்களைக் கடந்தது.

> கிருத்தவர் தமக்கே அன்றிக்
> கேடுற்றார் அனைவருக்கும்
> மருத்துவம் மன அமைதி
> மகிழ்வொடும் கலந்து தந்தார்;
> பெருத்தவர் முசுலீம் இந்து
> பேணிடும் சமணர் புத்தர்
> ஒருத்தரும் விட்டு விடாமல்
> ஒழுங்குறப் பணிகள் செய்தார் (ப.130)

என்னும் பாடலில் அன்னை தெரேசாவின் மதங்களைக் கடந்த மனித நேயத்தை அறியமுடிகிறது. கிறித்தவர் என்றில்லாமல் எந்த மதத்தவருக்கும் உதவி செய்பவர் அன்னை தெரேசா அவர்கள். ஆதலால் தான் அவர் அன்னையாக விளங்குகிறார். ஏழை மக்களின் அன்னை என்று சொல்வதிலேயே மனித நேயம் நிறைந்துள்ளது.

தமிழ்ப்பற்று

காப்பிய ஆசிரியர் துரை. மாலிறையன் தமிழ்ப்பற்று மிக்க ஓர் தமிழறிஞர். இவர் தமிழாசிரியர் என்பதால் இயற்கையிலே இவரிடம் தமிழ்ப்பற்று அதிகமாக நிறைந்திருந்தது. இதனால் இவர் தமது தமிழ்ப் பற்றினைக் காவியத்தின் பல இடங்களில் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகிறார். அமிழ்தமாகிய தமிழ் மொழியைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'வெல்தமிழ்' 'செந்தமிழ்' என்றும், 'தக தக என ஒளிரும் தமிழ்மொழியே' என்றும் குறிப்பிடுகிறார். அன்னை வளர்வதைக் குறித்துக் கூறும் போது,

> செந்தமிழ் வளர்தல் போலச்
> செவ்வணம் வளர்ந்தார் (ப.30)

என்று எடுத்துரைக்கிறார். அன்னையின் சொற்களைக் கேட்டவர்க்கு ஆர்வம் பெருகும் என்பதை உணர்த்துவதற்கு ஆசிரியர்,

> தாய்த்தமிழ் மொழியே இந்தத்
> தமிழ்நாட்டை ஆளும் என்னும்
> வாய்மொழி கேட்ட போதே
> மகிழ்ந்தெழும் தமிழ்த் தொண்டர் போல் (ப.110)

என தன்னுடைய காவியத்தில் பயன்படுத்தியிருக்கின்ற இவ்வடிகள், தமிழ்மொழி மீது இவர் கொண்ட பற்றையும், தமிழ்மொழியே நாட்டை ஆள வேண்டும் என்ற இவரது வேட்கையையும் தெளிவாக உணர்த்துகின்றன.

மனித குலத்தில் பெண்ணாகப் பிறந்து, இறைவனுக்குச் செய்யும் தொண்டாக மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றி, அழியாத புகழுக்குரிய அன்னை தெரேசாவின் பெருமையைப் பாடும் தனிச்சிறப்புக்குரியது அன்னை தெரேசா காவியமாகும். காவியத் தலைவியாக அன்னையைத் தெரிந்து கொண்ட கவிஞர், அன்னையின் பொது வாழ்வைப் பாடுவதற்கே காவியத்தில் முதன்மை அளிக்கிறார். இதிலிருந்து சமூகத்தின் பொது நன்மைக்காகவே தனிமனிதனின் வாழ்க்கை அர்ப்பணிக்கப் படல் வேண்டும் என்னும் அடிப்படையான உயரிய கருத்தை இக்காவியம் வலியுறுத்துகின்றது. அன்னையைப் போன்று வாழ்நாள் முழுவதும் பிறருக்கு உதவாவிடினும், ஒரு சில நாட்களாவது பிறருக்கு உதவ வேண்டும் என்ற உந்துதலையும், வாழ்ந்துவிட வேண்டும் என்ற உயிர்த் துடிப்பையும் படிப்போரிடம் ஏற்படுத்துவதில் இக்காவியம் பெரு வெற்றி பெற்றுள்ளது எனக் கூறலாம்.

25. திருத்தொண்டர் காப்பியம்

கிறித்தவக் காப்பியங்களுள் இறை அடியவர்களைத் தலைமை மாந்தர்களாகக் கொண்ட காப்பியங்கள் இரண்டு. அவை அன்னை தெரேசா காவியம், திருத்தொண்டர் காப்பியம் எனபனவாகும். சூ. இன்னாசி எழுதப்பட்டு 2008 ஆம் ஆண்டு வெளிவந்த திருத்தொண்டர் காப்பியம் அனைத்து சிறப்பம்சங்களையும் ஒருங்கே உடையதாகவும், கிறித்தவக் காப்பியங்களுக்கு முன்மாதிரியாகவும் விளங்குகிறது. இன்னாசியின் அரிய புலமையும் உழைப்பும இக்காப்பியம் மூலம் வெளிப்படுகிறது. திருத்தக்கத் தேவர், கம்பர், சேக்கிழார் என்னும் காப்பியப் புலவர்களின் மரபில் விருத்தப்பாக்களால் இன்னாசி பாடியிருப்பது அவரது நுண்மாண் நுழைபுலச் சிறப்பைப் புலப்படுத்துகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இரத்த சாட்சியாக மரித்த தேவசகாயம் நீலகண்ட பிள்ளையின் வரலாற்றைக் காப்பிய வடிவில் ஆசிரியர் வடித்திருக்கும் பாங்கு போற்றத்தக்கது.

ஆசிரியர் வரலாறு

சூ.இன்னாசி அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயம் என்னும் பகுதியின் அருகிலுள்ள வயலோகம் என்னும் ஊரில் சூசையா பிள்ளை-லூர்தம்மாள் தம்பதியினருக்கு 1934ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ஆம் நாள் பிறந்தார். திருமயத்திலுள்ள ஸ்ரீசத்தியமூர்த்தி செகண்டரி பள்ளியில் தம் கல்வியைத் தொடங்கினார். தேவகோட்டை தே பிரித்தோ உயர்நிலைப் பள்ளியில் 1951ஆம் ஆண்டு பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1953ஆம் ஆண்டு புதுக்கோட்டை அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தார். ஊனையூர் திருக் கண்ணண் பாடசாலையில் 1955ஆம் ஆண்டு சூன் மாதம் 30ஆம் நாள் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பேச்சுக் கலையினைப் பரப்பும் நல்லெண்ணத்துடன் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றத்தை ஏற்படுத்தினார். 1959ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் நாள் காரைக்குடி பகுதியைச் சேர்ந்த செசிலி மேரி அம்மையாரைத் திருமணம் செய்தார். பின்னர் வித்துவான், இளங்கலைப் பட்டங்களைப் பெற்றார். பின்னர் காரைக்குடி, விராலிமலை ஆகிய இடங்களில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியராகவும், இலுப்பூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில்

முதனிலைத் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். இச்சூழலில் முதுகலைப் பட்டம் பெற்றார். பின்னர் பாளையங் கோட்டையிலுள்ள தூய சவேரியார் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பொறுப்பேற்றார்.

வீரமாமுனிவரின் சதுரகராதியில் ஆய்வு செய்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் வாயிலாக முனைவர் பட்டம் பெற்றார். தூய சவேரியார் கல்லூரியில் 1981 முதல் 1983 வரை தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். இவருக்கு 1981ஆம் ஆண்டு தேம்பாவணி நாவலர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. 1983ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறையின் தலைவராகப் பொறுப்பேற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக 1994ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதுமுனைவர் பட்டம் பெற்றார். பல தேசிய கருத்தரங்கங்களையும் அறக்கட்டளைச் சொற்பொழிவு களையும் நிகழ்த்தியுள்ளார். இவரது மேற்பார்வையின் கீழ் பலர் முனைவர் பட்டமும் எம்பில் பட்டமும் பெற்றுள்ளனர். 1994இல் ஓய்வுபெற வேண்டிய இவர், சென்னைப் பல்கலைக்கழகம் பணி நீட்டிப்பு வழங்கியமையால் 1999ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

இவர் திட்டூர் தேசிகரின் இலக்கியங்கள் பலவற்றைப் பதிப்பித்துள்ளார். கிறித்தவ இலக்கியக் களஞ்சியம், திருத்தொண்டர் காப்பியம் ஆகியவை இவரது படைப்புகளில் மிகவும் முதன்மையானவைகளாகும். இலக்கணம், மொழியியல், அகராதி, இலக்கியம், திறனாய்வு, ஒப்பாய்வு, கவிதை, நாடகம், சிறுகதை, வாழ்வியல், பதிப்பியல் போன்ற பல்துறைப் புலமை சான்றவர். கிறித்தவ இலக்கிய ஆய்வுகளில் முழுமையான ஈடுபாடு கொண்டு இறை பக்தி உடையவராகவும், நேர்மையாளராகவும், அன்பானவராகவும் வாழ்ந்து வந்த இன்னாசி அவர்கள் 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ஆம் நாள் தமது 76ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

தொடக்கப் பள்ளி ஆசிரியராக இருந்து, பல்கலைக்கழகப் பேராசிரியராக வளர்ச்சியடைந்து, பல நாடுகளுக்கும் சென்று கிறித்தவ இலக்கியம் குறித்து விரிவான உரையாற்றி, 70 க்கும் அதிகமான நூல்களைப் படைத்தமைக்கு உண்மை, உழைப்பு, நேரம் தவறாமை ஆகிய மூன்றினையும் தமக்குத் தாமே

உருவாக்கிக் கொண்டு, அவற்றின்படி செயல்பட்டதுதான் காரணம் என்பது முற்றிலும் உண்மை.

காப்பியக் கதை

தேவசகாயம் பிள்ளையின் வரலாறு பல்வேறு வடிவங்களில் வெளிவந்திருந்தாலும் மரபு வழியான காப்பிய இலக்கணத்தைப் பின்பற்றி பெருங்காப்பிய வடிவில் திருத்தொண்டர் காப்பியம் படைக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நட்டாலம் என்னும் ஊரின் அருகிலுள்ள மருதங்குளக்கரை என்னுமிடத்தில் வாசுதேவன் நம்பூதிரி-தேவகி தம்பதியினருக்கு நீலகண்ட பிள்ளை மூத்த மகனாகப் பிறந்தார். நீலகண்ட பிள்ளை மேக்கோடு என்னும் ஊரிலுள்ள பார்க்கவி அம்மையாரைத் திருமணம் செய்தார். நீலகண்ட பிள்ளை உதயகிரிக் கோட்டையில் தங்கியிருந்த வீரர்களுக்கு ஊதியம் வழங்கும் பொறுப்பிலிருந்தார். இச்சூழலில் உதயகிரிக் கோட்டையிலிருந்த டச்சு வீரர் டிலனாயின் தொடர்பு கிடைத்தது. மனத்துன்பத்திலிருந்த நீலகண்ட பிள்ளைக்கு டிலனாய் விவிலியச் செய்திகளைக் கூறி ஆறுதல் படுத்தினார். இது நீலகண்ட பிள்ளையின் மனதில் மாறுதலை ஏற்படுத்தியது. பின்னர் வடக்கன்குளத்தில் பரஞ்சோதி அவர்களால் தேவசகாயம் என ஞானஸ்நானம் பெற்றார். தேவசகாயம் என்னும் பெயருடன் பிள்ளை என்னும் பெயரும் சேர்ந்து தேவசகாயம் பிள்ளை என அழைக்கப்பட்டார். பின்னர் இவரது மனைவி ஞானப்பூ என்னும் பெயரால் ஞானஸ்நானம் பெற்றார்.

தேவசகாயம் பிள்ளை கிறித்தவராக மாறிய பின்னர் புலியூர்க் குறிச்சியில் வாழ்ந்து வந்தார். இச்சூழலில் தேவசகாயம் 1749ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் நாள் கைது செய்யப்பட்டு, மூன்று ஆண்டுகள் கைதியாகவே வாழ்ந்து வந்தார். திருவிதாங்கூர் அரசர் மார்த்தாண்ட வர்மா நேரடியாகவே விசாரணை செய்து மீண்டும் இந்து மதத்திற்கு வர வற்புறுத்தினார். ஆனால் தேவசகாயம் பிள்ளை அதற்கு இணங்கவில்லை. கிறித்தவ சமயக் கொள்கைகளையும் அதன் சிறப்புகளையும் தன்னைச் சார்ந்தவர்களுக்குச் சொல்லி வந்தார். தேவசகாயம் பிள்ளை மேலதிகாரிகளிடம் அனுமதி பெறாமல் வடக்கன்குளத்தில் ஆலயம் கட்ட கடுக்கரை மலையிலிருந்து

தேக்கு மரங்களை வெட்டி ஆரல்வாய்மொழி வழியாக வடக்கன்குளத்திற்கு அனுப்பி வைத்தார். இதுவும் அவர் மேல் சுமத்தப்பட்ட குற்றங்களுள் ஒன்று.

முதல் விசாரணையில் தேவசகாயம் பிள்ளைக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் அரசரின் கருணையால் அது சிறைத் தண்டனையாக மாற்றப்பட்டது. தேவசகாயம் பிள்ளைக்கு ஒவ்வொரு நாளும் 30 கசையடி கொடுக்கப்பட்டது. இவர் விசாரணைக் கைதியாக இருந்த போது பல ஊர்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு துன்புறுத்தப்பட்டார். இறுதியில் ஆரல்வாய்மொழிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள சிறையில் 17 நாட்களுக்கு மேலாக அடைத்து வைக்கப்பட்டிருந்தார். 1952ஆம் ஆண்டு சூன் மாதம் 14 ஆம் நாள் ஆரல்வாய்மொழியிலுள்ள காற்றாடி மலைக்கு அவரை அழைத்துச் சென்று துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். காற்றாடி மலையில் கிடந்த அவரது உடலை அவ்வழியாக வந்தவர்கள் கோட்டாற்றுக்கு எடுத்துச் சென்று சவேரியார் கோவில் பங்கு தந்தையிடம் ஒப்படைத்தனர். தேவசகாயம் பிள்ளையின் உடல் கோட்டாறு சவேரியார் கோவில் வளாகத்தில் நல்லடக்கம் பண்ணப்பட்டது.

அமைப்பும் பகுப்பும்

திருத்தொண்டர் காப்பியம் இளமைக் காண்டம், தலைமைக் காண்டம், பொறுமைக் காண்டம், இறைமைக் காண்டம் என்னும் நான்கு காண்டங்களைக் கொண்டது. ஒவ்வொரு காண்டமும் பத்துப் பத்துப் படலங்களைக் கொண்டு நாற்பது படலங்களாக அமைந்து 4135 பாடல்களைக் கொண்டுள்ளது. திருத்தக்க தேவர், கம்பர், சேக்கிழார் என்னும் தமிழ்க் காப்பியப் பெரும் புலவர் வழியில் விருத்தப் பாக்களையே கொண்ட இக்காப்பியம், முன்னையோரின் காப்பியப் பாதையிலேயே செல்வது ஆசிரியரின் தனித்தன்மையை நிலைநாட்டுகின்றது.

1. இளமைக் காண்டம்

இளமைக் காண்டம் நாட்டுப் படலம், நகரப் படலம், குலமுறைப் படலம், அகநெறிப் படலம், பொழிலுறு படலம், திருமணப் படலம், ஊடலுவகைப் படலம், ஆட்சிப் படலம், பணிசேர் படலம், அறவுரைப் படலம் என்னும் பத்துப்

படலங்களை உடையது. இளமைக் காண்டத்தின் முதற் பகுதியில் பாயிரம் அமைந்துள்ளது.

நாட்டுப் படலம் நீலகண்ட பிள்ளையின் சொந்த நாடான கன்னியாகுமரிப் பகுதியை விவரிக்கிறது. நகரப் படலம் நீலகண்ட பிள்ளையின் நகரத்தின் சிறப்பை விரித்துரைக்கிறது. குலமுறைப் படலம் நீலகண்ட பிள்ளையின் குலச் சிறப்பை விவரிக்கிறது. அகநெறிப் படலமானது தமிழும் விவிலியமும் காட்டும் அகப் பொருளின் சிறப்பினை விரித்துரைக்கிறது. ஐந்தாவதான பொழிலுறு படலம் தலைவனும் தலைவியும் களவு மேற்கொண்ட பொழிலுறு காட்சிகளை விரித்துரைக் கின்றது. திருமணப் படலம் நீலகண்ட பிள்ளையின் திருமண நிகழ்வுகளை விரித்துரைக்கிறது. ஊடலுவகைப் படலம் நீலகண்ட பிள்ளையின் இல்லற வாழ்வில் இன்பத்தைக் கூட்டும் ஊடல் மொழிகளை விளக்கும் பகுதியாகும். எட்டாவதான ஆட்சிப் படலம் அரசனின் ஆட்சிச் சிறப்பை விரித்துரைக் கின்றது. பணிசேர் படலம் நீலகண்ட பிள்ளை அரசனிடம் பணி செய்ய முற்படுவதைத் தெரிவிக்கிறது. அறவுரைப் படலம் நீலகண்டனுக்கு அரசன் கூறும் அறவுரைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இக்காண்டத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களின் மொத்த எண்ணிக்கை 1017 ஆகும்.

2. தலைமைக் காண்டம்

தலைமைக் காண்டம் என்னும் இரண்டாம் காண்டம் ஆள்வினைப் படலம், மனையமை படலம், மனமாறு படலம், கனவு காண் படலம், போர்களப் படலம், மதிலெழு படலம், பாராட்டுப் படலம், ஆற்றாமைப் படலம், திருக்குறுக்கைப் படலம், அருள்நீராட்டுப் படலம் என பத்துப் படலங்களைக் கொண்டது. ஆள்வினைப் படலம் அரசன் இட்ட பணிகளை நீலகண்டன் சிறப்பாக செய்த தன்மையினை விரித்துரைக்கிறது. மனையமைப் படலம், மன்னருக்கு புதிய மனை கட்டும் பொறுப்பை நிறைவேற்றிய செய்தியை விவரிக்கிறது. மனமாறு படலம் டிலனாயின் தொடர்பால் நீலகண்டன் விவிலியத்திலுள்ள அருங் கருத்துகளையும் செய்திகளையும் அறிந்து கிறித்தவத்தைப் பற்றிக் கொள்ள மனம் விரும்பும் நிலையை விவரிக்கிறது. கனவுகாண் படலம் விவிலியத்தில் கனவு பற்றி சீராக் ஆகமம் விவரிக்கும் செய்திகளையும் கனவின் பயனைக் கருவாகக் கொண்டு பழைய ஏற்பாட்டில் இடம்

பெறும் சூசையின் வரலாற்றையும் விளக்குகிறது. போர்க்களப் படலம் நீலகண்டன் பங்கு பெற்ற போர்க்களச் செய்திகளை விளக்குகிறது. மதிலெழு படலம் மதிலரண் அமைத்ததில் நீலகண்டனின் பணியை விவரிக்கிறது. பாராட்டுப் படலம் நீலகண்டன் ஆற்றிய பணிகளைப் பாராட்டி அரசன் செய்த சிறப்புகளைக் கூறுகிறது. ஆற்றாமைப் படலம் நீலகண்டன் மீது பொறாமை கொண்ட அமைச்சர்களின் செயல்பாடுகளை விவரிப்பதாக அமைந்துள்ளது. திருக்குறுக்கைப் படலம் டிலனாயின் மூலம் இயேசு கிறிஸ்து பட்ட பாடுகளையும் உயிர்த்தெழுந்த நிகழ்வினையும் நீலகண்டன் அறிந்து கொண்டதைக் கூறுகிறது. அருள் நீராட்டுப் படலம் நீலகண்டனுக்கு அருள் நீராட்டுப் பெற வேண்டும் என்னும் ஆசையைத் தூண்டும் பகுதியாக அமைந்துள்ளது. இக்காண்டத்தில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 1095 ஆகும்.

3. பொறுமைக் காண்டம்

மூன்றாம் காண்டமான பொறுமைக் காண்டமானது ஊர்சூழ் படலம், பழிதீர் படலம், முறையீடு படலம், குறையறி படலம், வழக்குரை படலம், எருமையூர் படலம், மறையுணர் படலம், ஞானப்பூ படலம், நீரூற்றுப் படலம், சிறைப்படு படலம் என்னும் பத்துப் படலங்களைக் கொண்டது. ஊர்சூழ் படலம் நீலகண்டன் கிறித்தவ மதத்திற்கு மாறியதால் ஊர் மக்கள் கூடி அரசனிடம் தெரிவிக்கத் திட்டமிடும் செய்திகளைக் கொண்டது. பழிதீர் படலம் மக்கள் அரசனிடம் தேவசகாயமாக மாறிய நீலகண்டன் மீது பழிகள் பல கூறி தங்கள் சினத்தைத் தீர்த்துக் கொள்ள முயலும் விவரங்களைத் தருகிறது. முறையீடு படலம் அரசவையில் உள்ளோருக்கு மக்கள் தேவசகாயம் பற்றி முறையிடுவது குறித்த செய்திகளை விவரிக்கிறது. குறையறி படலம் அரசன் தேவசகாயம் பிள்ளையைப் பற்றி சொன்ன குறைகளை உணர்கின்ற செய்தியைக் கூறுகிறது. வழக்குரை படலம் கிறித்தவராக மாறியது தொடர்பாக அரசனிடம் தேவசகாயம் பிள்ளை கூறிய செய்திகளை விவரிப்பதாக அமைந்துள்ளது. எருமையூர் படலம் தேவசகாயம் பிள்ளை கிறித்தவராக மாறியமைக்குத் தண்டனையாக எருமை மீது ஏற்றி சுற்றி வரச் செய்த நிகழ்வினைக் கூறுகிறது. மறையுணர் படலம் தேவசகாயம் பிள்ளை பட்ட அவமானத்தை நினைத்துத்

துன்பப்பட்ட அவரது மனைவி பார்க்கவி சிறிது சிறிதாக இறைத் தொண்டர்கள் மூலம் கிறித்தவ சமயம் பற்றி அறிவதை விவரிக்கிறது. ஞானப்பூ படலம் தேவசகாயத்தின் மனைவி பார்க்கவி வடக்கன்குளத்தில் ஞானஸ்நானம் பெற்று ஞானப்பூ என்னும் பெயர் பெற்றதைக் கூறுகிறது. நீரூற்றுப் படலமானது தேவசகாயம் பிள்ளை எருமையில் வலம் வந்த போது நீர் வேட்கையால் ஏற்பட்ட களைப்பால் ஒரு பாறையின் மேல் விழ, அவரது கை முட்டு ஊன்றிய இடத்தில் நீர் ஊற்றாகத் தோன்றியதைக் கூறுகிறது. சிறைப்படு படலம் எருமையின் மீது வலம் வந்ததன் முடிவில் தேவசகாயம் பிள்ளை ஆரல்வாய்மொழியிலுள்ள சிறையில் வைக்கப்படும் செய்திகளைக் கூறுகிறது. இக்காண்டத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 1018 ஆகும்.

4. இறைமைக் காண்டம்

இறைமைக் காண்டமானது பொறைகொள் படலம், இறைமொழிப் படலம், பரிசேயர் படலம், கதைபொதி படலம், சூழ்ச்சிப் படலம், கொலைக்களப் படலம், இறையடிப் படலம், புகழுடற் படலம், நினைவிடப் படலம், முடிபுனைப் படலம் என்னும் பத்துப் படலங்களை உடையது. பொறைகொள் படலம் காப்பியத் தலைவரான தேவசகாயம் பிள்ளை சிறையில் பட்ட துன்பங்களைப் பொறுமையாக ஏற்றுக் கொண்டதை விவரிக்கிறது. இறைமொழிப் படலம் தேவசகாயம் பிள்ளை சிறையில் உள்ளவர்களுக்கு இயேசு பெருமான் அருளிய திருமொழிகளை விவரித்ததை எடுத்துக் கூறுகிறது. பரிசேயர் படலம் சமுதாயத்தில் தம்மை உயர்ந்தோராகக் கருதிக் கொண்டிருந்த பரிசேயர்களிடம் இயேசு பெருமான் அறிவுறுத்திய செய்திகளை விரித்துரைக்கிறது. கதைபொதி படலம் இயேசு பெருமான் கதைகளின் வாயிலாக மக்கள் பின்பற்ற வேண்டிய நெறிகளாகக் கூறியவற்றை விளக்குகிறது. சூழ்ச்சிப் படலம் அமைச்சர்கள் அரசனுக்குத் தெரியாமல் தேவசகாயம் பிள்ளையைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்வதைக் கூறுகின்றது. கொலைக்களப் படலம் தேவசகாயம் பிள்ளை ஆரல்வாய்மொழியிலுள்ள காற்றாடி மலை மேல் துப்பாக்கியால் சுடப்பட்டு இறப்பது பற்றி விவரிக்கிறது. இறையடிப் படலம் தேவசகாயம் பிள்ளை இறந்ததும் காணப்பட்ட குறிப்புகளைக் கொண்டு இறையடி சேர்ந்து

விட்டார் என எல்லோரும் நம்புவதை விரித்துரைக்கின்றது. புகழுடற் படலம் கொலை செய்யப்பட்ட தேவசகாயம் பிள்ளையின் உடற் பகுதிகளை வடக்கன்குளத்திலுள்ள மக்கள் கண்டு, அவற்றை எடுத்து, கோட்டாற்றிலுள்ள புனித சவேரியார் ஆலயத்திற்குக் கொண்டு சென்றதை விவரிக்கிறது. நினைவிடப் படலம் தேவசகாயம் பிள்ளையின் நினைவுப் பொருட்கள், அவர் தொடர்புடைய இடங்கள் பற்றி விவரிக்கின்றது. முடிபுனைப் படலம் தேவசகாயம் பிள்ளை பாப்பரசரால் புனிதராக அறிவிக்கப்பட்டதன் அறிகுறியாகக் கொண்டாடிய முடிபுனை விழாவினை விவரிக்கிறது. நான்காவது காண்டத்தில் 1005 பாடல்கள் உள்ளன.

சிறப்புக் கூறுகள்

திருத்தொண்டர் காப்பியத்திற்குப் பல்வேறு சிறப்புகள் உள்ளன. தமிழரின் அறநெறிக் கூறுகளான களவியல், கற்பியல், ஊடல், கூடல் போன்ற அகச்செய்திகள் தேவசகாயம் பிள்ளையின் வாழ்வையொட்டி அமைந்திருப்பது போற்றத்தக்கது. இதுவரையிலும் தேவசகாயம் பிள்ளைக்குத் தூயர் பட்டம் வழங்கவில்லை. ஆனால் பட்டம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் முடிபுனை படலத்தோடு காப்பியத்தை முடித்துள்ளார். இது பிற காப்பியங்களிலிருந்து வேறுபட்டும், புதுமையாகவும் காணப்படுகின்றது. மேலும், இக்காப்பியத்தில் இயற்கை வருணனைகள், கிளைக் கதைகள், அணிநலன்கள், உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், திருக்குறள் கருத்துகள், பல்வேறு இலக்கியங்களின் தாக்கம் முதலியவை அதிக அளவில் காணப்படுகின்றன.

இக்காப்பியத்தில் ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் பழமொழிகளும், மரபுத் தொடர்களும் பயின்று வந்துள்ளன. ஆசிரியரின் தமிழ்ப்பற்று ஏறத்தாழ தொண்ணூற்றுக்கும் அதிகமான இடங்களில் வெளிப்படுகின்றது. திருக்குறளின் கருத்துகளும், தொடர்களும் தொண்ணூற்றைந்து இடங்களுக்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூற்று இருபத்தைந்து இடங்களுக்கு மேல் பல்வேறு இலக்கியங்களின் தாக்கம் காணப்படுகின்றது. நூலின் இறுதியில் செய்யுள் தொடக்க அகராதியும், தேவசகாயத்தின் வாழ்வியலோடு தொடர்புடைய

ஆங்கிலப் பெயர்களுக்கு இணையான தமிழ்ப் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

மேலும், விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள கதைகள், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து கூறிய அருளுரைக் கதைகள் ஆகியவை காப்பியத்தில் இடம் பெறும் கிளைக்கதைகளாகும். தமிழ் காப்பிய இலக்கணக் கோட்பாடுகளையும் தமிழ் இலக்கிய மரபுகளையும் பின்பற்றி தமிழ் இலக்கியத்திற்கும் குறிப்பாக, கிறித்தவத் தமிழ் இலக்கியத்திற்கு சிறப்பளிக்கும் வகையில் திருத்தொண்டர் காப்பியத்தை ஆசிரியர் படைத்து, காப்பியப் புலவர்கள் வரிசையில் உயரிடத்தைப் பெற்றுள்ளார்.

காப்பிய இலக்கணம்

கிறித்தவக் காப்பியங்களின் இரு கண்களாகப் போற்றப்படும் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் என்னும் காப்பியங்களில் பெருங்காப்பியத்திற்கான நெறிகள் முழுமையாகப் பயிலவில்லை எனலாம். அதற்குக் காரணம் தேம்பாவணியில் அகச் செய்திகள் இல்லை. இதற்கு வீரமாமுனிவர் ஒரு துறவி, இது ஒரு தழுவல் காப்பியம், தேம்பாவணி கதையமைப்பில் அகச் செய்திகள் சொல்ல வாய்ப்பில்லை என்னும் மூன்று கருத்துகளைக் காரணமாகக் குறிப்பிடலாம். இரட்சணிய யாத்திரிகமும் ஒரு தழுவல் காப்பியம்; ஒரு பயணியின் பிரயாணத்தை விவரிப்பதாக அமைந்துள்ளது.

தமிழ்ப்பேரகராதி, காப்பியம் என்பதற்கு "நால்வகை உறுதிப் பொருளையும் கூறுவதாய்க் கதைப்பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்" என விளக்கம் தருகிறது. நாற்பொருள்கள் என்பன அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும்.

"தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்"

"நாற்பொருட் பயக்கு நடைநெறித் தாகி"

என்னும் விதிமுறைகளைத் தழுவியே திருத்தொண்டர் காப்பியம் இயற்றப்பட்டுள்ளது. நூன்முகமாக வாழ்த்து, வணக்கம், வருபொருள் என மூன்று கூறுகள் தண்டியில் தரப்படுகின்றன. வருபொருள் எனக்குறிப்பிடாமல் பாடுநெறி எனப் பிரபந்த

மரபியல் குறிப்பிடுகின்றது. மாறனலங்காரம் தண்டி கூறும் மூன்றனுடன் அவையடக்கத்தையும் சேர்த்துக்கொள்கின்றது. இதன் அடிப்படையில், காப்பியத்தின் பொதுவான இயல்புக்குரிய வகையில் வாழ்த்து, வள்ளல், அவையடக்கம், பாடுபொருள், வரலாறு ஆகியவற்றைக் கொண்ட பாயிரத்துடன் திருத்தொண்டர் காப்பியம் தொடங்குகின்றது. உரைநடையில், சிற்றிலக்கிய வடிவில் விளங்கிய வரலாற்றினுக்குக் கவிதை நடையில் பெருங்காப்பிய அமைப்பை அளித்தது பேராசிரியர் இன்னாசியின் தனித்திறமையாகும். காப்பியத் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாக இருக்க வேண்டும் எனத் தண்டியலங்காரம் கூறுகிறது. திருத்தொண்டர் காப்பியத்தின் தலைவன் தேவசகாயம் பிள்ளை ஆவார். இவர் கிறித்தவராக மதம் மாறியதால் அரசாங்கத்தினரால் பல விதங்களில் துன்புறுத்தப்பட்டு இறுதியில் சுட்டுக் கொல்லப்பட்டு வீடு பேறு அடைந்த தன்னிகரில்லாத் தலைவனாகவே காப்பியத்தில் படைக்கப்பட்டுள்ளார்.

காப்பியத்தின் தேவைக்கேற்ப பல இடங்களில் வருணனைகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் காப்பியப் பின்னணியாகிய நாடு, நகர், மலை, ஆறு, கடல், ஞாயிறு, திங்கள் ஆகியவற்றின் வருணனைகள் குறிப்பிடத்தக்கன. காப்பியப் பொதுப்பண்பின் ஒரு கூறாகிய கிளைக்கதைகள் திருத்தொண்டர் காப்பியத்தில் அமைந்துள்ளது காப்பியத்தின் சிறப்பிற்கு மற்றொரு காரணமாகும். காப்பியத்தின் தேவைக்கேற்ப கிளைக்கதைகள் இடம் பெற்றிருப்பதும், காப்பிய மைய ஓட்டத்திலிருந்து விலகிச் செல்லாமையும் தனித்தன்மைகளாம். தேவசகாயம் பிள்ளையின் இல்லற வாழ்வினை அக நெறி மரபுப்படி விவரித்துள்ளார். தேவசகாயம் பிள்ளை திருமணமானபின் கிறித்தவராக மாறியவர். இதனால் அவருடைய வாழ்க்கையில் அகச் செய்திகள் கூற அதிக வாய்ப்புகள் உள்ளது. காப்பியம் என்பது வரலாற்றின் அடிப்படையோடு புனைவுகளும் கொண்டதாக அமையும் என்னும் கருத்துக்கு ஏற்ப இக்காப்பியம் படைக்கப்பட்டுள்ளது. அகப்பொருள் பெருங்காப்பியத்திற்கு முக்கியமான ஒன்றாகும். அகநெறி மரபுகளை உள்ளடக்கிய அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் உள்ளடக்கிய அதாவது தமிழ்க் காப்பிய இலக்கணக் கோட்பாடுகளை முறையாகப் பின்பற்றிய

கிறித்தவக் காப்பியம் இது ஒன்றேயாகும் எனில் மிகையாகா. இக்காப்பியம் தமிழுக்கும் கிறித்தவத்திற்கும் சிறப்பளிக்கும் வகையில் படைக்கப்பட்டுள்ளது.

காப்புச் செய்யுள்

காப்பு என்னும் சொல் காத்தல் என்னும் தொழிற்பெயராகும். தான் செய்யும் செயலுக்கு எவ்வித இடையூறும் வராமல் காத்தருள வேண்டும் என இறைவனை வேண்டிப் பாடுவது காப்புச் செய்யுளாகும். இவ்வாறு நூலின் தொடக்கத்திலோ அல்லது காப்பியமாயின் ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலோ காப்புச் செய்யுள் பாடுவது மரபு. பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் காப்புப் பருவம் என பருவம் அமைத்து குழந்தையைக் காப்பாய் என வேண்டுவது இங்கு குறிப்பிடத்தக்கது. கம்பர் தமது இராமாயணத்தில் ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் காப்புச் செய்யுள் பாடியுள்ளார். இக்காப்பிய மரபினை அடிப்படையாகக் கொண்டு இன்னாசி தமது காப்பியத்தின் ஒவ்வொரு படலத்திலும் காப்புச் செய்யுள் பாடியுள்ளார். அப்படலத்தில் விவரிக்கும் செய்தியினைக் கோடிட்டுக்காட்டி அது குறைவற நிறைவேற இறைவனை வேண்டுகிறார். தேவசகாயம் பிள்ளை சிறையில் பட்ட துன்பங்களைப் பொறுமையாக ஏற்றுக் கொண்டதைக் கூறும் பொறைகொள் படலத்தின் காப்புச் செய்யுள்,

> சிறையிருப்புத் தலைவனுக்குத் தண்ட மாகச்
> சீரழிந்து வதைபட்ட நிலையிற் கூட
> இறைமைந்தன் இயேசுபிரான் தன்மை கொண்டான்
> இன்னலெலாம் கன்னலென மாற்றிக் கொண்டான்
> மறைதிருப்பி மற்றவரைக் கொணரு தற்கு
> மறைமுகமாய் இறையருளும் வாய்ப்பாய்க் கொண்டான்
> மறைசாட்சி யாவதற்காம் முந்த ளத்தை
> மனங்கசியப் பாடவருள் வேண்டி நிற்போம் (பா.3132)

என அமைந்துள்ளது. வீரமாமுனிவர் தமது தேம்பாவணியின் ஒவ்வொரு படலத்திலுள்ள முதல் பாடலையும் முன்னுரை என்னும் தலைப்பில் படலத்தில் சொல்லப் போகும் செய்திகளைச் சுருக்கமாகச் சொல்லியுள்ளார். தேம்பாவணியின் மூன்றாம் காண்டத்திலுள்ள முதல்படலம் குழவிகள் வதைப் படலம் என்பதாகும். இப் படலம் குழந்தை இயேசுவைக் கண்டுபிடித்துக் கொல்ல முடியாத ஏரோது மன்னன்,

குழந்தைகளையெல்லாம் வதைத்துக் கொன்றதைக் கூறுகின்றது. இப்படலத்தின் முன்னுரையாக,

> **செல்முகத்துஇடிச் சினத்து ஒலி முழங்கிய வெம்போர்**
> **கொன்முகத்து எரிக் குணுக்கினம் இயற்றிய காலை**
> **பான்முகத்துஒளிப் புரிசைமா நகரில்ஆ யவை நாம்**
> **சால்முகத்து இவண் தொடையொடு தொடருதும் உரைத்தே**
> **(குழவிகள் வதைப் படலம், பா.1)**

என்னும் பாடல் அமைந்துள்ளது. காப்புச் செய்யுள் என்பது முன்னுரை என்னும் பகுதியிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். காப்புச் செய்யுள் உடைய ஒரே கிறித்தவக் காப்பியம் திருத்தொண்டர் காப்பியமாகும். இது ஆசிரியரின் புலமைக்குச் சான்றாகவும், பிற கிறித்தவக் காப்பியங்களிலிருந்து உயர்வாகவும் உள்ளது.

காண்ட வாழ்த்து

காப்புச் செய்யுள் ஒவ்வொரு படலத்திற்கும் இறைவனை வேண்டிப் பாடும் பாடல் போன்று, காண்ட வாழ்த்து என்பது ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் இறைவனை வாழ்த்திப் பாடுவதாகும். இந்த காண்ட வாழ்த்து முறை வேறு எந்த கிறித்தவக் காப்பியங்களிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. திருத்தொண்டர் காப்பியத்தின் மூன்றாம் காண்டமான பொறுமைக் காண்டத்திலுள்ள காண்ட வாழ்த்துப் பாடல்,

> **பொருளுள் பெரிது பொறுமை யதுவாம்**
> **அருளுடை வாழ்வின் அரணாம் - திருவின்**
> **உருவினன் கொள்ளும் உணர்வினைப் பாட**
> **அருவ! நின் தாளே அரண்** *(பா.2113)*

என அமைந்துள்ளது. இத்தகைய காண்டவாழ்த்து திருத்தொண்டர் காப்பியத்தைப் பிற காப்பியங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

வருணனைத் திறன்

காப்பியத்திற்கு இருக்க வேண்டிய கூறுகளில் வருணனையும் ஒன்று. இவ்வருணனைகள் ஆசிரியரின் கவித்திறனுக்கு ஏற்ப மாறுபடும் எனலாம். காப்பியத்தின் முதலில் அமைந்துள்ள நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகிய இரண்டு படலங்களும் ஆசிரியரின் கற்பனை வளத்திற்கும்,

வருணனைச் சிறப்பிற்கும் தக்க சான்றுகளாக அமைகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தினரே அதிசயிக்கும் வகையில் இவ்விரண்டு படலங்களும் அமைந்துள்ளது பாராட்டிற்குரியது. நாஞ்சில் நாடு செழிப்புடைய நாடு. மலை வளம், வயல் வளம் என நாஞ்சில் நாட்டு வளங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். பாயிரத்தை அடுத்து வரும் நாட்டுப் படல வருணனைகள் காப்பியத்தின் நுழைவாயிலுக்கு அலங்காரமாகத் திகழ்கின்றன. நாட்டுப் படலத்தில் நாஞ்சில் நாட்டை,

சங்கமத்தின் மறுபெயர்தான் நாஞ்சில் நாடு
சாரல்வந்து தாலாட்டும் ஒருபு றத்தில்
சங்கமிக்கும் முக்கடலும் மறுபு றத்தில்
சங்கிலிபோல் ஏரிகளாம் வயற்பு றத்தில்
தங்கநிகர் மணற்பரப்பு கடற்பு றத்தில்
தாராள மலைவளங்கள் உட்பு றத்தில்
திங்களெதிர் கதிரவனை ஒன்றாய்க் காணத்
திசைமுகங்கள் இங்கன்றி வேறெங் குண்டு? (பா.19)

என ஆசிரியர் வருணிக்கிறார். நாஞ்சில்நாடு என்பது சங்கமத்தின் மறுபெயராகும். அதன் ஒருபுறத்தில் மழைச்சாரல் வந்து தாலாட்டும். மறுபுறத்தில் முக்கடலும் சங்கமிக்கும். வயல் புறத்தில் சங்கிலி போல் தொடர்ச்சியாக ஏரிகள் காணப்படும். கடற்புரத்தில் மணற்பரப்பு தங்கம் போல் மின்னும். நாட்டின் உட்புறத்தில் ஏராளமான மழைவளங்கள் உண்டு. மறையும் கதிரவனையும் அவன் எதிர் தோன்றும் திங்களினையும் ஒருசேரக் காணும் வாய்ப்பு இவ்விடத்தைத் தவிர வேறு எங்கே உண்டு? என்னும் வருணனை நயமிக்கது.

நாஞ்சில் நாட்டு வளத்தை, நெற்பயிர்கள் எல்லாம் செம்பொன்னின் நிறத்தொடு விளங்கும்; நெற்றிவரை உயர்ந்து வளர்ந்த புற்கள் எல்லாம் மரகதம் போல் பசுமையோடு தோற்றம் நல்கும்; உலகம் குளிரும், பூக்கள் மலரும் புதுமையாகத் தோன்றும், அங்கே கற்கள் எல்லாம் மாணிக்கக் கற்கள் ஆகும்; அழகு ஒளிரும், கலைகள் மிளிரும், கண்கள் கூசும், பேசுகின்ற சொற்கள் எல்லாம் தேன்போல் இனிக்கும்; விருந்தினர்களைப் போற்றும் சோறெல்லாம் கனிகள் போல் இனியதாகும் என வருணிக்கிறார். இதை,

நெல்லெல்லாம் செம்பொன்னாம் நிறத்தைக் காட்டும்
நெற்றிவரை போட்டியிட்டு வளைந்து நிற்கும்

புல்லெல்லாம் மரகதமாய்ப் பசுமை போர்த்தும்
புவிகுளிரும் பூமலரும் புதுமை காட்டும்
கல்லெல்லாம் மாணிக்கக் கற்க ளாகும்
கவினொளிரும் கலைமிளிரும் கண்கள் கூசும்
சொல்லெல்லாம் தேனாகும் விருந்து போற்றும்
சோறெல்லாம் கனியாகும் சுவையே கூடும் (பா.25)

எனப் பாடுகிறார். நாஞ்சில் நாடு தூய்மையுடையது. சுற்றுப்புறச் சூழலுக்கு சிறப்பு அளித்து வரும் பகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல. இதை மனதில் கொண்டு பின்வரும் பாடலை ஆசிரியர் படைத்துள்ளார்:

சுற்றுச் சூழல் சிந்தனைக்குச் சற்றும் அங்கே வேலை இல்லை
சுற்றிச் சுற்றி வந்தாலும் தூய்மை யன்றி வேறே இல்லை
கற்ற வர்கள் அறிவியலைக் காட்டு தற்குத் தேவை இல்லை
மற்ற வர்கள் எல்லோரும் மாச றுக்கக் கற்ற வர்தாம்
(பா.42)

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அகஸ்தீசுவரம், தோவாளைத் தாலுகாக்கள் அடங்கிய பகுதியே நாஞ்சில் நாடாகும். நாஞ்சில் நாடு மலைகள் நிறைந்த ஒரு பகுதி. அங்குள்ள மலைகளை ஆசிரியர் வருணிக்கும் திறன் பாராட்டத்தக்கது. சான்றாக,

கலைவடிவச் சிலைகளுக்குக் கருதான் என்ற
கருவத்தால் தலையுயர்ந்து நிற்கும் தோற்றம்
அலைக்கரத்தால் கடல்கூட அசைக்கா தென்ற
அகம்பாவத் தலைக்கனத்தால் நிமிரும் தோற்றம்
வலையகத்தில் அகப்பட்ட விலங்கு போல
வான்தொட்டு மரம்போர்த்த மயங்கித் தோன்றும்
மலைகூடத் தொடரெங்கும் பரந்து தோன்றும்
மருதமகள் குறிஞ்சியினை முயங்கித் தோன்றும்
(பா.58)

என்னும் பாடலைக் குறிப்பிடலாம். இப்பாடலில், கலைஞர்கள் வடிக்கின்ற சிலைகளுக்கு தானே கருப்பொருள் என்ற செருக்கால் மலைகள் தலையுயர்ந்து நிற்கும்; கடல்கூட அலைகளைக் கொண்டு தங்களை அசைக்கமுடியாது என்று தலைக்கனம் கொண்டு நிமிர்ந்து நிற்கும்; வலையில் அகப்பட்ட விலங்கு போல வானளாவ உயர்ந்த மலை, மரங்களால்

போர்த்தப்பட்டு மயங்கித் தோன்றும்; மலைகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து தொடராகப் பரந்து விரிந்து நீண்டு நிற்கும்; அதனருகில் வாயிலாகிய மருத மகள் மலையாகிய குறிஞ்சியினைத் தழுவி நிற்பாள் என்கிறார். மேலும், நாஞ்சில் நாட்டிலுள்ள அருவியினை,

> வானத்துக் கரும்பலகை தன்னில் மாயன்
> வரைந்திட்ட வெண்கட்டிக் கோடா? இல்லை
> வானத்தில் விரைந்துசெலும் வான ஊர்தி
> வான்வெளியில் கக்கிவைத்த புகைதான் ஆமோ?
> வானத்துப் பெருங்குளத்தின் கரையு டைத்து
> வழிகாணா தோடும்பெரு வெள்ளந் தானோ?
> வானத்துப் பெருஞ்சட்டி உடைந்து போக
> வழிந்தோடும் பனிக்குழம்போ அருவித் தோற்றம்?
> (பா.62)

என வருணிக்கிறார். இம்மலையில் தோன்றும் அருவி வானம் என்னும் கரும்பலகையில் மாயன் வரைந்த வெள்ளைக் கோடோ? அல்லது வானத்தில் விரைந்து செல்லும் வான ஊர்தியானது வான் வெளியில் விட்டுச் சென்ற புகையோ? அல்லது வானம் என்னும் பெருங்குளத்தின் கரை உடைந்து பெருக்கெடுத்து ஓடிவரும் வெள்ளமோ? அல்லது வானம் என்னும் பெருஞ் சட்டி உடைந்து வழிந்து வரும் பனிக்குழம்போ? என்பது இப்பாடலின் கருத்தாகும்.

கடலின் தோற்றத்தை 12 பாடல்களின் மூலம் வருணனை செய்கிறார். அதைப்போன்று கதிரவனின் தோற்றத்தை 16 பாடல்களின் மூலம் வருணிக்கிறார். சான்றாக,

> இரும்பதனை வளைப்பதற்காய் உலைக்கூ டத்தில்
> இட்டதனைப் பழுக்கும்வரை காய்ச்சும் போழ்தில்
> இரும்பதனின் நிறமாறிச் சிவந்தாற் போல
> இருட்கடலாம் உலைக்களத்தில் பழுத்துச் சிவந்த
> உருள்பெருந்தேர் சக்கரத்தின் பட்டை போல
> உருள்வட்ட வடிவத்தில் தணலாம் உலையில்
> உருக்குங்கால் சுற்றியுள நெருப்பும் சிதறி
> உடன்தோன்றக் கதிரவன்தான் தோன்றுகின்றான்
> (பா.80)

என்னும் பாடலைச் சுட்டலாம். இப்பாடலில் இரும்பைத்

துளைப்பதற்காக உலைக்கூடத்தில் இட்டு அதனை நன்றாகக் காய்ச்சும் போது தன் கருநிறம் மாறி சிவப்பதைப் போல இருளாகிய உலைக்களத்தில் பழுத்துச் சிவந்து உருளுகின்ற பெரிய தேர்ச் சக்கரத்தின் பட்டை போல உருள் வட்ட வடிவத்தில் உலையில் நெருப்புப் பொறி பறப்பதைப் போல கதிர்கள் தோன்ற கதிரவன் தோன்றினான் என வருணிக்கிறார்.

இதைப்போன்று நிலவின் தோற்றத்தை 21 பாடல்கள் மூலம் வருணிக்கிறார். சான்றாக ஒரு பாடல் பின்வருமாறு:

முத்தமிழாள் முகவடிவோ! முழங்கு கின்ற
முழவதுவின் ஒருபுறமோ? இல்லை யென்றால்
மத்தளத்தின் மறுபுறமோ? குடமோ என்னும்
மண்பாண்ட இசைக்குடமோ? இல்லை யென்றால்
சித்தந்தாள் திரிந்தவரைத் தெளிய வைக்கும்
சீதளமாம் மாத்திரையோ? இல்லை யென்றால்
வித்தகமாய்த் திட்டமிட்ட வானத் தச்சன்
விண்விளக்காய் வரைந்ததிரு உருவந் தானோ?
(பா.107)

இப்பாடலில், வான நிலா முத்தமிழ் மங்கையின் முகவடிவமா? ஒலிக்கின்ற முழவின் ஒரு பக்கமா? அல்லது மத்தளத்தின் மறுபுறமா? குடம் என்னும் மண்பாண்ட இசைக்கருவியா? இல்லாவிட்டால் சித்தம் கலங்கியவரைத் தெளியவைக்கும் மாத்திரையா? அல்லாவிடில் வானத்துத் தச்சன் விண் விழிக்காய் வரைந்த திரு உருவாமா? என நிலவை வருணனை செய்யும் திறம் பாராட்டத்தக்கது. பாரதிதாசன் புரட்சிக்கவி என்னும் குறுங்காப்பியத்தில் நிலவை வருணிப்பது போன்று இப்பாடல் அமைந்துள்ளது. கிறித்தவக் காப்பியங்களிலேயே கதிரவனையும் நிலவையும் அதிகமாக வருணனை செய்த காப்பியம் திருத்தொண்டர் காப்பியம் என்று குறிப்பிடும் அளவிற்கு இதில் வருணனைகள் அதிகமாக உள்ளன.

நகரப் படலத்தில் நாட்டுப் படலத்தைவிட வருணனைப் பகுதிகள் குறைவாகவே உள்ளன எனலாம். நகரத்தின் சிறப்பை,

நலமெல்லாம் இங்கே உண்டு நானிலச் செல்வம் உண்டு
தலமெல்லாம் இங்கே உண்டு தண்டுறை வணிகம் உண்டு
புலமெல்லாம் விளைவே உண்டு புவிபுகழ் பெயரே உண்டாம்
உலகெலாம் உயர்த்திக் கூறும் ஊரெனில் இதுவே ஊராம்
(பா.140)

எனப் புகழ்ந்து பாடுகிறார். இவ்விரண்டு படலங்களும் காப்பியத்தின் வெற்றிக்குச் சான்றுகளாக அமைகின்றன. தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் ஆகிய காப்பியங்களில் வருணனைகள் இருப்பினும், எளிமையான, சுவையான இவ்வருணனைகள் இக்காப்பியத்தின் அழகுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

கிளைக்கதைகள்

கிளைக்கதைகள் காப்பிய வளர்ச்சிக்குத் துணைபுரிபனவாகும். கிறித்தவக் காப்பியமான தேம்பாவணியில் இடமறிந்து வீரமாமுனிவர் பல கிளைக் கதைகளை இணைத்துள்ளார். எனினும், கிளைக்கதைகள் சிறப்பாக உடைய கிறித்தவக் காப்பியம் திருத்தொண்டர் காப்பியமாகும். இக்காப்பியத்தில் மனமாறு படலம், கனவுகாண் படலம், திருக்குறுக்கைப் படலம், அருள்நீராட்டுப் படலம், இறைமொழிப் படலம், பரிசேயர் படலம், கதைபொதி படலம் என்னும் ஏழு படலங்களில் கிளைக்கதைகள் இடம் பெற்றுள்ளன.

இக்காப்பியத்தின் மனமாறு படலத்தில் சாலமோனின் ஞானம், ஆபிரகாம் தம் மகன் ஈசாக்கைப் பலியிட அழைத்த வரலாறு ஆகியவற்றை டிலனாய் நீலகண்டனிடம் விளக்குவதாக அமைந்துள்ளது. கனவு காண் படலத்தில் கனவின் பயனைக் கருவாகக் கொண்டு பழைய ஏற்பாட்டில் இடம்பெறும் யோசேப்பின் வரலாற்றை முழுவதுமாக விவரிக்கும் பகுதி இடம் பெற்றுள்ளது. திருக்குறுக்கைப் படலத்தில் நீலனுக்கு டிலனாய் இயேசு கிறித்துவின் பாடும் மரணமும் உயிர்த்தெழுதலும் பற்றிய செய்திகளை விரிவாக விவரிக்கும் பகுதி இடம்பெற்றுள்ளது. அருள்நீராட்டுப் படலம் யோபுவின் பற்றுறுதியினை டிலனாயின் மூலமாக விளக்குகிறது.

இறுதிக் காண்டமான இறைமைக் காண்டத்திலுள்ள இறைமொழிப் படலம், பரிசேயர் படலம், கதைபொதி படலம் என்னும் படலங்களில் விவிலிய புதிய ஏற்பாட்டு நிகழ்வுகள் கிளைக் கதைகளாக இடம் பெற்றுள்ளன. இறைமொழிப் படலம் சிறையில் உள்ளவர்களுக்கு தேவசகாயம் பிள்ளை இயேசு கிறிஸ்து அருளிய திருமொழிகளை எடுத்துக் கூறுகின்றது. இவற்றில் மலைப்பொழிவு, மறுகன்னம் காட்டல்,

மேலுலகச் செல்வம், விதை உவமை, கடுகு உவமை, புளிக்காத மா ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். பரிசேயர் படலத்தில் பரிசேயர் பற்றிய செய்திகள், தைலம் பூசிய பெண், நிக்கோதேம், பிறரைத் தீர்ப்பிடல் ஆகாது முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இச்செய்திகளையும் தேவசகாயம் பிள்ளை சிறையில் இருந்தவர்களுக்கு எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளன. கதைபொதி படலத்தில் நல்ல சமாரியன் கதையும் கெட்ட குமாரன் கதையும் இடம் பெற்றுள்ளன. இக்கிளைக் கதைகள் அனைத்தும் காப்பிய ஓட்டத்திற்குச் சிறப்பாகத் துணை புரிகின்றன. கதைகளின் சிறப்பினை ஆசிரியர்,

> **கதையென்றால் குழந்தைகட்கே இன்ப மாகும்**
> **கல்லாத பெரியோர்க்கும் அமுத மாகும்**
> **கதைசொல்லல் வழிவழியாய் வந்த தொடர்பாம்**
> **கற்பனைக்கும் விலங்குகட்கும் எழுந்த தொடர்பாம்**
> **கதைகொண்டே அறங்கூறிப் பண்டை முன்னோர்**
> **கருத்துக்கள் தமைச்சொல்லி விளங்க வைத்தார்**
> **இதைத்தொடர்புக் கருவியெனக் கொண்ட இயேசு**
> **இயன்றவிடம் கதைசொல்ல மறந்தார் அல்லர்**
> ***(பா.3429)***

எனப் பாடி கிளைக்கதை என்னும் உத்தியைச் சிறப்பாகக் கையாள்கிறார். திருத்தொண்டர் காப்பியம் தேவசகாயம் பிள்ளை என்னும் இறையடியவரைப் பற்றியதாக இருப்பினும், இயேசு கிறிஸ்து மக்களுக்குக் கூறிய அறிவுரைகளையும் அவரது பாடு மரணங்களையும் கிளைக்கதைகளாகக் காப்பியத்தில் இடம்பெறச் செய்திருப்பது ஆசிரியரின் காப்பியப் புலமை எனலாம்.

அகநெறிக் கோட்பாடுகள்

கிறித்தவக் காப்பியங்களிலே அகப்பொருளையும் சேர்த்துப் படைக்கப்பட்ட ஒரே காப்பியம் திருத்தொண்டர் காப்பியம் ஆகும். தேம்பாவணியில் வளனும் மரியும் இல்லறம் மேற்கொண்ட போதிலும், அவர்களின் ஆரம்ப வாழ்வு துறவற வாழ்வாகவே இருந்தது. அதுபோல, இரட்சணிய யாத்திரிகத்தில் நாயகன் நாயகி பாவம் என்னும் அடிப்படையில் கிறித்தியானின் உள்ளிருந்த அவனுடைய ஆத்துமா (ஆத்துமா என்னும் பெண்) விழித்துக் கொண்டு தன் தலைவராம் கிறிஸ்துவைச் சேர்தல் எக்காலமோ என்று ஏங்கிப் பல சொல்லிப் புலம்புகிறாள்.

இவ்விரண்டு காப்பியங்களிலுமுள்ளவற்றை ஆன்மீக அகநெறி எனலாம். ஆனால், திருத்தொண்டர் காப்பியத்திலுள்ள முதல் காண்டமான இளமைக் காண்டத்தின் அகநெறிப் படலம், பொழிலுறு படலம், திருமணப் படலம், ஊடலுவகைப் படலம் என்னும் நான்கு படலங்களும் களவு, கற்பு என்னும் அகப்பொருள் மரபைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன. இம்முயற்சி கிறித்தவக் காப்பியங்களில் முதல் முயற்சியாகும். அகநெறிப் படலம் விவிலியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் காணலாகும் அகப்பொருட் சிறப்பினை விரித்துரைக்கின்றது. மேலும், இப்படலத்தில் தலைவன் கூற்று, தலைவி கூற்று, கண்டோர் கூற்று, உடன்போக்கு ஆகிய பகுதிகள் அகஇலக்கிய நயம் மிக்கனவாகும். சான்றாக, நலம் புனைந்துரைத்தல் என்னும் பகுதியில்,

இதழேதான் தேனாக இனிக்கும் என்றான்
இதுதானே பொய்சொல்ல வேண்டா மென்றாள்
இதழூறும் எயிற்றின்நீர் இனிக்கும் என்றான்
இருவரும்நாம் கூடும்போ துண்டே என்றாள்
மதமூறும் வேழம்போல் என்னைப் பற்றி
மடிமீது வைப்பதுவும் சரியோ என்றாள்
இதமாகக் கண்வழியே அழைக்கும் போதே
இதற்கேதான் காத்திருந்தேன் என்றான் அவனே
(பா.456)

என்னும் பாடல் அகச்சுவையுடன் அமைந்துள்ளதைக் குறிப்பிடலாம். கதைத் தலைவன் குடும்பத் தலைவனாக இருப்பதால் அகக் கருத்துகளின் அடிப்படையில் ஆசிரியர் இப்பகுதிகளை அமைத்துள்ளார். பிற கிறித்தவக் காப்பியங்களில் இத்தன்மையினைக் காணமுடியாது. அகக் கருத்துகளையும் சேர்த்துள்ளதால்தான் இக்காப்பியம் முழுமையடைகின்றது.

திருக்குறள் செல்வாக்கு

திருத்தொண்டர் காப்பியத்தின் பல்வேறு சிறப்புக்கூறுகளுள் திருக்குறளின் தாக்கம் குறிப்பிடத்தக்கது. இரட்சணிய யாத்திரிகத்தில் சுமார் எழுபது இடங்களில் திருக்குறளின் தாக்கம் காணப்படுகின்றது. ஆனால் திருத்தொண்டர் காப்பியத்தில் சுமார் தொண்ணூற்றைந்து இடங்களில் திருக்குறளின் தாக்கம் உள்ளது. ஆசிரியர் தமது

காப்பியத்தில் திருக்குறளிலுள்ள சொற்களை, தொடர்களை, உவமைகளை, கருத்துகளைப் பல்வேறு இடங்களில் கையாண்டுள்ளார். திருக்குறளில் கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டவர்க்கு மொட்டையடித்தலும் சடைவளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் வேண்டா என்னும் கருத்துப்பட,

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (குறள்.280)

என திருவள்ளுவர் பாடியுள்ளார். இன்னாசி அவர்கள் திருவள்ளுவரின் இக்கருத்தை,

மழித்தலுந்தான் நீட்டலுந்தான் வெளிவே டந்தான்
மனத்தூய்மை ஒன்றேதான் வேண்டும் என்று
வழிகாட்டி யாய்விளங்கி உலகோர் தம்மை
வான்சேர்க்க உரைகளைத்தாம் வழங்கி வந்தார் (பா.3424)

என தம் திருத்தொண்டர் காப்பியத்தில் அழகுபட அமைத்துள்ளார். மேலும்,

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள்.788)

என்னும் குறளிலுள்ள செய்தியை,

கடுக்காயைக் கொடுத்தானே என்பார் உலகில்
காஞ்சிரத்தை யேகொடுத்தான் இவனே எனலாம்
உடுக்கைதனை இழந்தான்கை உதவும் என்பார்
உடுக்கைதனை யேஇழுத்தான் இவனே எனலாம்
மடுவாய்க்கால் நீர்ப்பாய்ச்சிப் பயிர்வ ளர்ப்பர்
மடுவெட்டி நமைப்புதைப்பான் வியப்பே இல்லை
தடுத்தவனை நாம்முடக்கிப் போடா விட்டால்
தாமாக மடுவின்மேல் வீழ்வார் ஆவோம் (பா.1845)

என்னும் பாடலில் எடுத்தாள்கிறார். இவ்வுலகினர் கடுக்காய் கொடுத்தான் என்று கூறுவார்கள். ஆனால் இவனோ பட்டவுடன் அரிக்கின்ற காஞ்சிரத்தையே கொடுத்தான் என்று சொல்லலாம். ஆடை நழுவும் போது கை உதவும் என்று சொல்வார்கள். ஆனால் இவனோ கட்டியிருந்த ஆடையையே இழுத்து உரிப்பவன் எனலாம். உலகோர் மடுவிலிருந்து வாய்க்கால் வெட்டி நீர் பாய்ச்சி வயலில் பயிர் வளர்ப்பர். ஆனால் இவனோ குழி வெட்டி நம்மைப் புதைப்பான். இவனை நாம் தடுத்து முடக்கா விட்டால் நாமாக வலியச் சென்று மடுவில் விழுந்தவர்

ஆவோம் என்பது இப்பாடலின் கருத்தாகும். இது போன்ற சான்றுகள் ஏராளம் உள்ளன.

பிற இலக்கியத் தாக்கம்

திருத்தொண்டர் காப்பியமானது சங்க இலக்கியம், நாலடியார், பழமொழி நானூறு, மனோன்மணியம், பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து கருத்துகள் இடம்பெற்று கிறித்தவக் காப்பியங்களிலே புதுமைக் காப்பியமாகத் திகழுகின்றது. ஒருசில கிறித்தவக் காப்பியங்களில்தான் பிற இலக்கியத்தின் செல்வாக்கு காணப்படுகின்றது. இதற்கு காப்பியப் புலவரின் பன்னூல் புலமையே காரணமாகும் என்பது உண்மை.

பழமொழிகள்

காப்பியப் புலவரின் படைப்புத் திறனுக்குச் சான்றாக அமைபவைகளுள் பழமொழிகளைக் கையாள்வதும் ஒன்றாகும். தேம்பாவணியில் சில இடங்களிலும் இரட்சணிய யாத்திரிகத்தில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பழமொழிகளும் உள்ளன. பிற கிறித்தவக் காப்பியங்களில் பழமொழிகளைப் பயன்படுத்தியிருப்பது மிகமிகக் குறைவாகும். ஆனால் திருத்தொண்டர் காப்பியத்தில் இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் பழமொழிகளும் மரபுத் தொடர்களும் பயின்று வந்துள்ளன என்பது இமாலய சாதனையாகும். ஒரு மனிதனின் வாழ்வைப் பாடும்போது பழமொழி, மரபுத் தொடர், உவமைகள் முதலியவற்றைப் பயன்படுத்துவதால் அவ்விலக்கியம் சிறப்புறுகிறது. இதற்குத் திருத்தொண்டர் காப்பியம் ஒரு சான்றாகும். சான்றாக,

1. இக்கரைக்கே அக்கரை தான் பச்சை (பா. 54)
2. பூவோடு நாரிருந்து மாலையானால்
   பூமணமும் அதனுடனே தானே சேரும் (பா. 773)
3. கேழ்வரகில் நெய்வடியும் என்று சொன்னால் கேட்கின்ற
   வருந்தானே மதியிழந்தார் (பா. 801)
4. ஒன்றவந்த பிடாரியது ஊரின் பிடாரி
   ஓட்டி விட்ட கதையாக (பா. 1816)
5. பசிவந்தால் பத்துந்தான் பறந்து போகும் (பா. 3482)

என்னும் பழமொழிகளைக் குறிப்பிடலாம்.

உவமைகள்

காப்பியத்தில் உவமைகள் சிறப்பிடம் பெறுகின்றன. உவமைகள் நிறைந்த காப்பியமாகத் திருத்தொண்டர் காப்பியம் திகழ்கின்றது. திருத்தொண்டர் காப்பியத்தில் ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட உவமைகள் கையாளப்பட்டுள்ளன. இதுவரை வெளிவந்த கிறித்தவக் காப்பியங்களில் திருத்தொண்டர் காப்பியத்தில்தான் இவ்வளவு உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சாதாரண செய்திகளையும் ஆசிரியர் உவமைகளின் மூலம் மிகவும் எளிதாகக் கூறுகிறார். காப்பியத்தில் இடம் பெற்றுள்ள உவமைகளுள் சில பின்வருமாறு:

1. வளர்தெங்கின் கீற்றெல்லாம் வில்லைப் போல (பா. 27)
2. பொய்யொருநாள் வெளியாகும் தன்மைபோல (பா. 91)
3. புதிரதனை உணராமல் தவித்தல் போல (பா. 223)
4. புனுகுதனைப் புண்ணுக்குத் தடவி னாற்போல (பா.254)
5. இடிப்பதற்கு முன்மின்னல் தோன்றல்போல (பா.303)
6. தூவாது முளைக்கின்ற விதையைப்போல (பா. 536)
7. விண்ணோக்கி எறிந்தாலும் விழும்கல் போல (பா.573)
8. கண்விழிக்குள் பெருவடிவம் அடங்கல்போல (பா.604)
9. கருவானில் வெண்நிலவு தோன்றல்போல (பா.1234)
10. மகன்தந்தைக் குண்டாக்கும் புகழைப் போல (பா. 1608)
11. புண்ணதனில் வேலதனைச் சொருகி னாற்போல் (பா.1937)
12. நெல்லொழிய நீழ்களையைச் சேர்ப்பார் போல (பா. 1948)
13. முப்போகம் விளைகின்ற கழனி போல (பா. 2554)
14. கடமைதனைச் செவ்வனுறச் செய்தல் போல (பா. 2962)
15. குடித்தழித்த பின்னர்வரும் உணர்வு போலும் (பா. 3476)

இதுபோன்று ஏராளமான எளிய உவமைகள் காப்பியம் முழுவதிலும் உள்ளன. ஆசிரியர் பல பாடல்களை முழுவதுமாக உவமைகளின் மூலமே பாடியுள்ளார். சான்றுகளாக,

நெற்றிக்குத் திலகந்தான் மையம் போல
நேர்மைக்கே ஒழுக்கந்தான் கருவாம் போல
வெற்றிக்குக் களமேதான் சிறப்புப்போல
வேள்விக்கே ஆகுதிநெய் தேவை போல
நற்றிணைக்கே அகப்பொருளே நடுவண் போல
நானிலத்தில் மருதந்தான் ஊடல்போல
வெற்றிலைக்குப் பசுமைதான் நிறமே போல
வேய்தோட்குப் பொருப்பேதான் பொருத்தம் ஆனான்
(பா.624)

வானத்து மீனதனைப் பிடித்தாற் போலும்
வையத்துக் கடல்லையைத் தடுத்தாற் போலும்
கானகத்தில் கப்பல்வழி வகுத்தாற் போலும்
கறுமைதனை வெண்மையதாய்ச் செய்தாற் போலும்
ஊனத்தை யொழித்தழகாய் வடித்தாற் போலும்
ஊரெல்லாம் தன்வயமாய்க் கொண்டாற் போலும்
தானத்தின் முழுமுதலே அவன்றான் போலும்
தானுணர்ந்த மகிழ்வுக்கே அளவே இல்லை (பா.3229)

என்னும் பாடல்களைக் குறிப்பிடலாம். இவை ஆசிரியரின் புலமைத் திறனுக்குத் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன.

விவிலியக் கருத்துகள்

விவிலியச் செய்திகள் கிளைக்கதைகளின் வாயிலாகத் திருத்தொண்டர் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. "பின்பு இயேசு இறையாட்சி எதற்கு ஒப்பாயிருக்கிறது? அதை நான் எதற்கு ஒப்பிடுவேன்? அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாகும். ஒருவர் அதை எடுத்துத் தம் தோட்டத்தில் இட்டார். அது வளர்ந்து மரமாயிற்று; வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் தங்கின என்று கூறினார்" (லூக்கா 13:18,19) என்னும் விவிலிய வசனங்களை,

காண்கின்ற விதைகளிலே மிகவும் சிறிய
கடுகுதனை விண்ணரசிற் குவமை சொன்னார்
வேண்டுகின்ற நிலமதனில் விதைத்து விட்டால்
வெளிப்படுமச் செடியதுவோ பெரிதாய் ஆகும்
காண்கின்ற பறவையதன் கிளையில் தங்கிக்
களைப்பதனைப் போக்குதற்காம் இடமாய் ஆகும்
ஆண்டவனின் விண்ணரசும் அதற்கு நிகராம்
அறிந்திடுவீர் உலகீரே! என்று சொன்னார் (பா.3307)

என்னும் பாடலாக வடித்திருக்கிறார். மேலும் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" (மத்தேயு 5: 13) என்னும் விவிலிய வசனத்தை,

மண்ணுலகில் உப்பதுவே உவர்ப்பு நீங்கின்
மறுபடியும் எதைக்கொண்டே உவர்ப்பாய் ஆகும்?
கண்ணெதிரில் கொட்டப்படும் கால் மிதிக்கும்
கருதுபயன் ஒன்றுக்கும் உதவா தாகும்
கண்டுணர்வாய் நீயுந்தான் உலகின் உப்பாம்!
கருத்தின்றிச் சாரமற்றுப் போனால் நீயும்
மண்ணுலகில் மட்டுமன்றி விண்ணில் தானும்
மதிப்பிழப்பாய்! உதவாத பொருளும் ஆவாய்!
(பா.3255)

என்னும் பாடலாக எழுதுகிறார். கிளைக்கதைகளின் மூலம் இடம்பெற்றுள்ள விவிலியப் பகுதிகள் ஆசிரியரின் கைவண்ணத்தால் சிறப்புறுகின்றன.

காப்பிய முடிபு

இரத்த சாட்சியாக மரித்த தேவசகாயம் பிள்ளைக்கு கத்தோலிக்க ஒழுங்கின்படி இதுவரை புனிதர் பட்டம் கொடுக்கப்படவில்லை. தேவசகாயம் பிள்ளையின் சரித்திரத்தைக் காப்பியமாகப் புனைந்த ஆசிரியர் காப்பியத்தின் முடிவுப் படலமான முடிபுனைப் படலத்தில் பாப்பரசரால் தேவசகாயம் பிள்ளைக்குப் புனிதர் பட்டம் அறிவிக்கப் பட்டதாகப் பாடுகிறார். இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்து இச்சிறப்பை அலங்காரங்கள் அமைத்தும், திருவிழாக்கள், தேரோட்டம் முதலியவற்றின் மூலமும் கொண்டாடுகின்றனர். மேலும் இந்நூல் உருவாகி வெளிவரக் காரணமாயிருந்த பலருக்கும் தம் நன்றியினைப் பல பாடல்களில் வெளிப்படுத்துகிறார். குறிப்பாக கல்வித் தந்தை ஜேப்பியார் அவர்களின் சிறப்புகள் பலவற்றைக் குறிப்பிட்டு, அவரை இறைவன் காக்க வேண்டும் எனப் பாடுகின்றார். சான்றாக,

ஆழிப் பேரலை அழித்த தாலே
ஆதர வின்றி மக்கள் தவிக்கக்
காழி வாழும் கைம்பெண் ணார்க்குக்
கால ஊதியம் கொடுப்போன் காக்க!

கோழி குஞ்சைக் காப்பது போலக்
கோடியோர் காத்த சேப்பிஇயார் காக்க!
நாழிப் பொழுதும் வீணாக் காமல்
நற்றொழிற் பயிற்சி நல்குவோன் காக்க! (பா.4131)

என்னும் பாடலைச் சுட்டலாம்.

பெரும்பாலான கிறித்தவம் காப்பியங்கள் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை விவரிப்பதில் குறிக்கோளாக இருப்பதால் காப்பியப் பண்புகளை முழுமையாகப் பின்பற்றவில்லை. ஆனால் திருத்தொண்டர் காப்பியம், காப்பிய இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்பட்டுள்ளதால் சிறந்த கிறித்தவக் காப்பியங்களுள் ஒன்றாக திகழ்கின்றது. இதற்கு ஆசிரியர் இன்னாசியின் கடின உழைப்பும் இலக்கண, இலக்கியப் புலமையும் அனுபவங்களும் காரணங்களாகும். வீரமாமுனிவர், கிருஷ்ணபிள்ளை என்னும் கிறித்தவக் காப்பியப் புலவர் வரிசையில் பேராசிரியர் இன்னாசி சிறப்பிடம் பெற்றுள்ளது இருபத்தோராம் நூற்றாண்டு இலக்கிய உலகிற்குக் கிடைத்த பெருஞ்சிறப்பாகும்.

VII தழுவல் காப்பியங்கள்

26. தேம்பாவணி

முதன் முதலாகத் தமிழில் எழுதப்பட்ட கிறித்தவக் காப்பியம் தேம்பாவணி ஆகும். கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காகத் தமிழகம் வந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெஸ்கி, தமிழின் இனிமையை உணர்ந்து பல நூல்கள் எழுதினார். அதுமட்டுமன்றி, தமிழில் பல எழுத்துகளைச் சீர்திருத்தமும் செய்தார். தேம்பாவணி ஒரு தழுவல் இலக்கியமாக இருப்பினும் கிறித்தவ இலக்கியத்திற்கு அது ஒரு மணிமகுடமாக விளங்குகிறது.

ஆசிரியர் வரலாறு

தேம்பாவணி என்னும் கிறித்தவக் காப்பியத்தை எழுதிய வீரமாமுனிவர், இத்தாலி நாட்டில் வெனிஸ் மாகாணத்தில், மாந்துவா வட்டத்திலுள்ள காஸ்திக்கிளியோனே என்னும் ஊரில் 1680ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கண்டல்போ பெஸ்கி, தாயாரின் பெயர் எலிசபெத் என்பதாகும். இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பதாகும். பெஸ்கி என்பது இவர்களது குடும்பப் பெயராகும். 1698ஆம் ஆண்டு தமது பதினெட்டாம் வயதில் துறவு பூண்டு இயேசு சபையில் அடியவராய்ச் சேர்ந்து இறைப்பணிக்குத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார். இவர் 1700 ஆம் ஆண்டில் ரவீனா நகரில் இலக்கண ஆசிரியராகவும் அதன் பின்னர் பொலோனா நகரில் மூன்று ஆண்டுகள் ஆசிரியராகவும் பணியாற்றினார். 1706ஆம் ஆண்டு வேதசாஸ்திரம் கற்கத் தொடங்கி, 1709ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் குருப் பட்டம் பெற்றார். இவர் பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு, இத்தாலி, பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை உடையவராக விளங்கினார்.

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவதற்காக 1710ஆம் ஆண்டு தம் முப்பதாம் வயதில் லிஸ்பனிலிருந்து

புறப்பட்டு, 1711ஆம் ஆண்டு கோவா வந்து சேர்ந்தார். பின்னர் கொச்சித் துறைமுகத்தின் வழியாக அம்பலக்காடு என்னும் இடத்தை அடைந்தார். அதன் பின்னர் மதுரையைச் சென்றடைந்தார். 1711ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் நாள் முதல் மதுரை மாவட்டத்திலுள்ள காமநாயக்கன் பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு பணியாற்றத் தொடங்கினார். இத்தாலி மொழியில் கான்ஸ்டன்டைன் என்பதற்குத் தைரியம் என்பது பொருளாகும். எனவே இவர் தன்னுடைய பெயரைத் தைரியநாதர் என மாற்றிக் கொண்டார். அப்பெயரே பின்னாளில் வீரமாமுனிவர் என மாறலாயிற்று.

பழனியிலிருந்த சுப்பிரதீபக் கவிராயர் என்னும் நல்லாசிரியரிடம் தமிழ்கற்று, தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஆய்ந்து, தமிழ் மொழியில் காப்பியம், சிற்றிலக்கியம், உரைநடை முதலியன படைக்கும் புலமையினைப் பெற்றார். கூளப்ப நாயக்கன் காதல் என்னும் நூலை எழுதிப் புகழ் பெற்றவர் சுப்பிரதீபக் கவிராயர் என்பது குறிப்பிடத்தக்கது.

வீரமாமுனிவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கயத்தாற்றுப் பாளையத்திலுள்ள குருக்கள்பட்டி என்னும் ஊரில் தங்கி இறைத் தொண்டாற்றினார். பின்னர் தஞ்சாவூரை அடுத்துள்ள ஏலாக்குறிச்சி எனப்படும் திருக்காவலூரை அடைந்து பணியாற்றினார். அதன் பின்னர் விருத்தாசலத்தை அடுத்துள்ள கோனான்குப்பம் என்னும் ஊரில் தங்கியிருந்தார். இவ்வூரில் வைத்துத்தான் தேம்பாவணி எழுதப்பட்டது. அவ்வூர் ஆரியலூர் என தேம்பாவணியில் சுட்டப்படுகிறது.

வீரமாமுனிவரும் சந்தா சாகிபும் நெருங்கிய நண்பர்களாவர். வீரமாமுனிவரின் பெருமையைத் தெரிந்த சந்தா சாகிபு மன்னன், வீரமாமுனிவருக்கு இஸ்மாஸ்தி சந்நியாசி என்னும் பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டினான். இந்த பாரசீகச் சொல்லிற்குத் தூய துறவி என்பது பொருளாகும்.

அம்பலக்காட்டில் இருந்த கல்வி நிலையத்தின் பார்வையாளராக வீரமாமுனிவர் 1746ஆம் ஆண்டு பணியமர்த்தப்பட்டார். அங்கு அவர் தமது நேரத்தை இறைவழிபாட்டிலும் தமிழ் ஆராய்ச்சியிலும் செலவிட்டார். பல வகைகளிலும் தமிழ்த் தொண்டாற்றிய வீரமாமுனிவர் 1747 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 ஆம் நாள் தமது 66 ஆவது வயதில் அம்பலக் காட்டிலுள்ள கிறித்தவ மடத்தில் இறைவனடி சேர்ந்தார்.

தமிழ்ப் பணிகள்

1. எழுத்துச் சீர்திருத்தம்

வீரமாமுனிவர், தமிழ் எழுத்துகளில் குறில், நெடில் ஆகியனவற்றில் காணப்பட்ட குழப்பத்தைப் போக்கினார். வீரமாமுனிவரின் காலத்தில் எகரம், ஒகரம் ஆகிய உயிரெழுத்துக்களும், எகர ஒகரம் சேர்ந்த உயிர்மெய் எழுத்துக்களும் (கெ, ஙெ, கொ, ஙொ) முற்காலத்தில் மேலே புள்ளி பெற்றால் குறில், பெறாவிடில் நெடில் என வழங்கி மக்களிடையேயும் நூலிலும் குழப்பம் ஏற்படுத்தியது. இதனை எ - ஏ, ஒ - ஓ என்று கீழே கோடு, சுழி சேர்த்தும்; உயிர்மெய்க் குறிலுக்கு ‘ெ’, நெடிலுக்கு ‘ே’ என மேலே சுழித்தும் திருத்தியமைத்தார்.

2. உரைநடை

வீரமாமுனிவர் வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்து இயல்பு, ஞானக் கண்ணாடி, வாமன் சரித்திரம், திருச்சபைக் கணிதம், பரமார்த்தகுரு கதை ஆகிய உரைநடை நூல்களைப் படைத்துள்ளார். இவரது பரமார்த்தகுரு கதை நகைச்சுவை நிரம்பிய உரைநடை நூலாகும். இந்நூலை அடிப்படையாகக் கொண்டு இவரைத் தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி என்றும், எள்ளல் (satire) இலக்கிய முதல்வர் என்றும், உரைநடை வழிகாட்டி என்றும் புகழ்வர்.

3. சிற்றிலக்கியம்

வீரமாமுனிவர் திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, அடைக்கல நாயகிமேல் வெண்கலிப்பா, கித்தேரி அம்மாள் அம்மானை, கருணாம்பரப் பதிகம், வண்ணம், அன்னை அழுங்கல் அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். தமிழ் நீதி நூல்கள் சிலவற்றைத் தமிழ்ச் செய்யுள் தொகை என்னும் பெயரால் தொகுத்துள்ளார்.

4. இலக்கணம்

இவர் 1728இல் கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் நூலை எழுதினார். இந்நூல் பேச்சுத் தமிழைப் பற்றியதாகும். குட்டித் தொல்காப்பியம் என அழைக்கப்படும் தொன்னூல் விளக்கம் 1730இல் இவரால் எழுதப்பட்டது. இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திற்கும் இலக்கணம்

கூறுகிறது. இதில் 370 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் இலக்கணத் திறவுகோல், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் நூல்களையும் எழுதியுள்ளார். பிற்காலத்தில் பேராயர் கால்டுவெல் அவர்களுக்கு இந்நூல்கள் பெரிதும் பயனுடையனவாக அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

5. அகராதி

வீரமாமுனிவரின் சதுரகராதி தமிழில் தோன்றிய முதல் அகராதி நூலாகும். இந்நூல் 1732 இல் எழுதி முடிக்கப்பட்டது. இந்நூல் பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கையும் விளக்குகின்றது. மேலும். 'தமிழ்-இலத்தீன் அகராதி', 'போர்த்துகீசியம்-தமிழ்-இலத்தீன் அகராதி' என்னும் இரு அகராதிகளையும் எழுதியுள்ளார்.

6. மொழிபெயர்ப்பு

திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட் பாலையும், தொன்னூல் விளக்கத்தையும் இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளார். இவருடைய திருக்குறள் மொழிபெயர்ப்பு உலகப் புகழ் பெற்றது.

7. கீர்த்தனைகள்

அருள்திரு. சாண்ட்லர் 1901இல் தொகுத்த ஞான கீதங்கள் என்னும் நூலில் வீரமாமுனிவர் இயற்றிய "ஜகநாதா குருபரநாதா" என்னும் பத்து சரணங்களை உடைய கீர்த்தனை இரண்டு பாடல்களாக (88 , 89) இடம் பெற்றுள்ளது.

வீரமாமுனிவர் தமது A Grammar of Common Tamil என்னும் நூலை தரங்கம்பாடி சீர்திருத்தச் சபையின் மூலமாக வெளியிட்டார். வீரமாமுனிவர் தரங்கம்பாடி மிஷனுடன் கருத்து வேறுபாடுகள் உடையவராக இருந்தாலும், வீரமாமுனிவரின் நூலை தரங்கம்பாடி மிஷன் வெளியிட்டது. வீரமாமுனிவரின் காலத்தில் வெளிவந்த நூல் இது ஒன்றேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தேம்பாவணி

வீரமாமுனிவரால் எழுதப்பட்ட பல்வகைக் கிறித்தவ இலக்கியங்களுள் தேம்பாவணி குறிப்பிடத்தக்கது. மதுரைத்

தமிழ்ச் சங்கத்தில் தேம்பாவணி அரங்கேற்றப்பட்டது. அரங்கேற்றத்தின்போது வீரமாமுனிவர் தேம்பாவணிப் பாடல்கள் சிலவற்றை இசையோடு பாடிக்காட்டி அப்பாடல்களுக்கு விளக்கவுரையும் கூறினார். தமிழ்ச்சங்கத்தார் அந்நூலைப் பாராட்டி மகிழ்ந்ததோடு வீரமாமுனிவர் என்னும் பட்டத்தையும் சூட்டிப் பாராட்டினார்கள்.

மூல நூல்

இசுபானிய நாட்டில் ஆகிருதம் என்னும் நகரில் வாழ்ந்த மரி அகிர்தாள் என்னும் கன்னிப் பெண்ணால் 1660 ஆண்டு எழுதப்பட்ட கடவுளின் நகரம் என்னும் நூல் தேம்பாவணியின் மூல நூலாகும். இந்நூலைத் தழுவி 1726ஆம் ஆண்டு முதல் 1728 ஆம் ஆண்டு செப்டம்பர் எட்டாம் நாள் வரை கோனான்குப்பம் என்னும் இடத்தில் வைத்து தேம்பாவணியை எழுதினார். இந்நூல் கடவுளின் நகரம் என்னும் நூலையும் விவிலியத்தையும் அடிப்படையாகக் கொண்டது. தேம்பாவணி, இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தையான சூசையின் வரலாற்றையும் அத்துடன் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றையும் அன்னை மரியின் புகழையும் விவரிக்கிறது.

தேம்பாவணிக்கு முதல் உரை 1729ஆம் ஆண்டு வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. தேம்பாவணி 1851ஆம் ஆண்டு புதுவை சன்ம இராக்கினி மாதா அச்சுக் கூடத்தில் முதன் முதலாக அச்சிடப்பட்டது. சென்னையில் தமிழாசிரியராக விளங்கிய வித்துவான் ஏ.எஸ். ஜெகராவ் முதலியார் 1901ஆம் ஆண்டு முதற் காண்டத்திற்கு விருத்தியுரை எழுதி அச்சிட்டார். தமிழ் இலக்கியக் கழகம் 1961இல் முதல் காண்டத்தையும், 1964 மே மாதம் இரண்டாம் காண்டத்தையும், 1964 டிசம்பர் மாதம் மூன்றாவது காண்டத்தையும் உரையுடன் வெளியிட்டது. முதல் காண்டம் புதிய ஏற்பாட்டையும் இரண்டாம் காண்டம் பழைய ஏற்பாட்டையும், மூன்றாம் காண்டம் இறையியல் கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

பாயிரம்

தேம்பாவணியில் அமைந்துள்ள பாயிரம் பதின்மூன்று பாடல்களை உடையது. இப்பாயிரத்தில் கடவுள் வணக்கம், காப்பியத் தலைவன் வளனின் பெருமை, அவையடக்கம், நூல் வரலாறு என்னும் பகுதிகள் இடம் பெற்றுள்ளன. கடவுள் வணக்கப் பாடல்,

சீரிய உலகம் மூன்றும் செய்து அளித்து அழிப்ப வல்லாய்
நேரிய எதிர் ஒப்பு இன்றி நீத்த ஓர் கடவுள் தூய
வேரிய கமல பாதம் வினை அறப் பணிந்து போற்றி
ஆரிய வளன் தன் காதை அறம் முதல் விளங்கச் சொல்வாம்
(பாயிரம், பா.1)

என அமைந்துள்ளது. இதைத் தொடர்ந்து வரும் பாடல்களில் காப்பியத் தலைவனான வளனின் தன்னேரில்லாச் சிறப்புகள் சுட்டப்படுகின்றன. அவையடக்கப் பாடல்களைத் தொடர்ந்து நூலின் வரலாற்றினைக் குறிப்பிடுகிறார்.

காப்பியக் கட்டமைப்பு

இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தையாகிய வளன் தேம்பாவணி காப்பியத்தின் தலைவர் ஆவார். இக்காப்பியம், நாட்டுப்படலம் தொடங்கி முடிசூட்டுப் படலம் ஈறாக 36 படலங்களையும் 3615 பாடல்களையும் கொண்டு விளங்குகின்றது. 'வேரியங் கொடியோன்' என வீரமாமுனிவரால் போற்றப்பட்ட சூசை மாமுனிவருக்கு ஒளி முடி சூட்டியபோது, அவர் கையிலுள்ள நறுமணிக் கொடியிற்பூத்த மலர்கள் 3615 என்றும், அம்மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் 36 என்றும் கணக்கிட்டு, அதற்கு ஏற்பவே நூலை அமைத்ததாக வீரமாமுனிவர் பின்வரும் பாடலின் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

வான்மேல் மகுடம் புனைநாளில் வரமா தவன்றன் கொடிபூத்த
தேன்மேல் தளம்புஆ றுநூறு சேர்ந்த மூவைந் திருமணிப்பூ
நூன்மேல் முறைநை யாத்தொடுத்த நுண்மண் ணாறாறு அணியிதென
மீன்மேல் விளங்கும் வளன்பதத்தில் விரும்பிச் சாத்தி மீண்டுரைத்தார்
(முடிசூட்டு படலம், பா.131)

என வீரமாமுனிவரே கூறியிருப்பதால் இந்நூல் முப்பத்தாறு படலங்களால் இயற்றப்பட்டது என்பது தெளிவாகிறது. இப்பாடலில் ஆசிரியர் காண்டங்களைப் பற்றிக் குறிப்பிடாததால் பிற்காலத்தில் நூலைப் பதிப்பித்தவர்கள் காண்டங்கள் அமைத்துப் பெயரிட்டுள்ளனர். வீரமாமுனிவரின் தேம்பாவணி சுமார் 125 ஆண்டுகளுக்குப் பின் பாண்டிச்சேரியிலிருந்து தூபியர் அடிகளாரால் 1851, 1852, 1853 ஆம்

ஆண்டுகளில் முறையே முதல், இரண்டு, மூன்றாம் காண்டங்களாகப் பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்பில் தேம்பாவணி முதல் காண்டம், இரண்டாம் காண்டம், மூன்றாம் காண்டம் என மூன்று காண்டங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. நூலைப் பதிப்பித்தவர்கள் முப்பத்தாறு படலங்களையும் முறையே காண்டத்திற்குப் பன்னிரண்டு படலங்கள் வீதம் மூன்று காண்டங்களாக வகுத்து அமைத்துள்ளனர் என ஊகிக்கமுடிகிறது. ஆனால் ஜோசப் ராயர் என்னும் வசன நூலாசிரியரால் மூன்று காண்டங்களுக்கும் முறையே யூதேயா காண்டம், எசித்துசேர் காண்டம், முக்திக் காண்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளன.

காப்பியக்கதைச் சுருக்கம்

முதல் காண்டம்

காப்பியத் தலைவனான வளனின் நாடு யூதேயா. இந்நாட்டின் தலைநகரம் எருசலேம். தாவீது அரசனின் மரபில் தோன்றியவன் வளன். தாவீது சிறுவனாக இருக்கும்போது கடவுளின் துணையால் கோலியாத்தை வென்று சவுல் மன்னனின் மகளை மணந்து அரசகட்டிலில் ஏறினான். வளனின் தந்தை சகோபு; தாய் நீப்பி. வளன் தமது பன்னிரெண்டாம் வயதில் அருந்தவம் செய்ய காட்டிற்குச் சென்றான். வழியில் ஒரு முதியவர் எதிர்ப்பட்டு சோதனைகளை வெற்றி காண்பதே தூய தவம் என அறிவுறுத்தி, நாட்டிலுள்ள அனைவரையும் அந்நெறியை மேற்கொள்ளச் செய்வதுதான் சிறந்தது எனக் கூறி மறைந்தார். தன்னுடன் உரையாடியது இறைவனின் தூதர் என்பதனை உணர்ந்து வளன் தன் வீட்டிற்குச் சென்றான். எருசலேம் நகரில் வாழ்ந்து வரும் மரியாளிடம் தேவதூதன் இறைவனின் மகன் மரியாளின் வயிற்றில் பிறப்பதைக் கூறுகிறான். கலக்கமடைந்த மரியாளுக்கு தூதன் சூசையின் சிறப்புகளை விவரிக்கிறான். திருமணத்திற்கு மணமகனைத் தேர்ந்தெடுக்க, சீமையோன் என்பவர் கோயிலில் நின்ற இளைஞர்கள் கையில் ஒவ்வொருவருக்கும் ஒரு கோலைக் கொடுத்து, எவருடைய கையிலுள்ள கோல் தளிர்க்கிறதோ அவருக்கே மரியாள் எனக் கூறினார். வளனின் கையிலிருந்த கோல் தளிர்த்து பூத்தது. சீமையோன் வளனின் கை மேல் மரியாளின் கையை வைத்து நும் குலத்தில் இறைவன் தோன்றுவான் என்றார். சீமையோனின் அறிவுரைப்படி வளன்

மரியாளுடன் அவரது ஊராகிய நாசரேத்துக்குச் செல்கிறான். இருவரும் இல்லற வாழ்வில் துறவறத்தை மேற்கொண்டு வாழ்ந்தனர்.

அரசனின் ஆணைப்படி குடிமதிப்பு எழுத பெத்லகேமுக்கு சூசையும் கருவுற்ற நிலையிலுள்ள மரியாளும் செல்கின்றனர். வழியில் காந்தரி என்னும் காமுகி மனம் மாறினாள். பெத்லகேம் சென்று அரசனின் கட்டளைப்படி தங்கள் பெயர்களைப் பதிவு செய்தனர். பெத்தலகேமில் தங்குவதற்கு உறவினர்கள் வீடுகளில்கூட இடம் கிடைக்கவில்லை. இரவு மாட்டுக் கொட்டிலில் தங்க அங்கு இயேசு பிறந்தார். திருக்குழந்தையை ஆயர்களும் அரேபியா, பெர்சியா, சபதே நாட்டு மன்னர்களும் வாழ்த்தி வணங்குகின்றனர். குழந்தை பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்து இயேசு என்னும் பெயரைச் சூட்டினர். இஸ்ரவேலர் ஒவ்வொருவரும் தம் முதல் மகனை எருசலேம் தேவாலயத்தில் ஒப்புக்கொடுப்பர். அம்மரபின்படி, குழந்தை பிறந்த நாற்பதாம் நாள் எருசலேம் தேவாலயத்திற்கு சூசையும் மரியும் இயேசு பாலகனை எடுத்துச் செல்கின்றனர். ஆலயத்தில் சீமையோன் குழந்தையை ஆசீர்வதித்தார். பின்னர் சூசையும் மரியும் இரண்டு புறாக்களைத் திருமகனுக்குப் பதிலீடாகக் கொடுத்துவிட்டு கோவிலுக்கு நேர்ந்து கொண்ட திருமகனை மீட்டுக் கொண்டனர்.

இரண்டாம் காண்டம்

சூசையும் மரியாளும் தூதர்களின் கட்டளைப்படி ஏரோதிடம் இருந்து தங்கள் குழந்தையைக் காக்கும் வண்ணம் எகிப்து நாட்டிற்குப் புறப்படுகின்றனர். பயணத்தின்போது மிக்காயேல் என்னும் தூதன் இறைவனின் சிறப்புகளைக் கூறினான். பின்னர் காபிரியேல் என்னும் தூதன் நோவாவின் கதையைக் கூறினான். மீண்டும் மிக்காயேல் என்னும் தூதன். இறைவன் ஐந்து நகரங்களை அழித்ததை விளக்கினான். மீண்டும் மிக்காயேல் தூதன் அவர்களுக்கு சோசுவனின் (யோசுவா) போர் வெற்றியினைக் கூறினான். காபிரியேல் தூதன் சேதையோன் (கிதியோன்) பகைவர்களை அழித்த முறையினை விளக்கினான். அறஞ்சயன் என்னும் தூதன் கஞ்சோனின் (சிம்சோன்) வீரத்தையும் பெண்ணின்பத்தால் அவன் வீழ்ந்ததையும் கூறினான். சட்சதன் என்னும் தூதன் இறைவன் மோயீசனுக்குப்

பத்துக் கட்டளைகளை அருளிய இடமான சீனாயி மலையைப் பற்றி விவரித்தான். பின்னர் அவர்கள் சீனாயி மலையைக் கடந்து பேற்சபை என்னும் பாலைவனத்தை அடைந்தனர். பின்னர் வழியில் சித்திரகூடத்தை அடைந்தனர். அங்குள்ள அதிட்டன் என்னும் முனிவர், ஆணரனின் (யோசேப்பு) வரலாற்றை சூசையிடம் கூறுகிறார். காபிரியேல் தூதன் கையாறு என்னும் ஆற்றின் சிறப்பையும் மோசேயின் பிறப்பு மற்றும் வளர்ப்பு பற்றிய செய்திகளையும் கூறினான். இறுதியில் எகிப்து நாட்டின் தலைநகரான இரவிமாபுரத்தை அடைந்தனர்.

மூன்றாம் காண்டம்

ஏரோது மன்னன் குழந்தைகளைக் கொன்று குவித்தான். கருணையன் யோவான் ஸ்நாபகனின் வரலாறு கூறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவிற்கு கொடையின் சிறப்பை விளக்க தொபீயனின் வரலாற்றை சூசை விவரிக்கிறார். சூசை வாமனிடம் அறிவுரைகள் கூறியதால் நல்லவனாக மாறுகிறான். சூசையின் அறிவுரைகளால் எகிப்து நாட்டில் மறை செழித்தோங்கியது. அதுபொறுக்காத சுரமி என்பவள் சூசையைப் பழித்துரைத்தாள். நாவகன் திருந்தினான். இறுதியில் சுரமி நாக்கை அறுத்துக் கொண்டு நரகில் வீழ்ந்தாள். பின்னர் திருக்குடும்பத்தினர் எகிப்து நாட்டிலிருந்து தம் நாட்டிற்குத் திரும்பினர். இயேசு பாலகனுக்குப் பன்னிரண்டு வயதானபோது சூசையும் மரியும் எருசலேம் நகரில் நடைபெறும் பஸ்கா பண்டிகைக்குப் புறப்பட்டுச் சென்றனர். பண்டிகைக் கூட்டத்தில் மகனைக் காணாமல் தத்தளித்தனர். மூன்று நாட்களாக மகனைக் காணாமல் இறுதியில் எருசலேம் தேவாலயத்தில் மகனைக் கண்டனர். பின்னர் நாசரேத்தூருக்குப் புறப்பட்டுச் சென்றனர். சூசைக்கு 52 வயதானபோது பலவிதமான நோய்களில் எட்டு ஆண்டுகள் துன்புற்று இறந்தார். விண்ணகம் சென்ற சூசைக்கு அங்கு முடி சூட்டப்பட்டது. விண்ணகம், மண்ணகம் என்னும் இரண்டு உலகங்களிலும் முடிசூட்டப்பட்டதாகக் காப்பியத்தை முடித்திருப்பது புதுமைத் தன்மையுடன் அமைந்துள்ளது.

முதல் காண்டப் படலங்கள்

முதல் காண்டமான யூதேயா காண்டத்தில் நாட்டுப் படலம், நகரப் படலம், வளன் சனித்த படலம், பால மாட்சிப் படலம், திருமணப் படலம், ஈறறம் பொருத்து படலம், ஐயம் தோற்று படலம், ஐயம் நீங்கு படலம், மகிழ்வினைப் படலம்,

மகவருள் படலம், காட்சிப் படலம், மகன் நேர்ந்த படலம் என்னும் பன்னிரெண்டு படலங்கள் உள்ளன.

இரண்டாம் காண்டப் படலங்கள்

இரண்டாவது காண்டமான எசித்துசேர் காண்டத்தில் பைதிரம் நீங்கு படலம், இளவல் மாட்சிப் படலம், சோசுவன் வெற்றிப் படலம், சேதையோன் வெற்றிப் படலம், காசை சேர் படலம், சீனாயி மாமலை காண் படலம், பாலை புகு படலம், சித்திர கூடப் படலம், நீர் வரமடைந்த படலம், எசித்து சேர் படலம், குணுங்கு மந்திரப் படலம், சோகு தோர்வைப் படலம் என்னும் பன்னிரெண்டு படலங்கள் உள்ளன.

மூன்றாம் காண்டப் படலங்கள்

மூன்றாவது காண்டமான முக்திக் காண்டத்தில் குழவிகள் வதைப் படலம், கருணையன் மாட்சிப் படலம், ஞாபகப் படலம், வாமன் ஆட்சிப் படலம், வேதக் கெழுமைப் படலம், மீட்சிப் படலம், பிரிந்த மகவைக் காண் படலம், புரோகிதப் படலம், பிணி தோற்று படலம், தூதுரைப் படலம், உத்தானப் படலம், முடிசூட்டுப் படலம் என்னும் பன்னிரெண்டு படலங்கள் உள்ளன.

தனித்தன்மைகள்

கிறித்தவக்காப்பியமான தேம்பாவணி பல்வேறு தனித்தன்மைகளைக் கொண்டது. சீவகசிந்தாமணியின் காப்பியநடையைத் தழுவி, திருக்குறளின் சிறந்த கருத்துகளில் தோய்ந்து, கம்பரின் கவிச்சுவை கனியப் பாடப்பட்ட அரிய நூல் தேம்பாவணியாகும். நாலடியாரின் சில கருத்துகளும், கலிங்கத்துப் பரணியின் போர்க்கள வருணனைகளும் தேம்பாவணியில் இடம்பெற்றுள்ளன. தேம்பாவணியிலுள்ள பாயிரப் பாடல்கள் கம்பராமாயணத்திலுள்ள முகவுரைப் பாடல்கள் போன்று அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் கோவலனிடம் மாங்காட்டு மறையோன் மதுரைக்குச் செல்லும் மூன்று பாதைகளை விவரித்து, அதில் நடுப்பாதையில் பயணிக்குமாறு எடுத்துக் கூறுகிறான். இதைப்போன்று, வளனும் மரியாளும் பயணம் செய்யும்போது மைக்கேல் என்னும் தலைமைத் தேவதூதன் அவர்கள்முன் தோன்றி நடுவழியில் செல்லுமாறு அறிவுறுத்துகின்றான். நாட்டு, நகர வர்ணனைகளிலும் வீரமாமுனிவர் சிந்தாமணியையும்

கம்பராமாயணத்தையும் பின்பற்றியுள்ளார். இயற்கை வருணனையும் உவமைச் சிறப்பும் தேம்பாவணியில் செறிவாகக் காணப்படுகின்றன. இந்நூலில் அரிய கற்பனைகளும் உவமை நயங்களும், சிந்தைக்கினிய சந்தச் செறிவும், தெவிட்டாத நடையழகும், தொடையழகும் மலிந்துள்ளன. வீரமாமுனிவர் தம் காவியத்தை மங்கலமான முறையில் முடித்து இன்பியற் காவியமாக்கியுள்ளார். இக்காவியத்தின் முடிவு சிலப்பதிகாரத்தின் முடிவைப் போன்று அமைந்துள்ளது. "இந்நூலை உரைப்பவரும் கேட்பவரும் வானுலக வாழ்வு பெறுவர்; சூசையப்பரும் மரியம்மையாரும் அவர்கட்குத் தம் திருக்குமாரரோடு அருள் வழங்குவர்" என நூற்பயனைக் கூறி, வீரமாமுனிவர் தேம்பாவணியை முடிக்கின்றார்.

தலைமை மாந்தர் - வளன்

ஒரு காப்பியத்திற்குச் சிறந்த அமைப்பும் அழகும் தருவது தலைமை மாந்தர் படைப்பாகும். இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தையாகிய வளன் என்பவர் தான் காப்பியத்தின் தலைவராவார். பிற மொழியில் சூசை என்பர். ஆனால் அதற்கு இணையான சிறந்த தமிழ்ச்சொல்லாக வளன் எனக் கொள்ளலாம் என வீரமாமுனிவர் கூறிச் செல்கிறார். சூசையின் வாழ்வு அன்னை மரியின் வாழ்வோடு பிரிக்க முடியாதபடி கலந்தது. ஆதலால் இருவர் சிறப்பும் இணைத்தே காப்பியத்தில் விளக்கப்படுகிறது. ஆதி மனிதனான ஆதாம் செய்த தீவினையால் உலக மக்கள் அனைவரும் கருவிலேயே பாவம் உடையவர்களாகப் பிறக்கின்றனர் என்பது கிறித்தவக் கோட்பாடு. அந்த பாவம் இல்லாதவராகத் தோற்றமெடுத்தது மரியின் சிறப்பென்பது கத்தோலிக்கச் சமயக்கோட்பாடு. அதனைக் காப்பியத்தில் பல இடங்களிலும் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

சூசையப்பரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய சூழலும் இறைக்கட்டளையும் கன்னி மரியாளுக்கு ஏற்பட்டது. திருமணத்திற்கு முன், துறவு வாழ்வையே விரும்பிய கன்னி மரியாளுக்கு இதனால் கலக்கம் ஏற்பட்டது. அப்போது இறைவன், மரியாளுக்குக் காட்சி தந்து சூசையின் இயல்புகளை,

அடை ஆரணம் நேர் அறம் நேர்வடிவான்
கொடை ஆசையினால் குளிர் வான் அனைவான்

உடை ஞான அறிவால் ஒளி மான அருள்
கடை ஆவது இலால் கடல் நேரினன் ஆல்
(திருமணப் படலம், பா. 71)

என விவரிக்கிறார். மனுக்குலம் பெற்ற வேத நூல்களுக்கு விளக்கமாவான்; தருமத்தின் வடிவிற்கு நிகராவான்; பிறருக்கு வாரி வழங்க வேண்டும் என்ற வேட்கையால் மழை மேகத்திற்கு ஒப்பாவான்; ஞானம் நிறைந்த அறிவால் ஞாயிறுக்கு இணையாவான்; பெருமைமிக்க எல்லையற்ற தெய்வீக அருள் உணர்வால் கடலுக்கே நேராவான் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

திருக்குறளின் தாக்கம்

வீரமாமுனிவர் திருக்குறளிலுள்ள அறத்துப் பாலையும், பொருட் பாலையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். திருக்குறளை வெளிநாட்டினரும் படிக்க வேண்டும் என்னும் வீரமாமுனிவரின் எண்ணம் பாராட்டத்தக்கது. வீரமாமுனிவர் திருக்குறளை நன்கு கற்றதனால் தமது தேம்பாவணியில் பல இடங்களில் திருக்குறள் கருத்துகளை எடுத்தாண்டுள்ளார். உழவுத் தொழிலின் சிறப்பை,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (குறள்.1033)

எனத் திருவள்ளுவர் பாடுகிறார். இக்கருத்தினை மனதில் கொண்டு வீரமாமுனிவர் மகிழ்வினைப் படலத்தில் சூசையப்பரும் மரியம்மையாரும் அறம் ஆற்றிய முறையைக் கூறியபோது,

உழுதுண் பார்உயிர் வாழ்பவர் மற்றெலாம்
தொழுதுண் பார்எனின், தாம்தொழில் செய்தபின்
அழுதுண் பார்கொடை கோடல்இல் லாயின
பொழுதுண் பாரிலி யார்எனப் பூசவே
(மகிழ்வினைப் படலம், பா.36)

எனப் பாடுகிறார். திருவள்ளுவர் அன்பு குறித்து அன்புடைமை என்னும் அதிகாரத்தில் விவரிக்கிறார். அவ்வதிகாரத்தில் அன்பில்லாதவர் பிணத்தைப் போல்வர் என்னும் கருத்தமைந்த,

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு (குறள்.80)

என்னும் குறளை அடிப்படையாகக் கொண்டு,

அன்பு வாய்ந்த உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோலுடல் போர்த்ததென் றன்புறை
இன்பு தோய்ந்த நிலைஎனத் தானிவண்
துன்பு காய்ந்த உயிர்த்துணை யாயினான்

(பாலமாட்சி, பா.65)

என்னும் பாடலை இயற்றியுள்ளார். காப்பியத்தின் தலைவரான சூசையப்பர் உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் துணைவராக அன்புள்ளத்தோடு வாழ்ந்த வாழ்வை திருவள்ளுவரை அடிப்படையாகக் கொண்டு விவரித்துள்ளார். திருவள்ளுவர் கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டவர்க்கு மொட்டையடித்தலும் சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் தேவையில்லை என்னும் கருத்தினை,

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின் (குறள்.280)

என்னும் குறள் மூலம் எடுத்தியம்பியுள்ளார். இக்குறளின் கருத்தை வீரமாமுனிவர் தமது தேம்பாவணியில்,

கோலமே வீண்டா; குளித்தல் வீண்டா;
சூலமே வீண்டா; துறவு வீண்டா;
காலமே மந்திரம் கதைத்தல் வீண்டா;
சீலமே கெடநசை செகுத்தில் காலென்பார்

(சித்திரகூட படலம், பா.127)

என்னும் பாடல் மூலம் அறவாழ்வைக் கெடுக்கும் ஆசையை அடியோடு அழிக்கவில்லை என்றால் தவம் செய்வதாகப் பூணும் புறக் கோலமும் பொருள் அற்றதே; குளித்து எழுதலும் பயன் அற்றதே; சூலத்தைத் தூக்குவதும் அவமே; துறவு மேற்கொள்ளுவதும் வீணே; அதிகாலையில் எழுந்து மந்திரங்கள் ஓதுதலும் அர்த்தம் அற்றதே என விவரித்துள்ளார். தேம்பாவணியிலுள்ள,

நுனிக்கொம் பினும்ஊக் கினர்நொந்து இறப்பர், அனைய
ஊக்கம்
குணிக்குஉம் பரும்மா னிடரும் குணிவாக் கெட்டார் என்னா
கணிக்கும் பரிசால் கடவுள் மனுவாய் எளியை காட்டத்
தணிக்கும் பரிசால், தாய், தன் தொழில்செய் யாதால் தகவோ

(மகிழ்வினைப் படலம், பா.27)

என்னும் பாடலில் திருவள்ளுவரின்,

நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும் (குறள்.467)

என்னும் குறளின் தாக்கம் இடம்பெற்றுள்ளது. மேலும்,

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகு மறிவு (குறள்.452)

என்னும் குறளை மனதில் கொண்டு தேம்பாவணியில்,

நிலத்தின் தன்மையால் நீர்திரிந் தனையபற் றுளம்தன்
புலத்தின் தன்மையால் புறத்தவை தோன்றலால் அன்பின்
நலத்தின் தன்மையால் தீயவும் நல்லவாம் பகைகொள்
சலத்தின் தன்மையால் நல்லவும் தீயவாம் சகத்தே
(வேதக் கெழுமைப் படலம், பா.106)

என்னும் பாடலை வடித்துள்ளார். வீரமாமுனிவர் தமது காப்பியத்தில் தெளிந்த உணர்வு கொண்டவர்கள் பகையை வளரும் சிறுபருவத்திலேயே அறுத்தெறிவர் எனவும் அச்சுறுத்தும் வேந்தனைக் கொல்லுதல் நல்லது எனவும் குறிப்பிடுகிறார்.

உருட்டிய செங்கோல் ஈந்தே உயிர் உய்வர் எவரும் உண்டோ
மருட்டிய பகைமுற்றாமுன் வளர்திறத்து அடியில் ஈர்த்து
தெருட்டிய நீரார் கோன்மை திறம்பெறத் தாயும்மேவார்
வெருட்டிய முறையில் வந்த வேந்தனைக் கோறல் நன்றே
(குழவிகள் வதைப் படலம்,பா.12)

என்னும் பாடலில் மேற்கூறிய கருத்தினை விவரிக்கிறார். இக்கருத்தை விளக்க,

இளைதாக முள் மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து (குறள்.879)

என்னும் குறளை ஆதாரமாகக் கொள்கிறார்.

மரங்கள் அடர்ந்த மண்டபத்தில் வளன் அமர்ந்திருந்து பலருக்கும் அறிவுரைகள் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது வாமன் என்பவன் தான் செய்த குற்றங்களுக்காக வருந்தி வளனிடம் அறிவுரை கேட்டான். அப்போது வளன் அங்கிருந்த மக்களையும் வாமனையும் பார்த்து, நமது ஐம்பொறிகளையும் தீமையான வழிக்குச் செலுத்தாமல் துன்பம் வரும்போது ஆமை எவ்வாறு தன் தலை, கால்களைத் தன் ஓட்டிற்குள் இழுத்து

மறைத்துக் கொள்ளுகிறதோ அது போன்று இருக்க வேண்டும் என்கிறார். இதனை,

ஐம்பொறிப் பகைகண்டு அஞ்சி
அடக்கலின் ஆமை போல்வாய்
வெம்பொறிப் புதவை ஓர்ந்து
விளைபகை சிறிதென்று எண்ணேல்
பைம்பொறிப் பாந்தள்தம் கூர்
பல்பட மதநீர்க் குன்றின்
செம்பொறிப் புகைக் கண் யானை
சிதைந்து உயிர் மாளும் அன்றோ
(வாமன் ஆட்சிப் படலம், பா.150)

எனத் தொடங்கும் பாடல் வாயிலாகப் புலப்படுத்துகிறார். இக்கருத்து,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள்.126)

என்னும் குறளின் கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது. இத்தகைய சான்றுகள் மூலம் வீரமாமுனிவரின் திருக்குறள் மீதுள்ள புலமையை அறிந்து கொள்ளமுடிகிறது.

கம்பராமாயணத் தாக்கம்

எச்.ஏ. கிருஷ்ணபிள்ளைக்கு இரட்சணிய யாத்திரிகம் எழுத கம்பராமாயண அறிவு உறுதுணையாக இருந்ததைப் போன்று, தேம்பாவணியைப் படைக்க வீரமாமுனிவருக்கும் கம்பராமாயணம் பக்க பலமாக இருந்தது. கம்பராமாயணத்திலுள்ள அவையடக்கப் பாடலான,

ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று, ஒரு
பூசை, முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மாற்று, இக்
காசு இல் கொற்றத்து இராமன் கதைஅரோ! (பாயிரம், பா.4)

என்னும் இப்பாடலை ஆதாரமாகக் கொண்டு,

சூசையுற் றனவ ரங்கள் தூய்கடல், கடக்கல் இல்லா
ஓசையுற்றொழுகு அமிர்தம் உடைகட லென்ன நண்ணி
பூசையுற்று அதனை நக்கப் புக்கென, உள்ளத்தைத் தூண்டும்
ஆசையுற்று ஊம னேனும் அருங்கதை அறையல் உற்றேன்
(தேம்பாவணி, பாயிரம், 4)

என்னும் பாடலை இயற்றியுள்ளார். அமிர்தக் கடல் உடைபட்டு

வேகமாகப் பாய்ந்து செல்லும்போது அதில் நக்கிக் குடிக்க வேண்டும் என்னும் விருப்பத்தால் ஓடிச் செல்லும் பூனையைப் போல உள்ளத்தைத் தூண்டும் ஆசையால் இக்கதையைப் பாடத் தொடங்குகிறேன் என்கிறார்.

அயோத்தி நகரைக் கம்பர் வருணிக்கும் திறம் பாராட்டத்தக்கது. அயோத்தி நகரில் முரசு முழங்குகின்றது; மேகமும் அலைகடலும் முரசின் ஓசைக்கு அஞ்சுகின்றன. அந்நகரில் திருடர்கள் இல்லை; அதனால் சேமித்த பொருளைக் காப்பவர்கள் இல்லை; இரப்பவர்கள் இல்லை; அதனால் கொடுப்பவர்களும் இல்லை என்பதை,

> **தெள் வார் மழையும், திரை ஆழியும் உட்க, நாளும்,**
> **வள் வார் முரசம் அதிர் மா நகர் வாழும் மாக்கள்**
> **கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்**
> **கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ**
> **(நகரப் படலம், பா.73)**

எனப்பாடுகிறார். இப்பாடலை மனதில் கொண்டு வீரமாமுனிவர் எருசலேம் நகரைப் பார்க்கிறார். அவர் காணும் எருசலேம் நகர், கம்பர் கண்ட அயோத்தி நகரமாகக் காட்சியளிக்கிறது.

> **தெள்வார் உரை முகிலும் கடல் திரையும் கெட முகியா**
> **வள்வார் முரசு அதிர் மாநகர் வயின் வாழ்பவர் கொடையைக்**
> **கொள்வார் இல குறை அல்லது குறை இல்லதும் எனவே**
> **கள்வார் இல கடையார் இல கழிவார் இல நயவார்**
> **(நகரப்படலம், பா.64)**

என எருசலேம் நகரை வீரமாமுனிவர் வருணிக்கிறார். அம்மாநகரில் தெளிவாக நீண்டு ஒலிக்கும் மேகத்தின் முழக்கத்தையும், கடல் அலைகளின் பேராரவாரத்தையும் வெல்லும் முறையில் வலிய வாரால் கட்டப்பட்ட முரசின் ஓசை ஓயாமல் முழங்கும்; அத்தகைய நகரில் வாழும் மக்களுக்கோ, தாம் தரும் கொடையினைப் பெற்றுச் செல்ல ஆங்கு வருவார் யாருமில்லையே என்ற ஒரு குறையைத் தவிர அவர்களுக்கு வேறு குறையே இல்லை; ஆங்குக் கள்வர்களும் இல்லை; கயவர்களும் இல்லை; தீயோரும் இல்லை; எனவே அந்நகர மக்கள் அனைவரும் ஆங்கு மிக்க மகிழ்ச்சியாகவே வாழ்வர் என வீரமாமுனிவர் எருசலேம் நகரை வருணிக்கிறார். இராமன் மிதிலை நகரில் வில்லை வளைத்து சீதையைத் திருமணம் செய்த காட்சியை,

தடுத்து இமையாமல் இருந்தவர், தாளில்
மடுத்ததும், நாண் நுதி வைத்ததும், நோக்கார்;
கடுப்பினில் யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்

(கார்முகப்படலம், பா.34)

எனக் கம்பர் பாடுகின்றார். இராமன் வில்லை எடுத்ததற்கும் ஒடித்ததற்கும் இடையில் என்ன நடந்தது என ஒருவருமே அறியார். இப்பாடல் நயத்தை வீரமாமுனிவர் தேம்பாவணியில் பின்பற்றி,

கல்லை ஏற்றலும் கவணினைச் சுழற்றலும் அக்கல்
ஒல்லை ஓட்டலும் ஒருவரும் காண்கிலர் இடிக்கும்
செல்லை ஒத்தன சிலைநுதல் பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்திருள் இரிந்தென வீழ்தலும் கண்டார்

(வளன் சனித்த படலம், பா.29)

எனப் பாடியுள்ளார். கோலியாத்தைத் தாவீது என்னும் சிறுவன் எதிர்த்தான். தாவீது தன் கையிலிருந்த கவணின் மூலம் கல்லை கோலியாத்தின் நெற்றியில் வீசினான். கல் கோலியாத்தின் நெற்றியில் பட்டு கோலியாத்து கீழே வீழ்ந்தான். தாவீது எப்போது கல்லைக் கவணில் வைத்து வீசினான் என ஒருவரும் அறியவில்லை என வீரமாமுனிவர் பாடுகிறார்.

சீவகசிந்தாமணியின் தாக்கம்

சீவகசிந்தாமணிக்கு நிகரானது தேம்பாவணி என எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். வீரமாமுனிவர் சிந்தாமணியை முழுமையாகக் கற்றதனால், தாம் படைத்த காப்பியத்தில் சீவக சிந்தாமணியின் தாக்கம் அமைந்துள்ளது. திருத்தக்க தேவர் ஏமாங்கத நாட்டு வளத்தை வருணனையின் மூலம் விவரிக்கிறார். அந்நாட்டிலுள்ள தென்னை மரத்திலிருந்து தேங்காய்கள் அருகிலுள்ள கமுக மரத்தில் வீழ்ந்து, அதிலுள்ள தேனிறாலைக் கீறி, பலா மரத்திலுள்ள பலாப்பழத்தைப் பிளந்து, மா மரத்திலுள்ள கனிகளைச் சிதறி, பின்னர் வாழைமரத்திலுள்ள பழங்களை நசுக்குமாம் எனப் பின்வருமாறு பாடுகிறார்:

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் இசையால் திசைபோய துண்டே

(நாமகள் இலம்பகம், பா.2)

இப்பாடலின் சுவையில் மனதைப் பறிகொடுத்த வீரமாமுனிவர் தேம்பாவணியிலுள்ள சூதேயா நாட்டின் வளத்தைக் குறிப்பிடும்போது,

> பாய்ந்த தெங்கதின் பழங்கள் வீழ்தலால்
> வாய்ந்த வாழைமா வருக்கை ஆசினி
> சாய்ந்த தீங்கனி சரிந்தே தேன்புனல்
> தோய்ந்த வாயெலாம் இனிமை தோய்ந்தன
>
> (நாட்டுப் படலம், பா.33)

எனப் பாடுகிறார். இப்பாடலில் சூதேயா நாட்டில் முக்கனிச்சாறும் ஆற்று நீரில் கலந்து, அந்நீரைப் பருகுவோர் வாயெல்லாம் இனிமை ஊட்டத் தொடங்கிவிட்டது என்னும் கருத்தினை நிலைநாட்டுகிறார்.

சோழநாடு வயல் வளம் மிக்கது. வயலிலுள்ள நெற்பயிரை அதன் மூன்று நிலைகளை ஆதாரமாகக் கொண்டு திருத்தக்கத் தேவர்,

> சொல்லருஞ் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
> மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
> செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
> கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே
>
> (நாமகள் இலம்பகம், பா.24)

எனப் பாடுகிறார். இப்பாடலில் நெற்பயிர் கதிர் வெளிவருவதற்கு முன்னர் அதன் இடை கனத்திருப்பதால் அது பச்சைப் பாம்பைப் போல் காட்சியளிக்கிறது என்றும், நெற்கதிர் முற்றாத நிலையில் தலை தூக்கி நிற்பதை பண்பாடு இல்லாத ஒருவனுக்குத் திடீரென செல்வம் வந்தால் செருக்குடன் தலை நிமிர்ந்து நிற்பதைப் போல் தோற்றமளிக்கிறது என்றும், நெற்கதிர் முற்றியவுடன் தலைசாய்ந்து நிற்பது கல்வியறிவு உடைய சான்றோர்கள் தலை வணங்கிப் பணிவுடன் நடப்பதைப் போல் காணப்படுகிறது என்றும் தேவர் விவரிக்கிறார். இப்பாடலின் கருத்தில் மனதைப் பறிகொடுத்த வீரமாமுனிவர் தேம்பாவணியிலும் இதுபோல ஒரு பாடலை அமைத்துள்ளார். அப்பாடல் பின்வருமாறு:

> பூரி யார்திருப் போல்தலை பசியசூழ் நிறுவி
> நீரி னார்தலை நேரநேர் வளைவொடு பழுத்த
> ஆர மானுநெல் லறுத்தரி கொண்டுபோ யங்கட்
> போரி தாமெனக் களித்தனர் போர்பல புனைவார்
>
> (நாட்டுப் படலம், பா.14)

இப்பாடலில் வளமாக வளர்ந்த காலத்தில் இளம் பயிர்கள் செல்வம் பெற்ற அற்பர்களின் செருக்குப் போலத் தலை நிமிர்ந்து செழிப்பாக நிற்கும். கதிர் முற்றிய காலத்தில் சான்றோர்களின் தலையினைப்போல வளைந்து தாழ்ந்து விளங்கும். முற்றி முதிர்ந்த முத்துப் போன்ற நெற்கதிர்களை அறுத்துக் கட்டி களத்து மேட்டிலேக் கொண்டுபோய்க் குவித்து, உழவர்கள், எம் நாட்டில் யாம் அறிந்த போர் இந்த நெற்போர், வைக்கோல்போர் அன்றி வேறில்லை எனக் களிப்போடு முழங்குவர் எனக் குறிப்பிடுகிறார்.

கிளைக்கதைகள்

தேம்பாவணியில் விவிலியத்திலுள்ள பல கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் காப்பியச் சிறப்புக்குப் பல நிலைகளிலும் உறுதுணை புரிகின்றன. இக்கிளைக் கதைகள் சில நிகழ்வுகளை வெளிப்படுத்தி, காப்பிய மாந்தரை சிறப்பிப்பதற்காகவே அமைக்கப்பட்டுள்ளன. சான்றாக, வளனும் மரியும் தெய்வக்குழந்தையாகிய இயேசு பாலகனை, ஏரோது அரசனுக்குப் பயந்து வேறு ஊருக்கு எடுத்துச் செல்லும் போது அவர்களுக்கு மனச்சோர்வு ஏற்படுகின்றது. அப்போது உடன்வரும் வானவர்கள் இறைவனின் பேராற்றலை விவிலியத்தில் காணப்படும் நிகழ்வுகள் மூலம் அவர்களுக்கு விளக்குகின்றனர்.

1. மோயீசன் கதை (மோசேயின் கதை)

எகிப்து நாட்டு அரசன் பார்வோன் என்பவன் இசுரவேல் மக்களைக் கொடுமைப் படுத்தினான். இதனால் மக்கள் மிகுந்த மன வேதனைக்குள்ளாயினர். பார்வோனிடமிருந்து இசுரவேல் மக்களைக் காப்பதற்காக இறைவன் மோயீசன் என்னும் ஒரு தலைவனை உருவாக்கினார். பின்னர் மோயீசன் கையில் இறைவன் ஒரு கோலையும் தமது ஆற்றலையும் கொடுத்தார். எனினும் பார்வோன் அரசன் இசுரயேல் நாட்டு மக்களை எகிப்தை விட்டு அனுப்பவில்லை. அரசனைப் பணியவைக்க, இறைவன் அவர்களுக்கு வெப்பமிக்க இரத்தம், தவளை, உண்ணிகள், ஆலங்கட்டிமழை, செறிந்த இருள் முதலிய ஒன்பது துன்பங்களையும் இறுதியில் பத்தாவதாக எகிப்தியரின் தலைப்பிள்ளைகளின் இறப்பையும் கட்டளையிட்டார். அதன் பின்னரே பார்வோன் அரசன் அவர்களை விடுவித்தான். இந்த

வரலாற்றை வானவர்கள் விரித்துரைத்து திருக் குடும்பத்தினருக்கு ஊக்கமளித்தனர்.

2. சேதையோன் கதை (கிதியோன் கதை)

இரண்டாம் காண்டத்திலுள்ள சேதையோன் வெற்றிப் படலத்தில் இக்கதை இடம்பெற்றுள்ளது. சேதையோன் என்ற மாவீரனின் வெற்றி வரலாற்றைச் சூசைக்கு வானவர்கள் விவரித்தனர். உழவனாகிய சேதையோன் என்பவன் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு தளபதி ஆவான். முதலில் இறைவனுடைய தூதனின் அழைப்பை நம்பவில்லை. பின்னர் இறைவனின் கட்டளையை ஏற்றுக் கொண்டு, மக்களை ஒன்று சேர்த்து 32,000 வீரர்களைத் திரட்டினான். இதையறிந்த பகையரசர்களாகிய மதியான், அமலேக் ஆகியோர் ஒன்று சேர்ந்தனர். பகைவர்களின் படை அதிக எண்ணிக்கை உடையதாகவும் வலிமை உடையதாகவும் காணப்பட்டது. இதனைப் பார்த்த இறைவன் வெற்றிவாகைசூட இவ்வளவு படைதேவையா? என எண்ணினார். போர் குறித்து அச்சப்படுவோர் தவிர்த்து வீரம் உடைய வீரர்கள் மட்டும் நிற்கக் கட்டளையிட்டார். அவருள் 10,000 பேர் நின்றனர். மேலும் ஆற்றின் நீரை நாவால் நக்கிக் குடித்தோர் செல்லவும், கையால் அள்ளிக் குடித்தோரை நிற்கவும் கட்டளையிட்டார். அதில் 3000 பேர் எஞ்சினர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் எக்காளம், ஒரு மண்பானை, ஒரு விளக்கு ஆகியவற்றைக் கொடுக்குமாறு கட்டளையிட்டார். மூவாயிரம் பேரும் மூன்று அணியாகப் பிரிந்து பகைவரிடம் சென்றனர். தீபத்தை மறைக்கப் பானையைப் பயன்படுத்தினர். பகைவரிடம் சென்று எக்காள ஒலி எழுப்பி, பானைகளை உடைத்ததும், திடுக்கிட்டெழுந்த பகைவர்கள் நிலை தடுமாறினர். தங்களைத் தாங்களே பகைவரெனக் கருதி, இரு படைத்தலைவரும் அழித்துக் கொண்டனர். ஏறக்குறைய 120000 வீரர்கள் இறந்தனர். இறைவனின் அற்புதத்தால் சேதையோனுக்கும் அவன் மக்களுக்கும் மிகப் பெரிய வெற்றி கிடைத்தது.

3. ஆணரன் கதை

இரண்டாம் காண்டத்திலுள்ள சித்திரக்கூடப் படலத்தில் சூசை, முனிவர்களுக்கு விளக்கிக் கூறிய ஆணரன் வரலாறு (யோசேப்பின் வரலாறு) சிறந்த ஒரு கிளைக்கதையாகும்.

யாக்கோபு என்பவருக்கு இரண்டு மனைவியர். முதல் மனைவியின் மூலம் பத்து பிள்ளைகளும் இரண்டாவது மனைவியின் மூலம் இரண்டு பிள்ளைகளும் பிறந்தனர். இரண்டாவது மனைவியின் மூத்த மகன் ஆணரன் ஆவான். தான் கண்ட கனவைப் பற்றித் தன் சகோதரர்களிடம் கூறியதால் தண்ணீர் குறைந்த கிணற்றினுள் தள்ளித் துன்புறுத்தி, வணிகரிடம் விற்று விட்டனர். அவ்வணிகன் ஆணரனை புத்திபார் என்னும் செல்வந்தனிடம் விற்றான். புத்திபாரின் மனைவியால் சிறையில் அடைக்கப்பட்ட ஆணரன், சிறையில் அடைபட்டிருந் தோருக்குக் கனவின் பொருளுரைத்தான். மட்டுமன்றி, அரசன் கண்ட கனவின் பொருளையும் விவரித்தான். ஆதலால் அந்நாட்டின் செயல் தலைவனாக நியமிக்கப்பட்டான். வளமான நாட்களில் சேர்த்து வைத்திருந்த தானியத்தைப் பஞ்ச காலத்தில் வழங்கினான். அவனது உண்மை, நேர்மை, தூய்மை, இறைப்பற்று முதலியவற்றால் சிறந்த நிலையை அடைந்தான். இறுதியில் தன்னை அழிக்க முயன்ற சகோதரர்களையே காப்பாற்றினான்.

4. சஞ்சோன் கதை (சிம்சோன் கதை)

இரண்டாம் காண்டத்திலுள்ள காசை சேர் படலத்தில் சஞ்சோனின் கதை இடம்பெற்றுள்ளது. சஞ்சோன் தன் எதிரியான பிலித்தையரின் பயிர்களிடையே வால் கட்டப்பட்ட தீப்பந்தம் பிணைக்கப்பட்ட நரிகளைத் துரத்தி விட்டான். பயிர்கள் அனைத்தும் அழிந்தன. ஒருநாள் சஞ்சோன் தனியாக இருக்கும்போது பெலித்தியர்கள் சஞ்சோனைச் சூழ்ந்து கொண்டனர். இறந்த கழுதை ஒன்றின் வாய்த்தாடை எலும்பை வைத்து அவர்களைச் சிதறி ஓடச் செய்தான். சஞ்சோனை அவன் மையல் கொண்ட பெண்ணான தாலிலை என்பவள் மூலம் அழிக்க நினைத்தனர். சஞ்சோனின் வீரம் அவன் தலை முடியில் இருப்பதை அறிந்த அவர்கள், தாலிலை மூலம் அதை கத்தரித்தனர். வலிமை இழந்த சஞ்சோனின் கண்களைக் குடைந்தனர். பல நாட்கள் அவனைச் சிறையிலடைத்து விட்டனர். பல நாட்களில் அவனது தலைமுடி வளர்ந்து பலம் திரும்பியது. பகைவர்கள் சிறையிலிருந்து ஒரு மண்டபத்திற்கு அவனைக் கொண்டு வந்தனர். சஞ்சோன் தன் வலிமையினால் அம்மண்டபத்தின் தூண்களை அசைத்து மண்டபத்தின் மேல்புறத்தைக் கீழே விழச் செய்தான். பகைவர்களும் சஞ்சோனும் அழிந்தனர்.

தமிழ் மரபு

காப்பியக் கதைத் தலைவர் சூசை வாழ்ந்தது தமிழ் நாட்டில் இல்லை. அதுபோன்று வீரமாமுனிவரும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் இல்லை. எனினும், காப்பியம் முழுக்கத் தமிழ் மணம் வீசும் வகையில் வீரமாமுனிவரால் படைக்கப் பெற்றுள்ளமைக்குப் பல சான்றுகளைச் சுட்டலாம். பிற தமிழ்க் காப்பியங்களைப் போலவே, சீரிய உலகம் மூன்றும் என மங்கலச் சொற்களைப் பயன்படுத்தியே தொடங்குகிறார். இறைவனை வணங்கும்போது, அயல்நாட்டுக் கிறித்தவ மரபுகளைச்சாராது, தமிழ் மரபையே சார்ந்து நின்று, இறைவனது பாதங்களையே முதலில் வணங்குவதையும், இறைவனது பாதங்களை மலராகக் காண்பதையும் தேம்பாவணியில் காணமுடிகிறது. தமிழகச் சமயங்கள் இறைவனுக்குரிய வாகனங்களைக் குறிப்பிடுகின்றன. அத்துடன், இறைவனுக்குரிய கொடிகளாகச் சிலவற்றைக் குறிப்பதும் தமிழகத்திலுள்ள சமய மரபாகும். இதனைப் பின்பற்றி வீரமாமுனிவரும் திருமகன் இயேசுவை மேக வாகனத்தில் வருபவராகவும், அவரது முன்னோரான தாவீது அரசனைச் சிங்கக் கொடியோன் என்றும் பாடுகிறார்.

மேலும், இறைவனுடைய திருமேனிக்கு வண்ணம் (நிறம்) குறித்துப் பாடுவதும், இறைவனைத் தரையில் வீழ்ந்து வணங்குவதும், கை கூப்பி வணங்குவதும், மலர்கள் தூவி வழிபடுவதும், விளக்குகளை ஆலயங்களில் ஏற்றுவதும், தேர்த்திருவிழா காண்பதும் போன்ற பல தமிழ்ச் சமய மரபுகளைத் தம் காப்பியத்தில் வீரமாமுனிவர் இணைத்துள்ளமையைக் காணலாம். ஓரிரு இடங்களில் தாம் கூறவரும் செய்திகளுக்கு உவமையாகத் தமிழ்நாட்டில் வழங்கும் புராணச் செய்திகளையும் வீரமாமுனிவர் பயன்படுத்தியுள்ளார். தமிழகத்தில் தான் கண்ட மயிலையும் குயிலையும் தேம்பாவணிப் பாடல்களில் கொண்டு வருகிறார்.

ஆலை யார்புகை முகிலென் றார்ப்பெழச்
சோலை யார்மயில் துள்ள மாங்குயில்
மாலை யாரிருள் விரும்பு மாக்கள்காண்
மேலை யாரென மெலிந்து தேம்புமால்

(நாட்டுப் படலம், பா.19)

என்னும் பாடலில் சூதேயா நாட்டிலுள்ள ஆலைகளிலிருந்து

வெளிவரும் கருமையானப் புகையைப் பார்த்த மயில்கள் கருமேகம் திரண்டது என நினைத்து தோகையை விரித்து ஆடுகின்றன. குயில்கள் தீயாரைக் கண்ட நல்லாரைப்போல் வாடுகின்றன என்கிறார். சூதேயா நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை தமிழகத்தில் நடப்பதாகவே வீரமாமுனிவர் காண்கிறார். இவ்வாறு வீரமாமுனிவர் தமிழக மண்ணின் மணம் வீசும் வகையிலும், தமிழ் மரபுக் கேற்பவும் தம் காப்பியத்தை அமைத்துள்ளார்.

உவமைத்திறன்

தேம்பாவணியில் ஏறத்தாழ 1275 உவமைகளை வீரமாமுனிவர் கையாண்டுள்ளார். மனத்தில் பாவக்கறை சேர்ந்துவிட்டால், அந்த மனமே அதற்காக வருந்தினால் ஒழிய அக்கறைகள் அகலா. இதனை வீரமாமுனிவர் உவமை மூலம் விளக்குகிறார். கால்களில் மண் ஒட்டிக் கொள்வதில்லை. ஆனால் அந்த மண்ணுடன் தண்ணீர் கலந்து சேறாகிவிட்டால், அச்சேறு கால்களில் மிக எளிதாக ஒட்டிக் கொள்கிறது. பின்னர், அச்சேற்றைக் கழுவி கால்களைத் தூய்மை செய்யவும் நீர்தான் தேவைப்படுகிறது. ஆகவே பாவத்துக்குக் காரணமாகிய மனமே, பாவத்தைப் போக்கிக்கொள்ளவும் துணை செய்வதால், மனம் நீர் போன்றது என உவமை நயம்படப் பாடுகிறார். இதனை,

புனம் செயும் பங்கமே புனம்ஒ ழித்தென
மனம் செயும் பங்கமும் மனநொந்து ஆற்றலின்
தினம் செயும் புகர்வினை தெரிகிலார் அறத்து
இனம் செயும் பயன்பட ஈட்டல் ஏலுமோ ?

(வாமன்ஆட்சிப் படலம், பா.37)

என்னும் பாடலின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

வீரமாமுனிவர் வானம் கறுத்து மழை பெய்து உலகை வளப்படுத்துவதைப் பல உவமைகளால் விளக்குகிறார். ஒருவனது புகழ் அவன் படைத்த நூல் வழியாகப் பரவுவதைப் போல, மலையிலே சிறிதாகப் படிந்த மேகம் நொடிப் பொழுதிலே எங்கும் பரந்து விரிந்தது; அவ்வாறு வானத்தில் பரவிய மேகம் வேலாயுதம் ஒளி விடுவதைப்போல மின்னி, இறைவனின் அருளைப் போன்று மழை பெய்தது. அதனால் இப்பூமி ஓர் ஓவியத் தூரிகையால் தீட்டப்பட்ட சித்திரம் போலப் பொலிவு பெற்றுத் தோன்றியது எனக் கூறுகிறார். இக்கருத்தை விளக்கும் பாடல் பின்வருமாறு:

நூல்வழிப் புகழே போன்று நொடிப்பினில் பரந்த மேகம்
வேல்வழி ஒளியே போன்று மின்னியார்த் திறைவன் அன்பின்
பால்வழிப் பயனே போன்று பகல்இரா அளவிற் றூவிக்
கோல்வழிப் படமே போன்று கூவெலாம் கேழ்த்தது என்றான்
(மகன் நேர்ந்த படலம், பா.18)

என்னும் இப்பாடல் வீரமாமுனிவரின் உவமைத்திறனுக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.

உருவகத்திறன்

தேம்பாவணியில் பல உருவகப் பாடல்கள் காணப்படுகின்றன. உலக மக்களிடையே பேய்கள் ஆசைகளை வளர்த்து அழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்கின்றன என்னும் கருத்தை உருவகமாக ஞாபகப் படலத்தில் விவரிக்கிறார். இதை,

ஆசைஏ ராகப் பூட்டி அறிவழித் துளம்சே ருக்கி
ஓசையே கலங்க வீக்கி உழுதுபல் புரையே வித்தி
மாசையே முதற்பல் வாழ்வின் வளர்பயிர் முகத்தைக் காட்டி
காசையே உதவா பூதி கனல்விளைவு இயற்றும் பேயே
(ஞாபகப் படலம், பா.12)

என்னும் உருவக வடிவில் பாடுகிறார். இப்பாடலில் பாவத்தை விளைவிப்பது பேயெனவும், அறிவினை அழித்து உள்ளத்தைச் சேறாக்கி, ஆசை என்னும் ஏர் பூட்டி, பாவம் என்னும் விதையை விதைத்து, முதலில் திரவியம் போல் வளர்பயிர் முகத்தைக் காட்டிப் பின்னர் ஒன்றுக்கும் உதவாப் புல்லாகிய விளைவினைத் தரும் என்பதை உருவகமாக விவரிக்கும் திறன் போற்றத்தக்கது.

தற்குறிப்பேற்றம்

உலகில் இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளின் மேல் கவிஞர்கள் தம் குறிப்பை ஏற்றி வைத்து, காரணம் கற்பித்துப் பாடுவது இலக்கிய மரபு. இதைத் தற்குறிப்பேற்றம் என்பர். பொதுவாகக் கதிரவன் தோற்றம், மறைவு, நிலவின் இயக்கம், கொடிகளின் அசைவு போன்றனவற்றை இவ்வாறு பாடுவர். தமிழ் இலக்கிய மரபுகளை நன்குணர்ந்த வீரமாமுனிவரும் இவ்வணியை நன்றாகப் பயன்படுத்துகிறார். தேம்பாவணியில் பல இடங்களில் தற்குறிப்பேற்ற அணி காணப்படுகிறது. எகிப்து நாட்டிலிருந்து மரியாள், சூசையப்பர், குழந்தை இயேசு ஆகிய மூவரும் செல்கின்றனர். இவர்கள் எருசலேம் நகரை

அடைந்தபோது அந்நகர மாளிகையில் இருந்த கொடிகள், இவர்களை இந்நகருக்குள் வராதீர்கள் அங்கேயே நின்று விடுங்கள் என்று கூறுவது போல் ஆடுகின்றனவாம். இயேசு பாலகனுக்கு அந்நகர அரசன் இழைக்கக் கருதும் தீமையை எண்ணி, அவ்வாறு கூறுகின்றனவாம். அத்துடன், அந்த மாளிகைக் கொடிகள், ஆடுகின்ற ஆலயக் கொடிகளை நோக்கி வருகின்றவர் எட்டுத் திசைகளையும் காக்க வல்லவர். ஆதலின் அவர் வருவதைத் தடைசெய்யாமல் நில்லுங்கள் என்று அமர்த்தியதாகவும் பாடுகிறார். அப்பாடல் பின்வருமாறு:

அல்உமிழ் இருளின் இருண்டநெஞ்சு அவன்செய்
அரந்தையின் வெவ்வழல் அற்ற
வில் உமிழ்பசும்பொன் மாடங்கள் நெற்றி விரித்தபூங்
கொடிகள்தம் ஈட்டம்
எல்உமிழ் மூவர் வருகைகண்டு அரசன் இயற்றிய
வஞ்சனைக்கு அஞ்சி
நில்லுமின்! நின்மின் எனஇடை விடாது நீண்டகை
காட்டுவ போன்றே.

மண்புடை வான மன்னனை வணங்கி வளம் பெறும்
பசிய பொற் கோயில்
விண் புடை தீண்டி மின் மணிக் கோட்டின் மீது ஒளிர்
பதாகை நின்று ஆடல்
ஒண்புடைக் கொடிகாள் நில்லுமின் நின்மின்;
உயிர்அருந் துயர்அற வந்த
எண்புடை காக்கும் அருள்புரி நாதன் இவன்என
அமர்த்திடல் போன்றே
(மகன் நேர்ந்த படலம், பா 59, 60)

இப்பகுதியில் கொடிகள், பிற கொடிகளை நோக்கிக் கூறுவதாகப் பாடுவது வீரமாமுனிவர் செய்த புதுமையாகும். சிலப்பதிகாரத்திலும், கம்பராமாயணத்திலும் கொடி அசைவதை வைத்து தற்குறிப்பேற்ற அணியில் பாடல்கள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

கற்பனை

வீரமாமுனிவர் கற்பனை நயத்துடன் பல பாடல்களை இயற்றியுள்ளார். இப்பாடல்கள் அனைத்தும் வீரமாமுனிவரின் புலமைக்குச் சான்றாதாரமாக விளங்குகின்றன. சான்றாக,

பெடைநாணின தென நாள்நறை பிளிர்தாமரை நெடுங்காக்
கடைநாணின அன்னம் மேவுபு கரவாயின முறைகண்டு
இடையாயின பலபூமுகை இனம்நக்கென மலர
நடையாடின பறவைக்குலம் நனி ஆர்த்தன நகவே
(நீர் வரமடைந்த படலம், பா.31)

என்னும் பாடலைக் குறிப்பிடலாம். திருக்குடும்பத்தினர் செல்லும் வழியிலுள்ள தடாகத்தில் நீரை அருந்தினர். அந்த தடாகத்தில் நிகழும் காட்சிகளைக் கற்பனை நயத்துடன் விவரிக்கிறார். தடாகத்திலுள்ள ஓர் அரச அன்னம் தாமரை இதழைத் தன் அலகால் பறித்தது. அதனால் அதன் தேன் துளி தனக்கு முன் ஓடிய ஒரு பெட்டை அன்னத்தின் உச்சியில் பட்டது. அது மணநீரை பெண்கள் ஒருவர் மீது ஒருவர் பாய்ச்சி விளையாடுவதைப் போல இருந்தது. அப்பெட்டை அன்னம் அதனால் நாணம் அடைந்தது. அதைப்பார்த்த ஆண் அன்னமும் நாணமடைந்து தாமரைக் கூட்டத்தினிடையே சென்று மறைந்து கொண்டது. இவற்றைக் கண்ட கணக்கற்ற பூ மொட்டுகள் சிரிப்பது போல் மலர்ந்தன எனக் கற்பனையுடன் பாடுகிறார்.

தேம்பாவணியின் சிறப்புகள்

தேம்பாவணியில் 90 வகை சந்தங்கள் இருப்பதாக வீரமாமுனிவர் கூறுகிறார். தேம்பாவணியில் ஏறத்தாழ 105 விவிலியக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

1. டாக்டர் ஜி.யு. போப்பின் கூற்று

கிறித்தவ நற்செய்திகளின் வரலாற்றுச் சுருக்கத்தைத் தரும் நோக்கில் இது எழுதப்பட்டதால் பல பழங்கதைகள் இதில் உள்ளன. நடையழகில் இது தமிழின் முழு இயல்பும் கொண்டது. இதனைக் கற்கும் மாணவன் சில அழகிய பகுதிகளைச் சந்திப்பான். எனினும் முழுமையாகப் பார்த்தால் இந்நூல் சோர்வூட்டுகிறது. (The Sacred Kural, Preface, P.V)

2. யோகி சுத்தானந்த பாரதியாரின் கருத்து

வீரமா முனிவர் தைரிய நாதர்
விரிதமிழ்க் கலைமணம் கமழும்
ஆரமா முனிவர் அகத்தியர் போல
அருளினார் அரியநன் னூல்கள்
சாரமாந் தேம்பா வணியினைத் தொடினும்
தமிழ்மணங் கமழுமென் கரமே

ஈரமா நெஞ்சில் இடம்பெற நட்டால்
இன்பமாய் மலருமென் வாழ்வே

எனப் பாடுகிறார். இப்பாடலின் பொருள், தைரியநாதராகிய வீரமாமுனிவர் தமிழ்மணம் கமழும் மாமுனிவராகிய அகத்தியர் போல அரிய நல்ல நூல்களை அருளியவர். அவர் வேதத்தின் சாரமாகப் படைத்தளித்த தேம்பாவணியினைத் தொட்டாலும் என் கரத்தில் தமிழ் மணம் கமழும். ஈரமிக்க நெஞ்சில் நான் அதனை ஊன்றி வைத்தால் என் வாழ்வு இன்பமாய் மலரும் என்பதாகும்.

3. ரா.பி. சேதுப்பிள்ளையின் புகழாரம்

தமிழுக்குத் தொண்டு செய்த வீரமாமுனிவரது படைப்பின் திறமையைச் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை,

> தேம்பாவணி தமிழ் அன்னையின் கழுத்தில் வாடாத மாலையாகத் திகழ்கிறது; காவலூர்க் கலம்பகம் கதம்பமாலையாகக் காட்சியளிக்கிறது; தொன்னூல் பொன்னூலாக இலங்குகின்றது; சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது; வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களில் ஒருவராக விளங்குகிறார்

எனப் புகழ்ந்து கூறுகின்றார்.

4. எல்லீசர்

சென்னையின் கலெக்டராக இருந்த எல்லீசர் என்பவர் தேம்பாவணியின் சிறப்புகளை உணர்ந்து, இந்நூலை அகில உலகிற்கும் அறிமுகம் செய்து வைத்தல் அவசியம் என்று கருதி, இந்நூலிலுள்ள செய்யுள்களுள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

5. தனிநாயக அடிகள்

மேனாட்டுக் கலை ஆறும் தமிழ் நாட்டுக் கலை ஆறும் கலக்கும் ஏரி தேம்பாவணி என தனிநாயக அடிகள் பாராட்டியுள்ளார்.

27. திருச்செல்வர் காவியம்

தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களுக்கு இலங்கை நாட்டினவரின் பங்களிப்புகளும் ஏராளமாக உள்ளன. ஆனால் இன்றைய கிறித்தவ இலக்கிய உலகினருக்கு இதுபற்றி அதிக அளவில் தெரியவில்லை என்பது வருத்தத்திற்குரியது. கிறித்தவ இலக்கியத்தின் எல்லா வகைமைகளையும் இலங்கைத் தமிழர்கள் படைத்துள்ளனர். இலங்கையிலுள்ள தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தின் வரலாறு நீண்டகாலப் புகழினை உடையது எனில் மிகையன்று. கிறித்தவக் காப்பியங்களுள் இருபது சதவிகிதக் காப்பியங்கள் இலங்கைத் தமிழர்களால் படைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. கிறித்தவக் காப்பியங்களுள் பழமையான திருச்செல்வர் காவியம் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பூலோக சிங்க முதலியார் என்ற அருளப்ப நாவலர் என்பவரால் இயற்றப்பட்டது.

ஆசிரியர் வரலாறு

திருச்செல்வர் காவியத்தின் ஆசிரியரான பூலோகசிங்க முதலியார் யாழ்ப்பாணத்திலுள்ள தெல்லிப்பழையைச் சார்ந்தவர். இவருக்கு அருளப்ப முதலியார் என்ற மற்றொரு பெயரும் உண்டு. காப்பியத்தில் இவரது பெயர் பூலோகசிங்க அருளப்ப நாவலர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அருளப்ப நாவலர் 1902ஆம் ஆண்டு அருளப்ப நாவலரின் தேம்பாவணிக் கீர்த்தனை என்னும் பெயரில் தேம்பாவணியின் இரண்டாம் காண்டத்தைக் கீர்த்தனை நாடக வடிவில் இயற்றியுள்ளார். மேலும், திருச்செல்வர் அம்மானை என்னும் சிற்றிலக்கியத்தையும் படைத்துள்ளார். இவ்விலக்கியம் யாழ்ப்பாணத்தில் 1911ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது.

திருச்செல்வர் காவியம்

திருச்செல்வர் காவியம் 1896ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வெளிவந்தது. இந்நூலின் முதல் பக்கத்தில் “இஃது யாழ்ப்பாணம் தெல்லியம்பதியில் வசித்திருந்த பூலோகசிங்க அருளப்ப நாவலரால் இயற்றப்பட்டு முற்பாகத்திற் சில பாக்களுக்குப் பொழிப்புரையும் தர்க்க சாஸ்திரப் படலத்திற்குப் பதவுரையுஞ் செய்து சேர்த்து, கத்தோலிக்க மிசியோன் தமிழ்ப்

பண்டிதராகிய நல்லூர் ஸ்ரீ கா. தியாகராச பிள்ளை அவர்களால் பார்வையிடப்பட்டு, அதிசிரேஷ்டர் அனுமதியுடன், யாழ்ப்பாணம், அச்சுவேலி ஞானப்பிரகாச இயந்திரசாலையிற் பிரசுரிக்கப்பட்டது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் காப்பியத்தின் இரண்டாம் பதிப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள கிறித்தவ-இசுலாமிய நாகரிகத் துறைகளின் தலைவர் அருட்திரு. கலாநிதி ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் அவர்களால், யாழ்ப்பாணத்திலுள்ள திருமறைக் கலாமன்றத்தின் வாயிலாக, 1995ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது.

தழுவல் காப்பியம்

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சிந்து தேசத்திலே அபினோ என்னும் அரசனின் மகனாகப் பிறந்தவர் திருச்செல்வராயன் ஆவார். இவர், தான் கிறித்தவராக மாறியது மட்டுமன்றி தம் தந்தை முதலியோரையும் கிறித்தவராக மாற்றினார். இறுதியில் தவம் செய்து வீடு பேற்றினை அடைந்தார். பெரியோர்கள் கூறிய திருச்செல்வராயரின் வரலாற்றை கி.பி. 733ஆம் ஆண்டு தமசேனு அருளப்பர் எழுதி வைத்தார். அச்சரித்திரத்தை இறைத்தொண்டர்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தனர். திருச்செல்வராயரின் வரலாற்றை பூலோகசிங்க முதலியார் என்னும் பெயருடைய அருளப்ப நாவலர் காப்பிய வடிவில் படைத்தார்.

சாற்றுகவிகள்

திருச்செல்வர் காவியத்தில் பதினாறு சாற்றுகவிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று சென்னை, அர்ச். சவேரியார் கலாசாலை பிரதம தமிழ்ப் பண்டிதர் மகாஸ்ரீ வித்துவான் கண்ணுசாமி முதலியாரவர்கள் எழுதியதாகும். நிலமண்டில ஆசிரியப்பாவிலமைந்த அச்சாற்றுகவி பின்வருமாறு:

> திருநிறைந் தெங்கணுஞ் சிறப்புற் றோங்கும்
> மருநிறைந் தொளிரு மதுமலர்க் காசூழ்
> சொல்லருங் கீர்த்தி சூழியாழ்ப் பாணத்
> தெல்லிமா நகரிற் றிகழு பூலோக
> சிங்க முதலியா ரெனுமிகு சீர்சூழ்
> இங்கித முறையரு ளப்பநா வலன்றான்
> சொற்சுவை பொருட்சுவை தோன்றத் தெளிந்த

நற்சுவை பொருத்தி நன்னயம் பெறவே
திருச்செல்வ ராயர் திருவுறை சரிதையைப்
பெருத்தகா வியமாய்ப் பேசிட வதனை
அன்பு பொறுமை யடக்க மின்சொ
லின்புறு மணியா யேற்றசற் குணத்தோன்
இத்தகைப் பெருஞ்சீ ரிலகுற வாய்ந்த
வித்தகப் புலமை வித்துவ மணியாம்
தருதகை மருவுந் தம்பிமுத் தண்ண
லருளணி துலங்க அச்சியற் றினனே.

காப்பியக் கட்டமைப்பு

திருச்செல்வராயர் என்பவரின் வரலாற்றைக் கூறுவதாக இக்காப்பியம் அமைந்துள்ளது. திருச்செல்வர் காவியம் நாட்டுப் படலம், நகரப் படலம், அரசியற்கைப் படலம், செருச்செய் படலம், மணவினைப் படலம், திருச்செல்வன் உற்பவப் படலம், புத்திர சேமப் படலம், அவினேர் திருச்செல்வனைக் கண்ணுறு படலம், வீதிகாண் படலம், நீர் விளையாட்டுப் படலம், வறலாம் வரவுப் படலம், உபதேசப் படலம், திருஅவதாரப் படலம், ஞானஸ்நானப் படலம், தர்க்க சாஸ்திரப் படலம், நக்கோர் துறவுப் படலம், தேவுதன் சூழ்ச்சிப் படலம், தேவுதன் துறவுப் படலம், முடிசூட்டுப் படலம், அவினேர் மறைதெளி படலம், அவினேர் துறவுப் படலம், திருச்செல்வன் துறவுப் படலம், வறலாங் கதிபெறு படலம், திருச்செல்வன் கதிபெறு படலம் என்னும் 24 படலங்களையும், 1947 விருத்தப் பாக்களையும் உடையது.

காப்பியக் கதை

சிந்து நாடு பல்வகை வளங்களும் அனைத்துவகைச் செல்வங்களும் ஒருங்கே பெற்ற நாடு. அகரம் எழுத்தை முதலாகக் கொண்டது போன்று, இந்த நகரம் கடலால் சூழப்பட்ட உலகில் முதலானது. இந்த மாநகரில் அவினேர் என்னும் அரசன் செங்கோலாட்சி புரிந்து வந்தான். அவனது ஆட்சி மூவுலகத்தாராலும் புகழப்பட்டது. அவனது நாட்டில் மாதம் மும்மாரி மழை பெய்தது. தன்னைப் பணிந்து கப்பம் கட்டாத மன்னர்களை வென்று வீழ்த்தினான்.

அவினேர் மன்னனுக்குக் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் தீயை வலம் வந்து அருந்ததி

பார்த்தனர். இல்லற வாழ்க்கையில் குழந்தைப் பேறு இல்லாமல் மிகவும் கவலை கொண்டனர். இதனால் தான தருமங்கள் செய்தும் கோவில்களில் சென்று வழிபாடு செய்தும் வந்தனர். இதன் பயனாக அத்தம்பதியினருக்கு ஒரு அழகான மகன் பிறந்தான். அரசன் தனக்கு மகன் பிறந்தவுடன் சோதிடர்களை அழைத்து சாதகம் கணிக்க ஆணையிட்டான். சோதிடக் கலைஞர்கள் பலரும் அனைத்து விதமான செல்வங்களும் பெற்று இளவரசன் உயர்வடைவான் என்றனர். ஆனால் அவர்களுள் இறையருள் பெற்ற ஒருவர் மட்டும் குழந்தைக்கு சூசேப்பா என்று பெயர் சூட்ட வேண்டும் என்றும், சூசேப்பா என்பதற்கு திருச்செல்வம் என்பது பொருளாகும் என்றார். பின்னர் அமைச்சர்கள் மூலம் திருச்செல்வம் என்பதன் பொருளை உணர்ந்து தன் மகன் பிற சமயத்தினரைக் காண, அவர்கள் போதனைகளைக் கேட்க முடியாதவாறும் ஏற்பாடு பண்ணக் கட்டளையிட்டான். எனவே மகனை ஒருவரும் பார்க்காதவாறு வளர்ப்பதற்காக மாளிகை ஒன்றைக் கட்டினான். பிற சமயத்தினர் நாட்டினுள் வராதவாறு தடுக்கவும் ஆணையிட்டான்.

இளவரசன் வாழும் மாளிகையின் நாற்புறங்களிலும் காவலர்கள் நியமிக்கப்பட்டனர். கிறித்தவ இறைத் தொண்டர்கள் மாறுவேடத்திலும் வந்துவிடா வண்ணம் காவல் காக்க காவலர்களுக்கு ஆணையிடப்பட்டது. அரசனின் ஆணையை மீறுபவர்களுக்கு கொடூரமான தண்டனை அளிக்கப்படும் என முரசு அறிவிக்கப்பட்டது. இளவரசனுக்குப் பல கலைகளும் பயிற்றுவிக்கப்பட்டன. ஒருநாள் இளவரசன் சூசேப்பா தான் அடைபட்டு வாழ்வதை உணர்ந்து ஏவலன் ஒருவனிடம் உண்மைப் பொருளான இறைவனைப் பற்றிக் கூறுவாயாக என்றான். அதற்கு ஏவலன், இளவரசே உங்களது தந்தையார், அமைச்சர்கள் மற்றும் சோதிடர்களுடன் ஆராயும்போது ஓர் அறிஞர் எழுந்து அரசனிடம் "உங்கள் மகன் இயேசு கிறிஸ்துவின் உண்மையான வேதத்தை நாடுவார்" எனக் கூறினார். இதனால் கிறித்தவ இறைத் தொண்டர்களை நீங்கள் பார்த்துவிடாதபடி உங்களைப் பாதுகாப்பாக மறைத்து வருகிறார் என்றான். உடனே இளவரசன் ஏவலனைப் பார்த்து கிறித்தவர்கள் யார்? அவர்களது வேதநெறி யாது எனக் கேட்டான். அதற்கு ஏவலன், இறைவன் இந்த உலகைப் படைத்தார்; பூவுலகில் பாவங்கள் மிகுந்ததனால் அதனைப் போக்குவதற்காக கன்னித்தாய் மரியாளின் மகனாகப்

பிறந்தார்; அவருடைய பெயர் இயேசு கிறிஸ்து; அவரது உண்மைநெறிகளை பின்பற்றுவோர் கிறித்தவர்களாவர் எனவும் கூறினான். ஏவலன் தன்னிடம் கூறியதன் முழுமையான பொருளை அறிந்து கொள்ள முடியாமல் இளவரசன் தவித்தான்.

இச்சூழலில் அரசன் இளவரசனைக் காண்பதற்காக மாளிகைக்குச் சென்றான். மகனைத் தழுவி ஆனந்தமடைந்து உனக்கு ஏதாவது குறை இங்கு உள்ளதா எனக் கேட்டான். உடனே இளவரசன் என் மழலை மொழியைக் கேட்க விருப்பமில்லாமல் இங்கு என்னைக் கூண்டில் பறவையை அடைத்து வைத்திருப்பதைப் போன்று அடைத்து வைத்துத் துன்புறுத்தியது ஏன் என வினவினான். இளவரசனின் மனக்குறையை உணர்ந்து கொண்ட அரசன், இளவரசன் நகரில் பவனிவர ஆவன செய்தான். ஆனால் கிறித்தவ இறைப்பணியாளர்கள் எவரும் இளவரசன் பவனி வரும் வழியில் வரக்கூடாது எனவும் ஆணையிட்டான்.

மறுநாள் முரசு வாத்தியங்கள் முழங்க இளவரசன் வீதியில் பவனி வந்தான். அப்போது வீதியில் மக்கள் கூட்டங்களுக்கு நடுவில் கூன், குருடு, முடவர்களும் காணப்பட்டனர். இதனை இளவரசன் பார்த்தான். இளவரசன் பல பொருள்களை ஏழைமக்களுக்கு வாரிவழங்கினான். தனது மாளிகைக்குச் சென்ற பின்னர் வீதியில் கண்ட நிகழ்ச்சிகளால் மனம் சோர்வடைந்தான். நிலையால்லாத, துன்பம் நிறைந்த வாழ்வை வருத்தத்துடன் நினைத்தான்.

இச்சூழலில் சிந்துபதி மன்னனால் சமய விரோதிகள் என்று கொலை செய்யப்பட்டவர்களில் தப்பிப் பிழைத்தவர்கள் சிலர் சந்தனக் காட்டில் மறைந்து வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஒருவர் வறலான் முனிவர் என்பவர். ஒருநாள் அதிகாலை "சிந்துபதி மன்னனின் மகன் மாளிகையினுள் அடைபட்டுக் கிடக்கின்றான். அவன் என்னைக் கண்டடைய விருப்பத்துடன் உள்ளான். அவனுக்குத் துணைபுரிவாயாக" என்னும் அசரீரி கேட்டது. உடனே வறலான் முனிவர் ஒரு நவமணி வியாபாரி போன்று வேடம் புனைந்து கொண்டு இளவரசனைக்காணப் புறப்பட்டார்.

மாறுவேடத்தில் இருக்கும் வறலான் முனிவர் மாளிகையின் ஏவலாளர்களிடம் தான் ஒரு வியாபாரி என அறிமுகப்படுத்திக் கொண்டு உள்ளே சென்று இளவரசனைக் கண்டார். வறலான் முனிவர் தான் ஒரு கிறித்தவ இறைத்

தொண்டர் எனவும், உமது தந்தையால் சித்திரவதைப்பட்ட கிறித்தவர்கள் அபாயத்தை உணர்ந்து காட்டில் வாழ்ந்து வருகின்றனர் எனவும், அவ்வாறு மறைந்து வாழ்ந்து வருபவர்களுள் தானும் ஒருவன் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். மேலும் அசரீரி ஒலி கேட்டதன் அடிப்படையில் உன்னைக் காண வந்தேன் என்றார். இளவரசனின் ஆர்வத்தை உணர்ந்து கொண்ட வறலான் முனிவர் இந்த பூமியையும், வானத்தையும், எண்ணிலா இயற்கைப் பொருட்களையும் உயிர்களையும் படைத்தவர் ஒருவரே. அவர்தான் தேவாதி தேவன் என விவரித்தார். மீண்டும் மறுநாள் இளவரசனிடம் சென்று இறைவன் உலகத்தைப் படைத்தது, ஆதாம் ஏவாளைப் படைத்தது முதலான வரலாறுகளை இளவரசனுக்கு விளக்கமாக விவரித்தார்.மேலும் இயேசுவின் தாய் மரியாளின் வரலாறு, மரியாளின் உறவினளான எலிசபெத் வயதான காலத்தில் குழந்தைப்பேறு பெற்ற விதம், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, அவரது திருப்பணிகள், சீடர்கள், போதனைகள், அற்புதங்கள், பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் முதலான நிகழ்வுகளை முறைமுறையாக இளவரசனிடம் முனிவர் விவரித்தார். இறுதியில் இளவரசனின் மனஉறுதியை உணர்ந்து கொண்ட முனிவர் உமக்குத் திருமுழுக்குத் தருகிறேன் என்றார். இளவரசனும் அதற்கு மிகுந்த விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில் முனிவர் இளவரசனுக்குத் திருமுழுக்கு அளித்தார். இதையறிந்த துர்க்குணம் கொண்ட ஏவலாளன் ஒருவன் அரசனிடம் சென்று, இளவரசன் கிறித்தவ மறையை மாறுவேடம் பூண்டு வரும் முனிவர் மூலம் தெரிந்து மனம் மாறியதைத் தெரிவித்தான். அரசன் மிகுந்த கோபமடைந்து முனிவரைக் கொல்ல ஆணையிட்டான். முனிவரைக் கண்டுபிடிக்க இயலாதமையால் காட்டில் தவம் புரியும் தவ முனிவர்கள் பதினேழு பேரைப் பிடித்து சித்திரவதைப் படுத்திக் கொன்றான்.

இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட திருச்செல்வனின் இறைவன் மீதுள்ள விசுவாசமும் பற்றும் மேலும் அதிகரித்து இறையன்பில் நிலைத்திருந்தான். இச்சூழலில் தன் மனதை மாற்ற வந்த நக்கோரது இருண்ட இதயத்தினை நல்வழிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவின் திருமறையினை இளவரசன் போதித்தான். நக்கோர் கிறித்தவராக மாறியதைக் கேள்விப்பட்டு அரசன் அவினேர் மிக்க சினம் கொண்டான்.

அரசன் அவினேர் தன் மகன் கிறித்தவனாக மாறியதை நினைத்து மிகத் துன்பம் கொண்டான். ஆதலால் அரசன் சூழ்ச்சியில் வல்ல தேவுதன் என்பவனை அழைத்து, தன் மகனை மனம் மாற்ற வேண்டினான். தேவுதன் சூழ்ச்சிகள் பல புரிந்தும் இளவரசன் திருச்செல்வனின் மனதை மாற்ற இயலவில்லை. இதைக் கேட்ட அரசன் மனம் வருந்தினான். இச் செயல் எனது பாவத்தினால் வந்ததா? அல்லது எனது முன்னோர்கள் செய்த தீய வினைகளின் பயனாக வந்ததா? எனக் கதறினான். உடனே அரசன் மந்திர முதியோர்கள் சூழ திருச்செல்வனிடம் சென்று, அவனைத் தழுவி உன் வேதனை தீராத காரணம் என்ன என ஒரு வறியவனைப் போல இரந்து கேட்டான். அதற்கு இளவரசன் திருச்செல்வன், "ஐயனே, என்னைக் கெடுக்க வந்த மையலார் புரிந்த வேதனைகள், நெய் வீழ்ந்த நெருப்புப் போன்று வேதாளங்கள் செய்த சோதனைகள் பலப்பல. பாவப் படுகுழியில் நான் விழாதபடி காவல் செய்த தேவன் இன்னருளால், தூய மோட்ச பேரின்பத்தையும், பேய் நரகத்தையும் என் கனவிற் காண்பித்தார்" என்றான்.

அரண்மனைக்குச் சென்ற அரசன் தனக்கு சந்ததிகள் இல்லாது துன்புறுவேனோ எனக் கவலை கொண்டு தேவுதன் என்பவனை அழைத்தான். தேவுதன் வந்தவுடன் அரசன் தன் மனவேதனையை "நான் புத்திரச் செல்வமில்லாது தத்தளித்தேன். சிலகாலம் சென்ற பின்னர் மகப் பாக்கியம் பெற்றேன்; மிகுந்த பாதுகாப்பில் வளர்த்தேன். செட்டி ஒருவன் மூலம் மகன் கிறித்தவன் ஆனான். கானகத்து முனிவர்களைக் கடுஞ் சித்திரவதைக்குள்ளாக்கினேன். தருக்க சாஸ்திரம் மூலம் வெற்றிகாண முயன்று தோற்றேன். சூழ்ச்சிகளைப் புரிந்தும் வீழ்ச்சியடைந்தேன்" என விவரித்தான்.

இதனைக் கேட்ட தேவுதன் அரசனிடம், "அரசே, நெஞ்சக் கவலை நீங்குக; யான் புரிந்த வஞ்சனைகள் எல்லாம் ஊமை கண்ட கனவாயின; இனி நானே செல்வேன்; என் அறிவின் பலத்தால் வசப்படுத்தி வருவேன்" என்றான். தேவுதனின் வார்த்தைகளைக் கேட்ட அரசன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். உடனே அரசன் தேவுதனுடன் திருச்செல்வன் தங்கியுள்ள மாளிகைக்குச் சென்றான். அரசன் தன் மகனைப் பார்த்து, "என்னுடன் வந்திருக்கும் தேவுதன் வேத விதிகளை ஆய்தறிந்த மாமேதை; மந்திர தந்திரங்கள் தெரிந்தவர்; இவருக்கு நிகராக

இவ்வுலகில் ஒருவரும் இல்லை; இவரது அறிவுரைகளைக் கேட்பாயாக" எனக் கூறினார்.

தேவுதனின் உரைகளை இளவரசன் செவிமடுக்கவில்லை. இதனைக் கண்ணுற்ற அரசன் வருந்தினான். அனுபவம் நிறைந்த அமைச்சர் ஒருவர் அரசனிடம், "நாட்டில் பாதியை இளவரசனுக்குக் கொடுத்து மணிமுடி சூட்டி அன்போடு அவன் செல்லும் வழியை ஆதரிப்பதே தகுந்த நெறியாகும்" எனக் கூறினான். இக்கருத்தை அரசன் ஏற்றுக் கொண்டு மகனைப் பார்த்து, "மகனே, குற்றம் கடிந்து கொற்றம் புரப்பதே மன்னர் கடன் என்பதால் இதுவரை நினக்கும் இன்னல் செய்ய நேர்ந்தது. எல்லாம் எண்ணாது மறந்துவிடு. என் நாட்டின் பாதியை நீயே ஆட்சி புரிதல் வேண்டும். எனது இறுதி ஆசை இதுவேயாகும்" என்றான்.

தந்தையின் கட்டளையை ஏற்றுக் கொண்டு மணிமுடி சூட்டி ஆண்டு வந்தான். கிறித்தவ மதத்தின் சிறப்புகளை உணர்ந்து கொண்ட அவினேர் அரசனும் திருமுழுக்குப் பெற்று கிறித்தவனாக மாறினான்.

சிறப்புப் பாயிரம்

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் பாயிரம் அருளியது போன்று திருச்செல்வர் காவியத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள பத்திராதிபர் வீ.எவ். தம்பு அவர்கள் நிலைமண்டில ஆசிரியப்பாவில் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். இச்சிறப்புப் பாயிரம் 43 அடிகளால் ஆனது.

பாயிரம்

கடவுள் வாழ்த்துடன் இப்பகுதியைத் தொடங்குகிறார். கடவுள் வாழ்த்துப் பகுதியில் ஆறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் முதல் பாடல் பின்வருமாறு:

ஆதியீ றில்லா னன்மை யானந்த னமலன் ஞானச்
சோதியா னனைத்தும் வல்லன் சுருதியான் றூயன்
றொல்லோன்
நீதியா னிலமும் வானு நிலவுமெப் பொருளுந் தந்து
பேதியா நிறைந்து நின்ற பிதாவடி பேணித் தாழ்வாம் (பா.1)

இப்பாடலின் கருத்தானது முதலும் முடிவில்லாதவரும், நன்மையாகிய ஆனந்தமுடையவரும், குற்றமில்லாதவரும்,

ஞானசூரியரும், சர்வ வல்லமை உடையவரும், வேதமுடையவரும், பரிசுத்தரும், பூர்வமானவரும், நீதியையுடையவரும், பூவுலகையும் வானுலகையும் அவைகளில் காணப்படும் சகல பொருட்களையும் படைத்து எவ்விடத்தும் வேற்றுமையில்லாது நிறைந்திருக்கின்ற வருமாகிய பிதாவாகிய கடவுளின் திருவடிகளை வணங்குவோம் என்பதாகும். கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து வரும் பாயிரப்பகுதியிலுள்ள அவையடக்கம் கம்பராமாயணச் சாயலில் காணப்படுகின்றது. இப்பகுதியில் 11 பாடல்கள் உள்ளன. இதைத் தொடர்ந்து வரும் பாயிரப்பகுதி 17 பாடல்களால் ஆனது. இப்பகுதி சிலப்பதிகார மரபையொட்டி அமைந்துள்ளது. சிலப்பதிகாரப் பாயிரத்தில் காப்பியத்தின் கதைச் சுருக்கம் உள்ளது. அதுபோன்று திருச்செல்வர் காவியத்திலுள்ள பாயிரத்திலும் காவியத்தின் கதைச் சுருக்கம் இடம்பெற்றுள்ளது.

சந்தங்கள்

விருத்தப்பாதான் பலவித சந்தங்களில் பாடுவதற்கு உதவியாக இருக்கும். சந்தம் என்பதை வண்ணம் எனக் கூறுவர். தொல்காப்பியர் 20 வண்ணங்களைக் கூறினார். ஆனல் கம்பர் 96 வகையான சந்தங்களில் பாடியுள்ளார். திருச்செல்வர் காவியத்தில் இடம்பெற்றுள்ள 'வேறு' என்னும் உட்தலைப்புகள் சந்த வேறுபாட்டினைக் குறிப்பனவாகும். அவ்வகையில் பூலோகசிங்க முதலியாரும் பல வகைச் சந்தங்களை இக்காவியத்தில் பயன்படுத்தியுள்ளார்.

அந்தாதி

ஒரு பாடலின் இறுதி சொல் அல்லது அசை அடுத்து வரும் பாடலின் முதலில் வருவது அந்தாதி எனப்படும். அந்தாதி என்னும் இலக்கியம், சிற்றிலக்கிய வகையினைச் சார்ந்தது. திருச்செல்வர் காவியத்தின் சில இடங்களில் அந்தாதி முறை பின்பற்றப்பட்டுள்ளது. சான்றாக,

> **முன்புயர்ந்து முழங்களொ ரேழதாய்ப்**
> **பின்பணிந்து பிறைநிறக் கோடுவாய்ந்**
> **தொன்பதுமுழ நீண்டொருபத் துமூன்**
> **றென்பசுற்றுறுப் பேழ்நிலந் தோயவே**
>
> **தோயு மும்மதத் தாரை துளிப்பது**
> **காயுந் தீயுமிழ் கண்ணின காரிடை**

மேயு மின்னிமிர் வென்ன விளங்கொளி
யேயு மோடை யெறிப்பன நெற்றியே

நெற்றிச் சிந்துர நின்றொளிர் கின்றது
கற்றைத் தூவிக் கவின்படங் கட்டிமென்
முற்றக் கைசெய்த மூரிக் களிற்றின்மேன்
மற்றச் செல்வன் மகிழ்வுட னேறினான்

(வீதிகாண் படலம், பா.14-16)

என்னும் பகுதியைச் சுட்டலாம்.

உவமைகள்

திருச்செல்வர் காவியத்தில் ஆசிரியர் பல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார் காப்பியத்தின் தனித்தன்மைக்கு இவ்வுவமைகள் தக்க சான்றுகளாக அமைகின்றன. சான்றுகளாக,

1. மதிப்பற வுழக்கலின் வளைத்து வீசல்போற் (ப.13)
2. பலன்வருந் திடத்தினைப் பகுத்துக் காட்டல்போல் (ப. 16)
3. அகரமே யெழுத்தினத் தாதியான போன் (ப. 19)
4. பொன்னைவிரித் ததின் மின்னை யிருத்திய வாபோல (ப.27)
5. வேடர்கைப் படுமென் பிணைமஞ்ஞைபோல் (ப. 37)
6. ஓடங்களி ரண்டிற்பாத மிரண்டையு முய்த்தாற்போல (ப.65)
7. பாங்கிமேற்றன்னை மொய்த்த பூழிபோக் குறுவான் போல (ப. 72)
8. சேனைப்பெருக்கி னரண் சிந்திடு மென்பபோல (ப.78)
9. வெய்யோனத்தமப் புகுந்து மீண்டுமுதையத்து தித்தமேன்மையென்ன (ப.120)
10. சற்றிடம் விடாது தேடிச் சல்லடை யரிப்பிட் டென்ன (ப. 125)
11. கார்வுறத் தகுங்கொலிவ் விடை யூறென் றனலிடு மலரென (ப. 130)
12. கொல்லுலை யினாராசங் கொடி தேறிட்டென (ப. 133)
13. தேனகத் திருக்க வேம்பின் றீயகைப் புவப்பார் போல (ப. 162)

14. கற்றவன் கலையும் புந்தியுந் திறனும் கலங்கியுங் கலங்குறாதவர்போற் (ப. 190)

15. புன்றொழின் மாசுபோகக் கழுவுதல் பரிவான்போல (ப. 221)

16. கைகளா னெருங்கப் புல்லிக் கமலங் கட்டு ளிப்பதேபோற் (ப. 257)

என்னும் உவமைகளைச் சுட்டலாம்.

வருணனைகள்

கம்பரைப் பின்பற்றி பூலோகசிங்க முதலியார் தமது காவியத்தில் நாட்டுப் படலத்திலும், நகரப்படலத்திலும் வருணனைகள் பலவற்றைக் கையாண்டுள்ளார். இவ்வருணனைகள் காப்பிய அமைப்பிற்கு முழுமையைக் கொடுக்கின்றன.

> **ஆர்ந்துவா னரமா வாழை வருக்கையூ டடருந் தாக்கால்**
> **வார்ந்துவீழ் கனியின் றேனும் மலரளி குடையுந் தேனும்**
> **ஊர்ந்துலாங் கரிவான் குன்றத் தூன்றுகோட் டிறாலின் றேனுஞ்**
> **சேர்ந்துலாய்ச் சிந்துஞ் சிந்து சிந்துசேர் சிந்து நாடே**
> **(நாட்டுப் படலம், பா. 2)**

என சிந்து நாட்டின் வளமையை வருணனை செய்கிறார். வானரங்கள் குதித்துக் கொண்டு வாழை, பலாப் பழங்களை எடுத்து உண்கின்றது. கீழே விழும் அப்பழங்களிலிருந்து வரும் தேன், வண்டுகள் மலரில் குடையும்போது அதிலிருந்து சிந்தும் தேன், யானையின் தந்தங்கள் பட்டு சிந்தும் தேன் என எல்லா வகையான தேனும் சேர்ந்து ஓடும் வளமுடைய நாடு சிந்து நாடு என வருணனை செய்கிறார். சோலைகளில் மலர்களை உண்ட பசுக்கள் தம் இளமையான கன்றுகளை நினைத்ததால் பால் சுரந்தன. அப்பால் ஒன்றாய் திரண்டு பொய்கையில் சென்று கலந்தன. பொய்கையில் உள்ள பால் சுவையுடைய தண்ணீரை, தாயை நினைத்துக் கொண்டே உண்ட கன்றுகள் தங்கள் தாய்ப்பசுவை நினைத்து அரற்றுகின்றன. இவ்வருணனை பின்வரும் பாடலில் அமைந்துள்ளது:

> **மாவினங்க ளுண்டசெம்மல் வயினிரப்பி மலர்மிடை**
> **காவினந்த ணிழறுயின்று கன்றுளிக் கலுழ்ந்தபால்**

பூவினங்க ணிறையுவாவி புக்கநீர் குடித்தகன்
றாவினங்கள் சென்றுமாட மூடுநின் றரற்றுமே
(நாட்டுப் படலம், பா.65)

நறுமணமிக்க தங்கள் கூந்தலுக்கு மேலும் பெண்டிர் நறுமணப் புகையூட்டினர். அப்புகையைக் கண்ட உயர்ந்த மாடத்தின் மேல்நின்ற மயில்கள் மேகமென நினைத்து ஆடின. அவை மகிழ்ச்சியில் அகவின. அந்த அகவலோசை இதுபோன்ற வளம் எங்கும் இல்லை என்று சொல்லுவதைப் போலவும் இங்கு வந்து பெற்றுக் கொள்ளுங்கள் எனச் சொல்லுவதைப் போலவும் இருந்தது என,

பொங்குகந்த வாசவோதி மாதரூட்டு பூம்புகைத்
துங்கமாட மீதினாடு தோகைமஞ்ஞை கூவொலி
யெங்குமிந்த வண்மையில்லை யில்லையென்ப தில்லையா
லிங்குவந்து கொள்ளுமென் றியம்புகின்ற தொத்ததே
(நாட்டுப் படலம், பா.74)

என்னும் பாடல் மூலம் வருணனை செய்கின்றார். மேலும் பொய்கையை இளம் பெண்ணாக வருணனை செய்கிறார். அதாவது,

கவிதா மரைவிழி வதனங் காரற
லாவிதோய் குழல்கிடை யதரமாம் பல்வாய்
மேவிமான் மதநறு விரைநெய் வீசலால்
வாவியா வையும்மட வாரை நேருமே (நகரப் படலம், பா.4)

என்னும் பாடலில் தாமரைகள் விழிகள் போலிருக்க, வதனம் போல இதழ்,பல், வாய் முதலியன பெற்று கஸ்தூரி மணம், நெய் மணம் வீசுவதால் பொய்கைகள் யாவும் இளம் பெண்களைப் போலக் காணப்படுகின்றன என வருணிக்கிறார்.

திரைபொரு கருங்கடற் செவ்வியா டையைத்
தரையெனும் பெண்கொடி தழுவி னாளது
புரையவோர் துகிலினை நகரப் பூவையும்
விரையவே யணிந்தென விளங்கு கின்றதே
(நகரப் படலம், பா.26)

என்னும் பாடலில் அலைகளை உடைய கருங்கடலாகிய சிறந்த ஆடையை பூமி என்னும் பெண்கொடி அணிந்திருப்பதைப் போல நகரமாகிய பெண்ணும் துகிலினை அணிந்திருப்பதைப் போல விளங்குகிறது என நகரை வருணனை செய்கிறார்.

மணவினைப் படலத்தில் பெண்களின் ஆடை அலங்காரத்தை வருணனை செய்யும் தன்மை தனிச்சிறப்புடையதாக விளங்குகிறது.

> **குண்டல மிருகாதிற் சிலர்குளை யொருகாதிற்**
> **றண்டைக ளிருகாலிற் றமனிய வளைகையிற்**
> **புண்டர மொளிர்முண்ட மிசைபொலி பூஞ்சூட்டுக்**
> **கண்டவர் மகிழ்வெய்தக் கவினுற வணிவாரும்**
>
> **(மணவினைப் படலம், பா.25)**

என்னும் பாடலில் சிலர் காதுகளில் குண்டலங்களையும், சிலர் ஒரு காதில் குழையையும், இரு கால்களில் தண்டையும், கைகளில் வளையும், பார்ப்பவர் மகிழும் வண்ணம் புண்டரம் ஒளிர்கின்ற மார்பின் மீது பூ மாலையினையும் காண்பவர் மகிழும் வண்ணம் அழகுற அணிந்தனர் என வருணனை செய்கிறார். மேலும்,

> **பட்டுடை புனைவாரும் பனிமதி சுடராரம்**
> **விட்டொளி தரமார்பின் வெயிலெழ வணிவாரும்**
> **மட்டுடை மதுமாலை மான்மத மவைமல்க**
> **கட்டுடை வளர்பங்கி காசறை திமிர்வாரும்**
>
> **(மணவினைப் படலம், பா.32)**

என்னும் பாடலில் பட்டு உடை அணிகின்றவர்களும், குளிர் நிலா போல ஒளி வீசும் ஆரம் அணிவாரும், மார்பில் விளங்குகின்ற அணிகளை அணிவாரும், தேன் பொருந்திய மாலையை அணிகின்றவர்களும், கஸ்தூரி நறுமணம் புனைகின்றவர்களும் என வருணனை செய்கிறார். மணவினைப் படலத்தில் காணப்படும் வருணனைப் பாடல்கள் நயமிக்கனவாகக் காணப்படுகின்றன.

கம்பராமாயணத் தாக்கம்

கிறித்தவக் காப்பியங்கள் படைத்தவர்களில் சிலர் திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவற்றில் தோய்ந்தவர்களாக விளங்குகின்றனர். வீரமாமுனிவர், எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை போன்றவர்களைச் சிறந்த சான்றுகளாகச் சுட்டலாம். பூலோகசிங்க அருளப்ப நாவலரின் கம்பராமாயணப் புலமையை அவரது திருச்செல்வர் காவியத்தின் மூலம் அறிய முடிகின்றது. கம்பராமாயணத்தி லுள்ள நாட்டுப் படலம், நகரப் படலம், நீர்விளையாட்டுப்

படலம், திருஅவதாரப் படலம் என்னும் நான்கு படலத்தின் பெயர்களை திருச்செல்வர் காவியத்தில் பூலோகசிங்க அருளப்ப நாவலர் அப்படியே பயன்படுத்தியுள்ளார். மேலும் கம்பர் அரசியற் படலம் என்பதை பூலோகசிங்கர் அரசியற்கைப் படலம் என்றும், கம்பர் திரு முடி சூட்டுப் படலம் என்பதை இவர் முடிசூட்டுப் படலம் என்றும், கம்பர் கடிமணப் படலம் என்பதை பூலோகசிங்கர் மணவினைப் படலம் என்றும் சில மாற்றங்களுடன் எடுத்தாண்டுள்ளார்.

கம்பர் ஆற்றுப் படலம், நாட்டுப் படலம் எனத் தனித்தனியாக இரண்டு படலங்களைக் கூறுகிறார். ஆனால் பூலோகசிங்கர் நாட்டுப்படலத்தினுள் ஆற்றுப் படலச் செய்திகளைக் கூறியுள்ளார். கம்பரின் ஆற்று வளத்திலுள்ளப் பாடல்களைப் போன்று பூலோகசிங்கரின் ஆற்று வளப் பாடல்கள் அமைந்துள்ளன. கம்பரின்,

எயினர் வாழ் சீறூர் அப்பு மாரியின் இரியல் போக்கி,
வயின் வயின், எயிற்றி மாதர், வயிறு அலைத்து ஓட, ஓடி,
அயில் முகக் கணையும் வில்லும் வாரிக் கொண்டு,
அலைக்கும் நீரால்,
செயிர் தரும் கொற்ற மன்னர் சேனையை மானும் அன்றே
(ஆற்றுப் படலம், பா.14)

என்னும் பாடலை அடிப்படையாகக் கொண்டு,

இறைவற் கைதொழ வேனைய மன்னர்தந்
திறைகள் கைக்கொடு வந்திடு சேனைபோற்
கறைய டித்தொகை கந்தச்சந் தாதிய
நிறைய வாரி யெழுந்தது நீத்தமே
(திருச்செல்வர் காவியம், நாட்டுப் படலம், பா.9)

என்னும் பாடலை அருளப்ப நாவலர் இயற்றியுள்ளார். இப்பாடலில் யானைக் கூட்டங்களையும் சந்தனம், அகில் முதலியவைகளையும் வாரி எடுத்துக் கொண்டு வரும் வெள்ளம், பேரரசருக்குச் செலுத்துவதற்காகத் திறைகளோடு வருகின்ற மன்னர்களின் பெருக்கம் போலக் காணப்படுகின்றது எனப் பாடுகிறார்.

சேக்கிழார் மரபைப் பின்பற்றியமை

சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் ஒவ்வொரு படலத்தின் முடிவிலும் அடுத்த படலம் பற்றி சொல்வது மரபு.

அதைப்போன்றே பூலோகசிங்க அருளப்ப நாவலரும் தமது காவியத்திலுள்ள ஒவ்வொரு படலத்தின் முடிவிலும் அடுத்த படலம் பற்றிய செய்திகளை எடுத்தியம்புகிறார். சான்றாக, நகரப் படலத்தின் முடிவுப் பாடல்,

> **உரைசெயல் பெற்றவிவ் வொளிபொழி பொற்புறை யுயர்கோயிற்**
> **கரைசெய லற்றயல ரசர்கண் மொய்த்திரு கழல்வீழத்**
> **திரைசெய் கடற்புவி யுலைவுதொலைத்துயர் செங்கோன்மை**
> **யரசியலைச் சிறிதறைய மனத்தின மைக்கின்றாம்**
> **(நகரப் படலம், பா.82)**

என்பதாக உள்ளது. இப்பாடலில் அடுத்த படலமான அரசியற்கைப் படலம் குறித்துச் சொல்லியிருப்பது சேக்கிழாரின் மரபைப் பின்பற்றியதாக உள்ளது. அதுபோல திருஅவதாரப் படலத்தின் முடிவுப் பாடலான,

> **ஓதியவந் நாண்முதலாய் மூப்பாகு மலையப்ப னிடத்து றோமை**
> **தீதின கரத்திருந்து திருச்சபைக்குச் செங்கோன்மை செலுத்து சேட்ட**
> **வாதிகுரு வர்ச்யசிட்டப் பாப்பவரின் கட்டளைக்கீ ழமைய வேண்டும்**
> **போதுமெனிற் றுணிநின்னை ஞானஸ்நா னம்புரிவன் புந்தி மிக்கோய்**
> **(திருஅவதாரப் படலம், பா.108)**

என்பதில் அடுத்த படலமான ஞானஸ்நானப் படலம் குறித்து குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

திருக்குறள் கருத்துகள்

திருச்செல்வர் காவியத்தை முழுமையாகப் படிக்கும் போது ஆசிரியரின் பன்னூற் புலமையினை அறிந்து கொள்ள முடிகிறது. ஆங்காங்கே திருக்குறள் கருத்துகளைக் காணமுடிகிறது. சான்றாக,

> **ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
> **சான்றோன் எனக்கேட்ட தாய்** **(குறள். 69)**

என்னும் திருக்குறளை ஆதாரமாகக் கொண்டு,

> **ஈன்றபொழு துதனினு மினிதா யுவக்கு மகவைச்**
> **சான்றோ ரென்னக் கேட்டதாய் தந்தைய ரென்பதுபோற்**

றோன்றல் குணங்கள் கேட்டுத் தொல்வேந்
துள்ளமகிழ்ந்தான்
வான்றான் பெறவே வளருமக வைமகிழா ரெவரோ
(புத்திரசேமப் படலம், பா.44)

என்னும் பாடலைப் படைத்துள்ளார்.

விவிலியச் செய்திகள்

திருச்செல்வர் காவியத்தில் கதைத்தலைவனாகிய திருச்செல்வருக்கு வறலாம் என்னும் போதகர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறும் பகுதிகளில் விவிலியச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக உபதேசப் படலம், திருஅவதாரப் படலம் ஆகியவற்றில் விவிலியச் செய்திகள் உள்ளன. உபதேசப் படலத்தில் இறைவன் ஆதாம், ஏவாளைப் படைத்தமை, இறைவன் மோசேயின் மூலம் பத்து கட்டளைகளை அருளியது, நோவாவின் கதை, பாபிலோன் கோபுரம் கட்ட முற்பட்டது போன்ற செய்திகள் விவரிக்கப் பட்டுள்ளன. திருஅவதாரப் படலத்தில் ஆபிரகாமின் நாற்பத்து நான்காம் தலைமுறையில் மரியாள் பிறந்தது, எலிசபெத் குழந்தைப் பாக்கியம் பெற்றது, கன்னி மரியாளிடம் இயேசு பிறந்தது, இயேசு கிறிஸ்துவின் திருப்பணிகள், சீடர்களைத் தெரிந்தெடுத்தமை, இயேசு கிறிஸ்துவின் அருளுரைகள், அற்புதங்கள், இயேசு கிறிஸ்துவின் பாடுகள், சிலுவையில் அறையுண்ட நிகழ்வுகள், உயிர்த்தெழுதல் ஆகிய செய்திகள் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

ஆதியாகமம் 11ஆம் அதிகாரத்திலுள்ள முதல் எட்டு வசனங்களை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் இரண்டு பாடல்கள் உள்ளன. மக்கள் வானத்தைத் தொடும் அளவுக்கு உயரமுள்ள கோபுரம் ஒன்றைக் கட்ட முற்பட்டனர். கடவுள் அவர்களது முயற்சியை கைவிடும் பொருட்டு அவர்களுக்குள் பலவித மொழிகளை உண்டாக்கினார். இதனால் அவர்கள் கோபுரம் கட்டும் திட்டத்தை விட்டுவிட்டு பூமியெங்கும் சிதறிப்போயினர். ஒரு மொழி அவ்விடத்தில் பல மொழிகளானபடியினால் அந்த இடம் பாபேல் எனப்பட்டது. இந்நிகழ்வை,

இங்கதற் பின்னர் நூறாண்ட தெல்லையி
னங்கவர நேகமிக் காகிப் பூமிசை

மங்குறோய் தரப்பபி லோனியென் றொரு
துங்கவான் கோபுரஞ் செயத்தொ டங்கினார்

அப்பெருங் கோபுரமமைக்கு மாயிடை
மெய்ப்பர னங்கதை விலக்கு வானவர்
செப்புறு பாடையைச் சிதைக்கச் செய்தொழி
றப்பியங் கதுசெய றவிர்ந்திட் டார்களே

(உபதேசப் படலம், பா.103, 104)

என்னும் பாடல்கள் வாயிலாக பூலோகசிங்கர் விவரிக்கிறார். "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, நீ மலையின் மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு; நான் உனக்குக் கற்பலகைகளையும், நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நான் எழுதின நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன்" என்றார் (யாத்திராகமம் 24 : 12) என்னும் வசனத்தை ஆதாரமாகக் கொண்டு,

அப்பெருங் காட்சி யுளவனி தாம்வரு
மொப்பரு மானுட வுருவுங் காட்டிப்பின்
றப்பருங் கற்பனை பத்துட் டம்மறை
செப்பருங் கற்பல கையினுந் தீட்டினார்

(உபதேசப் படலம், பா.113)

என்னும் பாடலைப் படைத்துள்ளார். இயேசு கிறிஸ்து பிறந்ததை உணர்ந்த மூன்று சாஸ்திரிகளும் நட்சத்திரம் வழிகாட்டியதன் மூலம் பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு பணிந்து, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் காணிக்கையாக வைத்தார்கள் என்னும் கருத்தை ஆதாரமாகக் கொண்டு,

சிறந்தபூரு வதிக்கினிற் கலைதெரி செங்கோ
லறந்தவாத மூவரசர் தம்மாகமத் தமலன்
பிறந்தகால மோர்தா ரகைபெரிது தித்திடுமென்
றறிந்துதீட் டியபடியடைந் தடிபணிந் தகன்றார்

(திருஅவதாரப் படலம், பா.42)

என்னும் பாடல் அமைக்கப்பட்டுள்ளது. இயேசு பாலகனை யோசேப்பும், மரியாளும் எருசலேம் தேவாலயத்திற்குள் கொண்டு சென்றனர். அப்போது அங்கிருந்த சிமியோன் என்னும் கடவுளுடைய மனிதன் குழந்தையைத் தன் கைகளினால் ஏந்திக் கொண்டு இறைவனை வாழ்த்தினார். இதை,

அன்னகா லையிலா கமவழி தெளிசிமியா
னென்னையா ளுடைநாதனை யிருகரத் தேந்தித்
தொன்மைவா னகம்வசுந் தரையுயிர்த் தொகையெவைக்கு
மன்னுதா பரநீயெனப் போற்றிவாழ்த்தி னனால்

(திருஅவதாரப் படலம், பா.44)

என்னும் பாடல் வடிவில் பூலோகசிங்க முதலியார் வெளிப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்யும் வகையில் மக்கள் பிலாத்துவிடம் கூக்குரலிட்டனர். பிலாத்து அவர்களுக்கு முன்னர் தண்ணீரில் கைகளைக் கழுவி, இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக் கொடுத்தான் என்னும் செய்தியை,

யேசுவைநீர் விடுத்தீரே லெம்பரதோர்க் குத்தரிப்பீர்
மோசமில்லை யென்றுரைத்த சத்தமாய் மொழிந்ததுகேட்
டாசுமென்மேற் குற்றமில்லை யென்றுதன்கை யகங்கழுவிக்
கூசாதிங் குமக்குவப்ப புரிமின்க ளெனக்கொடுத்தான்

(திருஅவதாரப் படலம், பா.80)

எனப் பாடுகிறார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு ஏழு வார்த்தைகளைக் கூறிய பின்னர் தன் உயிரை விட்டார். அவர் இறந்து போனதை உறுதிப்படுத்துவதற்காகப் போர்ச் சேவகர்களில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். அதிலிருந்து இரத்தமும் தண்ணீரும் வந்தது என்னும் நிகழ்வை,

மரித்ததுபோற் காட்டியுயிர் பிரிந்துசென்று பாதலத்தின் மருவவிப்பாற்
றரைக்குமருந் தாயுதித்த தற்பரன்றன் விலாவினொரு தறுகண்ணாள
னிரக்கமற வீட்டிகொடு குத்திடவற் புதரூப விரத்தநன்னீர்
புரைத்தெமது பிழைப்பினுக்கே காரணமாய்ப் பாய்ந்துபுறம் போயிற்றாமால்

(திருஅவதாரப் படலம், பா.87)

என்று பூலோகசிங்க முதலியார் பாடுகிறார்.

முனிவரின் கூற்று

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் பாடு மரணங்கள் வரையிலான நிகழ்வுகளை திருச்செல்வரிடம் முனிவர் கூறிய பின்னர்,

செப்புமிவ ரேசருவலோகபர திவ்வியரா சாதிராச
முப்பெயரொன் றாமகிமைப் பிரதாப மோட்சரூ பகவானந்த
ரெப்பொழுது மர்ச்சித்தும் பூசித்து மிறைஞ்சுபவரிவரேயாகுந்
தப்பறவே யநுபவிப்பவிச் சிக்குமோக்ஷ மதுந்தாமேயாமே
(திருஅவதாரப் படலம், பா.106)

என்று கூறி, ஞானஸ்நானம் கொடுப்பதற்குத் தயாராகிறார். இப்பாடல் இயேசு கிறிஸ்துவின் மகிமையை விளக்குவதாக அமைந்துள்ளது.

திருச்செல்வனின் இறைப்பற்று

திருச்செல்வருக்கும் நக்கோருக்கும் தங்களது சமயங்களைப் பற்றியும் தங்கள் கடவுளர்களைப் பற்றியும் விவாதம் ஏற்படுகிறது. அவ்விவாதத்தில் திருச்செல்வன் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை ஐந்து பாடல்களின் வாயிலாக விவரிக்கிறார். அப்பாடல்கள் வருமாறு:

தந்தைபால் விடைகொண் டருட்சுத பரன்றனது
பேரிரக்கத்தோ
டிந்தமாநிலத் தொருதிருக் கற்புடையிறைவி தன்னுதரத்து
மைந்தர்கூட் டரவின் றியற்புதவித் தேவமா னுடனாகி
வந்துதித் துயர்திவ்விய குருத்துவ மருவிமாண் டவம்பூண்டே.

பூணுதற்கருந் தவசினால்வருந் தியும்பொருப்பு வெஞ்சுரஞ்
சேணுறத்திரிந் தும்விழிநீருகச் செபத்தியா னஞ்செய்து
மூணுறக்கநீத் துபவாசங்களு ஞற்றிமெய் வருந்துற்றுங்
காணுறப்பல தவங்கள்செய் திரந்தவர்கன்ம
வெம்பவந்தீர்த்தும்.

ஈதுநீவிரும் மிதயமுள் ளுருகிடவியற்று மின்களென்
றெவர்க்கு
நாதனும்ப டிப்பித்திதுபுரி விரேனரகில் வீழ்குவதின்றித்
தீதின்முத் தியின்பாக்கியஞ் சேர்ந்துநீ டூழியுஞ்செழிப்பீரென்
றோதிமூ வொருபத்து மூன்றாண்டு மிவ்வுலகில்
வாழ்ந்தனரின்னும்.

சாததேவனித் தரைக்கருண் மறைப்பொருடன்
னைநன்னிலை யாக்கி
யோதருஞ்சுவி சேடத்தினுட் பொருளுண்மையை யுபதேசித்
தேதமொன்றறநின் றறம்வளர்த்திடு மெம்பிரானெ மக்காகத்
தாதையாம்பரன் முனிவுகடன்னை மெய்தாங்கி
யீங்கிறந்திட்டார்.

இறந்துபாதாலத் திறங்சியங் குறைந்தவபி ராமீசாக்கியக்
கோவா
மறந்தவாத மூதாதையர் முதலினோ ராருயி ரீடேறச்
சிறந்ததிவ்விய காயத்தோ டுயிர்த்தெழில் சேர்ந்துவான
கத்தெய்தி
யிறந்தயாவர்க்குந் திருநடுத்தீர்த் திடலின்னு மெய்துவர்
மன்னோ.

(தர்க்கசாஸ்திரப் படலம், பா.99-103)

இந்த ஐந்து பாடல்களின் கருத்து பின்வருமாறு:

கிருபையுடைய குமாரனாகிய கடவுள், பிதாவாகிய சர்வேசுரனிடத்து விடை கொண்டு தமது பேரிரக்கத்தினால் இந்தப் பெரிய பூமியிலே ஒரு பரிசுத்த கற்புடைய தலைவியாகிய மரியாளின் வயிற்று ஆடவர் சேர்க்கையின்றி, அதிசயப்படும்படி தேவ மனிதனாய்ப் பிறந்து அதிமேன்மையான குருத் தொழிலிற் பிரவேசித்து, மகத்தாகிய தவத்தைச் செய்து, செய்தற்கரிய தவங்களினால் வருத்தமடைந்தும், மலைகள், வெம்மையுடைய பாலைநிலங்கள், தூர தேசங்களில் திரிந்தும், கண்ணீரொழுகச் செபத்தியானங்களைப் புரிந்தும், ஆகாரம் நித்திரையின்றி உபவாசமிருந்து உடல் வருத்தமடைந்தும், பலர் காணும்படி பல அற்புதங்களைப் புரிந்தும், தம்மிடத்தில் இரந்து கேட்டவர்களது பாவங்களை அகற்றியும், இவற்றை நீங்களும் உங்களிருதயம் சந்தோஷிக்கச் செய்யுங்களென்று எவர்க்கும் நாதனாகிய கிறிஸ்து நாதர் கற்பித்து இங்ஙனங் கூறியவற்றைச் செய்வீர்களேல் நரகில் வீழாது குற்றமில்லாத பேரின்ப பாக்கியத்தில் சேர்ந்து நெடுங்காலஞ் சந்தோஷமாக இருப்பீர்களென்று கூறி முப்பத்து மூன்று ஆண்டுகளாக இவ்வுலகத்தில் வாழ்ந்தார்.

மேலும், உண்மையுள்ள தேவன் இப்பூமியிலுள்ளவர்க்குக் கொடுத்த வேதப் பொருளை நன்மையாய் வரச் செய்து ஓதப்படும் அருமையான சுவிசேடத்தின் உட்பொருள் சத்தியத்தைப் போதித்து, ஒரு குற்றமின்றித் தருமத்தை வளர்க்கும் எம் தலைவராகிய கிறிஸ்து இரட்சா பெருமான், பாவிகளாகிய எமக்காகப் பிதாவாகிய சர்வேசுரனது கோபத்தைத் தம் உடலில் தாங்கி இவ்விடத்து உயிர் துறந்தார். நம் இரட்சா பெருமான் இவ்வாறு மரித்துப் பாதாளத்தில் இறங்கி அவ்விடம் வாழ்ந்த தருமநெறி தவறாத ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு முதலானவர்களது நிறைவுற்ற ஆன்மா ஈடேறச் சிறப்புற்ற

தெய்வீக சரீரத்தோடு உயிர்த்தெழுந்து அழகு பொருந்தி, வானுலகத்தை அடைந்து இறந்த ஆன்மாக்களெல்லாருக்கும் பரிசுத்த நடுத்தீர்வைக் கொடுத்திட இன்னும் ஒருமுறை பூமியில் வருவார்.

திருச்செல்வர் காவியம் தழுவல் காப்பியம் என்னும் உணர்வு ஏற்படா வண்ணம் ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ளது பூலோகசிங்க முதலியாரின் புலமைக்கு ஒரு சிறந்த சான்றாக அமைகிறது. திருச்செல்வர் கிறித்தவராக மாறிவிடக் கூடாது என்னும் எண்ணத்துடன் ஆரம்பத்திலிருந்து பல்வித முயற்சிகளை அவரது தந்தையார் மேற்கொண்டார். எனினும் இறைவனின் சித்தப்படி இறையடியவர்களின் வழிநடத்துதலினால் திருச்செல்வர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டது மட்டுமன்றி, அவரைச் சார்ந்தவர்களும் மனம் திரும்பியது காப்பியத்திற்கு அழகு சேர்ப்பதாக அமைந்துள்ளது. காப்பியத்தின் முடிவு இன்பியலாக அமைந்தது காப்பியத்திற்கு மணிமகுடமாக விளங்குகிறது.

28. இரட்சணிய யாத்திரிகம்

தேம்பாவணியும் இரட்சணிய யாத்திரிகமும் கிறித்தவ இலக்கியத்தின் இரு கண்களாகப் போற்றப்படுவன. இரட்சணிய யாத்திரிகம் இன்றும் மக்களால் படிக்கப்பட்டும் மதிக்கப்பட்டும் வரும் மக்கள் இலக்கியமாகும். கிறித்தவக் காப்பியங்களுள் முதன்மையான இரட்சணிய யாத்திரிகத்தைக் கிருஷ்ணபிள்ளை இயற்றியதன் காரணமாக கிறித்தவக் கம்பர், வீரமாமுனிவரின் வழித் தோன்றல் என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றார்.

கிருஷ்ணபிள்ளை இளம் வயதில் இலக்கண நூல்களையும் கம்பராமாயணம், சீவகசிந்தாமணி போன்ற இலக்கிய நூல்களையும் கற்றுப் புலமை பெற்றிருந்ததால் மக்கள் போற்றும் காப்பியத்தை அவரால் படைக்க முடிந்தது. அவரது காப்பியம் வெளிவர பாளையங்கோட்டையிலிருந்து வெளிவந்த 'நற்போதகம்' என்னும் கிறித்தவ மாத இதழ் பெருந்துணை புரிந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணபிள்ளை பலவகை இலக்கியங்களைப் படைத்திருந்தாலும் இரட்சணிய யாத்திரிகம் பெருஞ்சிறப்புப் பெற்று கிறித்தவ இலக்கியத்தின் மணிமகுடமாக விளங்குகின்றது.

ஆசிரியர் வரலாறு

தென்பாண்டி நாடான திருநெல்வேலியிலுள்ள பாளையங்கோட்டைக்கு அருகில் உள்ள கரையிருப்பு என்னும் கிராமத்தில் சங்கர நாராயண பிள்ளை, தேவகியம்மாள் என்னும் தம்பதியினருக்கு 1827ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் நாள் கிருஷ்ணபிள்ளை பிறந்தார். கிருஷ்ணபிள்ளை பிறந்து ஏழு ஆண்டுகள் கழித்து அவரது தம்பி முத்தையா பிள்ளை பிறந்தார்.

இளமையும் கல்வியும்

கிருஷ்ணபிள்ளைக்கு அவரது தந்தையார் முதல் ஆசிரியராகத் திகழ்ந்தார். தினமும் திருவரங்கக் கலம்பகம், திருவாய்மொழி, சடகோபரந்தாதி முதலிய நூல்களை மனப்பாடம் செய்ய வேண்டும். சங்கர நாராயண பிள்ளை கம்பராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்தும் போது கிருஷ்ணபிள்ளையையும் உடன் வைத்துப் பழக்கி வந்தார். இதனால் கிருஷ்ணபிள்ளை பதினான்கு வயதினராக

இருக்கும்போது கம்பராமாயணத்திலுள்ள பாடல்களை மனப்பாடமாக அறிந்ததுடன் அவற்றிற்குப் பொருள் கூறவும் புலமை பெற்றிருந்தார். மாணிக்கவாசகத் தேவரிடத்து உரிச்சொல் நிகண்டு, திருக்குறள், ஆத்திசூடி ஆகியவற்றைக் கற்றதோடு பிலவண ஜோசியரிடம் வடமொழியையும் கிருஷ்ணபிள்ளை கற்றார். கிருஷ்ணபிள்ளை வாழ்ந்து வந்த நாடார்பட்டியிலிருந்து 20 கல் தொலைவிலுள்ள பாளையங்கோட்டைக்குச் சென்று ஆங்கிலக் கல்வி பயில வேண்டிய நிலை அன்றிருந்தது. இதனால் தாயார் தன் மகனைப் பாளையங்கோட்டைக்கு அனுப்பிப் படிக்க வைக்க விரும்பவில்லை.

திருமணம்

கிருஷ்ணபிள்ளையின் தந்தையார் 1838ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சுகவீனம் அடைந்தார். தந்தையாரின் வேண்டுகோளுக்கிணங்க, திருச்செந்தூரைச் சேர்ந்த முத்தம்மாளை 1842ஆம் ஆண்டு ஆகஸ்டு 22ஆம் நாள் கிருஷ்ணபிள்ளை திருமணம் செய்தார். அப்போது கிருஷ்ணபிள்ளைக்கு வயது பதினைந்து; முத்தம்மாளுக்கு வயது பன்னிரண்டு.

சங்கர நாராயணபிள்ளை தம் 47ஆவது வயதில் காலமானார். குடும்பத்தின் பொறுப்பு பதினைந்து வயதுடைய மூத்த மகனிடம் வந்தது. தந்தையார் செய்து வந்த பணியைக் கிருஷ்ண பிள்ளை தொடர்ந்தார். 1845ஆம் ஆண்டு நவம்பரில் கிருஷ்ணபிள்ளையும் குடும்பத்தாரும் பாளையங் கோட்டையிலுள்ள முருகன் குறிச்சியில் குடியேறினர். வைணவரான திருப்பாற்கடனாதக் கவிராயரிடம் சென்று, குருகுலக் கல்வி முறைப்படி இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றைக் கற்றார். இக்கவிராயரிடம் ரேனியஸ் போதகரும் தமிழ் கற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியப்பணி

திருநெல்வேலிப் பகுதிகளில் இறைப் பணியாற்றி வந்த பேராயர் கால்டுவெல் 1853 ஆம் ஆண்டு மே 27 ஆம் நாள் கிருஷ்ண பிள்ளையைத் திருமறைக் கல்லூரியில் தமிழாசிரியராக நியமித்தார். எனவே பாளையங்கோட்டையிலிருந்து 20 கல் தொலைவிலுள்ள சாயர்புரத்திற்குக் கிருஷ்ணபிள்ளை தம்

குடும்பத்தினருடன் குடியேறினார். 1853 இல் அப்பள்ளியில் கற்ற 90 மாணவர்களும் கிறித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் முதல்வர் எச்.சி. அகஸ்டபிளுக்கும் (H.C. Huxtable) கிருஷ்ணபிள்ளை தமிழ் கற்றுக் கொடுத்தார். அதேபோல் அகஸ்டபிள், கிருஷ்ணபிள்ளைக்குக் கிறிஸ்துவின் நற்செய்தியினைக் கற்றுக் கொடுத்தார்.

தன்னுடன் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவரிடம் தமிழ் வேதாகமத்தை வாங்கி ஆதியாகமம் முதல் யாத்திராகமம் இருபதாம் அதிகாரம் வரை படித்தார். வேதாகமம் படிக்கத் தொடங்கிய பின் இவரது பழைய சமயப் பற்று குறைய ஆரம்பித்தது. கிருஷ்ணபிள்ளையின் தம்பி முத்தையா பிள்ளை இவரது குடும்பத்தில் முதன்முதலாகக் கிறித்தவராக மாறினார். கிருஷ்ணபிள்ளையின் நெருங்கிய நண்பர்கள் சண்முகநாதக் கவிராயரும் தனுஷ்கோடி ராஜுவும் கிறித்தவர்களாக மாறினர். இரண்டு நண்பர்களும், தன் ஒரே தம்பியும் கிறித்தவர்களாக மாறியது கிருஷ்ணபிள்ளையின் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

கிருஷ்ணபிள்ளையின் நண்பரான தனுஷ்கோடி ராஜு பரதேசியின் மோட்சப் பிரயாணம், ஆத்தும விசாரந் தீர்த்தல், இருதயக் காவல், இளமைப் பக்தி என்னும் நூற்களைப் படிக்கக் கொடுத்தார். பின்னாளில் இந்நூற்களுள் ஒன்றான மோட்சப் பிரயாணம் என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டே கிறித்தவக் காப்பியமான இரட்சணிய யாத்திரிகத்தைப் படைத்தார்.

கிறித்தவராதல்

கிறித்தவக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்ட கிருஷ்ணபிள்ளை திருமுழுக்குப் பெற வேண்டும் என்னும் நோக்கத்துடன் சென்னை சென்றார். அவர் நினைத்தபடி உடனடியாகத் திருமுழுக்குப் பெறமுடியவில்லை. அப்போது அருள்திரு. பீட்டர் பெர்சிவல் (Peter Percivel) சென்னை மாநில உயர்நிலைப் பள்ளியின் (Presidency School) பதிவாளராகப் பணிபுரிந்து வந்தார். கிருஷ்ணபிள்ளையின் தமிழ்ப் புலமையை அறிந்த பெர்சிவல், தனக்குத் தமிழ்க் கற்றுக் கொடுப்பதுடன், தான் நடத்தி வந்த ''தினவர்த்தமானி'' என்னும் இதழுக்குத் துணை ஆசிரியராகப் பொறுப்பும் கொடுத்து, உயர்நிலைப் பள்ளியின் துணைத் தமிழ் ஆசிரியராகவும் அமர்த்தினார். பின்னர்

புகழ்பெற்ற வேதாகம மொழிபெயர்ப்பாளர் ஹென்றி பவருக்குத் (Hentry Bower) தமிழ்க் கற்றுக் கொடுத்ததுடன் அவரது மொழி பெயர்ப்புப் பணிக்கும் உதவினார்.

1858ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் நாள் தம்முடைய முப்பதாவது வயதில் அருள்திரு. ஜான் கஸ்ட்டுவிடம் (Rev. John Guest) மயிலாப்பூரிலுள்ள தூய தாமசு திருச்சபையில் ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ணபிள்ளை எனத் திருமுழுக்குப் பெற்றார். ஹென்றி பவர் என்னும் பெயரிலுள்ள ஹென்றி என்னும் பெயரையும் திருமுழுக்குப் பெற்ற அன்று செய்தி வழங்கிய ஆல்பிரட் ஆர். சிமாண்ட்ஸ் (Alfred R.Symonds) என்னும் பெயரிலுள்ள ஆல்பிரட் என்பதையும் சேர்த்து வைத்த பெயரே ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ணபிள்ளை என்பதாகும். அன்று முதல் இவரை எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை என அழைப்பது வழக்கமாயிற்று. பின்னர் தம் குடும்பத்தினரையும் கிறித்தவர்களாக மாற்ற வேண்டும் என்னும் எண்ணத்துடன் ஊருக்குத் திரும்பினார்.

கிருஷ்ணபிள்ளை கிறித்தவரானதை அறிந்து அவரது மனைவி முத்தம்மாள் தம் தாய் வீட்டுக்குச் சென்றுவிட்டார். இச்சூழலில் அருள்திரு. சார்ஜென்டு திருச்சபைத் தொண்டர் கழகக் கல்விச் சாலையில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றவும், திருமதி சார்ஜெண்டு அம்மையாருக்குத் தமிழ்க் கற்பிக்கவும் ஏற்பாடு செய்தார். இவ்வம்மையார் மூலம் கிறிஸ்துவைப் பற்றி அதிகமாக அறிந்து கொண்டார். தாய் வீட்டிலிருந்து திரும்பி வந்த முத்தம்மாள் தாமாகவே கிறித்தவராக மாற விரும்பினார். 1860ஆம் ஆண்டு செப்டம்பரில் கிருஷ்ணபிள்ளையின் குடும்பத்தார் பாளையங் கோட்டையிலுள்ள திரித்துவச் சபையில் திருமுழுக்குப் பெற்றனர்.

கிருஷ்ணபிள்ளை மீண்டும் 1864ஆம் ஆண்டு சாயர்புரத்திலுள்ள திருமறைக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார். சமூகத்தில் அனைவருடனும் அன்பாகப் பழகினார். இவருடைய முன் மாதிரியான வாழ்வினைக் கண்ட பலர் கிறித்தவர்களாக மாறினர்.

1876இல் திருச்சபைத் திருத்தொண்டர் கல்லூரியில் (C.M.S. College) தமிழ்ப் பேராசிரியர் பொறுப்பை ஏற்றார். இவரது தமிழ் வகுப்புகளில் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கு கொண்டு கற்று வெற்றியடைந்தனர். 1887இல்

திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். குடும்பத்தாருடன் திருவனந்தபுரம் வந்ததாலும், கல்லூரியில் இளங்கலை (பி.ஏ.) மாணவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்ததாலும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அக்கல்லூரியில் பணியாற்றி வந்த பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை இவரது நெருங்கிய நண்பரானார்.

தமது நண்பர் டாக்டர் தனுஷ்கோடி ராஜுவின் வேண்டுகோளுக்கிணங்க 1890ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் திருவனந்தபுரத்திலுள்ள கல்லூரிப் பணியை விட்டுவிட்டு குலசேகரன் பட்டினம் வந்து தமது நண்பரின் உப்பளத்தை மேற்பார்வையிடும் பணியை ஏற்றுக் கொண்டார். 1891இல் குலசேகரன் பட்டினத்தில் வைத்து இவருடைய மனைவி காலமானார். 1892ஆம் ஆண்டு சென்னையில் டாக்டர் ஜான் மர்டாக்கின் தலைமைப் பொறுப்பில் இயங்கி வந்த கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் தமிழ்ப் பிரிவுக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். புலவர் திருமறைப் பட்டத்தேர்வுக்கும் திருத்தொண்டர்கள் தமிழ்த் தேர்வுக்கும் தேர்வாளராகத் தொடர்ந்து பணியாற்றி வந்தார்.

முடிவு

1899ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிருஷ்ணபிள்ளை நோயுற்றார். எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை 1900 பெப்ரவரி மூன்றாம் நாள் பகல் ஒரு மணிக்கு தம் 73 ஆவது வயதில் காலமானார். அடுத்த நாள் காலையில் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளையின் உடல் பாளையங்கோட்டைக்கு அருகில் சமாதானபுரத்திலுள்ள திருச்சபைத் திருத்தொண்டர்கழகப் பொதுக்கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

உரைநடை நூல்கள்

1. இலக்கண சூடாமணி (1883)

எழுத்து, சொல், தொடர் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்ட இலக்கண சூடாமணி என்னும் நூலைக் கிருஷ்ணபிள்ளை 1883 ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூல் மாணவர்களுக்கு உரைநடை வாயிலாக இலக்கணம் கற்பிக்கும் முறையில் அமைந்துள்ளது. டாக்டர் ஹென்றி பவரும், சி.எம்.எஸ். கல்லூரி முதல்வர் எச். சாப்டரும் இந்நூலுக்கு ஆங்கிலத்தில் முன்னுரை அளித்துள்ளனர். 1937ஆம் ஆண்டு

கிருஷ்ணபிள்ளையின் பேரர் கா. தாஸ் கிருஷ்ணையா இலக்கண விளக்கச் சூடாமணி என இந்நூலின் தலைப்பை மாற்றி இரண்டாம் பதிப்பாக வெளிக்கொணர்ந்தார்.

2. பாளையங்கோட்டை எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவரான வரலாறு

1893ஆம் ஆண்டு பெப்ரவரியில் டி.உவாக்கர், கிருஷ்ணபிள்ளையிடம் கடிதம் மூலம் கிருஷ்ணபிள்ளை கிறித்தவரான வரலாற்றை நூலாக எழுதி வெளியிடக் கேட்டுக் கொண்டார். அவ்வேண்டுகோளுக்கிணங்க தாம் கிறித்தவரான வரலாற்றை 1893ஆம் ஆண்டில் 28 உட்தலைப்புகளில் எழுதினார். கிருஷ்ண பிள்ளையின் குடும்பத்தார் கிறித்தவரான வரலாறும், அக்காலத்தில் ஒருவர் இந்து மதத்திலிருந்து கிறித்தவராக மாறினால் உண்டாகும் நிலைமைகளும் கிருஷ்ணபிள்ளையால் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

3. இரட்சணிய சமய நிர்ணயம்

இரட்சணிய சமய நிர்ணயம் என்னும் உரைநடை நூல் கிறித்தவ இலக்கியச் சங்கத்தாரால் 1898 ஆம் ஆண்டு முதலில் வெளியிடப்பட்டது. இந்நூலின் நோக்கம், ''ஆன்ம ஈடேற்றத்தை அருளத்தக்க மெய்ச்சமயம் எது என்று ஆராய்ந்து அறிதலே'' ஆகும். இதனைக் கிறித்தவச் சமயக் காப்புரை நூல் என்றும் வழங்கலாம்.

செய்யுள் நூல்கள்

4. இரட்சணிய மனோகரம்

கிருஷ்ணபிள்ளையின் செய்யுள் நூல்களுள் இரட்சணிய யாத்திரிகத்திற்கு அடுத்த நிலையில் போற்றத்தக்கதாக இரட்சணிய மனோகரம் அமைந்துள்ளது. இந்நூல் இரட்சணிய யாத்திரிகத்தை விடப் படிப்பதற்கு எளிமையானது. இரட்சணிய மனோகரம் கல் மனதையும் உருகச் செய்யும் உருக்கமானப் பாடல்களைக் கொண்டது. 'தமிழ்க் கிறித்தவத் திருவாசகம்' எனப் போற்றும் வகையில் இரட்சணிய மனோகரம் சிறப்புப் பெற்று விளங்குகிறது. சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பாடிய திருப்பாசுரங்களின் மணம் இரட்சணிய மனோகரத்தில் வீசுவது குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணபிள்ளை தான் பெற்ற இரட்சிப்பின் மகிழ்ச்சியினால் இந்நூலைப் பாடியுள்ளார்.

இரட்சணிய மனோகரத்தில் பக்தி உணர்வினால் அவ்வப்போது பாடிய தோத்திரப் பாடல்களும், இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள சுவை மிகுந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 566 பாடல்களும் 34 பல்வேறு தலைப்புகளில் (பதிகங்களில்) இடம் பெற்றுள்ளன. இந்நூல் தமிழ்ப் பண்பாட்டு மணமும் தமிழிசை வளமும் பக்திச் சுவையும் செறிந்தப் பாடல்களைக் கொண்டது. இந்நூலில் இயேசு கிறிஸ்துவின் பெருமைகள், கிறித்தவ சமயக் கோட்பாடுகள், கிருஷ்ணபிள்ளையின் வாழ்க்கை அனுபவங்கள் ஆகியன உள்ளடக்கமாகக் காணப்படுகின்றன.

இரட்சணிய மனோகரம் 1899ஆம் ஆண்டு முதல் பதிப்பாகவும் 1925இல் இரண்டாவது பதிப்பாகவும் கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் மூலம் வெளிவந்தது. பின்னர் 1951, 1978, 2002 ஆகிய ஆண்டுகளில் வெவ்வேறு அறிஞர்களால் இந்நூல் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

5. போற்றித் திரு அகவல்

போற்றித் திரு அகவல் கிருஷ்ணபிள்ளையின் முதல் நூலாகும். 53 கண்ணிகளால் அமைந்த 106 அடிகள் மட்டுமே இந்நூலில் கிடைத்துள்ளன. முற்றுப் பெறாத அகவல் என்னும் தலைப்பிலுள்ள இந்நூலுக்கு ''போற்றித் திரு அகவல்'' எனப் பெயர் சூட்டி டாக்டர் வீ. ஞானசிகாமணி 1978இல் வேதாகம மாணவர் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார்.

6. காவிய தரும சங்கிரகம் (தொகுப்பு நூல்)

தமிழ் இலக்கியத்திலுள்ள சிறப்பானப் பகுதிகளை அனைவரும் எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் காவிய தரும சங்கிரகம் என்னும் நூல் தொகுக்கப்பட்டது. இந்நூலில் 2500 பாடல்கள் உள்ளன. பல்வேறு சூழல்களினால் கிருஷ்ணபிள்ளையின் காலத்தில் இந்நூல் வெளிவரவில்லை. 1926ஆம் ஆண்டு இந்நூலின் முதல் பாகம் 513 செய்யுள்களுடன் பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்பில் இடம் பெறாத மீதிப் பாடல்கள் குறித்து எவ்வித விபரமும் தெரியவில்லை.

7. வேதப்பொருள் அம்மானை (பதிப்பு நூல்)

1865ஆம் ஆண்டு வேதமாணிக்கம் நாடார் பாடிய வேதப்பொருள் அம்மானை என்னும் நூலைக் கிருஷ்ணபிள்ளை

பிழை திருத்திப் பதிப்பித்தார். இவர் பதிப்பித்த இந்நூலின் ஒரு பிரதி கூட இன்று கிடைக்கவில்லை.

8. பரதகண்ட புராதனம் (பதிப்பு நூல்)

கிறித்தவ இலக்கியச் சங்கத்தில் பணியாற்றும் போது டாக்டர் ஜான் மர்டாக்கின் வேண்டுகோளுக்கிணங்க டாக்டர் கால்டுவெல் எழுதிய பரத கண்ட புராதனம் என்னும் நூலை கிருஷ்ணபிள்ளை பதிப்பித்து வெளியிட்டார்.

இரட்சணிய யாத்திரிகத்தின் மூலநூல்

இரட்சணிய யாத்திரிகத்தின் மூல நூலான "பில்கிரிம்ஸ் புராகிரஸ்" (Pilgrims Progress) இறவாப் புகழ்பெற்ற ஆன்மிக இலக்கியங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. இந்நூலினை இங்கிலாந்து நாட்டினரான ஜான்பனியன் (1628-1688) எழுதியுள்ளார். விவிலிய (Bible) நூலுக்கு அடுத்தபடியாக அதிகமான மொழிகளில் இந்நூல் மொழி பெயர்க்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருத்தூய்மையாளர் இயக்கத்தின் மீதிருந்த ஈடுபாட்டின் காரணமாக ஜான்பனியன் அந்நாட்டுத் திருச்சபை மரபுகளுக்கு எதிராகச் செயல்பட்டார். இதனால் இரண்டு தடவை சிறைத் தண்டனை அடைந்தார். சிறையில் ஆங்கில விவிலியத்தை (Bible) முழுவதுமாக நன்கு படித்தார். இவரது பன்னிரண்டு ஆண்டுகாலச் சிறை வாழ்க்கையின் விளைவாக ஆன்மிக உலகிற்கும் இலக்கிய உலகிற்கும் பல அரிய கொடைகள் கிட்டின எனலாம். ஜான்பனியன் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்கள் படைத்திருந்தாலும் இவரது நூல்களில் தலை சிறந்த நூல் "பில்கிரிம்ஸ் புராகிரஸ்" என்பதாகும்.

ஜான்பனியன் 'பெட்போர்டு' என்னும் சிறைச் சாலையில் இருக்கும் போது எழுதியதால் இந்நூலைச் 'சிறைநூல்' எனவும் வழங்குவர். பில்கிரிம்ஸ் புராகிரசின் முதல் பாகம் பனியன் சிறைச்சாலையில் இருக்கும் போது எழுதப்பட்டு பின்னர் 1678ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இப்பாகம் கிறித்தவனுடைய திருப்பயணத்தின் முன்னேற்றத்தை விளக்குகின்றது. கிறித்தவனின் மனைவி கிறித்தவளின் திருப்பயண முன்னேற்றத்தை விளக்கும் இரண்டாம் பாகம் 1684 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. உரைநடை வடிவிலான இரு பாகங்களும் சேர்ந்ததே 'பில்கிரிம்ஸ் புராகிரஸ்' என்பதாகும்.

மூலநூல் பெயர்ப்பு

பல்வேறு சிறப்புக்களையுடைய 'பில்கிரிம்ஸ் புராகிரஸ்' தமிழ்மொழியில் மாறுபட்ட வடிவங்களில் தமிழாக்கம் செய்யப் பெற்று வெளிவந்துள்ளது. இந்நூல் தமிழ் மொழியில் முதன் முதலாக 1793ஆம் ஆண்டு சென்னை சமய நூற் கழகத்தினரால் (Madras Tract Society) ஆங்கில மூலத்துடன் உரைநடை வடிவில் முதல் பாகம் மட்டும் வெளியிடப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு 1826ஆம் ஆண்டு வெளிவந்தது. பின்னர் ஆங்கில மூலம் இன்றித் தமிழில் மட்டும் 1841, 1842, 1848 ஆகிய ஆண்டுகளில் மூன்று பதிப்புகள் வெளிவந்தன.

'பில்கிரிம்ஸ் புராகிரசின்' இரண்டு பாகங்களையும் சேர்த்து முதன் முதலாகத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் அருள்திரு. எல்.ஸ்பால்டிங்கு (L.Spalding) என்பவராவார். இந்நூல் யாழ்ப்பாண சமய நூல் கழகத்தவரால் (Jaffna Tract Society) 1853ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பின்னர் திருநெல்வேலி மெய்ஞானபுரத்திற்கு அருகிலுள்ள பாட்டக்கரையைச் சார்ந்த அருள்திரு. சாமுவேல் பவுல் (1844 - 1900) 'பில்கிரிம்ஸ் புராகிரசின்' இரண்டு பாகங்களையும் தமிழில் சிறப்பாக மொழி பெயர்த்து 1882ஆம் ஆண்டு கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் மூலம் "பரதேசியின் மோட்சப் பிரயாணம்" என்னும் தலைப்பில் வெளியிட்டார். பனியனின் உள்ளுணர்வு வெளிப்படும் வகையில் இம்மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. இந்நூல் பல பதிப்புகளைக் கண்டு இன்றும் விற்பனையாகிக் கொண்டிருப்பது நூலின் சிறப்புக்குச் சான்றாகும்.

1857ஆம் ஆண்டு தனுக்கோடி ராஜூ மூலம் "திருப்பயணியின் முன்னேற்றம்" என்னும் தமிழ் நூல் கிருஷ்ணபிள்ளைக்குக் கிடைத்தது. இந்நூலே கிருஷ்ணபிள்ளை கிறித்தவராக மாறுவதற்கும் இரட்சணிய யாத்திரிகம் எழுதுவதற்கும் மூலமாக அமைந்தது எனலாம். இலக்கியம் தோன்ற மனித வாழ்க்கையும் இயற்கையும் காரணம் என்பர். அவைமட்டுமன்றிச் சிறந்த பேரிலக்கியம் பிற இலக்கியங்களைத் தோற்றுவித்தலும் உண்டு. அந்தப் பேருண்மைக்கு 'பில்கிரிம்ஸ் புராகிரஸ்' ஒரு சிறந்த சான்றாகும்.

பதிப்பு வரலாறு

தம் காலத்தில் கிடைத்த மொழி பெயர்ப்பு நூல்களை அடிப்படையாகக் கொண்டு இரட்சணிய யாத்திரிகத்தைக்

கிருஷ்ணபிள்ளை எழுதத் தொடங்கினார். 1878 ஏப்ரல் முதல் நற்போதகம் என்னும் இதழில் இரட்சணிய யாத்திரிகம் வெளிவரத் தொடங்கியது. இப்பாடல்களைப் படித்த புலவர்களும் பொது மக்களும் கிருஷ்ணபிள்ளையைப் பாராட்டினர். அப்பாராட்டுதல்களினால் உந்தப்பட்ட கிருஷ்ணபிள்ளை அதை ஒரு காப்பியமாகப் படைக்கும் பணியை மேற்கொண்டார். சுமார் 13 ஆண்டுகளாக எழுதி 1891 ஆம் ஆண்டில் காப்பியத்தை நிறைவு செய்தார். சிறைச்சாலைத் துன்பத்தினிடையே பனியன் 'பில்கிரிம்ஸ் புராகிரஸ்' என்னும் நூலை எழுதியது போன்று, கிருஷ்ணபிள்ளை தம் குடும்பத்திலுள்ள பல்வேறு பிரச்சினைகளின் நடுவே இந்நூலை எழுதி முடித்தார். இந்நூலின் பெரும்பாலான பாடல்கள் திருவனந்தபுரத்திலும், குலசேகரன் பட்டினத்திலும் ஆசிரியர் வாழ்ந்த காலங்களில் இயற்றப்பட்டன. 1891 நவம்பர் மாதம் இரட்சணிய யாத்திரிகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நூறுபாடல்களைத் தொகுத்து நூலாக அச்சிட்டுப் பலருக்கு அனுப்பினார்.

கிருஷ்ணபிள்ளை தாம் பாடி முடித்த இரட்சணிய யாத்திரிகத்தைத் தாமே வெளியிட முயற்சி செய்தார். அப்பொழுது அவருடைய நண்பரான உவாக்கர் போதகர் கிறித்தவ இலக்கியச் சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜான் மர்டாக் அவர்களிடம் இரட்சணிய யாத்திரிகத்தின் சிறப்பினையும் அந்நூல் வெளிவர வேண்டியதன் அவசியத்தையும் விவரித்துக் கடிதம் எழுதி, கிறித்தவ இலக்கியச் சங்கம் இந்நூலை வெளியிட ஏற்பாடு செய்தார்.

1894ஆம் ஆண்டு மே மாதம் இரட்சணிய யாத்திரிகம் முழுமையாகக் கிறித்தவ இலக்கியச் சங்கத்தால் வேப்பேரி எஸ்.பி.சி.கே. அச்சகத்தில் ஆயிரம் படிகளாக வெளியிடப் பட்டது. இதில் அருள்திரு. T.உவாக்கர் (Rev.T.Walker) ஆங்கிலத்திலும் கிருஷ்ணபிள்ளை தமிழிலும் எழுதிய முன்னுரை, முகவுரைகள் இதன் வரலாற்றை அறிவதற்குப் பேருதவியாக உள்ளன. அருள்திரு. T.உவாக்கர் தமது ஆங்கில முன்னுரையில்,

> தமிழ்நாட்டுக் கிறித்தவர்களுக்கு அவர்கள் தாய்மொழியில் சிறந்த இலக்கியங்கள் இதுவரையிலும் கிடைக்கவில்லை. வெளிவந்துள்ள ஒரு சில இலக்கியங்களும் ஆங்கில இலக்கியங்களின் மொழி

> பெயர்ப்பானதால் யாவர்க்கும் பயன்படுமாறு இல்லை. மேலும், அவை தமிழ்நடைக்கு ஏற்ப எழுதப்படவுமில்லை. அக்குறையைப் போக்கும் வகையில் எழுந்த முதல் கிறித்தவக் காப்பியம் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை எழுதிய இரட்சணிய யாத்திரிகமாகும். இஃது கிறித்தவ சமயக் கருத்துக்களைத் தமிழ் நாட்டிலுள்ள அனைவரும் அறிந்து பயனடையும் வகையில் தமிழ்க் காப்பிய நடையில் புனைந்துரைகளும் பொருந்தாத கற்பனைகளுமின்றி யாவரும் எளிதில் படித்துப் பயனடையும் வகையில் எழுதப்பட்டுள்ளது. காலத்திற்கேற்ப வடமொழிகள் மிகுதியும் கலந்து எழுதப்பட்டுள்ளமை கவிநயத்திற்கு ஒரு தனிச் சிறப்பைத் தந்துள்ளது
>
> (இரட்சணிய யாத்திரிகம், ப.V)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் பதிப்பு

இரட்சணிய யாத்திரிகத்தின் இரண்டாம் பதிப்பு இரண்டு பகுதிகளாக கிறித்தவ இலக்கியச் சங்கத்தால் வெளியிடப் பட்டது. முதல் பகுதி முதல் இரண்டு பருவங்களையும் இரண்டாம் பகுதி ஏனைய மூன்று பருவங்களையும் உள்ளடக்கியது. இவற்றுள் முதற்பகுதி 1927ஆம் ஆண்டும் இரண்டாம் பகுதி 1931ஆம் ஆண்டும் வெளிவந்தன. பசுமலை அருள்திரு. J.S. மாசிலாமணி அவர்களின் மேற்பார்வையில் இவ்விரு பகுதிகளும் பதிப்பிக்கப்பட்டன. அருள்திரு.H.A. பாப்லி (H.A.Popley) இரண்டாம் பதிப்பிற்கு ஆங்கிலத்தில் முன்னுரை எழுதியுள்ளார். அம்முன்னுரையில் அவர்,

> இந்நூல் ஆங்கிலத்தில் ஜான்பனியன் எழுதிய 'பில்கிரிம்ஸ் புராகிரஸ்' என்னும் நூலைத் தழுவி இயற்றப்பட்டிருப்பினும், இதில் ஆசிரியரின் கிறித்தவ வாழ்க்கை வரலாறே முழுவதும் அமைந்துள்ளது எனலாம்
>
> (இரட்சணிய யாத்திரிகம், ப.9)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது பதிப்பில் இரட்சணிய யாத்திரிகத்தின் சிறப்புப் பாயிரம், பதிகம், ஆதிபருவத்திலுள்ள வரலாற்றுப் படலம், மெய்யுணர்ச்சிப் படலம், குருதரிசனப் படலம், பரமராஜ்யப் படலம் ஆகியவற்றிற்குப் பொழிப்புரையும் விரிவுரையும் அருள்திரு. J.S.மாசிலாமணி அவர்களால் எழுதப்பட்டது. இரண்டாவது பருவமாகிய குமார பருவத்திலுள்ள இரட்சணிய சரிதப்படலத்தின் முதல் 130 பாடல்களுக்கு புதுக்கோட்டை P.S. கடம்பவன சுந்தரநாயனார்

உரை எழுதினார். இவற்றைப் பதிப்பாசிரியரின் குறிப்பால் அறியமுடிகின்றது.

பிற பதிப்புகள்

P.S.கடம்பவன சுந்தரநாயனார் 1933ஆம் ஆண்டில் இரட்சணிய சரிதப் படலம் முழுவதற்கும் உரை எழுதி 'இரட்சணிய சரிதம்' என்னும் பெயருடன் அதைத் தனி நூலாக வெளியிட்டார். இரட்சணிய யாத்திரிகத்தின் மூன்றாம் பதிப்பாக முதல் பாகம் மட்டும் 1958 ஆம் ஆண்டில் கிறித்தவ இலக்கியச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. இப்பதிப்பில் இரட்சணிய யாத்திரிகத்தின் முதல் உரையாசிரியரான கிருஷ்ணபிள்ளை எழுதிய அரும்பதவுரை முதலியவற்றுடன் இரண்டாம் பதிப்பில் அருள்திரு. J.S. மாசிலாமணி, புதுக்கோட்டை P.S. கடம்பவன சுந்தரநாயனார் ஆகிய இருவர் எழுதிய உரைகளும், ஆதிபருவம் ஐந்து முதல் பன்னிரண்டு படலங்களுக்கும், குமாரபருவம் 3,4 படலங்களுக்கும் பேராசிரியர் பொன்னு ஆ.சத்தியசாட்சி எழுதிய உரைகளும், ஏனைய படலங்களுக்கு வித்துவான் வ.தங்கையா, வித்துவான் J.மாசிலாமணி ஆகியோர் எழுதிய உரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இரட்சணிய சரிதப்படலத்தில் இடம் பெற்றுள்ள 50 பாடல்களைக் கொண்ட சிலுவைப்பாடு என்னும் பகுதி மட்டும் வீ.ப.கா. சுந்தரம் அவர்களின் விரிவுரையுடன் 1972 ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப்பட்டது. மதுரை வீ.ப.நடராசன் நிதான பருவத்திலுள்ள இரட்சணிய நிவநீதப் படலத்திற்கு உரை எழுதி 1972 இல் வெளியிட்டுள்ளார்.

கிருஷ்ணபிள்ளையின் 150ஆவது பிறந்த நாள் விழா 1977ஆம் ஆண்டு சென்னையில் கொண்டாடப்பட்டபோது பேராசிரியர் பொன்னு ஆ.சத்தியசாட்சி, இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள முக்கியமான 874 பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து சுருக்கப் பதிப்பை வெளியிட்டார். இரட்சணிய யாத்திரிகம் மக்களுக்குக் கிடைக்காத சூழலில் இச்சுருக்க வெளியீடு மிகவும் உதவியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1981ஆம் ஆண்டில் அருள்திரு.சி.வி. சவரிமுத்து இரட்சணிய சரிதத்திற்கு உரை எழுதி தனி நூலாக வெளியிட்டார். 1998ஆம் ஆண்டு ஆசியவியல் நிறுவனம் இரட்சணிய யாத்திரிக மூலத்தை வெளியிட்டது. 1998ஆம்

ஆண்டில் உரையுடன் இரட்சணிய யாத்திரிகத்தின் இரட்சணிய சரிதப் படலம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகிய மூன்று தொகுதிகளை பொன்னு ஆ.சத்தியசாட்சி உரையுடன் கிறித்தவ இலக்கியச் சங்கமும் உலகக்கிறித்தவத் தமிழ்ப்பேரவையும் இணைந்து வெளியிட்டுள்ளது. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ், டாக்டர் மோசஸ் மைக்கேல் பாரடே ஆகியோர் இம்மூன்று தொகுதிகளின் பதிப்பாசிரியர்களாவர்.

காப்பியக் கதை

பாவி ஒருவன், தான் வாழ்ந்துவரும் நாடு, மக்களுடைய பாவத்தின் காரணமாக அழிக்க நியமிக்கப்பட்டுள்ளது என்பதை வேதநூலைப் படித்ததன் மூலம் அறிந்து கொள்கிறான். பாவச்சுமையால் வருந்தும் கிறித்தவன் என்னும் மனிதன் பாவம் நிறைந்த நாட்டிலிருந்து பேரின்ப நாட்டிற்குச் செல்ல விரும்புகிறான். நிலைத்த தன்மையுடைய பேரின்ப நாட்டிற்குச் செல்வதற்கான வழியைத் தேடும் போது குருவானவர் ஒருவரைச் சந்திக்கின்றான். குருவின் ஆற்றுப்படுத்தலால் வேதாகம நூலின் துணையுடன் பேரின்ப நாட்டிற்குப் பயணத்தைத் தொடங்குகிறான். கிறித்தவனின் பயணத்தில் பலவிதமான சோதனைகள் வருகின்றன. சோதனைகளை வெற்றி கண்டு பயணத்தைத் தொடர்ந்து இறுதியில் மரண ஆற்றைக் கடந்து வீடு பேற்றினை அடைகிறான். இது காப்பியத்தின் மையக் கருத்து ஆகும். கிறித்தவன் பாவம் நிறைந்த நாட்டிலிருந்து பேரின்ப நாட்டிற்குச் செல்லும் பயணத்தைக் கிருஷ்ணபிள்ளை ஐந்து பருவங்களில் விவரிக்கிறார்.

ஆதி பருவம்

கிறித்தவன், குருவின் ஆற்றுப்படுத்தலைத் தொடர்ந்து தன் இரட்சணிய யாத்திரையைத் தொடர ஆரம்பிக்கிறான். அவனது முடிவை அறிந்த மனைவியும் மக்களும் பிறரும் அப்பயணத்தைத் தடுத்து நிறுத்த முயலுகின்றனர். மேலும் கிறித்தவனைத் தடுத்து நிறுத்த வன்னெஞ்சன், மென்னெஞ்சன் ஆகிய இருவரும் முயற்சி செய்கின்றனர். வன்னெஞ்சன் கிறித்தவனை நோக்கி, 'மனைவி மக்களை விட்டுப் பிரிவது, கரும்புச் சுவையை வேம்பின் சுவை என வெறுத்து ஒதுக்குவது போன்றது' எனக் கூறி மனதை மாற்ற முயலுகின்றான். கிறித்தவன் அவனுக்கு உலக நிலையாமையைக் கூறித் தன் பயணத்தைத் தொடர்கிறான். கிறித்தவன் பேச்சில் மனம் மாறிய

மென்னெஞ்சன் கிறித்தவனுடன் இரட்சணிய யாத்திரை செய்ய முடிவு செய்து பயணத்தை மேற்கொள்கிறான்.

வழியில் நம்பிக்கை உழவு (அவ நம்பிக்கை) என்னும் சேற்றில் இருவரும் விழுந்து விடுகின்றனர். தப்பிப் பிழைத்தால் போதும் என்னும் எண்ணத்தில் மென்னெஞ்சன் மீண்டும் நாச நாட்டிற்குக் கிறித்தவனை விட்டுச் சென்று விடுகிறான். கிறித்தவன் அவநம்பிக்கை என்னும் சேற்றை (உளை), சகாயன் என்னும் தொண்டனது உதவியால் கடந்து தனது யாத்திரையைத் தொடர்கிறான். வழியில் லௌகிகன் என்பவன் கிறித்தவனிடம் குறுக்கிட்டு, குறுக்கு வழி காட்டி, பயணத்தைத் திசை திருப்புகிறான். குருவானவர் இரண்டாவது முறை கிறித்தவனைச் சந்தித்துக் கடிந்துரைத்து மீண்டும் இரட்சணிய பாதையில் திருப்பி விடுகிறார். கிறித்தவன் இடுக்கவாயில் (திட்டி வாயில்) என்னும் இடத்தைக் கடந்து வியாக்கியானி என்பவன் வீட்டை அடைகிறான். வியாக்கியானி கிறித்தவ வாழ்வின் பல்வேறு நிலைகளை உதாரணங்களுடன் அவனுக்கு உணர்த்துகிறான். விசுவாசத்தில் உறுதியடைந்த கிறித்தவன் பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் தன் ஆன்மிகப் பயணத்தைத் தொடர்கிறான். கிறித்தவன் சிலுவைக் குன்றை அடைந்தவுடன் அவனது கொடிய பாவச் சுமை அறுந்து விழுகிறது. சுமை நீங்கியவுடன் இறைவனை வாழ்த்தி வணங்குகிறான். புண்ணிய நகர் வாயிலோனிடம் காட்ட வேண்டிய பயணப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு வெள்ளுடை அணிந்து கொண்டு பயணத்தைத் தொடர்கிறான். உபாதி மலையைக் கடந்து (துன்பமலை) எழிற் சத்திரத்தை அடைகிறான்.

குமார பருவம்

எழிற் சத்திரத்தின் வாயிற்காவலன் கிறித்தவனைச் சத்திரத்திற்குள் வர அனுமதிக்கிறான். இந்த எழிற் சத்திரம் மனம் திரும்பி இரட்சணிய பயணம் செய்யும் பயணிகள் தங்கி இளைப்பாறி பக்தியில் மேலும் உறுதி பெற்றுச் செல்வதற்காக அமைக்கப்பட்டதாகும். இச்சத்திரத்தில் கிறித்தவன் அங்கிருந்த விவேகி, யூகி, பக்தி, சிநேகி என்னும் நான்கு நற்பெண்மணிகளைச் சந்தித்து அவர்களுடன் உரையாடுகின்றான். பக்தி என்னும் பெண் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகள் குறித்து விவரிக்கின்றாள். கிறித்தவன் அவற்றைக் கேட்டுத் தன்

குறிக்கோளில் மேலும் உறுதிப்படுகிறான். சிங்கார மாளிகையில் உள்ள பெண்கள் அங்குள்ள நூல்அரங்கு, ஆயுதசாலை, மாளிகையையொட்டிக் காணப்படும் ஆனந்த மலைத்தொடர் முதலியவற்றைக் காண்பிக்கின்றனர். ஆன்மிகப் போர் ஆயுதங்களை அணிந்து கொண்டு கிறித்தவன் மீண்டும் தன் பயணத்தைத் தொடர்கிறான்.

நிதான பருவம்

எழிற்சத்திரத்திலிருந்து கிறித்தவன் தன் பயணத்தை மீண்டும் தொடருகிறான். வழியில் தாழ்மை என்னும் பள்ளத்தாக்கினை அடைகின்றான். பின்னர் தொடரும் பயணத்தைத் தடை செய்யவரும் காலனைப் போன்ற அழிம்பன் என்னும் அரக்கனைச் சந்திக்கிறான். அழிம்பன் கிறித்தவனைத் தன் வசப்படுத்த முயலுகின்றான். ஆனால் கிறித்தவன் தன்னிடத்திலுள்ள விசுவாசம் என்னும் கேடயத்தால் அழிம்பன் தொடுத்த அம்புகளை எல்லாம் பயனற்றுப் போகச் செய்து விடுகிறான். இறுதியில் திருமறை என்னும் வாளால் அழிம்பனை அழிக்கின்றான். பின்னர் சீயோன் மலை அதிபதியின் உதவியால் மரணச் சூழல் என்னும் பள்ளத்தாக்கினைக் கடக்கிறான்.

தனக்கு முன்னால் சென்று கொண்டிருக்கும் நிதானனை வழியில் சந்திக்கின்றான். இருவரும் ஒன்று சேர்ந்து பயணத்தைத் தொடர்கின்றனர். வழியில் அலப்பனைச் சந்தித்து அவனுடைய வஞ்சக அறிவுரைகளைத் தவிர்த்து யாத்திரையைத் தொடர்கின்றனர். குருவை வழியில் சந்தித்து அவருடைய அருளுரையைக் கேட்டுச் செல்கின்றனர். இருவரும் மாயாபுரி என்னும் நகரினை அடைகின்றனர். அந்நகர மக்களின் பாவ வாழ்க்கையை நேரில் கண்டு அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்னும் நோக்கில் இருவரும் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்து உபதேசம் செய்தனர். ஆனால் அம்மக்கள் உலக வாழ்வை எதிர்த்துரைக்கும் இவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றனர். மாயாபுரி நீதிமன்றம் நிதானனுக்கு மரணதண்டனையும் கிறித்தவனுக்குச் சிறைத் தண்டனையும் விதிக்கிறது. நிதானன் உயிருடன் சுட்டெரிக்கப்பட்டு இரத்தச் சாட்சியாய் மரித்து விண்ணுலகை அடைகின்றான்.

ஆரணிய பருவம்

மாயாபுரியில் நிதானனும் கிறித்தவனும் சொன்ன சாட்சியின் விளைவாக நம்பிக்கை என்பவன் தோன்றுகிறான்.

நிதானியின் கொலைக்களமே நம்பிக்கையை தோன்றச் செய்கிறது. நிதானனை இழந்த கிறித்தவன் சிறைச் சாலையிலிருந்து இறைவனின் அருளால் தப்பிக்கின்றான். வழியில் நம்பிக்கையைச் சந்தித்து இருவரும் ஒன்று சேர்ந்து பயணத்தைத் தொடருகின்றனர். வழியில் தன்னயன் என்பவனைச் சந்திக்கின்றனர். அவன் மூலம் உலகன், காமுகன், பேயன் என்ற மூவரும் அறிமுகமாயினர். அவர்களிடமிருந்து தப்பி கிறித்தவனும் நம்பிக்கையும் பயணத்தைத் தொடருகின்றனர். வழியில் பொருளாசைத் திடர் என்னும் இடத்தை அடைகின்றனர். பின்னர் சோலையை அடைந்து அதில் ஓய்வெடுக்கின்றனர். பின்னர் பாலை நிலத்தைச் சென்று சேர்கின்றனர். அதனைக் கடக்கும் போது கிறித்தவன் அதிகமாகத் தளர்ச்சியடைந்தான். நம்பிக்கை தடுத்தும் கேளாமல் பாலை நிலத்தையொட்டியுள்ள பக்கவழியில் நம்பிக்கையையும் அழைத்துச் செல்கின்றான். இரவானதால் விடாதகண்டன் என்பவனுக்குச் சொந்தமான சந்தேக துர்க்கம் என்னும் இடத்திலுள்ள பாறையில் படுத்து உறங்குகின்றனர். விடாதகண்டன் இரட்சணிய யாத்திரை செய்பவர்களைத் துன்புறுத்திக் கொலை செய்யும் தன்மையுடையவன். உறங்கிக் கொண்டிருந்த இருவரையும் விடாதகண்டன் சிறைப்படுத்திப் பல துன்பங்களைக் கொடுக்கிறான். கிறித்தவன் தன் பிழையினை நினைந்து இரங்கி இறைவனிடம் வேண்டுகிறான். இறைவனது பாதங்களைப் பற்றிக் கொண்டதால் அவனிடம் தெளிவு பிறக்கிறது. அதன் விளைவாகச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதற்குரிய திறவுகோல் தன்னிடத்தில் இருப்பது நினைவிற்கு வரவே அதன் உதவியால் தப்பிச் செல்கின்றனர்.

சில நாள் பயணத்திற்குப் பின் ஆனந்தமலையினை அடைகின்றனர். அங்குள்ள மக்களுடன் சில நாட்கள் தங்கிய பின்னர் பயணத்தைத் தொடர்கின்றனர். வழியில் முகஸ்துதியில் வல்லவனான கார்வண்ணன் மூலம் துன்பமடைகின்றனர். இயேசு கிறிஸ்து அவர்களுக்கு ஐந்து காயங்களுடன் காட்சி கொடுத்து, பயணிகளுக்குச் சிறு தண்டனையும் கொடுத்து நெறிப்படுத்தி நன்னெறியில் செலுத்துகின்றார். பின்னர் சோகபூமி என்னும் இடத்தை அடைகின்றனர். அறிவீனன், நிலைகேடன், ஆதியர் என்னும் இவர்கள் குறுக்கிட்டும் வழிதவறாது சென்று தர்மசேத்திரம் என்னும் இடத்தை அடைகின்றனர்.

இரட்சணிய பருவம்

பலவித சிறப்புக்களை உடைய தருமசேத்திரத்தில் இருவரும் சில நாட்கள் தங்கி இளைப்பாறுதல் பெறுகின்றனர். பின்னர் நம்பிக்கையின் துணையுடன் மரண ஆற்றைக் கடக்கின்றனர். பின்னர் இருவரும் சீயோன் மலையை அடைகின்றனர். தேவதூதர்கள் இருவர் இவர்களை இயேசு கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்கின்றனர். இராஜகிரீடம் அணிந்து கிறித்தவனும் நம்பிக்கையும் மோட்சப் பெருவாழ்வில் சேர்கின்றனர். கிறித்தவனின் இரட்சணிய யாத்திரை வெற்றியாக முடிகின்றது.

பகுப்பு

இரட்சணிய யாத்திரிகம், சிறப்புப் பாயிரம், பதிகம் என்னும் இவற்றை முதலிலே கொண்டு ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என்னும் ஐந்து பருவங்களையும், 47 படலங்களையும், 3776 பாடல்களையும் கொண்டது. இப்பாடல்களில் 2190 பாடல்கள் விருத்தப்பாவால் அமைந்தவை. நூலின் பெரும்பிரிவு பருவம் என்றும், சிறு பிரிவு படலம் என்றும் பெயர் பெற்றுள்ளன. இந்நூலின் இடையிடையே ஆசிரியர் தேவாரப் பாடல்களைச் சேர்த்து இக்காப்பியத்திற்குத் தனிச் சிறப்பைத் தந்துள்ளார்.

1. **ஆதி பருவம்**

விவிலியத்தின் (Bible) முதல் புத்தகம் ஆதியாகமம் எனத் தொடங்குவதைப் போல இரட்சணிய யாத்திரிகமும் ஆதி பருவம் எனத் தொடங்குவது குறிப்பிடத்தக்கது. இப்பருவம் வரலாற்றுப் படலம், மெய்யுணர்ச்சிப் படலம், குருதரிசனப் படலம், பரமராஜ்யப் படலம், அரசியற் படலம், சிருஷ்டிப் படலம், இராஜ துரோகப் படலம், பூர்வபாதைப் படலம், சுவிசேஷ மார்க்கப் படலம், யாத்திராரம்பப் படலம், அவநம்பிக்கைப் படலம், லௌகீகப் படலம், கடைதிறப்புப் படலம், வியாக்கியானி யரமனைப் படலம், சுமை நீங்கு படலம், துயிலுணர்த்து படலம், அமார்க்கப் படலம், ஜீவபுஷ்கரிணிப் படலம், உபாதிமலைப் படலம் என்னும் 19 படலங்களையும் 1106 பாடல்களையும் உடையது. கிறித்தவனுடைய பயணத்தின் பெரும் பகுதி இப்பருவத்தில் கூறப்பட்டுள்ளது. ஆதி பருவத்தை இரட்சணிய யாத்திரிகத்தின் உயிர்நிலைப் பருவம் என்பர்.

2. குமார பருவம்

இரண்டாம் பருவம் பிதாவுடைய குமாரனைப் பற்றிய செய்திகள் மிகுதியும் கூறப்படுவதால் குமார பருவம் என்னும் பெயரைப் பெற்றது. இப்பருவம் சம்பாஷனைப் படலம், இரட்சணிய சரிதைப் படலம், விசிராந்தைப் படலம், காட்சிப் படலம் என்னும் நான்கு படலங்களையும் 714 பாடல்களையும் கொண்டது.

3. நிதான பருவம்

மூன்றாம் பருவம் கிறித்தவனின் நண்பன் நிதானனின் இரத்த சாட்சி விவரிக்கப்படுவதால் நிதான பருவம் என்னும் பெயரைப் பெற்றது. இப்பருவம் வனம்புகு படலம், அழிம்பன் தோல்விப் படலம், மரணச் சூழலிறுத்த படலம், நிதானி நட்புப் படலம், அலப்பனை வரைந்த படலம், ஞானாசிரியனைக் கண்ணுற்ற படலம், மாயாபுரிப் படலம், நகர்புகு படலம், இரட்சணிய நவநீதப் படலம், சிறைப்படு படலம், நிதானி கதிகூடு படலம் என்னும் 11 படலங்களையும் 803 பாடல்களையும் உடையது.

4. ஆரணிய பருவம்

இறையடியார்களின் பக்தி வாழ்வில் ஏற்படும் பல சோதனைகளை நான்காம் பருவமாகிய ஆரணிய பருவம் விவரிக்கின்றது. பொருளாசை, முகஸ்துதி, உறக்கம் போன்றவை பக்தி வாழ்வின் தடைகளாகும். இதனைப் பயணத்தின் இடையேயுள்ள காடும் மேடும் பாழ்வெளியுமான ஆரணியத்தின் வழியாகக் காட்டுகிறார். இப்பருவத்தில் நம்பிக்கை நன்னெறி பிடித்த படலம், கிறித்தவன் கதிவழி கூடிய படலம், சுரங்கப் படலம், விடாத கண்டப் படலம், ஆனந்த சைலப் படலம், விசுவாச விளக்கப் படலம், கார் வண்ணப் படலம், சோகபூமிப் படலம், அறிவீன வர்ச்சிதப் படலம், நிலைகேடனாதியர் விவரணப் படலம் என்னும் 10 படலங்களும் 739 பாடல்களும் உள்ளன.

5. இரட்சணிய பருவம்

இரட்சணிய யாத்திரிகத்தின் ஐந்தாவது பருவம் இரட்சணிய பருவமாகும். இரட்சணியம் என்பது இரட்சிப் பாகும். அதனை மீட்பு, ஈடேற்றம் எனவும் குறிப்பிடலாம்.

முக்தி நெறியில் சென்று கொண்டிருந்த கிறித்தவனும் அவனது நண்பன் நம்பிக்கையுமாகிய இருவரும் ஈடேற்றம் பெறுவதைக் கூறுவதே இப்பருவத்துச் செய்தியாகும். இப்பருவம் தர்ம சேத்திரப் படலம், இகபர சந்திப் படலம், சுவர்க்காரோகணப் படலம் என்னும் மூன்று படலங்களையும் 250 பாடல்களையும் உடையது.

காப்பிய மாந்தர்

இரட்சணிய யாத்திரிகத்தில் இலக்கிய நயத்துடன் காப்பிய மாந்தர்கள் படைக்கப்பட்டுள்ளனர். இம்மாந்தர்கள் அனைவரும் முன் மாதிரி மாந்தர்களாக நடப்பியல் தன்மையுடன் காணப்படுகின்றனர். இவர்கள் நல்லவர்களாகவும், பண்பிற்குப் பொருத்தமானவர் களாகவும் விளங்குகின்றனர். கிருஷ்ணபிள்ளை காப்பிய மாந்தர்களின் பெயர்களை மொழியாக்கத்தில் உள்ளது போன்று படைக்காமல் காப்பியக் கதைக்கு ஏற்ற வகையில் தமிழ் மண்ணுக்கு உரிய முறையில் உருவகமாகப் படைத்துள்ளார். காப்பிய மாந்தர்களின் பெயர்கள் அனைத்தும் உருவக அடிப்படையில் மக்களின் பல்வேறு பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் உள்ளன. இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள மாந்தர்களைத் தலைமை மாந்தர், இன்றியமையா மாந்தர், துணை மாந்தர் எனப்பகுக்கலாம். இவர்களில் நல்லவர்களும், தீயவர்களும் அடங்குவர்.

1. தலைமை மாந்தர்

இரட்சணிய யாத்திரிகத்தில் கிறித்தவன் தலைமை மாந்தராகப் படைக்கப்பட்டுள்ளான். இக்காப்பியத்தில் இயேசு கிறிஸ்து மைய இடம் பெறுகிறார். கிறித்தவன் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி யாத்திரை செய்கிறான். கிறித்தவன் ஒரு சாதாரண மனிதன்.

பாவ வாழ்க்கையில் சிக்கிய ஒருவனே கிறித்தவனாக உருவகம் செய்யப்பட்டுள்ளான். காப்பியத் தலைவனான கிறித்தவன் தனக்கு ஏற்பட்ட சோதனைகள் அனைத்தையும் வென்று மீட்பினைப் பெற்றுத் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்குகிறான். கிறித்தவன் என்னும் மாந்தர் இம்மண்ணுலகில் வாழும் உண்மை மனிதனாகவே காணப்படுகிறான். கிறித்தவன் கொள்கைப்பற்றுள்ள ஒரு நல்லவனாகப் படைக்கப் பட்டுள்ளான். தனது யாத்திரையில் தன்னை எதிர்த்த சக்திகளை

எதிர்த்துப் போராடுகிறான். சாத்தானுக்கு இணையான அழிம்பன் என்னும் அரக்கனை எதிர்த்துப் போராடி இறைவனுடைய வல்லமையால் வெற்றி பெறுகின்றான். மேலும் தன்னுடன் பயணம் செய்பவர்களில் ஆன்மிக அனுபவத்தில் முயற்சி உள்ளவனாகவும் படைக்கப் பட்டுள்ளான். கிருஷ்ணபிள்ளை மெய்யுணர்ச்சிப் படலத்தில் கிறித்தவனை,

வாடிய முகத்தன் சென்னி வணக்கியோன் மலங்கி வார்நீர்
ஓடிய விழியன் கந்தை யுடையின னொருங்கு பாவங்
கூடிய சும்மை தாங்கிக் கூனுறு முதுகன் பல்கால்
வீடிய னெறியை நாடும் விருப்பினன் வெருண்ட நெஞ்சன்
(மெய்யுணர்ச்சிப் படலம், பா.3)

என அறிமுகப்படுத்துகிறார். கிறித்தவன் வாடிய முகமும் வணங்கிய சென்னியும் கண்ணீர் வழியும் கண்களும் கந்தை ஆடையும், பாவபாரமாகிய முதுகுச் சுமையும் கொண்டு விளங்குபவன் என கிருஷ்ணபிள்ளை கிறித்தவனைப் படம் பிடித்துக் காட்டுகிறார். மேலும் கிறித்தவனின் அவல நிலையைக் காற்றிடைப்பட்ட சருகைப் போலச் சுழல்பவன், உள்ளம் கசந்து அழுபவன் என்று குறிப்பிடுகிறார்.

இரட்சணிய யாத்திரிகத் தலைவனான கிறித்தவனுக்குக் காப்பியத்தில ஆன்மீகன், ஆத்துமவிசாரி, வேதியன், நிவர்த்தன், வித்தகன், மறைக்கிழவன், பனவன், ஆரியன், மெய்விசுவாசி, ஆரணக்கிழவன், செஞ்சொலாரணன், வேதியர் திலகன், மறைவலாளன் என்னும் பல உருவகப் பெயர்கள் உள்ளன. இப்பெயர்கள் மூலம் கிறித்தவனின் அனைத்துப் பண்புகளும் தெரியலாகின்றன.

2. இன்றியமையா மாந்தர்

காப்பியத்தில் வரும் குரு, நிதானி, நிம்பிக்கை ஆகியோரை இன்றியமையா மாந்தர்களாகக் குறிப்பிடலாம். நாச நாட்டை விட்டு வெளியேறி புண்ணியபூமி நோக்கிச் செல்ல நினைத்துப் பாதை தெரியாமல் கிறித்தவன் திகைக்கும் போது குரு வழி காட்டுகிறார். யாத்திரையின் போது கிறித்தவனின் மனம் பல இடங்களில் சோர்வுறுகின்றது. அப்போதெல்லாம் அவனிடம் தோன்றி அவனுக்கு நம்பிக்கையூட்டி நெறிப்படுத்துபவராகக் குரு படைக்கப்பட்டுள்ளார்.

கிறித்தவனுக்கு முன்னால் யாத்திரை செய்து கொண்டிருப்பவனாக நிதானி படைக்கப்பட்டுள்ளான். நிதானி என்பவன் கிறித்தவனுடன் யாத்திரையில் சேர்ந்து கொள்கின்றான். அதன் பின்னர் இருவரும் வழி விலகாமல் மாயாபுரியைச் சென்றடைகின்றனர். வேத சத்தியத்தை இருவரும் கூறுவதால் சிறைப்படுகின்றனர். நிதானி, மாயாபுரியில் கொலைத் தண்டனை பெற்று இரத்த சாட்சியாகிறான். காப்பியத்தில் அவன் தொடர்புடைய பகுதிக்கு 'நிதான பருவம்' எனப் பெயர் வைத்துள்ளார்.

நிதானியின் மறைவுக்குப் பின்னர் நம்பிக்கை என்பவன் கிறித்தவனின் வழித்துணையாக வருகிறான். இருவரும் யாத்திரையில் முன்னேறுகின்றனர். கிறித்தவன் மனம் தளரும் இடங்களிலெல்லாம் நம்பிக்கை நெறிப்படுத்தி வழி விலகாமல் அழைத்துச் செல்கிறான். இறுதியில் மரண ஆற்றைக் கடந்து முக்தி அடைகின்றனர்.

3. துணை மாந்தர்

காப்பியக் கதையின் வளர்ச்சிக்கு துணை மாந்தர்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணபிள்ளை மூல நூலிலுள்ள சில மாந்தர்களை விட்டு விட்டார். சில மாந்தர்களைப் புதிதாகப் படைத்துள்ளார். சில மாந்தர்களை மாற்றியமைத்துள்ளார். குருவின் நற்செய்தியைக் கேட்டு கிறித்தவன் தன் மோட்சப் பிரயாணத்தைத் தொடருகின்றான். கிறித்தவனை அவனது மனைவி, மக்கள், உறவினர்கள் தடுத்து நிறுத்த முயற்சி செய்கின்றனர். வன்னெஞ்சன், மென்னெஞ்சன் என்னும் இருவரும் கிறித்தவனின் பயணத்தைத் தடை செய்ய முற்படுகின்றனர். கிறித்தவனது வார்த்தைகளில் மனம் மாறிய மென்னெஞ்சன் கிறித்தவனுடன் யாத்திரை செய்யத் தொடங்கி நம்பிக்கை இழவு சேற்றில் இருவரும் விழுந்து விடுகின்றனர். மென்னெஞ்சன் கரையேறுவதற்கு முற்படும் போது பிரபஞ்சன், தூர்த்தன், காமமோகிதன் ஆகிய மூவரும் கைகொடுத்துத் தூக்கி விடுகின்றனர். மென்னெஞ்சன் நம்பிக்கை இழந்து தனது ஊரான நாசபுரிக்குத் திரும்பிச் செல்கிறான். கிறித்தவன், சகாயன் என்பவனது உதவியைப் பெற்றுத் தன் பயணத்தைத் தொடருகின்றான்.

குறுக்கு வழியில் யாத்திரை செய்து விண்ணுலகை அடைய முற்படும் மாந்தர் அலப்பன். யாத்திரிகர்களை

வழியிலிருந்து திசை திருப்பி விடுபவர்கள் லௌகீகன், அறக்கிழவோன் என்பவராவர். லௌகீகன் என்பவன் இச்சாபுரத்தைச் சேர்ந்தவன். இவனுக்காக லௌகீகப் படலத்தைக் கிருஷ்ணபிள்ளை அமைத்துள்ளார். கிறித்தவனுக்குப் பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கூறியவன் வியாக்கியானி என்பவன். எழில் சத்திரத்தில் நிலைத்து வாழும் நற்பண்புடைய மகளிர்களாக பக்தி, சிநேகி, விவேகி, யூகி ஆகியோர் படைக்கப்பட்டுள்ளனர்.

வேத சத்தியத்தைச் சொல்லி சாட்சி கூறிய கிறித்தவனையும் நிதானியையும் கடுமுகன் என்னும் நீதிபதி விசாரித்து மாயாபுரி நீதிமன்றத்திற்கு இருவரையும் அனுப்புகிறான். மாயாபுரி நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அறப்பகை என்பவன். இருவர் மீதும் குற்றம் சாட்டியவன் தூர்த்தன். தலைமை நீதிபதியின் கீழ் பன்னிரு நீதிபதிகள் விசாரணை செய்கின்றனர். அவர்கள் கண்ணிலி, நன்றிலி, குரோதி, காமி, வீணன், துணிகரன், வம்பன், விரோதி, சழக்கன், நிட்டூரன், இருட்பிரியன், முழுப்பொய்யன் என்பவர்களாவர்.

நன்மைக்கும் தீமைக்கும் இடைப்பட்ட மாந்தர்களாக இணங்கு நெஞ்சன், மாயசாலகன், மாய வேடன், அறிவீனன் ஆகியோர் படைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இரட்சணியம் பற்றிய ஆசை இருந்தாலும் இடுக்கமான வழியில் சென்று அதனை அடைய விரும்பாது பின்வாங்கியவர்கள். அச்சன், சந்தேகி என்போர் சிங்கம் துரத்த ஓடித் தாழ்மைப்பள்ளத்தாக்கில் விழுந்து அழிகின்றனர். கிறித்தவன் நந்தவனத்துச் சுனையில் நீர் அருந்திவிட்டு உறங்குகிறான். இவ்வாறு உறங்குவது பயணத்திற்குத் தடையாக அமைவதாகும். அச்சூழலில் புண்ணியன் என்பவன் கிறித்தவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பி விடுகிறான்.

இரட்சணியத்திற்கு நேராக யாத்திரை செய்பவர்களைத் தடுப்பவர்களாக அழிம்பன், விடாதகண்டன் போன்ற தீமையே உருவான மாந்தர்கள் படைக்கப்பட்டுள்ளனர். கிறித்தவன் யாத்திரையில் அழிம்பன் என்னும் அரக்கனை எதிர் கொள்ளுகின்றான். நச்சுத் தன்மை, அறியாமை, பாவஇருள், நாசம், வஞ்சகம், கொடுமை, பாவம், தீமை முதலான கொடிய பண்புகள் ஓர் உருவு கொண்டதைப் போன்று அழிம்பன் தோன்றினான் என கிருஷ்ணபிள்ளை அழிம்பனை அறிமுகப்படுத்துகிறார்.

கிறித்தவன் தன்னிடத்திலுள்ள விசுவாசம் என்னும் கேடயத்தால் அழிம்பன் தொடுத்த அம்புகளைப் பயனற்றுப் போகச் செய்கிறான். இறுதியில் திருமறை என்னும் மந்திர வாளால் அழிம்பனை அழிக்கிறான். அழிம்பனின் மனைவி பாவம்; அவர்களது குழந்தையின் பெயர் பழி என்பதாகும். விடாத கண்டனின் மனைவியின் பெயர் நீலி.

சுமை நீங்கப்பெற்ற கிறித்தவன் மலையுச்சியிலிருந்து இறங்கி அடிவாரத்திற்கு வந்த போது வழியில் ஒரு பக்கத்தில் பேதை, சோம்பன், துணிகரன் என்னும் பெயருடைய மூவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள் கால்களில் விலங்குகள் மாட்டப்பட்டிருந்தன. அவன் அவர்கள் நிலைக்கு இரங்கி அவர்களைத் தட்டி எழுப்பினான். இறைவனது வருங்காலக் கோபத்தினின்றும் அவர்கள் தப்பி, நன்னெறி படர்ந்து நிலையான முக்தியின்பத்தை அடைவதற்கான வழிகளை அவன் அவர்களுக்குக் கூறினான். ஆனாலும் அவர்கள் அவன் அறிவுரைகளைப் பொருட்படுத்தாமல் மீண்டும் துயின்றனர். அதனால் அவன் அவர்களுடைய அறியாமைக்கும், ஆர்வமின்மைக்கும், தகுதியின்மைக்கும் வருந்தித் தன் வழியே சென்றான். பேதை, சோம்பன், துணிகரன் ஆகிய மூவருக்கும் கூறிய அறிவுரைகள் இக்காலக் கிறித்தவர்களுக்குக் கூறும் நற்போதனைகளாக அமைந்துள்ளன.

கிறித்தவன் மலையின் அடிவாரத்தை விட்டு நடந்து செல்லும் போது மாயசாலகன், மாயவேடன் என்னும் இருவரும் அவனுடன் சேர்ந்து கொள்கின்றனர். கிறித்தவன் அவர்களைப் பார்த்துக் குறுக்கு வழியாக வரும் உங்களுக்குத் தேவ கோபாக்கினை உண்டாகும் எனக் கூறினான். மோகாதுரி என்பவள் நிதானன் பயணம் செய்தபோது அவனை மயக்க முயன்றவள். ஆனால் நிதானன் அவளிடமிருந்து தப்பித்துத் தன் பயணத்தைத் தொடர்ந்தான். வெட்கன் என்பவன் நிதானனை வழியில் தடுத்து நிறுத்த முயன்றவன்.

நிதானனை இழந்த கிறித்தவனின் பயணத்தில் நம்பிக்கை என்பவனின் அறிமுகமும் நட்பும் கிடைக்கின்றது. இவர்கள் இருவரின் பயணத்தின் போது தன்னயன், உலகன், காமுகன், பேயன் என்போர் அறிமுகமாகின்றனர். இவர்கள் நால்வரும் பக்தி வேடத்தினைப் பயன்படுத்திப் பொருள் சேர்க்கும் தன்மையினர். தன்னயனின் மனைவி போலி என்பவளின் மகள்

காமி என்பவளாவாள். பயணிகளின் முன்னேற்றத்தைத் தடை செய்யும் வஞ்சக எண்ணம் உடையவன் கார்வண்ணன்.

கிறித்தவனுக்கு மாத்திரன், சாந்தன் என்னும் இரு சகோதரர்களின் இயல்பை வியாக்கியானி சுட்டிக் காட்டினார். ஜான் பனியன் மாத்திரனை புழுங்கு நெஞ்சன் எனவும் சாத்தனை இணங்கு நெஞ்சன் எனவும் குறிப்பிடுவார். இறுதிக் காலத்தைப் பற்றிக் கனவு கண்டு நடுங்குபவனாகக் கடினச்சித்தன் படைக்கப்பட்டுள்ளான்.

வீண் நம்பிக்கை என்பவன் கிறித்தவன் பயணம் செய்து கொண்டிருக்கும் போது முன்னால் சென்று கொண்டிருந்தவன். சிறிது தூரம் சென்றவுடன் வீண் நம்பிக்கை பள்ளத்தில் வீழ்ந்து அழிந்தான். நம்பிக்கையும் கிறித்தவனும் தம் பயணத்தில், பின்வாங்கி என்பவனையும் அற்ப விசுவாசி என்பவனையும் சந்திக்கின்றனர். பின்வாங்கியைப் பேய்கள் பாதாளத்தில் தள்ளிவிட்டன. அற்ப விசுவாசியின் செல்வம் கொள்ளையடிக்கப்பட்டதால் பிச்சை எடுக்கும் நிலைக்கு உள்ளானான். பயணத்தில் அறிவீனன் என்பவனைச் சந்தித்து உரையாடுகின்றனர். கிறித்தவனும் நம்பிக்கையும் பயணத்தின் போது நிலைகேடன், தன்மீட்சி, பின்வாங்கி என்னும் மூவரின் இயல்புகள் குறித்து உரையாடிக் கொண்டு சென்றனர்.

மென்னெஞ்சன், நம்பிக்கை என்னும் இருவரும் இழவுச் சேற்றிலிருந்து வெளியே வரத் துணை செய்த பிரபஞ்சன், தூர்த்தன், காமமோகிதன் என்னும் மூவரும் கிருஷ்ணபிள்ளையால் படைக்கப்பட்டவர்கள். ஜான் பனியன் படைப்பில் இவர்கள் இல்லை. யாத்திரை செய்யும் கிறித்தவன் ஆனந்த சைலத்தின் பேரின்ப அனுபவத்திற்குப் பின்பு நாத்திக சாஸ்திரியைச் சந்தித்து அவனுடன் உரையாடுவதாக பனியன் அமைத்துள்ளார். இம்மாந்தரை கிருஷ்ணபிள்ளை தம் படைப்பில் கொண்டு வரவில்லை. இதுபோன்று பனியன் படைத்துள்ள போப், பாகன் என்னும் இரு அரக்கர்களின் பெயர்களைத் தமது நூலில் கிருஷ்ணபிள்ளை குறிப்பிடவில்லை.

மூவகை மாந்தர்

இரட்சணிய யாத்திரிக மாந்தர்களில் நன்மை விளக்க மாந்தர்களும் தீமை விளக்க மாந்தர்களும் நன்மைக்கும் தீமைக்கும் இடைப்பட்ட மாந்தர்களும் உள்ளனர். மேலும் இவர்களை யாத்திரைத் திருநெறியில் செல்வோர்,

யாத்திரிகர்களுக்கு உண்மையில் உதவுபவர்கள், பக்தியுள்ளவர்கள் போல் நடித்து அவர்களை வழி தப்பச் செய்பவர், யாத்திரிகர்களை முற்றிலும் எதிர்த்து அவர்களை நாச நாட்டிலேயே இருக்க முற்படுவோர், குறுக்கு வழியில் யாத்திரை செய்து முக்தி நகர் அடைய முயலுவோர் என்னும் ஐந்து வகையாகவும் பகுக்கலாம். இவர்கள் அனைவரும் அன்றாட வாழ்வில் காணும் பல்வகைப்பட்ட மனிதர்களாவர்.

இடங்கள்

இரட்சணிய யாத்திரிகத்தில் இடம் பெற்றுள்ள இடங்களின் பெயர்கள் அனைத்தும் உருவக அடிப்படையில் அமைந்துள்ளன. எழிற் சத்திரம், நாசபுரி, மாயாபுரி, தருமபுரி, மரண நிழலின் பள்ளத்தாக்கு, துன்பமலை, அவநம்பிக்கை உளை, வருத்தமெனும் மலை, ஈடேற்றமதில், மரண ஆறு, உபாதிமலை, ஆனந்தமலை, தாழ்மைப் பள்ளத்தாக்கு, சோகபூமி, அவமார்க்கபுரம், தருமசேத்திரம், சீயோன்மலை, திட்டிவாயில், அறமலை, சந்தேக துர்க்கம், பொருளாசைத் திடர், சீவகங்கை போன்றன பல்வேறு இடங்களின் பெயர்களாகும். கிறித்தவன் மோட்சப் பிரயாணம் செய்யும் போது இவ்விடங்களின் வழி சென்று இறுதியில் இரட்சணியத்தை அடைகிறான்.

காப்பியத்தில் இடம் பெறுகின்ற இந்த இடங்களின் பெயர்களை, கவிஞர் பல்வேறு நிலைகளில் அமைத்துள்ளமையை இதனை உற்று நோக்குவார் உணரலாம். சீயோன் மலை விவிலியத்தில் உள்ளது போன்றே இடம் பெற்றுள்ளது. ஆனால் பெரும்பான்மையாக மீட்புப் பயணம் மேற்கொள்ளும் கிறித்தவன் தன்வாழ்வில் கைக்கொள்ள வேண்டிய பண்புகளையும் தவிர்க்க வேண்டிய பண்புகளையும் சந்திக்க வேண்டிய சோதனைகளையும் கவிஞர் சில இடங்களில் உருவகித்துச் செல்லும் போக்கைக் காண முடிகின்றது. இதற்குச் சான்றாக துன்பமலை, அவநம்பிக்கை உளை, உபாதிமலை, ஆனந்தமலை, தாழ்மைப் பள்ளத்தாக்கு, சோகபூமி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறின்றி எல்லா மனிதர்களின் வாழ்விலும் இடம்பெறும் நிகழ்வுகளும், மாயாபுரி, மரண நிழலின் பள்ளத்தாக்கு, மரண ஆறு போன்றவையாக உருவகிக்கப்படுவதையும் காணலாம். தமிழ்ச்சமய இலக்கியங்களில் இடம் பெறும் சில இடங்களைப்

பிரதிபலிப்பனவாகவும் யாத்திரிகத்தில் சில இடங்கள் அமைந்துள்ளன. சான்றாக ஜீவகங்கை, திட்டிவாயில் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு தமது முற்றுருவகக் காப்பியத்தில் ஊர்கள் மற்றும் இடங்களின் பெயர்களைக் கூட அற்புதமான உருவகப் பெயர்களாக அமைத்துள்ளமை காப்பியக் கவிஞனின் கவித்திறனுக்குச் சிறந்த சான்றுகளாகும்.

தேவாரங்கள்

தேவாரம் என்பது தெய்வத்தைப் பற்றிய இசையொழுக்கமும், சொல்லொழுக்கமும் நிறைந்தபாடல். இத்தகைய பாடல்கள் பத்து அல்லது பதினொன்று அமைந்த தொகுதியைப் பதிகம் என்று அழைப்பர். சிலப்பதிகாரத்தின் இடையிடையே இசைப்பாடல்கள் வருவது போன்று இரட்சணிய யாத்திரிகத்திலும் இசையுடன் பாடும் தேவாரங்கள் இடம் பெற்றுள்ளன. ஜான்பனியன் நூலில் 19 இடங்களில் கடவுளை நினைத்துப் பாடும் பாடல்கள் வருகின்றன. சாமுவேல் பவுலின் தமிழ் மொழிபெயர்ப்பிலும் இப்பாடல்களின் மொழிபெயர்ப்பு இடம் பெற்றுள்ளது. இதை அடியொற்றி கிருஷ்ணபிள்ளை காப்பியப் போக்கிற்குத் தக்கவாறு தேவாரங்களை நூலின் பல்வேறு பகுதிகளில் பொருத்தமான இடங்களில் அமைத்துள்ளார். ஜான்பனியன் படைத்திருக்கும் இடச் சூழலைக் கிருஷ்ணபிள்ளை பின்பற்றவில்லை. இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள இத்தேவாரப் பாடல்கள் ஜான்பனியனின் பாடல்களை விட இசை, பொருள், நுட்பம்,பக்தி ஆகியவற்றில் சிறப்புடையதாக விளங்குகின்றன. தேவாரப் பாடல்கள் இடையிடையே வருவது காப்பியத்திற்குத் தனிச் சிறப்பைக் கொடுக்கும் வகையில் காணப்படுகின்றன.

இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள தேவாரங்களின் மொத்த கவிகள் 144. இத்தேவாரங்கள் இரட்சணிய மனோகரத்தில் ‘இரட்சணிய தேவாரம்’ என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் கிறித்தவன் பக்தியுடன் இறைவனைத் துதித்துப் பாடும் வகையில் அமைந்துள்ளன. கிருஷ்ணபிள்ளை இப்பாடல்களைப் பாடுவதற்குரிய பண்களையும் குறிப்பிட்டுள்ளார். ஆதி பருவத்தில் 3 இடங்களிலும் குமார பருவத்தில் இரண்டு இடங்களிலும் நிதான பருவத்திலும் ஆரணிய பருவத்திலும் ஒவ்வோர் இடத்திலும் இரட்சணிய பருவத்தில் நான்கு

இடங்களிலுமாகப் பதினோரு சூழல்களில் இத்தேவாரப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இத்தேவாரங்களுக்குக் காந்தாரம், இந்தளம், தக்கராகம், திருத்தாண்டகம், திருநேரிசை, திருவிருத்தம், பழம்பஞ்சுரம் என்னும் பண்களை அமைத்துள்ளார்.

முற்றுருவகம்

சமயக்கொள்கை, தத்துவக்கோட்பாடு ஆகியவற்றை விளக்குவதற்கு உருவகக்கதை வடிவமும் உருவக மாந்தர் படைப்பும் பயன்படுவதை விவிலியத்தின் மூலம் அறிந்த ஜான் பனியன் தமது நூலை உருவக வடிவில் படைத்துள்ளார். இதை அடிப்படையாகக் கொண்டு கிருஷ்ணபிள்ளையும் இரட்சணிய யாத்திரிகத்தை உருவகக் காப்பியமாகப் புனைந்துள்ளார்.

இரட்சணிய யாத்திரிகம் மேலோட்டமான பொருளில் ஒருவன் உலகத்தில் செய்யும் யாத்திரையை விவரிக்கின்றது. ஆனால் உள்ளுறைப் பொருளில் ஒரு கிறித்தவனது வாழ்விலுள்ள ஆன்மிகச் செலவைச் சொல்லுகின்றது. அதாவது கிறித்தவ வாழ்க்கையே யாத்திரையாய் உருவகம் செய்யப் பட்டுள்ளது. உருவகத்தைப் பயன்படுத்தி மெய்ப்பொருளை விளக்குவது கிருஷ்ணபிள்ளையின் இலக்கியக் கொள்கை யாகும். நூலின் தலைப்பும் உருவக அடிப்படையில் அமைந்து முற்றுருவகத் தன்மைக்குச் சிறப்பினை அளிக்கின்றது. உலகம் நாசதேசம் என உருவகிக்கப்பட்டுள்ளது. நிதான பருவம், இரட்சணிய பருவம் என்னும் பெயர்கள் உருவக நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

இரட்சணிய யாத்திரிகத்தில் படைக்கப்பட்டுள்ள மாந்தர்கள் உண்மை வாழ்வில் உள்ளவர்களே. இவர்களில் நல்லவர்களும் தீயவர்களும், நடுவுநிலையில் உள்ளவர்களும் உள்ளனர். இவர்களது பெயர்கள் அனைத்தும் மக்களின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உருவகங்களாகப் படைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணபிள்ளை மாந்தர்களின் பெயர்களை மொழியாக்கத்தில் உள்ளது போல் படைக்காமல் காப்பியக் கதைக்கு ஏற்றவகையில் உருவகமாகப் பெயர் சூட்டிப் படைத்துள்ளார். பாவத்தில் உழன்ற ஒருவனே கிறித்தவனாக உருவகம் செய்யப்பட்டுள்ளான். கிறித்தவனின் பல்வேறு பெயர்கள் அனைத்தும் மக்களின் பல்வேறு பண்புகளைக்

குறிக்கும் வண்ணம் உருவகமாகப் படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிறித்தவன் அழிம்பனுடன் செய்யும் போர் நன்மை, பரஞானம், ஒளி, நல்லறம் ஆகியவற்றைத் தீமை, அறியாமை, இருள், பாவம் என்பன எதிர்த்துப் போரிடுதல் போன்றதாகும் என்கிறார்.

இவ்வாறு காப்பியமே முற்றுருவகமாக அமைந்திருப்பதோடு பாடல்களிலும் உருவக அணி பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக பரிசுத்த ஆவியின் செயல்களை உழவுத் தொழில் முறைமை மாறுபடாமல் உருவக முறையில் ஆசிரியர் பின்வருமாறு பாடியுள்ளார் :

> **கோட்ட மற்று உளம் திருத்திக் குலவுமெய்ப் பக்தி வித்தி**
> **நாட்டம் வைத்து அருள்நீர் பாய்ச்சி நலிவெலாம் அகற்றி யாதும்**
>
> **வாட்டம் இன்றாக ஓம்பிவரகதி விளைவித்து அன்பர்**
> **ஈட்டம் ஆர்த்து உய்த்துய்ப்பிக்கும் இதயநாயகனே போற்றி**
> **(இகபர சந்திப் படலம், பா.36)**

என்னும் இப்பாடலில் பரிசுத்த ஆவி மனம் என்னும் வயலை உழுது, மெய்ப்பக்தி என்னும் விதைவிதைத்து, அதனைப் பாதுகாத்து, அன்பு என்னும் நீர்ப்பாய்ச்சி, நலிவு என்னும் களையகற்றி, முளைத்த பயிரை வாடாமற் காத்து, நற்கதி என்னும் விளைச்சலை விளைவித்து, அடியவர்களை வாழச் செய்யும் என்று உருவக நிலையில் கூறப்பட்டுள்ளது. காப்பிய மாந்தர், இடங்கள், நிகழ்ச்சிகள் முதலிய பல்வேறு நிலைகளில் இரட்சணிய யாத்திரிகத்தின் முற்றுருவகத் தன்மை முழுமையும் செழுமையும் கொண்டதாகத் திகழ்கின்றது.

நடை

கம்பரின் செய்யுள் நடையானது காப்பிய நடைக்கு இலக்கணமாகத் திகழ்கின்றது. இந்த காப்பிய நடையை கிருஷ்ணபிள்ளை இரட்சணிய யாத்திரிகத்தில் பின்பற்றி யுள்ளார். விருத்தப்பாவில் காப்பியம் பாடும் தன்மையை திருத்தக்கத் தேவர் தொடங்கினார். அவரைத் தொடர்ந்து கம்பரும், கம்பரைத் தொடர்ந்து கிருஷ்ணபிள்ளையும் விருத்தப்பாவிற்குச் சிறப்புச் செய்துள்ளனர். இரட்சணிய

யாத்திரிகத்திலுள்ள 3766 பாடல்களுள் விருத்தப்பாக்கள் 2190 என்பது குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ணபிள்ளை தமது காலச்சூழலுக்கேற்ப வடமொழிச் சொற்கள் கலந்த நடையைக் கையாண்டார். எனினும் வடமொழிச் சொற்கள் கலந்துள்ள போக்கு தனித்துத் தெரியாமல் பாடல்கள் ஆற்றொழுக்கு போல் இனிய ஓசையுடன் அமைந்துள்ளன. கிருஷ்ணபிள்ளை தம் காப்பியத்தில் பேச்சு வழக்குச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். தாம் பயன்படுத்தியுள்ள நடையைக் குறித்து கிருஷ்ணபிள்ளை,

> உலகத்துக்குப் பெரும்பாலும் பிரயோஜனமாயிருக்க வேண்டுமென்பதை யுத்தேசித்தே கூடியவரை இயற் சொற்களைக் கொண்டும், எவரும் முன்பின் சம்பந்தத்தைக் கவனித்துத் தெளிவாய்ப் பொருளறிந்து கொள்ளத்தக்க திரிசொற்களைக் கொண்டும், தற்கால வழக்கத்தை அனுசரித்து இடைக்கிடை சாமான்யமான வடசொற்களைக் கொண்டும் இயற்றப்பட்டிருக்கிறது
>
> (இரட்சணிய யாத்திரிகம், முகவுரை, பக்.xiv-xv)

எனக் குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது.

கிருஷ்ணபிள்ளையின் நடையில் காணப்படும் இன்னொரு கூறு தமிழ் விவிலிய நடையின் பாதிப்பாகும். வைணவத்திலிருந்து கிறித்தவம் தழுவிய கிருஷ்ணபிள்ளை தாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சில ஆண்டுகளிலேயே விவிலியத்தை மிக ஆழமாகப் பயின்றுள்ளமை அவரது நூலில் வெளிப்படுகிறது. விவிலியத் தொடர்களும் சிறப்புப் பெயர்களும் விவிலிய மொழி பெயர்ப்புகளின் குறிப்பாக, கவிஞரது காலத்தில் பெரிதும் போற்றப்பட்ட தமிழ் விவிலியத்தின் நடையும் அவரது பாடல்களிலும் உரைநடை நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

வருணனை

இலக்கியத்தைச் சிறப்பிக்கும் கூறுகளுள் வருணனையும் ஒன்று. இவ்வருணனை கிருஷ்ணபிள்ளையின் புலமைத் திறனை அறிந்து கொள்ளப் பயன்படுகின்றது. பெருங் காப்பியத்திற்கு மலை, கடல், நாடு, நகர், ஞாயிற்றின் தோற்றம், திங்களின் தோற்றம், சிறுபொழுது, பெரும்பொழுது ஆகியவற்றின் வருணனை இன்றியமையாதது.

கிருஷ்ணபிள்ளை இரட்சணிய யாத்திரிகம் சிறக்கும் வகையிலும் காப்பியத்தின் கதைப் போக்கிற்கு ஏற்ற வகையிலும் வருணனையை ஆங்காங்கே சூழலுக்குத் தக்கவாறு அமைத்துள்ளார்.

1. நாட்டு, நகர வருணனை

ஆதிபருவத்தில் பரமராஜ்யப் படலத்திலுள்ள 66 பாடல்களிலும் நாட்டு வருணனை, நகர வருணனையைச் சிறப்பாக அமைத்துள்ளார். நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக அமைவது ஆற்று வளமாகும். பூமியிலுள்ள திருநாட்டின் சிறப்பை விளக்கும் கிருஷ்ணபிள்ளை, நாட்டில் ஜீவகங்கையைப் பாயவிடுகிறார். அதனுடைய தோற்றம், அதன் வெள்ளம், அது கொண்டு வரும் மலர், அது விளைவிக்கும் நன்மை ஆகியவை அதனை வேறுபடுத்திக் காட்டுகின்றது. அருளாகிய மேகம் புறப்பட்டு, அன்பாகிய கடலில் அமிழ்தமாகிய நீரை எடுத்துக் கொண்டு, இரட்சணிய மலையில் கருணை மழை பொழிகின்றது. இதனால் ஏற்பட்ட புண்ணிய வெள்ளம் ஜீவகங்கையாய் திருநாட்டில் எங்கும் ஓடியது. இவ்வாறு ஓடி வரும் போது மாமேரு மலையிலிருந்து இறங்கிய ஜீவகங்கை, உலகமானது செழிப்புற ஜீவகற்பக மலரை ஏந்தியும், விண்ணுலக ஞானமாகிய இரத்தினங்களை இரு கரைகளிலும் வரிசை வரிசையாக ஒதுக்கிக் கொண்டும் உலகம் செழிக்குமாறு பெருக்கெடுத்து ஓடியது. இவ்வருணனை பின்வரும் பாடல்களில் சிறப்பாக அமைந்துள்ளது :

அருண்முகில் கிளம்பி யன்பி னார்கலி யமுத மொண்டு
திருமலி தருரா ரட்சணிய திவ்விய சிகரி போர்த்துப்
பொருவருங் கருணை மாரி பொழிந்த புண்ணியமா நீத்தம்
ஒருமுக மாகி ஜீவ கங்கையா யுலாய தன்றே

சேணுற நிவந்த மேருச் சிகரிநின் றிழிந்து மண்ணோர்
காணரும் புனித ஜீவ கற்பக மலரை யேந்தி
மாணுறு பரம ஞான மணியணிக் குவைவ ரன்றி
நீணிலஞ் செழிப்புற் றுய்ய நீத்தமாய்ப் பரந்த மாதோ

(பரமராஜ்யப் படலம், பா.2, 3)

2. நில வருணனை

ஆதிபருவத்தில் உபாதிமலைப் படலத்திலும், ஆரணியப் பருவத்தில் ஆனந்த சைலப் படலத்திலும் குறிஞ்சி நில வருணனை சிறப்பாக அமைந்துள்ளது. சான்றாக,

மாலுறு கொடுமுடி மணியணி என விழுமருவிகள்பொருவன தடம்
வாலிய திருவருள் பொருபெரு வள நனி மருவிய பெருவரநதி
கோரிய செபதப விரதரும் வரதரும் வரன் முறை குடைவன துறை
பாலடை மலைமிலை பரிசென விரசுவ பருவர லொருவுறை பனி
(ஆனந்த சைலப் படலம், பா.6)

என்னும் பாடலைக் குறிப்பிடலாம். மிக உயர்ந்த உச்சியினையுடைய மலையானது அணிந்து கொண்டிருக்கின்ற மணிமாலையைப் போல அதன் மேலிருந்து அருவிகள் கீழே விழுகின்றன. தரையிலுள்ள நீர் நிலைகளில் அவற்றுடன் போராடுவது போல் மேலிருந்து அருவிகள் கீழே விழுகின்றன. இறைவனின் அருள் நிறைந்து பாய்வதைப் போல நதிகள் ஓடுகின்றன. உண்ணா நோன்பிருந்து செபம் செய்கின்றவர்களும் தவமிருந்து ஆவியின் வரம் பெற்றவர்களும் அவரவர்களுக்குரிய வரிசைகளில் மூழ்கி மகிழ்கின்ற நீர்த்துறைகள் பல அங்குள்ளன. மலைகளின் மீது பாலாடை உறைந்து கிடப்பதைப் போல மக்களின் துயரங்களைத் தீர்த்து வைக்கின்ற அழகான காட்சியினை உடைய உறைபனி எங்கும் பரவியிருந்தது.

3. சூரியோதய வருணனை

இவ்வுலகினை மூடியிருந்த இருட்படலத்தில் விண்மீன்கள் பக்கத்தில் இருப்பதைக் கருதி, தூய தண்ணொளி தரும் நிலவு என்னும் சுறாமீன் நீந்தி வருவதால் அழகாக விளங்கும் விண்மீன்களின் ஒளிமழுங்கி அவைகள் ஒளிந்து கொள்ள சூரியன் என்னும் வலைஞன் கண்களுக்குத் தோன்றாமல் மறைவாக நின்று விடியல் என்னும் வலையை வீசினான்.

வையகம் புனைத்த கங்குல் வாருணி யற்ற நோக்கித்
துய்யதண் மதிய மென்னுந் துயல்வரு சுறவத் தோடு
மையற விளங்கும் வான மீனொளி மழுங்கி மாய
வெய்யவ வலைஞன் றோன்றான் விடிவலை வீசினானால்
(இரட்சணிய சரிதப் படலம், பா.431)

என்னும் பாடல் மூலம் சூரியனின் உதயத்தை வருணனை செய்கிறார். இவ்வருணனைகள், சொல்லும் நிகழ்வைத் தெளிவாகச் சொல்வதற்கும் நயத்துடன் சொல்வதற்கும் பயன்படுகின்றன. இவ்வருணனைகள் மூலம் கவிஞரின் புலமையை எளிதில் அறிய முடிகின்றது.

கற்பனை

கவிதைக்கு உணர்ச்சி, கற்பனை, வடிவம் என்னும் மூன்றும் அடிப்படைகளாகும். கற்பனை என்பது கருத்தைப் புதிய வகையில் உருவகம், உவமை, உள்ளுறை முதலிய நயங்களுடன் சுவைபட வெளியிடுவதாகும். கவிதையின் அழகினை கற்பனை வெளிப்படுத்துகின்றது. கற்பனை இல்லாத கவிதையைப் புனையா ஓவியம் என்பர். கிருஷ்ணபிள்ளை தம் காப்பியத்தில் பல்வேறுபட்ட இடங்களில் கற்பனைத் திறனுடன் கவிதை படைத்துள்ளார்.

1. சோலை

சோலையில் மரங்கள் அதிகமாக இருப்பதால் கோடைக் காலம் அச்சோலையை நாடுவதில்லை எனக் கூறும்போது தமது கற்பனைச் சிறகை விரித்து,

> **தெளிபுனற் றரங்கமுஞ் செறிந்த மேகமும்**
> **வளர்தருக் குலங்களும் வசந்த வாடையும்**
> **உளைபரி யாதியா யுவந்திச் சோலைவாய்க்**
> **குளிரர சிருத்தலாற் கோடை நாடலா**
> **(இரட்சணிய சரிதப் படலம், பா.90)**

எனப் பாடுகின்றார். தெளிவான நீர் அலைகளும், செறிந்து இறங்கியுள்ள மேகங்களும், வளமுடன் வளர்ந்துள்ள பலவகையான மரங்களும், தென்றல் காற்றும் ஆகிய இவற்றைக் குதிரை முதலிய தன் பரிவாரங்களாக ஏற்று மகிழ்ந்து குளிர்ச்சி அரியாசனத்தில் வீற்றிருக்கின்ற அச்சோலையில் கோடை நாடுவதில்லை எனக் கற்பனையாற்றலில் விவரிக்கிறார்.

2. மலர்கள்

இயேசு கிறிஸ்து தாம் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு முன் கெத்சமனே தோட்டத்தில் சென்று சிலுவை மரணம் குறித்து வேதனை அடைகின்றார். அப்போது இயேசு கிறிஸ்துவின் துன்பத்தினைப் பார்த்து சோலையிலுள்ள மலர்கள் கண்ணீர் விட்டு அழுதன எனக் கற்பனை நயத்துடன்,

> **செழுமலர்ச் சோலை யோங்கு சினைதொறு நிறையப் பூத்த**
> **கொழுமுகை யவிழ்ந்து செந்தேன் குளிர்நறுந் துளிவார் காட்சி**
> **அழகிய மணவா ளன்றன் அகத்துவந் தடையும் ஆன்மக்**
> **கழிதுயர்க் கிரங்கிச் சிந்துங் கண்ணினீர்த் தாரை போலும்**
> **(இரட்சணிய சரிதப் படலம், பா.102)**

எனப் பாடுகின்றார். மலர்களின் அரும்புகள் அவிழ்ந்து நறுமணம் வீசிச் சிந்துகின்ற குளிர்ச்சியான தேன் துளிகளின் காட்சி, இயேசு கிறிஸ்துவின் மனதில் தோன்றிய ஆன்மிகத் துயரத்திற்கு இரங்கி அவர் சிந்தும் கண்ணீர் துளிகளைப் போன்றிருந்தது எனக் கற்பனைத் திறனுடன் கிருஷ்ணபிள்ளை விவரிக்கின்றார்.

3. சிலுவை

சிலுவையின் பாரத்தைத் தம் கற்பனைத் திறனுடன் விளக்குகிறார். மக்களின் பாவம் இறைவனால் சுமக்க முடியாத அளவு பெருகியுள்ளது; சிலுவை மரத்தில் கோடிக்கணக்கான அணுக்கள் உள்ளன; ஒவ்வொரு அணுவும் நூறாயிரம் கோடி யானைப்பலம் உடையன என்கிறார். ஓர் அணு இவ்வளவு பலம் என்றால் கோடிக்கணக்கான அணுக்களின் பலம் எவ்வளவு என நினைத்துப் பார்க்க முடியவில்லை. அந்த அளவு மக்களின் பாவம் பாரமுடையதாகக் காணப்படுகின்றது. மக்களின் அனைத்துப் பாவங்களும் சிலுவையாகி இயேசு கிறிஸ்துவை வருத்துகிறது. மக்களின் பாவத்தை இறைவனாலும் சுமக்க முடியவில்லை.

நோக்கில் அணு ஒவ்வொன்றும் நூறு ஆயிரம் கோடி
மாக்கயத்தின் சும்மை மலித்த பாவம் திரட்டி
ஆக்கு சிலுவை அமலன் சிரத்து ஏந்தி
காக்கை கடனாகக் கல்வாரி நோக்கினார்

(இரட்சணிய சரிதப் படலம், பா.308)

என சிலுவையின் பாரத்தைக் கற்பனை நயத்துடன் விளக்கியுள்ளமை பாராட்டத்தக்கது.

4. சூரியன்

இயேசு கிறிஸ்து உலக மக்களின் பாவங்களுக்காகத் தன்னைச் சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். உயிர் நீத்த பின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். இதைப் பொறுக்க முடியாத சூரியன் மனம் வருந்தி மேற்குத் திசையில் கடலிற்கு அப்பால் சென்று வீழ்ந்தான் என சூரியன் மறைவை,

பொங்கரு ணாதன் பூதல ரட்சை புரிவான் வந்(து)
அங்கம்வ ருந்தி யாருயிர் நல்கி யவனிக்குள்
மங்கிய டங்கக் கண்டுச கிக்கமாட்டான் போல்
வெங்கதி ருட்கிக் குடகட லிற்குப் புற வீழ்ந்தான்

(இரட்சணிய சரிதப் படலம், பா.415)

எனக் கற்பனையுடன் பாடியுள்ளமை உணரத்தக்கது.

5. நிலம்

உயிர்த்தெழுந்த இயேசு பெருமானை நிலம் என்னும் பெண் மகிழ்ச்சியுடன் வணங்கினாள் என்னும் கருத்தைக் கூறுவதில் ஆசிரியரின் கற்பனைத் திறன் குறிப்பிடத்தக்கது. நிலம் என்னும் பெண்ணின் முகம் மலர்ந்த செந்தாமரை மலர்கள்; குளிர்ந்த சோலைகள் பெண்ணின் தலை; விரிந்த மரக்கிளைகளாகிய கைகளால் மலர்களைத் தூவித் துதித்தாள்; பலவகைப் பறவைகளைக் கொண்டு இசை அரங்கு நடத்தினாள். இவ்வாறு இவ்வுலகமாகியப் பெண்மணி கடவுளின் மைந்தனாகிய இயேசு கிறிஸ்துவை வணங்கினாள். இக்கற்பனையை,

> **வண்டுண விரிந்த செந்தாமரை முகமலர்ச்சி காட்டித்**
> **தண்டலை தாழ்த்தி மென்பூத் தடஞ்சினைக் கரத்தால் நல்கி**
> **எண்தகு புள்ளினாய இன்னிசை எடுத்துப் போற்றி**
> **மண்டல மடந்தை ஈசன் மைந்தனை வணக்கம் செய்தாள்**
> **(இரட்சணிய சரிதப் படலம், பா.441)**

என கிருஷ்ணபிள்ளை பாடலாக வடித்துள்ளார். இயேசு கிறிஸ்துவை நிலமங்கை பணிந்து போற்றும் கற்பனை பாராட்டத்தக்கது.

6. இயற்கை

இயற்கையுடன் இயைந்துபாடும் கிருஷ்ணபிள்ளை தமது கற்பனைத் திறம் மூலம் இயற்கையைச் சிறப்பாக விவரிக்கிறார். சோலையைக் காணும் கவிஞர் அங்கு இயல்பாக நடைபெறும் நிகழ்வைத் தம் கற்பனை ஆற்றலின் மூலம் ஒரு நடன அரங்காகக் காணுகின்றார். கானகம், தான் வீற்றிருக்கும் அவையாகக் காட்சி தருகின்றது; மேகங்கள் தண்ணுமையாக ஒலிக்கின்றது; வண்டுகள் பாட்டிசைக்கின்றன; மயில்கள் நடனம் ஆடுகின்றன; தாமரை மலர்கள் தம் கண்களால் மகிழ்ச்சியுடன் பார்க்கின்றன; கொன்றை மலர்களின் பொன்னிறத்தாது பொன்னணிப் பரிசாக வழங்கப்படுகிறது.

> **வானந்தண் ணுமையா வண்டு பாண் செய மயில்களாடக்**
> **கானந்தன் னவையாச் செய்ய கமலக் கண் களித்து நோக்கிப்**
> **பூநந்து நறுந்தண் கொன்றைப் பொன்னணிப் பரிசு நல்கி**
> **ஆனந்த சைல வேந்த னரசுவீற் றிருப்பன் மாதோ**
> **(ஆனந்த சைலப் படலம், பா.31)**

என இயற்கை நடன அரங்கில் மலைமன்னன் (ஆனந்த சைல

வேந்தன்) அரசு வீற்றிருக்கிறான் எனக் கற்பனை கலந்து பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கம்பராமாயணத் தாக்கம்

கிருஷ்ணபிள்ளை இரட்சணிய யாத்திரிகத்தின் கதையை ஜான்பனியனிடமிருந்தும், காப்பிய அமைப்பு, கவிதைப் பாங்கு ஆகியவற்றைக் கம்பரிடத்திலும் பெற்று படைத்துள்ளார். கிருஷ்ணபிள்ளை இளமைப் பருவத்திலிருந்தே கம்பராமாயணத்தில் புலமையுடையவராகக் காணப்பட்டதால் கம்பராமாயணத்தின் பாதிப்பு அவரது படைப்பில் இயல்பாகவே அமைந்துள்ளது. பொதுவாக, சிறந்த இலக்கியங்களின் தாக்கம் அதன் பின் வரும் இலக்கியங்களில் அமைவது வழக்கம்.

இராமாயணத்தின் நகர்நீங்கு படலத்தில் இராமன் காட்டுக்குச் செல்கிறான். இராமனின் நிலையைக் கண்ட அயோத்தி மக்கள் மனம் வேதனைப்பட்டு புலம்புகின்றனர்; பெண்கள் மயங்கி விழுந்தனர்; சிலர் விம்மி அழுதனர்; கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கினர்; கூந்தலில் தீ பற்றியது போலப் பதைபதைத்துத் துயரடைந்தனர். இந்த அவலக் காட்சியினைக் கம்பர்,

விழுந்தனர் சிலர்; சிலர் விம்மி விம்மி மேல்
எழுந்தனர்; சிலர் முகத்து இழி கண்ணீரிடை
அழுந்தினர்; சிலர் பதைத்து, அளகவல்லியின்
கொழுந்து எரி உற்றென, துயரம் கூர்கின்றார்

(நகர்நீங்கு படலம், பா.169)

எனப் பாடியுள்ளார். கிருஷ்ணபிள்ளை இது போன்ற காட்சியை இரட்சணிய சரிதப்படலத்தில் அமைத்துள்ளார். இயேசு கிறிஸ்து முள் முடி சூடி, போர்ச்சேவகர்களால் அடிக்கப்பட்டு உடல் சோர்ந்து சிலுவையைச் சுமந்து கொண்டு கல்வாரி மலை நோக்கிச் செல்கின்றார்.

இயேசு கிறிஸ்துவின் இந்நிலையைக் கண்டு எருசலேம் நகரப் பெண்கள் மனமுடைந்தவர்களாக, கண்ணீர்விட்டுக் கதறி அழுகின்றனர்; கொடிய விடத்தை உண்டவர் போல ஏங்கினர்; பலவாறு சொல்லிப் புலம்பினர். இவ்வாறு மக்களின் துயரக் கோலத்தினை, மன உணர்வுகளைக் கிருஷ்ணபிள்ளை பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்:

கண்டார்ப தைத்தார்க லுழ்ந்தார்க ரைந்தழுதார்
கொண்டார்து ணுக்கங்கொ தித்தார்க டுவிடத்தை

உண்டார்போ லேங்கியு யங்கிநெ டிதுயிர்த்துத்
திண்டாடி நின்றினைய செப்புவா ராயினார்
(இரட்சணிய சரிதப் படலம், பா.319)

இதைப் போன்று மேலும் சிலபாடல்களில் கம்பராமாயணத்தின் நகர்நீங்கு படலத்திலுள்ள சில பாடல்களின் தாக்கம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இரட்சணிய யாத்திரிகத்தின் பெரும்பிரிவு சிறு பிரிவுகளின் பெயரமைப்பிலும் கம்பராமாயணத்தின் தாக்கம் உள்ளது. கம்பராமாயணத்தின் ஆரணிய காண்டம் என்னும் பெயரைப் போன்று யாத்திரிகத்தின் மூன்றாவது பருவம் ஆரணியப் பருவம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. கம்பராமாயணத்தில் பாலகாண்டத்தின் அரசியற் படலம் யாத்திரிகத்தின் ஆதி பருவத்தில் அரசியற்படலம் என்னும் பெயராலே அமைந்துள்ளது.

திருக்குறளின் தாக்கம்

இரட்சணிய யாத்திரிகத்தில் திருக்குறளின் செல்வாக்கு அதிக அளவில் உள்ளது. சுமார் 70 திருக்குறள் கருத்துகள் இரட்சணிய யாத்திரிகத்தில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிறித்தவன் தம் உறவினர்களுக்காக இரக்கம் கொண்டு அவர்களுக்கு வரும் பேரழிவிலிருந்து அவர்கள் தப்ப வேண்டும் என்னும் நோக்கத்தில் பின்வருமாறு அறிவுரை கூறுகிறான்:

வருமுன்னர்க் காவாதார்க்கு வாழ்க்கையெத் துணைய வேனும்
எரிமுன்ன ருற்றவைத்தூ றெனக்கெடு மென்ப ரின்னல்
பொருமுன்னர் விலகி யோடிப் புகலிடமாய கோமான்
திருமுன்ன ரடையி னித்ய ஜீவனை யடைதல் திண்ணம்
(மெய்யுணர்ச்சிப் படலம், பா.36)

கிருஷ்ணபிள்ளையின் இப்பாடல் கருத்து திருவள்ளுவரின்,

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் (குறள்.435)

என்னும் குறளை ஆதாரமாகக் கொண்டது.

தேவாரத் தாக்கம்

சைவ சமயக் குரவர்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்களே தேவாரம் என அழைக்கப்படுகின்றது. தேவாரத்திலும் கிருஷ்ணபிள்ளை

புலமையுடையவராக விளங்கியதால் பல தேவாரப் பாடல்களின் தாக்கத்தினை இரட்சணிய யாத்திரிகத்தில் காணமுடிகின்றது. சம்பந்தர், ஒளி வடிவாகக் காட்சியளித்த இறைவனை,

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமைநன் னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாம நமச்சி வாயவே

(ஞானசம்பந்தர் தேவாரம், மூன்றாம் திருமுறைப்பதிகம், பா.397-1)

எனப்பாடி உள்ளம் மகிழ்கின்றார். கிருஷ்ணபிள்ளை தமது காப்பியத்தில் இப்பாடலை மனதில் கொண்டு,

நன்னெறி புகுத்திடும் நவையின் நீக்கிடும்
இன்னலை அகற்றிடும் இகல்செ குத்திடும்
உன்னதத்து உய்த்திடும் ஒருங்கு காத்திடும்
எந்நலத்தையும் தரும் யேசு நாமமே

(சுமை நீங்கு படலம், தேவாரம், பா.6)

எனப் புகழ்ந்துள்ளார்.

நல்ல வழிகளில் செலுத்துவது, தீய வழிகளிலிருந்து விலக்குவது, துன்பத்தை அகற்றுவது, சாத்தானின் பகையை அழிப்பது, மோட்ச உலகில் கொண்டு சேர்ப்பது, எல்லோரையும் ஒன்றாகப் பாதுகாப்பது, எல்லா நன்மையும் தருவது இயேசு என்னும் திருப்பெயராகும் என கிருஷ்ணபிள்ளை பட்டியலிடுகிறார்.

திருவாசகத் தாக்கம்

'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் பாராட்டைப் பெற்றது மாணிக்கவாசகரின் திருவாசகம். கண்டபத்து என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல்கள் 'தில்லை அம்பலத்தே கண்டேனே' என முடிவுறும் தன்மையன. தில்லையம்பலத்திலுள்ள பெருமானின் கோலத்தைக் கண்டு,

பாங்கி னொரு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உவப்பிலா வன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே

(திருவாசகம், கண்டபத்து, பா.9)

எனப் பாடி மகிழ்கின்றார். மாணிக்கவாசகரின் இப்பாடல்

'அம்பலத்தே கண்டேனே' என முடிவுறுகின்றது. இத்தன்மையில் ஈர்க்கப்பட்ட கிருஷ்ணபிள்ளை, இயேசு பெருமானைச் சிலுவையில் கண்ட காட்சியை,

துன்னெறி புக்குழல் கின்ற தூர்த்தரிலும் தூர்த்தனாய்
பன்னெறி கொள் பரசமயப்படு குழிவீழ்ந்து அழிவேற்கு
நன்னெறி யின் துணிபு உணர்த்தி நயந்திதயக் கண்திறந்த
செந்நெறி காட்டிய குருவைச் சிலுவைமிசைக் கண்டேனே
(ஜீவபுஷ்கரிணிப் படலம், தேவாரம், பா. 6)

என மனம் உருகிப் பாடுகிறார். இப்பகுதியிலுள்ள பத்து தேவாரப் பாடல்களும் 'சிலுவைமிசைக் கண்டேனே' என முடிவுறுவது குறிப்பிடத்தக்கது.

தாயுமானவரின் பாடல் தாக்கம்

தாயுமானவர் சைவ சமயத்தின் பெருமைகளைப் பாட முற்படும் பொழுது 'செகத்தீரே' என உலக மக்களை விளித்து தம் கருத்துகளைக் கூறிடக் காணலாம். சான்றாக ஒரு பாடலில்,

சைவ சமயமே சமயம் சமையா தீதப்பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிக்காட்டும் இந்த கருத்தை விட்டுப்
பொய் வந்து உழலும் சமயநெறி புகுதவேண்டாம் முத்தி தரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் சகத்தீரே
(தாயுமானவர் திருப்பாடல் திரட்டு, காடும் கரையும், பா.2)

எனப் பாடியுள்ளார். இதே நடையில் 'செகத்தீரே' என விளித்து கிறித்தவ மறையின் மாண்புகளைக் கிருஷ்ணபிள்ளையும் பல பாடல்களில் பாடியுள்ளர். சான்றுக்கு ஒரு பாடல்:

வேதம் ஒன்றேமெய் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குவது இதோ
நாதன் ஒருவர் உளருலகம் நவிலும் சான்று நற்கதியின்
பாதை ஒன்றுண்டு அது கிறித்து மார்க்கம் இதனைப்பகுத் துணர்ந்து
கோதில் பரமகுரு பாதம் கும்பிட்டு ஏத்தும் செகத்தீரே
(இரட்சணிய நவநீதப் படலம், பா.34)

"உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனி போல வேதம் ஒன்றே என்பது மெய்யாகும். கடவுள் ஒருவரே என்பதற்கு இவ்வுலகமே சாட்சி சொல்லும். நல்ல நிலையினை அடைய விரும்புபவர்களுக்கு கிறித்தவ மதமே வழியாகும். இதை அனைவரும் நன்கு உணர்ந்து இயேசு பெருமானின் திருப்பாதத்தை வணங்க

உலக மக்களே வாருங்கள்" என கிருஷ்ணபிள்ளை இப்பாடலில் குறிப்பிடுகிறார். தாயுமானவர் பாடல்களில் காணலாகும் சொல், பொருள் ஆகியவற்றை கிருஷ்ணபிள்ளை தம் காப்பியத்தில் மரபு மாறாத நிலையில் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கது.

உவமைகள்

உவமை இலக்கிய ஆசிரியரின் உள்ளத்து உணர்வுகளைத் தெளிவாகவும் சிறப்பாகவும் காட்டுவதுடன் கவிதை இன்பத்தைப் பிறர் அனுபவிக்கவும் உறுதுணையாக அமைகின்றது. இரட்சணிய யாத்திரிகத்தில் சிறந்த உவமைகள் 250 க்கும் மேல் உள்ளன. இவ்வுவமைகள் கருத்துச் செறிவுடன் உணர்ச்சிமயமாக விளங்குவதால் காவியம் பொலிவு பெறுகின்றது. கிறித்தவன் தன் பாவத்தை உணர்ந்து துன்பப்படுகிறான். அவனது மனத்தவிப்பினை,

இருதலைக் கொள்ளியுற்ற எறும்பு என ஏகும் மார்க்கம்
ஒருதலையானும் காணாது வணங்கியோன் உலவையுற்ற
சருகு எனச் சுழல்வன், யாண்டும் தரிக்கிலன் மேலும் கீழும்
கருதி நோக்கிடுவன், உள்ளம் கசந்து அழுதிடுவன் மன்னோ
(மெய்யுணர்ச்சிப் படலம், பா.5)

என்னும் பாடல் மூலம் வெளிப்படுத்துகிறார். கிறித்தவனின் நிலை இருதலைக் கொள்ளிக்கு நடுவில் அகப்பட்டுக் கொண்ட எறும்பின் நிலையாக உள்ளது. மேலும் தான் செல்ல வேண்டிய வழியினை அறியாததால் மயங்கி வருந்தி புயற்காற்றில் அகப்பட்ட சருகைப்போல இவ்வுலக வாழ்வில் துன்புறுகிறான். இவ்வுவமை எளிமையாகவும் இயல்பாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவைபோன்ற ஏராளமான உவமைகள் இரட்சணிய யாத்திரிகம் முழுவதும் நிரம்பிக் காணப்படுகின்றன. எளிய உவமைகளின் மூலம் சிறந்த கருத்துகளை விளக்குவது கிருஷ்ணபிள்ளையின் இலக்கியக் கொள்கையாகும். கிருஷ்ணபிள்ளையின் கருத்துமிக்க உவமைகள் பொருளை அழகாகவும் தெளிவாகவும் நயமாகவும் எடுத்தியம்புகின்றன.

இவ்வாறு, சொல் இனிமையாலும் அணி நயங்களாலும் பொருளழகாலும் ஆன்மிக உண்மைகளாலும் சிறந்து திகழும் இரட்சணிய யாத்திரிகம், தமிழ்க் கிறித்தவக் காப்பியங்களின் மணிமகுடமாகவும், தமிழ்க் காப்பியங்களின் வரிசையில் தன்னிகரற்றதொரு வைரமணியாகவும் பொலிகிறது.

29. மோட்சப் பயணக் காவியம்

இங்கிலாந்து நாட்டினரான ஜான் பனியன் எழுதிய பில்கிரிம்ஸ் புராகிரஸ் இறவாப் புகழ் பெற்ற ஆன்மீக இலக்கியங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. இந்நூல் 200 க்கும் மேற்பட்ட மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் உரைநடை வடிவில் அருள்திரு. சாமுவேல் பவுல், பரதேசியின் மோட்சப் பிரயாணம், என்னும் தலைப்பில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அதைத் தொடர்ந்து முத்திவழி அம்மானை, இரட்சணிய யாத்திரிகம், மோட்சப் பயணக் காவியம் என்னும் நூல்கள் செய்யுள் வடிவில் வெளிவந்துள்ளன. மோட்சப் பயணக் காவியம் முனைவர் ஏ.த. சோதி நாயகம் அவர்களால் எழுதப்பட்டு, பூம்புகார் பதிப்பகத்தின் வாயிலாக 1991ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

ஆசிரியர் வரலாறு

மோட்சப் பயணக் காவியத்தின் ஆசிரியரான முனைவர் ஏ.த. சோதி நாயகம் 1948ஆம் ஆண்டு சூலை மாதம் 23 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தோட்டவாரம் என்னும் ஊரில் அருள்திரு. ஏசுதாஸ் - ராஜம்மாள் தம்பதியினருக்கு நான்காவது மகனாகப் பிறந்தார். மார்த்தாண்டத்தில் அமைந்துள்ள அரசினர் பள்ளியில் 1963ஆம் ஆண்டு பள்ளிப் படிப்பை முடித்தார். பின்னர் ஸ்காட் கிறித்தவக் கல்லூரியில் பயின்று 1968ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். அதன் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்து 1971ஆம் ஆண்டு முதுகலைப் பட்டம் பெற்றார். 1974ஆம் ஆண்டு மிருதுலா என்னும் அம்மையாரைத் திருமணம் செய்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் முனைவர் பட்டம் பெற்ற இவர், இந்திய விலங்கியல் துறையில் நிபுணராகப் பணியாற்றியவர். இவர் விலங்கியல் துறையில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

நூல் அமைப்பு

மோட்சப் பயணக் காவியம் என்னும் இந்நூல் தனிவழிக் காண்டம், உண்மைத் துணைக் காண்டம், திட நம்பிக்கை துணைக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களை உடையது. மூன்று காண்டங்களிலும் 43 படலங்கள் இடம்பெற்றுள்ளன. இக்காப்பியத்திலுள்ள பாடல்களின் எண்ணிக்கை 600 ஆகும்.

தனிவழிக் காண்டம்

முதல் காண்டமான தனிவழிக் காண்டம் காவியச்சுட்டுப் படலம், கிறித்தியான் அலம்வந்த படலம், சுவிசேடர் முதலாம் சந்திப்புப் படலம், பிடிவாதன் இணங்கு நெஞ்சன் குறுக்கீட்டுப் படலம், நாசவுழை உறு படலம், லோக ஞானி சந்திப்புப் படலம், சுவிசேடர் இரண்டாம் சந்திப்புப் படலம், திட்டிவாசல் உறு படலம், வியாக்கியானி வீட்டுக் காட்சிப் படலம், பாரம் அகல் படலம், வழி புரண்டார் சந்திப்புப் படலம், இழந்த சுருள் பெறு படலம், சிங்கார மாளிகைப் படலம், தாழ்மைப் பள்ளப் படலம், மரண நிழல் பள்ளப் படலம், ராட்சதர் குகை கடர் படலம் என்னும் 16 படலங்களை உடையது.

உண்மைத் துணைக் காண்டம்

இரண்டாம் காண்டமான உண்மைத் துணைக் காண்டம் உண்மை சந்திப்புப் படலம், வாயாடி குறுக்கீட்டுப் படலம், சுவிசேடர் மூன்றாம் சந்திப்புப் படலம், மாயாபுரி சந்தை உறு படலம், சந்தை அமளிப் படலம், நீதி விசாரணைப் படலம், உண்மை முடிவுப் படலம் என்னும் 7 படலங்களைக் கொண்டது.

திடநம்பிக்கை துணைக் காண்டம்

மூன்றாவது காண்டமான திட நம்பிக்கை துணைக் காண்டம் திட நம்பிக்கை சந்திப்புப் படலம், உபாயி துணையோர் குறுக்கீட்டுப் படலம், திரவிய கிரி உறு படலம், லோத் இல்லாள் சிலைப் படலம், பக்க வழி புகு படலம், சந்தேகத் துருக்கத் துயர் படலம், ஆனந்தமலை இடையர் சந்திப்புப் படலம், அறிவீனன் முதலாம் சந்திப்புப் படலம், அற்ப விசுவாசி சரித்திரப் படலம், முகத்துதியாரால் வழி இடறிய படலம், நாத்திகன் சந்திப்புப் படலம், மயக்கப்புவி உறு படலம், திட நம்பிக்கை இயக்கம் பெற்ற வகைப் படலம், அறிவீனன் இரண்டாம் சந்திப்புப் படலம், சொற்ப காலம் கதைப் படலம், வாழ்க்கை நாடு படலம், ஆறு கடர் படலம், மோட்ச மகிமை அறி படலம், பயணிகள் மோட்சம் அடைதல் படலம், அறிவீனன் முடிவுப் படலம் என்னும் 20 படலங்களை உள்ளடக்கியது.

காவியச் சிறப்பு

"இக்காப்பியம் திரிபு எதுவுமின்றி மூலநூலில் காணப்படும் மோட்சம் பற்றிய செய்திகளையும், பலதரப்பட்ட மாந்தர்களையும், மோட்சப் பயணியின் அனுபவங்களையும் உரைநடையில் இருப்பது போலவே கவிதை நடையில் படித்து

இன்புறும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது" என இந்நூலின் ஆசிரியர் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். வழி நூல் என்னும் உணர்வு தோன்றாத முறையில் இயல்பான கவிதையோட்டத்தில் ஆசிரியர் இந்நூலைப் படைத்துள்ளார். சில சொற்களுக்கு அடிக்குறிப்பின் மூலம் விளக்கங்கள் கொடுத்திருப்பது மிக்கப் பயனுள்ளதாக உள்ளது.

காவியத்தின் நோக்கம்

மோட்சப் பயணக் காவியத்தின் நோக்கத்தை ஆசிரியர்,

நரவுலகு வாழ்ந்திடினும் நல்லொழுக்க மேற்றவனாய்
பரவுலகாம் மோட்சமதன் பாதையுறப் பாடேற்றும்
இரவகல எழுஞ்சுடராய் இறுதியினில் குறியடைந்த
புரவலனின் நல்லடியான் பயணமது பகர்ந்திடுவேன் (பா.3)

எனக் குறிப்பிட்டுள்ளார். மனிதர்கள் வாழும் இம்மண்ணுலகில் வாழ நேர்ந்திடினும், நல்லொழுக்கங்கள் ஏற்று நடப்பவனாய் வாழ்ந்து இறை உலகாம் மோட்சத்தின் பாதையில் செல்லவேண்டி பாடுகளை ஏற்ற, காரிருள் நீங்க எழும் கதிரவனாய் எழுந்து இறுதியில் இலக்கினை அடைந்த இயேசு பிரானின் நல்லடியான் கிறித்தியானின் பயணத்தை நான் சொல்லுகிறேன் எனக் காவியத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

உவமைகள்

முற்றுருவகக் காப்பியமான மோட்சப் பயணக் காவியத்தில் உவமைகளால் ஏராளமான செய்திகளை ஆசிரியர் விவரிக்கிறார். காவியத்தில் பயின்று வந்துள்ள சில உவமைகள் பின்வருமாறு:

1. வேடனவன் கண்ணியினில் விழுந்திட்ட புள்ளினமாய்
2. கரும்பனைய சுவையினொடு
3. கடிவாளப் பூட்டிட்ட குதிரையென
4. வண்டியதன் பளுவதனால் வதையுற்ற மாடனையோன்
5. கூண்டதனுள் மிருகமென
6. புழுத்தபழப் புழுவதுவாய்
7. உழுத்தமரக் கட்டையென
8. நரம்பற்ற வீணையென நலிவுற்று
9. நுகந்திரிந்த மாடிணையாய் நழுவினையே

10. சக்கரத்தின் திருகற்ற சகடமெனத் தடுமாறி

11. வீச்சுவலை இடந்தெரிந்து வீசுகின்ற மீனவன்போல்

இவ்வுவமைகள் காப்பியத்தின் ஓட்டத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளன. மேலும், கொடுமை நிறைந்த சாத்தானின் இயல்புகளை விரித்துரைக்கும் பாடல் முழுவதிலும் உவமை நயம் அமைந்துள்ளது. சாத்தானின் விலங்குப் பண்புகளையே விலங்குகளின் பெயரால் அமைத்திருப்பது நயமுடன் உள்ளது. சான்றாக,

> **கோலமதாய் உரைத்திடிலோ கொடுஞ்சாத்தான் உடம்பதனின்**
> **தோலதுவாய் மீன்செதிளாய் தலைநிகர்வான் சிங்கமதாய்க்**
> **காலதுவாய்க் கரடிநிகர் கொடுநாகச் செட்டையொடு**
> **ஓலமதாய்க் குரலனவன் உள்ளிருந்து நெருப்புமிழ்வான் (பா.156)**

என்னும் பாடலில் சாத்தானின் விலங்குப் பண்புகளையே விலங்குகளின் பெயரால் அமைத்திருப்பது நலம் விளைவிக்கின்றது. கொடுமை மிக்கச் சாத்தானின் உடம்புதனில் தோலதுவும் மீன் செதிலும் தலை நிமிர்ந்த சிங்கமாய் கால்களும் அதுவாக கரடியைப் போன்று கொடுநாகச் சட்டை அணிந்து ஓலம் மிகுந்த குரலோடு உள்ளிருந்து நெருப்பு உமிழ்ந்தான் என விவரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பழமொழிகள்

கவிஞர் சோதிநாயகம் அவர்கள் தம் காவியத்தில் வழக்கில் பயன்படுத்தப்படும் பழமொழிகளையும் கையாண்டுள்ளார். சான்றாக,

1. எட்டாத கொம்புத்தேன் எடுத்துண்ண முனைவானேன்
2. பிடித்தமுயல் மொத்தமதும் கால்மூன்றாய் முடித்துரைப்பான்

என்னும் பழமொழிகளைக் குறிப்பிடலாம்.

வருணனைகள்

காப்பியங்களில் வருணனை இன்றியமையாத கூறாகும். இவ்வருணனை மாந்தர்களையோ, நிகழ்ச்சிகளையோ, இடத்தையோ வருணனை செய்யும் வகையில் காப்பியங்களில் அமைந்துள்ளன. கிறித்தியானைக் காப்பியத்தில் அறிமுகப் படுத்தும் போது அவனைப் பற்றி வருணிக்கும் தன்மை குறிப்பிடத்தக்கது. கந்தை உடை அணிந்தவனாய் முதுகில் மிக்க

பழுவைச் சுமந்தவனாய் பக்கங்களில் நிந்தை முகம் சூழ புத்தகத்தைத் தன் கரத்தில் கொண்டவனாய், ஆனிரை மந்தையை விட்டு நீங்கிய கன்று தனியே தவித்து இடர்படுவதைப் போல கிறித்தியான் தன் மனதில் அடைந்த வேதனையால் அலைந்து திரிந்து வந்தான் என வருணிக்கிறார்.

> **உடைகந்தை கனப்பளுவை உடையவனாய்ப் புறமுதுகில்**
> **புடைநிந்தை முகஞ்சூழப் புத்தகந்தன் கரமுளதாய்**
> **இடைமந்தை யகல்கன்று இடருறலாய்க் கிறித்தியானும்**
> **அடைசிந்தை வேதனையால் அலம்வருதல் கண்டுணர்ந்தேன்**
> **(பா.5)**

என நூலின் தொடக்கத்தில் கிறித்தியானை அறிமுகப் படுத்துவதில் வருணனை நயம் உள்ளது.

காவிய மாந்தர்கள்

பில்கிரிம்ஸ் புராகிரசின் கதை மாந்தர்கள் ஜான் பனியனால் படைக்கப்பட்டவர்கள். அக்கதைமாந்தர்கள் எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் இக்காவியத்தில் படைக்கப்பட்டுள்ளனர். கிறித்தியான், சுவிசேடர், பிடிவாதன், இணங்கு நெஞ்சன், சகாயர், லோகஞானி, பட்சபாதன், வியாக்கியானி, துணிகரன், பேதை, தலைச் சோம்பன், மாயக்காரன், வேடக்காரன், அச்சன், சந்தேகி, விழிப்பாளன், யூகி, நேசமணி, பயபக்தி, விவேகி, அப்பெல்யோன், பப்பு, பலதேவ பக்தன், உண்மை, வாயாடி, நன்மை வெறுப்போன், வன்கண்ணன், அவபக்தி, இச்சகன், திடநம்பிக்கை, உபாயி, கட்சிமாறி, இருநாக்கு, நயவசனி, பணவாஞ்சை, பிசினாறி, வீணுலகப் பற்று, தோமாசு, வீணுறுதி, ராட்சதன், கூச்சம், கபடின்மை, ஞானவழி, விழிப்பாளி, நல்லறிஞன், இம நேயம், பிலேத், அறிவீனன், அற்ப விசுவாசி, அதைரியன், சந்தேகி, பாவபழி, அருளாதிக்கன், முகத்துதி, சவுக்குடையார், நாத்திகன், உண்மை, சொற்ப காலம், பின்வாங்கி, வீண் நம்பி ஆகியோர் இக்காவியத்தின் மாந்தர்களாவர். இம்மாந்தர்களின் பெயர்கள் அனைத்தும் முற்றுருவகத் தன்மையில் அமைந்தவையாகும்.

இடங்கள்

மோட்சப் பயணக் காவியத்தில் இடம்பெற்றுள்ள இடங்களாக நாசபுரி, நல்லறம்,சமாதானம், மரணநிழல் பள்ளம், நயவசனபுரி, முசிப்பாற்றி, திரவியகிரி, தேவந்தி, ஆனந்தமலை, தப்பறைப் பறம்பு, சாவதானமலை, தெளிசிகரம்,

அலங்கார வாசல், மயக்கப் புவி, ஏமாப்பு, இறந்தவரின் சந்து, சீர்கேடு, வாழ்க்கை நாடு என்பன உள்ளன. இவ்விடங்களின் பெயர்களும் முற்றுருவக அடிப்படையில் அமைந்தனவாகும்.

இரட்சணிய யாத்திரிகம்-மோட்சப் பயணக் காவியம்

கிருஷ்ணபிள்ளை தான் எழுதிய இரட்சணிய யாத்திரிகத்தில் மூல நூலிலுள்ள சில மாந்தர்களை மாற்றியும், சில புதியவர்களைப் படைத்தும் உள்ளார். மேலும் இவர்களது பெயர்களை மொழிமாற்றத்தில் உள்ளதுபோல் பின்பற்ற வில்லை. தமது கற்பனைத் திறனுக்கு ஏற்றார் போன்று உருவகத் தன்மையில் பெயர்களைச் சூட்டியுள்ளார். மொழிபெயர்ப்பில் உண்மை என்னும் பெயர் கொண்டவனை நிதானி எனத் தம் படைப்பில் கொணர்கிறார். இதைப்போன்று பிடிவாதன், இணங்கு நெஞ்சன் என்பவர்களை வன்னெஞ்சன், மென்னெஞ்சன் எனப் புதிய பெயரைப் புனைகிறார். இரட்சண்ய யாத்திரிகத்தில் காணலாகும் இரட்சணிய சரிதப் படலம் என்னும் பகுதி மூல நூலில் இல்லாதது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பகுதி இயேசு கிறிஸ்துவின் பாடு மரணங்களை விவரிப்பதாக அமைந்து, காப்பியத்திற்கு மெருகூட்டுகின்றது.

மோட்சப் பயணக் காவியத்தில் மூல நூலின் மொழிபெயர்ப்பிலிருந்து மாற்றங்கள் செய்யாமல் சுருக்கமாக்க் காவிய அடிப்படையில் செய்தி சொல்லப்படுகிறது. சாமுவேல் பவுல் போதகரின் மொழிபெயர்ப்பான பரதேசியின் மோட்சப் பிரயாணம் என்னும் நூலை அனைவரும் எளிதில் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் மாணவர் பதிப்பு வெளிவந்ததைப் போன்று, சுருக்கமாகச் செய்யுள் வடிவில் வெளியிடப்பட்டது மோட்சப் பயணக் காவியமாகும்.

இரட்சணிய யாத்திரிகத்தில் அழிம்பன் தோல்விப் படலத்தை கிருஷ்ண பிள்ளை 109 பாடல்களில் பாடியுள்ளார். ஆனால் அதே செய்தியை தாழ்மைப் பள்ளப் படலம் என்னும் பெயரில் சோதி நாயகம் 14 பாடல்களில் பாடியுள்ளார். சோதி நாயகம் மூல நூலின் மொழிபெயர்ப்பில் உள்ளது போன்று அப்பொல்யோன் என்னும் பெயரைப் பின்பற்றுகிறார். ஆனால் கிருஷ்ணபிள்ளை அழிம்பன் என்னும் பெயரைச் சூட்டுகிறார். ஏழு பாடல்களில் அழிம்பனை வெகுச் சிறப்பாகப் படம்

பிடித்துக் காட்டுகிறார் கிருஷ்ணபிள்ளை. ஆனால் சோதி நாயகம் அப்பொல்யோனை,

கோலமதாய் உரைத்திடிலோ கொடுஞ்சாத்தான் உடம்பதனின்
தோலதுவாய் மீன்செதிளாய் தலைநிகர்வான் சிங்கமதாய்க்
காலதுவாய்க் கரடிநிகர் கொடுநாகச் செட்டையொடு
ஓலமதாய்க் குரலனவன் உள்ளிருந்து நெருப்புமிழ்வான் (பா.156)

என அறிமுகப்படுத்துகிறார். கிருஷ்ணபிள்ளையின் ஏழு பாடல்களுள் சான்றாக ஒன்று பின்வருமாறு:

பேயுமஞ் சுறுபெரும் பேய்மு கத்தினன்
காயெரி பங்கியன் கடுத்து றுங்கொடு
வாயினன் வக்கிர தந்தன் வன்கணன்
தீயெழு புகையென வுயிர்க்குந் தீயவன்
(அழிம்பன் தோல்விப் படலம், பா.5)

அழிம்பனை வதைத்ததை சோதி நாயகம்,

கத்தியுடன் அக்கொடியோன் கொன்றிடவே குறிவைக்கத்
தத்தியிவன் கேடயத்தைத் தானெடுத்துச் சத்துருவைக்
குத்தியவன் புவிசாய்க்கக் கதிகலங்கி மறுகணமே
கத்தியவன் சிறகடித்துக் கடந்தேகக் கண்டேன்யான்
(பா.166)

எனவும், கிருஷ்ணபிள்ளை,

மந்தி ரத்தனி வாட்படை யோங்கிவன் கண்ணன்
தந்தி ரத்திட மார்புறப் புகுத்தலுந் தலைசாய்ந்
தந்த ரம்பட வலறின னழிபெருங் குருதி
சிந்தி யங்கவன் வெஞ்சினத் தீத்தழல் சிதைத்த (பா.103)

நெஞ்சு ரங்கிழிந் தழிம்பனீ ணிலத்துறீஇ நெடிது
சஞ்ச லம்படத் தடஞ்சிறை யிரண்டையுந் தடிவான்
செஞ்சொ லாரணன் மந்திர வாள்கரந் திகழ்த்த
அஞ்சி வாய்வெரீஇ மீக்கிளர்ந் ததோகதி யடைந்தான்
(பா.104)

எனவும் பாடுகின்றனர்.

மூலநூலின் முழுமை

மூலநூலின் ஆசிரியர் ஜான் பனியன் சொப்பனப் போக்காக நூலைப் படைத்திருப்பதை மோட்சப் பயணக்

காவியத்தின் நான்காம் பாடலும், இறுதிப் பாடலும் சுட்டிச் செல்கின்றன.

நனவுலகில் நாற்றிசையும் நானலைந்த நாளொன்றில்
வனவுலகில் துயில்கொள்ள வன்மலையின் கெபி யகத்தே
கனவுலகில் கண்டவற்றைக் கரிசனையாய் நானிலத்தோர்
மனவுலகில் நிலைபெறவே முனைந்திங்கு இயம்பிடுவேன்(பா.4)

என்பதும்,

கேடதனின் உறைவிடமாம் கொடுநாச புரியகன்று
ஈடதனின் வழியொன்று இருப்பறிந்தேன் நரகினுக்கு
வீடதனின் வாயிலிலும் விடுக்கென்று விழித்திடவே
ஏடதனின் குறிப்பெல்லாம் என்கனவு என்றுணர்ந்தேன்

(பா.600)

என்பதும் அவ்விரண்டு பாடல்களாகும். மூலநூலைப் பின்பற்றி சோதி நாயகம் இந்நூலைப் படைத்துள்ளமையை மேற்குறிப்பிட்ட இரண்டு பாடல்களின் மூலம் அறியமுடிகிறது. “பூவுலகில் நான் (ஜான் பனியன்) மனிதனாய் வாழ்ந்த காலத்தில் ஒரு நாள் கானகத்தின் மலையடிவாரத்தில் அமைந்த குகையினுள் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்த போது ஒரு கனாக் கண்டேன். கிறித்தியான் என்னும் பெயருள்ள ஒரு மனிதன் கந்தையான உடையுடன் முதுகில் பாரமான சுமை ஏற்று, கையில் புத்தகம் தாங்கிச் சோர்வுற்று நின்று கொண்டிருந்தான்” என நூல் தொடங்குகிறது.

“நாசபுரியிலிருந்து, மட்டுமன்றி மோட்ச வாசலிலிருந்தும் நரகினுக்கு வழியிருப்பை நான் அப்போது அறிந்து கொண்டேன். திடீரென தூக்கத்திலிருந்து விழிக்கவே நான் கண்ட குறிப்பெல்லாம் கனவு என்று உணர்ந்தேன்” என ஜான் பனியன் முடிக்கிறார்.

அடிக்குறிப்புகள்

மூலநூலை அடிப்படையாகக் கொண்டு தமது நூலிலுள்ள செய்திகளை விரிவான முறையில் வாசகர்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் ஏராளமான அடிக்குறிப்புகளை ஆசிரியர் கொடுத்துள்ளார். மோட்சப் பயணக் காவியத்திலுள்ள 600 பாடல்களிலும் எல்லாவித பனியனின் கருத்துகளையும் தரமுடியாத காரணத்தால் இவ்வடிக்குறிப்பு பலவிதங்களில் பயனுள்ளதாக அமைகின்றது. சான்றாக, உண்மை முடிவுப் படலத்திலுள்ள,

பெருமுடிவாய் நடுவனவன் பேச்சிணங்கிப் பன்னிருவர்
திருவடிவாம் உண்மைக்குத் தாழ்வான மரணமதைத்
தருமுடிவாய்க் குரலெழுப்பத் தாழ்த்தாது காலமது
தெருமுடிவாய் நிறைவேற்றத் தீர்ப்பதுவாய் ஈந்தனரே!
(பா.299)

என்னும் பாடலில் பன்னிருவர் என்னும் சொல் வருகிறது. ஆசிரியர் மூலநூல் அடிப்படையில் பன்னிருவர் பற்றி அடிக்குறிப்பின் மூலம் விளக்கம் தருகிறார்.

> பன்னிருவர்: நடுவன் நன்மை வெறுப்போனின் ஆலோசனைக்குழு. கபோதி, நலமில்லான், குரோதி, காமி, நெறிகேடன், குறும்புத்தனன், மனமேட்டிமை, விரோதி, பொய்யன், நிட்டூரன், சோதிப்பகை, தீராப்பகை என்பவர்கள் அதன் உறுப்பினர்கள் என்னும் மூலநூல் குறிப்பறிக (ப.294)

என்னும் பகுதியின் மூலம் இம்முறையையும் அதன் பயன்களையும் அறிந்து கொள்ள முறிகிறது. இம்முறை இந்நூலைப் படிப்பவர்களுக்கு மிகுந்த பயனளிக்கும் வகையில் உள்ளது. இதுபோன்ற அடிக்குறிப்புகள் நூல்முழுவதும் ஏராளம் காணப்படுகின்றன. நூலின் சிறப்பிற்கு இதுவும் ஒரு சான்றாகும். இவைபோன்று அடிக்குறிப்புகளின் வாயிலாக விவிலியத்திலிருந்தும் சான்றுகள் தரப்பட்டுள்ளன.

எளிய முறையில் மக்கள் இலக்கியமாக மோட்சப் பயணக் காவியம் அமைந்துள்ளது. இக்காவியத்தின் மற்றொரு சிறப்பினுக்கு ஜான் பனியனை அடியொற்றி எழுதப்பட்டதும் ஒரு காரணமாகும்.

VIII மொழிபெயர்ப்புக் காப்பியம்

30. பூங்காவனப் பிரளயம்

கிறித்தவக் காப்பியங்களுள் மொழிபெயர்ப்பு வடிவில் வெளிவந்த காப்பியம் பூங்காவனப் பிரளயம் என்பதாகும். பூங்காவனப் பிரளயம் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் அவர்களால் முதல் பதிப்பாக 1887ஆம் ஆண்டிலும் இரண்டாவது பதிப்பாக 1978ஆம் ஆண்டு கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் மூலமாகவும் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

மூல நூல்

ஜான் மில்டனால் (John Milton) எழுதப்பட்ட Paradise Lost (சுவர்க்க நீக்கம்), Paradise Regained (சுவர்க்க மீட்சி) ஆகிய நூல்கள் உலகில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். இறைவனால் உண்ணக்கூடாது என்று தடுக்கப் பட்டிருந்த மரத்திலுள்ள கனியைச் சாத்தானின் வஞ்சக வலையில் அகப்பட்டு இறைவனின் கட்டளையை மீறி உண்டனர். அதனால் ஆதாமும் ஏவாளும் சுவர்க்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். இதை விவரிப்பது சுவர்க்க நீக்கம் என்னும் முதல் நூலாகும். இந்நூல் 12 பாகங்களைக் கொண்டது. இந்நூலின் மொத்த அடிகள் 10565 ஆகும். இந்நூல் 1667 ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது. மனிதர்களின் பாவத்தை நீக்கும் பொருட்டு இறைவன் தன் மகனைப் பூமியில் மனிதனாகப் பிறக்கச் செய்தார். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் சாத்தானின் சோதனைக்கு உள்ளாகி, அவனை வென்று, பாவ நிவாரணம் செய்து மனிதர்கள் இழந்திருந்த சுவர்க்க வாழ்வை அவர்களுக்கு மீட்டுக் கொடுத்ததைக் கூறுவது சுவர்க்க மீட்சி என்னும் இரண்டாவது நூலாகும். இந்நூல் நான்கு பாகங்களாலானது. இந்நூலின் மொத்த அடிகள் 2070 ஆகும். இந்நூல் 1671ஆம் ஆண்டு வெளிவந்தது.

வழி நூல்கள்

ஜான் மில்டனின் சுவர்க்க நீக்கம், சுவர்க்க மீட்சி என்னும் இரண்டு நூல்களும் தமிழில் அருள்திரு. அ.வேதக்கண் அவர்களால் ஆதிநந்தாவனப் பிரளயம், ஆதிநந்தாவன மீட்சி

என்னும் கீர்த்தனை நாடக நூல்களாகத் தழுவல் அடிப்படையில் வெளிவந்துள்ளன. சாமுவேல் வேதநாயகம் தாமஸ் Paradise Lost என்னும் முதல் நூலின் முதலிரு காண்டங்களையும் தமிழில் பூங்காவனப் பிரளயம் என மொழிபெயர்த்து 1887ஆம் ஆண்டு வெளியிட்டார். அருள்திரு. யோவான் சாமுவேல் Paradise Lost நூலின் முதல் காண்டத்தை வசன நடையில் பரதீசு உத்தியான நாசம் என்னும் பெயரில் 1880ஆம் ஆண்டு மொழிபெயர்த்தார். இந்நூல் 1895ஆம் ஆண்டு அல்பீனியன் அச்சுக்கூடத்தினால் வெளியிடப்பட்டது. 1895ஆம் ஆண்டு வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் சுவர்க்க நீக்கம் என்னும் பெயரில் முதலிலுள்ள இரு காண்டங்களையும் 241 விருத்தப்பாவிலே பாடி அதற்கு விளக்க உரையும் எழுதியுள்ளார். கதையின் தொடர்பு விட்டுப் போகாத முறையில் செய்யுளில் இடம் பெற்றுள்ள கருத்துகள் வசனப் பகுதியிலும் தொடர்ச்சியாகத் தரப்பட்டுள்ளன. தமிழில் மட்டும் இத்தனை நூல்கள் வெளிவந்துள்ளமை மில்டனின் புலமைக்கும் அவரது நூல்களின் சிறப்பிற்கும் சான்றாக அமைகின்றது.

ஆசிரியர் வரலாறு

பூங்காவனப் பிரளயம் நூலின் ஆசிரியர் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் ஆவார். இவர் 1855ஆம் ஆண்டு மே 17ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மெய்ஞ்ஞானபுரத்தில் பிறந்தார். திருச்சிராப்பள்ளி எஸ்.பி.ஜி. கல்லூரியில் 1874ஆம் ஆண்டு மெட்ரிக்குலேசன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். 1880ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டமும், அதன் பின்னர் ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார். இவர் மன்னார்குடியிலுள்ள இந்து கலாசாலை மற்றும் மன்னார்குடியிலுள்ள வெஸ்லின் கலாசாலையில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மதுரைக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1888ஆம் ஆண்டு மதுரை அமெரிக்கன் கலாசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கப் பட்டார். 1889ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தலைமை ஆசிரியர் பதவியைத் துறந்து, சென்னையிலுள்ள ராயப்பேட்டைக் கல்லூரியின் தலைமைப் பொறுப்பேற்றார். ஆனால் 1890ஆம் ஆண்டு ஜனவரி மாதம் குளிர் சுரம் கண்டு மூச்சுத் திணறலால் காலமானார்.

காப்பிய அமைப்பு

பூங்காவனப் பிரளயம் என்னும் காப்பியம் பாயிரம் நீங்கலாக பாதாள காண்டம், யாத்திரை காண்டம் என்னும் இரு

காண்டங்களை உடையது. இக்காப்பியம் மொத்தம் 2626 அடிகளை உடையது.

பாயிரம்

பாதாள காண்டத்தின் முதலில் அமைந்துள்ள பாயிரத்தில் நூற்பொருள், திருவருள் வணக்கம், நூல்வழி, வேதாளக் கூட்டம் விண்ணிழந்தது என்னும் பகுதிகள் உள்ளன. நூற்பொருள் என்னும் தலைப்பில் 24 அடிகள் உள்ளன. இதில் ஆசிரியர் இறைவனிடம் கவிதை பாட அருள் புரிய வேண்டுகிறார். திருவருள் வணக்கம் என்னும் தலைப்பில் 15 அடிகள் உள்ளன. "நான் சொல்லக் கருதும் கதை முழுவதையும் நீ அறிவாய்; ஆதலின் அதை நான் கூறும்படி, கவித்தேவியினும் விசேடமாக நீ எனக்குத் தெரிவித்தல் வேண்டும். யாதொன்றும் தோன்றியிராத காலந்தொட்டுப் பேதம் அடையாமல் நீ இருக்கிறாய். அடைகாக்கும் புறா தனது முட்டையின் மேல் சிறகு வைத்திருக்குமாப்போல அகண்ட பாதாளத்தின் மேல் அற்புதமான உனது சிறகுகளை விரித்திருந்து அதிலே உயிர்கள் தோன்றும்படி செய்தாய். இறைவனது திருவுளச் செயல்களையும் மனிதர் திறத்தில் அவன் செலுத்தும் நீதியையும் பராமரிப்பையும் நான் கூறும் சிறந்த கதையின் மகத்துவத்துக்குத் தகுதியாக மெய்ப்பிக்கும்படி, எனது மனத்தின் இருளைப் போக்கி, விளங்காததை விளங்கச் செய்வாய்; தளர்வுற்றுத் தாளாதபடி எனது மனோ சக்திகளைக் காப்பாய்" என இப்பகுதியில் ஆசிரியர் வேண்டுகிறார்.

நூல் வழி என்னும் தலைப்பில் 14 அடிகள் இடம்பெற்றுள்ளன. பாம்பின் உருவெடுத்த சாத்தான், தன் அகந்தைக் காரணமாக பரமண்டலத்திலிருந்து துரத்தப்பட்டு வாழ்ந்து வருகிறான். அப்போது ஆதாம், ஏவாளின் ஆனந்த வாழ்வைக் கண்டு பொறாமை கொண்டு ஏவாளை வஞ்சித்தான் என்னும் செய்தி இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வேதாளக் கூட்டம் விண்ணிழந்தது என்னும் பகுதி 14 அடிகளைக் கொண்டது. கடவுளுடைய சிங்காசனத்திலும் அவருடைய ஆட்சியிலும் விருப்பம் கொண்ட சாத்தான், இறைவனுக்கு எதிராகப் போர் செய்தான். இறைவன் சாத்தானை அடியற்ற பாதாளத்தில் முடிவற்ற துன்பம் அடைந்து அக்கினிச் சிறையிலே முறியாத விலங்கு பூண்டு கிடக்கும்படியாக,

இடிகளால் தாக்கி பரமண்டலத்திலிருந்து தலைகீழாய் பயங்கர வேகத்தோடு விழ வீசி எறிந்தார் என்பது இப்பகுதியிலுள்ள செய்தியாகும்.

பாதாள காண்டம்

பாதாள காண்டம் என்னும் பகுதியின் தொடக்கத்தில் நூற்பொருள், திருவருள் வணக்கம், நூல்வழி, வேதாளக் கூட்டம் விண்ணிழந்தது என்னும் தலைப்புகள் இடம் பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து இக்காண்டமானது நரகப் படலம், சாத்தான் எழுச்சிப் படலம், நரக வாழ்த்துப் படலம், சாத்தான் படையெழுப்பும் படலம், படை எழுச்சிப் படலம், நாமப் படலம், அணிவகுத்த படலம், அரண்மனை கட்டும் படலம், பறைசாற்றுப் படலம் என்னும் ஒன்பது படலங்களை உடையது. இக்காண்டத்தில் இடம்பெற்றுள்ள அடிகளின் எண்ணிக்கை 1047 ஆகும்.

யாத்திரை காண்டம்

யாத்திரை காண்டத்தில் மந்திரப் படலம் என்னும் ஒரு படலம் மட்டுமே இடம்பெற்றுள்ளது. ஆனால் 28 உட்தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. ஒரு காண்டத்தில் ஒரு படலத்தின் பெயரை மட்டும் சுட்டியிருப்பதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. இக்காண்டத்தில் இடம்பெற்றுள்ள அடிகளின் மொத்த எண்ணிக்கை 1579 ஆகும்.

பாதாள காண்டம் - கதைச் சுருக்கம்

பேய்களின் தலைவனாகிய சாத்தானும் அவனுடைய தூதர்களும் வானுலகில் இருக்கும் போது இறைவனுக்குச் சமமாக இருக்க வேண்டும் என விரும்பினர். ஆதலால் அகந்தை கொண்டு கலகம் விளைவித்தனர். இறைவன் அவர்களை நரக பாதாளத்தில் வீழ்த்தினார். நரகத்தில் சாத்தான் தன் அருகில் தீயுளையில் நெளிந்து கொண்டிருந்த பேயல் செபுலை எழுப்பி, தங்களுக்கு வந்த துன்பத்தை பகிர்ந்து கொண்டான். பின்னர் சாத்தான் தலைமைப் பேய்காளகிய மோளோக், காமோஸ், தம்முஸ், தாகோன், ரிம்மோன், பேலியாள் மற்றும் பிற பேய்களை அழைத்து தைரியத்தை ஊட்டினான். சாத்தான் தன்னுடைய சருவபேய்புரம் என்னும் பட்டணத்தில் மம்மோன் என்னும் பேய் சிற்பாசிரியர் கட்டிய மண்டபத்தில் அனைத்துப் பேய்களுடனும் ஆலோசனை செய்தான்.

யாத்திரை காண்டம் - கதைச் சுருக்கம்

அப்போது மோளோக் என்னும் பேய் பரமண்டலத்தைச் சிதறடிக்கச் செய்து விண்ணுலகத்தைக் கைப்பற்ற வேண்டும் அல்லது சர்வ வல்லவராகிய இறைவனுக்குக் கோபமூட்டி அவர் நம்மை அழித்துவிட வேண்டும். இவ்விரண்டும் நடைபெறாத போது பரலோகத்தின் மேல் படையெடுத்துப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றான். உடனே பேலியாள் என்னும் சிற்றின்பப் பேய் எழுந்து இறைவனை எதிர்ப்பது கூடாத காரியம். அவருக்கு இன்னமும் கோபமூட்டினால் நம்மைச் சித்திரவதை செய்வார். எனவே இருக்கிற இடத்தில் சும்மா இருப்பதே நல்லது எனக் கூறினான்.

உடனே மம்மோன் என்னும் பேய் பாதாளத்தைப் பரலோகமாக மாற்றி மகிழ்ச்சியுடன் இங்கு இருக்கலாம் என்றது. உடனே பேயல்செபுல் என்னும் இரண்டாவது பேய்த்தலைவன் பரலோகத்தை வெற்றி பெறுவதும் முடியாத செயல்; அதுபோல் நரகத்திலே இருப்பதும் முடியாத காரியம். எனவே, மண்ணுலகிற்குச் சென்று மக்களைக் கெடுத்து அவர்களை நமது பக்கத்தில் சேர்த்துக் கொண்டால் மண்ணுலகில் வாழ்வது நமக்கு எளிதாக இருக்கும் எனச் சொல்ல அனைவரும் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். மண்ணுலகிற்கு யார் செல்வது என விவாதிக்கும்போது சாத்தான் நான் செல்கிறேன் எனப் புறப்படுகிறான்.

அப்போது நரக வாசலைக் காணாமல் நீண்ட நேரம் தவித்தான். இறுதியில் நரக வாசலை அடைந்த போது அங்கு காவல் நின்ற பாவி என்ற தேவியையும், அவள் மகன் மரண மகாராஜனையும் அவனுடைய பரிவாரப் படைகளாய் நின்ற நரக நாய்களையும் பாதாள மீளிகளையும் மீறி நரக வாயிலிருந்து வெளியேறினான். பின்னர் பூமியின் அரசனாகிய இருளப்ப சிங்கருடைய உதவியால் அண்ட கோளத்தின் கடைகோடி முனைக்கு வழி கேட்டுச் சென்றான். பின்னர் சூரிய கதிர் பட்டும் படாமலும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பூமியைச் சாத்தான் பார்த்தான்.

பெயர்க் காரணம்

ஜான் மில்டன் தமது காப்பியத்திற்கு Paradise Lost எனப் பெயரிட்டார். இதைத் தமிழில் சுவர்க்க இழப்பு அல்லது சுவர்க்க

நீக்கம் எனப் பொருள் கொள்ளலாம். ஆனால் இதிலிருந்து மாறுபட்டு சாமுவேல் வேதநாயகம் தாமஸ் பூங்காவனப் பிரளயம் என மொழிபெயர்த்துள்ளார். ஏதேன் தோட்டம் (பூங்காவனம்) சுவர்க்கமாகக் காட்சியளித்தது. இந்த பூங்காவனத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த ஆதாம் ஏவாளின் மனதில் பிரளயம் போல் நிகழ்ந்த அதி கோரமான மாறுபாடுகளைக் கருதி, சாமுவேல் வேதநாயகம் தாமஸ் இக்காப்பியத்திற்கு பூங்காவனப் பிரளயம் எனப் பெயர் வைத்துள்ளார் போலும்.

மொழிபெயர்ப்புக் காப்பியம்

மொழிபெயர்ப்பு என்பது தங்கத்தைப் பித்தளையாக மாற்றுவதைப் போன்றதாகும் என்பர். கிறித்தவக் காப்பியங்களிலே இது ஒன்று தான் மொழிபெயர்ப்புக் காப்பியமாகத் திகழ்கின்றது. தழுவல் முறையில் இக்காப்பியத்தினைப் படைத்தால் மில்டனின் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துவதில் முழுமை இருக்காது என்னும் எண்ணம் இருந்தமையாலும், மில்டனின் காப்பியத்தைத் தமிழில் மக்கள் படிக்க வேண்டும் என்னும் அவாவினாலும் சாமுவேல் வேதநாயகம் இக்காப்பியத்தை மொழிபெயர்த்துள்ளார் எனலாம். ஆங்கிலக் கவிதையைத் தமிழில் மொழிபெயர்ப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. எனினும் ஆசிரியர் எவ்விதமான மாற்றமும் இல்லாமல் மில்டனின் உணர்வுகளை மனதில் கொண்டு இக்காப்பியத்தை மொழிபெயர்த்துள்ளார். சான்றாக ஜான் மில்டன் பாடிய,

Is this the region, this the soil, the clime,
Said then the lost archangel, this the seat
That we must change for heaven, this mournful gloom
For that celestial light? Be it so, since he
Who now is sovereign can dispose and bid
What shall be right: furthest from him is best
Whom reason hath equalled, force hath made supreme
Above his equals. Farewell happy fields
Where joy for ever dwells: hail horrors, hail
Infernal world, and thou profoundest hell
Receive thy new possessor: one who brings
A mind not to be changed by place or time.

The mind is its own place, and in itself
Can make a heaven of hell, a hell of heaven.
What mattere where, if I be still the same,
And what I should be, all but less than he
Whom thunder hath made greater? Here at least
We shall be free; the almighty hath not built
Here for his envy, will not drive us hence:
Here we may reign secure, and in my choice
To reign is worth ambition though in hell:
Better to reign in hell, than serve in heaven.
But wherefore let we then our faithful friends,
The associates and copartners of our loss
Lie thus astonished on the oblivious pool,
And call them not to share with us their part
In this unhappy mansion, or once more
With railled arms to try what may be yet
Regained in heaven, or what more lost in hell?
(John Milton, Paradise Lost, Book I, Lines 242-270)

என்னும் அடிகளை, சாமுவேல் வேதநாயகம் தாமஸ் அவர்கள்,

இந்நாடோ இப்புலமோ யாம் வான் கொடுத்து வாங்குமிடம்?
இவ்வழுகைப் புதையிருளோ இன்னொளிக்கு மாறொளியாம்?
இருக்கட்டும், என் செயலாம்? இற்றை ராஜன் நன்றெனவே
செய்யும் சட்டமெல்லாம் செல்வது திட்டந்தானே.
புத்தி சமமாக்கியும் போர்ப்பலத்தால் பெரியோனாய்
அனைவருக்கும் மேலாக ஆதிக்கம்கொள் வோனைவிட்டு
தூரா தொலையிலே தொலைதலே மிகநன்றாம்.
வந்தனம் ஆனந்த மண்டலங்காள் வந்தனம்!
சந்ததமும் மகிழுறையும் சதாநந்தமே வந்தனம்!
வாழ்க பயங்களே வாழ்கநீ பயங்கரமே!
வாழ்க பாதாள மண்டலமே வாழ்கநீ!
வாறேன் உன்நவ அரசன் வரம்பிறந்த ஆழமே!
பெற்றுக் கொள் உன் மன்னவனைப் பெருநரகப் பள்ளமே!
காலஇட பேதமாற்றா கன்மனத்தோன் உன்கோன் நான்.

மனத்தின் நிலையேதான் மனமிருக்கும் இடமேயாம்
நரகமதில் சுவர்க்கமாம் நரகமாம் சுவர்க்கமுமே,
மாறாது நானிருப்பின் மற்றெங்கே இருந்தாலென்?
எங்கிருந்தால் ஆவதென்ன என்னவிதம் இருந்து ஆவதென்ன
இடியால் பெரியோனில் ஏதோசற்று சிறியோனே
இவ்விடத்திலாயினும் இஷ்டம்போல் வாழ்ந்திடலாம்
இதில் நம்மேல் பொறாமைகூர இறைவன் இதை
வகுத்ததில்லை

இங்கிருந்து நம்மை விரட்டான், இடரற்று இங்கு ஆளலாம்
என் கருத்தைக் கேட்பாயோ எரிநரகக் கடல் இதிலும்
அரசாளும் மாட்சிமை ஆசிக்கத் தகுந்ததேயாம்
வானுலகில் சேவைசெய்து வாழ்வதிலும் அரசுபூண்டு
பட்டும் கெட்டும் நரகில் பட்டம்கட்டி ஆளல்நன்று.

(பாதாள காண்டம், அடி. 290-315)

என மொழிபெயர்த்துள்ளார். இப்பகுதி அவரது மொழிபெயர்ப்புத் திறனுக்கு ஒரு சிறந்த சான்றாக அமைகிறது.

கவிதை நடை

மொழிபெயர்ப்பில், மொழிபெயர்ப்பு ஆசிரியரின் கவிதை நடையைக் காணுதல் இயலாது. இக்காப்பியத்தில் ஆசிரியர் கையாண்டுள்ள கவிதை நடையானது எதுகை இல்லாமல் வெண் செந்துறை யாப்பில் அமைந்ததாகும். எளிமையான இம்மொழிபெயர்ப்பு நடையில் சொற்சுவையும் பொருட்சுவையும் கலந்துள்ளது. எதுகை அமைதி காப்பியங்களுக்குத் தேவையில்லை என்பது சாமுவேல் வேதநாயகம் தாமஸின் கருத்தாகும்.

உவமைகள்

கவிஞரின் புலமையை அவர் பயன்படுத்தியுள்ள உவமைகளின் வாயிலாக அறியமுடிகிறது. உவமையைச் சிறப்பாகத் தம் கவிதைகளில் பயன்படுத்தும் மேல்நாட்டுக் கவிஞர்களுள் முதல் இடம் ஹோமருக்கும் இரண்டாவது இடம் ஜான் மில்டனுக்கும் உரியது. இவர்கள் பயன்படுத்தியுள்ள உவமைகள் Homeric Style என்றும் Miltonic Style என்றும் புகழப்படுகின்றன. ஜான் மில்டன் பயன்படுத்திய உவமைகளையே சாமுவேல் வேதநாயகம் தாமஸ் அவர்களும் மொழிபெயர்ப்பின் அடிப்படையில் பெயர்த்துள்ளார். சான்றாக,

கொதித்துருகி நிற்கின்ற குகைநின்று ஒடுதங்கம்
என்னமட மாற்றாலோ இடையிலாமல் எங்கும்பாய
மடைதிருப்பி நிரப்பிவைத்தார்; வகையையும் கேட்டாலோ
கின்னரத்தில் ஒர்விசையில் கிளம்புகின்ற இசைவாயு
வரிகுழல்கள் வழிபாய்ந்து வத்திக்கும் நாதம்போலும்

(பாதாள காண்டம், அடி. 912-916)

எனப் பாடுகிறார். இப்பகுதியில் சுரமண்டலம் என்னும் துருத்தி போன்ற வாத்தியத்திலே ஒரு தடவை ஊதிய காற்று, அதன் தொனிவிருத்தி உறுப்பானது பல வரிசைகளாய் உள்ள இசைக்குழல்களிலே பரவச் செய்வது போல, உருக்கிய உலோகத்தை ஆச்சரியமாகவும் தந்திரமாகவும் பலவகை அச்சுகளிலே செலுத்தினான் என மில்டனை அடியொற்றி சாமுவேல் வேதநாயகம் தாமஸ் குறிப்பிடுகிறார். இதைப் போன்று,

> **இடப வீதிமார்க்கமாக இயங்க அரக்கன் ஏறுகின்ற**
> **வசந்தருது காலத்தில் வண்டுகள் கூண்டின் அண்டை**
> **குப்பங் குப்பமாகக் குஞ்சுகளைப் பொறித்துத் தள்ளி**
> **நாள் மலர்ந்த பனிப்பூவை நாடியிங்கு அங்குமோடி**
> **தாளாலும் துரும்பாலும் சமைத்ததம் அருநகரின்**
> **சுற்றுப்பட்டியாக நிற்கும் சுள்ளிக் கொம்பில் உட்கார்ந்து**
> **நவமதுத் தேனாடி நாட்டு வர்த்த மானங்களை**
> **விஸ்தரித்து நடந்து விளம்புகின்ற தன்மைபோல்**
>
> **(பாதாள காண்டம், அடி. 1005-1012)**

என்னும் பகுதியில் இடபராசியிலே சூரியன் சஞ்சரிக்கும் வசந்த காலத்தில் தேனீக்கள் தங்கள் குஞ்சுக் கூட்டங்களை தேன்கூட்டைச் சுற்றியும் உலாவும்படி திரள் திரளாக வெளியே செல்லவிட, அக்குஞ்சுகள் புதுப் பனி தங்கிய புல்லிலும் பூவிலும் மாறி மாறித் திரிந்து தேன் நாடுவது போல, ஆகாச வாசிகளாகிய தேவதூதர்கள் தங்கள் இரகசியங்களைக் கூடிப் பேசுகிறவர்களாய் நெருக்கமாய் மொய்த்து நின்றனர் எனப் பாடுகிறார். இதுபோன்ற பல உவமைகள் காப்பியத்தில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

வருணனை

ஜான் மில்டனின் வருணனைகளை சாமுவேல் வேதநாயகம் தாமஸ் அப்படியே மொழிபெயர்த்துள்ளார். இக்காப்பியத்தில் சாத்தான் மற்றும் பிற பேய்களின் வருணனையையே அதிகமாகக் காணமுடிகிறது. சாத்தான் நின்ற தரையைப் பின்வருமாறு வருணிக்கிறார்:

> **நிறத்தில் அத்தரையோ நிலம் நின்று பூகம்பம்**
> **கிளப்ப் பெலொரஸ் நின்று கிழிந்தோடும் குன்றுபோலும்,**
> **இடியிடிக்கும் எட்னாவின் இடுப்பொடிந்த பாரிசத்தில்**
> **குடர்க்குள் தீக்குஉணவாய்க் கொதிக்கின்ற தாதுவர்க்கம்**

குப்பென்று தீப்பிடிக்கக் குபீரென்று மேல்எழுந்து
பூவசைவோடு இசைந்து அதிர்ந்து புகைக்காடாய் எங்கும்
மண்ட
தீகக்கி அடிகருக்கி திசைநாறும் திட்டைபோலும்
அவ்வித ஆறும்இடம் அடைந்ததம்மா பாவியடி
(பாதாள காண்டம், அடி. 277-284)

சாத்தான் நின்ற தரையானது, காற்று வேகத்தால் பிலோரசினின்று ஒரு சிகரம் பறிபட்டபோது, பறிபட்ட பாகம் தோன்றும் தோற்றத்தை ஒத்திருந்தது. மேலும், இடிபோல முழங்கும் எரிமலை ஆகிய எத்தினா என்னும் மலையின் ஒரு சிகரம் காற்று விசையால் பறிபட, அம்மலையின் தீப்பற்றும் தன்மையுடைய குடல்கள் அவ்விசையினால் தீப்பற்றி எரிந்து எழுப்பும் தாதுப் பொருள்களின் வேகத்தால் அக்காற்று அதிவேகம் கொண்டு அந்த எத்தினா மலையின் தகருண்ட பக்கத்தில் எஞ்சியிருக்கும் கந்தகம் நாறிக் கருகிய அடிப்பாகத்தை ஒத்திருந்தது. இந்த இடமே இறைவனின் அருள்பெறாதவனுடைய பாதங்கள் இளைப்பாறும்படித் தேடிக் கண்டுபிடித்த இடமாகும் என்று வருணிக்கிறார்.

அடுத்து, சாத்தானின் உடலை வருணிக்கும் திறம் புதுமையாக உள்ளது. ஜூப்பிட்டரோடு (Jupiter) போர் செய்த பூதேவி புத்திரர் ஆகிய டயிட்டன் (Titan), பூர்வீகமான தர்சுஸ் (Tarsus) நகருக்கு அருகே உள்ள குகையில் வாழ்ந்த தைப்பான் (Typhon) ஆகிய இவர்களை உடலின் தோற்றத்தில் ஒத்திருந்தான். மேலும் வலிமை உடைய லெவியதன் (Leviathan) என்னும் கடல் பிராணியையும் ஒத்திருந்தான். இது குறித்துக் கடற் பிரயாணிகள் சொல்லும் கதை: நார்வேக் கடலிலே இது உறங்கும் போது, இரவு வர இருள் சூழ்ந்ததால், பிரயாணம் செய்ய முடியாத கப்பல் மாலுமிகள் இதை ஒரு தீவு என்று நினைத்து, இதன் செதில் செறிந்த உடலின் ஒரு பக்கம் காற்றுக்கு ஒதுக்கமாக நங்கூரம் போட்டு, எப்போது விடியும் என்று உதயகாலம் வரைத் தூங்குவார்களாம். இக்கடற்பிராணி கிடந்ததைப் போலவே சாத்தான் தனது பிரம்மாண்டமான நீண்ட உடலோடு விலங்கு பூட்டப்பட்டு, அழல் கடல் மேலே கிடந்தான் என்னும் வருணனை குறிப்பிடத்தக்கது.

காப்பிய மாந்தர்கள்

பூங்காவனப் பிரளயம் என்னும் காப்பியத்தில் சாத்தான், பேயல்செபுல், மோளோக், காமோஸ், அஸ்தரோத், தம்முஸ்,

தாகோன், ரிம்மோன், பேலியாள், மம்மோன் என்னும் பேய்கள் படைக்கப்பட்டுள்ளனர். எனினும் இறைவன் இக்காப்பியத்தின் தலைவராக விளங்குகிறார். இறைவன் எங்கும் இருப்பார்; கண்களுக்குப் புலப்படமாட்டார் என்பதைப் போன்று இக்காப்பியம் முழுவதும் இறைவன் இருக்கிறார். இறைவனை மையமாகக் கொண்டே இக்காப்பியம் வளர்கிறது. இறைவன் மீதுள்ள கோபத்தினால் தான் சாத்தான் மற்றும் பிற பேய்கள் சதியாலோசனை செய்கின்றனர்.

சாத்தானுக்கு அடுத்த நிலையிலுள்ளவன் பெயல்செபு என்பவன். மோளோக் பயங்கரமானவன்; நரபலியைப் பெரிதும் விரும்புபவன். மோவாபி என்பவன் கந்தக மக்களால் பயபக்தியோடு காமோஸ் வழிபடப்பட்டு வந்தவன். அஸ்தரோத் என்பவள் பிறை போலும் உருவம் கொண்ட கொம்புகளை உடையவள். இவளை வான் அரசி என்றும் அழைப்பர். தம்முஸ் என்பவன் லிபனோன் மலையிலே காட்டுப் பன்றியால் கொல்லப்பட்ட காமதேவதை. தாகோன் என்பவன் மேற்பாகம் மனித உருவமும் கீழ்ப்பாகம் மச்ச உருவமும் உள்ள கடல் தெய்வம். ரிம்மோன் என்பவன் ஆபனா, பர்பார் என்னும் நதிக்கரையில் உள்ள தமஸ்கு நகரைத் தனக்கு இடமாகக் கொண்டவன். பேலியாள் மோக விகாரமுள்ளவன். இவர்கள் அனைவரும் காப்பிய மாந்தர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இவர்கள் மனிதர்கள் அல்லர்; பேய்கள்.

முழுமையுறா காப்பியமா?

பூங்காவனப் பிரளயம் முழுமையான காப்பியமா? அல்லது முழுமையுறா காப்பியமா? என்பது குறித்து திடமான முடிவுக்கு வரஇயலவில்லை. இதற்கான காரணங்கள் பல. மில்டனின் முதல் நூல் 12 பகுதிகளை (காண்டங்கள்) உடையது. ஆனால் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் மொழிபெயர்த்துள்ள காப்பியத்தில் முதல் இரண்டு காண்டங்கள் மட்டுமே உள்ளன. இது எதனால் என்பது சிந்திக்க வேண்டியுள்ளது.

பூங்காவனப் பிரளயம் 1887ஆம் ஆண்டு ஆசிரியரால் வெளியிடப்பட்டது. நூலின் ஆசிரியரான சாமுவேல் வேதநாயகம் தாமஸ் தமது 35 ஆவது வயதில் 1890 ஆம் ஆண்டு உடல் சுகவீனத்தால் காலமானார். ஆசிரியர் இளம் வயதிலேயே காலமானதால் இக்காப்பியத்தை முழுமையாக முடிக்கவில்லை என்று எண்ணுவதற்கு இடம் உள்ளது. ஆசிரியரே

பூங்காவனப்பிரளயத்தை தாம் காலமாவதற்கும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1887ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். பிற காண்டங்களைப் பின்னர் வெளியிடலாம் என நினைத்திருக்கலாம். ஆனால் அதற்குள் காலமாகிவிட்டார். மில்டனின் முதல் நூலை முழுமையாக வெளியிட வேண்டும் என்பது தான் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் அவர்களின் எண்ணம். இதற்குத் தக்க சான்றாக இருப்பது நூலின் தலைப்பான பூங்காவனப் பிரளயம் என்பதாகும். முதல் இரு காண்டங்களிலும் ஏதேன் தோட்டமான பூங்காவனத்தைப் பற்றிய எவ்வித குறிப்பும் கிடையாது. அப்படியிருக்க பூங்காவனப் பிரளயம் என்னும் பெயரினை நூலுக்குச் சூட்டியதற்கானக் காரணம், மில்டனின் முதல் நூலான Paradise Lost முழுவதையும் மொழிபெயர்க்க வேண்டும் என்பது தான். ஆனால் காலம் அதற்கு உறுதுணையாக இருக்கவில்லை.

மேலும் இதை வேறுவிதமாகவும் நினைத்துப் பார்க்கலாம். மில்டனின் முதல் நூலிலுள்ள முதல் இரண்டு பாகங்களிலுள்ள செய்திகள் வேறு நூல்களில் இல்லாததால் மக்கள் இவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்திலும் இரண்டு காண்டங்களை மட்டும் மொழிபெயர்த் திருக்கலாம். அல்லது முழுமையாக மொழிபெயர்க்க வேண்டும் என்னும் எண்ணத்தில் மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கியிருக்கலாம். ஆனால் இரண்டு காண்டங்களை மொழிபெயர்த்தவுடன் இரண்டு காண்டங்களும் சிறப்பாக உள்ளதால் தன் எண்ணத்தை மாற்றியிருக்கலாம்.

எனினும் தமிழ்க் கிறித்தவ இலக்கிய உலகிற்கு, காப்பிய வடிவில் மில்டனின் முதல் நூலின் இரண்டு பகுதிகளும் கிடைத்தது மகிழ்ச்சியான வரவு என்பதில் ஐயமில்லை. மில்டனின் Paradise Lost மற்றும் Paradise Regained என்னும் இரண்டு நூல்களும் மொழிபெயர்க்கப் பட்டிருந்தால் தமிழ்க் கிறித்தவ இலக்கியத்திற்கு சிறந்ததொரு அணிகலனாக விளங்கியிருக்கும். கிறித்தவக் காப்பிய வரிசையில் இடம்பெற்றுள்ள மொழிபெயர்ப்புக் காப்பியம் இது ஒன்றேயாகும். ஆனால் பூங்காவனப் பிரளயம் என்னும் காப்பியம் இலங்கையிலிருந்து வெளியான திருவாக்குப் புராணம் போன்று முழுமையடையவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகி விட்டது.

IX கிறித்தவக் காப்பியங்களின் தனித்தன்மைகள்

கிறித்தவ இலக்கியத்தின் சிறப்புறு வகைமையான காப்பியம் காலந்தோறும் படைக்கப்பட்டு வளர்ந்து கொண்டே வருகின்றது. வீரமாமுனிவரால் காலடியெடுத்து வைக்கப்பட்டு பலராலும் வெற்றி நடை போட்டு வரும் இவ்விலக்கிய வகையானது இன்று புது வளர்ச்சி பெற்று புதுச் சாயலாய்ப் பரிணமித்துள்ளது. நவீன காலத்தில் புதுக்கவிதை வளர்ச்சி பெற்றிருந்தாலும், இன்றும் மரபிலக்கியக் காப்பியங்கள் வெளிவந்து கொண்டிருப்பது கிறித்தவக் காப்பியங்களின் தனித்தன்மைக்குச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். பல்வேறு சிறப்புகளைக் கொண்டதாகக் கிறித்தவக் காப்பியங்கள் படைக்கப்பட்டாலும் எல்லாவற்றிற்கும் அடிப்படை விவிலியம் என்பது குறிப்பிடத்தக்கது. விவிலியப் புலமையும் இலக்கணப் புலமையும் காப்பியப் புலமையும் இறைவனின் அருளும் கலக்கும்போது கிறித்தவக் காப்பியம் பிறக்கிறது எனலாம்.

வீரமாமுனிவரைத் தொடர்ந்து கிறித்தவ இலக்கியங்கள் படைத்தவர்களுள் அதிகமானவர்கள் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்களே. இலங்கைக் கிறித்தவர்களும் அதற்கடுத்த நிலையில் அமெரிக்கன் திருச்சபையைச் சார்ந்தவர்களும் கிறித்தவ இலக்கியத்திற்குத் தங்கள் பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். தமிழ் நாட்டைச் சார்ந்தவர்களுள் தொடக்க நிலையில் குறிப்பிடத்தக்கவர் வேதநாயகம் சாஸ்திரியார் ஆவார். இவரது படைப்புகள் கீர்த்தனைகள் மற்றும் சிற்றிலக்கியங்களாகும். இவர் காப்பியம் படைத்திருந்தால் அது கிறித்தவ இலக்கியத்திற்கு மேலும் பெருமை சேர்த்திருக்கும் எனலாம். எனினும், இவருடைய படைப்புகளைப் பற்றி இன்னும் கிறித்தவர்கள் பெருமையுடன் பேசிக் கொள்வதும் இவரது கீர்த்தனைகளை உற்சாகத்துடன் பாடிக் கொள்வதும் சாஸ்திரியாரின் படைப்புத் திறனுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

கிறித்தவக் காப்பியங்கள் பலவற்றிற்கு மேலைநாட்டு இலக்கியங்களே அடிப்படையாக இருந்துள்ளன. குறிப்பாக கிறித்தவ இலக்கியத்தின் இரு கண்களாகப் போற்றப்படும் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் என்னும் இரு காப்பியங்களும் முறையே கடவுளின் நகரம், பில்கிரிம்ஸ் புராகிரஸ் என்னும் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டன என்பது அனைவரும் அறிந்ததே. பூங்காவனப் பிரளயம் என்னும் காப்பியம் ஆங்கில மொழியில் ஜான் மில்டனால் எழுதப்பட்ட Paradise Lost என்னும் நூலின் முதலிரு பாகங்களின் மொழிபெயர்ப்பாகும். கத்தோலிக்கப் படைப்பாளர்கள் கத்தோலிக்கத் திருச்சபையினரின் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டும், சீர்திருத்தச் சபையினர் பயன்படுத்தும் விவிலியத்தை ஆதாரமாகக் கொண்டு சீர்திருத்தச் சபையினரும் கிறித்தவ இலக்கியங்களைப் படைத்து வருகின்றனர். அப்படைப்பாளர்கள் அனைவரும் தமிழ் இலக்கியங்களில் சிறப்பான புலமை உடையவர்கள் என்பதை அவர்களது படைப்புகள் வெளிக்காட்டுகின்றன.

கிறித்தவக் காப்பியங்களில் நாட்டுப் படலம் மற்றும் நகரப்படலம் மிகக் குறைவான காப்பியங்களிலேயே இடம்பெற்றுள்ளன. குறிப்பாக தேம்பாவணி, பவுலடியார் பாவியம், அர்ச். சவேரியார் காவியம், ஞானாதிக்கராயர் காப்பியம், திருச்செல்வர் காவியம், திருத்தொண்டர் காப்பியம் ஆகிய காப்பியங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. இவ்விரண்டு படலங்களில் வருணனை காப்பிய ஆசிரியர்களால் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது. இரட்சணிய யாத்திரிகத்தில் நாட்டுப் படலம், நகரப் படலம் எனத் தனித்தனியாகப் படலங்கள் அமைக்காமல் ஆதிபருவத்தில் இடம்பெற்றுள்ள பரமராஜ்யப் படலத்திலுள்ள 66 பாடல்களிலும் நாட்டு வருணனை, நகர வருணனையைச் சிறப்பாக அமைத்துள்ளார். கிறித்தவக் காப்பியங்களில் நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகியவற்றில் வருணனைகள் இயல்பாக உள்ளன.

காப்பிய ஆசிரியர்கள் இயேசு கிறிஸ்துவின் வாழ்வைக் காப்பிய வடிவில் கொடுக்க விழைந்ததின் காரணமாக, அவர்கள் கற்பனையை அதிகமாகக் கலக்க விரும்பவில்லை. சான்றாக கிறிஸ்தாயனம், திருஅவதாரம், கிறிஸ்து மான்மியம், சுவிசேட புராணம், இயேசு புராணம், நசரேய புராணம் போன்ற

காப்பியங்களில் வருணனையைக் காணஇயலாது. இக்காப்பிய ஆசிரியர்கள் கற்பனையைக் கலந்தால் இயேசு பெருமானின் வாழ்வைக் கூறும் மைய நோக்கத்திலிருந்து காப்பியம் தடம் மாறிவிடும் என எண்ணியிருக்கலாம்.

காப்பியங்களில் காண்டம், படலம் என்னும் பகுப்புமுறை பின்பற்றப்பட்டுள்ள முறை குறிப்பிடத்தக்கது. இரட்சணிய யாத்திரிகம், இயேசு புராணம் என்னும் காப்பியங்களில் காண்டம் என்பதற்குப் பதிலாகப் பருவம் என்னும் சொல் பின்பற்றப்பட்டுள்ளது. மீட்பதிகாரம், அருளவதாரம் என்னும் காப்பியங்களில் சிலப்பதிகாரத்தைப் போன்று காண்டங்கள் காதைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. இயேசு புராணத்தில் பருவம் சுருக்கங்களாகவும், சுருக்கம் படலங்களாகவும், படலங்கள் அடங்கன்களாகவும் பகுக்கப்பட்டுள்ளன. அருட் காவியத்தில் காண்டமானது சாரல் என்னும் பகுப்புகளால் ஆனது. கிறித்தவக் காப்பியங்களில் இயேசு புராணத்தில் அடங்கன் என்னும் பகுப்புமுறையும் அருட்காவியத்தில் சாரல் என்னும் பகுப்பு முறையும், சுவிசேட புராணத்தில் மூர்த்தி என்னும் பகுப்பு முறையும் பின்பற்றப்பட்டுள்ளமை புதிய முறையாகக் காணப்படுகிறது. சில காப்பியங்கள் காண்டம் என்னும் பகுப்புமுறையின்றி படலம் என்னும் பகுப்புமுறையில் மட்டும் அமைந்துள்ளன. ஆதியாகம காவியத்தில் காண்டம் என்பதற்குப் பதிலாகப் பாகம் என்னும் முறை பின்பற்றப்பட்டுள்ளது.

வீரமாமுனிவர் தொடங்கி சாமிமுத்து வரையுள்ள காப்பியக் கவிஞர்கள் தமிழ் இலக்கியங்களில் நல்ல புலமை மிக்கவர்களாக விளங்கினர் என்பதை அவர்களது படைப்புகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யபிரபந்தம், திருவருட்பா ஆகிய நூல்களில் மிக்க புலமை உடையவர்களாக விளங்கினர். தேம்பாவணியிலும் இரட்சணிய யாத்திரிகத்திலும் கம்பராமாயணத்தின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகிறது. இரட்சணிய யாத்திரிகத்தில் சுமார் எழுபது இடங்களிலும் திருத்தொண்டர் காப்பியத்தில் சுமார் தொண்ணூற்றைந்து இடங்களிலும் திருக்குறளின் தாக்கம் உள்ளது.

தேம்பாவணியில் சில இடங்களிலும் இரட்சணிய யாத்திரிகத்தில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இடங்களிலும் திருத்தொண்டர் காப்பியத்தில் இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்ட இடங்களிலும் பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. பிற கிறித்தவக் காப்பியங்களில் பழமொழிகளைப் பயன்படுத்தியிருப்பது மிகக் குறைவாகவே உள்ளது. காப்பிய ஆசிரியர்கள் பழமொழிகளைப் போன்று உவமைகளையும் அதிகமாகக் கையாண்டுள்ளனர். திருத்தொண்டர் காப்பியத்தில் சூ.இன்னாசி ஏறத்தாழ 2000 உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

காப்பியங்களில் கிளைக்கதைகள் இடம்பெறுவது காப்பியத்தின் தனிச் சிறப்பாகும். தேம்பாவணி, ஞானாதிக்கராயர் காப்பியம், திருச்செல்வர் காவியம், திருத்தொண்டர் காப்பியம் ஆகியவற்றில் கிளைக்கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கிளைக் கதைகள் காப்பிய வளர்ச்சிக்குப் பெரிதும் பயனளிப்பன. தேம்பாவணியைத் தவிர்த்துள்ள பிற காப்பியங்களில் இயேசு கிறிஸ்துவின் வரலாறு கிளைக்கதையாக இடம்பெற்றுள்ளது. ஆனால் தேம்பாவணியில் மட்டும் பழைய ஏற்பாட்டிலுள்ள மோயீசன் கதை, சேதையோன் கதை, ஆணரன் கதை, சஞ்சோன் கதை ஆகியன கிளைக்கதைகளாக உள்ளன.

இயேசு கிறிஸ்துவின் வரலாறு பாலஸ்தீன நாட்டில் நடந்தது. எனினும் அவரது வாழ்வை தமிழ்க் கவிஞர்கள் காப்பியமாகப் படைக்கும் போது தமிழ் மரபிலிருந்து மாறாமல் தமிழ் நாட்டின் மண்ணின் மணம் மாறாமல் உருவாக்குகின்றனர். பாலஸ்தீன நாட்டில் நடந்த நிகழ்வுகளைக் கூறும் போது தமிழகத்தில் நடந்தது போன்ற உணர்வினை ஆசிரியர் கொணர்வது, அவரது இலக்கியப் படைப்பின் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது. இரட்சகராகிய இயேசுநாதர் என்னும் காப்பியத்தில் நாசரேத்துக்கும் எருசலேமுக்கும் இடையிலுள்ள வழியின் இயல்புகளை விளக்கும்போது, தமிழகத்திலுள்ள கிராமங்களுக்கு நடுவிலுள்ள வழிகளை வருணிப்பது போன்ற தோற்றத்தைக் கொடுக்கும் அளவிற்கு தமிழ் மரபிலிருந்து மாறாமல் காப்பிய ஆசிரியர்கள் படைக்கின்றனர்.

கிறித்தவக் காப்பியக் கவிஞர்கள் கவித்துவம் நிறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களது கவிதைகள் சொல்லாட்சி மிக்கனவாகவும் அணிநயங்கள் நிறைந்தனவாகவும் எதுகை, மோனை நயம் உள்ளனவாகவும் இலக்கண நயம்

கொண்டனவாகவும் காணப்படுகின்றன. இச்சிறப்பியல்புகள் நிறைந்த கவிதைகள் உடைய காப்பியம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெறுவது இயல்பான ஒன்று.

இத்தகைய பல்வேறு சிறப்புகளுடன் பல்வேறு தன்மைகளில் கிறித்தவக் காப்பியம் படைக்கப்பட அடிப்படையானது விவிலியமாகும். விவிலியத்தைக் கசடறக் கற்றவர்கள் தான் கிறித்தவ இலக்கியங்கள் படைக்க முடியும். கிறித்தவக் காப்பியக் கவிஞர்கள் அனைவரும் விவிலியத்தில் புலமை மிக்கவர்கள் என்பதை அவர்களது படைப்புகளின் வாயிலாக அறியலாம். இக்கவிஞர்களுள் சிலர் விவிலியம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டு காப்பியமும் சிலர் புதிய ஏற்பாடு முழுவதின் அடிப்படையில் காப்பியமும் சிலர் புதிய ஏற்பாடிலுள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நற்செய்தி நூல்களின் அடிப்படையில் காப்பியங்களும், சிலர் விவிலியத்தில் இடம்பெற்றுள்ள ஏதாவது ஒருவரை அடிப்படையாகக் கொண்டு காப்பியமும் படைத்துள்ளனர்.

கிறித்தவக் காப்பியங்களில் பல இன்று நம் கைகளில் கிடைக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியதே. அத்தகைய காப்பியங்கள் கண்டுபிடிக்கப்பட்டு மறுபதிப்பு செய்யப் பட்டால் கிறித்தவ இலக்கிய வரிசையில் காப்பியங்களின் உயர்வினை அறியமுடியும். கிறித்தவக் காப்பியம் மட்டுமன்றி ஏராளமானக் கிறித்தவச் சிற்றிலக்கியங்களும் இன்றைய தலைமுறையினருக்கு தெரியாமல் போய்விடும் அபாய நிலையில் உள்ளது. இவைகளையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து பதிப்பிக்கும் போது கிறித்தவ இலக்கியத்தின் பெருமை மட்டுமன்றி தமிழ் இலக்கிய வரலாற்றின் சிறப்பினையும் பரப்பினையும் அனைவரும் தெரிந்து கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை.

X துணைநூல்பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

1. அந்தோனி முத்து, அர்ச். சவேரியார் காவியம், இந்தியன் அச்சுக்கூடம், சென்னை, முதல் பதிப்பு, 1882.
2. ஆரோக்கியசாமி, சுடர்மணி, கமலா பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, இரண்டாம் பதிப்பு, 1987.
3. ஆழ்வார் பிள்ளை, நசரேய புராணம், கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை.
4. இராபின்சன் குருசோ, எஸ்தர் காவியம்,சோபியாராணி பதிப்பகம், உதகை, முதலாம் பதிப்பு, 1986.
5. இறையரசன், உலகஜோதி, ஜேசுராஜா நினைவு அறக்கட்டளை, மதுரை, முதலாம் பதிப்பு, 2005.
6. இன்னாசி, சூ., திருத்தொண்டர் காப்பியம், காவ்யா, சென்னை, முதல் பதிப்பு, 2007.
7. ஈழத்துப் பூராடனார், இயேசு புராணம், ஜீவா பதிப்பகம், கனடா, முதலாம் பதிப்பு, 1986.
8. கண்ணதாசன், இயேசுகாவியம், கலைக்காவிரி, திருச்சிராப்பள்ளி, முதல் பதிப்பு, 1982.
9. கனகசபைப் புலவர், திருவாக்குப் புராணம், ரிப்லி & ஸ்ட்ராங் அச்சகம், யாழ்ப்பாணம், முதலாம் பதிப்பு, 1866.
10. கிருஷ்ணபிள்ளை, எச்.ஏ., இரட்சணிய யாத்திரிகம், ஆசியவியல் நிறுவனம், செம்மஞ்சேரி, சென்னை, 1998.
11. சாமுவேல் வேதநாயகம் தாமஸ், பூங்காவனப் பிரளயம், கிறித்தவ இலக்கியச்சங்கம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1978.
12. சாமிநாதபிள்ளை, ஞானாதிக்கராயர் காப்பியம், வாணிநிகேதன் அச்சுக்கூடம், சென்னை, முதல் பதிப்பு, 1865.
13. சாமிமுத்து, ஆதியாகம காவியம், கிளாரா பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதலாம் பதிப்பு, 2008.
14. சுகாத்தியர், சுவிசேட புராணம், கிளக்ஹார்ன் அச்சாபீஸ், மதுரை, முதலாம் பதிப்பு, 1891.
15. ஜான் பால்மர், கிறிஸ்தாயனம், ஆசியவியல் நிறுவனம், செம்மஞ்சேரி, சென்னை, இரண்டாம் பதிப்பு, 2008.
16. ஜோதிநாயகம், ஏ.த., மோட்சப் பயணக் காவியம், பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1991.

17. ஞானாபரணம் பண்டிதர், இரட்சகராகிய இயேசுநாதர், இலண்டன் மிஷன் அச்சகம், நாகர்கோவில், இரண்டாம் பதிப்பு, 1951.

18. பவுல் இராமகிருட்டிணன்,மீட்பதிகாரம் என்னும் பேரின்பக் காப்பியம்,மோரியா ஊழியங்கள் வெளியீடு, செனாய் நகர், சென்னை, முதல் பதிப்பு, 2013.

19. பூலோகசிங்க முதலியார், திருச்செல்வராயர் காவியம், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம், இரண்டாம் பதிப்பு, 1995.

20. மதலை முத்து, பா., அருட்காவியம், குறிஞ்சி நிலையம், ஓசூர்,முதலாம் பதிப்பு, 1999.

21. மரிய அந்தோனி, வி., அருளவதாரம், கதிரவன் பதிப்பகம், பாளையங்கோட்டை, முதலாம் பதிப்பு, 2006.

22. மாணிக்கவாசகம் ஆசீர்வாதம், திருஅவதாரம், திருநெல்வேலி, முதலாம் பதிப்பு, 1979.

23. மாலிறையன், துரை., அன்னை தெரேசா காவியம், மரியம்மை பதிப்பகம், புதுச்சேரி, முதலாம் பதிப்பு, 1994.

24. மாலிறையன், துரை., அருள்நிறை மரியம்மைக் காவியம், மரியம்மை பதிப்பகம், புதுச்சேரி, முதலாம் பதிப்பு, 1996.

25. யோவேல், ம., பவுலடியார் பாவியம், மணிப் பதிப்பகம், பாளையங்கோட்டை, முதலாம் பதிப்பு, 2003.

26. லோட்டஸ் எடிசன், மீட்பரசி, திரேசா நூல் ஆலயம், திக்கணம்கோடு, கன்னியாகுமரி மாவட்டம், முதலாம் பதிப்பு, 2003.

27. வீரமாமுனிவர், தேம்பாவணி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1992.

28. ஸ்தொஷ் ஐயர்,கிறிஸ்து மான்மியம், லுத்தரன் மிஷன் அச்சகம், தரங்கம்பாடி, முதலாம் பதிப்பு,1891.

துணைமை ஆதாரங்கள்

29. ஆரோக்கியசாமி, இர., கிறித்தவ இலக்கிய வரலாறு, பூரண ரீத்தா பதிப்பகம், தஞ்சாவூர், முதலாம் பதிப்பு, 2010.

30. இன்னாசி,சூ., கிறித்தவத் தமிழ்க் கொடை, தொகுதி I, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், முதலாம் பதிப்பு, 2001.

31. இன்னாசி,சூ., கிறித்தவத் தமிழ்க் களஞ்சியம், காவ்யா வெளியீடு, சென்னை, முதலாம் பதிப்பு, 2007.

32. கிரேஸ் செல்வராஜ், **வளரும் கிறித்தவத்தில் மலரும் தமிழ்**, கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, முதலாம் பதிப்பு, 1985.

33. சண்முகசுந்தரம், (தொ.ஆ.), **திருத்தொண்டர் காப்பியத் திறன்**, காவ்யா வெளியீடு, சென்னை, முதலாம் பதிப்பு, 2008.

34. சதாசிவம் பிள்ளை, அ., **பாவலர் சரித்திர தீபகம்**, ஏசியன் எடியூகேசனல் சர்வீசஸ், புது தில்லி, ஆறாம் பதிப்பு, 2004.

35. சிவலிங்கராஜா, எஸ்., **ஈழத்துத் தமிழ் இலக்கியம்**, தனலட்சுமி புத்தகசாலை, யாழ்ப்பாணம், 2001.

36. ஞான சந்திர ஜாண்சன், யோ., **கிறிஸ்தவக் கீர்த்தனைக் கவிஞர்கள்**, கீர்த்தனா பதிப்பகம், சென்னை-59, இரண்டாம் பதிப்பு, 2009.

37. ஞான சந்திர ஜாண்சன், யோ., **எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை**, சாகித்திய அகாடமி வெளியீடு, சென்னை, முதலாம் பதிப்பு, 2008.

38. ஞான சந்திர ஜாண்சன், யோ., **கிறித்தவ இலக்கிய வளம்**, (தொ. ஆ.), முல்லை நிலையம், சென்னை, முதலாம் பதிப்பு, 2009.

39. ஞானசிகாமணி, வீ., **எ.ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள் - ஓர் ஆராய்ச்சி**, வேதாகம மாணவர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2001.

40. ஞான ராபின்சன், (ப.ஆ.), **தமிழ்க் கிறித்தவ மரபு**, தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை, முதலாம் பதிப்பு, 1985.

41. தயானந்தன் பிரான்சிஸ், தி., ஞான சந்திர ஜாண்சன், யோ., (ப.ஆ.), **கிறித்தவத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம்**, ஆசியவியல் நிறுவனம், செம்மஞ்சேரி, சென்னை, முதலாம் பதிப்பு, 2008.

42. தயானந்தன் பிரான்சிஸ், தி., **கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம்: சில செய்திகள்**, கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, முதலாம் பதிப்பு, 2000.

43. ராம்போலா மாஸ்கரேனஸ், **கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள்**, தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி, முதல் பதிப்பு, 1972.

44. Amy Carmichael, **H.A. Hrishna Pillai**, Christian Literature Society, Chennai, Second edition, 1998.

45. Appasamy, A.J., **Tamil Christian Poet**, Lutterworth Press, London, 1966.

46. Simon Casie Chitty, **The Tamil Plutarch**, Asian Educational Services, New Delhi, 1982.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி.1300	100.00
பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்	40.00
பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்	40.00
தொல். பொருள். (அகம்-புறம்) -ஆங்கில மொழிபெயர்ப்பு	50.00
தமிழ் ஆய்வு இதழகள்	50.00
வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்	130.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 3	150.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 2	115.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 1	130.00
தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல்-தொழில்நுட்பம் II	110.00
தமிழரின் மரபுச் செல்வங்கள்-அறிவியல்-தொழில்நுட்பம் I	90.00
மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும்-பெண்	40.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851-2000	180.00
இதழாளர் பெரியார்	160.00
திராவிட இயக்க இதழ்கள் - தொகுதி	60.00
சைவ சித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை	65.00
பெரியபுராணம்-திருமுறைகளின் கவசம்	55.00
காஞ்சிபுரம் கி.பி.6 -ஆம் நூற்றாண்டுக்கு முன்	65.00
திருவாவடுதுறைப் புராணயம்	250.00
மகாவித்துவான் ரா.ராகவையங்கார்	30.00
சித்தாந்தச் செல்வர் க.வெள்ளைவாரணனார்	25.00
திருக்குறளில் பொதுநிலை உத்திகள்	30.00
தமிழிலக்கத்தில் மனித நேயம்	115.00
தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம்	30.00
தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப் பின்	40.00
பாவாணரின் ஞாலமுதன்மொழிக் கொள்கை	45.00
பெண்ணியப் படைப்பிலக்கியம்	75.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
பள்ளு இலக்கியம் மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே	75.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை	80.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப் புறவியல் கலை, கண்பாடு	90.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	150.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசியிரர் அ.மு.பரமசிவானந்தம்	40.00
திறனாய்வு அணுகுமுறைகள்	120.00
கிறித்தவக் காப்பியங்கள்	225.00